வெற்றி ஐஏஎஸ் கல்வி மையத்தில் வெற்றி பெற்ற
வெற்றியாளர்களுடன் மைய இயக்குனர் **மு.சண்முகம்**



Vetrii IAS Study Circle

The Best Academy for IAS & TNPSC Exams

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்

டிஎன்பிஎஸ்சி தொகுதி – I & II/IIA

ISO 9001 : 2015 தரச்சான்று பெற்ற நிறுவனம் | 2011 முதல் சிறந்த முறையில் பயிற்சி அளித்து வருகிறோம்

சண்முகம் & சிவன் காளை

தலைமை அலுவலகம்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

எஸ்.பி பிளாக், புதிய எண். 1, 9வது தெரு, 1வது அவன்யூ பிரதான சாலை, சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை– 102

தொலைபேசி: 044–2626 5326, 98844 72636, 98844 21666 & 98844 32666

கிளைகள்

சேலம்
எண். 189/1, மெய்யனூர் சாலை, ஏஆர்ஆர்எஸ் தியேட்டர் அருகில், (சேலம் புதியபேருந்து நிலையம் அருகில்), வெங்கடேஷ்வரா காம்ளக்ஸ் எதிரில், சேலம் - 636004
தொலைபேசி: 0427-2330307 | 95001 22022

கோவை
எண். 347, டி.எஸ். காம்ளக்ஸ், 3-வது தளம், நேரு வீதி, காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், ராம்நகர், கோவை - 9
தொலைபேசி: 75021 65390

எங்களது கல்விச்சேவை கிடைக்கும் இடங்கள்

விவேகானந்தா கல்வி நிறுவனம் (பெண்கள்)
எளையம்பாளையம், திருச்செங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம், 637 305.
தொலைபேசி 04288 234670, 91 94437 34670

பெட்ரிஷியன் கலை மற்றும் அறிவியில் கல்லூரி
3, கெனால் பாங்க் சாலை, காந்தி நகர், கோட்டூர்புரம் ரயில் நிலையம் எதிரில், அடையார், சென்னை - 600 020.
தொலைபேசி 044 24401362, 044 - 24426913

ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி
பழனி ரோடு, திப்பம்பட்டி, பொள்ளாச்சி.
தொலைபேசி 73737 66550, 94432 66008, 90951 66009

www.vetriias.com

@tnpscfree
Telegram
https://t.me/tnpscfree

© வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

முதல் பதிப்பு – 2020

பக்கங்கள் : 348

அளவு : (240 x 180) செ.மீ

விலை : ₹ 400

வெளியிட்டாளர் :

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

எஃப் பிளாக், புதிய எண். 1, 9வது தெரு, 1வது அவன்யூ பிரதான சாலை, சிந்தாமணி,

அண்ணாநகர் (கிழக்கு), சென்னை– 102

தொலைபேசி: 044–2626 5326, 98844 72636, 98844 21666 & 98844 32666

மின்னஞ்சல்: enquiry@vetriias.com

இணையதளம்: www.vetriias.com

© இத்தொகுப்பின் அனைத்து உரிமைகளும் வெளியிட்டாளரிடம் உள்ளது. இப்பதிப்பின் எந்த பகுதியையும் அனுமதி யின்றி மறுபதிப்பிடுவதோ, மீட்டெடுக்கக்கூடிய முறையில் சேமிப்பதோ அல்லது வேறு எந்த வடிவம் அல்லது முறையிலோ மின்னணு, இயந்திர, நகல், பதிவு அல்லது வேறு ஏதாவது முறையில் வெளியிட்டாளரின் எழுத்துப்பூர்வமான அனுமதி யின்றி பரிமாற்றம் செய்தாலோ அல்லது வெளியிட்டாலோ அதனால் ஏற்படும் நட்டத்திற்கும் அவரே பொறுப்பாவார் மற்றும் தண்டனைக்குள்ளாவார். மேலும் அழிப்பிட்டை ஈடுசெய்யும் பொருட்டு காப்பிட்டு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

முகவுரை

எங்களின் முதல், தனித்துவம் வாய்ந்த மற்றும் விரிவான இப்பதிப்பினை **தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்** என்ற தலைப்பில் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம். இப்புத்தகம் குடிமைப்பணி மாணவர்களை கருத்தில் கொண்டு மிகுந்த கவனத்துடனும், மாணவர்களின் மனதில் விழிப்பூட்டும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு அரசின் நிர்வாகத்திறன் அந்த சமூகத்தின் வளர்ச்சி மற்றும் மேம்படுதலை சார்ந்தே இருக்கிறது. அந்த வகையில், தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம், அதன் முக்கியத்துவம் கருதி டீஎன்பிஎஸ்சி–ன் தொகுதி I, II/IIA-க்கான மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் அதற்கென உரிய இடத்தை பெற்றுள்ளது.


இப்பதிப்பு கண்டிப்பாக வாசகர்களுக்கும், வருங்கால அரசு நிர்வாகிகளுக்கும் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் அதன் மேம்பட்ட சூழலை பல பரிமாணங்களில் விளக்க மற்றும் அதற்கான தெளிவுரையை வழங்க ஒரு வித்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இப்புத்தகத்தின் உள்ளடக்கங்கள் அனைத்தும் முழுமனதுடன் கூடிய முயற்சியால் பாடத்திட்டத்திற்கு தொடர்புடையதாகவும், உண்மை தன்மையுடனும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து தலைப்புகளும் நாட்டின் நடப்பு நிகழ்வுகளோடு சேர்த்து கோர்வையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தருணத்தில், இப்புத்தகம் வெளிவருவதற்காக மிகவும் உதவிய K.அனிதா, M.அங்கயர்கண்ணி, விக்னேஷ் தமிழ்மாறன் (DSP பயிற்சி), R.பாக்கியராஜ் (Mngr. Co-op. Bank), சுரேஷ் குமார் ஆறுமுகம், P.மகேந்திரன், A.அருள் செல்வன், P.யுவராஜ், S.ராம் குமார், P.செந்தில் குமார், செல்வி குமார் (புத்தக வடிவமைப்பாளர்) ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களது உள்ளீடுகள் மற்றும் கருத்துகள் இப்புத்தகத்தினை தனித்துவ மாகவும், வித்தியாசமானதாகவும் வெளிவர உதவியது.

இப்புத்தகத்தை நனவாக்கியதற்காக வெற்றி குடும்பத்தைச் சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும் எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தேர்வர்கள் மற்றும் வாசகர்களுக்கு தங்களது முயற்சியில் வெற்றி பெற எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



மு.சண்முகம்

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்.




சி.சிவன் காளை

துணை மாநில வரி அலுவலர்

மாநில அளவில் 3-ம் இடம்

குரூப் II - 2015

@tnpscfree
Telegram : https://t.me/tnpscfree



ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்

குரூப் I & II/IIA தேர்வுகள் (முதல் நிலை தேர்வு)

பொது அறிவு (பட்டப்படிப்பு)

கொள்குறி வகைகளுக்கான தலைப்புகள்

அலகு – I: பொது அறிவியல்

1. அறிவியல் அறிவு மற்றும் அறிவியல் உணர்வு – பகுத்தறிதல் – பொருள் உணராமல் கற்றலும் கருத்துணர்ந்து கற்றலும் – கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி புரிந்து கொள்வதற்கான ஒரு கருவி அறிவியல்.
2. பேரண்டத்தின் இயல்பு – பொது அறிவியல் விதிகள் – இயக்கவியல் – பருப்பொருளின் பண்புகள், விசை, இயக்கம் மற்றும் ஆற்றல் – அன்றாட வாழ்வில் இயக்கவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம், அணுக்கரு இயற்பியல், லேசர் (Laser), மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் ஆகியவற்றின் அடிப்படை கோட்பாடுகளின் பயன்பாடுகள்.
3. தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிகொல்லிகள்.
4. உயிரியலின் முக்கியகோட்பாடுகள், உயிர் உலகின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியங்கியல், உணவியல், உடல் நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்.
5. சுற்றுப்புறச்சூழல் மற்றும் சூழலியல்

அலகு – II: நடப்பு நிகழ்வுகள்

1. வரலாறு – அண்மை நிகழ்வுகளின் தொகுப்பு – தேசியச் சின்னங்கள் – மாநிலங்கள் குறித்த விவரங்கள் – செய்திகளில் இடம்பெற்ற சிறந்த ஆளுமைகளும் இடங்களும் – விளையாட்டு – நூல்களும் ஆசிரியர்களும்.
2. ஆட்சியியல் – இந்தியாவில் அரசியல் கட்சிகளும் ஆட்சியியல் முறைமைகளும் – பொது விழிப்புணர்வும் (Public Awareness) பொது நிர்வாகமும் – நலன்சார் அரசுத் திட்டங்களும் அவற்றின் பயன்பாடும். பொது விநியோக அமைப்புகளில் நிலவும் சிக்கல்கள்.
3. புவியியல் – புவியியல் அடையாளங்கள்.
4. பொருளாதாரம் – தற்போதைய சமூக பொருளாதார பிரச்சினைகள்.
5. அறிவியல் – அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்.

@tnpsfree
Telegram
https://t.me/tnpscfree

அலகு – III: இந்தியாவின் புவியியல்

1. அமைவிடம் – இயற்கை அமைவுகள் – பருவமழை, மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை – நீர் வளங்கள் – இந்திய ஆறுகள் – மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் – காடு மற்றும் வன உயிரினங்கள் – வேளாண் முறைகள்
2. போக்குவரத்து – தகவல் தொடர்பு
3. சமூகப் புவியியல் – மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல் – இனம், மொழிக் குழுக்கள் மற்றும் முக்கியப் பழங்குடிகள்.
4. இயற்கைப் பேரிடர் – பேரிடர் மேலாண்மை – சுற்றுச்சூழல் மாசுபடுதல் : காரணங்களும் தடுப்பு முறைகளும் – பருவநிலை மாற்றம் – பசுமை ஆற்றல்.

அலகு – IV: இந்தியாவின் வரலாறும் பண்பாடும்

1. சிந்துவெளி நாகரிகம் – குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் – விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் – தென் இந்திய வரலாறு.
2. இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்.
3. இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு.
4. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்.

அலகு – V: இந்திய ஆட்சியியல்

1. இந்திய அரசியலமைப்பு – அரசியலமைப்பின் முகவுரை – அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் – ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள்.
2. குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்.
3. ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் – மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் – உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்.
4. கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள் : மத்திய – மாநில உறவுகள்
5. தேர்தல் – இந்திய நீதி அமைப்புகள் – சட்டத்தின் ஆட்சி.
6. பொதுவாழ்வில் ஊழல் – ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் – லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா – தகவல் உரிமை – பெண்களுக்கு அதிகாரமளித்தல் – நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் – மனித உரிமைகள் சாசனம்.

அலகு – VI: இந்தியப் பொருளாதாரம்

1. இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் – ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் – ஒரு மதிப்பீடு – திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்.
2. வருவாய் ஆதாரங்கள் – இந்திய ரிசர்வ் வங்கி – நிதி கொள்கை மற்றும் பணவியல் கொள்கை – நிதி ஆணையம் – மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு – சரக்கு மற்றும் சேவை வரி.
3. இந்திய பொருளாதார அமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை – வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு – தொழில் வளர்ச்சி – ஊரக நலன்சார் திட்டங்கள் – சமூகப் பிரச்சினைகள் – மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, வறுமை.

அலகு – VII: இந்திய தேசிய இயக்கம்

1. தேசிய மறுமலர்ச்சி – ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் – இந்திய தேசிய காங்கிரஸ் – தலைவர்கள் உருவாதல் – பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், ஜவகர்லால் நேரு, காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், தந்தை பெரியார், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பலர்.
2. விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள் : அகிம்சை முறையின் வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்கங்கள்.
3. வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை.

அலகு – VIII: தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்

1. தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு.
2. திருக்குறள்:
   - மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்
   - அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை
   - மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்
   - திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம், மனிதநேயம் முதலானவை
   - சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு
   - திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்
3. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் – விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு.
4. பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக – அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி – நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி – சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் மற்றும் இவ்வியக்கங்களுக்கான அடிப்படை கொள்கைகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள்.

Telegram : @tnpscfree
https://t.me/tnpscfree

அலகு – IX: தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்

1. தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் - தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு.
2. அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் - இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் – தமிழகத்தின் பொருளாதார போக்குகள் - தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்.
3. சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்.
4. தமிழகத்தின் கல்வி மற்றும் நலவாழ்வு (Health) முறைமைகள்
5. தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்.
6. பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்.
7. தமிழகத்தில் மின்னாளுகை.

அலகு – X: திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் (Aptitude and Mental Ability)

1. சுருக்குதல் – விழுக்காடு – மீப்பெறு பொதுக் காரணி (HCF) – மீச்சிறு பொது மடங்கு (LCM)
2. விகிதம் மற்றும் விகிதாசாரம்.
3. தனி வட்டி – கூட்டு வட்டி – பரப்பு – கொள் – காலம் மற்றும் வேலை
4. தருக்கக் காரணவியல் – புதிர்கள் – பகடை – காட்சிக் காரணவியல் – எண் எழுத்துக் காரணவியல் – எண் வரிசை.

பொருளடக்கம்

1.	தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும்	1
2.	தமிழகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு.....	19
3.	அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும்.....	37
4.	இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும்.....	65
5.	தமிழகத்தின் பொருளாதாரப் போக்குகள்.....	85
6.	தமிழகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்.....	115
7.	சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூக-பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்	145
8.	தமிழகத்தின் கல்வி முறைமைகள்.....	169
9.	தமிழகத்தின் நலவாழ்வு முறைமைகள்.....	201
10.	தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்.....	225
11.	பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்.....	267
12.	தமிழகத்தில் மின்னாளுகை.....	279
இணைப்பு I	மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011.....	309
இணைப்பு II	மத்திய நிதிநிலை அறிக்கை 2020–2021 இன் சிறப்பம்சங்கள்.....	315
இணைப்பு III	தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2020–2021 இன் சிறப்பம்சங்கள்.....	336

Telegram : @tnpscfree
https://t.me/tnpscfree

அத்தியாயம்

1 தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும்

"ஒரு தேசத்தின் உண்மையான சொத்து அதன் மக்களே மற்றும் அம்மக்கள் மகிழ்ச்சியாகவும், நலமுடனும், நீண்ட காலம் ஆக்கத்திறனுள்ள வாழ்வை வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே மேம்பாட்டின் நோக்கம் ஆகும்".

– மகபூப் உல் ஹக்

1.1 மேம்பாடு

மேம்பாடு என்பது பொருளாதாரத்தில் வாழ்க்கைத் தரத்தை அளவீடு செய்வதற்கான அளவுகோல் ஆகும். அது கீழ்கண்டவைகளைப் போன்ற பல்வேறு காரணிகளின் இருப்புகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்.

- ஊட்டசத்து அளவு
- உடல் நலத்திற்கான வசதிகள் மற்றும் கட்டமைப்புகளின் விரிவாக்கம் மற்றும் அதன் எல்லை
  - (எ.கா. மருத்துவ வசதி, பாதுகாப்பான குடிநீர், நோய்த்தடுப்பு முறை, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்).
- கல்வித்தரம்
- வாழ்க்கைத்தரம் சார்ந்துள்ள பிற காரணிகள்.

1.1.1 மனிதவள மேம்பாடு

- மனிதவள மேம்பாடு அல்லது மனிதவள மேம்பாட்டு அணுகுமுறை என்பது பொருளாதார வசதியை விரிவு செய்வதைக் காட்டிலும், மனித வாழ்க்கையின் ஒட்டுமொத்த வசதியை விரிவு செய்தலைப் பொறுத்தது. அது மக்கள் மற்றும் மக்களுக்கான வாய்ப்புகளின் மீது கவனம் செலுத்தும் அணுகுமுறை ஆகும்.

மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

- 1990களில் உலகப் பொருளாதாரங்களின் மேம்பாட்டு நிலையை அளவிட மகபூப் உல் ஹக் மற்றும் அமர்த்தியா சென் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- 1990ல் மனித வளக் குறியீடு ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தால் (UNDP) ஏற்கப்பட்டது.

Telegram : @tnpsfree
https://t.me/tnpscfree

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத்திட்டம்

- 1965-ல் நிறுவப்பட்டது.
- தலைமையிடம் – நியூயார்க்
- குறிக்கோள் – உறுப்புநாடுகளில் வறுமையை ஒழித்தல் மற்றும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.
- ஐக்கிய நாடுகள் மனித வள மேம்பாட்டு அறிக்கையை ஆண்டுதோறும் வெளியிடும்.

I.I.2 ஐக்கிய நாடுகள் மனிதவள மேம்பாட்டு அறிக்கை

- 1990ல் முதன்முதலில் வெளியிடப்பட்டது.
- அனைத்து நாடுகளின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளின் மதிப்புகளும் மற்றும் அந்நாடுகளின் தரவரிசை பட்டியலும் இவ்வறிக்கையின் மூலமாக வெளியிடப்படும்.
- 1990 முதல் 2009 வரை மனிதவள மேம்பாட்டுக் குறியீடு மட்டுமே மேம்பாட்டின் ஒற்றை அளவியாக இருந்தது.
- 2010 முதல் மேலும் மூன்று சிறப்புக் குறியீடுகளை சேர்த்து மனிதவள மேம்பாடு சிறப்பாக அளவிடப்பட்டு வருகிறது.
  1. **பல்கோண வறுமைக் குறியீடு (MPI):** வருவாயற்ற காரணிகளைப் பொறுத்து வறுமையைக் கணக்கிடப் பயன்படுகிறது.
  2. **சமத்துவமின்மை சரிசெய்யப்பட்ட மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (IHDI):** சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையின் அளவைக் கணக்கிட பயன்படுகிறது.
  3. **பாலின சமத்துவமின்மைக் குறியீடு (GII):** ஆண், பெண் இடையேயான சமத்துவமின்மையைக் கணக்கிடவும் பெண்கள் மேம்பாடு / அதிகாரமளிப்பு பற்றி வெளிச்சமிட்டுக் காட்டவும் பயன்படுகிறது.
- **2014**-ல் பாலின மேம்பாட்டுக் குறியீடு (GDI) என்ற புதிய குறியீட்டை அறிமுகம் செய்தது. இது ஆண் பெண் இடையேயான மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளுக்கிடையேயான அளவுகளை ஒப்பீடு செய்ய உதவுகிறது.

1.2 ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் - இந்தியா

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் உலகின் 170 நாடுகளில் செயல்பாட்டில் உள்ளது.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் 1951-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் பல துறைகளில் மேம்பாட்டிற்கு செயல்பட்டு வருகிறது. அதில் முக்கியமாக நிர்வாகம், வறுமை ஒழிப்பு, நீடித்த நிலைத்த ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை.
- இந்தியாவில் இதன்முக்கியப் பணி இந்நிறுவனம் வகுத்த பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை தேச நலன்களுடன் ஒருங்கிணைத்தலும், நடைமுறையிலுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை ஆண்டுக்கு ஒருமுறை திறனாய்வு மற்றும் சரிசெய்தலும் ஆகும்.
- தேசிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் புதிதாக சர்வதேச அளவில் அறிமுகம் செய்யப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களிலுள்ள இலக்குகளை இந்தியாவின் மேம்பாட்டுச் சூழலில்

பிரதிபலிக்கவும், அவ்விலக்கினை நேர்த்தியாக அடையவும், ஒரு முக்கிய காரணமாக விளக்குகிறது. மேலும் நீடித்த / நிலைத்த மேம்பாட்டு இலக்குகளை வேகமாக அடைவதற்கு வழிவகை செய்கிறது.

- நிலைத்த நீடித்த மேம்பாட்டினை அடைய நிபுணத்துவம் வழங்குவதுடன், அத்திட்டங்களின் இலக்குகளை அடைவதற்கான செயலாக்கங்களின் எல்லா நிலைகளிலும் மத்திய மாநில அரசுகளுக்கு ஆளுமை சார்ந்த நிபுணத்துவம் வழங்குகிறது.
- பாரம்பரிய வளர்ச்சி மாதிரிகளை நிலைத்த மற்றும் நீடித்த வளர்ச்சி மாதிரிகளாக மாற்றுவதற்கான உரித்த வேலைகளைச் செய்கிறது.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் – இந்தியா: இந்தியாவின் 2018-2022-ற்கான தேசிய நிரலில் மூன்று முக்கியப் பகுதிகளில் கவனம் செலுத்தப்படுகிறது.
  1. உள்ளடக்கிய வளர்ச்சி
  2. சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல்
  3. அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.

I.2.I மனிதவள மேம்பாட்டு அறிக்கை 2019-ன் சிறப்பம்சங்கள்

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத்திட்டம் வெளியிட்ட மனிதவள மேம்பாட்டுக் குறியீடு தரவரிசையில் இந்தியா 130வது இடத்திலிருந்து ஒரு இடம் முன்னேறி 129வது இடத்திற்கு வந்துள்ளது.

- **2019 அறிக்கையின் கரு:** "21-ஆம் நூற்றாண்டின் மனிதவள மேம்பாட்டில் நிலவும் சமத்துவமின்மை".
- 1990-ல் இந்தியாவின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடு 0.431-லிருந்து 2019-ல் 0.647-ஆக உயர்ந்துள்ளது. இது கிட்டத்தட்ட ஆரம்ப நிலையிலிருந்து 50% முன்னேற்றமாகும்.
- இந்த அறிக்கை பற்றிய மதிப்பீட்டில் இந்தியாவின் சராசரி ஆயுள், பள்ளிக்கல்வி பயிலும் ஆண்டுகள் மற்றும் தலா வருமானம் ஆகியவற்றில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் காணப்பட்டது.
- 1990-லிருந்து 2019-க்குள் இந்தியாவில் பிறப்பின் போதான சராசரி ஆயுள் 11.6 ஆண்டுகளும் சராசரியாகப் பள்ளிக்கல்விப் பயிலும் ஆண்டுகள் 3.5 ஆண்டுகளும், எதிர்பார்க்கப்பட்ட பள்ளிக் கல்வி பயிலும் ஆண்டுகள் 4.7 ஆண்டுகளும், தலா வருமானம் 250%மும் அதிகரித்துள்ளது.

1.3 குறியீடுகளின் கணக்கீட்டு முறைகள்

I.3.I மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

- மனிதவள மேம்பாட்டுக் குறியீடு என்பது சமூகத்தில் மனிதவள மேம்பாட்டின் தொகுப்பு அளவை ஆகும்.
  - இது 0-1 க்கு இடைப்பட்ட எண்களில் குறிப்பிடப்படுகிறது.
  - 0- குறைவான மனிதவள மேம்பாடு
  - 1- அதிகமான மனிதவள மேம்பாடு

Telegram: @tnpscfree
https://t.me/tnpscfree

- மனிதவள மேம்பாட்டுக் குறியீடு அளவைப் பொறுத்து உலக நாடுகள் நான்கு வகைப்படுத்தப்படுகின்றன.
  - மிக அதிகமான மனிதவள மேம்பாடு (0.850-1.000)
  - அதிகமான மனிதவள மேம்பாடு (0.800-0.849)
  - சுமாரான மனிதவள மேம்பாடு (0.500-0.799)
  - குறைவான மனிதவள மேம்பாடு (0.000-0.499)
- 2019 அறிக்கையில், இந்தியா 0.647 என்ற மதிப்புடன் சுமாரான மனிதள மேம்பாட்டுப் பிரிவின் கீழ் வருகிறது.

ஆண்டு		2018	2019
இந்தியா	தரவரிசை	130	129
	மதிப்பு	0.640	0.647

HDI அளவீடுகளின் வடிவங்கள்	சுட்டிகள் (குறியீடுகள்)		இந்தியா	
	2010க்கு முன்	2010க்கு பின்	HDI - 2018	HDI - 2019
கல்வி	வயதுவந்தோர் கல்வி (%) விகிதம்	ஒரு பள்ளி செல்லும் குழந்தையின் எதிர்பார்க்கப்பட்ட பள்ளிக்கல்வி ஆண்டுகள்	12.3 ஆண்டுகள்	12.3 ஆண்டுகள்
	ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த கல்வி விகிதம் (%)	வயது வந்தோரின் சராசரி கல்வி ஆண்டுகள்	6.4 ஆண்டுகள்	6.5 ஆண்டுகள்
உடல்நலம்	பிறக்கும் போதான ஆயுள் எதிர்பார்ப்பு (ஆண்டுகள்)	பிறக்கும் போதான ஆயுள் எதிர்பார்ப்பு (ஆண்டுகள்)	68.8 ஆண்டுகள்	69.4 ஆண்டுகள்
வாழ்க்கைத் தரம்	GDP அடிப்படை யிலான தலா வருமானம் (PPP US $)	GNI அடிப்படை யிலான தலா வருமானம் (PPP US $)	US $ 6353	US $ 6829

I.3.2 சமமின்மை சரிசெய்யப்பட்ட மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI)

- சராசரி ஆயுள், பள்ளிக்கல்வி ஆண்டுகள் மற்றும் வீட்டு வருமானம் ஆகியவற்றிலுள்ள சம நிலையின்மையை அளவிட்டு, அதனை HDI உடன் சரிசெய்கிறது.
- சமமின்மை என்பது பாலினம், கல்வி, வருமானம் ஆகிய வடிவங்களில் அளவிடப்படுகிறது.
  - HDI = IHDI எனில், சமூகத்தில் சமநிலை நிலவுகிறது.

- HDI > IHDI எனில், சமமின்மை நிலவுகிறது.
- HDI = 0.647 (சமமின்மை சரிசெய்யப்படாத நிலையில்)
- IHDI = 0.477 (சமமின்மை சரிசெய்யப்பட்ட நிலையில்)

ஆண்டு		2018	2019
இந்தியா	தரவரிசை	129	130
	மதிப்பு	0.468	0.477

GDP, GNI மற்றும் PPP

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) : ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும்.

மொத்த தேசிய வருமானம் (வருவாய்) GNI

- ஒரு நாட்டின் வருமானத்திற்கான அளவீடுதான் GNI
- ஒரு நாட்டின் குடிமக்கள், வணிகம் மற்றும் அந்நாட்டவரால் ஈட்டப்பட்ட அந்நிய வருமானம் உள்ளிட்ட ஒட்டுமொத்த வருமானத்தையும் உள்ளடக்கியது.

GNI = உள்நாட்டில் ஈட்டப்பட்ட வருவாய் + வெளிநாட்டில் ஈட்டப்பட்ட வருவாய்

வாங்குதிறன் சமநிலை (PPP)

- அமெரிக்காவில ஒரு டாலரைக் கொண்டு வாங்கக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளை உள்நாட்டுச் சந்தையில் வாங்குதற்குத் தேவையான உள்நாட்டுப் பணத்தின் எண்ணிக்கையே வாங்குதிறன் சமநிலை (PPP) ஆகும்.
- வாங்குதிறன் சமநிலை (PPP) அடிப்படையில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு ஆகும்.
- முதலிடம் சீனா; இரண்டாமிடம் அமெரிக்கா.

I.3.3 பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI)

- வருவாற்ற பரிமாணங்களில் நிலவும் வறுமையே பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI). எ.கா. சுகாதாரக் குறைவு, தரம் குறைந்த வேலைவாய்ப்புச் சூழல் மற்றும் வன்முறையின் அச்சுறுத்தல்.
- UNDP மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனிதவள முன்னெடுப்பு நிறுவனம் இணைந்து அறிக்கையைத் தயாரிக்கின்றன.
- உலக பல்பரிமாண வறுமைக் குறியீடு 2019 அறிக்கையின் மையக்கரு: "சமத்துவமின்மையை ஒளியூட்டிக் காட்ட"

Telegram : @tnpscfree
https://t.me/tnpscfree

- இந்தியாவின் MPI மதிப்புகள்

ஆண்டு	2018	2019
மதிப்பு	0.121	0.123

கல்வி, உடல்நலம் மற்றும் வாழ்க்கைத்தரத்தின் பரிமாணங்கள்

பரிமாணங்கள்	(அறிகுறிகள்) சுட்டிகள் (குறியீடுகள்)
கல்வி (ஒவ்வொன்றுக்கும் $\frac{1}{6}$ பங்கு எடை மதிப்பு, மொத்தம் $\frac{2}{6}$)	பள்ளிக்கல்வி ஆண்டுகள்; குழந்தை சேர்க்கைப் பதிவு
உடல்நலம் (ஒவ்வொன்றுக்கும் $\frac{2}{6}$ பங்கு எடை மதிப்பு, மொத்தம் $\frac{2}{6}$)	குழந்தை இறப்பு விகிதம்; ஊட்டச்சத்து
வாழ்க்கைத் தரம் (ஒவ்வொன்றுக்கும் $\frac{1}{18}$ பங்கு எடை மதிப்பு, மொத்தம் $\frac{2}{6}$)	மின்சாரம், தளம், குடிநீர், சுகாதாரம், சமையல் எரிவாயு, வீட்டு உபயோகப் பொருட்கள்.

I.3.4 பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI) மற்றும் வறுமை

- வறுமையில் வாழும் மக்களின் நிலையை தேசிய, மண்டல மற்றும் துணைதேசிய அளவில் வெளிச்சமிட்டுக் காட்டவும், மேலும் உலக நாடுகளுடைக்கிடையே மற்றும் அந்நாட்டு மக்களுக்கிடையேயான சமத்துவமின்மையை ஒளியூட்டிக் காட்டவும் பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI) உதவுகிறது.
- பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI) ஆனது உலக நாடுகளின் வறுமை நிலையை விரிவாகவும், ஆழமாகவும் ஆராய வழிவகைச் செய்கிறது. மேலும் வறுமை நிலையை அனைத்து பரிமாணங்களிலும் ஒழிப்பதற்காக இருக்கும் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்கு 1ஐ அடைவதின் வளர்ச்சியை கணக்கிட வழிவகுக்கிறது.
- தேசிய வரையறையின்படி, வறுமையில் வாழும் அனைத்து வயது வரம்பிலும் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் வறுமை நிலையை பல பரிமாணங்களில் குறைக்க, கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு தேவையான தரவுகளை வழங்குகிறது.
- 101 நாடுகளில், 1.3 பில்லியன் மக்கள் அதாவது 23.1% பேர் பல்வேறு பரிமாணங்களில் வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- மேற்குறிப்பிட்ட நாடுகளில், 10 தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் ஏற்பட்ட மாற்றத்தை ஆராய்ந்த போது, இந்தியா மற்றும் கம்போடியா நாடுகளில் பல்கோண வறுமை குறியீட்டு மதிப்பில் வேமாகமாக குறைந்தது கண்டறியப்பட்டது.
- இக்குறியீடு பின்தங்கிய நாடுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

I.3.5 பாலின சமத்துவமின்மைக் குறியீடு (GII)

- பாலின சமத்துவமின்மைக் குறியீடு (GII)-ஆனது ஆண் மற்றும் பெண்களுக்கு இடையேயான சமத்துவமின்மையை 3 பரிமாணங்களில் கணக்கிடுகிறது. அவை இனப்பெருக்க நலம், அதிகார மளித்தல் மற்றும் தொழிலாளர் சந்தை.
- 0-1 வரை அளவிடப்படும்.
- 0-நியாயமான சமநிலை; 1-அதிகபட்ச சமத்துவமின்மை.

ஆண்டு		2018	2019
இந்தியா	தரவரிசை	127	122
	மதிப்பு	0.524	0.501

பரிமாணங்கள்	அறிகுறிகள்	இந்தியா
இனப்பெருக்க நலம்	குழந்தை பிறப்பின் போது தாய்மார்கள் இறப்பு வீதம் (MMR)	UNHDR, 2015-ன் படி-174 நிதி ஆயோக் அறிக்கை 2015-17-யின் படி-122
	இளம்பருவ கருவுறுதல் விகிதம்	UNHDR, 2015-20-ன் படி-13.2
அதிகாரமளித்தல்	பாராளுமன்ற பிரதிநிதித்துவம்	UNHDR, 2018-ன் படி 11.7% (பெண்)
	இரண்டாம் மற்றும் உயர்கல்வியினை எட்டியவர்களின் சதவீதம்	2010-18க்கு இடைப்பட்ட ஆண்டுகளில், 39% (பெண்) 63.5% (ஆண்)
தொழிலாளர் சந்தை	வேலைவாய்ப்புகளிலுள்ள பங்களிப்பு	2018-ம் ஆண்டில், 23.6% (பெண்) 78.6% (ஆண்)

I.3.6 பாலின மேம்பாட்டுக் குறியீடு (GDI)

- ஆண் மற்றும் பெண்களுக்கான மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் மதிப்புகளின் விகிதத்தைக் கொண்டு GDI அளவிடப்படுகிறது.
- இதை அளவிட மனிதவள மேம்பாட்டின் மூன்று அடிப்படை பரிமாணங்களைப் பயன்படுத்துகிறது. அவை உடல்நலம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம்.
- ஆண்களை ஒப்பிட்டு பெண்கள் எந்த அளவு பின்தங்கியுள்ளனர் மேலும் எந்த அளவு மேம்பட வேண்டும் என்று GDI வெளிப்படுத்துகிறது.

Telegram @tnpscfree
https://t.me/tnpscfree

- இது மனிதவள மேம்பாட்டு இலக்குகளிலுள்ள உண்மையான ஆண், பெண் இடைவெளியை புரிந்துக் கொள்ள உதவுகிறது. இது ஆண், பெண் இடையேயான பாலின இடைவெளியை குறைப்பதற்கான கொள்கை வடிவமைப்புக் கருவியாக பயன்படுகிறது.
- இந்திய பாலின மேம்பாட்டுக் குறியீட்டு மதிப்பு - 0.829. 2019-ல் 166 நாடுகளைக் கொண்ட தரவரிசைப் பட்டியலில் இந்தியா 129வது இடத்தில் உள்ளது.
- பெண்களுக்கான மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு மதிப்பு-0.574 (2019) மற்றும் ஆண்களுக்கான மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு மதிப்பு-0.692 (2019)
- HDI மதிப்புகளிலுள்ள பாலின வேறுபாட்டைப் பொறுத்து, நாடுகள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறியீடு	அறிகுறிகள் (சுட்டிகள்)	HDI ஒப்பீடு	
		பெண்	ஆண்
HDI	பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு	70.7%	68.2%
	எதிர்பார்க்கப்பட்ட பள்ளி கல்வி ஆண்டுகள்	12.9	17.9
	சராசரி பள்ளிக்கல்வி ஆண்டுகள்	4.7	8.2
	எதிர்பார்க்கப்பட்ட GNI தலா வருமானம்	2,625	10,712

நாடுகளின் வகைகள் / பிரிவுகள்	பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையேயான HDI-ல் உள்ள சமநிலை	முழுமையான விலகல் (ஆண்கள் மற்றும் பெண்கள் HDI-ல் உள்ள வேறுபாடு)
1.	உயர் சமத்துவம்	2.5%க்கும் குறைவாக
2.	நடுத்தரம் முதல் உயர் சமத்துவம்	2.5% முதல் 5% முடிய வரை
3.	நடுத்தரமான சமத்துவம்	5% முதல் 7.5% வரை
4.	நடுத்தரம் முதல் குறைந்த சமத்துவம்	7.5% முதல் 10% வரை
5.	குறைந்த சமத்துவம்	10%க்கு அதிகமாக
குறிப்பு: 2019-ல் இந்தியா 5வது பிரிவில் உள்ளது		

1.4 இந்திய அளவிலான 2019-ம் ஆண்டின் மனிதவள மேம்பாட்டு குறியீடு - ஒப்பீடு அளவிலான மதிப்பீடு

- 2019-ல் இந்தியாவின் HDI-யின் தேசிய சராசரி 0.662 மற்றும் 2018-ல் 0.640.

மிக உயர்ந்த / உயர்ந்த மனித வள மேம்பாடு அடைந்த மாநிலங்கள்

2018			2019	
தரவரிசை	மாநிலங்கள்	HDI	மாநிலங்கள்	HDI
1	கேரளா	0.810	கேரளா	0.834
2	கோவா	0.764	கோவா	0.766
3	பஞ்சாப்	0.721	சிக்கிம்	0.746
4	இம்மாசல பிரதேசம்	0.720	பஞ்சாப்	0.744
5	சிக்கிம்	0.716	இம்மாசல பிரதேசம்	0.741
6	தமிழ்நாடு	0.708	மஹாராஷ்டிரா	0.730
குறிப்பு: தற்போது தமிழ்நாடு HDI தரவரிசையில் ஒரு இடம் சரிந்து மஹாராஷ்டிராவிற்கு அடுத்த இடத்தை பிடித்துள்ளது.				

நடுத்தர / குறைந்த மனித வள மேம்பாடு அடைந்த மாநிலங்கள்

2018			2019	
தரவரிசை	மாநிலங்கள்	HDI	மாநிலங்கள்	HDI
25	ஒடிசா	0.566	சட்டீஸ்கர்	0.621
26	மத்திய பிரதேசம்	0.574	மத்திய பிரதேசம்	0.620
27	ஜார்கண்ட்	0.589	உத்தர பிரதேசம்	0.609
28	உத்தர பிரதேசம்	0.583	ஜார்கண்ட்	0.606
29	பீகார்	0.597	பீகார்	0.589

மிக உயர்ந்த / உயர்ந்த / நடுத்தர மனித வள மேம்பாடு அடைந்த யூனியன் பிரதேசங்கள்

2018			2019	
தரவரிசை	யூனியன் பிரதேசங்கள்	HDI	யூனியன் பிரதேசங்கள்	HDI
1	சண்டிகர்	0.774	சண்டிகர்	0.827
2	லட்சத்தீவு	0.749	லட்சத்தீவு	0.766
3	டெல்லி	0.744	டெல்லி	0.759
4	அந்தமான் & நிக்கோபர்	0.742	அந்தமான் & நிக்கோபர்	0.759
5	புதுச்சேரி	0.739	புதுச்சேரி	0.742

Telegram : @tnpscfree
https://t.me/tnpscfree

1.4.1 இந்திய அளவிலான 2019-ம் ஆண்டின் மனிதவள மேம்பாட்டு குறியீடு-SBIயால் செய்யப்பட்ட ஒப்பீடு

- ஒப்பீட்டளவிலான மாநிலங்களின் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டை ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (SBI), 27 ஆண்டுகளுக்கான (1990-2017) ஐக்கிய நாடுகள் மனிதவள மேம்பாட்டு அறிக்கையின்படி தோராயமாக கணித்தது.
- ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் கேரளா போன்ற மாநிலங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன.
- ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் HDI தரவரிசையில் கணிசமான உயர்வைக் கண்டுள்ளன.
- இந்தியாவின் 25 முக்கிய மாநிலங்களில், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், ஒடிசா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் HDI மதிப்பில் அதிக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.
- தமிழ்நாடானது, HDI தரவரிசையில் 11-வது இடத்திலிருந்து (1990), 7-வது இடத்திற்கு (2017) முன்னேறியுள்ளது. உத்தரபிரதேசம் மற்றும் பீகார் ஆகிய இரு மாநிலங்களும் கடந்த 27 ஆண்டுகளாக கடைசி இரண்டு இடங்களில் நீடிக்கின்றன (2017 வரை).

1.5 நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகள் (MDGs)

- 2000-ம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் நூற்றாண்டு மாநாட்டின் வெளிப்பாடாக ஐக்கிய நாடுகளின் நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகள் வெளியிடப்பட்டன.
- இந்த இலக்குகளை அடையவும், வறுமையை ஒழிக்கவும், 189 நாடுகளின் தலைவர்கள் வரலாற்று சிறப்புமிக்க நூற்றாண்டு பிரகடனத்தில் கையொப்பமிட்டன. எட்டு இலக்குகளை அடைவதற்கான இலக்கு ஆண்டாக 2015 நிர்ணயிக்கப்பட்டது.
- நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகள் அளவிடத்தக்க இலக்குகளையும், அவ்விலக்குகளை அடைய தெளிவான வரம்புகளையும் முன்னிறுத்தி அதன் மூலம் உலகிலுள்ள வறுமையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உதவுகிறது.

எட்டு நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகள் பின்வருமாறு

இலக்கு 1	உச்சகட்ட வறுமை மற்றும் பசியை ஒழித்தல்
இலக்கு 2	அனைவருக்கும் தொடக்க கல்வியை அளித்தல்.
இலக்கு 3	பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலை ஊக்கப்படுத்துதல்.
இலக்கு 4	குழந்தை இறப்பை குறைத்தல்
இலக்கு 5	மகப்பேறு நலனை மேம்படுத்தல்.
இலக்கு 6	HIV/AIDS, மலேரியா மற்றும் பிற நோய்களை எதிர்த்து போரிடுதல்.
இலக்கு 7	சூழலியல் நிலைத்தன்மையை உறுதி செய்தல்.
இலக்கு 8	மேம்பாட்டிற்கான உலகஅளவிலான கூட்டாணியை மேம்படுத்துதல்.

1.6 நீடித்த நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் (SDGs)

- தொடக்க ஆண்டு - 2015
- இலக்கு ஆண்டு - 2030
- இலக்கை அடைவதற்கான காலம் - 15 ஆண்டுகள்
- நீடித்த நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் 2012-ல் ரியோ டி ஜெனிரோவில் நடந்த நீடித்த / நிலைத்த மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் உதித்தது.
- **நோக்கம்:** சூழலியல், அரசியல் மற்றும் பொருளாதார உடனடி சவால்களை சந்திப்பதற்காக உலகளாவிலான இலக்குகளை உருவாக்குதல்.
- நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகள் தொடங்கி வைத்ததை, முடிப்பதற்காகவும் மேலும் சில முக்கியமான அழுத்தம் நிறைந்த சவால்களை துணிச்சல் நிறைந்த ஈடுபாட்டுடன் சந்திப்பதற்காகவும் நீடித்த நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் உருவாக்கப்பட்டன.
- ஒட்டுமொத்தமாக 169 - இலக்குகள் மற்றும் 304 குறீயீடுகள் (சுட்டிகள்) தொடர்புடைய 17 நீடித்த நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் உள்ளன.

1.6.1 SDG-க்களின் இந்திய குறியீடு - அடிப்படை / அடிநிலை அறிக்கை, 2019

- நிதி ஆயோகால் வெளியிடப்படுகிறது.
- SDG-யின் இந்தியக் குறியீடு, இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் நிலை குறித்த ஒரு முழுமையான நோக்கத்தை வெளிப்படுத்த முயல்கிறது.
- SDG-இந்தியக் குறியீடு மதிப்பெண்களின் அடிப்படையிலான வகைப்பாடு
  - முனைவோர் 0 - 49
  - செயல்பாட்டாளர் 50 - 64
  - முன்னோடி 65 - 99
  - வெற்றியாளர் 100
- **ஒட்டுமொத்த செயல்பாடு :** இந்தியா 60, தமிழ்நாடு 67
- இந்திய அளவிலான மாநிலங்களில் தமிழ்நாடு 3-வது இடத்தை பிடித்துள்ளது.
- SDG ஐக்கிய நாடுகள் பொது அவையில் 193 நாடுகளால் ஏற்கப்பட்டு அதனை நடைமுறைப் படுத்தியதில் 2020-ம் ஆண்டுடன் 5 ஆண்டுகள் முடிவடைகின்றன.

https://t.me/tnpscfree

இலக்குகள் வழியான அடைவுகள் / சாதனைகள்

இலக்குகள்	இந்தியா		தமிழ்நாடு	
	மதிப்பு %	வகைபாடு	மதிப்பு %	வகைபாடு
SDG 1: வறுமையற்ற நிலை	50	முனைவோர்	72	முன்னோடி
SDG 2: பட்டினியில்லா நிலை	35	முனைவோர்	48	முனைவோர்
SDG 3: சிறந்த உடல் நலம்	61	செயல்பாட்டாளர்	76	முன்னோடி
SDG 4: தரமான கல்வி	58	செயல்பாட்டாளர்	70	முன்னோடி
SDG 5: பாலின சமத்துவம்	42	முனைவோர்	40	முனைவோர்
SDG 6: தூய்மையான குடிநீர் மற்றும் துப்புரவு	88	முன்னோடி	90	முன்னோடி
SDG 7: தூய்மையான மற்றும் மலிவான ஆற்றல்	70	முன்னோடி	90	முன்னோடி
SDG 8: நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி	64	செயல்பாட்டாளர்	74	முன்னோடி
SDG 9: தொழில், புத்தாக்கம், உள்கட்டமைப்பு	65	முன்னோடி	53	செயல்பாட்டாளர்
SDG 10: ஏற்றத்தாழ்வு குறைப்பு	64	செயல்பாட்டாளர்	65	முன்னோடி
SDG 11: நிலைத்த நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்	53	செயல்பாட்டாளர்	51	செயல்பாட்டாளர்
SDG 12: பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி	55	செயல்பாட்டாளர்	63	செயல்பாட்டாளர்
SDG 13: தட்பவெப்பநிலை நடவடிக்கை	60	செயல்பாட்டாளர்	45	முனைவோர்
SDG 14: நீருக்கடியில் வாழ்க்கை	-	-	50	செயல்பாட்டாளர்
SDG 15: நிலப்பகுதியில் வாழ்க்கை	66	முன்னோடி	91	முன்னோடி
SDG 16: அமைதி மற்றும் நீதிக்கான வலிமையான நிறுவனங்கள்	72	முன்னோடி	78	முன்னோடி
SDG 17: இலக்குகளை அடைவதில் கூட்டு முயற்சி	-	-	-	-

1.7 தமிழ்நாடு மாநில மனிதவள மேம்பாட்டு அறிக்கை -2017

மாவட்ட அளவில் தொகுக்கப்பட்ட பல்வேறு மனிதவள மேம்பாட்டு குறியீடுகளின் அடிப்படையில் மாநில திட்டக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை

1.7.1 மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டு குறியீடு பின்வரும் பரிமாணங்கள் மற்றும் குறீயிடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இக்குறியீடுகள் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்கு மட்டுமே உரித்தானவை.

பரிமாணங்கள்	குறியீடுகள் / சுட்டிகள்
வாழ்க்கைத் தரம்	தலா வருமானம்.
உடல்நலம்	பிறப்பின் போதான எதிர்பார்க்கப்பட்ட வாழ்நாள்.
கல்வி	கல்வியறிவு வீதம் தொடக்கப்பள்ளிகளில் ஒட்டு மொத்த பதிவு / சேர்க்கை / இரண்டாம் / நடுநிலை பள்ளிகளில் ஒட்டு மொத்த பதிவு / சேர்க்கை.

முதல் ஐந்து மாவட்டங்கள்			கடைசி ஐந்து மாவட்டங்கள்		
தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்	தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்
1	கன்னியாகுமரி	0.944	28	திருவாரூர்	0.568
2	விருதுநகர்	0.855	29	விழுப்புரம்	0.561
3	தூத்துக்குடி	0.852	30	தேனி	0.539
4	சென்னை	0.847	31	பெரம்பலூர்	0.447
5	காஞ்சிபுரம்	0.845	32	அரியலூர்	0.282

1.7.2 பல்பரிமாண வறுமைக் குறியீடு

தமிழ்நாட்டின் பல்பரிமாண வறுமைக்குறியீடு பின்வரும் பரிமாணங்கள் மற்றும் குறீயிடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இக்குறியீடுகள் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்கு மட்டுமே உரித்தானவை.

பரிமாணங்கள்	குறியீடுகள் / சுட்டிகள்
உடல்நலம்	IMR மற்றும் உயர்ந்த நிலையிலான பிறப்பு வீதம்
கல்வி	ஆரம்ப, நடுநிலை (இரண்டாம்) கல்விநிலையில் இடை நிற்றல்.
வாழ்க்கைத்தரம்	சமையல் எரிபொருள், கழிவறை வசதிகள், சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர்

https://t.me/tnpscfree

முதல் ஐந்து மாவட்டங்கள்			கடைசி ஐந்து மாவட்டங்கள்		
தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்	தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்
1	காஞ்சிபுரம்	0.34	28	அரியலூர்	0.62
2	சென்னை	0.34	29	விருதுநகர்	0.62
3	கடலூர்	0.38	30	ராமநாதபுரம்	0.63
4	கோயம்புத்தூர்	0.41	31	பெரம்பலூர்	0.70
5	நாகப்பட்டினம்	0.41	32	தருமபுரி	0.70

I.7.3 குழந்தை மேம்பாட்டுக் குறியீடு

- தமிழகத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து / உணவூட்டம் ஆகியவற்றை பொருத்து குழந்தை மேம்பாட்டுக் குறியீடு.

குழந்தை மேம்பாட்டு குறியீடு அளவிடுவதற்கான அளவைகள் / காரணிகள்

- 5-வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம்
- ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் சதவீதம் (0-6 வயது).
- சிறார் பாலின விகிதம்
- தொடக்க மற்றும் இரண்டாம் நிலை பள்ளிகளில் ஒட்டுமொத்த பதிவு / சேர்க்கை விகிதம்.
- இதுவரை பள்ளியில் பதிவு செய்யப்படாத / சேராத குழந்தைகளின் சதவிகிதம்.
- தொடக்க நிலையிலிருந்து உயர்தொடக்க நிலைக்கு சேரும் மாணவர்களின் விகிதம்.
- உயர் தொடக்க நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு சேரும் மாணவர்களின் வீதம்.

முதல் ஐந்து மாவட்டங்கள்			கடைசி ஐந்து மாவட்டங்கள்		
தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்	தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்
1	கன்னியாகுமரி	0. 872	28	ராமநாதபுரம்	0.528
2	கோயம்புத்தூர்	0. 745	29	வேலூர்	0.523
3	தூத்துக்குடி	0. 712	30	கிருஷ்ணகிரி	0.474
4	தஞ்சாவூர்	0. 710	31	திருவண்ணாமலை	0.426
5	சிவகங்கை	0. 706	32	அரியலூர்	0.410

I.7.4 உணவு பாதுகாப்புக் குறியீடு (FSI)

ஊட்டச்சத்து அடிப்படையிலான உணவு நுகர்விற்கு முக்கியத்துவம் அளித்து உணவு பாதுகாப்பின் அம்சங்களான உற்பத்தி மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் உணவுப் பாதுகாப்பு கணக்கிடப்படுகிறது.

உணவு பாதுகாப்பு குறியீட்டின் குறியீகள்

பரிமாணங்கள்	குறியீடுகள் / சுட்டிகள்
கிடைக்கும் தன்மை	பயிரிடப்பட்ட பரப்பளவு, நீர்பாசன பரப்பளவு தலா உணவு தானிய உற்பத்தி, ஒட்டு மொத்த சாகுபடி பரப்பில் உள்ள இருவித்திலைத் தாவர சதவிகிதம்
மொத்த உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களிலிருந்து பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தானியங்களின் சதவீதம்	தலா வருமானம் வறுமைக் கோட்டுக்கு கீழான குடிமக்களின் சதவிகிதம், மதிய உணவு பயனாளிகளின் சதவிகிதம்
உடல் ஏற்புத்தன்மை	குழந்தை இறப்பு விகிதம், ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் சதவிகிதம், குறைவான உடல் எடையுடன் பிறந்த குழந்தைகளின் சதவிகிதம்

முதல் ஐந்து மாவட்டங்கள்			கடைசி ஐந்து மாவட்டங்கள்		
தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்	தரவரிசை	மாவட்டங்கள்	குறியீட்டெண்
1	திருவாரூர்	0.580	28	விழுப்புரம்	0.333
2	கன்னியாகுமரி	0.562	29	ராமநாதபுரம்	0.286
3	நாகப்பட்டினம	0.524	30	விருதுநகர்	0.268
4	திருவள்ளூர்	0.511	31	பெரம்பலூர்	0.267
5	திருப்பூர்	0.487	32	நீலகிரி	0.266

I.7.5 பாலின சமத்துவமின்மைக் குறியீடு

பாலின மற்றும் மேம்பாட்டு அளவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் வேறுபாடுகளை கண்டறிவதற்காக இக்குறியீடு உருவாக்கப்படுகிறது.

பாலின சமத்துவமின்மைக் குறியீட்டுக்கான சுட்டிகள் / குறியீடுகள்

பரிமாணங்கள்	குறியீடுகள் / சுட்டிகள்
இனப்பெருக்க நலன்	▪ MMR-பிரசவத்தின்போது தாய் இறப்பு வீதம். ▪ மருத்துவ நிறுவனங்களில் / சுகாதார நிலையங்களில் / மருத்துவமனைகளில் நடைபெறும் மகப்பேறுகளின் சதவீதம். ▪ 0-6 வயதுள்ள ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் சதவிகிதம்
அதிகாரமளித்தல்	▪ ஆண் மற்றும் பெண் கல்வியறிவு வீதத்தின் பங்கீடு ▪ கிராம மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஆண் பெண் பங்கீடு
தொழிலாளர் சந்தை	▪ ஆண் மற்றும் பெண் வேலை பங்கெடுப்பு வீதம். ▪ ஆண் மற்றும் பெண் விவசாய கூலி வீதம்

https://t.me/tnpscfree

முதல் ஐந்து மாவட்டங்கள்			கடைசி ஐந்து மாவட்டங்கள்		
தகுதிநிலை	மாவட்டங்கள்	குறியீட்டெண்	தகுதிநிலை	மாவட்டங்கள்	குறியீட்டெண்
1	நீலகிரி	0.036	28	சென்னை	0.111
2	விருதுநகர்	0.048	29	மதுரை	0.112
3	வேலூர்	0.051	30	விழுப்புரம்	0.113
4	நாமக்கல்	0.054	31	சிவகங்கை	0.114
5	பெரம்பலூர்	0.057	32	அரியலூர்	0.118

1.8 மற்ற / பிற குறியீடுகள் / அறிக்கைகள்

1.8.1 ஐக்கிய நாடுகளின் (ஐ.நா.) உலக மகிழ்ச்சி அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலைத்த மேம்பாட்டு தீர்வுகள் வலையமைப்பினால் வெளியிடப்படுகிறது.
- முதன் முதலில் ஐ.நா. மகிழ்ச்சி அறிக்கை 2012-ல் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது நாடுகளை 6முக்கியமான காரணிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துகிறது. **6 மாறிகளாவன**: 1. வருமானம், 2. சுதந்திரம், 3. வலுவான சராசரி ஆயுள், 4. சமூக உதவி 5. பெருந்தன்மை, 6. ஊழலின்மை
- 156 நாடுகளில் இந்தியா 140வது இடத்தை பெற்றுள்ளது.
- கடந்த சில ஆண்டுகளாக உலகளவிலான ஒட்டுமொத்த மகிழ்ச்சி நிலை தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்தியாவில் இது குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருகிறது. 2018-ல் இந்தியா 133வது இடத்தை பெற்றிருந்தது. 2019-ல் 140வது இடத்திற்கு சரிந்தது. இந்தியாவின் அண்டை நாடுகளில் முக்கியமாக பாகிஸ்தான்-67, பூடான்-95, சீனா-93, வங்கதேசம்-125, ஸ்ரீலங்கா 130வது இடத்திலும் உள்ளன.

1.8.2 மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNH)

- பூடான் அரசு தனது அரசியலமைப்புச் சட்டத்தில், மொத்த நாட்டு மகிழ்ச்சியை ஒரு இலக்காக ஜூலை 18, 2008-ல் குறிப்பிட்டது.
- மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடானது, பூடான் அரசாங்கத்தை வழிநடத்தும் தத்துவம் ஆகும்.
- இக்குறியீடானது, அச்சமூகத்தில் இருக்கும் கூட்டு மகிழ்ச்சி மற்றும் மக்களின் நல்வாழ்வை கணக்கிட உதவுகிறது.

GNHன் நான்கு முக்கியத்துவங்களாவன

1. நீடித்த நிலைத்த மற்றும் சமமான சமூக பொருளாதார மேம்பாடு
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
3. கலாச்சார பாதுகாப்பு மற்றும் மேம்பாடு
4. நல்ல ஆளுமை / நிர்வாகம்

- GNH-ன் **ஒன்பது முக்கிய பகுதிகளாவன**: உளவியல் நல்வாழ்வு, உடல்நலம், நேரப்பயன்பாடு, கல்வி, கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் நிலைத்தன்மை, நல் ஆளுகை, சமூக முக்கியத்துவம், சூழலியல் பன்முகத்தன்மை மற்றும் நிலைத்தன்மை, வாழ்க்கைத்தரம்.
- ஒவ்வொரு பகுதியும் அளவீட்டு அடிப்படையிலான மற்றும் குறிக்கோள் அடிப்படையிலான குறியீடுகளால் கட்டமைப்பட்டுள்ளது.

1.8.3 மகிழ்ச்சி மற்றும் இந்திய மாநிலங்கள்

- **நோக்கம்:** குடிமக்கள் சரியான காரணங்களுக்காக மகிழ்ச்சியாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் இருப்பதற்கு உதவுதல். மத்தியபிரதேசம் (2016) மற்றும் ஆந்திரபிரதேசம் (2017) ஆகிய மாநிலங்களில் மகிழ்ச்சித் துறை உருவாக்கப்பட்டது.

1.8.4 வாழ்க்கைத் தர குறியீட்டெண்

- இந்தக் குறியீட்டில் மோரிஸ் -டி- மோரிஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- இது வாழ்க்கை தரத்தினை அளவிடுவதற்கான அளவை.
- இது 3 குறியீடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவை, சராசரி ஆயுள், குழந்தை இறப்பு வீதம் மற்றும் கல்வியறிவு வீதம்.
- ஒவ்வொரு குறியீடுகள் / சுட்டிகளின் அளவீடும் 1 முதல் 100 எண்கள் வரை குறிக்கப்படும். 1 என்பது ஒரு நாட்டின் மோசமான செயல்பாட்டையும், 100 என்பது சிறந்த செயல்பாட்டையும் குறிக்கும்.
- HDI மற்றும் PQLI ஆகியவற்றின் இடையேயான முக்கியமான வேறுபாடு என்னவெனில் HDI-ல் வருமானம் கணக்கில் கொள்ளப்படும். PQLI-ல் வருமானம் கணக்கில் கொள்ளப்படாது.
- HDI என்பது இயற்றப்பட்ட மற்றும் நிதிசார்ந்த மேம்பாட்டையும், PQLI என்பது வாழ்க்கையின் உடல்சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கும்.

1.8.5 ஊழல் கருத்துக் குறியீடு

- ஊழல் கருத்துக் குறியீட்டினை டிரான்பரன்சி இண்டர்நேஷ்னல் வெளியிடுகிறது.
- இதுபொதுத்துறையில்உள்ளஊழல்அளவின்அடிப்படையில்180நாடுகளைவரிசைப்படுத்துகிறது.
- ஒவ்வொரு குறியீடுகள் / சுட்டிகளின் அளவீடும் 0 முதல் 100 எண்கள் வரை குறிக்கப்படும்.
- பூஜ்ஜியம் என்பது உச்சகட்ட ஊழல் என்பதையும், 100 என்பது ஊழலற்ற (சுத்தமான) நிலையையும் குறிக்கிறது. 2019-ஆம் ஆண்டில் இந்தியா-80, 2018-ஆம் ஆண்டில் 78வது இடத்தையும் வகித்தது. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற ஜனநாயக நாடுகளில் நியாயமற்ற மற்றும் மறைமுக அரசியல் நிதிப்புழக்கம், சக்தி வாய்ந்த கார்ப்பரேட் நிறுவனங்களின் அரசியல் மற்றும் அரசு ரீதியாக முடிவெடுப்பதில் தலையிடுதல் போன்ற செயல்கள் ஊழலின் தேக்கநிலை மற்றும் அதனை கட்டுப்படுத்தும் நிலையில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

https://t.me/tnpscfree

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

– குறள் 517

விளக்கம்:

இந்தச் செயலை இக்கருவியால் இன்னவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே, அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

மாதிரி வினாக்கள்

1. மனிதவள மேம்பாட்டு குறியீடு 2019
   1. இந்தியாவின் தற்போதைய HDI மதிப்பு 1990 உடன் ஒப்பிடும்போது 50% அதிகரித்துள்ளது.
   2. பாலின சமத்துவமின்மை குறியீட்டு தரவரிசையில் சீனா இந்தியாவிற்கு கீழே உள்ளது.
   3. தொழில்நுட்ப மாற்றமானது ஏற்கனவே இருக்கும் சமூக மற்றும் பொருளாதார பிளவுகளை ஆழப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்று இவ்வறிக்கை குறிப்பிட்டு காட்டுகிறது.

   கீழ்க்கண்ட குறிகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு:

   (A) 2 மட்டும் (B) 1 மற்றும் 3 (C) 1 மற்றும் 2 (D) அனைத்தும்
2. பின்வருவனவற்றில் மனிதவள மேம்பாட்டு குறியீட்டின் குறிகாட்டியாக இல்லாதது எது?

   (A) சுகாதாரம் (B) வாழ்க்கைத்தரம் (C) பாலின சமத்துவம் (D) கல்வி
3. 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் படி, பின்வரும் எந்த மாவட்டம் பல பரிமாண வறுமைக் குறியீட்டில் கடைசி இடம் பிடித்துள்ளது?

   (A) ராமநாதபுரம் (B) விருதுநகர் (C) அரியலூர் (D) பெரம்பலூர்
4. ஊழல் மலிவுச் சுட்டெண் (CPI) ஐ வெளியிடும் அமைப்பு _____.

   (A) UNDP (B) WEF

   (C) டிரான்சிபரன்சி இண்ட்டர்நேசனல் (D) UNO
5. 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் படி, பின்வரும் எந்த மாவட்டம் உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் முதலிடம் பெற்றுள்ளது?

   (A) கன்னியாகுமரி (B) நாகப்பட்டிணம் (C) திருவாரூர் (D) திருப்பூர்
6. பின்வரும் எந்த ஆண்டில் ஐக்கிய நாடுகள் முன்னேற்ற திட்டத்தால் முதல் மனித மேம்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்டது?

   (A) 1982 (B) 1990 (C) 1992 (D) 1996

விடைகள்

1	2	3	4	5	6
B	C	D	C	C	B

அத்தியாயம் 2

தமிழகத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு

"சமூகச் சீர்திருத்தங்கள் ஒரு போதும் வலுவானவர்களின் பலவீனத்தால் மேற் கொள்ளப்படுவதில்லை; மாறாக வலுவற்றவர்களின் பலத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன". **– கார்ல் மார்க்ஸ்**

இந்திய சமூகத்தில் நிலவிய சாதியமுறை, தீண்டாமை, குழந்தைத் திருமணம், பலதாரமணம், பெண்சிசுக்கொலை போன்ற சமூக அநீதிகள் 19–ம் நூற்றாண்டில் மேற்கத்திய கல்வியின் விளைவாலும் பகுத்தறிவு சிந்தனையாளர்களாலும் மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டது. தமிழகத்தில் இக்கொடுமையான ஒழிக்க பல சீர்திருத்த இயக்கங்களும் சீர்திருத்தவாதிகளும் எழுந்தனர்.

2.1 திருவள்ளுவர் மற்றும் தமிழ் சமூகம் (கி.மு. 31)

- திருவள்ளுவர் – தமிழ் புலவர், தத்துவவாதி, முற்போக்கு அரசியல் சிந்தனையாளர்.
- இவரது நூல் திருக்குறள் – தமிழ் செவ்வியல் இலக்கியமாகவும் இந்தியாவின் முதல் அரசியல் கையேடாகவும் விளங்குகிறது.
- இந்நூலில் அரசியல் நிர்வாகம் சார்ந்த கருத்துக்கள் மிகுந்துள்ளன.
  - திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இது அறம் மற்றும் நீதிசார் நூல்களில் ஒன்று.
  - இது 133 அதிகாரம் மற்றும் 1330 குறள்களைக் கொண்டுள்ளது.
  - "தமிழகத்தின் விவிலியம்" எனப் போற்றப்படுகிறது.
  - மூன்று பிரிவுகளை கொண்ட முப்பால் இலக்கியம்
- அறத்துப்பால் – (நீதி மற்றும் தர்மம்) ஒருவர் நீதிசார்ந்த இல்லற வாழ்வோ, துறவற வாழ்வோ வாழ வழிவகுக்கிறது.
- பொருட்பால் – (பொருளியல் மற்றும் அரசியல்) – செல்வத்தின் சிறப்புகளையும், அரசரின் கடமைகளையும் விளக்குகிறது.

https://t.me/tnpscfree

- இன்பத்துப்பால் – (காதல் மற்றும் காமம்) – திருமணத்திற்கு முன் மற்றும் பின் காதல் மற்றும் அன்பின் சிறப்பை உணர்த்துகிறது.
  - திருக்குறள் இம்மூன்று பிரிவுகளின் மூலம் மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளை பற்றி கூறவும். இது வாழ்க்கை கலைக்கு வழிகாட்டுதலாக விளங்குகிறது.
  - திருக்குறளில் பொதிந்துள்ள மதிப்புகள், ஞானம், அறிவு மற்றும் உணர்ச்சி இணையற்றது. இது இக்குறளை இயற்றியவரின் உண்மையான அடையாளத்தைக் காண வழிவகுக்கிறது.

திருக்குறள் உணர்த்தும் கருத்துக்கள்

- பொருட் செல்வம் மற்றும் பிற செல்வங்கள் நிலையற்றதாக இருக்க, கல்விச் செல்வத்தின் மதிப்பு மற்றும் பயன்கள் காலத்திற்கும் நிலையானதாக இருக்கும்.
- செல்வந்தர் தன் செல்வத்தை காக்காமல் இருந்தால், அவரது செல்வமும் புகழும் சேர்ந்து கெடும்.
- அரசன், கணவன், மனைவி, அமைச்சர் என அனைவரின் கடமைகளை பற்றி திருவள்ளுவர் வகுத்துள்ளார். எனினும், பெண்களுக்கான சொத்துரிமை பற்றி கூறவில்லை.
- பிறப்பால் அனைவரும் சமம் என்றும் அவரவர் செயல்களும் பண்புகளுமே அவர்களை வேறுபடுத்துவதாகவும் கூறியுள்ளார்.

2.2 தமிழகத்தின் சமூக சீர்திருத்தவாதிகள்

2.2.1 இராமலிங்க அடிகள் (1823-74)

- 1823-ல் சிதம்பரம் அருகே மருதூரில் பிறந்தார்.
- "திருவருட்பிரகாச வள்ளலார்" என அழைக்கப்பட்டார்

1865	**சமரச சுத்த சன்மார்க்க சங்கம்** **நோக்கம்** 1. சமூகத்தில் மத நல்லிணக்கத்திற்காகவும், சாதி கடந்த ஒற்றுமையை வளர்ப்பதற்காகவும் நிறுவப்பட்டது. 2. சடங்குகளையும், சாதிப்பிரிவுகளையும் எதிர்த்தது. 3. உலகளாவிய அன்பையும், சகோதரத்துவத்தையும் ஊக்குவித்தது
1867	**சத்திய தருமசாலை – வடலூர்** 1. ஏழைகளுக்கு உணவளித்தலே மிகச் சிறந்த வழிபாடு எனக் கூறினார்.
1872	**சத்திய ஞான சபை** 1. உண்மையான ஞான நெறிகளை வழங்க தொடங்கப்பட்ட மன்றம் 2. இது சமய சார்பற்றது

வள்ளலாரின் போதனைகள்

- மனிதனுக்கு செய்யும் சேவையே மோட்சத்திற்கான பாதை.
- "ஜீவ காருண்யம்"
  - "அன்பு" என்பதே "ஆன்மீகத்தின் முதன்மை விசை" எனக் கருதினார்.
  - அவர் மனிதன் மீது மட்டுமல்லாது அனைத்து உயிரினங்கள் மீதும் கருணை மற்றும் இரக்கம் காட்டினார்.
  - "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்பது இவருடைய பிரபலமான கூற்று. பசி, வறுமை இரண்டுமே சமூகத்தின் தலையாயக் கொடுமைகள் என நம்பியது.
  - வள்ளலாரின் பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்ட நூல் திருவருட்பா (கருணைப் பாடல்கள்).
  - கடவுளை அருட்பெருஞ்ஜோதியாக (ஒளிவடிவம்) வணங்கினார்.
- ஆன்மீகத்தின் மூலம் சமூக கொடுமைகளுக்கு தீர்வு காண விரும்பினார்.
- இவரது பாடல்களின் மாற்றுச் சிந்தனைகள் மூலம் மதவெறியையும், பகுத்தறிவின்மையையும் எதிர்த்தார்.
- இவரது கருத்துக்கள் சைவ மதத்திலுள்ள குறுங்குமுவாதத்தை எதிர்த்தன.

2.2.2 வைகுண்ட சுவாமிகள் (1809-1851)

- 1809-ல் தென் திருவிதாங்கூரில் சாஸ்தான் கோவில் விளை எனும் சிற்றூரில் பிறந்தார்.
- சமூக நீதிக்காக அறப்போரில் ஈடுபட்டவர்களுள் ஒருவர்.
- இந்து மத உயர் வகுப்பினரின் எதிர்ப்பால் இவரது இயற்பெயரான முடிசூடும் பெருமாளை "முத்துக்குட்டி" என இவரது அன்னை மாற்றினார்.
- அவரது சீடர்கள் அவரை 'அய்யா' என அழைத்தமையால், அவருடைய சமய வழிப்பாடு முறை "அய்யாவழி" என்றழைக்கப்படுகிறது.
- தனது போதனைகளில், திருவிதாங்கூர் சமூகத்தில் மரபு வழிப்பட்ட சாதிமுறையையும், ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்யும் அரசையும் கடுமையாக விமர்சித்தார்.
- அரசுக்கு எதிராகப் பேசினார் என்பதற்காக அவர் திருவிதாங்கூர் அரசரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

போதனைகள்

- கடவுளுக்கு விலங்குகளைப் பலியிடும் பழக்கத்தை எதிர்த்தார்.
- சாதியமுறையை எதிர்க்கும் அடையாளமாக தலைப்பாகை அணியும் படி வற்புறுத்தினார். அக்காலத்தில் தலைப்பாகை அணியும் உரிமை உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.
- வழிபாட்டில் உள்ள தேவையற்ற சடங்குகளை கைவிடும்படி வேண்டினார்.
- சமுதாயத்தில் நிலவிய பிறப்பினாலான சாதி வேறுபாட்டையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார்.
- மக்களை அவர்களின் சமூக உரிமைக்காகவும் சுயமரியாதைக்காகவும் போராட ஒற்றுமைப்படுத்தினார்.

https://t.me/tnpscfree

- "பூடம் (பீடம்)" வழிபாட்டு முறையை கைவிடும்படி வலியுறுத்தினார்.
- உருவ வழிபாட்டையும், மத சடங்குகளையும் எதிர்த்தார்.
- நடைமுறையிலுள்ள மத ஒழுங்கிற்கு எதிரான அவரது பிரச்சாரங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் அணுகுமுறையில் மாற்றத்தை விளைவித்தன.

சமூக நீதி

- சமத்துவ சங்கத்தை நிறுவினார்.
  - அனைத்து பிரிவுகளில் உள்ள மக்களை ஒருங்கிணைப்பதற்காக பல சாதிகளைச் சேர்ந்த மக்கள் பங்கேற்கும் **சமபந்தி** விருந்துகளை ஏற்பாடு செய்தார்.
- "நிழல் தாங்கள்" – சாதிக்கட்டுப்பாடுகள் இல்லாத உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டன.
- மக்களிடம் அவர் ஏற்படுத்திய சமூக விழிப்புணர்வு அவர்களை 'கடவுளுக்கு முன் அனைவரும் சமம்' என்ற உரிமைக்காக போராடச் செய்தது.

2.2.3 இரட்டைமலை சீனிவாசன் (1859-1945)

- "தாத்தா" எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859ல் காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
- சாதிப் படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகநீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார்.
- 1884-ல் பிரம்மஞான சபையில் சேர்ந்தார். எனினும் அவ்வியக்கம் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக செயல்படாததால் அதிலிருந்து விலகினார்.

ஆதிதிராவிட மகாஜன சபை, 1893

- 1891-ல் இவரால் தொடங்கப்பட்ட பரையர் மகாஜனசபை, 1893-லிருந்து ஆதிதிராவிட மகாஜன சபை என வழங்கப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக போராடினார்.
- இவரின் இதழ் – "பரயன்"

1894	▪ தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான பஞ்சமி நிலங்களை மீட்டார். ▪ இலவச வீட்டுப் பட்டாக்கள், விவசாய நிலங்கள், குழந்தைகள் கல்வி கிடைக்க வழிவகைச் செய்தார்.
1906	தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்திந்து அவருடன் நெருக்கமானார். இனப்பாகுபாட்டுக்கு எதிராக போராடினார்.
1923	▪ மெட்ராஸ் மாகாண சட்டசபை உறுப்பினரானார் ▪ அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினால், மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

1924	ஆகஸ்டு 25ல் இவர் சட்டசபையில் கொண்டு வந்த தீர்மானம் ஏற்கப்பட்டு 1925-ல் அரசாணையாக வெளிவந்தது. 1. ஒடுக்கப்பட்ட மக்கள் பொது வீதிகளில், சாலைகளில், கோவில்களில் நுழைய அனுமதி. 2. ஒடுக்கப்பட்ட மக்கள் பொதுக் கிணறுகளில் நீர் எடுக்க அனுமதி

- ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு, மற்றும் மெட்ராஸ் மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார்.
- கல்வியின் மூலமாகவே ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை அடைய முடியும் என நம்பினார். அவர்களுக்கு பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் இலவச கல்வி வழங்க அறிவுறுத்தினார்.

வட்டமேசை மாநாடு

- அம்பேத்காரின் நெருக்கமானவரான இவர், லண்டனில் நடைபெற்ற முதல் இரண்டு வட்டமேசை மாநாடுகளில் (1930, 1931) கலந்து கொண்டார்.
- சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள மக்களின் கருத்துகளுக்காக அம்மாநாட்டில் குரல் கொடுத்தார்.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் சுதந்திரம் கொடுத்தாலொழிய, தீண்டாமை கொடுமைகள் நீங்காது என வலியுறுத்தினார்.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சட்டசபையில் சம உரிமைகள் அளிக்க வலியுறுத்தினார்.
- 1932 – பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.
- **பட்டங்கள்:** ராவ் சாகிப்(1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936).
  - இவரின் துணிச்சலை பாராட்டி திரு.வி.க., "திராவிடமணி" என்ற பட்டம் வழங்கினார். அந்த விழாவில் ராஜாஜியும் பங்கேற்றார்.
- **சுயசரிதை:** "ஜீவிய சரித சுருக்கம்", 1939-ம் ஆண்டு வெளியானது. இந்நூல் முதன் முதலாக எழுதப் பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.

2.2.4 மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826-1889)

- "மனைவிக்கு கணவனின் சொத்துகளில் ஒரு பகுதியை வழங்க வேண்டும்" என்றும், "திருமணமான பெண்களுக்கு சொத்துரிமை வழங்க வேண்டும்" என்றும் முதன் முதலாக வலியுறுத்தியவர் இவரே.
- பெண்களுக்கு கல்வி என்பது உணவுக்கு சமமானது எனக் கூறிய இவர், குழந்தை திருமணம், வரதட்சணை முறை, விதவைக் கோலம் ஆகியவற்றை எதிர்த்தார்.
- இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்ற புதினத்தில் (தமிழில் வெளிவந்த முதல் புதினம்) பெண் விடுதலை மற்றும் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்.

2.2.5 அயோத்திதாசப் பண்டிதர் (1845-1914)

- மே 20, 1845-ல் பிறந்த இவரின் இயற்பெயர் காத்தவராயன்.
- இவர் பௌத்த மதத்திற்கு மாறிய குறிப்பிடத்தக்க ஒடுக்கப்பட்ட தலைவர் ஆவார்.

https://t.me/tnpscfree

- இவர் "பஞ்சமர் பள்ளிகளை" - "ஆதிதிராடவிடர் பள்ளிகள்" என அழைக்க வலியுறுத்தினார்
- 1876 - நீலகிரியில் தோடர் இன பழங்குடியினரை ஒருங்கிணைத்து அத்வைதானந்த சபையை நிறுவினார்.
- 1885 - ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வியை முன்னேற்றப் போராடிய ஜான் திரவியம் என்றவருடன் இணைந்து "திராவிட பாண்டியன்" என்ற இதழை தொடங்கினார். 1883-ல் இருவரும் "திராவிடர்க் கழகம்" என்னும் அமைப்பை நிறுவினார்கள்.
- 1886-ல் தீண்டத்தகாதவர்களாக ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர்கள் "இந்துக்கள்" அல்ல என்று அறிக்கைவிட்டார். ஒடுக்கப்பட்டவர்களை "சாதிபேதமற்ற திராவிடர்" என்றழைத்தார்.
- 1887-ல் சீவகசிந்தாமணி, 1898-ல் மணிமேகலை ஆகிய இரண்டு பௌத்த நூல்களை முழுமை யாக அச்சிட்டு வெளியிட்டார். இவரின் இப்பதிப்பு புத்தகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.
- 1890 - ஆதிதிராவிட இயக்கத்தை துவங்கினார்.
  - அவர் "ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றும், வேத பிராமணியத்தை எதிர்த்ததன் விளைவாக அவர்கள் தீண்டத்தகாதவர்கள் ஆக்கப்பட்டனர்" என்றும் வாதிட்டார்.
  - மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தார்.
  - இந்த இயக்கத்தில் சிங்காரவேலரும், லட்சுமி நரசுவும் முக்கிய பங்கு வகித்தனர்.
- 1891
  - திராவிட மகாஜன சபையை நிறுவினார்.
    - ஒடுக்கப்பட்ட மக்களை "சாதியற்ற திராவிடர்கள்" எனப் பதிவு செய்ய வலியுறுத்தினார்.
    - இதன் முதல் மாநாடு நீலகிரியில் நடந்தது.
  - ரெட்டைமலை ஸ்ரீனிவாசனுடன் இணைந்து "பஞ்சமர் மகாசபையை" நிறுவினார்.
- 1907-ல் "ஒரு பைசாத் தமிழன்" என்ற வாராந்திரப் பத்திரிக்கையை வெளியிட்டார்.

2.2.6 G.சுப்பிரமணிய ஐயர் (1855-1916)

- இந்தியப் பத்திரிக்கையாளர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்
- 1884-ல் G.சுப்பிரமணியம், ஆனந்தாச்சார்லு, ரங்கையா ஆகியோர் இணைந்து மெட்ராஸ் மகாஜன சபையை நிறுவினார்கள்.
- 1891 - மெட்ராஸ் இந்து விதவைகள் மறுமணச் சங்கத்தை நிறுவினார்.
  - திருமண வயதுச் சட்டம், 1891-ஐ ஆதரித்தார்.
- 1889-ல் தனது விதவை மகளுக்கு மறுமணம் முடித்து விதவை மறுமணத்தை ஆதரிப்பதற்கு ஒரு உதாரணமாக திகழ்ந்தார்.

இதழ்பணி

- 1878 - தி இந்து (ஆங்கிலம்)
- 1891- சுதேசமித்தரன் (தமிழ்)

22.7 மதுரை பிள்ளை (1858-1913)

- தாழ்த்தப்பட்ட மக்களின் விழிப்புணர்வுக்காக போராடிய தலைவர்களில் ஒருவர்.
- தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி வழங்க, மெட்ராஸ் மாகாணத்தில் உயர்நிலைப் பள்ளியை துவங்கினார்.
- இவரின் புத்தகங்கள் மூலம் சுயமரியாதையையும் சமூக சகோதரத்துவத்தையும் பரப்பினார்.

பர்மாவில் மதுரை பிள்ளை

- பர்மாவில் வசித்த இந்தியர்களின் சமூக தொண்டு மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்காகவும் தன்னை அர்ப்பணித்தார்.
- பல ஆண்டுகள் பர்மா இந்து பரிபாலன சபைக்கு தலைமை வகித்தார்.
- பர்மாவிற்கு குடியேறும் ஏழை இந்தியர்களுக்கு சாதி, சமய, மொழி வேறுபாடின்றி தங்கும் விடுதிகளை தொடங்கினார்.

2.2.8 V.S. ஸ்ரீனிவாச சாஸ்திரி (1869-1946)

- பெண்களுக்கு பருவமடைந்த பின் திருமணம் நடத்த வலியுறுத்தினார். இந்திய பெண்களின் சமூக நிலை மற்றும் உரிமைகள் குறித்து புத்தகங்கள் பல எழுதியுள்ளார்.
- எனினும் இவர் பெண்களுக்கான சொத்துரிமை பற்றி கூறவில்லை.
- இந்தியாவின் முதல் கூட்டுறவு சங்கமான திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தை (1904)-ல் தொடங்கி இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக திகழ்ந்தார்.

2.2.9 பெரியார் ஈ.வே.ராமசாமி (1878-1973)

- செப்டம்பர் 17, 1879-ல் ஈரோட்டில் பிறந்தார்.
- 1918 - ஈரோடு நகரசபை தலைவராக பதவி வகித்தார்.

காங்கிரஸில் பெரியாரின் பங்கு

- 1919-காங்கிரஸில் இணைந்தார்.
- 1920-25 காங்கிரஸ் கட்சியில் முக்கிய பங்கு வகித்தார்.
  - 1921- மெட்ராஸ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் செயலாளராக பதவியேற்றார்.
  - 1920-22 ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவாக தான் வகித்து வந்த, அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார்.
  - தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார்.
  - மதுவிலக்கு இயக்கத்திற்கு ஆதரவாக தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார்.
  - 1923 - தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரானார்.
  - ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்து தீர்மானம் ஒன்றை முன் மொழிந்தார்.

https://t.me/tnpscfree

1925-ல் காங்கிரஸிலிருந்து விலகியதற்கான காரணங்கள்

- சேரன் மகாதேவி குருகுலத்தில் பின்பற்றப்பட்ட வர்ணாசிரமமுறை.
- பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க கொண்டு வந்த தீர்மானத்தின் வீழ்ச்சி (1925 - காஞ்சிபுரம் மாநாடு)

வைக்கம் சத்தியாகிரகம் (1924)

- திருவாங்கூர் சமஸ்தானத்தின் பகுதியிலுள்ள "வைக்கம்" என்ற ஊரில் "சாதிதர்மம்" பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதனைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது
- இதனை எதிர்த்த மக்களுக்கு மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் மற்றும் பெரியார் ஆகியோர் தலைமை வகித்து அந்த உரிமையைப் பெறச் செய்தனர்.
- இதனால் பெரியார் "வைக்கம் வீரர்" எனஅழைக்கப்பட்டார்.

சுயமரியாதை இயக்கம் (1925)

- காங்கிரஸிலிருந்து விலகிய பெரியார் தனது அரசியல் வாழ்வை துறந்து சமூக சீர்திருத்த சேவைகளை தொடர்ந்தார்.
- 1925-ல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கியதற்கான நோக்கம்:
  - சமூகத்திலுள்ள மூடபழக்கங்களை ஒழிக்க.
  - சாதி முறைகளை தகர்க்க.
  - பெண்களுக்கு சம உரிமைகள் வழங்க.
  - ஒடுக்கப்பட்டவர்களுக்கு சுயமரியாதை உணர்வை வளர்க்க.
  - தீண்டாமை கொடுமைகளை ஒழிக்க.
  - திராவிடர்களை ஆரிய மேலாதிக்கத்திலிருந்து மீட்க.

ஈரோடு திட்டம் (1925)

- கமியூனிஸ்ட் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் இணைந்து ஒரே இயக்கமாக செயல்பட ஒப்புக் கொள்ளப்பட்டது.

திருநெல்வேலி சுயமரியாதை மாநாடு (1927)

1. பெண்களுக்கு சமஉரிமை வழங்க
2. பெண்களுக்கு சொத்துரிமை அளித்து அவர்களுக்கு பொருளாதார சுதந்திரம் வழங்க வேண்டும்.

- முதல் சுயமரியாதை மாநாடு (1929) - செங்கல்பட்டு.
  - பெண்களுக்கு சொத்துரிமை வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1927 - சைமன் குழு தமிழகம் வந்த போது, சைமன் எதிர்ப்புக்குழுவிற்கு தலைமை வகித்தார்.

தீண்டாமை எதிர்ப்புச்சட்டம், 1930

நீதிக்கட்சியின் ஒத்துழைப்பினால் தமிழகத்தில் சாதியில்லா சமூகம் உருவாக அடித்தளமிட்டார்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், 1937-39

- 1937ல் ராஜாஜி பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார்.
- இதனை எதிர்த்து போராடிய பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார்.
- சிறையில் இருந்த போதே நீதிக்கட்சித் தலைவரானார்.
- சிறையில் இருந்து வெளிவந்த பெரியாருக்கு 1938-மெட்ராஸில் நடந்த பெண்கள் மாநாட்டில் S.தர்மாம்பால் அவர்களால் "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- பின்பு நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைக்கப்பட்டது.

சேலம் மாநாடு, 1944

- பெரியார் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், நீதிக்கட்சியானது திராவிடர் கழகம் என பெயர் மாற்றப்பட்டது.
- இம்மாநாட்டில் "திராவிடநாடு திராவிடருக்கே" என்று பெரியார் முழங்கினார்.

இதழ்ப்பணி

- 1925 -குடியரசு (சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தித்தாள்)
- 1928 - ரிவோல்ட்
- 1933 - புரட்சி
- 1934 - பகுத்தறிவு
- 1935 - விடுதலை

பெரியாரின் சிந்தனைகள்

- குழந்தைத் திருமணம், மணக்கொடை ஆகியவற்றை எதிர்த்தார்.
- கலப்பு திருமணம், விதவை மறுமணம், சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தார்.
- பெயருக்கு பின் சாதிப் பெயர்களை தவிர்க்க வலியுறுத்தினார்.
- பொது இடங்களில் சாதிப் பெயர்கள் வழங்குவதை எதிர்த்தார்.
- அனைவரும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பெற பெண்களை மேம்படுத்த, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக போராடினார்.
- பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டாலே அவர்கள் மேலுள்ள அடிமைத்தனம் விலகிவிடும் என நம்பினார்.
- 1929 - சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கான விவாகரத்து மற்றும் சொத்துரிமைகள் வழங்கும் முயற்சிகள் வரவேற்பை பெற்றன.
- குருமார்களின் வாரிசுரிமைகளை எதிர்த்தார்.
- ஜூன் 27, 1970 - யுனெஸ்கோ பெரியாருக்கு "தெற்காசியாவின் சாக்ரடீஸ்" என்ற பட்டத்தை வழங்கியது.

https://t.me/tnpscfree

சுயமரியாதை திருமணம்

- திருமண வாழ்வில் இருவருக்கும் சமஉரிமை, "திருமணம் என்பது இரு வாழ்க்கை துணையாளர்களின் ஒப்பந்தம்" என நம்பினார்.
- சுயமரியாதை திருமணம் என்பது மத சடங்குகள், சம்பிரதாயங்கள், அர்ச்சகர்கள் யாருமில்லாமல் நடைபெறுவது.
- **நூல்:** பெண் ஏன் அடிமையானாள்?
- 1930 - தேவதாசி ஒழிப்பு முறைக்காக போராடினார்.
- சுப்பராயன் அமைச்சரவை விதவைகளுக்கு விடுதி மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்ததில் பெரியாருக்கு பெரும் பங்குண்டு.

2.2.10 சுவாமி சகஜானந்தா (1881-1959)

- மூன்று முறை மதராஸ் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஆதிதிராவிடர் பாதுகாப்பிற்காக சட்டங்கள் இயற்றுதலில் முக்கிய பங்காற்றினார்.
- திருப்புங்காரில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கென கோவில் ஒன்றை நிறுவினார்.
- தனது வகுப்பினரிடையே தீண்டாமை எண்ணத்தை ஒழித்தார்.
- கீழ்க்குடியில் பிறந்தவர்கள் தீண்டாதவர்கள் அல்லர் என்றும் எல்லா சமூகத்திலும், மிருகத் தன்மை கொண்ட மனிதர்களே தீண்டத்தகாதவர்கள் என்றும் வாதிட்டார்.

2.2.11 L.C. குருசாமி (1882-1966)

- வர்ணாசிரம முறையை ஒழிக்க, பிராமண எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பெற்றார்.
- 1921 - தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளின் கல்விக்காக 2 பள்ளிகளை தொடங்கினார்.
- 1923 - சட்டசபையில் பெண்களுக்காக இலவச கல்விக்கட்டணம் வழங்க குரல் கொடுத்தார்.
- 1927 - ராவ்சாகிப் பட்டத்தை பிரிட்டிஷ் அரசு இவருக்கு வழங்கியது.

2.2.12 சுப்பிரமணிய பாரதி (1882-1921)

கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி

சமூக சீர்திருத்தப்பணிகள்

- சாதி முறைகளை எதிர்த்த பாரதியார், "ஆண், பெண்" என இரண்டு சாதிகளே உள்ளன என்றார்.
- பெண்களுக்கு எதிரான கட்டாயத் திருமணம், பாலின சமமின்மை, குழந்தைத் திருமணம், மணக்கொடை ஆகியவற்றை எதிர்த்தார்.
- ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவு, விதவை மறுமணம், பெண்களுக்கான உரிமைகளை ஆதரித்தார்.
- **நூல்கள்:** கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, நிலவும் விண்மீனும் காற்றும், பாஞ்சாலி சபதம்

இதழ்ப்பணி

- சுதேசமித்ரன் - துணை ஆசிரியராக இதழ்ப்பணியை தொடங்கினார்.
- இந்தியா, விஜயா, சூர்யோதயம் - விடுதலைப் போராட்டத்தில் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி தேசிய உணர்ச்சிகளை வளர்த்தார்.
- இந்தியா இதழ் - எதிர்ப்பின் வண்ணமாக சிவப்பு நிறத்தில் வெளியிடப்பட்டது.
- விஜயா இதழ் - அரசியல் சித்திரங்களை வெளியிட்ட முதல் பத்திரிக்கை.
- 1949-ல் இவரது படைப்புகள் தேசிய மயமாக்கப்பட்டன.

- 1908 - ல் "சுதேச கீதங்கள்" என்ற தலைப்பில் தேச உணர்ச்சிப் பாடல்களை வெளியிட்டார்.
- **பட்டங்கள்:** "மகாகவி", "தேசியக்கவி"

2.2.13 திரு.வி.கல்யாண சுந்தரனார் (1883-1953)

- விடுதலைப் போராட்ட வீரர், பத்திரிக்கையாளர், பெண் சீர்திருத்தவாதி, தொழிலாளர்களின் தலைவர், தமிழ்க்கவிஞர் மற்றும் ஆசிரியர்.
- சிறப்புப் பெயர் - "தமிழ்த் தென்றல்" - வள்ளலரால் வழங்கப்பட்டது.
- பெண்ணுரிமை, தொழிலாளர் நலன் மற்றும் தமிழர் மேம்பாடு ஆகியவற்றிற்காக போராடினார்.
- "மணக்கொடை வாங்குவதும் கொடுப்பதும் தவறு" என்றும், 'பெண்கள் நகை மீதான ஆசையை வெறுக்கவும்" வலியுறுத்தினார்.
- பெண்களும் இறுதி சடங்குகள் செய்து சொத்துரிமை பெறலாம் என்றார்.
- காந்தியின் மேடைப் பேச்சுகளை தமிழில் மொழி பெயர்த்தார்.

இதழ்ப்பணி: தேசபக்தன், நவசக்தி, திராவிடன்

2.2.14 M.C.ராஜா (1883-1943)

- ஜீன் 17, 1883-ல் பரங்கிமலையில் பிறந்தார்.
- தீண்டாமையை ஒழிக்கப் போராடிய ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த முக்கியமான தலைவர்களில் ஒருவர்.

அரசியல் வாழ்க்கை

- தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவர்.
- மெட்ராஸ் மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு (1920-26) தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர்.
- மெட்ராஸ் சட்டசபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவரானார்.
- தொழிலாளர் அமைச்சகத்திலிருந்து ஆதிதிராவிடர் நலத்துறை என தனித்துறையை பிரித்தார்.
- ஆதிதிராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக அந்த அமைச்சகம் செயல்பட்டது.
- பொதுக் கிணறுகள், இடுகாடுகளுக்கு செல்ல பொதுப்பாதைகள் ஆகியவற்றை ஒடுக்கப்பட்ட மக்கள் அணுகுவதை உறுதி செய்ய பல மாநாடுகள் மற்றும் அரசியல் கூட்டங்களை நடத்தினார்.

https://t.me/tnpscfree

கல்விப்பணி

- தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இரவுப் பள்ளிகளை அமைத்தார்.
- ஆதிதிராவிட மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் சமுதாய விழிப்புணர்வு வழங்குதல்

சமூக சீர்திருத்தங்கள்

- புத்தகம் - "ஒடுக்கப்பட்ட இந்துக்கள்" - ஒடுக்கப்பட்ட மக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வழிவகை செய்தது.
- ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர் எனும் வார்த்தைகளை பயன்படுத்த பரிந்துரைத்தார்.
- இவரின் முயற்சியால் "பஞ்சமர்" என்ற சொல் "ஆதிதிராவிடர்" என மாற்றப்பட்டது.
- 1928 - அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கத்தை நிறுவினர்.
- 1930 - வட்டமேசை மாநாட்டிற்கு அம்பேத்காருடன் சென்று ஒடுக்கப்பட்ட மக்களின் இன்னல்களை விளக்கினார்.
- தொடக்கத்தில் தனித் தேர்தல் தொகுதி வேண்டுமெனக்கோரிய அவர் பூனா உடன்படிக்கைக்குப் பின்னர் அந்நிலைப்பாட்டினை மாற்றிக் கொண்டு கூட்டுத் தொகுதி முறையை ஆதரித்தார்.

2.2.15 V.I. முனுசாமி பிள்ளை (1899-1955)

- 1926 - ஆதிதிராவிட மக்களின் பிரதிநிதியாக மெட்ராஸ் சட்டமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்.
- 1937 - 39 ராஜாஜி அமைச்சரவையில் விவசாயத்துறை அமைச்சராக பணியாற்றினார்.
- ராஜாஜியின் ஆலய நுழைவு மசோதாவிற்கு துணை நின்றவர்

2.2.16 P.கக்கன் (1908-1981)

- ஒடுக்கப்பட்ட மக்களின் தண்ணீர் உரிமைகளுக்காக போராடியவர்
- 1939-மதுரை மீனாட்சியம்மன் ஆலய நுழைவுப் போராட்டத்தில் தமிழக ஹரிஜன் சேவக சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், L.N. கோபாலசாமி மற்றும் மதுரை காந்தி என்றழைக்கப்படும் N.M.R. சுப்பராயன் ஆகியோருடன் இணைந்து போராடினார்.
- 1962-63 விவசாய அமைச்சராக இருந்த போது 2 விவசாய பல்கலைக்கழகங்களை தொடங்கினார்.
- 1963-67 உள்துறை அமைச்சரான கக்கன் சாதிய வன்கொடுமைகளை தடுக்க கடுந்தண்டனை சட்டங்களை கொண்டு வந்தார்.

சாதனைகள்

- மேட்டூர் மற்றும் வைகை அணைகள் கட்டப்பட்டன
- நீர்பாசனம் மூலம் விவசாயமானது முன்னேற்றம் அடைந்தது.

2.2.17 B.மேயர் பரமேஸ்வரன் (1909-1967)

- 1964-ல் இவரது தலைமையில், தலித்துகளின் சமூக நிலைகளை ஆராயும் உண்மை நிலையை அறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது.
- இந்த குழுவின் அறிக்கை தமிழக அரசு ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பல திட்டங்கள் கொண்டு வர வழிவகுத்தது.

2.2.18 தவத்திரு சுவாமி தேசிகானந்தா

- 1918- பழங்குடியினர் பகுதிகளில் பல பள்ளிகள் தொடங்கினார்.
- கூட்டுறவு சங்கங்களை தொடங்கி கீழ்நிலை மக்களுக்கு கடனுதவிகள் வழங்கினார்.

2.3 பெண் சீர்திருத்தவாதிகள்

2.3.1 அன்னிபெசன்ட் (1847-1933)

- 1889-ல் பிரம்மஞான சபையில் சேர்ந்தார். 1907-ல் தலைவரானார்.
- 1893 - சிகாகோவில் நடந்த உலக சமய மாநாட்டில் பிரம்ம ஞான சபை சார்பாக கலந்து கொண்டார்.
- தன்னாட்சி இயக்கம் - 1916 (G.S. அருண்டாலே, B.P. வாடியா மற்றும் C.P.ராமசாமி உதவியோடு)
- மனித உரிமை, பெண்களின் மேம்பாடு, இந்திய கலாச்சார மீட்பு ஆகியவற்றிற்காக போராடினார்.
- 1916 - பனாரஸில் மத்திய இந்து கல்லூரியை நிறுவினார்.
- 1917 - INC கல்கத்தா மாநாட்டில் தலைவரானார். இதழ்ப்பணி - நியூ இந்தியா (1915), காமன்வீல் (1914)
- 1905 - கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பான லோட்டஸ் சாங் (Lotus Song)-ஐ எழுதினார்.

கல்விப்பணி

- பெண்களுக்கு மதம் சார்ந்த கல்வியும், வட்டார இலக்கியக் கல்வியும் வழங்கப்பட்டது.
- பிரம்மஞான சபையின் கீழ் ஒரு கல்வி அறக்கட்டளை நிறுவினார்.
- பெண்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்விக்காகவும் போராடினார்.
- 1916-தேசியக் கல்வி ஊக்குவிப்பு சமூகமும், அதன் கீழ் 1918-ல் மெட்ராஸ்யில் தேசியப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
- 1917-இந்திய சாரணர் இயக்கத்தை ஒருங்கிணைத்து நடத்தினார் மற்றும் இளைஞர்களை மேம்படுத்த மாத இதழான - "இந்திய சாரணரை வெளியிட்டார்."

2.3.2 முத்துலெட்சுமி ரெட்டி (1886-1968)

- ஜீலை 30, 1886 - புதுக்கோட்டையில் பிறந்தார்.
- 1912 - இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்
- 1918 - இந்திய பெண்கள் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர்.
  - இச்சங்கம் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோரால் அடையாரில் தொடங்கப்பட்டது.
  - இச்சங்கம் தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மடல்களை வெளியிட்டுள்ளது.
  - 1927- அகில இந்திய பெண்கள் மாநாடானது, பெண்கள் குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக நடைபெற்றது.

https://t.me/tnpscfree

- 1930
  - புனேவில் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நடத்தியவர்.
  - சாந்தோமில் அவ்வை ஆதரவற்றோர் இல்லத்தை தொடங்கினார்.
- 1933 - 47 வரை இந்திய பெண்கள் சங்கத்தின் தலைவராக பணியாற்றினார்.
- மெட்ராஸ் தேவதாசி (பொட்டுக்கட்டு ஒழிப்பு) மசோதா, 1947-ல் சட்டமாக நிறைவேற பெரும் பங்கு வகித்தார்.
- 1956 - அடையாரில் புற்றுநோய் நிறுவனம்.
- பெண்களுக்கான திருமண வயதை உயர்த்துதல், கடத்தல் தடுப்புச் சட்டம் மற்றும் தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற இவரே காரணம்.

சிறப்பம்சங்கள்

1. முதல் இந்திய பெண் சட்டமன்ற உறுப்பினர்.
2. மாநில சமூக நல ஆலோசனைக் குழுவின் முதல் பெண் தலைவரானவர்.

புத்தகம்: "சட்டமியற்றுவதில் எனது அனுபவம்"

2.3.3 Dr. S. தர்மாம்பாள் (1890-1959)

- தஞ்சை அருகே கருந்தட்டங்குடியில் பிறந்தார்.
- மெட்ராஸில் சித்த மருத்துவமனையை தொடங்கினார்
- பெரியாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்
- தமிழ் இலக்கியம் மற்றும் இசை வளர்ச்சிக்காக பங்காற்றினார்
- 1937 - 39ல் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.
- 1940 - "இழவு வாரம்"
  - தமிழாசிரியர்களுக்கு வழங்கப்படும் குறைந்த சம்பளத்தை எதிர்த்து போராட்டம் நடத்தினார்.
  - இதனால் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் அனைத்து ஆசிரியர்களுக்கும் சமமான சம்பளம் என அறிவித்தார்.
- **சென்னை மாணவர் மன்றம்** - மாணவர்கள் தமிழில் அறிவு பெற்று மிகுந்த மதிப்பெண் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது.
- 1938-ல் மெட்ராஸ் பெண்கள் முன்னேற்ற மாநாடு - ஈ.வே.ராமசாமிக்கு பெரியார் பட்டம் வழங்கினார்.
- 1951-ல் வீரத்தமிழன்னை என்ற பட்டம் பெற்றார் (தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு அந்நிய பங்குகளுக்காக)
- கருந்தட்டான் குடியில் உள்ள தனது இல்லத்தை கரந்தை தமிழ்ச் சங்கத்திற்காக இலவசமாக வழங்கினார்.
- இவரைப் போற்றும் விதமாக 1975ல் தமிழக அரசானது, விதவை மறுமண நிதியுதவி திட்டத்திற்கு இவரது பெயரைச் சூட்டியது.

2.3.4 மூவலூர் ராமாமிர்தம் (1883-1962)

- திருவாரூரில் பிறந்து, மயிலாடுதுறை அருகே உள்ள மூவலூரில் வளர்ந்தார்.
- இவர் ஒரு தமிழ் சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், அரசியல் சிந்தனைக் கொண்டவர்.
- தேவதாசி ஒழிப்பு முறைக்காகப் போராடினார்.
- தொடக்கத்தில் காங்கிரஸ் ஆதரவாளரான இவர் பின்னாளில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்தார்.
- 1925- பெரியாரைத் தொடர்ந்து இவரும் காங்கிரஸை விட்டு வெளியேறினார்.
- 1930- முத்துலெட்சுமி ரெட்டியால் கொண்டு வரப்பட்ட தேவதாசி ஒழிப்பு முறை மசோதாவை ஆதரித்தார்.
- 1937-39 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்று சிறை சென்றார்.
- அறிஞர் அண்ணா தொடங்கிய திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தார்.
- 1947-ல் தாசிகளின் மோசவலை அல்லாது மதி பெற்ற மைனர் என்ற புத்தகத்தின் வழியாக தேவதாசிகளின் அவலநிலையை வெளிக்கொணர்ந்தார்.

2.4 சமூக சீர்திருத்தங்களில் கிறித்துவ சமயப்பரப்பு நிறுவனங்களின் பங்கு

- மதப்பரப்புக் குழுவினர் சமூகப் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பள்ளிகளை நிறுவினர். அரசுப் பணிகளில் அவர்களைப் பணியமர்த்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர்.
- பொதுச் சாலைகளைப் பயன்படுத்துதல், தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடைகள் அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைகளுக்காகவும் சமயப் பரப்புக் குழுவினர் போராடினர்.
- அனாதைக் குழந்தைகளையும் ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து தங்களது உறைவிடப் பள்ளிகளில் அவர்களுக்கு அவர் வழங்கினர்.
- பஞ்சக் காலங்களில் குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்கள் கிறித்துவ மதத்தைத் தழுவி. இதைப் போன்ற சூழலில் ஆந்திராவில் மாலா, மடிகா சமூகங்களைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கையில் மதம் மாறினர்.
- நீண்ட காலத்திற்கு உள்ளூர் மக்களுக்குக் குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட ஏழை மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பைக் கிறித்தவசமய நிறுவனங்களே தன்னார்வத்துடன் ஏற்றுக் கொண்டனர்.
- மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் கிறித்துவ சமய நிறுவனங்கள் அமைத்துக் கொடுக்கின்றன.

https://t.me/tnpscfree

2.5 தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்

- இந்தியாவில் தொழில்கள் வளர முதலாம் உலகப் போர் (1914-18) உத்வேகம் அளித்தது.
- போர் முடிவடைந்ததால், போர்காலத் தேவைகளின் குறைவுகள் அனைத்து தொழிற் சாலைகளிலும் ஆட்குறைப்பிற்கு வித்திட்டது.
- விலைவாசி ஏற்றம் தொழிலாளர் இயக்கங்கள் தோன்ற உந்து சக்தியாக அமைந்தது.
- அணி திரட்டப்பட்ட தொழிலாளர்களின் பலத்தை உணர்ந்த தேசியவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினர்.
- மெட்ராஸில் இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் B.P.வாடியாவின் முயற்சியால் 1918-ல் நிறுவப்பட்டது. அக்டோபர் 31, 1920-ல் அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு பம்பாயில் நடந்தது. இச்சங்கம் லாலா லஜபதிராயால் தொடங்கப்பட்டது.
- தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்க கோரிக்கை எழுந்தது.

2.5.1 M. சிங்காரவேலர் (1860-1946)

- மெட்ராஸ் மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.
- இளமை காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார்.
- இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக் காட்டினார்.
- மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார்.
- இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-ல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.
- இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக் கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார்.
- மக்கள் பிரச்சனைகளைப் பொது மக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-ல் மெட்ராஸ் மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா. பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுயமரியாதை, பொதுவுடைமைவாதம், இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்

- பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது ம.சிங்காரவேலர் அவரை ஆதரித்தார்.
- சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூகநீதிக் கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார்.
- பெரியார் நடத்திய 'குடியரசு' உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமான கட்டுரைகளையும் எழுதினார்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளந் தனையது உயர்வு.

- குறள் 595

விளக்கம்:
நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினதாகும், மக்களின் ஊக்கத்தை அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

மாதிரி வினாக்கள்

1. வைகுண்ட சுவாமிகள் எதிர்ப்பின் அடையாளமாக விளங்குவது
   1. அந்தக் காலத்தில் உயர் ஜாதியினருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த உரிமையான தலைப்பாகை அணிவதை தன்னைப் பின்பற்றுபவர்களையும் அணிய வலியுறுத்தினார்.
   2. தனித்தனியாக உணவருந்தும் பழக்கத்தை வலியுறுத்தினார்.
   3. "நிழல் தாங்கல்" என்று அழைக்கப்பட்ட அவரது உணவுக்கூடங்களில் சாதியக் கட்டுப்பாடுகள் உடைத்தெறியப்பட்டன.
   4. சமுதாய ரீதியாக தனிமைப்படுத்துதலை ஆதரித்தார்.

   கீழ்க்கண்ட குறிகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு
   (A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 1 மற்றும் 3 (D) 4 மட்டும்
2. "ஒரு பைசா தமிழன்" எனும் வார இதழை நடத்தியவர் யார்?
   (A) V.O. சிதம்பரனார் (B) தந்தை பெரியார்
   (C) அயோத்திதாச பண்டிதர் (D) பாரதியார்
3. கீழ்கண்ட கூற்றுகளில் இருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
   1. சாதி வரிசையில் ஓரங்கட்டப்பட்டவர்களின் சமூக நீதி, சமத்துவம் மற்றும் குடிமையியல் உரிமைகளுக்காக போராடியவர்.
   2. அவர் அம்பேத்கருடன் சேர்ந்து 1932-ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் ஒருவர்.
   3. அவர் தாத்தா என்று பிரபலமாக அறியப்படுகிறார்.

   (A) இரட்டைமலை சீனிவாசன் (B) வைகுண்ட சுவாமிகள்
   (C) A. சிங்காரவேலர் (D) அயோத்திதாஸ பண்டிதர்

https://t.me/tnpscfree

4. ராமலிங்க சுவாமிகள் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.
   1. இவர் பிரபலமாக வள்ளலார் என்று அழைக்கப்பட்டார்.
   2. இவரது பக்தி பாடல்களின் தொகுப்பு திருவருட்பா ஆகும்.
   3. இவர் 1876 ஆம் ஆண்டு வடலூரில் அத்வைதானந்தா சபையை நிறுவினார்.
   4. மனித குலத்திற்கான சேவையே மோட்சத்திற்கான பாதை என்பது அவரது முதன்மை போதனைகளுள் ஒன்றாகும்.
   (A) 1 மற்றும் 2 (B) 1, 2 மற்றும் 4
   (C) 1 மற்றும் 3 (D) மேற்கண்ட அனைத்தும்
5. பஞ்சமர் மகாஜன சபை யாரால் நிறுவப்பட்டது?
   (A) அயோத்திதாச பண்டிதர் (B) ரெட்டைமலை சீனிவாசன்
   (C) ராமலிங்க சுவாமிகள் (D) A மற்றும் B
6. கீழ்க்காணும் எந்த இயக்கம் அதன் உறுப்பினர்கள் தங்களது ஜாதியின் பெயரை தங்கள் பெயருடன் இணைத்து அழைக்கும் வழக்கத்தைக் கைவிட வலியுறுத்தியது?
   (A) தனித் தமிழ் இயக்கம் (B) சுயமரியாதை இயக்கம்
   (C) வெள்ளையனே வெளியேறு இயக்கம் (D) பக்தி இயக்கம்
7. பின்வருவனவற்றில் எது தவறாக பொருந்தியுள்ளது?
   (A) சத்திய தரும சாலை – நாராயண குரு
   (B) அருள் பெரும் ஜோதி – ராமலிங்க சுவாமிகள்
   (C) அத்வைதானந்தா சபா – அயோத்தி தாசர்
   (D) நிழல் தாங்கல் – வைகுண்ட சுவாமிகள்
8. M.C. ராஜா பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு:
   1. அவர் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவர்.
   2. அவர் ஆதி திராவிடர் மற்றும் பிராமணர் அல்லாதோர் போன்ற பதங்களை ஆதரித்தார்.
   3. அவர் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கத்தை நிறுவினார்.
   (A) 1 மட்டும் (B) 1 மற்றும் 2
   (C) 1 மற்றும் 3 (D) 1, 2 மற்றும் 3

விடைகள்

1	2	3	4	5	6	7	8
C	C	A	B	D	B	A	C

அத்தியாயம்

3

அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும்

"சமூக விடுதலை இல்லாமல் ஒரு போதும் அரசியல் விடுதலை நிகழாது". – பி.ஆர்.அம்பேத்கர்

அரசியல் கட்சிகள் என்பவை ஒருமித்த அரசியல் நோக்கங்களுடைய தனிநபர்களாலான தன்னார்வ அமைப்போ அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களோ ஆகும். அவை அரசியலமைப்பு வழிமுறைகளுக்கு உட்பட்டு அதிகாரத்தைப் பெறவும் மேலும் தேசிய நலன்களை மேம்படுத்துவதற்கும் முயற்சி செய்கின்றன.

அரசியல் கட்சிகளின் வகை முறைகள்

ஒரு கட்சி முறை	இரு கட்சி முறை	பலதரப்பட்ட அரசியல் கட்சிகள் கொண்ட ஆட்சிமுறை
இந்த அரசியல் முறையில் ஒரே கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் உரிமையை பெறுகிறது. (எ.டு) சீனா, கம்யுனிஸ்ட் கட்சி	இரு அரசியல் கட்சிகள் வேறுபட்ட அரசியல் நோக்கத்துடன் சமமான பெரும்பான்மையை பெற்று அரசாங்கம் அமைப்பதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளன. (எ.டு) அமெரிக்கா – 1. ஜனநாயகவாதிகள். 2. குடியரசு கட்சியினர்	இந்த அரசியல் முறையில் பல அரசியல் கட்சிகள் இருப்பதுடன் அனைத்து கட்சிகளும் ஆட்சியமைப்பதற்கு சமமான வாய்ப்பை பெற்றிருக்கின்றன. இவை, பெரும்பான்மை பெற்ற கட்சி அல்லது பெரும்பான்மை பெறாத ஒரே நோக்கமுடைய பல கட்சிகளின் கூட்டணியின் மூலமாகவும் மக்கள் ஆதரவை பெற்று அரசாங்கத்தை அமைக்கின்றன. (எ.டு) இந்தியா, பிரான்ஸ்.

அரசியல் கட்சிகளின் பங்கு மற்றும் பணிகள்

- மக்களாட்சியின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்கான பொறுப்பு.
- அமைதி, ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை பராமரித்தல்.

https://t.me/tnpscfree

- அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல்.
- அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் இடையே ஒருங்கிணைந்த இணைப்பாக செயல்படுகின்றன.
- அரசியல் முன் முயற்சிகள் மற்றும் பொது அனுபவங்களை நோக்கி மக்களை வழிநடத்துகிறது.
- இது அரசியல் சிந்தனைகளை ஊக்குவிக்க செயல்படுகிறது.
- இது அரசியல், பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டுக்கான கருத்து மற்றும் தளத்தை வழங்குகிறது.

கொள்கையின் அடிப்படையில் அரசியல் கட்சிகளின் வகைகள்

பொதுவுடைமைவாதம் சமதர்மவாதம் தாராளவாதம் பழமைவாதம் பாசிசம்

இடது சாரி மையவாதம் வலது சாரி

பண்புகள்	இடது சாரிகள்	மையக்கட்சிகள்	வலது சாரிகள்
தனிநபர் Vs சமூகம்	தனிமனிதனுக்கு குறைவான உரிமையும், சுதந்திரமும், சமூக ஒழுங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.	தனிமனித உரிமைக்கும் சமூக ஒழுங்கிற்கும் இடையேயான சம நிலை	மிகுதியான தனிமனித சுதந்திரமும், சமூக ஒழுங்கிற்கு குறைந்த முக்கியத்துவம் கொடுத்தல்.
அரசின் பங்கு	அதிகப்படியான பங்கு & அதிகாரம்	சற்று குறைந்த அதிகாரம் & பங்கு	குறைந்த அதிகாரம் மற்றும் பங்கு
சமூக நலன்	அரசாங்கம் குடிமக்களின் தேவைக்கே செயலாற்ற வேண்டும்	மக்களின் வாழ்வாதாரத்திற்கு செலவு செய்ய வேண்டும்	அரசாங்கம் மக்களுக்கு குறைவாகவும், தொழில் & தனியார் நிறுவனங்கள் அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்
இராணுவம்	குறைந்த முக்கியத்துவம்	மிதமான முக்கியத்துவம்	அதிக முக்கியத்துவம்
பொருளாதாரம்	முக்கிய தொழிற்சாலைகள் & வளங்களுக்கு அரசாங்கமே உரிமை யாளராகும்	கலப்பு பொருளாதாரம், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்படும்	முக்கிய தொழிற்சாலைகள் & வளங்கள் தனியாரிடமும் அரசின் தலையீடு குறைந்து காணப்படும்

கலாச்சார பாரம்பரியம் Vs மாற்றம்	மாற்றத்திற்கு ஆதரவு	அதிகமான மக்களின் ஆதரவு இருந்தால் மாற்றத்திற்கு வழி வகுக்கும்	மாற்றம் ஒரு எச்சரிக்கையாக கருதப்படும்.
சிறுபான்மை யினரின் உரிமை	சிறப்பு பாதுகாப்பு மற்றும் சலுகைகள்	தற்போதுள்ள நிலையை பின்பற்றுதல்	அனைவரும் சமம்
சட்ட ஒழுங்கு	அனைத்து குடிமக்களின் சமத்துவ உரிமைகளை பாதுகாக்க	அனைத்து குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்க	பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாத்தல்.
சித்தாந்தம்	பொதுவுடைமை / பொதுவுடைமை கோட்பாடு	ஜனநாயகத்திற்கான பொதுநலக் கோட்பாடு	முதலாளித்துவம் & பழமை வாதம்.
மதம்	மதத்தின் தலையீடு இன்றி அரசாங்கத்தை அமைத்தல்	நிலவுகின்ற உறவுகளை கடைப்பிடித்தல்	அரசாங்கம் மதத்தை ஆதரித்தல்
தேசியவாதம்	நாடு கடந்த தொழிலாளர் ஒற்றுமை, தொழிலாளர் நலன் காத்தல் மற்றும் தேசியவாதம் மேல் குறைவான நம்பிக்கை	தற்போதைய நிலைகளை தொடர்தல்	தேசியவாதம் மற்றும் தேசிய உணர்வுகள் மீது மிகுந்த பற்று
வணிக மற்றும் பொருளாதார உலகமய மாக்கல்	வணிக கட்டுப்பாடு மற்றும் பொருளாதார உலகமயமாக்கலுக்கு கட்டுப்பாடு	சில கட்டுப்பாடுகளுடன் வர்த்தக உரிமை & பொருளாதார உலகமயமாக்கல்	இலவச வர்த்தகம் & உலகமயமாக்கலுக்கு ஆதரவு
பண்பாட்டு உலகமய மாக்கல்	இதனை பொருளாதார உலகமயமாக்கலாக கருதுகிறது. மேலும் அலட்சியமாக கருதுகிறது	தற்போதைய நிலையே தொடர்தல்	இதனை பண்பாட்டுக்கு இடையூறாக கருதுகிறது. மேலும் எதிர்க்கிறது.

https://t.me/tnpscfree

3.1 இந்தியாவில் கட்சிமுறை

- ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தினாலும் தேசியவாதத்தின் எழுச்சியினாலும் இந்தியாவில் கட்சிமுறைகள் வெளிப்பட்டன.

3.1.1 இந்தியாவில் ஆரம்பகால அரசியல் அமைப்புகள்

1. பங்கபஷோ பிரகசிகா சபை, 1836

நிறுவனர்: ராஜா ராம் மோகன் ராயுடன் இருந்த ஆதரவாளர்கள்.

கோரிக்கை: உயரிய அரசு பதவிகளுக்கு இந்தியர்களை நியமித்தல், பத்திரிக்கைச் சுதந்திரம், ஜமீன்தார்களின் அடக்குமுறையை தடுத்தல்.

2. ஜமீன்தாரிகள் அமைப்பு (வங்காள நில உடைமையாளர்கள் சங்கம்), 1836

நிறுவனர்: பிரசன்னா குமார் தாகூர், துவாரகநாத் தாகூர் மற்றும் இராதா காந்த் தேப்,

நோக்கம்: நில உரிமையாளர்களின் நலன்களை பாதுகாத்தல்.

போராட்டத்தின் முறை: அரசியலமைப்பு முறைகள்.

3. பிரிட்டிஷ் இந்திய சங்கம், 1843

நிறுவனர் : இங்கிலாந்தில் வில்லியம் ஆடம் என்பவரால் நிறுவப்பட்டது.

நோக்கம்: ஆங்கிலேயர்கள் இந்தியர்களை நடத்தும் துறை மற்றும் நிலைமையை இங்கிலாந்து மக்களுக்கு தெரியப்படுத்துவன் மூலம் இந்தியர்களின் நிலையை மேம்படையச் செய்தல். இந்த நோக்கத்தை அடைய அவர்கள் அரசியலமைப்பு மற்றும் சட்ட வழிகளை பின்பற்றினர்.

4. பிரிட்டிஷ் இந்திய கழகம், 1851

வங்காள நில உடைமையாளர்கள் சங்கம் மற்றும் பிரிட்டிஷ் இந்திய சங்கம் இணைக்கப்பட்டு பிரிட்டிஷ் இந்திய கழகம் உருவாக்கப்பட்டது.

கோரிக்கைகள்

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தை அமைத்தல்.
- நீதித்துறையை நிர்வாகத்துறையிலிருந்து பிரித்தல்.
- உப்பு, ஸ்டாம்ப் ஆகியவற்றின் மீதான வரியை விலக்குதல்.
- உயர் பதவிகளில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளின் சம்பளத்தை குறைத்தல்.
- **விளைவு:** சாசனச் சட்டம் 1853- சட்ட நடவடிக்கைகளுக்காக கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் மேலும் 6 பேர் சேர்த்து கொள்ளப்பட்டனர்.

5. பம்பாய் கழகம், 1852:

நிறுவனர்: ஜெகன்நாத் சங்கர்ஷேத், சர் ஜாம்ஷெட்ஜி ஜெஜிபாய், நௌரோஜி ஃபர்சுங்கி, டாக்டர்.பாவ் தாஜி லாட், தாதாபாய் நௌரோஜி மற்றும் விநாயகர் சங்கர்ஷேத்.

நோக்கம்: சட்டரீதியான போராட்ட வழிமுறைகள் மூலம் பொது குறைகளை நிவர்த்தி செய்தல்.

6. கிழக்கிந்திய கூட்டமைப்பு, 1866

நிறுவனர்: தாதாபாய் நௌரோஜி – லண்டன்

நோக்கம்: இந்தியர்களின் நலனை மேம்படுத்த, இங்கிலாந்தின் பொது மக்களிடையே இந்தியர் களின் கேள்விகளை விவாதித்தல் மற்றும் அவர்களின் ஆதரவை திரட்டுதல்.

7. பூனா சர்வஜானிக் சபை, 1870:

நிறுவனர்: மகாதேவ் கோவிந்த் ரணடே மற்றும் அவரது ஆதரவாளர்களால் புனேவில் ஆரம்பிக்கப்பட்டது.

நோக்கம்: அரசாங்கத்தை பொது மக்களுடன் இணைத்தல். விவசாயிகளின் சட்ட உரிமைகளுக்காக பணியாற்றுதல்.

8. இந்தியன் லீக், 1875

நிறுவனர்: சிசிர் குமார் கோஷ் – கல்கத்தா

நோக்கம்: சாதாரண மக்களிடையேயும் தேசியவாத உணர்வை ஏற்படுத்துதல்.

9. கல்கத்தாவில் இந்தியர்களுக்கான கூட்டமைப்பு (இந்திய தேசிய கூட்டமைப்பு), 1876

நிறுவனர் : ஆனந்த மோகன் போஸ் மற்றும் சுரேந்திரநாத் பானர்ஜி.

நோக்கம்: மக்களின் அரசியல், அறிவுசார் மற்றும் பொருள் முன்னேற்றத்திற்காக சட்ட முறையிலான வழிமுறையில் வழிமுறைகளை ஊக்குவித்தல். அரசியல் தொடர்பாக மக்களிடையே கருத்துக்களை உருவாக்குதல். பொது அரசியல் நிகழ்ச்சிகளினால் இந்திய மக்களை ஒன்று திரட்டுதல்.

நிகழ்வுகள்:

- இந்த அமைப்பு, இந்திய சிவில் சர்வீஸ் தேர்விற்கான தேர்வர்களின் வயது வரம்பை குறைப்பதை எதிர்த்து 1877ல் போராட்டம் நடத்தியது.
- அடக்குமுறை ஆயுதச்சட்டம் (1878) மற்றும் வட்டார மொழிப் பத்திரிக்கைச் சட்டம் (1878) ஆகியவற்றிற்கு எதிராக பிரச்சாரங்கள் செய்தது.
- இந்தியா மற்றும் இங்கிலாந்தில் ஒரே நேரத்தில் குடிமைப் பணி தேர்வை நடத்தவும், உயர் நிர்வாக பதவிகளை இந்தியமயமாக்கவும் கோரிக்கை விடுத்தது.

10. பாம்பே பிரசிடென்சி அமைப்பு, 1885

நிறுவனர்: பெரோஷா மேத்தா, பக்ருதீன் தியாப்ஜி மற்றும் K.T.தெலாங்.

நோக்கம்: இந்த அமைப்பு இல்பர்ட் மசோதா மற்றும் லிட்டனின் பிற்போக்கு கொள்கைகளுக்கு எதிராக உருவாக்கப்பட்டது.

11. இந்திய தேசிய காங்கிரஸ், 1885

நிறுவனர்: A.O. ஹீயும்.

நோக்கம்: சட்டமன்ற மற்றும் அரசியல் பிரிவுகளில் இந்தியர்களின் அரசியல் பங்கேற்புக்கான சுதேச அடிப்படை முறை.

https://t.me/tnpscfree

12. சுயராஜ்ய கட்சி (ஆரம்பம் – 1922–23)

நிறுவனர் : சித்தரஞ்சன் தாஸ் மற்றும் மோதிலால் நேரு.

இலக்கு: 1923ல் புதிய சட்டமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடுதல். அதிகாரப்பூர்வ கொள்கையை சீர்குலைத்து, பிரிட்டிஷ் அரசாங்கத்தை தடம் புரளச் செய்தல்.

13. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 1925

பழமையான கம்யூனிச அரசியல் கட்சி மற்றும் இந்தியாவிலுள்ள எட்டு தேசிய அரசியல் கட்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

நிறுவனர்: M.N. ராய், அபானி முகர்ஜி, ஹஸ்ரத் மோகனி.

நோக்கம்: ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசியவாதத்தை சர்வதேசவாதத்துடன் இணைத்தல். அமைதி முறையிலான சட்ட மறுப்பு இயக்கத்திற்கு இணையான ஒரு இயக்கத்தை ஏற்படுத்துதல்.

14. காங்கிரஸ் சோஷியலிச கட்சி, 1934

இந்திய தேசிய காங்கிரஸிற்குள்ளேயே காங்கிரஸ் சோஷிலிச கட்சி உருவாக்கப்பட்டது.

நிறுவனர்: J.P. நாராயணன், ஆச்சார்ய நரேந்திர தேவ் மற்றும் மினோ மசானி.

நோக்கம்: CSP பரவலாக்கப்பட்ட சோஷியலிசத்தை ஆதரித்தது, இதில் கூட்டுறவு, தொழிற் சங்கங்கள், சுதந்திரமான விவசாயிகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் பொருளாதாரத்தில் கணிசமான பங்கை கொண்டுள்ளனர்.

15. சுதந்திர தொழிலாளர் கட்சி, 1936

நிறுவனர்: B.R. அம்பேத்கர்.

நோக்கம்: இது இந்தியாவில் பிராமணிய மற்றும் முதலாளித்துவ அமைப்புகளை எதிர்த்தது. இந்திய தொழிலாளர் வர்க்கத்தை ஆதரித்தது மற்றும் சாதி முறையை அகற்ற முயன்றது.

16. பார்வர்டு பிளாக், 1939

நிறுவனர் : சுபாஷ் சந்திர போஸ்.

நோக்கம்: இது ஒருங்கிணைப்பு குழுவை கட்டமைப்பதில் இதன் பங்கு இருந்தது.

17. புரட்சிகர சோஷியலிச கட்சி, 1940

இது வங்காள தாராளவாத இயக்கம், அனுசீலன் சமிதி மற்றும் ஹிந்துஸ்தான் சோஷியலிச குடியரசு (HSRA) கட்சியிலிருந்து வேரூன்ற தொடங்கியது.

நோக்கம்: பிரிட்டிஷ் ஏகாதிபத்தியதை வன்முறையினால் தூக்கியெறிந்து இந்தியாவில் சோஷியலிசத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

18. அகில இந்திய பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பு, 1942

நிறுவனர் : 1942ல் அம்பேத்கரால் ஏற்படுத்தப்பட்டது.

நோக்கம்: தலித் சமூகத்தின் உரிமைகளுக்காக பிரச்சாரம் செய்தல். அகில இந்திய பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பானது பின்னர் இந்தியக் குடியரசு கட்சியாக உருவெடுத்தது.

3.2 மண்டல மற்றும் மாநில கட்சிகள்

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் உள்ள கட்சிகள். அவை பெரும்பாலும் அந்த மாநிலத்திற்குள் நடத்தும் தேர்தலில் மட்டுமே பங்கேற்கின்றன.

- தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகம் (DMK) மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ADMK) ஆகியவை முக்கிய பிராந்திய கட்சிகளாக உள்ளன.
- பஞ்சாப்பில் சிரோமனி அகாலி-தளம், உத்திரப் பிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சி, ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சி, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம்.
- மேற்கு வங்காளத்தில் அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ், தெலுங்கானாவில் தெலுங்கா ராஷ்டிரிய சமிதி, அசாமில் அசாம் கண பரிசத், மஹாராஷ்டிராவில் சிவசேனா, ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக்கட்சி மற்றும் மக்கள் ஜனநாயக கட்சி ஆகியவை முக்கிய மண்டல கட்சிகளாக விளங்குகின்றன.

3.3 தேசிய & மாநில / பிராந்திய கட்சி

இது நாட்டின் வளர்ச்சிக்காகவும் மக்களின் நலனுக்காகவும் செயல்படுகிறது.

தேசிய கட்சி	மாநில கட்சி
இந்தியா முழுவதும் நடைபெறும் பல்வேறு தேர்தல்களில் போட்டியிடும்.	ஒரு மாநிலத்திற்குள் நடைபெறும் பல்வேறு தேர்தல்களில் போட்டியிடும்.
இது தனக்கென பிரத்யேகமான சின்னத்தை நாடு முழுவதும் கொண்டிருக்கும்.	இதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு சின்னம் ஒதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இத்தகைய சின்னம் வேறு மாநிலத்திலுள்ள கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படலாம்.
இது மாநில, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களை தீர்த்து வைக்கிறது.	இது பிராந்திய மற்றும் மாநில நலன்களை வலியுறுத்துகிறது.

3.3.1 தேசிய மற்றும் மாநில கட்சிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான காரணங்கள்

தேசிய கட்சி

1. a. மக்களவை அல்லது மாநிலங்களவைக்கான தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6% வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்.
   b. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 4 மக்களவை தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

2. a. மக்களவை தேர்தலில் 2% தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
   b. அக்கட்சியின் வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 3 தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

https://t.me/tnpscfree

அல்லது

3. நான்கு மாநிலங்களில் மாநிலக்கட்சி என்ற அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும்.

மாநில கட்சி

1. a. மாநில சட்டப்பேரவை தேர்தலில் செல்லத்தக்க வாக்குகளில் குறைந்தபட்சம் 6% வாக்குகளை பெற வேண்டும்.

   b. மாநில சட்டமன்றத்துக்கான தேர்தலில் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

2. a. மக்களவை தேர்தலில் ஒரு மாநிலத்தில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் 6% வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்.

   b. அந்த மாநிலத்தில் ஒரு மக்களவை தொகுதியிலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

3. மாநில சட்டப்பேரவை தேர்தலில் மொத்த தொகுதிகளில் 3% இடங்களிலோ அல்லது 3 தொகுதிகளிலோ வெற்றி பெற்றிருக்க வேண்டும். இவ்விரண்டில் அதிகபட்சமான தொகுதிகளை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

அல்லது

4. மக்களவை தேர்தலில் ஒவ்வொரு 25 தொகுதிகளுக்கு 1 தொகுதி வீதம் வெற்றி பெற்றிருக்க வேண்டும். மேலும் விகிதாச்சார அடிப்படையில் இருக்கும் தொகுதிகளுக்கு ஒரு தொகுதியில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

5. மாநில சட்டப்பேரவை தேர்தலிலோ அல்லது மாநிலத்துக்கான மக்களவை தேர்தலிலோ செல்லத்தக்க மொத்த வாக்குகளில் 8% வாக்குகளை பெற்றிருக்க வேண்டும். (2011-ல் சேர்த்த நிபந்தனை)

இந்தியாவில் உள்ள 8 தேசிய கட்சிகள்

எண்.	கட்சியின் பெயர்	நிறுவனர்	தற்போதைய தலைவர்	கட்சியின் சின்னம்
1.	பகுஜன் சமாஜ் கட்சி – 1984	கன்சி ராம்	மாயாவதி	யானை
2.	பாரதிய ஜனதா கட்சி – 1980	அடல்.பிகாரி. வாஜ்பாய்	J.P. நாட்டா	தாமரை

3.	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) – 1925	M.N. ராய், அபானி முகர்ஜி, ஹஸ்ரத் மோகானி, ரபிஃக் அஹமத் & சுல்தான் அஹமத்கான் தரீன்	D. ராஜா	கதிர் அரிவாள்
4.	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) (CPM) – 1964	P.சுந்தரய்யா, EMS. நம்பூதிரிபட், ஹர்கிஷான் சிங் & AK. கோபாலன்	சீதாராம் எச்சூரி	அரிவாள் சுத்தி நட்சத்திரம்
5.	தேசியவாத காங்கிரஸ் கட்சி – 1999	சரத்பவார்	சரத்பவார்	கடிகாரம்
6.	இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி – 1885	ஆலன் ஆக்டோவியன் ஹீயும்	சோனியா காந்தி	கைச்சின்னம்
7.	அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் – 1998	மம்தா பானர்ஜி	மம்தா பானர்ஜி	பூக்களும் புற்களும்
8.	தேசிய மக்கள் கழகம்– 2013	P.A. சங்மா	காண்ராட் சங்மா	புத்தகம்

3.4 தமிழ்நாட்டில் மாநிலக்கட்சி முறை

- தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு முறையானது சுதந்திர இந்தியாவின் அரசியலில் மாநில கட்சிகளின் ஒப்புயர்வற்ற நிலைக்கு முன்மாதிரியாக உள்ளது.
- தமிழ்நாட்டில், பெரும்பாலான இந்திய மாநிலங்களைப் போலவே தொடக்கத்தில் சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சி ஆதிக்கம் செலுத்தியது.
- தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் பெரியார் தலைமையில் மறுபடியும் மலர்ந்தது.
- திராவிட இயக்கத்தின் வாயிலாக திராவிட உரிமையும் அவர்களை மதிக்கத்தக்க சூழ்நிலையில் நிலைநாட்டப்பட்டது. அதில், முக்கியமாக வடக்கின் ஆதிக்கத்திற்கு எதிராகவும், இந்தி எதிர்ப்பு மற்றும் பிராமண ஆதிக்கத்திற்கு எதிரான சமூகக் கொள்கைகளும் அடங்கும்.
- காலனித்துவ சகாப்தம் முதல் பகுத்தறிவு மற்றும் சமூகநீதி சார்ந்த இயக்கங்களும் மேலும் 20-ஆம் நூற்றாண்டில் திராவிட உணர்வை பரப்பியதும், தமிழகத்தின் அரசியல் நிலையின் அடிப்படையை மாற்றியதில் பெரும் பங்குண்டு.

https://t.me/tnpscfree

தமிழ்நாட்டின் மாநில கட்சிகள்

1.	திராவிட முன்னேற்ற கழகம் - 1949	C.N. அண்ணாதுரை	மு.க. ஸ்டாலின்	உதயசூரியன்
2.	அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் - 1972	M.G. ராமச்சந்திரன்	எடப்பாடி K. பழனிச்சாமி & O. பன்னீர் செல்வம்	இரட்டை இலை

தமிழ்நாட்டில் மாநில கட்சி அங்கீகாரத்தை இழந்த கட்சிகள்

1. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் (மதிமுக) - 2010.
2. பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க) - 2011.
3. தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தேமுதிக) - 2016.

3.4.1 தமிழ்நாட்டின் ஆரம்பகால அரசியல் சங்கங்கள்

1) சென்னை வாழ் மக்கள் சங்கம், 1852

தென்னிந்தியாவில் நிறுவப்பட்ட முதல் அமைப்பு

- **நிறுவனர்கள் :** கஜலு லெட்சுமி நரசு செட்டி மற்றும் ஸ்ரீனிவாசனார்.
- **குறிக்கோள்கள் :**
  - பெரும்பான்மையில் இருக்கக்கூடிய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல்.
  - வரிவிதிப்பை குறைக்க போராடுதல்.
- வருவாய்த்துறை அதிகாரிகளால் விவசாயிகள் சித்திரவதைக்கு உள்ளாவதை எதிர்த்துப் போராட.
- இச்சங்கத்தின் முயற்சியால் சித்தரவதை ஆணையம் அமைக்கப்பட்டு, சித்தரவதை ஒழிப்பு சட்டம் ஏற்படுத்தப்பட்டது.
- 1862ல் இந்த சங்கம் செயலிழந்தது.

2) சென்னை மகாஜன சபை, 1884

தேசியவாத கொள்கைகளுடன் தென்னிந்தியாவில் நிறுவப்பட்ட முதல் சபை,

நிறுவனர்கள் : M. வீரராகவாச்சாரி, P. ஆனந்தசார்லு, B. சுப்பிரமணிய ஐயர், P. ரங்கையா

கோரிக்கைகள்

- வரிகள், குடிமை மற்றும் ராணுவச் செலவுகளைக் குறைத்தல்.
- லண்டனில் உள்ள இந்திய கவுன்சிலை கலைத்தல்.
- இந்திய குடிமைப் பணிகளை இந்தியாவிலும், இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தல்.
- இக்கோரிக்கைகளை இந்திய தேசிய காங்கிரஸ் 1885-ல் தத்தெடுத்துக் கொண்டது.

3) மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் (1909):

பிராமண மேலாதிக்கத்திடம் இருந்து பிராமணரல்லாதோரை காப்பதற்காக தொடங்கப்பட்டது.

4) மதராஸ் யுனைடெட் லீக் (1912):

நிறுவனர்: மருத்துவர் C.நடேச முதலியாரால் தொடங்கப்பட்டது.

இது மதராஸ் திராவிட கழகம் எனப் பெயர் மாற்ற செய்யப்பட்டது.

5) தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (1916 நவம்பர் 20)

நிறுவனர்: C.நடேசனார், டி.எம். நாயனார், சர்.பிட்டி தியாகராயர் மற்றும் அலமேலு மங்கை தாயாரம்மாள் ஆகியோரால் தொடங்கப்பட்டு நீதிக்கட்சி என்று புகழ் பெற்றது.

6) நீதிக்கட்சி

- 1917 - தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் "நீதிக்கட்சி" என்று பெயர் மாற்றப்பட்டது.
- பிராமணரல்லாதோரின் அரசியல் உரிமைகளை பாதுகாக்க போராடியது.
- மாண்டெகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் கீழ், 1920-ல் நடத்தப்பட்ட மெட்ராஸ் மாகாணத்தில் நடந்த முதல் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று மெட்ராஸில் முதல் அமைச்சரவையை நிறுவியது.
- எ.சுப்பராயலு மெட்ராஸ் மாகாணத்தின் முதலமைச்சரானார்.
- 1937-ம் ஆண்டுவரை நீதிக்கட்சி ஆட்சியில் நீடித்தது.

நீதிக்கட்சியின் சாதனைகள்

- 1921 & 1922-ல் வெளிவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிராமணரல்லாதோருக்கு இடஒதுக்கீடு வழங்கியது.
- 1924-ல் பணியாளர்கள் தேர்வுவாரியம் உருவாக்கப்பட்டு அது 1929-ல் மதராஸ் குடிமைப்பணி தேர்வாணையம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1925-ல் ஆந்திர பல்கலைக்கழகம் மற்றும் 1929-ல் அண்ணாமலை பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
- 1926-ல் இந்துசமய அறநிலையத்துறை சட்டம் போடப்பட்டது மற்றும் கோவில் கணக்குகளை நிர்வகிக்க கோவில் குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- 1921-ல் இந்தியாவில் முதன்முறையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது
- ஆயுர்வேதா, சித்தா, யுனானி, மருத்துவ கல்விக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.
- 1922-ல் சென்னை அரசாங்க தொழிற்சாலைக்கு உதவிச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- பெண்களை இழிவுபடுத்தும் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- பெண்கள் கடத்தலை தடுக்க சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- M.C.ராஜா என்பவரின் முயற்சியால் 'பஞ்சமர்' என்ற தொடர் "ஆதிதிராவிடர்" என மாற்றப்பட்டது.

https://t.me/tnpscfree

- 1923-ல் சென்னை ஆயிரம் விளக்கில் தியாகராய செட்டியாரால் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.
- உயர்கல்வியில் அனைத்து சமூகம் பயன்பெற கல்லூரி குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன.
- ஏழை மக்கள் வீடு கட்டிக் கொள்ள இலவச நிலம் வழங்கப்பட்டது.
- 1944 : சேலம் மாநாட்டில் பெரியார் நீதிக்கட்சியை சுயமரியாதை இயக்கத்தோடு இணைத்து 'ஆதிதிராவிடர் கழகம்' என வழங்கப்பட்டது.

7) இந்திய தேசிய காங்கிரஸ், 1937

- 1937-ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது.
- 1937-ல் ராஜாஜி சென்னை மாகாணத்தில் முதல்வரானார்.
- 1937-ல் மதுத்தடைச் சட்டம் கொண்டு வந்தார்.
- இதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பை சரிசெய்ய, முதல்முறையாக விற்பனை வரியை சேலத்தில் அக்டோபர், 1937-ல் அறிமுகம் செய்தார்.
- இவருடைய மும்மொழிக்கொள்கை இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு வித்திட்டது.
- 1938-ல் M.C.ராஜாவுடன் இணைந்து ஆலய நுழைவுப் போராட்டத்தை மதராஸ் மாகாணத்தில் நடத்தினார்.
- 1939-1940: ஹரிஜன் மக்களுக்கு அனுமதியளிக்காத பள்ளிகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிக்க மறுத்துவிட்டது.

3.4.2 விடுதலைக்குப் பின் இந்திய தேசிய காங்கிரஸ்

1) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (1895-1970)

- விடுதலைக்குப் பின் மெட்ராஸில் முதல் முதலமைச்சர் இவரே.
- இவர் மார்ச் 23, 1947 முதல் - ஏப்ரல் 6, 1949 வரை ஆட்சியில் இருந்தார்..

சாதனைகள்

- **மெட்ராஸ் ஆலய நுழைவு அனுமதிச் சட்டம், 1947:** தலித்துக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மற்ற இந்து சமூகத்தினர் இந்து கோவிலுக்குள் செல்ல முழு அனுமதி.
- **மெட்ராஸ் தேவதாசிகள் (பொட்டு கட்டு விழா ஒழிப்பு) சட்டம், 1947:** மெட்ராஸ் மாகாணத்தி லுள்ள இந்து கோவில்களில் பெண்களை அர்பணிக்கும் முறையை ஒழித்தல்.
- **1948**
  - ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது.
  - மெட்ராஸ் பொது நூலகச்சட்டம், 1948-ல் கொண்டுவரப்பட்டது. பின்னர், தமிழ்நாடு பொது நூலகச்சட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

2) P.S. குமாரசாமி ராஜா (1898-1957)

- இவர் மெட்ராஸ் மாகாணத்தின் 2வது முதலமைச்சராக ஏப்ரல் 6, 1949 முதல் ஏப்ரல் 10, 1952 வரை இருந்தார்.

- **1949:**
  - நீதித்துறையை நிர்வாகத் துறையிலிருந்து பிரிக்க வேண்டுமென முன்மொழிந்தார்.
  - ஒடுக்கப்பட்டோருக்கான தனியே 'ஹரிஜன்' நலத்துறை அமைக்கப்பட்டது.
  - **தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டுக் கழகம் (TIIC):** புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கவும் செயல்பாட்டிலுள்ள அலகுகளை விரிவுபடுத்தவும் நிதிஉதவி வழங்கப்பட்டது.

சாதனைகள்

- ஆலய நுழைவுச் சட்டம் மற்றும் காதியை ஊக்குவித்தல்.
- "காந்தி கலை மன்றம்" என்று அழைக்கப்படும் கலாச்சார நிறுவனத்தை தொடங்க தனது சொந்த வீட்டை கொடையாக வழங்கினார்.
- இவரின் முயற்சியால் இராஜபாளையம் மிகப்பெரிய தொழில் நகராமாக உருவெடுத்தது.

3) இராஜாஜி (1878-1972)

- **1944**
  - அகில இந்திய முஸ்லீம் லீக் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் இடையே ஏற்பட்ட அரசியல் சிக்கலை தவிர்க்க ராஜாஜி ஒரு திட்டம் வகுத்தார்.
  - இதுவே "இராஜாஜி திட்டம்" எனப்பட்டது.

முதலமைச்சராக 1952 முதல் 1954 வரை

1. 1953ல் இவரால் கொண்டுவரப்பட்ட 'குலக்கல்வி திட்டம்' / மாற்றியமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வித் திட்டம் காமராஜரால் கைவிடப்பட்டது.
2. 1959-ல் காங்கிரஸிற்கு மாறாக சுதந்திர கட்சியை உருவாக்கினார்.

4) காமராஜர் (1905-1975) பெருந்தலைவர்

- இவர் 1954 முதல் 1963 வரை முதலமைச்சராக இருந்தார். (3முறை)
- 1924-ல் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டார்.
- 1930-ல் இராஜாஜியுடன் சேர்ந்து வேதாரண்ய யாத்திரையில் கலந்துக் கொண்டார்.
- 1942-ல் வெள்ளையனே வெளியேரு இயக்கத்தில் பங்கு பெற்றதால் அமராவதி சிறையில் 3 வருடம் அடைக்கப்பட்டார்.

சாதனைகள்

i. கல்வி வளர்ச்சி

- எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்காக 11-ம் வகுப்பு வரை இலவச மற்றும் கட்டாய கல்வியை அறிமுகப்படுத்தினார்.

https://t.me/tnpscfree

- இராஜாஜி தொடங்கிய குலக்கல்வி திட்டத்தை நீக்கி, புதிய பள்ளிகள் பலவற்றை தொடங்கினார். ஒவ்வொரு 3 கி.மீ தொலைவிலும் ஒரு புதிய பள்ளி தொடங்கப்பட்டதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் பயன்பெற்றனர்.
- தொடக்கப்பள்ளி இல்லாத எந்தவொரு கிராமமும் உயர்நிலைப் பள்ளி இல்லாத எந்தவொரு பஞ்சாயத்தும் இல்லாதபடி செய்தார்.
- கல்வியின் தரத்தை உயர்த்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. பள்ளி வேலை நாட்கள் 180லிருந்து 200ஆக உயர்த்தப்பட்டது.
- சீர்திருத்தத்திற்கு பிறகு, ஆங்கிலேயர் ஆட்சியில் 7 சதவீதமாக இருந்த கல்வி வீதம் 37 சதவீதமாக உயர்ந்தது.
- பல்வேறு திறன்களை மேம்படுத்த பாடத்திட்டம் மாற்றப்பட்டது.
- 1956 – தமிழ்நாட்டின் அலுவலக மொழியாக தமிழை அறிவித்தார்.
- 1959 – கூலி கட்டணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ii. மதிய உணவுத்திட்டம் (1962–1963)

- லட்சக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு ஒரு நாளில் ஒரு வேலைக்காவது உணவு வழங்கப்பட்டது.
- இது எம்.ஜி.ஆரால் 1980களில் தொடங்கப்பட்ட இலவச மதிய உணவுத் திட்டத்திற்கு முன்னோடியாக விளங்கியது.
- மாணவர்களின் மனதில், சாதி மற்றும் வகுப்பு பிரிவினை ஏற்படாமல் இருக்க இலவச பள்ளி சீருடை வழங்கப்பட்டது.

iii. அரசியலில் பங்கு

- **தலைவர்களை உருவாக்குபவர்:** 1964-ல் லால் பகதூர் சாஸ்திரியையும், 1966-ல் நேருவின் மகள் இந்திரா காந்தியையும் பிரதமராக்கியதில் இவரே பெரும் பங்கு வகித்தார்.
- **காமராஜர் திட்டம்:** கட்சியின் மூத்த தலைவர்கள் அனைவரையும் பதவியில் இருந்து விலகி கட்சியை வலுப்படுத்த பொது சேவை செய்யுமாறு வலியுறுத்தினார். அதற்கு முன்னோடியாக அவரே தன் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகி இந்த திட்டத்தை செயல்படுத்த தூண்டுகோலாக இருந்தார்.

iv. அணைகள்

- பவானி, மணிமுத்தாறு, ஆரணி, வைகை, அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புல்லம்பாடி, பரம்பிக்குளம் மற்றும் நெய்யாறு ஆகிய இடங்களில் அணைகள் மற்றும் நீர்பாசனக் கால்வாய்களை கட்டினார். தமிழ்நாட்டில் வேளாண்மையை மேம்படுத்தவும் புதிய தொழிற்சாலைகளை நிறுவவும் உதவினார்.

1955	▪ 1955 ஆம் ஆண்டு மெட்ராஸ் சட்டம் XIX ஆல் மாற்றப்பட்ட சில வகை குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக மெட்ராஸ் நகர குத்தகைதாரர்கள் சட்டம் இயற்றப்பட்டது. ▪ தமிழ் நாட்டின் குறிப்பிட்ட பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் சாகுபடிக் குத்தகைதாரர்களை பாதுகாப்பதற்காக மெட்ராஸ் தாவரங்கள் சாகுபடி பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
1958	▪ தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் இயற்றப்பட்டது.
1959	▪ காமராஜர் மற்றும் பிஸ்னுராம் மேதியும் ஐஐடி மெட்ராஸ் கல்லூரியை நிறுவ முயற்சி எடுத்துள்ளனர்.
1961	▪ தமிழ்நாடு நில சீர்திருத்தச் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டம், ஐந்து நபர்களை கொண்ட குடும்பத்திற்கான நில உச்ச வரம்பு 30 ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது. ▪ தமிழ்நாடு தொழில்துறை கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி) உருவாக்கப்பட்டது. • முதலில் மாநிலத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நிதிகளை வழங்கி வந்தது. தற்போது தனி நபர்கள், எம்எஸ்எம்இ துறையின் கீழ் வரும் தொழில் முனைவோர், அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு தேவையான கடன்களை வழங்கும் அளவிற்கு தனது செயல்பாட்டினை நீட்டித்துள்ளது.
1962	▪ நில உச்ச வரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.

v. தொழிற்சாலைகள்

- இவருடைய காலத்தில் கோடிக்கணக்கான முதலீட்டின் மூலம் பெருமளவிலான தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.
  - நெய்வேலி லிக்னைட் தொழிற்சாலை (1956)
  - BHEL, திருச்சி (1956)
  - கனரக வாகனத் தொழிற்சாலை, ஆவடி (1961)
  - காகிதம், சர்க்கரை, இரசாயனம், சிமெண்ட் தொழிற்சாலைகள் இவரது காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.
  - **பாராட்டு :** 1976-ல் நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது அவர் இறந்த பிறகு அவருக்கு வழங்கப்பட்டது.

5) பக்தவாச்சலம் (1897–1987)

- தமிழ்நாட்டில் காங்கிரஸின் கடைசி முதலமைச்சர் (1963–1967)
- 1963: கன்னியாகுமரியில் விவேகானந்தர் மண்டபம் கட்டப்பட்டது.
  - இவரது ஆட்சியில் (1963–1964)-ல் ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாடு, 1965-ல் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பு போராட்டம் இவருக்கும், இவருடைய அமைச்சரவைக்கும் பின்னடைவை ஏற்படுத்தியது.

https://t.me/tnpscfree

- 1965: தமிழ்நாடு சிறுதொழில் கழகம் நிறுவப்பட்டது. இது சிறுதொழில் துறைக்காக ஏற்படுத்தப்பட்ட முதல் நிறுவனம், இது வணிகம் மற்றும் தொழில்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

குறிப்பு: காமராஜர் தனது பதவியை (காமராஜர் திட்டத்திற்காக) 1963-ல் ராஜினாமா செய்து, மேலும் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராானதால் M. பக்தவாச்சலம் அரசை வழி நடத்தினார்.

3.4.3 திராவிட முன்னேற்றக் கழகம்

1) அண்ணாதுரை (1909-1969)

- செப்டம்பர் 17, 1949-ல் திராவிட முன்னேற்ற கழகம் அண்ணா தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்னர் 1967-ல் கழகம் ஆட்சியமைத்தது.
- 1967 - சித்திரை முதல் நாள் தமிழ் புத்தாண்டு தினமாக அறிவிக்கப்பட்டது.
- மெட்ராஸ் என்ற பெயரானது தமிழகம் என பெயர் மாற்றப்பட்டது.

1967	▪ சென்னைக்கு வீராணம் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. ▪ மே 15 - படி அரிசி திட்டம் (ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி) என்ற முதலமைச்சர் நல் வாழ்வு திட்டம் தொடங்கப்பட்டது. ▪ ஆக. 16 - மெட்ராஸ் மாகாணத்தில் ஊரக சீரமைப்பு பணிக்காக தன்னார்வலர்களைக் கொண்ட "செழிப்பு படை" (Properity Brigade) உருவாக்கப்பட்டது.
1968	▪ இவருடைய அரசாங்கம் மும்மொழி கொள்கைக்கு மாறாக இருமொழி திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ▪ இந்து திருமணச் சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) 1967, இந்தியாவிலேயே முதன் முறையாக சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1967 சட்டமானது நிறைவேற்றப்பட்டு, 1968-ல் அரசிதழில் வெளியிடப்பட்டது.
1969	▪ சமஸ்கிருத வார்த்தையான "ஸ்ரீ"க்கு பதிலாக தமிழ் வார்த்தையான "திரு" என்ற வார்த்தை அரசிதழில் பயன்படுத்தப்பட்டது. • தமிழக சின்னத்தில், சமஸ்கிருத மொழியில் உள்ள "சத்யமேவ ஜெயதே" என்ற வார்த்தைக்கு பதிலாக தமிழ்மொழியில் "வாய்மையே வெல்லும்" என்ற வார்த்தை மாற்றப்பட்டது. ▪ ஜன. 14, 1969 - தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது. இதற்கான மசோதா ஏப்ரல் 14, 1967-ல் தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்டது.
1970	▪ மாநிலத்தில் சிறு தொழில்களை ஊக்குவிக்க தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது.
1971	▪ (SIPCOT) தமிழ்நாடு மாநில தொழிற்சாலை ஊக்குவிப்பு கழகம் தொழிற்சாலை வளர்ச்சியை ஊக்குவிக்க அமைக்கப்பட்டது.

கல்வி

- ரூ.1500க்கும் குறைவான மாத வருமானத்தை உடைய பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்கப்பட்டது.
- 1968-69 துறைகளில் தமிழ்வழிக் கல்வி முறை அனைத்து கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாராட்டு

- 1978: அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக தொடங்கப்பட்ட முதன்மை நிறுவனத்திற்கு "அண்ணா பல்கலைக்கழகம்" எனப் பெயரிடப்பட்டது.
- 1987: அண்ணா அறிவாலயம் (திராவிட முன்னேற்ற கழகத்தின் தற்போதைய அலுவலகமாக உள்ளது)

2) கருணாநிதி (1924-2018)

- 1969-2018 வரை திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக இருந்தார்.
- இவரே தமிழக முதல்வர்களில் நீண்ட காலம் பதவி வகித்த முதல்வர் ஆவார்.
- P. சுந்தரம் பிள்ளை எழுதிய பாடலை தமிழ்த்தாய் வாழ்த்து பாடலாக அறிமுகம் செய்தார்.

- முதலமைச்சராக பதவி வகித்த வருடங்கள் : 1969-1971, 1971-1976, 1989-1991, 1996-2001, 2006-2011

நலத்திட்டங்கள்

1969	▪ A.N.சட்டநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலையை ஆராய முதல் முறையாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தை அமைத்தார். ▪ மாநில கட்டமைப்பு மற்றும் மத்திய மாநில உறவுகளை ஆராய ராஜமன்னார் குழுவை நியமித்தார். ▪ பிச்சையெடுப்போர் மறுவாழ்வு திட்டம். ▪ மே தினத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்பட்டது.
1970	▪ சேலம் இரும்பு தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார் ▪ தமிழ்நாடு குடிமை மாற்று வாரியம் அமைக்கப்பட்டது. ▪ **குறிக்கோள்:** நகர்ப்புற குடிசைவாசிகளின் சுற்றுப்புறத்தை தூய்மையாக மாற்றி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். மேலும் 2023க்குள் குடிசைகள் இல்லா நகரத்தை உருவாக்குதல். ▪ தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்காக தமிழ்நாடு அரசாங்கத்தால் மறுவாழ்வு இல்லம் தொடங்கப்பட்டது. ▪ தமிழ் படிப்பிற்கான சர்வதேச நிறுவனம் அமைக்கப்பட்டது.

https://t.me/tnpscfree

1971	▪ மாநில திட்டக்குழு அமைக்கப்பட்டது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு இந்த குழுவை அமைத்தது. ▪ பண்ணை தொழிலாளிகளுக்கு தகுந்த கூலிகள் வழங்க சட்டம் இயற்றப்பட்டது. ▪ தமிழ்நாடு வட்டார வளர்ச்சி மற்றும் குடிசை மாற்றுச் சட்டம் இயற்றப்பட்டு குடிசை மாற்று வேலைகள் தொடங்கப்பட்டன. ▪ கோவையில் முதல் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
1972	▪ கலைஞர் கண்ணொளி காப்போம் திட்டம் தொடங்கப்பட்டு கண் பார்வை குறைகளை நீக்கி அவர்களுக்கு கண்ணாடியும் வழங்கப்பட்டது.
1974	▪ தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (THADCO) அமைக்கப்பட்டது. • அரசாங்கம் ஆரம்பித்த கட்டுமான பணிகளை தொடங்கியது. • பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியின இனத்தை சேர்ந்த இளைஞர்களின் வேலை / சுய வேலைக்கான திறன் பயிற்சிகளை வழங்கியது.
1974	**குடும்ப நலத்திட்டம் (ஜனவரி 01)** ▪ ஒருவேளை அரசாங்க ஊழியர் பணியின்போது இறந்து விட்டால், அந்த ஊழியரின் குடும்பத்துக்கு மொத்தமாக ரூ.1,50,000 வழங்கப்படும். ▪ ஊழியரின் அடக்கச் செலவிற்காக உடனடியாக அந்த குடும்பத்திற்கு 5000 ரூபாய் அரசாங்கத்தால் வழங்கப்படும். ▪ பூம்புகார் கப்பல் கட்டும் தளம்: TANGEDCO-விற்கு கீழ் இயங்கும் அனல்மின் நிலையங்களுக்கு நிலக்கரியை அனுப்பவும், கன்னியாகுமரி சுற்றுலா தளத்திற்கான கப்பல்களை இயக்குவதற்கும் ஆரம்பிக்கப்பட்டது.
1976	▪ மாநில முழுவதும் பொது விநியோக முறையின் (PDS) கீழ் கொண்டு வரப்பட்டது.
1989	▪ இந்தியாவில் முதன்முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ▪ இந்து சொத்துரிமைச் சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) 1989, உருவாக்கப்பட்டு பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை வழங்கப்பட்டது. ▪ அரசு அலுவலகங்கள், பொதுத்துறை மற்றும் உள்ளாட்சிகளில் 30 சதவிகித வேலைவாய்ப்புகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டன. ▪ தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் கழகம் அமைக்கப்பட்டது. இது ஆசியா மற்றும் இந்தியாவின் முதல் கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் கழகமாகும். ▪ அம்பாசங்கர் குழு: 50 சதவிகித மொத்த இட ஒதுக்கீட்டில் 20 சதவிகிதத்தை மிகவும் பிற்படுத்தபட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டது.
1990	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
1996	"மெட்ராஸ்" சென்னை என பெயர் மாற்றப்பட்டது.

1997	**சமத்துவபுரம், 1997:** ▪ சமூக நீதி மற்றும் சமூக சமத்துவம் ஏற்பட தொடங்கப்பட்ட வீட்டுவசதி திட்டம். ▪ இந்திய விடுதலையில் 50 ஆண்டு பொன்விழாவின் (ஆகஸ்ட் 15, 1997) போது தொடங்கப்பட்டது. ▪ குறிக்கோள்: அனைத்து மதத்தினர் மற்றும் சமூகங்களை எந்தவித வேறுபாடும் இல்லாமல் சமமாக நடத்த வேண்டும். ▪ ஆகஸ்ட் 17, 1998 அன்று முதல் சமத்துவபுரம் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா மேலக்கோட்டை கிராமத்தில் தொடங்கப்பட்டது. ▪ ஏப்ரல் 8, 1999 ல் சமத்துவபுரம் என்ற பெயர் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்று பெயர் மாற்றப்பட்டது. **பயனடைபவர்கள்:** ▪ வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கு முன்னுரிமை. ▪ வருமான அளவு தடை இல்லை. ▪ 100 வீடுகளில் - SC - 40, BC - 25, MBC - 25, மற்றவர்கள் - 10. ▪ 70 சதவிகித ஊனமுடையோருக்கு, 3 சதவிகித ஒதுக்கீடு.
	நாட்டின் முதல் சட்டப் பல்கலைக்கழகமான "அம்பேத்கர் பல்கலைக்கழகம்" ஆரம்பிக்கப்பட்டது.
1997	**அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 1997:** வேலூர் மாவட்டம், வாலாஜா பேட்டையில் உள்ள பொன்னை கிராமத்தில் 26, ஜூன் 1997-ல் தொடங்கப்பட்டது. ▪ நோக்கம்: அனைத்து கிராமங்களையும் நவீன வசதியுடன் மேம்படுத்துதல். **நமக்கு நாமே திட்டம் (சுய உதவி திட்டம்) 1997:** ▪ வேலூர் மாவட்டம் வின்னாமங்கலம் கிராமத்தில் 26, ஜூன் 1997-ல் தொடங்கப்பட்டது. ▪ தமிழக அரசின் உதவியோடு மாவட்ட ஆட்சியர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தினர்.
1999	**உழவர் சந்தை:** 14, நவம்பர் - 1999 ல் முதல் உழவர் சந்தை மதுரை அண்ணா நகரில் ஏற்படுத்தப்பட்டது. **நோக்கம்:** • காய்கறி சந்தைகளில் இடைத்தரகர்கள் மற்றும் வர்த்தகர்களை நீக்குதல். • நுகர்வோருக்கும், உழவர்களுக்கும் நேரடி இணைப்பை ஏற்படுத்துதல். • தூய்மையான பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலையை நிலைப்படுத்த.
	▪ ஜூன் 6, 1999: ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு பேருந்து நிலையம் தொடங்கப்பட்டது.
	வாழ்வொளித் திட்டம்: வியாழக்கிழமை பள்ளி சுகாதார திட்டம் 1999.
2000	**திருவள்ளுவர் சிலை, 2000:** பொதுமக்களுக்காக 133 அடி திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் திறந்து வைக்கப்பட்டது.

https://t.me/tnpscfree

பிற முயற்சிகள்

2006	**ஏழை தொழிலாளர்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்:** ▪ ஏழை விவசாய குடும்பங்களுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்படும். ▪ நிலம் பண்படுத்தப்பட்ட பின்பு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ▪ காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15-ம்தேதி, "கல்வி வளர்ச்சி" நாளாக அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடப்படுகிறது. ▪ இலவச வண்ணத் தொலைக்காட்சி தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டது. ▪ அனைத்து பள்ளிகளிலும் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. **வருமுன் காப்போம் முகாம், டிசம்பர் 2006** ▪ நோய்கள் வருமுன் காக்க மருத்துவ சேவைத்திட்டம்.
2007	▪ பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டில், முஸ்லீம்களுக்கு 3.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. ▪ மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வு நீக்கப்பட்டது.
2008	▪ பொது விநியோக (PDS) முறையின் கீழ்,1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ▪ இலவச அவசர ஆம்புலன்ஸ் உதவித்திட்டம் -108
2009	பிப்ரவரி 02: 'கலைஞர் காப்பீட்டு திட்டம்'; ஏழைகளுக்கான விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டம்.
2010	**நலமான தமிழகத் திட்டம்:** ▪ பரவா நோய்களைத் தடுக்க இலவச மருத்துவ பரிசோதனை. இருதய நோய், சர்க்கரை நோய் மற்றும் புற்று நோய்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ▪ செப்டம்பர் 25, 2010 ல் பேரறிஞர் அண்ணாவின் நினைவாக "அண்ணா நூற்றாண்டு நூலகம்" சென்னையில் தொடங்கப்பட்டது. ▪ இராஜராஜனின் ஆயிரம் ஆண்டு நினைவாக ஒற்றை நெல் பயிர் திட்டம் தொடங்கப்பட்டது. ▪ ஜூன் 2010ல் முதல் உலக தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் நடத்தப்பட்டது. ▪ தமிழ்நாடு பள்ளிகளுக்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

3.4.4 அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்:

1) M.G. இராமச்சந்திரன் (1917 – 1987):

- இவர் பிரபல திரைப்பட நடிகர், படத் தயாரிப்பாளர் மற்றும் அரசியல்வாதி
- 10 வருடம் முதலமைச்சராக பணியாற்றியுள்ளார் (1977-87).
- மக்கள் திலகம் என்று அழைக்கப்பட்டார்.

1972	திமுகவின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர் அக்கட்சியிலிருந்து விலகி "அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்" என்ற கட்சியை நிறுவினார்.
1976	அதிமுக-வானது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அஇஅதிமுக) எனப்பெயர் மாற்றப்பட்டது
1977	▪ 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண் விதவைகளுக்கு திருநெல்வேலியில் சேவை இல்லம் தொடங்கப்பட்டது. ▪ 20 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற விதவைகளுக்கு சத்தியவானி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.
1978	▪ 10 + 2 + 3 கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ▪ செப்டம்பர் 4, 1978-ல் தமிழ்நாடு அரசுச்சட்டம், 1978-ன் படி தமிழ்நாடு அரசாங்கம் அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை தொடங்கியது.
1980	கிராமங்களில் 'கர்ணம்' என்ற பதவி நீக்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் பதவி உருவாக்கப்பட்டது.
1981	▪ மாநில சுகாதார போக்குவரத்திற்கான தனி இயக்குநரகம். • இதன் மூலம் சுகாதாரத்துறை வாகனங்கள் பராமரிக்கப்பட்டன. ▪ தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ தஞ்சாவூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ▪ செப்டம்பர் 1981-ல் "தமிழ் பல்கலைக்கழகச் சட்டம், 1981", ஆனது தமிழ்நாடு சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டது. ▪ பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் 1981 இயற்றப்பட்டு, பிப்ரவரி 1982-ல் தமிழக அரசால் கோவையில் பாரதியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
1982	ஜூலை 01, 1992-ல் முதலமைச்சர் மதிய சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது.
1983	▪ குடும்ப நலத்திட்டத்தை சீராக செயல்படுத்த குடும்ப நலத்துக்கென தனி இயக்குநரகம். ▪ ஜனவரி,15 1983-ல் முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம் ஓய்வூதியம் பெறும் முதியோருக்கும் நீட்டிக்கப்பட்டது. ▪ இவரது காலத்தில் சென்னை அணுமின் நிலையத்தின் முதல் அலகு கல்பாக்கத்தில் நிறுவப்பட்டது.
1984	▪ வரதட்சணை, மது அருந்துதல், போதை பழக்கத்திற்கு உள்ளாதல் போன்றவற்றால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண குடும்ப கலந்தாய்வு மையங்கள் தொடங்கப்பட்டன. ▪ ஜனவரி 1,1984-ல் முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்கள் இறந்த பிறகு அவர்களின் மனைவிகளுக்கும் ஓய்வூதியத் திட்டம் நீடிக்கப்பட்டது. ▪ தமிழ்நாடு சட்டம் 15 மூலம் கொடைக்கானலில் "அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம்" நிறுவப்பட்டது.

https://t.me/tnpscfree

1985	▪ பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச சீருடைத் திட்டம் மூலம் பள்ளிகளில் சேர்க்கை வீதம் அதிகரித்தது.
1987	**முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்:** ▪ பெண்களின் மகப்பேறு காலத்தில் ஏற்படும் வேலை இழப்பையும், ஊட்டச்சத்துக்கு ஆகும் செலவையும் சரி செய்ய ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட்டது. ▪ பள்ளி குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இலவச காலணி வழங்கப்பட்டது.

2) ஜெ. ஜெயலலிதா (1948–2016)

பிரபல திரைப்படநடிகை மற்றும் அரசியல்வாதி. 1991-96, 2001, மே - செப்டம்பர், 2001, 2002 - 2006, 2011 - 14, 2015 - 16 ஆகிய காலங்களில் முதலமைச்சராக பணியாற்றினார்.

1991	▪ சத்துணவு திட்டமானது " புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" எனப்பெயர் மாற்றப்பட்டது.
1992	▪ அனைத்து பெண்கள் காவல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. **முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்:** ▪ **நோக்கம்:** சிறு குடும்பங்களை அமைக்க ஊக்கப்படுத்துதல், ஆண் - பெண் சமமின்மையை நீக்க, ஏழைக் குடும்பங்களின் பெண் குழந்தைகளுக்கு நேரடி உதவி நலத்திட்டங்கள். **தொட்டில் குழந்தை திட்டம்: 1992** ▪ அறிமுகம்: சேலம் மாவட்டம் ▪ நோக்கம் : பெண் சிசுக் கொலையை தடுத்தல் ▪ 2001 : மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீடிக்கப்பட்டது. ▪ ஆண்-பெண் குழந்தை விகிதம் 2001 ல் 942/1000 லிருந்து 2011 ல் 943/1000 ஆக உயர்த்தப்பட்டது.
1993	▪ பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஆராய மற்றும் அவர்களின் உரிமைகளை காப்பதற்காக தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ▪ மாற்றுத் திறனாளிகளுக்கென தனி இயக்குநரகம் அமைக்கப்பட்டது.
2002	▪ கோவில் அன்னதான திட்டம் தொடங்கப்பட்டது. ▪ தமிழ்நாட்டில் சர்வ சிக்ஷா அபியான் நடைமுறைப்படுத்தப்பட்டது.
2003	▪ வரலாற்று சிறப்புமிக்க "மழைநீர் சேகரிப்புத் திட்டம்" நிறைவேற்றப்பட்டது.

2004	▪ நமது கிராமத்திட்டம்.
2005	▪ சென்னை-சுனாமி மறுவாழ்வுத் திட்டம்
2011	▪ தமிழ்நாடு கிராம சுகாதார மேம்பாட்டுத் திட்டம். ▪ விரிவான பள்ளிகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்.
2012	**முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்** ▪ ஆண்டு வருமானம் ரூ. 72,000 க்கு கீழுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்புகள். ▪ அட்டை உரிமையாளரின் குழந்தைகள், துணைவியார் மற்றும் அவரின் பெற்றோருக்கும் சேவை வழங்கப்படும். ▪ குறிப்பிட்ட சில நோய்கள் மற்றும் செயல் முறைகளுக்கு இலவச மருத்துவ சேவை. **பயன்கள்:** ▪ ஒரு குடும்பத்திற்கு, ஓராண்டிற்கு ரூ. 5 லட்சம் வரை மருத்துவ சேவைகள் வழங்கப்படும். ▪ இத்திட்டத்திற்குள் இலங்கை அகதிகள், அனாதைகள், புலம் பெயர்ந்தவர்களும் சேர்க்கப்படுவர். (ஆண்டு வருமானம் வரையறை இல்லை). ▪ **தகுதி:** தமிழ்நாட்டில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் கட்டாயம் குடும்ப அட்டை வைத்திருக்க வேண்டும்.
	NEEDS: புதிய தொழில் முனைவோர் – நிறுவன மேம்பாட்டுத் திட்டம் – (2012) ▪ படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக்க தொடங்கப்பட்ட தமிழக அரசின் திட்டமாகும். ▪ 12-வது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ▪ 2012 - தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டது.
2013	▪ **அம்மா திட்டம்:** அனைத்து கிராமங்களிலும் விளிம்பு நிலையிலுள்ள மக்களுக்கு அதிகபட்ச சேவைகள் கிடைக்க உறுதியளித்தல். ▪ அம்மா காய்கறிக் கடை **அம்மா குடிநீர்த் திட்டம்** ▪ **நோக்கம்:** குடிநீர் வழங்க. **பயனாளிகள்:** • தனியாரிடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வாங்கமுடியாத ஏழைக்குடும்பங்களுக்கு இலவசமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. • ஏழைக்குடும்பங்களுக்கு தினசரி இலவசமாக 20 லிட்டர் குடிநீர்.

https://t.me/tnpscfree

2013	**அம்மா உணவகம்** ▪ **நோக்கம்:** ஏழைகளுக்கு குறைந்த விலையில் உணவு. ▪ **பயனாளிகள்:** பொருளாதாரத்தில் பின் தங்கிய சமூகப் பிரிவுகள்.
2014	**அம்மா மருந்தகம்** ▪ **நோக்கம்:** நியாயமான விலையில் தரமான மருந்துகள் ▪ **கிளைகள்:** சென்னை, ஈரோடு, சேலம், கடலூர், மதுரை, சிவகங்கை, விருதுநகர்.
	அம்மா சிமெண்ட் 2014 தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலையின் மூலம் ரூ. 190 செலவில் 50 கிலோ சிமெண்ட் விற்கப்படும். இந்த சிமெண்டானது தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.
	அம்மா விவசாயிகளுக்கான விதைத் திட்டம் விவசாயிகளின் நலன்களுக்காக "அம்மா சேவை மையங்கள்" மூலமாக குறைந்த விலையில் அம்மா விதைகள் கிடைத்தல்.
	பெண்கள் & குழந்தைகளுக்கான தமிழ்நாடு விடுதிகள் மற்றும் வீடுகள் (ஒழுங்குமுறை) சட்டம்: **நோக்கம்:** வீட்டை விட்டு வெளியே வசிக்கும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைச் செயல்களை தடுத்து அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல்.
2015	**அம்மா குழந்தைகள் பாதுகாப்பு பெட்டகம்** இந்த பெட்டகத்தில் 16 பொருட்கள் உள்ளது. குழந்தை உடைகள், துண்டு, படுக்கை துணி, கொசு வலை, நாப்கின், எண்ணெய், குழந்தை சோப்பு, குளியல் சோப்பு, சோப்பு பெட்டி, திரவ சுத்திகரிப்பான், நகம் திருத்தி போன்றவை. இவை அனைத்தும் ரூ. 1000 மதிப்புடையது.
2016	**அம்மா இலவச வைஃபை** ஜெயலலிதா தலைமையிலான அரசாங்கம் தமிழ்நாட்டின் 50 மண்டலங்களில் இலவச வைஃபை வசதியை அமைக்க உத்தரவிட்டது. முதல் கட்ட நிலையில் 50 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ் ரூ. 10 செலவில் கொண்டு வரப்படும்.

31 எடப்பாடி பழனிச்சாமி

பிப்ரவரி 2017-இல் தமிழ்நாட்டின் முதல்வராக எடப்பாடி பழனிசாமி அவர்கள் பதவியேற்றார்.

2017	▪ **குடிமராமத்து திட்டம்:** தமிழ்நாட்டிலுள்ள நீர்நிலைகளை புதுப்பித்தல். ▪ முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டமானது ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.
2018	**அம்மா இரு சக்கர வாகனத் திட்டம், 2018** ▪ **நோக்கம்:** ஊனமுற்றோர் மற்றும் உழைக்கும் பெண்களுக்காக மானிய விலையில் இரு சக்கர வாகன திட்டம். ▪ **பயனாளிகள்:** 18 வயது முதல் 40 வயது வரையுள்ள உழைக்கும் பெண்கள். ▪ **நன்மை:** ரூ. 25000 வரை 50% மானியம். ▪ **2017:** முதலமைச்சரின் ஒருங்கிணைந்த சுகாதார காப்பீட்டுத் திட்டம். ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.
2018	**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்:** ரூ. 12,000 நிதியுதவியானது, 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு 2018 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.
2019	**அம்மா மகப்பேறு ஊட்டச்சத்து பெட்டகம், 2018-19** ▪ கர்ப்பிணி பெண்களிடையே இரத்த சோகையை குறைக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையை அதிகரிக்கவும் அவர்களுக்கு இரும்பு டானிக் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகளை வழங்குகிறது. ▪ முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.
2019	▪ ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தடைசெய்தல். ▪ பள்ளிக்குழந்தைகளுக்கு காலை உணவுத்திட்டம். ▪ உலக முதலிட்டாளர்கள் மாநாடு -2 ▪ தமிழ்நாடு இலவச தையல் இயந்திரம். ▪ அம்மா உடற்பயிற்சி கூடம். ▪ மெய் நிகர் கற்றல் தளம் அமைக்கப்பட்டது. "www.tamilnaducareerservices.tn.gov.in". ▪ மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான P. தேவதாஸ் தலைமையில் லோக் ஆயுக்தா அமைக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

தமிழகத்தில் நடைபெற்ற தமிழ் மாநாடுகள்:


உலகத்தமிழ் மாநாடு	வருடம்	நடைபெற்ற இடம்	முதலமைச்சர்
2-வது	1968	சென்னை	அண்ணாதுரை
5-வது	1981	மதுரை	எம்.ஜி.ஆர்.
8வது	1995	தஞ்சாவூர்	ஜெயலலிதா

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

- குறள் 544

விளக்கம்:

குடிமகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலை பெறும்.



நீதிக்கட்சி சந்திப்புக் கூட்டம்

மாதிரி வினாக்கள்

1. ஆங்கிலேயர்களுக்கு எதிராக மக்களை ஒருங்கிணைத்து, தங்களது குறைகளை எடுத்துரைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளில் ஒன்றான "சென்னைவாசிகள் சங்கம்" எனும் அமைப்பினை உருவாக்கியவர் யார்?
   (A) கஜுலா லட்சுமி நரசு (B) சிங்காரவேலு
   (C) டி.எம். நாயர் (D) பொட்டி ஸ்ரீராமுலு
2. "யுனைடெட் நேசனலிஸ்ட் கட்சி" யைத் தோற்றுவித்தவர் யார்?
   (A) பொப்பிலி (B) சுப்பராயர்
   (C) நடேசனார் (D) பாரதியார்
3. பின்வரும் அரசியல் கட்சிகளில் தேசியக் கட்சியாக சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி எது?
   (A) அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ்
   (B) தேசிய மக்கள் கட்சி
   (C) தேசியவாத காங்கிரஸ் கட்சி
   (D) அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்
4. சென்னை மாகாணத்தில் தொழிலாளர் அமைப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் மிக முக்கிய பங்காற்றியவர் யார்?
   (A) எம். திருமலாச்சாரியார் (B) ஏ. சிங்காரவேலர்
   (C) தந்தை பெரியார் (D) மறைமலை அடிகள்
5. 1962 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, திராவிட முன்னேற்றக் கழகத்தை சுதந்திரக் கட்சி ஆதரித்தது. அப்பொழுது சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர் யார்?
   (A) ஈ.வெ.கி சம்பத் (B) ச. இராஜகோபாலாச்சாரி
   (C) கு. காமராஜ் (D) ஓமந்தூர் இராமசாமி
6. பேரறிஞர் அண்ணா நீதிக் கட்சியை எந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுத்தார்?
   1. சாதியற்ற சமுதாயம் அமைக்க
   2. வர்க்க பேதமற்ற சமுதாயம் அமைக்க
   3. சாதியற்ற, வர்க்க பேதமற்ற சமுதாயம் அமைக்க
   4. வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் அமைக்க
   (A) 1 மட்டும் (B) 1 மற்றும் 4 (C) 3 மட்டும் (D) 4 மட்டும்
7. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையின் சிறப்புக் குணாதிசயத்தை வெளிப்படுத்தும் சீரிய திட்டமாக அறியப்படுவது:
   (A) மதிய உணவுத் திட்டம் (B) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்
   (C) தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (D) தொழிற்பேட்டைகள்

https://t.me/tnpscfree

8. கீழ்கண்டவற்றில் எது நீதிக் கட்சியின் சாதனையுடன் தொடர்பில்லாதது?
   (A) இந்து சமய அறநிலையத்துறை சட்டம்
   (B) சென்னை அரசு தொழில் உதவிச் சட்டம்
   (C) பணியாளர் தேர்வுக் குழு
   (D) காமராஜர் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டவை

9. சுதந்திர இந்தியாவில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதலமைச்சர் யார்?
   (A) N.T. இராமா ராவ் (B) V.S. அச்சுதானந்தன்
   (C) M.G. இராமச்சந்திரன் (D) K. காமராஜ்

10. ஒரு கட்சியை தேசியக் கட்சியாக அங்கீகரித்தல் தொடர்பான சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு:
    1. மக்களவை பொதுத் தேர்தலில் இரண்டு சதவீத இடங்களில் வெற்றி பெறுதல் மற்றும் இந்த வேட்பாளர்கள் மூன்று மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
    2. இது நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

    கீழ்க்கண்ட குறிகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு
    (A) 1 மட்டும் (B) 2 மட்டும்
    (C) 1 மற்றும் 2 (D) இவற்றில் எதுவுமில்லை

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
A	B	B	B	B	C	A	D	D	C

அத்தியாயம்

4

இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும்

நமது போராட்டம் பணத்திற்கான போராட்டமோ அல்லது அதிகாரத்திற்கான போராட்டமோ அன்று; மாறாக விடுதலைக்கான மற்றும் மனிதத்தன்மையை மீட்டெடுப்பதற்கான போராட்டம். **–பி.ஆர்.அம்பேத்கர்.**

4.1 இடஒதுக்கீடு

இடஒதுக்கீடு என்பது குறிப்பிட்ட சில வகுப்பினருக்கு கல்வி, வேலைவாய்ப்பு, சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள இடங்களில் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்து அச்சமூகத்தினர் மேம்பட வழிவகுக்கும் ஒரு செயல்முறை ஆகும்.

4.1.1 இடஒதுக்கீட்டுக் கொள்கைகள்

- பின்தங்கிய வகுப்பினரை பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு நேர்மறை பாகுபாடு.
- சமத்துவ உரிமையின் ஓர் முக்கிய அங்கம்.
- அரசின் கொள்கையால் நடைமுறைப்படுத்துவது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இடஒதுக்கீடு வழங்குதலுக்கான முக்கிய காரணங்கள்

- காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்த சாதியமுறையின் தாக்கம்.
- வரலாற்று ரீதியாக சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இழைக்கப்பட்ட அநீதி.

இந்தியாவின் தற்போதைய இடஒதுக்கீடு

OBC	SC	ST	EWS	மொத்த இட ஒதுக்கீடு
27%	15%	7.5%	10%	59.5%

குறிப்பு: உயர் வகுப்பில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீடானது, 2019-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

https://t.me/tnpscfree

தமிழ்நாடு

BC		MBC	SC		ST	மொத்த இடஒதுக்கீடு
BC	BCM		SC	SCA		
26.5%	3.5%	20%	15%	3%	1%	69%

குறிப்பு: உயர் வகுப்பில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீடானது தமிழகத்தில் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

4.1.2 இடஒதுக்கீட்டிற்கான தேவைகள்

- குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிரான சமூக அடக்குமுறை மற்றும் அநீதியை நீக்க.
- பின்தங்கிய வகுப்பினருக்கான சம வாய்ப்பு, சமமான அந்தஸ்து மேலும் அதற்கேற்ற சூழலை ஏற்படுத்த.
- சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினரின் பங்களிப்பை அதிகரிக்க மற்றும் அதனை உறுதி செய்வதற்கும்.
- சமூக சமநிலையின் அடிப்படையில் தகுதியை உறுதிசெய்ய.
- சமூக நீதியை நிலைநாட்ட.

சமதர்மம் மற்றும் சமத்துவம்

சமதர்மம்	சமத்துவம்
சமதர்மம் என்பது நீதி, நேர்மை மற்றும் பாகுபாடின்மை ஆகியவற்றைக் குறிக்கிறது.	சமத்துவம் என்பது அனைவரையும் ஒரே நிலையில் வைத்து அவர்களுக்கான உரிமைகளை சமமாக பகிர்ந்தளித்தல்.
இது தேவைகளின் அடிப்படையிலான அணுகுமுறை. தனி நபரின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது.	தனிநபர் அல்லது ஒரு சமூகத்தின் தேவைகளுக்காக சமத்துவம் பாதிக்கப் படுவதில்லை.
சமூக குழுக்களுக்கு இடையிலான வேறுபாடுகளை கண்டறிந்து அவற்றை குறைப்பதற்கு முயல்கிறது.	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை சமத்துவம் கருத்தில் கொள்வதில்லை.

4.2 இந்தியாவில் இட ஒதுக்கீட்டின் பரிணாமம்

4.2.1 விடுதலைக்கு முன்

- 1882 - வில்லியம் ஹண்டர் மற்றும் ஜோதி ராவ் பூலே ஆகியோர் ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு என்ற கருத்தை முதலில் முன்மொழிந்தனர்.

- ஆகஸ்ட் 16, 1932 – வகுப்புவாரி ஒதுக்கீடு. இது இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில், அம்பேத்கர் 'ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான' தனி வாக்காளர் என்ற பிரச்சனையை எழுப்பியதன் விளைவாகும்.
  - பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு இதனை வெளியிட்டார்.
  - இது சிறுப்பான்மையினர் மற்றும் இந்துக்களில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித்தொகுதிகளை வழங்கியது.

செப்டம்பர் 24, 1932 – பூனா ஒப்பந்தம்

- காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தனித்தொகுதி திட்டம் கைவிடப்பட்டது.
- ஒடுக்கப்பட்டவர்களுக்கு தனித் தொகுதி வழங்கும் திட்டத்தை இது கைவிட்டது.
- மத்திய மற்றும் மாகாண சட்டமன்றங்களில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை அதிகரித்தது.
- இதன் மூலம் இந்து வாக்காளர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கென சில தொகுதிகளை பெற்றுள்ளன.
- இந்திய அரசுச் சட்டம் 1935, ஆனது ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான தனித் தொகுதி முறையை நடைமுறைப்படுத்தியது.

4.2.2 சுதந்திரத்திற்குப் பிறகு

- துவக்கத்தில், SC (15%) மற்றும் ST (7.5%) ஆகியோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- 1990 மண்டல் குழுவின் பரிந்துரைகளின்படி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் இட ஒதுக்கீடு முறையில் சேர்க்கப்பட்டனர்.
- 2019-ம் ஆண்டில், வேறு எந்த இடஒதுக்கீடு திட்டத்தின் கீழும் பயனடையாத உயர் சாதியினரில், பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. (103வது திருத்தச் சட்டம் 2019).

4.3 இடஒதுக்கீட்டிற்கு எதிரான முதல் வழக்கு சம்பகம் துரைராஜன் Vs ஸ்டேட் ஆஃப் மெட்ராஸ் (1951)

வழக்கு : வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையே மருத்துக் கல்லூரியில் இடம் கிடைக்காததற்குக் காரணம்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு

- தமிழகத்தின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையானது, அரசியலமைப்பின் சரத்து 14, 15 (1), 29 (2)ஐ மீறுகிறது மற்றும் சாதி அடிப்படையிலான இவ்விட-ஒதுக்கீடு முறையானது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

https://t.me/tnpscfree

சரத்து 14	சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பு.
சரத்து 15 (1)	மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனையும், அரசு பாகுபடுத்த முடியாது.
சரத்து 29 (2)	சரத்து 29(2) : மதம், இனம், சாதி அல்லது மொழி அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்த குடிமகனுக்கும், அரசு நடத்தும் அல்லது அரசின் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பெறுவதற்கான உரிமையை மறுக்க முடியாது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு

- இது உயர்நீதிமன்ற தீர்ப்பை செல்லுபடியாகும் என அறிவித்தது.
- தமிழகத்தின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை இந்திய அரசியலமைப்பின் சரத்து 16(2)க்கு எதிரானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அரசு வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஆதரவாக இடஒதுக்கீடு வழங்கும் அம்சமானது சரத்து 16 (4) கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சரத்து 15 இல் அத்தகைய இடஒதுக்கீடு அம்சங்கள் குறிப்பிடப்படவில்லை
- மதராஸ் மாகாணத்தில், அரசு வேலைகள் மற்றும் கல்லூரி இடங்களுக்கு, சாதி வாரியான இட ஒதுக்கீடு வழங்கும் 1927 அரசாணையை ரத்து செய்தது.

குறிப்பு:

- வகுப்புவாரிமுறை ரத்து செய்யப்பட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்தன.
- தமிழகத்தில் தந்தை பெரியார், தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த கு. காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, அரசியலமைப்பு சிற்பி B.R.அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் முதலாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தச் சட்டம் 1951 இயற்றப்பட்டது.

4.4 முதலாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் (1951) மற்றும் இட ஒதுக்கீடு

- அரசியலமைப்பில் சரத்து 15(4) மற்றும் ஒன்பதாவது அட்டவணையை புதிதாக சேர்த்தது.
- சரத்து 15 (4) - சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினர் அல்லது பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் மேம்பாட்டிற்கான சிறப்பு சலுகைகளை வழங்க அரசுக்கு உரிமை அளிக்கிறது.
- சில சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளை நீதிமன்ற மறு ஆய்விலிருந்து பாதுகாப்பதற்காக, **ஒன்பதாவது அட்டவணையை** உருவாக்கியது.

ஒன்பதாவது அட்டவணை

- 9-வது அட்டவணையில் வைக்கப்பட்டுள்ள சட்டங்களை அடிப்படை உரிமையை மீறப்படும் பட்சத்திலோ அல்லது அடிப்படை கட்டமைப்பு மீறப்படும் பட்சத்திலோ அச்சட்டத்தை நீதிமன்ற மறுஆய்விலிருந்து பாதுகாக்கிறது.
- இந்த பாதுகாப்பை சரத்து 31B ஆனது 9-வது அட்டவணைக்கு வழங்குகிறது. இதில் 9-வது அட்டவணையும், சரத்து 31B-யும் முதலாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் (1951)-ன் மூலம் அரசியலமைப்பு சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
- I.R.கோயலோ Vs ஸ்டேட் ஆஃப் மெட்ராஸ் வழக்கு, 2007 - ஏப்ரல் 24, 1973க்கு பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட அனைத்து சட்டங்களின் நோக்கங்களும் நீதி மன்ற மறுஆய்விற்கு உட்படுத்தப்படும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

4.5 சரத்து 340 மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம்

சரத்து 340	இந்தியாவில் உள்ள சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலையை ஆராய வேண்டுமென்று குடியரசுத் தலைவர் கருதினால், அவர் ஆணையம் ஒன்றை அமைக்கலாம்.

1. முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம், 1953

- **தலைவர்:** காகா கலேல்கர்
- **நோக்கம்:** சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினரை அடையாளம் காண.
- **அறிக்கை:** 1955
- **பரிந்துரைகள்:** அனைத்து தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை நிறுவனங்களிலும் 70% இடங்களை பின்தங்கிய வகுப்பினர்களின் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு ஒதுக்குதல்.
- **நிலை:** இப்பரிந்துரைகள் தெளிவற்றதாகவும், நடைமுறைக்கு மாறாகவும் இருந்தமையால், அவை செயல்படுத்தப்படவில்லை.

2. இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 1979

- மொராஜி தேசாய் அரசால் நியமிக்கப்பட்டது.
- **தலைவர்:** பிந்தேஷ்வரி பிரசாத் மண்டல்
- **நோக்கம்:** சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினரின் நிலையை ஆராய்ந்து அவர்களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்
- **அறிக்கை:** 1980
- சமூக, கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினரை அடையாளம் காண பதினொரு குறியீடுகளை உருவாக்கியது.

https://t.me/tnpscfree

பரிந்துரைகள்

1. இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த சாதியமைப்பில் 3743 ஜாதிகள் சமூகம் மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கியுள்ளது. 1931-ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஒட்டுமொத்த மக்கள் தொகையில் இவர்களது எண்ணிக்கை 52% ஆகும்.
2. இது இந்துக்கள் மட்டும் அல்லாமல் பிற மதங்களில் (கிறிஸ்டின், முஸ்லீம்கள், சீக்கியர்கள்) உள்ள பின்தங்கிய வகுப்பினரையும் அடையாளம் கண்டுள்ளது. இது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீட்டை பரிந்துரைத்தது.

3. V.P. சிங் அரசாங்கம், 1990

1. இதர பிற்படுத்தப்பட்டோருக்கான மண்டல் குழுவின் 27% இடஒதுக்கீடு பரிந்துரையை அமல்படுத்தியது.
2. இதன்மூலம் இதர பிற்படுத்தப்பட்டோர்களுக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

OBC	SC	ST	மொத்த இட ஒதுக்கீடு
27%	15%	7.5%	49.5%

4. நரசிம்மராவ் அரசாங்கம், 1991

இட ஒதுக்கீட்டு முறையில் இரண்டு மாற்றங்களை அறிமுகப்படுத்தியது.

1. 27% ஒதுக்கீட்டில், OBCகளில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
2. தற்போதுள்ள எந்த அரசு திட்டங்களிலும் உட்படாத உயர்சாதியினரில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு, அரசு வேலைவாய்ப்புகளில் 10% இட ஒதுக்கீடு வழங்குதல்.

5. இந்திரா சஹானி Vs யூனியன் ஆஃப் இந்தியா, 1992

வழக்கு: பின்தங்கிய வகுப்பினருக்கு வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கும் சரத்து 16 (4) இன் நோக்கம் மற்றும் செயல்பாட்டை ஆராய்வது.

தீர்ப்பு

1. உயர் சாதியினிடையே பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு வழங்குவதை நிராகரித்தது.
2. சில நிபந்தனைகளுடன், OBCகளுக்கான 27% இட ஒதுக்கீட்டை அங்கீகரித்தது.
3. OBCகளில் மேல்நிலையில் உள்ளவர்களை இட ஒதுக்கீட்டு பட்டியலிலிருந்து நீக்க உத்தரவிட்டது.
4. பதவி உயர்வில் இடஒதுக்கீடு இல்லை: இடஒதுக்கீடானது பணி நியமனத்தில் மட்டுமே இருக்க வேண்டும், பதவி உயர்வுகளில் இருக்கக் கூடாது. பதவி உயர்வில் இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் அதை ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே தொடர முடியும் (1997 வரை)
5. சில அசாதாரண சூழ்நிலைகளைத் தவிர, மொத்த இட ஒதுக்கீடானது 50% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது. இவ்விதி ஒவ்வொரு ஆண்டும் பின்பற்றப்பட வேண்டும்.

6. நிரப்பப்படாத இடங்களை முன்னெடுத்துச் செல்லும் முறையை அங்கீகரித்தது, ஆனால் அவை 50% விதியை மீறாமல் இருக்க வேண்டும் என்று கூறியது.
7. OBC பட்டியலில் அதிகப்படியானச் சேர்க்கை மற்றும் அவற்றின் குறைவான இருப்பு ஆகியவற்றை ஆராய ஒரு நிரந்தர சட்டப்பூர்வ அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று அரசுக்கு உத்தரவிட்டது.

சரத்து 16(4)

- மாநில அரசு வேலைகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெறாத பின்தங்கிய வகுப்பினருக்கு ஆதரவாக, அவர்களின் பணி நியமனத்தில் அரசானது இட ஒதுக்கீடு வழங்கலாம்.

6. ராம் நந்தன் பிரசாத் குழு, 1993

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, 1993ஆம் ஆண்டு நீதிபதி ராம் நந்தன் பிரசாத் தலைமையிலான நிபுணர் குழுவினை அரசு அமைத்தது.

- **நோக்கம்:** OBCகளில் கிரிமிலேயரைக் கண்டறிய.
- **அறிக்கை:** 1993
- **நிலை:** பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
  - OBCகளில் கிரிமிலேயர் அல்லாதவர்கள் மட்டுமே அரசு பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பெற முடியும் என்று கூறியது.

கிரிமிலேயர்: பின்வரும் பணியிலுள்ளவர்களின் குழந்தைகள் OBCகளில் 'கிரிமிலேயர்' பிரிவினுள் வருகின்றன.

1. அரசிலயமைப்பு பதவிகள் : ஜனாதிபதி, துணைக்குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், UPSC-ன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், SPSC-ன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மத்திய தேர்தல் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் CAG மற்றும் பிற.
2. மத்திய மற்றும் மாநில அளவில் குரூப் 'A' / வகுப்பு I மற்றும் குரூப் 'B' / வகுப்பு II அலுவலர்கள் மற்றும் அதற்கு இணையான பொறுப்பில் அரசுப் பொது நிறுவனங்களில் பணியாற்றபவர்கள் எ.கா. வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் குரூப் I,II அளவில் இருப்பவர்கள் மற்றும் தனியார் பணியாளர்கள்.
3. இராணுவத்தில், கர்னல் அல்லது அதற்கு மேலுள்ள பதவியில் உள்ளவர்கள். கடற்படை, விமானப்படை மற்றும் துணை இராணுவ படைகளில் கர்னலுக்கு இணையான பதவியில் இருப்பவர்கள்.
4. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், ஆலோசகர்கள் போன்ற வல்லுநர்கள். வர்த்தகம், வணிகம் மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்கள்.

https://t.me/tnpscfree

5. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் விவசாய நிலம் கொண்டுள்ள மக்கள் மற்றும் நகர்புறங்களில் காலியிடங்கள் அல்லது வீடுகள் கொண்டவர்கள்.
6. சமீபத்திய மாற்றங்கள் : 8 லட்சத்திற்கு அதிகமான ஆண்டு வருவாய் கொண்ட மக்கள். இது செப்டம்பர் 2017இல் சேர்க்கப்பட்டது. (இதற்கு முன் இது 6 லட்சமாக இருந்தது)

7. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையச் சட்டம் 1993 ஐ இயற்றியதன் மூலம் பாராளுமன்றமானது, தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை தோற்றுவித்தது.

நோக்கம்

1. பல்வேறு பின்தங்கிய வகுப்பினரின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி அவர்களை பட்டியலில் சேர்க்க அல்லது நீக்க பரிந்துரைத்தல்.
2. பின்தங்கிய வகுப்பினரின் நலன்களை திறம்பட பாதுகாத்தல்.

சமீபத்திய மாற்றங்கள் : 102வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2018ஆனது, சரத்து 338B மற்றும் 342 A ஆகியவற்றை புதிதாக இணைத்தல் மற்றும் சரத்து 366இல் திருத்தம் செய்தல் மூலமாக, பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது.

சரத்து 338 B	▪ சமூக மற்றும் கல்வி ரீதியில் பின்தங்கிய வகுப்பினர்களின் நலவாழ்வுத் திட்டங்கள் மற்றும் புகார்களை ஆய்வு செய்வதற்காக பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம் அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்குகிறது.
சரத்து 342 A	▪ பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினரை குறிப்பிட்டுக்கூற ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது. ▪ இதனை செய்யும்முன் அவர் அம்மாநில ஆளுநரை கலந்தாலோசிக்கலாம். ஆயினும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக மட்டுமே திருத்தம் செய்ய முடியும்.
சரத்து 366	▪ சரத்து 342A இல் குறிப்பிட்டுள்ளபடி, "சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்" என்பதற்கான வரையறையை மாற்றியமைக்க ஒரு புதிய பிரிவு இணைக்கப்பட்டது.

8. பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு

- பொது பிரிவினரில் பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு கல்வியிலும், அரசுப் பணியிலும் 10% இடஒதுக்கீட்டினை 103வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2019 வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் சரத்து 15(4), 16(4) மற்றும் 46 ஆகியவற்றில் திருத்தம் செய்துள்ளது.

சரத்து 15(4)	சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கியவர்கள் அல்லது பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோரின் மேம்பாட்டிற்காக, எந்தவொரு சிறப்பு ஏற்பாடுகளையும் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
சரத்து 16(4)	அரசு சேவைகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெறவில்லை என்று அரசு கருதும்பட்சத்தில், எந்தவொரு பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அரசு பணியில் இடஒதுக்கீடு வழங்கலாம்.
சரத்து 46	சமூகத்தின் பட்டியலிடப்பட்ட இனத்தவர்கள், பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பிற நலிந்த பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை ஊக்குவித்தல் மற்றும் சமூக அநீதி மற்றும் சுரண்டலிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்.

பொருளாதார ரீதியான பின்தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்குதலுக்கான நிபந்தனைகள்

- ₹8 லட்சத்திற்கு குறைவான ஆண்டு வருவாய்
- ஐந்து ஏக்கருக்கு குறைவான விவசாய நிலம்
- 1000 சதுர அடிக்கும் குறைவான பரப்பில் வீடு உள்ளவர்கள்.
- வீட்டுமனை, நகராட்சியாக அறிவிக்கப்பட்ட பகுதியில் 100 சதுர யார்டுக்கு குறைவான அல்லது நகராட்சி என அறிவிக்கப்பட்டாத பகுதிகளில் 200 சதுர யார்டுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கான 10% இடஒதுக்கீட்டின் நடைமுறை

1. குஜராத் (12வது), ஜார்கண்ட் (2வது), உத்தரபிரதேசம் (3வது)
2. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீடானது தமிழகத்தில் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.
3. ஒரு மாநிலத்தில், பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினருக்கு வழங்கப்படும் 10% இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது அம்மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகாரம் என்று சமீபத்தில் மத்திய அரசு தெரிவித்தது.

4.6 பதவி உயர்வில் இட ஒதுக்கீடு

அரசு பணிகளில், முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடிய உயர்மட்ட பொறுப்புகளில் SCமற்றும் STயினர் அளவு பிரதிநிதித்துவம் பெறவில்லை என்று கருதியமையால், மத்திய மற்றும் மாநில அரசுகள் 1950ஆம் ஆண்டு முதலே பதவி உயர்வில் SCமற்றும் STகளுக் இட ஒதுக்கீடு வழங்கி வருகிறது. வெவ்வேறு வழக்குகளில் நீதித்துறையின் நிலைப்பாடுகள் பின்வருமாறு

4.6.1 இந்திரா சஹானி Vs யூனியன் ஆ.ஃப் இந்தியா, 1992ன்படி,

- இட ஒதுக்கீடானது பணி நியமனங்களில் துவக்கத்தில் மட்டுமே இருக்க வேண்டும், பதவி உயர்வில் இருக்கக் கூடாது. பதவி உயர்வுகளில் தற்போதுள்ள எந்த இட ஒதுக்கீடும் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே தொடர முடியும் என்று தீர்ப்பு வெளியிட்டது. (அதாவது 1997 வரை)

https://t.me/tnpscfree

- சில அசாதாரண சூழ்நிலைகளைத் தவிர மொத்த இட ஒதுக்கீட்டு அளவானது 50%ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது. இந்த விதி ஒவ்வொரு ஆண்டும் பின்பற்றப்பட வேண்டும்.
- **77வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1995** பட்டியலிடப்பட்ட இனத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்கள் அரசுப் பணிகளில் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெறவில்லை என்று கருதினால், அரசானது SCமற்றும் STகளின் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்கலாம். இதற்காக சரத்து 16(4A) அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- **85வது அரசியலமைப்புத்திருத்தச் சட்டம், 2001** பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கு மூப்பு அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கும் வகையில், சரத்து 16(4A)ஐ திருத்தம் செய்துள்ளது.

4.6.2 M நாகராஜ் Vs யூனியன் ஆ.ஃப் இந்தியா - 2006

சரத்து 16(4A) ஆனது செல்லுபடியாகும் என அறிவித்து மற்றும் அத்தகைய இட ஒதுக்கீடானது அரசியலமைப்பிற்கு உட்பட்டு பின்வரும் 3 நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

1. SC மற்றும் ST வகுப்பினர் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
2. SC மற்றும் ST வகுப்பினர் அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெறாமல் இருக்க வேண்டும்.
3. அத்தகைய இடஒதுக்கீட்டு கொள்கையானது, மொத்த நிர்வாகத் திறனை எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும்.

இத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட கீழ்க்கண்ட கூற்றுகள் இந்திரா சஹானி (9 நீதிபதிகள் அமர்வு) தீர்ப்பிற்கு மாறாக இருந்தன.

- SC மற்றும் ST களுக்கு பதவி உயர்வு வழங்கும் முன்னர், அரசானது அவர்களின் பின்தங்கிய நிலையை நிரூபிப்பதற்கான 'எண்ணிக்கை ரீதியிலான ஆதாரபூர்வமான தகவல்களை' சேகரிக்க வேண்டும்.
- 'பின்தங்கிய நிலை' என்பதற்கான சரியான வரையறை இல்லை.
- அதிகாரப்பூர்வ தகவல்கள் எவ்வாறு சேகரிக்க வேண்டும் என்பதில் தெளிவில்லை.
- 'கிரீமி லேயர்' முறை பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்களின் இடஒதுக்கீட்டிற்கும் பொருந்தும் என்று கூறியது.

4.6.3 அசோக் குமார் தாகூர் Vs யூனியன் ஆ.ஃப் இந்தியா 2008

வழக்கு

- மொத்த மக்கள்தொகையில் 52% மக்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அறிக்கையளித்த மண்டல் குழுவின் பரிந்துரையை கேள்விக்கு உட்படுத்தியது. இதில் NSSO தனது அறிக்கையில் மொத்த மக்கள்தொகையில் 42% பேர் OBC இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

- இவ்வழக்கு 93வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2005இன் செல்லுபடித்தன்மை மற்றும் கிரிமிலேயர் முறை SC,STகளுக்கு பொருந்துமா என்பதையும் விவாதித்தது.

தீர்ப்பு

- அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள் குறித்த 93வது திருத்தச் சட்டம், 2005 ஆனது அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு மீறவில்லை என்று கூறியது.
- கிரிமிலேயர் ஆனது OBCகளைக் கண்டறிவதற்கு அடிப்படை விதியாகும்.
- அத்தகைய கிரிமிலேயர் முறை SC,STகளுக்கு பொருந்தாது.

4.6.4 ஜர்னைல் சிங் Vs லெட்சுமி நரேன் குப்தா வழக்கு, 2018

வழக்கு: பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அடையாளம் காணுதலில் இருந்த குறைகளை நாகராஜன் வழக்கு நிவர்த்தி செய்யாமையால் அது இவ்வமர்வில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

- SC மற்றும் ST-களின் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்குதலின்போது, அவர்களின் பின்தங்கியநிலையை குறித்து அரசானது எத்தகைய எண்ணிக்கை ரீதியிலான அதிகாரப்பூர்வத் தகவல்களையும் சேகரிக்க தேவையில்லை.
- SC/ST-களில் கிரீமிலேயரில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்குவதை தடைசெய்தது.

P.A இனாம்தார் & மற்றவர்கள் Vs மஹாராஷ்ட்ரா மாநிலம் வழக்கு, 2005

- அரசானது, அதன் இடஒதுக்கீட்டு கொள்கையை சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு செயல்படுத்த முடியாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.
- தனியார் மற்றும் அரசுநிதி உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்கக் கோருவது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று கூறியது.

93-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2005

- இனாம்தார் வழக்கில் (2005) வழங்கப்பட்ட தீர்ப்பை தொடர்ந்து இத்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.
- சரத்து 15(5): சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் தவிர தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட அரசு நிதியுதவி பெறும் மற்றும் பெறா அனைத்து கல்வி நிறுவனங்களிலும் SC, ST மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு அளிக்க அரசுக்கு உரிமையளிக்கிறது.

4.7 நிரப்பப்படாத காலியிடங்களை முன்னெடுத்துச் செல்லுதல்

ஒரு வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்த இடங்களில் நிரப்பப்படாத காலியிடங்களை முன்னெடுத்துச் செல்லும் முறை செல்லுபடியாகும். ஆனால் அவை 50% விதியை மீறாவண்ணம் இருக்க வேண்டும் என்று இந்திரா சஹானி வழக்கு 1992ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

81வது திருத்தச்சட்டம், 2000 – இது சரத்து 16(4B) சேர்த்ததன் மூலமாக ஒரு ஆண்டில் SC/STக்காக ஒதுக்கப்பட்ட நிரப்பப்படாத பணி இடங்களை அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்ல இது வழிவகுத்தது. அப்படி எடுத்துச் செல்லும் வகையில் 50% வரம்பு இதற்கு பொருந்தாது.

50%க்கு அதிகமான இடஒதுக்கீடு கொண்ட மாநிலங்கள்:

1.	மஹாராஷ்டிரா	78%
2.	சட்டிஸ்கர்	72%
3.	கர்நாடகா	70%
4.	மத்திய பிரதேசம்	70%
5.	தமிழ்நாடு	69%
6.	ஹரியானா	67%
7.	ராஜஸ்தான்	64%
8.	தெலுங்கானா	62%
9.	மேற்கு வங்காளம்	55%

4.8 தமிழகத்தில் இடஒதுக்கீடு முறை

- **1916:** பிராமணர் அல்லாதவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (SILF) நிறுவப்பட்டது.
- **1917:** தென்னிந்திய நலவுரிமைச் சங்கமானது நீதிகட்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நீதிக் கட்சியானது பிராமணர் அல்லாதோருக்கான வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதை தனது கொள்கையாக எடுத்துக் கொண்டது.
- **1920:** நீதிக்கட்சியானது மெட்ராஸ் மாகாணத்தில் நடைபெற்ற முதல் தேர்தலில் வெற்றிப் பெற்று ஆட்சியமைத்தது.

1921 நீதிக்கட்சியின் தீர்மானம் மற்றும் பிரதிநிதித்துவ அரசாணை

1. அரசாங்க அலுவலங்களில் பிராமணர் அல்லாத சமூகத்தினர் வகிக்கும் பதவிகளின் விகிதங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசிற்கு பரிந்துரைத்தது.
2. கீழ்க்கண்ட பொது வரிசையில், நியமனங்கள் முறையாக பிரிக்கப்பட்டன.
   - பிராமணர்கள்
   - பிராமணர் அல்லாத இந்துக்கள்
   - இந்திய கிறிஸ்தவர்கள்
   - முஸ்லீம்கள்
   - ஐரோப்பியர்கள் மற்றும் ஆங்கிலோ இந்தியர்கள்
   - பிறர்.

3. இத்தீர்மானமானது, அரசின் அனைத்து துறைகளிலும், அனைத்து தரநிலைகளிலும் செயல்படுத்துவதற்காக நீட்டிக்கப்பட்டது.
4. இத்தீர்மானத்தை வருவாய் வாரியம் ஏற்றது பின்பு அதனை செயல்படுத்திட அரசுத்துறைகளுக்கும் மற்றும் அனைத்து தரநிலைகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.
5. மெட்ராஸ் மாகாணத்தில், பிராமணர் அல்லாதவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு களுக்கான உரிமைகளை வழங்குவதற்காக, முதல்வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை நீதிக்கட்சியால் 1921-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1922 அரசாணை: அரசு பணி நியமனங்களில், பிராமணர் அல்லாதவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்தது.

1925 அரசாணை: தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அல்லாத மற்ற பிரிவினர் என்ற இரு பட்டியல்களை அறிவித்தது. இவ்வாணை ஆதிதிராவிடர்கள் கல்வியில் பயனடைய உதவியது.

1927 அரசாணை: இதன் மூலம் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடானது பின்வரும் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டன மற்றும் அவை 1947 வரைத் தொடர்ந்தன.

- பிராமணர் அல்லாத இந்துக்கள்
- பிராமணர்கள்
- முஸ்லீம்கள்
- ஆங்கிலோ இந்தியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்
- பட்டியலிடப்பட்ட இனத்தவர்கள் (SC)

1931: இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர், ஒடுக்கப்பட்ட வகுப்பினரை மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வேறுபடுத்துவதற்காக சில சமூக ரீதியான, ஏற்றுக் கொள்ளத்தக்க அளவீடுகளை வகுத்தார். ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான புதிய பட்டியல் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டது.

1935ஆம் ஆண்டுச் சட்டம்:

- வகுப்புவாத பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில், மெட்ராஸ் மாகாணத்தில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டன. 146 தொகுதிகளில் 30 இடங்கள் பட்டியலிடப்பட்ட இனத்தவருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன.
- இச்சட்டமானது பட்டியலிடப்பட்ட இனத்தவர்கள் பொது பணிகளில் சேர்வதற்கான வயதை 25 லிருந்து 27 ஆக தளர்த்தியது.

1943: ஒடுக்கப்பட்ட இனத்தவர்களுக்கு, அரசு வேலைகளில் 8.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

1946: ஒடுக்கப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடானது 8.5% லிருந்து 12.5% ஆக உயர்த்தப்பட்டது.

https://t.me/tnpscfree

1951ஆம் ஆண்டு அரசாணை

- முதலாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் தாக்கமாக, புதிய திருத்தம் செய்யப்பட்ட இட ஒதுக்கீடு முறை தமிழகத்தில் நடைமுறைக்கு வந்தது.

BC	SC/ST	மொத்த இட ஒதுக்கீடு
25%	15%	40%
குறிப்பு: அனைவருக்கும் பொதுவான போட்டியிடங்கள் - 60%		

4.8.1 தமிழகத்தின் முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம்

A.N. சட்டநாதன் ஆணையம், 1969

- தி.மு.க. அரசால் திரு.மு.கருணாநிதி அவர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்டது.
- **நோக்கம்:** தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோரின் நிலையை ஆராய
- **அறிக்கை:** 1970

BC	SC/ST	மொத்த இட ஒதுக்கீடு
31%	18%	49%
குறிப்பு: அனைவருக்கும் பொதுவான போட்டியிடங்கள் - 51%		

4.8.2 திரு. M.G.ராமச்சந்திரன் அவர்களின் ஆட்சியில் பிற்படுத்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீடானது 50% ஆக அதிகரிக்கப்பட்டது, 1980

BC	SC/ST	மொத்த இட ஒதுக்கீடு
50%	18%	68%
குறிப்பு: அனைவருக்கும் பொதுவான போட்டியிடங்கள் - 32%		

4.8.3 தமிழகத்தின் இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் அம்பா சங்கர் ஆணையம், 1982

- **தலைவர்:** அம்பா சங்கர்
- **நோக்கம்:** மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான (MBC/ DNC) தனி இடஒதுக்கீடு அளிப்பது குறித்து பரிந்துரைக்க.
- **நடைமுறை:** 1989
  - பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட 50% ஒதுக்கீட்டில் 20%ஐ மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு / சீர்மரபினருக்கு (MBC/ DNC) வழங்க பரிந்துரைத்தது.
  - 1989-ல், திரு.மு.கருணாநிதி தலைமையிலான திமுக அரசு இவ்வரிக்கையை நடைமுறைப் படுத்தியது.

BC	MBC	SC/ST	மொத்த இட ஒதுக்கீடு
30%	20%	18%	68%

1990: பழங்குடியின வகுப்பினருக்கு தனியாக 1% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

BC	MBC	SC	ST	மொத்த இட ஒதுக்கீடு
30%	20%	18%	1%	69%

குறிப்பு: அனைவருக்கும் பொதுவான போட்டியிடங்கள் - 31%

4.8.4 தமிழ்நாடு இட ஒதுக்கீடு சட்டம், 1994

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளை சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டம், 1993 ஆனது 69% இடஒதுக்கீட்டை உறுதி செய்தது.
- 76வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் 1994 : தமிழ்நாடு இடஒதுக்கீட்டுச் சட்டம் 1994ஐ, நீதிமன்ற மறு ஆய்விலிருந்து பாதுகாக்கும் வகையில் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்தது.
- சரத்து 15 மற்றும் 16 உட்பட பகுதி IIIஇல் உள்ள எந்தவொரு அடிப்படை உரிமைகளையும் மீறுவதாக கூறி இச்சட்டத்தைக் கேள்வி எழுப்ப முடியாது.

4.8.5 I.R. கொய்லோ Vs ஸ்டேட் ஆஃப் தமிழ்நாடு 2007

வழக்கு: சரத்து 31B ஆனது அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட சட்டங்களுக்கு வழங்கும் பாதுகாப்பின் தன்மையை ஆராய்தல்.

தீர்ப்பு

1. அடிப்படை உரிமைகளில் கூறப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்பை அழிக்கும் எந்தவொரு சட்டத்தையும், அவை ஒன்பதாவது அட்டவணையில் வைக்கப்பட்டிருந்தாலும் கூட அதனை மறுஆயவு செய்யும் அதகாரம் நீதித்துறைக்கு உண்டு.
2. 50% விதியை மீறிய தமிழ்நாடு இடஒதுக்கீட்டு முறையானது நீதிமன்ற மறுஆய்விற்கு உட்படும்.
3. ஏப்ரல் 24, 1973க்குப் பிறகு ஒன்பதாவது அட்டவணையின் கீழ் வைக்கப்பட்டுள்ள சட்டங்கள், அரசிலமைப்பு சரத்து 14, 15, 19, 21 ஆகியவற்றை அல்லது அரசிலமைப்பின் 'அடிப்படைக் கட்டமைப்புகளை' மீறினால் அவற்றை செல்லாது என அறிவிக்க நீதித்துறைக்கு அதிகாரம் உண்டு.
4. ஒரு சட்டத்தை ஒன்பதாவது அட்டவணையில் வைப்பதன் மூலம், நீதிமன்றத்தின் மறுஆய்வு அதிகாரத்தை பறிக்க முடியாது. ஏனெனில் நீதிமன்றத்தின் மறு ஆய்வு அதிகாரமானது அரசியலமைப்பின் அடிப்படை அம்சமாகும்.
5. ஏப்ரல் 24, 1973 அன்று கேசவானந்த பாரதி வழக்கின் தீர்ப்பில் 'அடிப்படை கட்டமைப்பு' என்ற கோட்பாட்டினை உச்சநீதிமன்றம் முதன்முதலில் முன்மொழிந்தது.

https://t.me/tnpscfree

4.9 சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு

- மக்களவையில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு வழங்குதல் (சரத்து 330)
- மாநில சட்டமன்றத்தில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு வழங்குதல் (சரத்து 332)
- மக்களவையில் ஆங்கிலோ - இந்திய சமூகத்தினருக்கான பிரதிநிதித்துவம் வழங்குதல் (சரத்து 331)
- மாநில சட்டமன்றத்தில் ஆங்கிலோ - இந்திய சமூகத்தினருக்கான பிரதிநிதித்துவம் வழங்குதல் (சரத்து – 333)
- பாராளுமன்றத்தில், மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் உள்ள 543 உறுப்பினர்களில் 84 (SCs) மற்றும் 47 (STs)

4.9.1 மக்களவை அரசியலமைப்பின் படி

- மக்களவையிலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 552.
- மொத்தம் 552 = 530 (மாநிலத்தின் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள்) + 20 (யூனியன் பிரதேத்தின் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள்) + 2 (குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலோ - இந்தியர்கள்)

தற்போதைய நிலை

- மொத்தம் 545 உறுப்பினர்கள்
- மொத்தம் 545 = 530 (மாநிலத்தின் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள்) + 13 (யூனியன் பிரதேத்தின் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள்) + 2 (குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலோ - இந்தியர்கள்)
- ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த இடங்கள் 131 = 84 (SCs) + 47 (SCs)

தமிழ்நாடு மக்களவையில் பிரதிநிதித்துவம்

- மக்களவையில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்கள் - 39.
- பட்டியலினத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த இடங்கள் = 7 (SCs)
  - குறிப்பு : மக்களவைக்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு தமிழ்நாட்டுக்கு இல்லை.

4.9.2 தமிழக மாநில சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம்

- அவையிலுள்ள மொத்த இடங்கள் - 235
- அவையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை - 234

- அவையிலுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை - 1 (ஆங்கிலோ இந்தியன்)
- SCக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் - 44
- STக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் - 02

- தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் ஆந்திர மாநில உள்ளூர் மாநில வேலைவாய்ப்பு சட்டம் 2019, ஆனது தனியார் நிறுவனங்களில் மற்றும் தொழிற்சாலைகள் 75% வேலைவாய்ப்பை உள்ளூர் மக்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும்.

4.9.3 உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு

- 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1992ஆனது உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்கிறது.
- அரசியலமைப்பு சரத்து 243Dஆனது கிராம பஞ்சாயத்துகளில், SC, ST மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்குகிறது.
- அரசியலமைப்பு சரத்து 243Tஆனது நகராட்சிகளில், SC, STமற்றும்பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்குகிறது.
- பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 50% ஆக அதிகரிக்கும் மசோதா 2009இல் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் 15வது மக்களவை கலைந்ததால் இம்மசோதா காலாவதியானது.
- மார்ச் 2016இல், அரசானது உள்ளாட்சி

BBC தமிழ்

இட ஒதுக்கீடு சர்ச்சை 2020 : உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

மாநில அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு கட்டாயம் இல்லையென்றும் பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு என்பது அடிப்படை உரிமை இல்லையென்றும், உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு தேசிய அளவில் இட ஒதுக்கீடு தொடர்பான விவாதங்களை மீண்டும் தீவிரமாக எழுப்பியுள்ளது.

2001ஆம் ஆண்டு உத்தரகண்ட் மாநிலம் உருவானபோது அம்மாநிலத்திற்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டது. அதன்படி தாழ்த்தப்பட்டோருக்கு 19% இட ஒதுக்கீடும் மலைவாழ் மற்றும் பழங்குடியினருக்கு 2 சதவீத இட ஒதுக்கீடும் வழங்க முடிவெடுக்கப்பட்டது.

அதனை எதிர்த்து சிலர் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கில் தீர்ப்பளித்த உத்தரகண்ட் மாநில உயர்நீதிமன்றம் 'பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்குவதா, இல்லையா என்பதை முடிவு செய்வதற்கு முன்பு குறிப்பிட்ட பிரிவினர் போதிய அளவில் அரசுப் பணிகளில் பிரதிநிதித்தும் பெறவில்லை என்பதை புள்ளிவிவரங்களின் மூலம் உறுதிசெய்ய வேண்டும். அதனை எப்போது வேண்டுமானாலும் நீதிமன்றம் ஆராயும்' என்று கூறியது.

இதையடுத்து புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அறிக்கை ஒன்றையும் அளித்தது. அதன்படி, எஸ்சி/எஸ்டி பிரிவினர் அரசுப் பணிகளில் போதுமான அளவில் இல்லையென அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இருந்தபோதும் அப்போதைய மாநில அரசு (காங்கிரஸ்) பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிப்பது இல்லை என்ற முடிவை மேற்கொண்டது.

இதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்த உத்தரகண்ட் உயர்நீதிமன்றம், அரசின் முடிவை ரத்துசெய்தது. மேலும், எஸ்சி-எஸ்டி பிரிவினர் பின்தங்கியிருக்கிறார்களா என்பதை நிரூபிக்க தகவல்களைச் சேகரிக்க வேண்டியதில்லை என்றும் தீர்ப்பளித்தது. நியமனங்களில் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும்படி கூறியது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்போதைய மாநில அரசு (பா.ஜ.க.) உயர் நீதிமன்றத்தில் சீராய்வு

https://t.me/tnpscfree

அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவை மாநில அரசு நிறைவேற்றியது.

- தற்போது, இந்த 50% இடஒதுக்கீடு முறையானது 14 மாநிலங்களில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறையில் உள்ளது மற்றும் 17 மாநிலங்களில் உள்ள கிராம உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறையில் உள்ளது.
- 2016 வரை, தமிழகத்தில் 33% இடங்கள் மட்டுமே பெண்களுக்கு ஒதுக்கப்பட்டன. பிப்ரவரி 21, 2016 முதல் தமிழக அரசு பெண்களுக்கான 50% இடஒதுக்கீடு முறையை அமல்படுத்தியது.
- இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கும் 17வது மாநிலம் தமிழ்நாடு திகழ்கிறது .
- **குறிப்பு:** தமிழ்நாடு பஞ்சாயத்து விதிமுறை, 1995 அடிப்படையில் SC, ST மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழக மாநிலம் வழங்குகிறது.

4.10 சமீபத்திய மாற்றங்கள்

126வது சட்டதிருத்த மசோதாவும் சரத்து 334இன் திருத்தம்

- சமீபத்தில் பாராளுமன்றமானது, மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் SC, ST மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஜனவரி 25, 2030வரை நீட்டிப்பதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

மனுவைத் தாக்கல் செய்தது. அதில் வழங்கப்பட்ட தீர்ப்பில், மாநில அரசு எந்தப் பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு வழங்குவது என்பது கட்டாயமல்ல என்றும் அரசமைப்புச் சட்டத்தின் 16 (4) பிரிவு, இட ஒதுக்கீடு வழங்க வழிசெய்யும் பிரிவே தவிர, கட்டாயமாக்கும் பிரிவு அல்ல என்றும் கூறியது.

மேலும் ஒரு பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு முன்பாக, அவர்கள் போதுமான அளவில் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லையென்பதை நிரூபிப்பதற்கான தகவல்களை சேகரிக்க வேண்டுமென்றும் கூறியது.

இதனை எதிர்த்து உச்சநீதின்றத்தில் செய்யப்பட்ட மேல் முறையீட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.



"இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென மாநில அரசுகளுக்கு எந்தக் கட்டாயமும் இல்லை. பதவி உயர்வுகளில் தனக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதை எந்தத் தனிநபரும் அடிப்படை உரிமையாகக் கோர முடியாது. இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என எந்த ஒரு கட்டளையையும் நீதிமன்றங்கள் மாநில அரசுகளுக்குப் பிறப்பிக்க முடியாது" என உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறது.

இட ஒதுக்கீடு வழங்குவதை வரையறுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 16 (4), 16 (4-A) ஆகியவை இட ஒதுக்கீட்டில் பதவி உயர்வு என்பதை அடிப்படை உரிமையாக வரையறுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது. எஸ்டி, எஸ்சி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அரசாங்கப் பணியில் போதுமான அளவில் இல்லையென மாநில அரசு கருதினால், பணி நியமனத்தின்போதும் பதவி உயர்வின்போதும் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு ஏதுவாக மட்டுமே இந்தப் பிரிவுகள் இருக்கின்றன என்றும் கூறியுள்ளது.

குறிப்பிட்ட பிரிவினருக்கு சரியான அளவில் பிரதிநிதித்துவம் இருக்கிறதா என்பதை மாநில அரசுதான் முடிவுசெய்யும் என்றும் தேவைப்பட்டால் இட ஒதுக்கீடு வழங்கும் உரிமை மாநில அரசுக்கு இருக்கிறதென்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

- மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் SC மற்றும் ST க்கான இட ஒதுக்கீடு மற்றும் ஆங்கிலோ இந்தியர்களுக்காக பணி நியமனங்கள் குறித்து அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 70 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.
- 126வது திருத்த மசோதாவானது, ஆங்கிலோ இந்தியவர்களின் நியமனத்தை நீட்டிப்பது குறிப்பிடாததால், ஆங்கிலோ இந்தியர்களுக்கான இந்த சிறப்பம்சம் ஜனவரி 25, 2020 உடன் முடிவுக்கு வந்தது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள்


தமிழ்நாட்டில் இருக்கும் உள்ளாட்சி அமைப்புகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாநகராட்சிகள்	–	15
நகராட்சிகள்	–	148
பேரூராட்சிகள்	–	561
ஊராட்சிகள்	–	12,618
ஊராட்சி ஒன்றியங்கள்	–	385
மாவட்ட ஊராட்சிகள்	–	32

இதில், மாநகராட்சி மேயர்-துணை மேயர், நகராட்சி தலைவர்-துணைத் தலைவர், பேரூராட்சி தலைவர்-துணைத் தலைவர், மாவட்ட பஞ்சாயத்து தலைவர்-துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்-துணைத் தலைவர் ஆகிய பதவிகளுக்கு மறைமுக தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி தேர்தல் நடைபெறும் பதவிகள் மற்றும் அதன் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

நகர்ப்புறம்		
மாநகராட்சி வார்டு உறுப்பினர்கள்	–	1,064
நகராட்சி வார்டு உறுப்பினர்கள்	–	3,468
பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள்	–	8,288
ஊரகம்		
மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	–	655
ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்	–	6,471
ஊராட்சி தலைவர்கள்	–	12,524
ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	–	99,324



சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

– குறள் 118

விளக்கம்:

முன்னே தாம் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாக சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

https://t.me/tnpscfree

மாதிரி வினாக்கள்

1. தமிழக இடஒதுக்கீட்டுச் சட்டம் - 1994 எந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது?
   (A) 76வது திருத்தம் (B) 78வது திருத்தம்
   (C) 77வது திருத்தம் (D) 79வது திருத்தம்

2. இந்திய அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை பாதுகாக்கும் சரத்து எது?
   (A) சரத்து - 31A (B) சரத்து - 31B
   (C) சரத்து - 31C (D) A மற்றும் B

3. பழங்குடியின சமூகத்திற்கு தனியாக ஒரு சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டு எது?
   (A) 1990 (B) 1994
   (C) 1997 (D) 2007

4. இந்திய அரசின் கீழ் உள்ள பதவிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் மண்டல் குழுவின் பரிந்துரைகளை அரசு செயல்படுத்திய போது இந்தியாவின் பிரதமராக இருந்தவர் யார்?
   (A) திரு. ராஜீவ் காந்தி (B) திரு. மொரார்ஜி தேசாய்
   (C) திரு. வி.பி. சிங் (D) திரு. சந்திரசேகர்

5. இட ஒதுக்கீட்டு கொள்கை மூலம்
   (A) உயர்த்துதல் (B) மேம்படுத்துதல்
   (C) நீதி வழங்குதல் (D) மேற்கண்ட அனைத்தும்

விடைகள்

1	2	3	4	5
A	B	A	C	D

அத்தியாயம் 5

தமிழகத்தின் பொருளாதாரப் போக்குகள்

"மனிதவள மேம்பாட்டில் முதலீடு செய்யாமல் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சி என்பது நியாமானதாகவோ, நீடித்து நிலைக்கக் கூடியதாகவோ இருக்காது" **அமர்த்தியா சென்**

5.1 தமிழ்நாடு

- தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரம். சேவை மற்றும் உற்பத்தி துறைகளில் புதுமை அறிமுகம் செய்ததில் வலிமை மிகுந்த மாநிலமாக விளங்குகிறது.
- சுகாதாரம் மற்றும் சுற்றுலா துறைகளில் மக்களை ஈர்ப்பத்தில் முதன்மை மாநிலமாகவும் மேலும் தனது தொன்மையான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பரப்புவதில் மேன்மை வாய்ந்த மாநிலமாகவும் திகழ்கிறது.

5.1.1 பொருளாதார போக்கு

- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP): தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி (தற்போதைய விலைவில்) 2013-14 முதல் 2017-18 வரையிலான காலப்பகுதியில் 10.2% வீதத்தில் அதிகரித்துள்ளது. (GSDP - 8.55%)
- நீர்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு (38%), போக்குவரத்து (28%) மற்றும் ஆற்றல் (18%) துறைகளில் அதிக அளவு மானிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரக வளர்ச்சி, சமூக நலன் மற்றும் ஊட்டச்சத்துக்கான மானிய ஒதுக்கீடு குறைந்துள்ளது.
- **துறைகள் :** 2017-18ஆம் ஆண்டில் மொத்த மதிப்பு சேர்ப்பில் (Gross Added Value)ல் முறையே 13%, 34% மற்றும் 53% பங்களிப்பு வழங்கியுள்ளது. மேலும் இத்துறைகள் 22%, 10% மற்றும் 11% முறையே வளர்ச்சி பெற்றுள்ளது.
- தனிநபரின் மொத்த உள்மாநில உற்பத்தி ஜிஎஸ்டிபி (GSDP) 2017-18ஆம் ஆண்டுகளில் (தற்போதைய விலையில்) வருடாந்திர தனிநபர் ₹1,86,125 ஆகும். இது 2016-17 ஆம் ஆண்டை விட (₹1,67,240) 11% அதிகம்.

https://t.me/tnpscfree

5.1.2 விவசாயம் மற்றும் கால்நடைகளின் அந்தஸ்து

தமிழ்நாட்டின் வாழ்வாதாரத்தில் விவசாயம் மற்றும் அதன் துணை துறைகள் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. பெருமளவிலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மையில் வேலைவாய்ப்பு வழங்குகிறது. இதில் 93% சிறு மற்றும் குறு நில விவசாயிகள் ஆவர். மேலும் 65%க்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக இத்துறையை சாரந்தே உள்ளனர். தமிழகத்தில் வேளாண்மைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே ஒரு வலுவான தொடர்பு உள்ளது.

5.1.3 வேளாண்மை மற்றும் உணவுப்பதப்படுத்தும் தொழில்

இந்திய அளவில் தமிழ்நாடானது,

- கோழி இறைச்சி மற்றும் பால் பொருள்கள் உற்பத்தியில் - 2வது இடம்
- தேங்காய் உற்பத்தியில் - 2வது இடம்
- தேயிலை மற்றும் காபி உற்பத்தியில் - 3வது இடம்
- பழங்கள் உற்பத்தில் - 7வது இடம்

வேளாண் மண்டல மசோதா

- காவிரி ஆற்றுப்படுகை மண்டலமானது தமிழகத்தின் நெற்களஞ்சியமாக கருதப்படுகிறது. இது, மாநிலத்தில் உணவு தானிய மற்றும் பிற வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியில் பெரும் பங்கு வகிப்பதுடன் மாநிலத்துக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்கிறது.
- சமீபகால ஆண்டுகளில் சில வேளாண்மை சாராத நடவடிக்கைகள், இம்மண்டலத்தில் வேளாண்மையை எதிர்விளைவாக பாதித்து, மாநில உணவு பாதுகாப்பை அச்சுறுத்துகிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட்டு உள்ளது.
- இம்மண்டலத்தில் வேளாண்மையை பாதுகாக்கும் பொருட்டு, சில நடவடிக்கைகளை தடை செய்ய தீர்மானிக்கப்பட்டு உள்ளது. கூடுதலாக விவசாயிகளின் நலனுக்காக சேவை செய்தற்கும், பண்ணை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும், பண்ணை நடவடிக்கைகளை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவற்கும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் உயர்மட்ட குழு ஒன்றினை அமைக்கவும் இந்த சட்ட முன் வடிவு விழைகிறது.

தமிழ்நாட்டின் துறை வாரியான செலவினங்கள்

துறைகள்	செலவு (%)
கல்வி	14.7%
சுகாதாரம்	5.1%
வேளாண்மை மற்றும் வேளாண்மைசார் நடவடிக்கை	6.3%
ஊரக வளர்ச்சி	2.6%
சாலைகள் மற்றும் பாலங்கள்	4.8%
ஆற்றல்	4.0%

5.2 போக்குவரத்து

- தமிழ்நாடு போக்குவரத்தானது மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் இணைக்கக்கூடிய அளவிற்கு சிறிய முறையில் நிறுவப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்காக தமிழகப் போக்குவரத்து ஒரு பகுதியாக அமைகிறது.
- நாட்டின் நகர்புற மையங்கள், விவசாய சந்தை இடங்கள் மற்றும் கிராமப்புற வாழ்விடங்களிடையே இணைப்பை ஏற்படுத்துகிறது.

5.2.1 சாலை வழிகள்

- மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இது 5036 கி.மீ. (3129 மைல்) தொலைவை உள்ளடக்கியது.
- இவை மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்படுகிறது.
- வடதென் பகுதிகளை இணைக்கும் சாலைகள் (NH 44)-தமிழகத்தின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை, ஸ்ரீநகர் - கன்னியாகுமரியை இணைக்கிறது (3745 கி.மீ).
- NH 785: தமிழ் நாட்டின் மிக குறைவான நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலை மதுரை முதல் நத்தம் வரை செல்கிறது (38 கி.மீ.).
- தமிழ்நாட்டின் மிகப்பெரிய பேருந்து முனையம் சென்னை கோயம்பேடு (CMBT) பேருந்து முனையம் ஆகும்.

5.2.2 இரயில் போக்குவரத்து

- தமிழ்நாட்டின் முதல் இரயில் போக்குவரத்து 1856-ல் சென்னை முதல் அரக்கோணம் வரை அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடானது, தெற்கு இரயில்வேயின் நன்கு மேம்படுத்தப்பட்ட ஒரு பகுதியாக உள்ளது.
- **தெற்கு ரயில்வே:** தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகாவின் சில பகுதிகள் மற்றும் ஆந்திர பிரதேசத்தை உள்ளடக்கியது. இதன் தலைமையிடம் - சென்னை.
- தமிழ்நாட்டின் விரிவான ரயில்வே வலைபின்னல் 4180 கி.மீ. நீளத்தைக் கொண்டுள்ளது. இது 1000 சதுர கி.மீட்டருக்கு 32.2 கி.மீ. அடர்த்தி கொண்டது.
- தமிழ்நாட்டின் மொத்த இரயில் பாதையின் நீளம் 6,693 கி.மீ. ஆகும். 690 இரயில்வே நிலையங்கள் உள்ளன.
- **முக்கிய ரயில் நிலையங்கள்:** சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி.
- **மெட்ரோ இரயில்வே அமைப்பு:** சென்னை புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. தற்பொழுது மெட்ரோ இரயில்வே அமைப்பு, மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்தை விரிவாக்கம் செய்து வருகிறது.

https://t.me/tnpscfree

- சென்னை மெட்ரோ ரயில் திட்டம் முதல் கட்டம் - 45 கி.மீ. வரை செயல்பட்டு வருகிறது.
- சென்னை மெட்ரோ ரயில் திட்டம் இரண்டாம் கட்டம் - 118.9 கி.மீ. உள்ளடக்கிய அமைப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

5.2.3 வான்வழி போக்குவரத்து

- தமிழ்நாட்டில், நான்கு பிரதான சர்வதேச விமான நிலையங்கள் மற்றும் இரண்டு உள்நாட்டு விமான நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் 500 இடைநில்லா விமானங்களுடன் 27 நாடுகளை இணைக்கிறது.

சென்னை சர்வதேச விமான நிலையம்

- மும்பை, சென்னை, பெங்களூரு அடுத்து இந்தியாவின் நான்காவது பரபரப்பான விமான நிலையமாக உள்ளது. இது ஆண்டிற்கு 10% அதிகமான பயனாளிகள் போக்குவரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தியாவில், சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான முனையங்களை அருகருகே கொண்ட முதல் விமான நிலையம், சென்னை சர்வதேச விமான நிலையம் ஆகும்.

- **பிற சர்வதேச விமான நிலையங்கள்:** கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி.
- **உள்நாட்டு விமான நிலையங்கள்:** தூத்துக்குடி, சேலம்.
- தொழிற்துறையின் அதீத வளர்ச்சியானது பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகியவை வருடத்திற்கு 21.3% அதிகரித்துள்ளது.

5.2.4 துறைமுகங்கள்

1. முக்கிய துறைமுகங்கள்:

- மூன்று முக்கிய துறைமுகங்கள் – அவை: 1. சென்னை, 2. எண்ணூர், 3. தூத்துக்குடி.

சென்னை துறைமுகம்:

- இந்தியாவின் மூன்றாவது மற்றும் மிகப்பழமையான துறைமுகம் ஆகும்.
- சரக்கு பெட்டகங்களை கையாளுவதில் நாட்டில் மும்பை நேவா ஷேவா துறைமுகத்துக்கு அடுத்து, இரண்டாவது பெரிய துறைமுகமாக உள்ளது.
- கிழக்கு கடற்கரையின் கார்கள், பெரிய சரக்கு பெட்டகங்கள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கான மையமாக விளங்குகிறது.
- பல்வேறு சரக்கு பெட்டகங்கள், வாகனங்கள், உரங்கள், நிலக்கரி மற்றும் பெட்ரோலிய பொருட்களை கையாளுகின்றன.
- **சிறப்பம்சங்கள்:** உள்நாட்டு துறைமுக இணைப்பு – குழாய்வழி மற்றும் இரயில்வே முனையம்வழி

எண்ணூர் துறைமுகம்

- இடைநிலை துறைமுகம் எண்ணூர் சமீபத்தில் பெரிய துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு தமிழகத்தில் அதிக நிலக்கரி மற்றும் தாதுக்களைக் கையாளும் துறைமுகமாக உள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நிலக்கரி மற்றும் தாது போக்குவரத்தையும் கையாளுகிறது.

தூத்துக்குடி துறைமுகம்

- செயற்கையான ஆழ்கடல் துறைமுகமாகும்.
- தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய துறைமுகம் மற்றும் இந்தியாவில் மிகப்பெரிய சரக்கு பெட்டக முனையங்களில் ஒன்றாகும்.
- வங்காள விரிகுடாவின், கடல் வழி வர்த்தகம், முத்தெடுத்தல் மற்றும் மீன் பிடிப்பதற்கான சிறந்த துறைமுகமாகும்.
- சேதுசமுத்திர கப்பல் கால்வாய் திட்டம் மூலம் இந்த துறைமுகத்தை, சிங்கப்பூர் மற்றும் கொழும்பு போன்ற கப்பல்களிலிருந்து பொருளை பரிமாற்றுதல் மையமாக மாற்றப்பட்டது.

2. சிறு துறைமுகங்கள்

- தமிழ் நாட்டில் 23 சிறிய துறைமுகங்கள் உள்ளன.
- இது 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஆண்டுதோறும் கையாளுகிறது.
- அனைத்து சிறு துறைமுகங்களும் சென்னை துறைமுகத்திலுள்ள கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

3. இடைநிலை துறைமுகம்

- **நாகப்பட்டினம் துறைமுகம்:** வங்காள விரிகுடா கடற்கரையில் அமைந்துள்ள ஒரு இயற்கை துறைமுகமாகும்.

சேதுசமுத்திர கப்பல் கால்வாய் திட்டம் – 1997

- இத்திட்டம், இந்தியா மற்றும் இலங்கைக்கும் இடையில் ஒரு கப்பல் பாதையை உருவாக்க முன்மொழியப்பட்ட திட்டமாகும்.
- இந்த திட்டம் இந்திய தீபகற்பத்தை சுற்றி தொடர்ச்சியாக பயணிக்கும் கடல் வழியை வழங்குகின்றது.

5.3 ஆற்றல்

5.3.1 இந்தியாவில் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் திறன்

- நிறுவப்பட்ட மின் உற்பத்தி திறன், 40% சுத்தமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது.
- 2022ஆம் ஆண்டிற்குள் 175 GW, புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி திறன் நிறுவப்பட உள்ளது.

https://t.me/tnpscfree

- இவற்றில் சூரிய சக்தியில் இருந்து 100 ஜிகாவாட்டும், காற்றாற்றிலிருந்து 60 ஜிகாவாட்டும், உயிர் சக்தியிலிருந்து 10 ஜிகாவாட் மட்டும், சிறிய நீர்மின் சக்தியிலிருந்து 5 ஜிகாவாட் மட்டும் நிறுவப்பட்டுள்ளது (69 ஜிகாவாட்டை ஏற்கேனவே அடைந்துவிட்டது).
- இந்தியா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் உலகளாவிய அளவில் 5-வது நிலையை கொண்டுள்ளது.
- மொத்த மின் உற்பத்தியில் காற்று ஆற்றலின் நிகர பங்கின் உலகளாவிய ரீதியில் தமிழ்நாடு 9-வது இடத்தில் உள்ளது.
- இதில் காற்று சக்தி 4-வது நிலை மற்றும் சூரிய சக்தி 5-வது நிலையிலும் உள்ளது.
- 11,113 மெகாவாட் திறனுடன் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி துறையில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய (1500 MW) திறன் கொண்ட காற்றாலை அமைப்பு கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் அமைந்துள்ளது.

5.3.2 புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி அமைச்சகத்தின் சூரிய ஆற்றல் முயற்சிகள் (MNRE)

1. குறைந்த சூரிய சுங்கவரி

- ரூபாய் 2.44/யூனிட்

2. ஜவஹர்லால் நேரு தேசிய சோலார் திட்டம் (JNNSM) – **2009.**

- 2022-ஆம் ஆண்டளவில் 100 GW சூரிய மின்சக்தி திறனை 6,00,000 கோடி முதலீட்டில் உருவாக்குதல்.
- 40 GW மேற்கூரை மற்றும் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான கட்டத்தின் மூலம் 60 GW -ஐ அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

3. சோலார் பூங்காக்கள் மற்றும் அல்ட்ரா மெகா மின் நிலையம் – 2014

- சூரிய மின் திட்டத்தில் சூரிய தட்டுகள் இணைப்பினை நிறுவுவதை வேகப்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- இத்திட்டத்தால் பெரிய அளவிலான மின்சார உற்பத்தியை ஏற்படுத்துதல்.
- 2019-20ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 40 ஜிகாவாட் சோலார் மின்சக்தி திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

4. சோலார் நகர திட்டத்திற்கான வளர்ச்சி (2012-17)

- ஐந்து வருடம் முடிவில் மரபுசாரா ஆற்றலின் தேவையை குறைந்தது 10% குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை வழங்குதல் மற்றும் ஆற்றல் திறன் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

5. சூரியமித்ரா திறன் மேம்பாட்டு திட்டம்

- கிராமப்புற (ம) நகர்ப்புற இளைஞர்களில் 50,000 பேருக்கு சூரிய ஒளி மின்னமுத்த தொழில்நுட்ப வல்லுநர்களால் மார்ச் 2020 முதல் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- மத்திய புதிய மறறும் புதுப்பிக்க கூடிய எரிசக்தி அமைச்சகம் 100% நிதியுதவி அளிக்கிறது. தேசிய ஆற்றல் நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்தப்படுகின்றது.

6. சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு (ISA) 2016

- அனைவருக்கும் தூய்மையான மற்றும் மலிவான ஆற்றலை வழங்கும் இந்திய தொலைநோக்கு திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

7. கிசான் வர்ஜா சுரக்ஷா இவாம் உத்தான் மகாபியான் (KUSUM) - 2019

- விவசாயிகளுக்கு நிதி மற்றும் நீர் பாதுகாப்பை வழங்குதல்.
- 2022-ம் ஆண்டு 25,750 மெகாவாட் சூரிய ஆற்றல் திறனை அதிகரித்தல் இதன் நோக்கமாகும்.

5.3.3 தேசிய காற்று - சூரிய கலப்பு கொள்கை - 2018

- **இலக்கு:** 2022-ம் ஆண்டிற்குள் 60 GW காற்று ஆற்றல் உற்பத்தி.
- குறிக்கோள்: பெரிய அளவிலான காற்றாலை - சூரிய சக்தி கலப்பு போட்டோவோல்டாயிக் முறையை ஊக்குவித்தல்.
- ஆழ்க்கடல் காற்றாலை திறனை 2022 ஆண்டிற்குள் 5 ஜிகாவாட்டும் 2030-ம் ஆண்டிற்குள் 30 ஜிகாவாட்டும் தேசிய இலக்காகாக அதிகரித்தலை அறிவித்தல்
- காற்று விசை சுழலிகள் மற்றும் உபகரணங்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் பிரேசில் நாடுகளுக்கும் மற்ற ஆசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- காற்றாலைத் துறையில் வலுவான உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 70-80 % உள்நாட்டு தயாரப்பு மூலம் ஏற்கனவே அடைந்துவிட்டோம்.

5.3.4 தமிழ்நாட்டின் ஆற்றல் துறை

- தென்னிந்திய மாநிலங்களில் மின்சார உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மற்ற இந்திய மாநிலங்களை விட நிறுவப்பட்ட திறனில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

தரம்	மாநிலம்	முதலிடம்
I	தமிழ்நாடு	26,865 MW
II	கர்நாடகா	18,641 MW
III	ஆந்திர பிரதேசம்	17,289 MW
IV	தெலுங்கானா	12,691 MW
V	கேரளா	4,141 MW

https://t.me/tnpscfree

1) காற்று ஆற்றல்

- தமிழ்நாடு மிக அதிகமாக நிறுவப்பட்ட காற்று ஆற்றல் திறன் கொண்டது மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல்துறையில் இந்திய அளவில் முன்னிலையில் உள்ளது.
- மொத்த மின் உற்பத்தியில் காற்று ஆற்றலின் நிகர பங்கில் உலகளாவிய ரீதியில் 9வது இடத்தில் உள்ளது.
- முப்பந்தல் காற்றாலை பண்ணை ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளமாகும். கிராம மக்களின் வேலைகளுக்கான மின்சாரத்தை வழங்குகிறது.
- மாநிலத்தில் திருநெல்வேலி கடற்கரை, தூத்துக்குடியின் தெற்கு பகுதி, இராமேஸ்வரக் கடற்கரை ஆகிய இடங்களில் ஆழ்கடல் காற்றாலை மின்சக்தி திறன் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.
- **காற்று பண்ணைகள்:** நாகர்கோவில், தூத்துக்குடி, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, தாராபுரம், உடுமலைப்பேட்டை.

நிறுவப்பட்ட மொத்த திறன்

இந்தியா	தமிழ்நாடு
11,1113 MW	8,152 MW

2) சூரிய ஆற்றல்

- சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.
- சூரிய மின் திட்டங்களை மேம்படுத்துவதில் மிகவும் பொருத்தமான பிராந்தியங்களில் தென் தமிழ்நாடும் ஒன்று.
- தமிழ்நாட்டில் 2,034 MW சூரிய மின்சக்தி திறன் நிறுவப்பட்டுள்ளது.
- 2017-18 க்குள் 2,905 மில்லியன் யூனிட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தரம்	மாநிலம்	மொத்த திறன் MW (2017)
1.	தமிழ்நாடு	1590.97
2.	ராஜஸ்தான்	1317.64
3.	குஜராத்	1159.76
4.	தெலுங்கானா	1073.41
5.	ஆந்திர பிரதேசம்	979.65

3) அணு ஆற்றல்

- கல்பாக்கம் அணு சக்தி ஆலை மற்றும் கூடங்குளம் அணுசக்தி ஆலை ஆகியவை அதிக ஆற்றல் சக்தி உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

யூனிட்ஸ்	நிறுவப்பட்ட திறன் (2018)
கூடங்குளம்	1834 MW
கல்பாக்கம்	470 MW

4) நீர் ஆற்றல்

- தமிழ்நாட்டில் 20 நீர்மின் சக்தி ஆலைகள் உள்ளன.
- அவை: குந்தா, மேட்டூர், பெரியார், மரவாக்கண்டி, பார்ஸன் பள்ளத்தாக்கு போன்றவை.
- அணைகளின் முக்கியத்துவம்: நீர் பாசனம், மின் உற்பத்தி, குடிநீர் [எ.கா.) - வைகை மற்றும் மேட்டூர் அணை]

5) அனல்மின் சக்தி ஆற்றல்

- தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஆற்றல் ஆதாரங்களில் அனல்மின் சக்தியின் பங்கு மிகவும் அதிகமாக உள்ளது.
- **அனல்மின் நிலையங்கள்:** அத்திப்பட்டு (வடசென்னை), எண்ணூர், மேட்டூர், நெய்வேலி, தூத்துக்குடி.

பல்வேறு மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யும் மின்சக்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

மூலங்கள்	மில்லியன் யூனிட்ஸ்	(%)
வெப்பம்	13304	49.52
நீர்	2203	8.20
அணு	986	3.67
மற்றவை (காற்று, சூரிய ஆற்றல்)	10372	38.61
மொத்தம்	26865	100.00

6. பயோ - டீசல்

- உயிரி எரிபொருள் மூலமாக ஜட்ரபோ பயிர்களை பயன்படுத்துவதற்கும், இந்த பயிர்களை விளைவிக்க ஏழை விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை விநியோகிக்கவும் ஒரு முறையான பயோ டீசல் கொள்கையை கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே.

7. உயிரி சக்தி

- தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்து பெறப்படும் உயிரின கழிவுகளிலிருந்து உயிரி சக்தி உருவாகிறது.
- சூரியனில் இருந்து ஆற்றலைப் சேமித்து பின்பு எரிக்கப்பட்டு வெப்பத்தை வெளியிடுகிறது.

https://t.me/tnpscfree

5.3.5 தமிழ்நாட்டு ஆற்றல் மேம்பாட்டு முகமை (TEDA) - 1985


- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவம் மற்றும் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு ஆற்றல் மேம்பாட்டு முகமை (TEDA) எனும் தனி நிறுவனத்தை அமைத்துள்ளது.

நோக்கம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க மூல ஆற்றலை பயன்படுத்த ஊக்குவித்தல் மற்றும அதனை செயல்படுத்துதல்.
- ஆற்றல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஊக்குவித்தல்.

அமரிக்காவின் அற்றல் மூலங்களின் பொருளாதாரம் மற்றும் நிதியியல் பகுப்பாய்வு நிறுவனத்தின் (IEEFA) அறிக்கையின்படி,

உலகளாவிய புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மாற்றத்தை வழிநடத்தும் ஒன்பது சந்தைகள்



- தமிழ்நாடு உலகின் ஒன்பது மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மின் உற்பத்தி சந்தைகளில் ஒன்றாகும். இந்த அறிக்கையில் இடம்பெற்ற ஒரே ஆசிய பகுதி தமிழகம் மட்டுமே.
- தமிழகம் மாநில மொத்த மின் தேவையில் 14%-ஐ புதுப்பித்தக்க ஆற்றலிருந்தே பூர்த்தி செய்கிறது.

5.4 தொழிற்துறை

- மூலப்பொருட்களை இயந்திரங்களின் மூலம் உற்பத்திப் பொருட்களாகவோ அல்லது பயன்படுத்தக் கூடிய பொருட்களாகவோ மாற்றப்படும் இடமே தொழிலகங்களாகும்.
- பருத்தி நெசவாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிலகம், சிமெண்ட் ஆலை, மின்சாதனப் பொருட்கள் உற்பத்தி ஆலை, வாகன உதிரிபாகங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தொழிலகங்கள் ஆகும்.

1) ஜவுளி தொழில்கள்

- தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும்.
- தமிழ்நாடு இந்தியாவின் 'நூல் கிண்ணம்' என அழைக்கப்படுகிறது. இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் 41 சதவீத நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நூல் சீனா, பங்களாதேசம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.
- இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறையின் பங்கு.
  - நேரடி வேலைவாய்ப்பு
  - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4%.
  - மொத்த ஏற்றுமதியில் வருவாயில் 35%
  - உற்பத்தித்துறையில் 14% பங்களிப்பு
  - இந்தியாவில் 1/3 பங்கை ஜவுளி வணிகம் மேற்கொள்கிறது.
- நூல் நூற்பிலிருந்து ஆடைத் தயாரிப்பு ஜவுளிகளுக்கான உற்பத்தித் தொடர்புயை அனைத்து வசதிகளும் தமிழ்நாட்டில் உள்ளன.
- பரவல்: கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், பல்லடம், கரூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, ஈரோடு.
- திருப்பூர் பின்னலாடைகளின் நகரம் என்றழைக்கப்படுகிறது, கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.
- தமிழ்நாடு தரம்:
  - பருத்தி நூல் உற்பத்தியில் முதலிடம்.
  - பருத்தி நூல் ஏற்றுமதியில் இரண்டாமிடம்.
  - பாலியஸ்டர் நூல் உற்பத்தியில் இரண்டாமிடம்.
- கரூர் ஜவுளி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. (திரை சீலைகள், படுக்கை விரிப்புகள், சமயலறை விரிப்புகள், கழிவறை விரிப்புகள், மேஜை விரிப்புகள் மற்றும் சுவர் அலங்காரங்கள்) இந்தியாவின் ஜவுளி உற்பத்தியில் முக்கியமான ஏற்றுமதி மையமாக விளங்குகிறது.

ஈரோடு

- ஈரோடு மாவட்டம் தென்னிந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ளது.
- தமிழ்நாட்டின் உள்ள ஈரோடு கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகளின் விற்பனைக்கு புகழ்பெற்றது.

2) தோல் தொழிற்சாலை

- தமிழ்நாடு, காலணிகள், தோல் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் 36% பங்களிப்பையும்,தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 30 சதவீதமும், தோல் பொருட்கள் தயாரிப்பில்

https://t.me/tnpscfree

70% சவீதத்தையும் கொண்டுள்ளது.

- நூற்றுக்கணக்கான தோல் பொருட்கள் மற்றும் பதனிடும் தொழிற்சாலைகள் வேலூர், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ளன.
- உற்பத்தி செய்யப்பட்ட தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியில் 37% பங்களிப்புடன் வேலூர் முதன்மை மாவட்டமாக விளங்குகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி சென்னையில் நடைபெறுகின்றது.

3) காகித தொழிற்சாலை – தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதம் நிறுவனம் (TNPL) - 1979

- கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் செய்தித்தாள்,அச்சுக்காகிதம் மற்றும் எழுதப் பயன்படும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது.
- TNPL உலகளவில் திறன் படைத்த ஆலைகளில் ஒன்றாகும். இவ்வாலை கரும்புச்சக்கை மற்றும் மரக்கழிவுகளிலிருந்து பலவகையான காகிதங்களை சிறந்த தரத்துடன் உற்பத்தி செய்கின்றன.
- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புக்காதுரை, பவானிசாகர், பள்ளிபாளையம், பிரமத்திவேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, கொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மா தேவி ஆகியன மாநிலத்தில் உள்ள மற்ற காகித ஆலைகளாகும்.

4) இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனங்கள்

- பெட்ரோலியம், இராசாயனங்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் முதலீட்டு மண்டலம் (PCPIR) கடலூர் மற்றும் நாகப்பட்டின மாவட்டத்திலுள்ள ட்ரொன்பீல்டு பகுதிகளில் அமைக்க தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகத்தால் (TIDCO) நிறுவப்படும்.
- இராசாயண உற்பத்தியில் சென்னைக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் முக்கியமான நெகிழி / பாலிமர் ஆராய்ச்சி நிறுவனம் / பாலிமர்களின் மேம்பட்ட ஆராய்ச்சிக்கான பள்ளிகளாக உள்ளது.
- 10 லட்சத்திற்கும் மேம்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் 8000த்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பாலிமர் தொழில் சுற்றுச்சூழல் இல்லம் நிறுவப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த வேதியியல் உற்பத்தியில் மாநிலம் 3வது இடத்தில் உள்ளது. இது தேசிய உற்பத்தியில் 6% ஆகும்.
- மாநிலத்தில் 2588 இரசாயன உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன.
- தமிழ்நாட்டிலிருந்து இரசாயனகங்ள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் ஏற்றுமதியானது 2011-18 நிதி யாண்டில் 913.77 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழக தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (TIDCO) பாலிமர் தொழில் பூங்காக்கள் நிறுவியுள்ளது.

பெட்ரோலிய மண்டல திட்டம் ரத்து – தமிழக அரசு

- கடலூர், நாகையில் ரூ.92 ஆயிரம் கோடியில் அமையவிருந்த பெட்ரோலிய மண்டல திட்டத்தை ரத்து செய்ய தமிழக அரசு உத்தரவிட்டது.
- காவிரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்ற வகை செய்யும் சட்டம், ஆளுநரின் ஒப்புதலைத் தொடர்ந்து, தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதையடுத்து, காவிரி டெல்டா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- இதனால் கடலூர், நாகப்பட்டினத்தில் ரூ.92 ஆயிரம் கோடி முதலீட்டில் பெட்ரோலிய மண்டலம் அமைப்பதற்காக ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிப்பாணையை அரசு ரத்து செய்தது.
- காவிரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்ற வகை செய்யும் 'தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டம் 2020' சட்டப் பேரவையில் கடந்த 20-ம் தேதி நிறைவேற்றப்பட்டது.
- இந்த சட்டத்துக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தும் ஒப்புதல் அளித்ததை அடுத்து, இந்தச் சட்டத்தை தமிழக அரசு அரசிதழில் வெளியிட்டது. இதன் மூலம் காவிரி டெல்டா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

5) மின்னணுவியல் மற்றும் வன்பொருள்

- இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மின்னணு வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக சென்னை உருவாகியுள்ளது.
- பல சர்வதேச நிறுவனங்கள் சென்னையை தங்கள் தெற்காசிய உற்பத்தி மையமாக தேர்ந்தெடுத்து உள்ளன.
- தமிழ்நாடானது இந்தியாவில் தயாரிக்கும் கணினி, மின்னணு மற்றும் கண்ணாடி இழை பொருட்கள் தயாரிப்பில் 2-வது தரத்தில் உள்ளது. தேசிய உற்பத்தியில் 16% கொண்டுள்ளது.
- 2017-18 ஆம் நிதியாண்டில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியளவில் 3-வது மாநிலமாக தேர்வு செய்யப்பட்டது.
- தமிழ்நாட்டில் மொத்த மின்னணு பொருட்கள் வெளியீட்டில் 62% கணினிகள் மற்றும் புற உபகரணங்களாக உள்ளன.
- ஆட்டோமொபைல், கணினிகள், மின்னணு பொருட்கள் போன்ற கீழ்நிலை பொருள்களுக்கு போதிய சந்தை வசதிகளை வழங்குகிறது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்னணு மற்றும் வன்பொருளுக்கான இரண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உள்ளன. அவை:
  1. மின்னணு / தொலைதொடர்பு வன்பொருள் HiTech SEZ - ஸ்ரீபெரும்புதூர்
  2. மின்னணு வன்பொருள் HiTech SEZ - ஒரகடம்

https://t.me/tnpscfree

6) கனரக பொறியியல்

- பொது நோக்கம் மற்றும் சிறப்பு நோக்கம் இயந்திரங்களை தயாரிப்பதில் தமிழகம் இந்தியாவில் 3வது இடத்தில் உள்ளது.
- பேருந்து கட்டுமானத் தொழிலுக்கு பெயர் பெற்ற கரூர், தென்னிந்திய பேருந்து கட்டுமானத் தொழிலுக்கான பங்களிப்பில் 80% மாக உள்ளது.
- 2017-18 நிதியாண்டு கனரகப் பொறியியல் ஏற்றுமதியில் தமிழகம் இந்தியாவில் 2-வது இடம் வகிக்கிறது.
- தமிழ்நாட்டிலிருந்து கனரக பொறியியல் ஏற்றுமதி 2013-14 மற்றும் 2017-18க்கு இடையில் 8% CAGR ஆக வளர்ந்து 2017-18 ஆம் ஆண்டில் 2.49 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- தூசான், கோமட்சு, கோபெல்கோ, கேம்ஸா போன்ற சென்னை மற்றும் சுற்றியுள்ள உயர் கனரக பொறியியல் நிறுவனங்களின் இருப்பு இந்த துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு சாதகமான சுற்றுச்சூழல் அமைப்பை வழங்குகிறது.
- கோவை-சேலம் தொழில்துறை நடைபாதையில் தொழில்துறை இயந்திரங்கள் பொது நோக்கம் இயந்திரங்கள் போன்ற உற்பத்தியாளர்கள் உள்ளனர்.

7) தகவல் தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள்

- மாநிலத்தில் 2017-18 ஆண்டில் 6.15 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள முதலீடுகள் செய்யப்பட்டன.
- இந்த துறை கிட்டதட்ட 4,00,000 மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும் 750000 மக்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்குகிறது.
- இந்த துறை கிட்டதட்ட தகவல்தொழில்நுட்ப ஏற்றமதியில் 2013-14 மற்றும் 2017-18க்கு இடையில் 8.6 சதவீத வருடாந்திர கூட்டு வளர்ச்சி விதமாக வளர்ந்து 17.1 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- 146 மில்லியன் சதுர அடியில் கட்டப்பட்ட இடத்துடன் 22 அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் 246 தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உள்ளன.
- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) சென்னை, கோயம்புத்தூர், மதுரை (2 இடங்கள்), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் 8 ஐடி/ஐடிஸ் சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.
- மாநிலத்தின் மொத்த பொறியியல் பட்டதாரிகளில் 3.7% கணினி அறிவியல்/தகவல் தொழில் நுட்பம்/மின்னணுவியல்/தொடர்பு துறைகளைச் சேர்ந்தவர்களாவர்.

8) மருந்தகம் & உயிரிதொழில்நுட்பம்

- நாட்டின் 5வது பெரிய மருந்து உற்பத்தி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.
- தேசிய மருந்து உற்பத்தியியல் 10 சதவீதத்திற்கும் அதிகமான பங்கை மாநிலம் கொண்டுள்ளது.

- அரசு மருந்தகம் & மருத்துமனைகளில் இலவசமாக மருந்துகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் தமிழகம் மிகவும் சுறுசுறுப்பான மாநிலமாகும்.
- 2017-18 ஆண்டில் தமிழ்நாட்டின் மருந்து உற்பத்தி 422.53 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- உயிரி தொழில்நுட்பத்தின் 36 வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையங்களுடன் இந்தியாவின் மிகப்பெரிய வேளாண் பல்கலைக்கழகத்தை தமிழகம் கொண்டுள்ளது.
- சென்னையில் உள்ள TICEL உயிரிப்பூங்கா உலகத்தரம் வாய்ந்த ஆய்வக உள்கட்டமைப்பு & உயிர்த்தொழில்நுட்ப ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனங்களுக்கான சேவைகளை வழங்குகிறது.
- கோவை மாவட்டத்தில் டைசல் உயிரிப் பூங்கா - 3ம் கட்டம் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உருவாக்கப்பட உள்ளது.
- இந்திய அரசு TIDCO, HLL லைப் கேர் நிறுவனம் மூன்று இணைந்து ஒரு மருத்துவ பூங்கா திட்டத்தை நிறுவி வருகிறது.

5.4.1 பிரதான தொழில்துறை கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாட்டின் கூட்டமைப்பு சிறப்பு

- "சென்னை ஆசியாவின் டெட்ராய்டு" என்பதற்கு காரணம், அதன் பெரிய வாகன உற்பத்தி தளமே ஆகும்.

1. வாகன தொழிற்துறை (ஆட்டோ மொபைல்)

- மாநில பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- தமிழ்நாடானது, இந்திய அளவில் 21% பயணிகள் கார்கள், 33% வர்த்தக வாகனங்கள் மற்றும் 35% ஆட்டோமொபைல் கூறுகளை உற்பத்தி செய்கிறது.
- வாகனம் மற்றும் அதன் கட்டுமான பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அதிகமாக கொண்ட மாநிலம்.
- TVS மற்றும் Ashok Leyland போன்ற நிறுவனங்களின் மற்றொரு வாகன தொகுப்பு ஓசூரில் உள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்திலும் வாகன கட்டுமானம் தொகுப்பு வளரந்து வருகிறது.

ஆட்டோ மொபைல் (ம) ஆட்டோ கூறுகள் / வாகன கூறுகள்

- உலகின் முக்கிய 10 ஆட்டோ மொபைல் மையங்களில் தமிழ்நாடும் ஒன்று.
- 2017-18 ஆண்டுகளில் இந்தியாவில் மோட்டார் வாகன, கார் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 45% ஆகும்.
- இந்தியாவின் வாகன உதிரி பாக உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 35% ஆகும்.
- நாட்டின் மிகப்பெரிய டயர் உற்பத்தியாளராக உள்ள தமிழ்நாடு 80% வாகன உதிரி பாகங்களையும் கொண்டது.

https://t.me/tnpscfree

2. சரக்குந்து (டிரக்) மற்றும் பேருந்து கட்டுமான தொழில்துறை

- தமிழ்நாட்டில் நாமக்கல் மற்றும் திருசெங்கோடு பகுதிகள் சரக்குந்து மற்றும் பேருந்து கட்டுமான துறைக்கு தனித்துவம் பெற்றது.
- 50-க்கும் மேற்பட்ட அலகுகள் கொண்ட கரூர் மிகப்பெரிய பேருந்து கட்டுமான மையமாக விளங்குகிறது.

3. பட்டாசு, தீப்பெட்டி தொழிற்துறை மற்றும் அச்சுப் பதிப்பு தொழிற்சாலைகள்

- சிவகாசி மாவட்டம், இந்தியாவின் பட்டாசு உற்பத்தியில் 90% காப்பு தீக்குச்சியில் 80% மற்றும் அச்சுப் பதிப்பு கரைசல்களில் 60% பங்களிக்கிறது.

4. மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பம் (IT)

- சென்னை ஒரு சிறிய மின்னனு மையமாக திகழ்ந்து வருகிறது.
- மென்பொருள் துறை விரிவாக்கத்தால் சென்னையும் கோயம்புத்தூரும் மென்பொருள் மையங்களாக செயல்படுகிறது.

5.4.2 தமிழ்நாடு தொழில்மயமாக்கலுக்கு உதவும் கொள்கை காரணிகள்

1) SIPCOT - தமிழ்நாடு தொழில்துறை கழகம் 1971

- தொழில்பேட்டைகள் அமைப்பதன் மூலம் மாநிலத்தின் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க.

2) தமிழ்நாட்டு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம் (TANSIDCO 1970)

- **நோக்கம்:** மாநிலத்தின் சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்.
- இது சிறு தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது.

3) தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO - 1965)

- **நோக்கம்:** மாநிலத்தில் தொழிற்துறையை ஊக்குவிப்பதற்கும், தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கும்

4) தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டுக் கழகம் (TIIC - 1949)

- **நோக்கம்:** புதிய அலகுகள் தொடங்குவதற்கும் செயல்படுகின்ற அலகுகளை மேற்கொண்ட விரிவாக்கவும் குறைந்த கட்டண நிதி உதவி வழங்குதல்.
- அனைத்து வகையான நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 90% வரை ஆதரவு வழங்கவும் இந்நிறுவனம் செயல்படுகின்றது.

5) தமிழ்நாடு சிறுதொழில்கள் கழகம் (TANSI - 1965)

- தொழில் (மு) வர்த்தக துறையால் தொடங்கப்பட்டு இயங்கி வரும் சிறிய அலகுகளை கையகப்படுத்தல்
- இது சிறு நிறுவனங்களை இயக்கும் முதல் தொழிற்துறை நிறுவனமாகும்.

5.4.3 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZs)

- **அறிமுகம்:** ஏப்ரல் 2000
- **குறிக்கோள்:** ஏற்றுமதிக்கு சர்வதேச அளவில் போட்டி (மு) தொந்தரவு இல்லாத சூழலை வழங்குதல்
- SEZ - அலகுகள் சுய சான்றிதழ் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
- பொது, தனியார், கூட்டுத்துறை (அல்லது) மாநில அரசுகளின் சிறப்பு பொருளாதார மண்டலத்தை அமைக்க இந்த கொள்கை வழி செய்கிறது. தற்போதுள்ள சில ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களையும், இது சிறப்பு பொருளாதார மண்டலமாக மாற்ற திட்டமிட்டுள்ளது.
- அதன்படி பின்வரும் இடங்களில் அமைந்துள்ள ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசாங்கம் மாற்றியுள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs)	அமைந்துள்ள இடம்
நாங்குநேரி SEZ	பல்நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி
எண்ணூர் SEZ	அனல் மின் திட்டம்,வயலூர்
கோயம்புத்தூர் SEZ	தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள்
ஓசூர் SEZ	தாயங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு
பெரம்பலூர் SEZ	பல்நோக்கு உற்பத்தி SEZ
தானியங்கி நகரம் (Auto city) SEZ	தானியங்கிகள்/தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர்
இந்தியா-சிங்கப்பூர் SEZ	IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள் -திருவள்ளூர் மாவட்டங்கள்
உயிரி-மருந்துகள் SEZ	மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மைய மீன் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி

5.4.4 மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மண்டலம் (MEPZ), 1984

- மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலவாணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

https://t.me/tnpscfree

நோக்கங்கள்

- அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்க
- அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்க
- உள்நாட்டில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்

5.5 திறன் மேம்பாடு

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) இளைஞர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கும், மாநிலத்தை நாட்டின் திறன் மையமாக மாற்றுவதற்கும் தேவை அடிப்படையிலான மற்றும் தொழில்துறைத் தொடர்பான திறன்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) 2017-18ல் 1,05,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் 30 சதவீதம் இடங்கள் மாணவியருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- SIPCOT ற்குள் அமைக்கப்பட்ட தொழில்களின் திறன் தேவையை பூர்த்தி செய்வதற்காக திறன் மேம்பாட்டு பயிற்சி முன்முயற்சிகள் SIPCOT ஆல் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்கட்டமைப்பு:

- SEZ அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்காக 1984ல் மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (MEPZ) அமைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். மேலும் அது100க்கும் மேற்பட்ட செயல்பாட்டு அலகுகளைக் கொண்ட ஒரு பல் உற்பத்தி மண்டல வாரியமாகும்.
- ELCOT தமிழ்நாடு மின்னணு நிறுவனமானது மாநில அரசாங்கத்திற்கான கொள்முதல் நிறுவனம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திலிருந்து (Meity) பெறப்பட்ட நிதிகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும் முக்கிய தகவல் தொழில்நுட்ப திட்டகங்களுக்கு நோபல் ஏஜென்ஸி ஆகும்.

5.6 வங்கி

- சென்னை, இந்தியாவில் வங்கி தலைநகரம் எனப்படும்.
- தமிழ்நாட்டில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் 52% (5,337 கிளைகளுடன்), தனியார் வணிக வங்கிகள் 30% (3060 கிளைகளுடன்) உள்ளன.
- பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 13% (1364), வட்டார கிராமப்புற வங்கிகள் 5% (537) கிளைகள் மற்றும் மீதமுள்ள 22 அயல்நாட்டு வங்கி கிளைகள் உள்ளன.
- வங்கிகளின் மொத்த வைப்புத் தொகை மார்ச் 2017ல் 14.32% அதிகரித்தது.
- வங்கிகளின் மொத்த கடன் தொகை 13.50%ஆக மார்ச் 2017ல் அதிகரித்தது.

- முதன்மை துறைகளுக்கான கடன் தொகையானது தேசிய சராசரியான 40%யை விட (45.54%) ஆக உள்ளது.
- மார்ச் 2017ஆம் ஆண்டின் முடிவில் வேளாண் துறைக்கான கடன் 19.81% ஆக உள்ளது. இது தேசிய சராசரியான 18% ஐ விட அதிகமாக இருக்கிறது.
- தமிழ்நாட்டிலுள்ள வங்கிகள் இந்தியாவிலேயே அதிக கடன் வைப்பு விகிதமாக 119.15% கொண்டுள்ளது. இந்தியளவில் இதன் விகிதம் 77.5% விழுக்காடு மட்டுமே உள்ளது.

5.7 கல்வி

5.7.1 பள்ளி கல்வி

- நிகர மாணவர் சேர்க்கை விகிதம் தமிழகத்தில் அதிகரித்துள்ளது.
- இதில் கேரளா (81%) மற்றும் இமாச்சால பிரதேசத்தை (74%) அடுத்து தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.
- தேசிய சராசரி 43% மற்றும் உலக சராசரி 59% தொடக்க பள்ளிக்கான சேர்க்கை மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் 118.8% (வகுப்பு 1-5), நடுநிலை பள்ளிக்கு 112.3% (வகுப்பு 6-8), உயர் நிலை பள்ளிக்கு 62.7% (வகுப்பு 9-10), 49.26% மேல்நிலைப் பள்ளிக்கான (வகுப்பு 11-12).
- இலவச உணவு, உடை, காலணிகள், உதவித் தொகை, மடிக்கணினி போன்றவற்றால் இவை சாத்தியமானது.

5.7.2 உயர் கல்வி

- உயர் கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு தொடர்ந்து பிற மாநிலங்களை காட்டிலும் முதன்மை பெற்று முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் மொத்த சேர்க்கை விகிதமான 46.9% . இது அனைத்து மாநிலங்கள், தேசிய சராசரியை விட அதிகமாகும்.
- இந்த உயர் விகிதம், மாணவர்களுக்கு இலவச உணவு, துணி, காலணி, மடிகணினி மற்றும் உதவித்தொகை விநியோகிப்பதே நோக்கம்.
- தமிழகத்தில் 59 பல்கலைக்கழகங்களும், 40 மருத்துவ கல்லூரிகளும், 517 பொறியியல் கல்லூரிகளும், 1,260 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 447 பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 28 பல் மருத்துவ கல்லூரிகள் உள்ளன.
- ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு லட்சம் பொறியியல் மற்றும் பல்தொழில் நுட்பம் மாணவர்கள் வெளியேறுகின்றனர். இது இந்திய அளவில் உச்சபட்சமாகும்.

சமீபத்தில்

- 2018-19 ஆண்டிற்கான அனைத்து இந்திய உயர்கல்விக்கான (AISHE) -ன் சமீபத்திய அறிக்கையின்படி தமிழகம் உயர் கல்விக்கான மொத்த சேரக்கை விகிதத்தில் (GER) 49% என்ற

https://t.me/tnpscfree

நிலையில் தமிழகம் மூன்றாம் இடத்தில் உள்ளது.

- ஆண் - 49.8%
- பெண் - 48.3%
- எஸ்.சி. (SC) - 41.6%
- எஸ்.டி. (ST) - 37.8%
- தமிழ்நாடு, ஒரு லட்ச மக்கள் தொகைக்கு 35 கல்லூரிகள் வீதம், 2466 கல்லூரிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளது.

5.8 சுற்றுலா

- ஏராமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதால் சுற்றுலாத் துறையானது ஒரு தொழிலகமாக கருதப்படுகிறது.
- சமீப காலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னணி தளங்களில் ஒன்றாக தமிழகம் உள்ளது.
- தமிழகத்தில் சுற்றுலாத் துறை, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு கழகத்தால் (TTDC) ஊக்குவிக்கப்படுகிறது.
- சுற்றுலாத் துறையில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 16%.
- பழங்கால நினைவுச் சின்னங்கள், புனித தலங்கள், மலைவாழிடங்கள், பலவகையான இயற்கை நிலத்தோற்றங்கள், நீண்ட கடற்கரை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றுடன் தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகச் சிறந்த மாநிலமாக உள்ளது.

உடல்நலம்:

- தமிழ்நாடு மூன்று அடுக்கு உடல்நல அடிப்படை கட்டமைப்பை கொண்டுள்ளது. அவை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதாரம் நிலையங்கள், சுகாதார பிரிவுகள், சமூக நல மையங்கள் ஆகியன ஆகும். மார்ச் 2015 ல் தமிழகத்தில் 34 மாவட்ட மருத்துவமனைகளும், 1,254 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 229 துணைப்பிரிவு மருத்துவமனைகள், 7555 துணை மையங்களும் உள்ளன.

5.9 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் முயற்சிகள் (MSMEs)

- தமிழ்நாடு தொழில்முனைவோருக்கு உகந்த மாநிலமாக விளங்குகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் தமிழ்நாடு 15.07 சதவீதத்துடன் தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது. 6.89 லட்சம் பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்கள் உள்ளன.
- எல்காட் நிறுவனம் சென்னையில் உள்ள தரமணியில் தொழில் தொடங்குவதற்காக 90 சேமிப்பக கூடங்களை நிறுவியுள்ளது. தற்போது 17 கம்பெனிகள் செயல்பட்டு வருகின்றன.

I) தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை வலுவூட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் புதிய முயற்சிகள் : MSME நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளர தீர்வுக்குழு

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு 4.5.2018 அன்று தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்களை ஆதரிக்கிறது.

2) வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டம் (UYEGP) மேம்படுத்தப்பட்ட இணைய வழி தகவு

- இத்திட்டம் தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத் துறையால் உருவாக்கப்பட்டது.
- **நோக்கம்:** சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளாதார அளவில் பின்தங்கியுள்ளவர்களை முன்னேற்ற அதிலும் குறிப்பாக படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கி தருதல்.

3) தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம், 2018

- குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் ஆன்லைன் ஒற்றைச்சாளர வசதி.
- ஒப்புதல்களை ஆன்லைனில் கண்காணித்தல்,
- உரிய காலக்கெடுவுக்குள் அனுமதிக்கான ஒப்புதல்களை வழங்குதல்
- திறன்மிக்க குறைதீர்ப்பு அமைப்பை உருவாக்குதல்
- மாவட்ட MSME நிறுவனங்களுக்கான ஒற்றைச்சாளர அமைப்பு மற்றும் மாநில அளவிலான பெரிய தொழில் நிறுவனங்களுக்கான அமைப்பு.

5.10 தமிழ்நாடு தொழில்துறை கொள்கை 2014

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு எப்போதும், முன்னிலையே உள்ளது. எனவே ஒரு முற்போக்கான மாநிலமாக தனது நிலையை தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் தொழில்துறை கொள்கையை வகுத்துள்ளது. இக்கொள்கை தமிழ்நாட்டில் தொழில் மயமாக்களை உறுதிப்படுத்த தேவையான உள்கட்டமைப்பை கொண்டது.

நோக்கங்கள்

- தமிழ்நாடு உற்பத்தி துறையில் 14% ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதத்தை அடைதல்.
- நிலையான தொழில்துறை வளர்ச்சியை அடைதல் மற்றும் தமிழ்நாட்டில் லாபகரமான வேலை வாய்ப்பை உருவாக்கல்.
- விண்வெளி, நானோ தொழில் நுட்பம் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துதல்.

https://t.me/tnpscfree

- தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களின் விரைவான தொழில்மயமாக்களை ஏற்படுத்த.
- தொழில் துறைக்கு ஏதுவாக உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களை நிறுவுதல்.
- பல்வேறு துறைகளில் உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களின் மூலம் புதுமை மையமாக மாற்றுதல்.

கவனம் செலுத்தும் துறைகள்

- ஆட்டோ மொபைல் மற்றும் ஆட்டோ உபகரணங்கள்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் உற்பத்தி துறைகள்.
- உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் மருந்துகள்.
- விண்வெளி சார்ந்த தொழிற்சாலை

செயல்படுத்தும் நிறுவனம்

- தமிழக மாநில தொழில்துறை மேம்பாட்டுக்கழகம் (SIPCOT) மற்றும் தமிழ்நாட்டு முதலீட்டு கழகம் (TIIC). இது பல்வேறு நிறுவனங்களுக்கான ஏஜென்சியாக செயல்படுகிறது.

1. ஊக்கதொகை சலுகைகள்

தொழிலாளர் துறை ஊக்கத்தொகை

- தொழிலாளர் துறை ஊக்கத்தின் கீழ் தொழிலாளர் நலனுக்காக தொழிலாளர் சட்டங்களில் நெகிழ்வு தன்மை பின்பற்றப்படும்.
- பெண்களுக்கான வேலை நேரம் 24 × 7 ஆகும். இரவு வேலைகளில் பெண்களை அமர்த்துவதில் நெகிழ்வு தன்மை ஆகியவை அடங்கும்.

காப்புரிமை தர சான்றிதழ்களுக்கான மானியம்

- காப்புரிமை விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கான செலவு தொழில்துறை பிரிவுகளுக்கு காப்புரிமை பதிவுக்கு 1 லட்சம் அல்லது வேறு எந்த சர்வதேச சான்றிதழும் திருப்பி செலுத்தப்படும்.

பயிற்சிக்கான மானியம்

- திறன்களை மேம்படுத்துவதற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் ஊக்க வடிவு பயிற்சிக்கு அரசு மானியம் வழங்கும்.

உற்பத்தி துறைக்கான சலுகை

- வேலை குறிப்பிடப்பட்ட உற்பத்தி அலகுகள் இந்த கொள்கையின் கீழ் சலுகைகளுக்கு தகுதி யானவை.
- மாவட்டங்கள் கீழ்கண்டவானறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வகை A : சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் (3 மாவட்டம்)

வகை B : A மற்றும் C தவிர பிற மாவட்டங்கள்

வகை C : மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி (9 தெற்கு மாவட்டங்கள்).

சூப்பர் மெகா திட்டம் A விற்கான மானியம்

- சூப்பர் மெகா திட்டம் A என்பது உற்பத்தி திட்டம் புதிய அல்லது விரிவாக்கப்பட்ட A & B வகை மாவட்டங்கள் கீழ்கண்ட முதலீட்டு வரம்புகளுடன் வைக்கப்பட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

வகை	முதலீட்டு வரம்பு (ரூ கோடியில்)	
	A	B
மெகா திட்டம்	₹ 500 - 1,500 கோடி முதலீட்டில் 3 வருடத்தில் 300 பேருக்கு வேலைவாய்ப்பு	₹ 350 - 1,000 கோடி முதலீட்டில் 3 வருடத்தில் 200 பேருக்கு வேலைவாய்ப்பு

குறிப்பு: சூப்பர் மெகா திட்டம் A விற்கான மானியம்

வகை	முதலீட்டு வரம்பு (ரூ கோடியில்)	
	A	B
சூப்பர் மெகா திட்டம் A	₹ 1,500 - 3,000 கோடியில் 5 வருடத்தில் 400 பேருக்கு வேலைவாய்ப்பு	₹ 1,000 - 2000 கோடியில் 5 வருடத்தில் 300 பேருக்கு வேலைவாய்ப்பு

சூப்பர் மெகா திட்டம் B விற்கான மானியம்

- சூப்பர் மெகா திட்டம் B என்பது உற்பத்தி திட்டம் புதிய அல்லது விரிவாக்கப்பட்ட A & B வகை மாவட்டங்கள் கீழ்கண்ட முதலீட்டு வரம்புகளுடன் வைக்கப்பட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

வகை	முதலீட்டு வரம்பு	
	A	B
சூப்பர் மெகா திட்டம் B	₹ 3,000 - 5,000 கோடியில் 6 வருடத்தில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு	₹ 2,000 - 4,000 கோடியில் 6 வருடத்தில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு

அல்ட்ரா மெகா திட்டம்

அல்ட்ரா மெகா திட்டம் என்பது உற்பத்தி திட்டம் புதிய அல்லது விரிவாக்கப்பட்ட A & B வகை மாவட்டங்கள் கீழ்கண்ட முதலீட்டு வரம்புகளுடன் வைக்கப்பட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

வகை	முதலீட்டு வரம்பு	
	A	B
அல்ட்ரா மெகா திட்டம்	₹ 5,000 கோடியில் 7 வருடத்தில் 700 பேருக்கு வேலைவாய்ப்பு	₹ 4,000 கோடியில் 7 வருடத்தில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு

https://t.me/tnpscfree

2. நிலையான முதலீடு ஊக்குவிப்பு

A & B மாவட்டங்களின் பிரிவுகளின் கீழ்வரும் தொழில்களுக்கு தகுதிப் பெற்றவை.

மூலதன முதலீட்டை திருப்பி செலுத்துதல்

SIPCOT தொழில்துறை பூங்காக்களில் உள்ள உற்பத்தி அலகுகள் கூடுதல் மூலதன மானியம் 50% திட்டத்தின் மொத்த செலவு வழங்கப்படும்.

அஞ்சல் தலை (STAMP) கடமை சலுகை

A மற்றும் B வகை மாவட்டங்களில் கட்டிடம் அல்லது நிலம் வாங்குவதற்கு அரசாங்கத்தால் முத்திரை வரி மற்றும் பரிமாற்ற கடமை 50% மானியம் வழங்கப்படும் அல்ட்ரா மெகா திட்டத்தில் 100% மானியம் திரும்பப் பெறப்படும்.

சிறப்பு தொகுப்பு ஊக்கத்தொகை

தென் கிழக்கு மாவட்டங்களில் இருக்கும் புதிய SIPCOT தொழில்துறை பூங்காக்களில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்க, சமீபத்தில் SIPCOT தொழில்துறை பூங்காக்களில் நிலம் ஒதுக்கீடு செய்யும் சிறப்பு தொகுப்பு மானியம் விகிதம், முத்திரை வரி சலுகைகள் மற்றும் கூடுதல் மூலதன மானியம் தொடங்கப்பட்டுள்ளது.

மற்ற ஊக்கத்தொகை

SIPCOT பூங்காக்களில் நிலங்கள் கிடைக்காத போது தெற்கு மாவட்டங்களில் புதிய தொழிற்துறைகளை தொடங்குவதற்கு நிலங்களை SIPCOT வாங்கிக் கொள்ளும் அல்லது ஒதுக்கீடு செய்யும். இந்த ஊக்கத்தன்மையை பெறுவதற்கு முதலீட்டு நிறுவனத்திற்கு தேவைப்படும் பகுதி 25 ஏக்கர் மற்றும் முதலீடு 50 கோடிக்கு மேல் இருக்க வேண்டும்.

தகுதியற்ற துறைகள்

- சர்க்கரை ஆலைகள்
- சமையல் எண்ணெய் ஆலைகள்
- அரிசி, கோதுமை, மாவு ஆலைகள்
- கனிம நீர் மற்றும் மென்மையான பானங்கள்
- மதுபானங்கள்
- உரங்கள் மற்றும் விலங்கு உணவு உற்பத்தி
- சுரங்கம் மற்றும் ஸ்டீல் தயாரித்தல்
- துருப்பிடிக்காத எஃகு பாத்திரங்கள்
- புகையிலை சிகரெட் செயலாக்கம்
- பழுது வசதிகள்
- சேவை துறைகள்
- மின் உற்பத்தி திட்டங்கள்
- மட்டை உற்பத்தி அல்லது மரப்பொருள்கள் செயலாக்கம்

5.11 உலகளாவிய முதலீட்டாளர்கள் கூடுகை - 2015 (GIM, 2015)

- 2015 ஆண்டு செப்டம்பர் 9, 10-ம் தேதிகளில் உலகளாவிய முதலீட்டாளர்களின் முதல் பதிப்பு சென்னையில் நடைபெற்றது.
- அந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டின் போது தமிழ்நாடு அரசு 2.40 லட்சம் கோடிகளுக்கு முதலீடுகளை ஈர்த்தது. (சுமார் 36 பில்லியன் டாலர்).
- இந்தியாவில் இருந்து 5000க்கும் அதிகமான பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.
- 100 ஒப்பந்தங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

5.12 தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2019 (GIM, 2019)

- 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019, ஜனவரி திங்கள் 23, 24 ஆகிய நாட்களில சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் துவக்கி வைத்தார்.
- போட்டி திறனை வலுப்படுத்தவும் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் முதலீட்டாளர்களுக்கு எடுத்துக்காட்டி புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு இம்மாநாடு நடத்தப்பட்டது.

நோக்கங்கள்

- முதலீட்டாளர்களின் தேர்வாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவது
- தமிழ்நாட்டிலுள்ள திறன்கொண்ட வணிக வாய்ப்புகளையும் மற்றும் துறை சார்ந்த முதலீட்டு திட்டங்களை முதலீட்டாளர்களுக்கு எடுத்துக்காட்டுவது.
- வணிகத்தை எளிதாக்குதல் நடைமுறைகள் மற்றும் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் எடுத்துக்காட்டுகிறது.
- மாநிலத்தின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவது.

5.12.1 முக்கிய முதலீடுகள்

- M.R.F நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள இரண்டு ஆலைகளில் திறனை விரிவுப்படுத்துவதற்காக 3100 கோடி ரூபாய் முதலீடு செய்கிறது.
- P.S.A ப்ரான்ஸ் நிறுவனமானது, Eicher மோட்டார் மற்றும் Peugot வண்டிகளையும் உற்பத்தி செய்ய 1250 கோடி முதலீடு செய்கிறது. மேலும் 1,500 கோடியில் விரிவாக்கமும் செய்கிறது
- சென்னையை அடுத்துள்ள காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கத்திற்கு அதானியின் குழுமம் ரூ.10,000 கோடியில் முதலீடு செய்கிறது.
- தமிழ்நாட்டிலேயே நவீன கைப்பேசி உற்பத்தி செய்ய 2,500 கோடி Foxconn என்ற நிறுவனத்தால் முதலீடு செய்யப்படுகிறது.
- சென்னை பெட்ரோலிய கழகம் ரூ.27,400 கோடி செலவில் நாகப்பட்டினத்தில் பெட்ரோலிய சுத்திகரிப்பு நிறுவனத்தை நிறுவ உள்ளது.

https://t.me/tnpscfree

கவனம் செலுத்தப்படும் துறைகள்

- விண்வெளி மற்றும் பாதுகாப்பு
- வேளாண் (மு) உணவு பதப்படுத்தும் துறை
- மோட்டார் வாகனங்கள் (மு) உதிரி பாகங்கள்
- மின்னணு மற்றும் வன்பொருள்கள்
- இரசாயானம் (மு) பெட்ரோலிய இராசாயனங்கள்
- கனரக பொறியியல்
- கட்டுமானம்
- மருந்து (மு) உயிரி தொழில்நுட்பம்
- தகவல் தொழில்நுட்பம் (மு) தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள்
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
- திறன் மேம்பாடு
- ஜவுளி மற்றும் ஆடைகள்

வெளிப்பாடுகள்

- தமிழக அரசு 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் 3,00,431 கோடி மதிப்பிலான முதலீட்டை ஈர்க்கும் ஒப்பந்தங்களை இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திட்டுள்ளது.
- புதிய துறைகளான பள்ளிக் கல்வி, உயர்கல்லி, அலுவலக மேலாண்மை மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் முதலீட்டை ஈர்த்துள்ளது.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

– குறள் 731

விளக்கம்:
குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

மாதிரி வினாக்கள்

1. சரியான கூற்றைத் தேர்ந்தேடு:
   1. 2017-18 ஆம் ஆண்டில் இந்தியாவில் சரக்கு ஏற்றுமதியில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
   2. இந்தியாவின் வாகன ஏற்றுமதியில் 45%ம், வாகன உதிரி பாகங்கள் ஏற்றுமதியில் 34%ம் மற்றும் மின்னணு பாகங்கள் ஏற்றுமதியில் 16ம் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

   (A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 1 மற்றும் 2 (D) எதுவுமில்லை
2. பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாத இடம் எது?

   (A) ராணிப்பேட்டை (B) சிறுவாச்சூர் (C) ஆம்பூர் (D) வாணியம்பாடி
3. பின்வருவனவற்றில் தமிழ்நாட்டில் விவசாயத் துறை பற்றிய கூற்றுகளில் சரியானவை எவை?
   1. 65%க்கும் அதிகமான மக்கள் இந்தத் துறையை நம்பியுள்ளனர்.
   2. நிலப்பரப்பு, காலநிலை, மண் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை விவசாயத்தின் வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகளாகும்.
   3. விவசாயத்தின் உற்பத்தித் திறனானது பீடபூமியில் அதிகமாகவும் மலைகளில் மோசமாகவும் உள்ளது.
   4. தமிழ்நாட்டில் விவசாயத்தை கட்டுப்படுத்தும் காரணி நீர் ஆகும்.

   (A) 1, 2 மற்றும் 3 (B) 1, 2 மற்றும் 4 (C) 3 மற்றும் 4 (D) அனைத்தும்
4. பின்வருவனவற்றில் இந்தியாவின் பருத்தி நெசவாலைகள் பற்றிய சரியான கூற்று எது / எவை?
   1. பருத்தி என்பது எடை இழக்கும் மூலப்பொருள் அல்ல. எனவே பருத்தி ஆலைகள் பயிரிடும் பகுதிக்கு அருகில் பரவியுள்ளன.
   2. இதற்கு அதிக எண்ணிக்கையிலான திறன் மற்றும் பகுதி திறன் கொண்ட தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

   (A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 1 மற்றும் 2 (D) எதுவுமில்லை
5. பொருத்துக.

தொழிலகங்கள்	துவங்கப்பட்ட ஆண்டு
(a) TIDCO	1. 1965
(b) SIPCOT	2. 1949
(c) TIIC	3. 1979
(d) TNPL	4. 1971

https://t.me/tnpscfree

குறியீடுகள்:

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	2	4
(B)	4	2	1	3
(C)	1	4	2	3
(D)	4	3	2	3

6. வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் குறித்த சரியான கூற்றை தேர்ந்தெடு.
   (A) வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து மானியங்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல்.
   (B) படித்த முதல் தலைமுறை முதல் இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட இத்திட்டம் 25% முதலீட்டு மானியம் மற்றும் 3% பின்முனை வட்டி மானியம் வழங்குகிறது.
   (C) சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் வேலையின்மை பிரச்சினைகளைத் தணிப்பதற்காக, படித்த வேலையில்லா இளைஞர்கள் சுயதொழில் தொடங்க உதவும் திட்டம்
   (D) மேற்கண்ட அனைத்தும்

7. பின்வருவனவற்றில் தமிழ்நாட்டின் TNPL தொடர்பான கூற்றுகளில் தவறானது எது?
   (A) கரும்பு சக்கையை முதன்மை மூலப்பொருளாகப் பயன்படுத்தி செய்தித்தாள் அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்கப்படுகிறது.
   (B) இந்நிறுவனம், 2019-ல் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தியில் இந்திய அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.
   (C) இது இந்திய அளவில் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில் முதன்மையாக திகழ்கிறது.
   (D) இது "நிலக்கரி சாம்பலை பயன்படுத்தியமைக்கான விருது 2018" ஐப் பெற்றுள்ளது.

8. பொருத்துக (2017-18 இன் படி)

உணவு பயிர்	அதிகப்படியான உற்பத்தி
(a) நெல்	1. விழுப்புரம்
(b) சிறுதானியங்கள்	2. தஞ்சாவூர்
(c) பயறு வகைகள்	3. திருவண்ணாமலை
(d) எண்ணெய் பனை	4. பெரம்பலூர்

குறியீடுகள்:

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	3	4
(B)	2	4	1	3
(C)	2	3	1	4
(D)	3	4	1	2

9. பின்வருவனவற்றில் பருத்தி நெசவாலைகளின் பரவலுக்கு சாதகமான காரணிகள் யாவை?
   1. வெப்பமண்டல காலநிலை
   2. மண் வகை
   3. நீர் மற்றும் மின்சார விநியோகம்
   4. போக்குவரத்து வசதிகள்
   (A) 2 மற்றும் 3
   (B) 1, 3 மற்றும் 4
   (C) 1, 2 மற்றும் 3
   (D) மேற்கண்ட அனைத்தும்

10. பின்வருவனவற்றில் இந்தியாவின் மாநில முதலீட்டு திறன் குறியீடு தொடர்பான கூற்றுகளில் சரியானது எவை?
   1. தேசிய செயல்திறன் பொருளியல் ஆய்வு குழு வெளியிட்டது.
   2. மாநில முதலீட்டு திறன் குறியீட்டில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.
   3. N-SIPI - 2017 ஐ ஒப்பிடுகையில் N-SIPI - 2018-ல் தமிழகம் தனது தரவரிசையில் நான்கு இடங்கள் மேம்பட்டுள்ளது.
   (A) 1 மற்றும் 3
   (B) 2 மற்றும் 3
   (C) 1 மற்றும் 2
   (D) மேற்கண்ட அனைத்தும்

11. தவறான கூற்றைத் தேர்ந்தெடு:
   (A) கால்நடை பராமரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 9% பங்களிக்கிறது மற்றும் 8% தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கிறது.
   (B) நாடு முழுவதுமான கால்நடை கணக்கெடுப்பானது, பத்து வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
   (C) தமிழ்நாட்டில் நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் கோழி பண்ணை மையங்களாக உள்ளன.
   (D) பல்வேறு வகையான கால்நடை இனங்கள் தமிழ்நாட்டில் பால் தேவைக்காக வளர்க்கப்படுகின்றன. மேலும் இவை கிராமப்புற பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக விளங்குகின்றன.

https://t.me/tnpscfree

12. பின்வருவனவற்றில் இந்தியாவில் சர்க்கரைச் சாகுபடி பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
    1. கரும்பு ஒரு முக்கிய பணப் பயிராகும். இது தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது.
    2. கரும்பு என்பது நீர் அதிகம் தேவைப்படும் பயிர் மற்றும் PMKSY திட்டத்தின் மூலம் கரும்பிற்கான நுண்ணீர் பாசனத்திற்கு அரசு மானியம் வழங்குகிறது.
    3. கரும்பு உற்பத்தியில் விழுப்புரம் முதலிடத்தில் உள்ளது.

    (A) 2 மட்டும் (B) 2 மற்றும் 3
    (C) 1 மற்றும் 3 (D) மேற்கண்ட அனைத்தும்

13. பின்வருவனவற்றில் TIDCO தொடர்பான கூற்றுகளில் தவறானது எது / எவை?
    1. கூட்டுத்துறை நிறுவனங்கள் மூலம் முதலீட்டை ஈர்த்து மாநிலத்தில் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் தொழில் மூலதன முதலீட்டை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும்.
    2. இது உற்பத்தித் துறைசார்ந்த பல கூட்டுத்துறை நிறுவன திட்டங்களை ஊக்குவித்துள்ளது.
    3. இது சென்னையின் தரமணியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கான SEZ செயல்படுத்தி வருகின்றது.

    (A) 1 மற்றும் 3 (B) 2 மற்றும் 3
    (C) 2 மட்டும் (D) மேற்கண்ட எதுவுமில்லை

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
C	B	D	B	C	C	B	D	B	A	B	D	D

அத்தியாயம் 6

தமிழகத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்

"கல்வியின் நோக்கமானது, ஒட்டு மொத்த சமூகத்திற்கு சேவை செய்யும் விருப்பத்தை அனைவரிடமும் உருவாக்கவும் மேலும் அதன் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி தான்மட்டும் அல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்தின் நலனை மேம்படுத்த வழிவகைச் செய்ய வேண்டும்". **– ஜவகர்லால் நேரு**

6.1 மகளிர் நலத் திட்டங்கள்

- தமிழ்நாட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வரும் தமிழக அரசு, சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக அநேக திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- மகளிர் உதவி எண் – 181

6.1.1 திருமண நிதியுதவித் திட்டங்கள்

- தமிழ்நாடு அரசு ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவையாவன:

1. முவாலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், 1989

- **நோக்கம்:** ஏழைப் பெண்களின் கல்வி அறிவு நிலையை உயர்த்தல் மற்றும் திருமணச் செலவிற்கு நிதியுதவி வழங்குவது (ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே உதவி பெற தகுதியுடையவர்)
- **ஆண்டு வருமானம் வரம்பு:** ரூ. 72,000/-
- **வயது வரம்பு:**
    1. மணமகள் → 18 வயது
    2. மணமகன் → 21 வயது
- **கல்வித் தகுதி:** குறைந்தது 10–ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, பழங்குடியினர்க்கு ஐந்தாம் வகுப்பு.
- **விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு:** திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

https://t.me/tnpscfree

- **பயனாளிக்கு வழங்கும் உதவிகள்:**
  - 8 கிராம் தங்கம் (மு) ரூ. 50,000 ரொக்கம் (பட்டம் (அ) பட்டயம் பெற்றவர்களுக்கு)
  - 8 கிராம் தங்கம் (மு) ரூ. 25,000 ரொக்கம் (பட்டதாரி அல்லாதோருக்கு)

2. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைக் குழந்தைகள் திருமண உதவித் திட்டம் (1981–1982)

- **நோக்கம்:** ஏழை விதவைப் பெண்களின் மகள்களுக்கு திருமண நிதியுதவி வழங்குதல்
- **ஆண்டு வருமான வரம்பு:** ரூ.72000/-
- **வயது வரம்பு:**
  1. மணமகள் → 18 வயது
  2. மணமகன் → 21 வயது
- **கல்வித் தகுதி:** ஏதுமில்லை
- **விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு:** திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.
- **வழங்கப்படும் நிதியுதவி:**
  - 8 கிராம் தங்கம் (மு) ரூ. 50,000 ரொக்கம் (பட்டம் (அ) பட்டயம் பெற்றவர்களுக்கு)
  - 8 கிராம் தங்கம் (மு) ரூ. 25,000 ரொக்கம் (பட்டதாரி அல்லாதோருக்கு)

3. அன்னை தெரசா நினைவு அனாதைக் குழந்தைகள் திருமண உதவித் திட்டம் (1984–1985)

- **ஆண்டு வருமான வரம்பு:** ஏதுமில்லை
- **வயது வரம்பு:**
  1. மணமகள் → 18 வயது
  2. மணமகன் → 21 வயது
- **கல்வித் தகுதி:** ஏதுமில்லை
- **விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு:** திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.
- **வழங்கப்படும் நிதியுதவி:**
  - 8 கிராம் தங்கம் மற்றும் ரூ. 50,000 நிதியுதவி (பட்டம் / பட்டயம் பெற்றவர்களுக்கு)
  - 8 கிராம் தங்கம் மற்றும் ரூ. 25,000 நிதியுதவி (பட்டதாரிகள் அல்லாதோர்க்கு)

4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதியுதவித் திட்டம்,1975

- **நோக்கம்:** சமூகத்தில் உள்ள ஆதரவற்ற விதவைகளுக்கு மறுவாழ்வளித்தல்.
- **ஆண்டு வருமான வரம்பு:** வருமான வரம்பு இல்லை

- **வயது வரம்பு:** 20–40 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- **கல்வித் தகுதி:** ஏதுமில்லை
- **விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய காலஅளவு:**
  - மறுமணம் முடிந்த ஆறு மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- **வழங்கப்படும் நிதியுதவி:**
  - மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ. 15,000மும், ரூ. 10,000–யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் (NSC), 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. (பட்டதாரிகள் அல்லாதவர்க்கு)
  - மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ. 30,000மும், ரூ. 20,000–யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் (NSC), 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. (பட்டதாரிகளுக்கு)
- **உடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:**
  - முதல் கணவரின் இறப்பு சான்று
  - திருமணப் புகைப்படம்
  - விதவைச் சான்று
  - முதல் திருமண (மு) மறுமண பத்திரிக்கையின் நகல்
  - சாதிச்சான்று
  - 10–ம் வகுப்பு மதிப்பெண் சான்று, பட்டம் / பட்டயம் முடித்ததற்கான கல்விச் சான்றுகள்.

5. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

- **நோக்கம்:** சமூகத்தில் உள்ள தீண்டாமை மற்றும் சமூகத்தில் உள்ள சாதிவாரிப் பாகுபாடுகளை நீக்குதல்
- **ஆண்டு வருமான வரம்பு:** வருமான வரம்பு இல்லை.
- **வயது வரம்பு:**
  1. மணமகள் → 18 வயது
  2. மணமகன் → 21 வயது
- **விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு:**
  - திருமணம் முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- **கல்வித் தகுதி:** ஏதுமில்லை
- **நிபந்தனைகள்:**
  1. SC/ST சமூகத்தினம் மற்ற சமூகத்தினரை திருமணம் செய்வது.
  2. முன்னேறிய வகுப்பினர் (FC), பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை திருமணம் செய்வது.
- **வழங்கப்படும் நிதியுதவி:**
  - மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ. 15,000 மும், ரூ. 10,000–யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும்

https://t.me/tnpscfree

(NSC), 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. (பட்டதாரிகள் அல்லாதவர்க்கு)

- மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ. 30,000 மும், ரூ. 20,000-யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் (NSC), 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. (பட்டதாரிகளுக்கு)

குறிப்பு

மேற்கண்ட ஐந்து திட்டங்களிலும் 2018-19-ம் நிதியாண்டில் பயன்பெற்ற ஒட்டு மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 1,20,230 பெண்கள்.

6.1.2 பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

- பாலின சமத்துவம், நீடித்த மேம்பாட்டினை அடைவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பெண்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துதலே பொருளாதாரத்தில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகும்.

முக்கிய குறிப்பிட்ட திட்டங்கள் பின்வருமாறு:

1. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், 1977

- **நோக்கம்:** விதவைகள், ஆதரவற்றப் பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ளும் பொருட்டு, இலவச தையல் இயந்திரங்கள் அரசால் வழங்கப்படுகின்றன.
- **ஆண்டு வருமான வரம்பு:** ரூ. 72,000
- 2018-2019 -ம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 2978 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

2. கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCRA), 1982-1983

- இது ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் (IRDP) துணைத் திட்டமாகும்.
- கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாடு, பயிற்சி போன்ற இதர மேம்பாட்டு நடவடிக்கைகளை வழங்குவதற்காக இத்திட்டம் அமைக்கப்பட்டது.
- **பயனாளிகள்:**
  - இத்திட்டம் துவங்கிய போது SC/ST இனத்தவர்களுக்கு என்று ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.
  - ஆனால், 1997-98 ல் 50% பெண்கள் SC/ST பிரிவைச் சார்ந்தவர்களாகத் தான் இருக்க வேண்டும் என கட்டாயமாக்கப்பட்டது.
  - மேலும் இத்திட்டமானது, மாற்றுத் திறனாளி பெண்களுக்கும், விபச்சாரத்தில் இருந்து மீண்டு வந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பெரிதும் முக்கியத்துவம் அளிக்கிறது.

3. பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம், 1986

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தால் துவங்[illegible]ட்டு, அரசு சாரா நிறுவனங்களால் வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு பெண்களுக்கான பயிற்சி மற்றும்

வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமாகும். (2014-ம் ஆண்டு மேற்கண்ட வழிமுறைகள் திருத்தப்பட்டது)

- **நோக்கம்:** நிலமற்ற கிராமப்புற மற்றும் நகர்புற ஏழைப் பெண்களுக்கு நீடித்த வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி வருமானத்திற்கு வழிவகை செய்தல்.
- 16 வயதுக்கு மேற்பட்டப் பெண்களுக்கு பயிற்சி வழங்கி, சுய தொழில் முனைவோர்களாக மாற்றுதல்

4. அம்மா இருசக்கர வாகனத் திட்டம், 2018

- வேலைக்கு செல்லும் பெண்கள் இருசக்கர வாகனம் வாங்க 50% மானியம் (அ) ரூ. 25000 முன்பணம் வழங்கும் திட்டம்.
- **நிபந்தனைகள்:**
  - வேலைக்கு செல்லும் பெண்களாக இருத்தல் வேண்டும், மேலும் 18 முதல் 40 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  - விண்ணப்பிக்கும் பெண்ணின் வருடாந்திர வருமானம் 2.50 லட்சத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.
  - ஒரு குடும்பத்திற்கு ஒரு பெண் மட்டுமே மானியம் பெற முடியும்.

5. ராஷ்ட்ரிய மகிளா கோஷ், 1993

- மகிளா → பெண்
- அமைப்புசாரா துறையில் உள்ள ஏழை பெண்களுக்கு வருமான வாய்ப்பை பெருக்குதல் மற்றும் குடும்ப செலவினங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிதியுதவி வழங்குதல்.
- இத்திட்டம் மத்திய பெண் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியது.

6. மகிளா சம்ரிதி யோஜனா, 1993

- இத்திட்டம் தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக்கழகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலிருந்து வரும் பெண் தொழில் முனைவோர்களுக்கு, குறு நிதியுதவி வழங்குகிறது.
- பெண்கள் குழுவிற்கு திறன்மேம்பாடு பயிற்சி புகட்டப்பட்டது.

7. ஸ்வயம் சித்தா, 2001

- **நோக்கம்:** சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான முறையில் அனைத்து திட்டங்கள் மற்றும் சேவைகளின் பயன்களை அடைய உதவி செய்கிறது.
- பெண்கள் மத்தியில் அவர்களின் உடல்நலம், சமூக நிலை, கல்வி, சுகாதாரம், சட்ட உரிமைகள், பொருளாதார மேம்பாடு, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துதல்.

8. பாலின வரவு-செலவுத் திட்டம் (2005 - 2006)

- ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நிதி அமைச்சர் பா. சிதம்பரம் அவர்களால் வழங்கப்பட்டது.

https://t.me/tnpscfree

- பாலின வரவு செலவு திட்டமானது, திட்டமிடல், வரவு செலவினம், செயல்படுத்தல், விளைவுகளை ஆராய்தல் போன்ற பல நிலைகளில் ஆராய்வதற்கான பிரதான கருவியாகும். மேலும் கொள்கை / திட்டங்களின் நோக்கம் மற்றும் நிதி ஒதுக்கீடுகளை மறு ஆய்வு செய்வதற்கான கருவியாகவும் விளங்குகிறது.

9. பெண்கள் மேம்பாட்டிற்கான தேசிய இயக்கம் (NMEW), 2011

- மத்திய அரசால் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பொருட்டு அனைத்து ஒருங்கிணைந்த துறைகளிலும் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துதல்

10. மகிளா-இ-ஹாட் (இ-சந்தை)

- ஆன்லைன் வர்த்தகம் செய்வதற்கும், பெண் தொழில் முனைவோர்களை தொழில்நுட்ப ரீதியாக ஆதரிக்கவுமான ஒரு தனித்துவமான தரவுதளம்.
- நாடு முழுவதிலும் உள்ள பெண்களுக்கான டிஜிட்டல் இந்தியா மற்றும் ஸ்டேன்டட் ஆப் இந்தியா முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.
- தங்கள் உற்பத்தி பொருட்களை நேரடியாக ஆன்லைன் சந்தை மூலம் விற்பனைப்படுத்துதல்

11. ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (Stand-up India Scheme)

- பெண்கள், SC/ST பிரிவைச் சார்ந்த தொழில் முனைவோர்களின் மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்டது.
- ரூ. 10 லட்சம் முதல் 1 கோடி வரை தொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்கப்படும்.

12. பிரியதர்ஷினி திட்டம்

- பெண்கள் (ம) வயது வந்தோர்களின் (Adolescent girls) மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சுய உதவிக்குழு திட்டமாகும்.
- பெண்கள் தங்கள் தகுதிகளை வளர்த்தல் மூலம் அரசியல், சட்ட உரிமைகள், உடல்நலப் பிரச்சனைகள் குறித்து விவாதித்து பயனடையும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது.

13. பெண்களுக்கான புதிய ஸ்வர்னிமா திட்டம்:

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும்பிற்படுத்தப்பட்ட பெண்களின் முன்னேற்றத்திற்காக 5% வட்டி வீதத்தில் ரூ. 1,00,000 வரை கடன் வழங்கும் திட்டமாகும்.

முத்ரா:

- மத்திய அரசின் முத்ரா திட்டமானது சிறுகுறு நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகவும், 'ஜன்தன்' யோஜனா திட்டத்தின் கீழ் நேரடி பணப் பரிமாற்றம் வழங்கி பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்காகவும் தொடங்கப்பட்டது.
- ஒட்டு மொத்த நாட்டின் தொழில் முனைவோர்களில் 78 சதவீதத்தினர் முத்ரா திட்டத்தில் கடன் பெற்று பதிவு பெற்றுள்ளனர். முத்ரா கடன் திட்டத்தில் மூன்று வகையான கடன் பிரிவுகள் உள்ளது:
  - சிசு (50000 ரூபாய் வரையிலான கடன்)
  - கிஷோர் (50000 – முதல் 500000 ரூபாய், வரையிலான கடன்)
  - தருண் (500000 முதல் 1000000 ரூபாய் வரையிலான கடன்)

6.1.3 பெண்களுக்கான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் திட்டங்கள்

1. குமரிப்பருவ பெண்களுக்கான ஊட்டச்சத்து திட்டம் (2002 – 2003):

- இத்திட்டத்தின் கீழ் ஊட்டசத்து குறைபாடுள்ள பூப்படைந்த பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களின் உடல் எடைக்கேற்றவாறு 6 கி.கி. உணவு தானியங்கள் வழங்கப்படுகிறது.

2. ஜனனி சுரக்ஷா (பாதுகாப்பு) திட்டம், 2005

- மத்திய அரசின் நிதியுதவி திட்டம்.
- குழந்தை இறப்பு வீதம் மற்றும் தாய் இறப்பு வீதத்தை குறைக்கும் நோக்கத்தில் மருத்துவமனையில் பேறுகாலத்திற்கான ரூ. 1,400 -ஐ நிபந்தனைக்குட்பட்ட நிதியுதவியாக வழங்குகிறது.
- ஆரோக்கியமான மருத்துவமனை பிரசவத்திற்கு
- ரூ. 1400 வரை நிதியுதவி வழங்கி பாதுகாப்பான பிரசவத்திற்கு உதவி செய்தல்

3. ஜனனி சிசு சுரக்ஷா கர்யாக்ரம், 2011

- பொதுநல மருத்துவமனையில் பேறுகாலம் பெறும் அனைத்து கர்ப்பிணிகளுக்கும் முற்றிலும் இலவசமாகவும், பாதுகாப்பாகவும் சேவை அளிக்கப்படுகிறது. மேலும் 'சி' பிரிவு உட்பட அனைத்திற்கும் குறைந்த கட்டணத்திலேயே பேறுகாலம் பெற இத்திட்டம் உறுதியளிக்கிறது.
- பிரசவத்திற்காக வீட்டிலிருந்து மருத்துவமனை வரை அரசு ஆம்புலன்ஸ் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளுதல் போன்றவை இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்.

4. ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்யா கர்யாக்ரம், 2014

- இத்திட்டம் இனப்பெருக்க ஆரோக்கியம் சார்ந்த உடல்நலம், ஊட்டச்சத்து, பரவாத நோய்கள், காயங்கள், மனநலம், புத்துணர்ச்சி அணுகுமுறைகளை தவறாக வழங்குதல் மற்றும் உபயோகித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

சமூகங்கள் அடிப்படையிலான தலையீடுகள்

- வாரம் ஒருமுறை இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டம் (WIFS Programme)
- மாதவிடாய் சுகாதாரத் திட்டம் (MHs)
- இருமுனை கல்வித் திட்டம் (PE)
- காலாண்டு வயது வந்தோர் உடல்நல நாள் (AHT)
- குமரிப்பருவ பெண்களிடம் நட்புறவான சிகிச்சை மருத்துவகங்கள் (AFHCO)

5. பிரதான் மந்திரி சுரக்ஷித் மத்ரித்வா அபியான், 2016

- **நோக்கம்:** உறுதியளிக்கப்பட்ட, விரிவான மற்றும் தரமான பிரசவகால பாதுகாப்பு சேவைகளை ஒவ்வொரு மாதமும் 9-ஆம் தேதி இலவசமாக வழங்குகிறது.
- மேலும் இத்திட்டமானது, பேறுகாலத்திற்கு முந்தைய சேவை உதவிகளை மூன்று மாதங்கள் இடைவெளியில் அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அளிக்கிறது.

https://t.me/tnpscfree

6. பரிவார் விகாஸ் இயக்கம், 2016

- குடும்பக் கட்டுப்பாட்டு திட்டங்களில் சிறப்பான சேவையை வழங்குவதின் மூலம் மக்கள்தொகை வளர்ச்சியை சீரான வேகத்தில் கொண்டு செல்லுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

7. தாய்மார்களின் உண்மைப் பாசத் திட்டம்:

- நாடு முழுவதும் உள்ள தாய்மார்கள் தாய்ப்பால் கொடுத்தலை அதிகப்படுத்துவதற்கு, ASHA பணியாளர்கள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

8. லக்ஷ்யா முயற்சிகள், 2017:

- தரமான தொழிலாளர் அறைகள் மேம்பாட்டு முயற்சி மூலம் குழந்தை பிறப்பின் போது ஏற்படும் இறப்புகள் மற்றும் இறப்புகளை கட்டுப்படுத்துதல்

9. தாய்-சேய் இணையர் திட்டம்

- தரமான தொழிலாளர் அறைகள் மேம்பாட்டு முயற்சி மூலம் குழந்தை பிறப்பின் போது ஏற்படும் இறப்புகள் மற்றும் இறப்புகளை கட்டுப்படுத்துதல்
- குழந்தை பிறப்புக்குப்பின், மேற்கொள்ளும் தனிநபர் தொடர் சிகிச்சைகள், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து தடுப்பூசி முறைகள் குறித்த திட்டம் இதுவாகும்.
- இதற்காக உருவாக்கப்பட்ட செயலி "கீல்காரி" (Kilkari app)
- இந்த செயலி மூலம் கர்ப காலம் மற்றும் குழந்தை பிறப்பு, குறித்த ஒலிக் குறிப்புகள் வாரம் ஒருமுறை வழங்கப்படும்.

6.2 தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மருத்துவம் சார்ந்த திட்டங்கள்

6.2.1 பேறுகால உதவித் திட்டங்கள்

1. கருவுறுதலுக்கு முன் நிர்ணயம் மற்றும் பிறப்பிற்குமுன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு தடை செய்தல் சட்டம்), 1994

- **நோக்கம்:** அனைத்து மாவட்டங்களிலும் பிறப்பில் உள்ள பாலின விகிதம், சமஅளவில் பராமரிக்க.
- மீயொலிநுட்ப சோதனை (USG) மையங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்க.
- ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை உட்பட அனைத்து நிலையங்களிலும் இந்த மீயொலிநுட்ப சோதனை மையத்திற்கான அனுமதி பெறுதலை அவசியமாக்க.

2. டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம், 2011

- இந்தியாவிலேயே இத்திட்டத்தினை 2011 முதல் செயல்படுத்தி வரும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- கருவுற்ற பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு கட்டவும், சத்தான உணவை உட்கொள்ளவும் ரூ. 12,000 நிதி உதவி வழங்கப்பட்டது.
- ஏப்ரல் 1, 2018 முதல் ரூ. 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், 2015

- **நோக்கம்:** பேறுகாலத்திற்கு பின், தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உயர்த்துதல்.
- ரூ. 1000 மதிப்புள்ள 16 பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை தாய்மார்களுக்கு வழங்குகிறது.

4. அம்மா தாய்சேய் நல பெட்டகம், 2019

- இத்திட்டமானது, டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது.
- கர்ப்பிணிப் பெண்களுக்கு உள்ள இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும், இரும்புச் சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய்சேய் நல பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன.

5. தாய்ப்பால் வங்கிகள்

- 25 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைநகரில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கி செயல்படுத்தப்படுகிறது.
- 352 பேருந்து நிலையங்கள் மற்றும் முனையங்களில் பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தனிமையில் பாலூட்டுவதற்காக பாதுகாப்பான தனிஅறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

6. RMNCH+A சேவைகள்

- Reproductive Maternal Newborn Child Health Adolescent (RMNCH+A)
- பேறுசார், மகப்பேறு, பச்சிளம் குழந்தை, குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான மருத்துவ சேவைகள் (RMNCH+A)
- **நோக்கம்:** மருத்துவ சேவைகளில் முக்கியமாக, மருத்துவமனையில் பிரசவம், அவசரகால மகப்பேறு சேவை, பாதுகாப்பான கருக்கலைப்பு, குடும்ப கட்டுபாடு சேவைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சுகாதார சேவைகள் உட்பட பேறுசார் மற்றும் பச்சிளம் குழந்தை நல சேவை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

7. விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (CEmONC):

- **நோக்கம்:** மகப்பேறு மரண விகிதத்தை குறைப்பது (2018-19 ஆம் ஆண்டில் இவ்விகிதத்த ஒரு இலட்சத்திற்கு 60 என குறைக்கப்பட்டுள்ளது.)
- தேசிய நல்வாழ்வு குழுமத்தின் வாயிலாக சீமாங் (CEmONC) சேவையினை தரம் உயர்த்த மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 126-சீமாங் (CEmONC) மையங்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டமருத்துவமனைகள்மற்றும்சிறப்பாகசெயல்படும்வட்டம்/வட்டம்சாராமருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

- இச்சேவையினால் சாதாரணமாக பொது சுகாதார நிலையங்களில் நடைபெறும் சுகபிரசவங்களுக்கு ஆகும் கூடுதல் செலவினங்கள் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் குறைவாக செலவிடப்படுகிறது.

குறிப்பு

- தமிழ்நாட்டில் மட்டும்தான் 65 சதவிகிதம் அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவம் நடைபெறுகிறது.

8. முக்த் பாரத் திட்டம்

- இரத்தசோகை முற்றிலும் இல்லாத பாரதத்தை உருவாக்கும் திட்டம் – கருவுற்ற தாய்மார்களிடையே இரத்தசோகை நோய் தடுத்தலுக்கான திட்டம்.
- **நோக்கம்:** 2018 –ஆம் ஆண்டு முதல் 2022 –ஆம் ஆண்டிற்குள் இரத்தசோகை விகிதத்தை ஒவ்வொரு ஆண்டும் 3% குறைத்தல்.
- கர்ப்பிணி பெண்களுக்கு இரத்தசோகை வராமல் தடுப்பதற்கும் மற்றும் சிகிச்சைக்காகவும் இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள் வழங்கப்படுகிறது.
- பாலூட்டும் தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு பின் 180 நாட்களுக்கு இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குவது பற்றிய விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.
- 6 முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஜூனியர் வாராந்திர இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 'பிங்க்' நிற இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

குறிப்பு

- தேசிய குடும்ப நல ஆய்வு 2016 (NFHS-4-2016) அறிக்கையின்படி, தமிழகத்தில் 44% கர்ப்பிணித் தாய்மார்களும், 56% பாலூட்டும் தாய்மார்களும் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

9. கர்ப்பகால நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துதல்

- கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிசுக்களுக்கு நோய் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக, கர்ப்பகால நீரிழிவு நோய்க்கான பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

10. இரத்த வங்கிகள் மற்றும் இரத்த சேமிப்பு மையங்கள்

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்திற்கு (TANSACS) இரத்தம் மாற்று சேவைக்கு தேவையான நிதி ஆதாரங்களை தேசிய நலவாழ்வு குழுமம் வழங்குகிறது.

11. மகப்பேறு மற்றும் குழந்தைகள்நல மையம் (MCHCS)

- ஒரு சுகாதார பிரிவு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதம், 42 சமுதாய் சுகாதார மையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள்நல மையங்கள் நிலை – II ஆக நிறுவப்பட்டுள்ளது.

- **சேவைகள்:** மகப்பேறு அவசர பராமரிப்பு, பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள், பச்சிளம் குழந்தை பிறப்புகளை நிலைப்படுத்தும் சேவைகள் மற்றும் விஷ முறிப்பு போன்ற சேவைகளை கூடுதலாக வழங்குகின்றன.

12. பாலூட்டும் தாய்மார்களுக்கான சத்தான உணவு வழங்கும் திட்டம்

- மருத்துவ பரிசோதனைக்காக ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் கற்பிணி பெண்களுக்கு சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது.
- அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

13. உயர்வரிசை பிறப்பை தடுப்பதற்கான செயல்பாடுகள் (High Order Birth)

- சட்டத்திற்கு விரோதமான கருக்கலைப்பு மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆகியவற்றை குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.
- **சேவைகள்:** தாய்மார்களுக்கு நிரந்தர கருத்தடை அறுவைசிகிச்சை, கருத்தடை வளையம், கருத்தடை ஊசி, வாய்வழி மாத்திரைகள் ஆகியவற்றை வழங்குகிறது. மேலும், கருக்கலைப்பு முறைகளான, மருத்துவ முறையிலான கருக்கலைப்பு (Medical Method of Abortion - MMA) மற்றும் உறிஞ்சி குழாய் கருக்கலைப்பு (Manual Vaccum Aspiration - MVA) சேவைகளையும் வழங்குகிறது.

குறிப்பு

- தமிழ்நாடு மொத்த கருவள விகிதமானது, மாற்று நிலை (Total Fertility Rate - TFR) 1.6 என்ற நிலையை ஏற்கனவே அடைந்துள்ளது.

தமிழக அரசின் மகளிர் நலத் திட்டங்களால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம்

- 2011 ஆம் ஆண்டில், பாலின விகிதமானது 996/1000 ஆக உயர்ந்துள்ளது.
- பெண்களின் கல்வியறிவு 2001-ல் 64.55% இல் இருந்து 2011-ல் 73.44% ஆக அதிவேக வளர்ச்சி பெற்றுள்ளது.

6.3 குழந்தைகள் நலவாழ்வு

- குழந்தைகள் நலத் திட்டங்கள் என்பது 18 வயது வரை, அவர்களின் உரிமைகளை பெற்றுத் தருவது, கல்வி வழங்குவது, பொருளாதாரச் சுரண்டல்களில் இருந்தும், வன்கொடுமைகளிலிருந்தும் பாதுகாப்பது போன்றனவாகும்.

6.3.1 குழந்தைகள் நலத் திட்டங்கள்

1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

- 1982-ல் முதல்வர் டாக்டர். M.G. ராமச்சந்திரன் "சத்துணவுத் திட்டத்தை" அறிமுகப் படுத்தினார்.
- 1991-ல் இத்திட்டத்தின் பெயர் "புரட்சித் தலைவர் MGR சத்துணவுத் திட்டம்" எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

https://t.me/tnpscfree

- 2013-ல் முதல்வர் டாக்டர். ஜெ. ஜெயலலிதா அவர்களால் குழந்தைகளின் விருப்பத்திற்கேற்றவாறு இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு தற்போது பலவகையான கலவை உணவு வகைகளுடன் மசாலா முட்டையும் வழங்கப்பட்டது.

நோக்கம்:

- அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்.
- போதிய உணவின்றி வாடும் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல்.
- வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு தொடர்ந்து வருவதை ஊக்கப்படுத்துதல் மற்றும் முறையான கல்வி பெற உதவுதல்.
- வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்.

கூடான, ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம்:

- பள்ளி குழந்தைகளுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற் குள்ளேயே சமைத்து வழங்கப்படுகிறது.
- **பயனாளிகள்:** 5-9 வயதுடைய தொடக்கக் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் 10-15 வயதுடைய இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள்.

2. தொட்டில் குழந்தை திட்டம், 1992

- **தொடங்கப்பட்ட இடம்:** சேலம் மாவட்டம், தமிழ்நாடு.
- பெண் சிசுக் கொலையை தடுப்பதையும், ஆதரவின்றி விடப்படும் குழந்தைகளை பாதுகாப்பதும், குழந்தைகள் பாலின விகிதத்தை அதிகரிப்பதும் இதன் நோக்கங்களாகும்.
- 2001-ம் ஆண்டு இத்திட்டமானது மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- 2011-ம் ஆண்டு இத்திட்டமானது, கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- 2018-2019 ம் ஆண்டு வரை, மொத்தம் 108 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளனர்.

3. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், 1992

- இத்திட்டம் சமூக நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நோக்கம்:

- அரசின் முதலீட்டை பயன்படுத்தி, பெண் குழந்தைகளுக்கான உரிமைகளை பாதுகாத்து, மேம் படுத்துவதன் மூலம் பாலின வேறுபாட்டைக் குறைத்தல்
- பெண்களுக்கு தரமான உயர்கல்வி கிடைக்க வழிவகை செய்யும் விதமாக அவர்களின் பெற்றோருக்கு நிதியுதவி வழங்குதல்

இரு பிரிவுகள்:

- திட்டம் I: ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்திற்கு ரூ. 50,000/- அவரது வங்கிக் கணக்கில் வைப்பு நிதியாக வைக்கப்படும்.
- திட்டம் II: இரண்டு பெண் குழந்தைகள் இருப்பின் தலா ஒருவருக்கு ரூ. 25,000/- வீதம் அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பு நிதியாக வரவு வைக்கப்படும்.

நோக்கம்:

- பெண் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு குறைந்தபட்சம் இடைநிலை கல்வியாவது கிடைக்குமாறு செய்வதுமே இதன் நோக்கமாகும்.
- பெண்கள் 18 வயதுக்கு பின் திருமணம் செய்து கொள்ள ஊக்குவிக்கிறது.
- இரண்டு குழந்தைகளுடன் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை பின்பற்ற பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார மேலாண்மையை வழங்க.
- பெண் குழந்தைகளின் நிலையை உயர்த்துவதற்கான ஒரு குடும்பத்தின் பங்கினை வலுப்படுத்துதல்

இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்:

1. ஒரு பெண் குழந்தையோ / இரு பெண் குழந்தையோ இருக்கலாம். ஆண் குழந்தை இருக்கும் பட்சத்தில் இத்திட்டத்தில் பயனடைய முடியாது. வருங்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுத்தாலும் இத்திட்டத்தின் பலன்கள் ரத்தாகும்.
2. பெற்றோர்களில் ஒருவர் 35 வயதிற்குள் கண்டிப்பாக குடும்பக் கட்டுப்பாடு செய்திருக்க வேண்டும்.
3. இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரர் குறைந்தது 10 ஆண்டுகளாவது தமிழ்நாட்டில் வசித்திருக்க வேண்டும்.
4. குடும்பத்தின் ஆண் வருமானம்: ரூ. 72000/- இருக்க வேண்டும்.
5. பெண் குழந்தை பிறந்த 3 ஆண்டுக்குள், திட்டம் - I க்கும், திட்டம் - II க்கும் விண்ணப்பிக்க வேண்டும்.
6. ஒரே பிரசவத்தில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தாலும் அவர்கள் "திட்டம் - II" ன் கீழ் தான் வருவார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்திட்டத்தின் விளைவுகள்

1. 2011-ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி பெண்களின் கல்வியறிவு 73.44% ஆக உயர்ந்துள்ளது. (2001 - 64.55%)
2. இத்திட்டமானது பெண்களின் கல்வி இடைநிற்றல் வீதத்தை குறைத்துள்ளது.
3. 1997 - 2017 இந்த இருபது ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 8,68,077 ஆகும்.

https://t.me/tnpscfree

4. சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

- ஏழைக் குடும்பத்தச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

தகுதிகள் (மற்றும்) நிபந்தனைகள்

1. திட்டம் - Iன் கீழ் பயனடைய, ஆண்டு வருமானம் ரூ. 50000/- க்கு குறைவாகவும், திட்டம் - IIன் கீழ் பயனடைய, ஆண்டு வருமானம் ரூ. 12000/- க்கு குறைவாகவும் இருக்க வேண்டும்.
2. ஒரு பெண் குழந்தையாக இருந்தால் அக்குழந்தை பிறந்து 3 ஆண்டுகளுக்குள்ளும், இரு பெண் குழந்தைகளாக இருப்பின் இரண்டாவது குழந்தைக்கு 3 வயது முடிவதற்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.
3. பெற்றோரில் ஒருவர் 35 வயதிற்குள் கருத்தடை அதாவது சிகிச்சை செய்திருக்க வேண்டும்.
4. ஆண் குழந்தைகளை தற்போதோ அல்லது வருங்காலத்திலோ தத்தெடுக்கக் கூடாது.

6.3.2 குழந்தை நலம்

1. பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள்

- கேரளாவிற்கு அடுத்தபடியாக குறைவான குழந்தை இறப்பு விகிதத்தில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது (2017).
- மாதிரி பதிவுமுறை அறிக்கை 2017-ன் படி, தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு வீதம் 17/1000 ஆக இருந்து 16/1000 ஆக குறைந்துள்ளது.
- **சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவுகள்** (SNCU): மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் / மாவட்ட தலைமை மருத்துவமனைகள் / வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- **வீட்டளவிலான இளம் குழந்தை பராமரிப்பு:** இச்சேவை சமுதாய அளவில் கிராம சுகாதார செவிலியர், கிராம சுகாதார தன்னார்வலர் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களால் வீடுகளுக்கு சென்று வழங்கப்படுகிறது.

2. ஊட்டச்சத்து புனர்வாழ்வு மையம் (NRC):

- கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் இச்சிறப்பு பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

3. ராஷ்ட்ரிய பால் சுவாஸ்திய கார்யக்கிரம் (RBSK) (தேசிய சிறார் நலத்திட்டம்)

- இத்திட்டம் பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய 30 வகையான நோய்களின் ஆரம்ப நிலை அறிகுறிகளை கண்டறிந்து அதற்கேற்ற சிகிச்சையை அளிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

4. மாவட்ட ஆரம்ப நிலை சிகிச்சை மையம் (DEIC)

- வளரும் குழந்தைகளுள் குறைபாடுகள் ஏற்படுவதை குறைக்கவும் ஆரம்ப நிலையிலேயே அவற்றை கண்டறிந்து தகுந்த சிகிச்சை வழங்கப்பட இம்மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்ய கர்யாக்ரம் (தேசிய வளரிளம் பருவத்தினர் நலப்பாதுகாப்பு திட்டம் (RKSK):

- **நோக்கம்:** வயது வந்த / வளரிளம் குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்தை முழுமையான அளவில் பூர்த்தி செய்யும் பொருட்டு தொடங்கப்பட்டது.
- **முன்னுரிமை அம்சங்கள்:** ஊட்டச்சத்து, பாலினம் மற்றும் பேறுசார் நலம், தொற்றா நோய்கள், தவறான பழக்கம், காயங்கள் மற்றும் வன்முறைகள் மற்றும் மனநலம் ஆகிய ஆறு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

6. வாரம் ஒரு முறை இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டம்

- இந்த திட்டத்தில் பள்ளிக்கு செல்லும் மற்றும் பள்ளிக்கு செல்லாத வளரிளம் பருவத்திலுள்ள அனைத்து சிறுவர் சிறுமிகளுக்கு (10 முதல் 19 வயது வரை) ஆண்டுக்கு இருமுறை அளிக்கப்படும் குடற்புழு நீக்க மாத்திரை (பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட்) வழங்குகிறது.
- வாரம் ஒரு முறை ஒரு இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்கப்படுகிறது.

குடற்புழு நீக்குதல் (Deworming)

- 1 வயது முதல் 19 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் மூலம் ஆல்பெண்டசோல் என்னும் கிருமி நீக்க / குடற்புழு மாத்திரைகள் வழங்குதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

7. ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்யா கார்யக்ராம் (RKSK)

- குழந்தை நல பரிசோதனை மற்றும் ஆரம்பநிலை சிகிச்சை வழங்கும் திட்டம்
- **நோக்கம்:** 0-18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் நான்கு வகை நோய்கள், பிறப்பின் போது குறைபாடு, சீர்குலைவுகள், குறைபாடுகள் மற்றும் ஊனம் உள்ளடக்கிய வளர்ச்சிக் குறைவு போன்றவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பது..

8. "102" சிகிச்சை முடித்து வீடு வரை வழியனுப்பும் திட்டம் (ஜனனி சிசு சுரக்ஷி கார்யகிராம்):

- அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிகிச்சை பெற்ற குழந்தைகள் ஆகியோரை பாதுகாப்பாக வீடு வரை அழைத்துச் சென்று விடுவது இதன் நோக்கமாகும்.
- சென்னை, எழும்பூர் மகப்பேறு மற்றும் நோயியல் நிலையம் மற்றும் மகளிர் / குழந்தைகள் மருத்துவமனையில், இந்திய செஞ்சிலுவை சங்கம் மூலம் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் 2020

- ஒவ்வொரு கிராமத்திலும், பேரூராட்சியிலும் விளையாட்டுக்கு தேவையான வசதிகளும், விளையாட்டு திடல், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குதல்.
- இத்திட்டம் கிராமப்புற இளைஞர்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

https://t.me/tnpscfree

6.3.3 வளரிளம் பெண்கள் திட்டம்: மாதவிடாய் கால சுகாதார திட்டம் 2012

நோக்கம்:

1. வளரிளம் பெண்களிடையே மாதவிடாய் கால சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
2. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 32.79 லட்சம் கிராமப்புற வளரிளம் பெண்களுக்கு, விலையில்லா 'சானிட்ரி நாப்கின்' வழங்கப்படுகிறது.
3. கிராமப்பகுதிகளில் ஒவ்வொரு பள்ளிகளிலும், அதற்கான ஒருங்கிணைப்பு ஆசிரியர்கள், பள்ளி மாணவிகளுக்கு 'சானிட்ரி நாப்கின்'களை வழங்குகின்றன.
4. கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் பள்ளிசெல்லா பெண்களுக்கு இலவச நேப்கின்களை விநியோகிக்கின்றன.

6.4 பொதுமக்கள் அனைவர்க்கும் பொதுவான திட்டங்கள்

1. அம்மா ஆரோக்கியா திட்டம் 2016:

- கிராமப்புறத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை இலவச உடல் பரிசோதனை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

2. அம்மா முழு – உடல் பரிசோதனை மற்றும் பெண்களுக்கான சிறப்பு உடல் பரிசோதனை திட்டம், 2016

- முதன் முதலாக, மாநிலத்தில் சென்னை அரசு மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டது.
- 2018 ஜூன் முதல் ஒமந்தூரார் எஸ்டேட், சென்னையிலுள்ள தமிழக பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையிலும் இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.
- மேலும், இத்திட்டமானது கோவை, மதுரை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்பட்டது.

3. ஆம்புலன்ஸ் சேவை 108

- தமிழ் நாட்டில் ஆம்புலன்ஸ் சேவை ஒரு இலவச எண்ணின் 24 x 7 என்ற கீழ் அடிப்படையில் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது.
- தமிழக அரசு மற்றும் GVKEMRI என்ற நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதற்கான செயல்பாட்டு நிதியில் 20% தேசிய சுகாதார இயக்கம் வழங்குகிறது.
- ஒவ்வொரு ஆம்புலன்ஸிலும் ஒரு பயிற்சியளிக்கப்பட்ட செவிலியரும், வேகமாக செலுத்தும் திறமையான ஓட்டுனரும் இருப்பர்.
- 2011-ல் இருந்து பச்சிளம் குழந்தைகள் இறப்பதை குறைக்கும் வகையில் ஆம்புலன்ஸ் வசதி வழங்கப்படுகிறது.
- 8.2.2016 முதல் மக்கள் மற்றும் வாகன நெருக்கம் அதிகமாக உள்ள பகுதிகளில் விரைவான சேவையை வழங்க இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- தமிழகம் முழுவதும் 940 ஆம்புலன்ஸ்களும், மலை வாழிடங்களில் பிரத்யேக 76 ஆம்புலன்ஸ்களும் இயக்கப்பட்டு வருகிறது.

- அவசரகால 108 ஊர்திகள் பாதிக்கப்பட்ட இடத்திற்கு வருவற்கான காலம் முன் இருந்ததை விட குறைக்கப்பட்டுள்ளது. 2017ல் சராசரியாக15.04 நிமிடமாக இருந்த வரைவு நேரம் தற்போது 13.48 நிமிடங்களாகவும், மேலும் நகர்ப்புறங்களில் 11 நிமிடங்களிலிருந்து 8.36 நிமிடங்களாக குறைந்துள்ளது.
- அவசரகால சிகிச்சை மையம்: நெடுஞ்சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களைக் கொண்டுசெல்லும் போது மருத்துவமனை அதிக தூரத்தில் இருந்தால் அத்தகைய நபர்களுக்கு உரிய அவசர சிகிச்சை அளித்து அவர்களது உடல் நிலையை நிலைநிறுத்த செய்வதற்கான அவசர சிகிச்சை மையமானது தாம்பரம், பாடியநல்லூர், ஈஞ்சம்பாக்கம் மற்றும் மகாபலிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு / மேற்பார்வை அளவு

- மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்
- மாநில அளவில் குடும்ப (ம) சமூக நலத்துறை இயக்குனர்.
- ஆறு மாதத்திற்கொரு முறை வாகனங்கள் தணிக்கை செய்யப்படுகிறது.

பிரதம மந்திரி வீடுகள் திட்டம் (கிராமின்) : மற்றும் முதலமைச்சரின் 'பசுமை வீடு திட்டம்'

- தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கு வீடுவழங்குவதற்காக ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களை வரைமுறை செய்து தகுதியான நபர்களுக்கு பட்டா வழங்கி சொந்தமாக வீடுகட்ட நிதியுதவி செய்யும் சிறப்பு திட்டமாகும்.

6.4.1 தொலைத் தொடர்பு மருத்துவ சேவையுடன் கூடிய இ-நலம்

1. '104' மருத்துவ தகவல் சேவை மற்றும் தொலை மருத்துவ சேவை

- **நோக்கம்:** மருத்து தகவல், ஆலோசனை, சுகாதாரம் சார்ந்த பொதுமக்கள் குறைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு காண பொதுமக்களிடமிருந்து அழைப்புகள் பெற்று மருத்துவ ஆலோசனைகள் வழங்குதல்.
- **சேவைகள்:** தற்கொலை முயற்சிகளைத் தடுக்க உளவியலாளர்கள் மூலம் தொலைபேசி எண் 104 வாயிலாக தற்கொலைக்கு முயன்று தப்பியவர்களை ஆற்றுப்படுத்துதல்.

2. நமது மருத்துவமனை (Mera Aspataal) :

- நமது மருத்துவமனை திட்டம் என்பது குறுஞ்செய்திகள், வலைதளம், கைப்பேசி ஆகியவற்றின் மூலமாக மருத்துவமனைகளிலிருந்து பெறும் சேவைகள் சம்பந்தமான தகவல்களை பெறும் ஒரு முயற்சியாகும்.
- நோயாளிகளின் மனநிறைவு அளவீட்டில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது.

https://t.me/tnpscfree

6.4.2 நோய் சார்ந்த திட்டங்கள்

1. ஹீமோகுளோபினோபதியை முன்கூட்டியே கண்டறிவதற்கான திட்டம்:

- கதிரருவாள் இரத்தசோகை, தாலசீமியா போன்ற நோய்கள் பழங்குடியின மக்களுக்கு ஏற்படா வண்ணம் முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பது தென்னிந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் தான் முதன் முதலாக செயல்படுத்தப்படுகிறது.

2. வாக்கத்தான் (நடைப்பயிற்சி) விழிப்புணர்வு

- தமிழக அரசும், "Can stop" என்ற தொண்டு நிறுவனமும் இணைந்து நடத்தும் விழிப்புணர்வு நிகழ்வு.
- பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது இதன் நோக்கமாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் "புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக" கடைபிடிக்கப்படுகிறது.

3. திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் (RNTCP), 1997:

- 2002-ம் ஆண்டு இத்திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் என இரண்டிலும் விலையில்லா காசநோய் கண்டறியும் சோதனை மற்றும் சிகிச்சை ஆகியவை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.
- 'தேசிய திறன் வாய்ந்த திட்டம்' (2017-2025) - காசநோய் தடுப்பு திட்டத்தில் உள்ள அனைத்து சிறப்பம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- மேலும் காசநோய் தடுப்பு திட்டப் பணிகளில் புதிய மாற்றங்களை கொண்டு வரும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிக்ஷய் போசான் யோஜனா:

- 2018 ஏப்ரலில் அறிமுகம் செய்யப்பட்டது.
- ஊட்டச்சத்து உணவுப் பொருள்களை நேரடியாக பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டம் முதன் முதலில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது.
- அனைத்து நோயாளிகளும் NIKSHAY மூலம் இணைய வழியில் கண்காணிக்கப்படுகின்றனர். NIKSHAY மருந்தகங்கள் மருந்துகளின் கண்காணிப்பு மற்றும் மேலாண்மையை கவனிக்கின்றன.
  - "காசநோய் இல்லா தமிழகம்" - என்ற இலக்கை அடைவதற்கு, 'கண்டறிதல் - சிகிச்சை அளித்தல் - தடுத்தல் - உருவாக்குதல்' ஆகிய நான்கு கொள்கைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
  - சிறைச்சாலைகள் மற்றும் சுவதார், உஜ்வாலா போன்ற அரசு இல்லங்களில் இருப்பவர்களுக்கு காசநோய் மற்றும் எச்ஐவி உள்ளதா என்று கண்டறியும் முகாம்கள் நடத்தப்படுகின்றன.
  - மாதத்திற்கு ரூ. 1000 நிதியுதவி வழங்கப்படுகிறது.

DR - TB மையங்கள் (Drug Resistant Tuberculosis Bacteria):

- மேற்படி மையங்கள் TB நோயாளிகளுக்கு தமிழ்நாட்டில் சிகிச்சையளிக்க தாம்பரம், காஞ்சிபுரம், சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
- சென்னை மாநகராட்சி மற்றும் தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து சென்னையில் TB ஒழித்தல் திட்டம் 2023 கொண்டு வந்துள்ளன.

காசநோய் மருந்துகள்

- பெடாகுயிலைன் - வயது வந்த காசநோயாளிகளுக்கானது.
- டெலாமனிட் - குழந்தை காசநோயாளிகளுக்கானது.
- பிரிட்டோமனிட் - காசநோய் தடுப்பு மருந்து

4. தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம் (2007 - 2008)

- **நோக்கம்:** புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் புகையிலை கட்டுப்பாட்டு சட்டங்கள் பற்றி அதிகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் புகையிலை கட்டுப்பாடு சட்டங்களை திறம்பட செயல்படுத்த உதவுதல்.
- தமிழ்நாட்டில் 12,798 பள்ளிகள் மற்றும் 1344 கல்லூரிகள் குறிப்பிட்ட வகைகளில் "புகையிலை இல்லா மண்டலங்களாக" அறிவிக்கப்பட்டுள்ளன.
- சிகரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் தடுப்பு சட்டம், 2003ன் மீறியவர்களிடமிருந்து அபராதம் வசூல் செய்வதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

5. சட்ட உதவி மையங்கள்:

- தமிழ்நாடு சட்ட பணிகள் ஆணைக்குழுவுடன் இணைந்து, அனைத்து மாவட்டங்களிலும் இலவச சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.
- இத்திட்டத்தின் கீழ் 'எச்.ஐ.வி / எய்ட்ஸ்' உடன் வாழ்வோர் மற்றும் அதிக பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தில் இருக்கும் மக்களின் சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சனைகளை, கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களில் பணியாற்றும் முதுநிலை ஆலோசகர் மூலமாகத் தீர்த்து வைத்தல்.

6. இரத்த வங்கி

- நோயாளிகளுக்கான இரத்த தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. தமிழ்நாட்டில் 297 இரத்த வங்கிகள் செயல்படுகிறது. அவற்றில்,
  - 89 → மாநில அரசு இரத்த வங்கிகள்
  - 9 → மத்திய அரசு இரத்த வங்கிகள்
  - 199 → தனியார் இரத்த வங்கிகள்

https://t.me/tnpscfree

- மேலும் 527 இரத்த சேமிப்பு மையங்கள் உள்ளன. இதில்
  - 383 → அரசு மையங்கள்
  - 144 → தனியார் மையங்கள்.

- தமிழகத்தில் நமது இரத்த தேவைகளில், 94 விழுக்காடுகளுக்கு மேல் தன்னார்வ இரத்த கொடை முகாம்களிலிருந்து பெறப்படுகிறது.
- ஆணுறை பயன்பாடு, இலக்கு மக்கள் மற்றும் பொதுமக்களிடையே, எச்.ஐ.வி மற்றும் பால்வினை தொற்று நோய்கள் எளிதில் பரவக்கூடிய தடுப்பதில் முக்கியப்பங்கு வகிப்பதால், இலவசமாக ஆணுறைகளை, சுகவாழ்வு மையங்கள், ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துல் மற்றும் சிகிச்சை மையங்கள், கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள், சமூக மற்றும் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் களப்பணியாளர்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

7. ரெட் ரிப்பன் கிளப், 2005

- நாட்டிலேயே முன்னோடியாக, இளைஞர்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எண்ணங்கள் மற்றும் நடத்தை மாற்றத்தை கொண்டு வரவும் இவ்வமைப்பு துவங்கப்பட்டது.

8. உத்தியல் தகவல் மற்றும் மேலாண்மை முறை

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் அனைத்துப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம். இரத்த வங்கிகள், பால்வினை தொற்று சிகிச்சைப் பிரிவு, இலக்குப் பணிகள் திட்டம், தகவல், கல்வி மற்றும் தொடர்பு மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு வாயிலாக, ஒவ்வொரு மாதமும் அறிக்கைகள் இச்செயலி மூலம் பெறப்படுகிறது.

மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள்:

- தேசிய சுகாதார திட்டம் மற்றும் இதர அரசு துறைகளின் திட்டம், சமூக மற்றும் தொண்டு நிறுவனங்களின் மாவட்ட அளவிலான எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தடுப்பு திட்டப் பணிகளை ஒருங்கிணைக்கும் செயல்பாடுகளை, 29 மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டு வருகிறது.
- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 27 மாவட்டங்களிலும், திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய 2 மாவட்டங்களில் தமிழக அரசின் நிதி உதவியுடனும், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்ட நபர் – கூட்டு மருத்துவ தொடர்பு முறை (PALS)

- இது ஒரு அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு கருவியாகும். இது அனைத்து எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்ட நபர்களின் (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பொது மக்கள்) விவரங்களை உட்கொண்டதாகும்.

எச்.ஐ.வி தீவிர கண்காணிப்பு (HSS)

- கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பிரிவினர்கள் வாயிலாக எச்.ஐ.வி.யின் தாக்கம் எந்த அளவு உள்ளது என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவதற்காக எடுக்கப்படும் கணக்கெடுப்பு ஆகும்.
- 2018-2019 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகளிடம் இந்த கணக்கெடுப்பு முதன் முறையாக சேர்க்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு அரசின் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான குழந்தைகளுக்கான அறக்கட்டளை (Tamil Nadu Trust for Children Affected by HIV/AIDS)

- இதன் மூலம் சுமார் ரூ. 9.5 கோடி மூலதன நிதியிலிருந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான அனாதை மற்றும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு சத்தான உணவு, கல்வி போன்றவைகளுக்காக நிதியுதவி வழங்கி வருகிறது.

10. மாண்புமிகு முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டம்

- எச்.ஐ.வி. பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்' கீழ், மாதந்தோறும் 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 8,100 நபர்கள் பயனடைந்து வருகின்றார்கள்.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று உடன் வாழ்பவர்கள், கூட்டு மருந்து சிகிச்சை மையங்களுக்கு சென்று வர, கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.
- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்று உடன் வாழும் மக்களுக்கு கீழ்காணும் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்று உடன் வாழும் மக்களுக்கு கீழ்காணும் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது:
  1. விதவை ஓய்வூதியம்
  2. முதியோர் ஓய்வூதியத் திட்டம்
  3. அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம்
  4. மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

11. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்

- தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, நவீன மருத்தவ வசதிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் முதலமைச்சரின், விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் ஒன்றாகும்.
- குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 72,000/- ரூபாய்க்கும் குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

https://t.me/tnpscfree

- தமிழக அரசு பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் 23.09.2018-ல் ஒருங்கிணைத்துள்ளது. யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- காப்பீட்டுத் தொகை-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை ஒருங்கிணைத்த பின்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு உள்ளது.
- இத்திட்டத்தில் மொத்தம் 977 மருத்துவமனைகள் (224 அரசு மருத்துவமனைகள் மற்றும் 733 தனியார் மருத்துவமனைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 425 3993

6.5 பழங்குடியினர் நலன்

1. தன்னார்வலர்களின் (ASHA) மூலம் பழங்குடியினருக்கான சுகாதார சேவை:

- கிராம சுகாதார செவிலியர்களின் சேவையை மேம்படுத்துவதற்காக, பழங்குடிப் பகுதி/மலைப் பகுதி/தொலைதூர மற்றும் கடினமான இடங்களில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2,650 கிராம சுகாதார தன்னார்வலர்கள் (ASHA) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- கிராம சுகாதார தன்னார்வலர்கள், அதே பழங்குடியின சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருப்பதால், இவர்கள் மலைப் பகுதியில் வாழும் கருவுற்ற தாய்மார்களை துணை சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனை செய்து கொள்ள ஊக்குவிக்கிறார்கள்.
- இதனால் சுகாதார நிலையங்களில் நிகழும் பாதுகாப்பான பிரசவம் அதிகரிக்கிறது.

2. பழங்குடியினர் பகுதியில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ கால காத்திருப்பு அறை

- மலைப்பகுதிகளில் வாழும் தாய்மார்களின் உத்தேச பிரசவ தேதிக்கு முன்னதாக அதாவது இரு வாரங்களுக்கு முன்னரே மருத்துவ நிலையங்களில் சேர்க்கும் வகையில், 16 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் மலையடிவாரத்தில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பிரசவ காத்திருப்பு அறைகளில் தங்க வைக்கப்படுவதால், பாதுகாப்பான பிரசவம் நடைபெறுகிறது.
- தாய்மார்களுக்கும் அவர்களது உறவினருக்கும் தங்கும் நாட்களில் இலவசமாக சத்தான உணவு அளிக்கப்படுகிறது.
- 2018-2019 ஆம் ஆண்டில் 2,851 தாய்மார்கள் பிரசவகால காத்திருக்கும் அறைகளை பயன்படுத்தியுள்ளனர்.

3. மலைவாழ்/பழங்குடியினர் பகுதிகளில் நடமாடும் மருத்துவ சேவைகள்

- பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நடமாடும் மருத்துவ சேவையை மேம்படுத்த, பழங்குடியினர் வசிக்கும் 13 மாட்டங்களில் உள்ள வட்டாரங்களில் கூடுதலாக 20 நடமாடும் மருத்துவ குழுக்கள்

செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ குழுக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

- பழங்குடியினர் பகுதி, 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மற்றும் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய 14 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கும் ஹீமோகுளோபினோபதிஸ் என்ற இரத்த நோய்க்கான சிறப்பு ஆய்வக பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

4. பழங்குடியின ஆற்றுப்படுத்துனர்கள்:

- இவர்கள் மருத்துவ சேவை பற்றிய விழிப்புணர்வை பழங்குடியின மக்களிடையே ஏற்படுத்தவும், அவர்கள் சுகாதாரமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ உதவி செய்யும் பணியை செய்து வருகின்றனர்.

5. ஹீமோகுளோபினோபதி (Haemoglobinopathies):

- பழங்குடியினரிடையே தலசீமியா மற்றும் சிக்கல்செல் (Sickle Cell) இரத்த சோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான திட்டம், தென்னிந்திய மாநிலங்களிடையே, தமிழ்நாடு முதன்முதலாக செயல்படுத்தியுள்ளது.
- இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதன் மூலம் வருங்காலத்தில் இந்த நோய்களின் தாக்கம் குறைவதோடு எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஹீமோகுளோபினோபதி நோய் இல்லாத நிலை உருவாகும்.

6. தமிழ்நாட்டில் 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி நோயாளிகளுக்கான பராமரிப்பு மையங்களை நிறுவுதல்:

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி இதழின்படி (Indian Journal of Medical Research) இந்தியாவில் ஹீமோபிலியா 'எ' மற்றும் 'பி' வகைகள் பரவலாக ஒரு இலட்சம் மக்கள் தொகையில் 0.9 விழுக்காடு மக்களுக்கு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- இந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க எழும்பூர், சேலம், தருமபுரி, மதுரை, தேனி ஆகிய இடங்களில் 5 பராமரிப்பு மையங்கள் நிறுவ, தேசிய நலவாழ்வு குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

7. கிராம சுகாதார, துப்பரவு மற்றும் ஊட்டச்சத்து குழு (VHSNC):

- அரசு திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் உள்ளூர் ஊராட்சி தலைவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.
- இந்த குழுக்கள், கிராம மக்களின், சுகாதார, சத்துணவு மற்றும் துப்புரவு சேவைகள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற உதவி செய்கிறது.

8. மருத்துவ பட்டயப் படிப்பு (DNB):

- மருத்துவமனைகளின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, 10 மாவட்ட தலைமை / வட்டார மருத்துவமனைகள் மற்றும் 2 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில், 40 இடங்களுக்கு

https://t.me/tnpscfree

Diplomate in National Board (DNB) மருத்துவ பட்டயப் படிப்புகள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்திய அளவில் அரசு மருத்துவமனைகளில் அவசரகால மருத்துவ பட்டய படிப்பு அங்கீகாரம் பெற்ற 2 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

9. கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரித்தல் (Dialysis):

- தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் மாவட்ட மருத்துவமனைகளின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு அருகாமையிலேயே கூழ்மப் பிரிப்பு இரத்த சுத்தகரிப்பு சேவை கட்டணமின்றி அளிக்கப்படுகிறது. தமிழகம் முழுவதும் உள்ள இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலை மருத்துவமனைகளில் 755 கூழ்மப் பிரிப்பு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

10. அரசு மருத்துவமனைகளில் தேசிய தர உத்திரவாத திட்டம் (NQAS):

- அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சுகாதார சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, தேசிய தர உத்திரவாத திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

11. அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களில் காயகல்ப் (தூய்மை இயக்கம் Kayakalp) விருது திட்டம்:

- காயகல்ப் (தூய்மை இயக்கம்) விருது திட்டம், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயர் தூய்மை, சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு ஆகியவற்றை உறுதி செய்ய வழிவகை செய்கிறது.

6.6 மனநல திட்டம்

6.6.1 மாவட்ட மனநல திட்டம்:

- அனைத்து 32 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மனநல நோயாளிகளுக்கு, உள்நோயாளிகளுக்கான சிகிச்சை, புறநோயாளிகளுக்கான சிகிச்சை, விழிப்புணர்வு சேவைகள் மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சென்னையில் உள்ள மனநல காப்பகம், மாவட்ட மனநல திட்டத்திற்கு தலைமை மையமாக செயல்பட்டு வருகிறது.

மாநில மனநல ஆணையத்தின் செயல்பாடுகள்:

- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள, மனநல மையங்களை ஆய்வு செய்வதற்கு மனநல வாரியம் நிறுவப்படுகிறது.
- மாவட்ட மனநல திட்டத்தை செயல்படுத்தும் அரசு மருத்துவமனைகள்/தனியார் மருத்துவமனைகள் மற்றும் அதனை சார்ந்த மனநல மருத்துவ நிபுணர்களை பதிவு செய்தல்.
- மனநல சட்டத்தின் படி, மன நோயாளிகளை மருத்துவமனையில் அனுமதித்தல், சிகிச்சை மற்றும் குணமடைந்து செல்வதை மேற்பார்வையிடுதல்.
- மனநல சேவைகளை மேம்படுத்த ஆலோசனை வழங்குதல்.

- மாநிலத்தில் உள்ள அனைத்து சுகாதார நிலையங்களிலும் உள்ள தொற்றா நோய்ப் பிரிவு செவிலியர்களின் சேவையை பயன்படுத்தி மருத்துவ நிலையங்களில் மன நோயின் அறிகுறிகள் கண்டறியப்படும்.
- ஆரம்ப சுகாதார நிலையங்களில் மன நோய்க்கான மருந்துகள் இலவசமாக கிடைப்பதற்காக, ஒரு மாவட்டத்திற்கு 4 இலட்சம் ரூபாய் வீதத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் மனநல நோய்க்கான மருந்துகள் வழங்கப்படுகின்றது.
- தேசிய சிறார் நலவாழ்வு திட்டத்தில் உள்ள (RBSK) மருத்துவர்கள் சேவையை பயன்படுத்தி, பள்ளி சிறார்களிடையே மன நோய்க்கான அறிகுறிகள் ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டு வருகின்றது.
- சென்னை அரசு மன நல காப்பகத்தில், சிறப்பு பயிற்சி பெற்ற உளவியலாளர்களால் தற்கொலை முயற்சி மேற்கொண்டவர்களுக்கு தகுந்த மன நல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- கடலூர், காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், போதை மீட்பு மையம் (De-addiction Centre) நிறுவப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பராமரிப்பு திட்டத்தின் மூலம் (TAEI), சுய தீங்கு மேற்கொண்டவர்களுக்கு, அவர்களுடைய ஒப்புதலுடன், உளவியலாளர்களால் பதினெட்டு மாதங்கள் தொடர் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கப்பட்டுள்ளது.

அவசரகால மையம்

- ஆதரவின்றி பொது இடங்களில் இருக்கும் மனநோயாளிகளை மீட்டு, சிகிச்சை, தங்கும் வசதி, மறுவாழ்வு, வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் அவர்களுடைய குடும்பத்துடன் மீண்டும் இணைத்தல் 50 படுக்கைகளுடன் கூடிய அவசர பராமரிப்பு மற்றும் மீட்பு மையங்கள் வேலூர், விழுப்புரம், தேனி, திருவண்ணாமலை, திருப்பூர், சென்னை, புதுக்கோட்டை, தர்மபுரி, கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட மனநல திட்டம் நீலகிரி, திருவள்ளூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, பெரம்பலூர் காஞ்சிபுரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகின்றது. அரசு சாரா நிறுவனங்களின் பங்கு:
  - வீடு தோறும் சென்று மனநோயாளிகளை கண்டறிதல்
  - திறன் மேம்பாடு பயிற்சி
  - சமுதாயத்தில் மனநல நோயினை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது
  - மன நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளை பெற்று தருதல்

தமிழ்நாடு மாநில மன நல சுகாதார சேவைக் கொள்கை மற்றும் நடைமுறைப் படுத்துவதற்கான கட்டமைப்பு:

- மனநல பாதுகாப்பு சட்டம் 2017
- தமிழ்நாட்டில் இக்கொள்கை பின்வரும் இரண்டு இலக்குகளை அடைய முயற்சிக்கிறது:

https://t.me/tnpscfree

1. 2025 ஆம் ஆண்டிற்குள் மனநல சேவையை 20% அதிகரித்தல்
2. 2025 ஆம் ஆண்டிற்குள் தற்கொலை விகிதத்தை 10% குறைத்தல்

தேசிய மனநல ஆய்வு 2016:

- தேசிய மனநல மற்றும் நரம்பியல் ஆராய்ச்சி மையம் (NIMHANS) அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் மன நோயினால் ஏற்படும் "இயலாமை மற்றும் அதனுடன் வாழும் வாழ்க்கை ஆண்டுகளுக்கு" (Disability Adjusted Life Years-DALYs) சுய தீங்கு விளைவித்தல் மூன்றாவது முக்கிய காரணியாக உள்ளது.
- மேலும் மனஅழுத்த நோய் பதின்மூன்றாவது காரணியாக உள்ளது. மேற்கூறிய இரண்டு காரணிகளும் 6.8 சதவிகிதமாக அமைந்துள்ளது.
- 25 சதவிகிதம் தற்கொலை மற்றும் வன்முறை தொடர்புடைய இறப்புகள் 15 முதல் 39 வயதிற்குட்பட்டவர்களிடையே நிகழ்ந்துள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இறப்புகளுக்கான முதல் 10 காரணங்களுள் ஒன்றாக உள்ளது.

6.7 தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம்

- தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூ. 1300 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் (Tamil Nadu Health Systems Project) என்னும் உன்னத திட்டத்தின் மூலமாக அரசு மருத்துவமனைகளில் அதி நவீன தொழில் நுட்ப கருவிகளின் உதவியுடன் தொற்றா நோய் தடுப்பு கண்டறிதல் மற்றும் சிகிச்சை, பேறுகால அவசர சிகிச்சை, சுகாதார தகவல் மேலாண்மை உள்ளிட்டவைகளை செயல்படுத்தி வந்துள்ளது. இத்திட்டத்தின் கால அளவு 5 ஆண்டுகள் ஆகும்.

முக்கிய குறிக்கோள்கள்

- இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சை, தொற்றாநோய்கள் மற்றும் விபத்தினால் ஏற்படும் காயங்களுக்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை, பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல் ஆகியன ஆகும்.

6.8 தமிழ்நாடு நகர்புற சுகாதார திட்டம்

திட்ட குறிக்கோள்கள்:

- தமிழ்நாட்டில் உள்ள நகரப்புற பகுதிகளில் சுகாதார சேவைகளின் தரத்தை கீழ்க்கண்ட நடவடிக்கைகளால் மேம்படுத்துவதன் மூலம், தமிழக மக்களின் சுகாதாரத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்:
  1. முக்கிய மருத்துவமனைகளுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்தல் மற்றும்
  2. தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார மனித வளத்தை வலுப்படுத்தல்

இத்திட்டம் கீழ்க்கண்ட இனங்களில் கவனம் செலுத்தும்:

1. இதய நாள நோய், புற்றுநோய், நாள்பட்ட சுவாச நோய்கள், நீரிழிவு போன்ற நோய்களுக்கு நவீன சிகிச்சைகள் வழங்குவதன் மூலம் தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகளை மேம்படுத்துதல்.
2. இடிந்த நிலையில் உள்ள மற்றும் செயல்படாத பழைய கட்டமைப்பு வசதிகளை சீரமைத்து 'மைய ஆய்வப் பிரிவு' ஆக மாற்றுவதன் மூலம் தற்போது மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்த்து, அவற்றின் தரத்தை மேம்படுத்துதல்.
3. ஜப்பானிய மருத்துவ தொழில் நுட்பங்களான, உயர்ரக அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் நவீன கதிர் இயக்கம் ஆகியவற்றை பயன்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் கீழ்க்கண்டவைகளை உள்ளடக்கியதாகும்:

1. உயர்நிலை அரசு மருத்துவமனைகளை, கூடுதல் வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகளுடன் தரம் உயர்த்துதல்.
2. பரிந்துரை மருத்துவமனைகளை நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்துதல்.
3. இரண்டாம் நிலை மருத்துவமனைகளை கூடுதல் வசதிகள் மற்றும் மருத்துவ கருவிகளுடன் வலுப்படுத்துதல்.
4. மருத்துவமனை நிருவாகத்தை வலுப்படுத்துதல்
5. தொற்றா நோய்களுக்கான ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தல்.

6.9 தேசிய நகர்புற நலவாழ்வு குழுமம்

- தேசிய நகர்ப்புற நலவாழ்வு குழுமத்தின் குறிக்கோளானது, "பொதுவாக நகர்ப்புற ஏழை எளிய மக்களின் உடல் நலனை மேம்படுத்த தரமான சுகாதார சேவையை, மேம்படுத்தப்பட்ட பொது சுகாதார அமைப்பின் வாயிலாக உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்துவது ஆகும்." 2011 - ஆம் ஆண்டு தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, 59 இலட்சம் மக்கள் (நகர்ப்புற மக்களில் 17%) குடிசைப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.
- தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 50,000 க்கு மேல் மக்கள் தொகை உள்ள நகரங்களில் 420 நகரப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், சென்னை பெருநகர மாநகராட்சியை உள்ளடக்கிய 12 மாநகராட்சிகளிலும் மற்றும் 75 நகராட்சிகளிலும் ஏற்படுத்தியுள்ளது.

இலக்கினை அடைவதற்கான தேசிய நகர்புற நலவாழ்வு குழுமத்தின் முயற்சிகள்

- நகர்புறங்களில் நோய் தாக்கத்திற்கு உட்படும் நிலையில் வாழும் ஏழை மற்றும் அடித்தட்டு நிலையில் உள்ள மக்களின் பல்வேறு வகையான சுகாதார தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, சேவை வழங்குதல்.
- நகரமன்ற குழுக்கள் மற்றும் மக்களுடன் கூட்டாக, இணைந்து சுகாதார நடவடிக்கைகளுக்கு செயல்திட்டம் தயாரித்து, நடைமுறைபடுத்தி கண்காணித்தல்.
- நகர்ப்புற ஏழை மக்களுக்கு தேவையான ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்க தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பது.

https://t.me/tnpscfree

சிறப்பு சேவைகளும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படுகிறது

- சிறப்பு மருத்துவ முகாம்
- நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து நாள் மற்றும்
- தேசிய சிறார் நலத் திட்டம் - நகர்ப்புறம்
- நகர்ப்புற பல்நோக்கு சிறப்பு மருத்துவம் (பாலி கிளினிக்)
- நடமாடும் நகர மருத்துவக் குழு போன்ற சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

1. சிறப்பு மருத்துவ முகாம்:

- நகர்ப்புறத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் நோயினை போக்க அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே சென்று சிறப்பு மருத்துவ முகாம்களின் வாயிலாக, வெளியில் இருந்து அமர்த்தப்பட்ட மருத்துவர்களைக் கொண்டு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. 2018-19 நிதியாண்டில் 8,821 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு இதன் மூலம் 13,11,449 நோயாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

2. நகர்ப்புற சுகாதார ஊட்டச்சத்து:

- நகர சுகாதார செவிலியரால் உள்ளூர் அங்கன்வாடி மையத்தில் பிரதி மாதந்தோறும் ஒருநாள் வளரினம் பெண்கள் மற்றும் பேறுகால வயதில் உள்ள தாய்மார்களுக்கு சத்தான உணவு, தனி நபர் சுகாதாரம், பேறுகால சேவை போன்ற விவரங்களை விளக்கி நலக்கல்வி வழங்கப்படுகிறது. 2018-19 நிதியாண்டில் 18,093 நகர்ப்புற சுகாதார ஊட்டச்சத்து நாட்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 3,66,779 வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர்.

3. தேசிய சிறார் நலத் திட்டம் – நகர்ப்புறம்: (35 நடமாடும் மருத்துவக் குழுக்கள்):

- நகர்ப்புற தேசிய சிறார் நலத் திட்டம் மூலம், பிறந்த குழந்தை முதல் 18 வயதிற்கு உட்பட்ட வயதினருக்கு, நான்கு குறைப்பாடுகளான "பிறவி குறைப்பாடு, வளர்ச்சி குறைப்பாடு, நோய்கள், ஊட்டச்சத்து குறைப்பாடுகள்" முதலிவற்றை கண்டறிய, கோவை, மதுரை, திருப்பூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய எட்டு மாநகராட்சிகளில் 20 குழுக்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 குழுக்களும் ஆக மொத்தம் 35 நடமாடும் மருத்துவக் குழுக்கள் முறையே செயல்பட்டு வருகின்றன.

4. நகர்புற பல்நோக்கு சிறப்பு மருத்தும் (Urban Polyclinics):

- நகர்புற ஏழை மக்களுக்கு ஒருங்கிணைந்த சிறப்பு சிகிச்சை சேவை வழங்க தேர்ந்தெடுக்கப்பட்ட 96 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாலை 4.30 முதல் 8.30 மணி வரை சிறப்பு மருத்துவர்களை கொண்டு, "வெளி நோயாளர் சேவை" ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சேவை வாரந்தோறும் குறிப்பிட்ட நாட்களில் பொது மருத்துவம், குழந்தைகள் நலம், பல் மருத்துவம், கண் சிகிச்சை, காது மூக்கு தொண்டை மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், தோல் சிகிச்சை, மனநல மருத்துவம், எலும்பியல் மற்றும் இயன்முறை மருத்துவம் ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

5. நகர்புற நடமாடும் மருத்துவக் குழு:

- மத்திய அரசு தேசிய நகர்புற நலவாழ்வு திட்டத்தின் கீழ் 10 நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு சென்னை பெருநகர மாநகராட்சியில் 5 நடமாடும் நகர மருத்துவ குழுக்களும் கோவை, மதுரை, திருப்பூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் தலா ஒரு நடமாடும் நகர மருத்துவ குழு வீதம் 5 நடமாடும் நகர மருத்துவ குழுக்கள் குடிசைப் பகுதி வாழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் மக்கள், முறைசாரா தொழிலாளர்கள் ஆகியோர் உள்ள இருப்பிடங்களில் மருத்துவ சேவை அளிக்கப்பட உள்ளது.

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

- குறள் 385

விளக்கம்:
பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும் வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தற்றை வகுத்துச் செலவு செய்தலும், வல்லவன் அரசன்.

மாதிரி வினாக்கள்

1. தமிழ்நாட்டில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு 24 மணி நேரமும் உடனடி அவசர உதவி வழங்க வழிவகை செய்யும் தொலைபேசி உதவித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்
   (A) 108 (B) 181 (C) 888 (D) 208
2. தமிழக அரசின் "தொட்டில் குழந்தைத் திட்டத்தின்" குறிக்கோள்
   (A) தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல்
   (B) மருத்துவமனைகளில் குழந்தைப்பேறு நிகழ்வதை உறுதி செய்தல்
   (C) சிசுக்களுக்கான நோய்த்தடுப்பு முறைகளை வழங்குதல்
   (D) பெண் சிசுக் கொலைகளை ஒழித்தல்
3. ஒரு நியாயமான சமூகத்தில்
   (A) பாகுபாடு இருக்காது (B) சாதிகள் இருக்காது
   (C) மதங்கள் இருக்காது (D) மேற்கண்ட அனைத்தும்

https://t.me/tnpscfree

4. தவறான இணையை தேர்ந்தெடு:

திட்டம்		ஆண்டு
(A) குடிமராமத்து திட்டம்	-	2017
(B) அம்மா குடிநீர் திட்டம்	-	2013
(C) முதல்வர் சுகாதார காப்பீடு திட்டம்	-	2012
(D) தாலிக்கு தங்கம் திட்டம்	-	2014

5. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் முதன்மை திட்டம்
   (A) பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்சா யோஜனா
   (B) ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா
   (C) முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டு திட்டம்
   (D) பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்
6. SAKHI - One Stop Centre என்பது,
   1. குடும்பம், சமூகம் மற்றும் பணியிடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுகிறது.
   2. இத்திட்டத்திற்கான 100% நிதியை மத்திய அரசே வழங்குகிறது.
   3. இரண்டு கூடுதல் One Stop Centre ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் முதல் நகரம் பெங்களூரு ஆகும்.
   4. மாநில அரசு / யூனியன் பிரதேச நிர்வாகம் இத்திட்டத்தை அமல்படுத்தும் அமைப்பாகும்.

   (A) 1 மற்றும் 2 (B) 2 மட்டும் (C) 1, 2 மற்றும் 4 (D) அனைத்தும்

விடைகள்

1	2	3	4	5	6
B	D	A	D	C	C

அத்தியாயம்

7

சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்

"தீண்டாமைக்கெதிரான எனது போராட்டம் மனிதத்தன்மையில் காணப்படும் அழுக்கை (மாசினை) நீக்குவதற்கானது". **– மகாத்மா காந்தி**

7.1 நீதி

- நீதி என்ற வார்த்தை நியாயமான, சரியான மற்றும் ஏற்புடைய என்ற பொருளை குறிக்கிறது. "முழுமையான உண்மை" என்றும் கூறப்படுகிறது.
- நீதி என்பது காலத்திற்கேற்ப மாறக்கூடிய சிந்தனையாக இருந்தாலும் அது ஒரு தொடர் நிகழ்வாகும். இத்திசை நோக்கிய நமது முன்னேற்றம் என்பது நமது விழிப்புணர்வின் மேம்பாட்டைப் பொறுத்தது.
- நீதியின் மூன்று கூறுகள்: (i.e. இந்திய அரசியலமைப்பில் உள்ள சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நீதி) ரஷ்ய புரட்சியில் (1917) இருந்து எடுக்கப்பட்டது.

சமூக நீதி

- சமூக நீதி என்பது தனிநபருக்கும் சமூகத்திற்கும் இடையேயான நியாயமான மற்றும் உறவுகளின் கருத்தாகும்.
- சாதி, நிறம், இனம், மதம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த சமூக வேறுபாட்டையும் காட்டாமல் அனைவரையும் சமமாக நடத்துவதாகும்.

பொருளாதார நீதி

- மக்களிடையே பொருளாதார காரணிகளின் அடிப்படையில் வேறுபாடில்லாமல் இருப்பது.
- செல்வம், வருமானம் மற்றும் சொத்து ஆகியவற்றில் உள்ள ஏற்ற தாழ்வுகளை நீக்குவது.

அரசியல் நீதி

- அனைத்து குடிமக்களுக்கும் சமமான அரசியல் உரிமைகள் மற்றும் அனைத்து அரசியல் அலுவலகங்களையும் அணுக சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

https://t.me/tnpscfree

சமூக நல்லிணக்கம் (அ) ஒத்துழைப்பு

- பல்வேறு அடையாளங்களால் வேறுபட்டிருக்கும் பல்வேறு இன மக்கள் ஒரு சமூகத்தில் அமைதியாக இணக்கமாக வாழ்வதே சமூக நல்லிணக்கமாகும்.
- இது தேசிய நல்வாழ்விற்கான அடிப்படையாகும்.

சமூக மேம்பாடு

- சமூக நிறுவனங்களின் சுகாதார மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சமூக பாகுபாட்டை குறைத்தல், சமூகத்தின் முற்போக்கான மனப்பான்மை மற்றும் செயல்பாடுகளை ஊக்குவித்தல்.

விகிதாசார நீதி (Proportional Justice)

- ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்கான தண்டனையானது, குற்றத் தன்மையின் விகிதாசாரத்தில் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

பகிர்ந்தளிக்கும் நீதி (Distributive Justice)

- சமூக நீதி மற்றும் பொருளாதார நீதிகளின் கலவையாகும்.
- பகிர்ந்தளிக்கும் நீதி என்பது நியாயமான முறையில் சமூகத்தில் உள்ள வளங்களை மக்களுக்கு பிரித்தளிப்பதேயாகும். இதில் பகிர்ந்தளிப்பது என்பது நலிவடைந்த மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு அவர்களின் பின்னிலை கருதி அதிக முக்கியத்துவம் கொடுப்பதைக் குறிக்கும்.
- சமுதாய நன்மைகளை அனைவருக்கும் சரியாக மற்றும் சமமாக ஒதுக்கீடு செய்வதை குறிக்கிறது.
- மானியங்கள், முற்போக்கான வரி விதிப்பு, வேலைவாய்ப்பு (மு) கல்வி நிறுவனங்களுக்கான இட ஒதுக்கீடு போன்றவற்றில் கவனம் செலுத்தி பின்தங்கிய பிரிவுகளை முன்னேற்றம் அடைய செய்கிறது.

தண்டிக்கும் நீதி (Retributive Justice)

- மறுவாழ்விற்கு பதிலாக குற்றம் புரிந்தவர்கள் அவர்களின் குற்றத்திற்கான சரியான தண்டனை பெற வேண்டும்.
- குற்றம் செய்தவர்களும், குற்றத்திற்கு துணை புரிந்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவது.

முழுமையான நீதி (Absolute Justice)

- அனைத்து பங்கேற்பாளர்களும் பயனடைந்திருக்கும் நிலையை குறிக்கிறது. இது நீதி பரிமாணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- உதாரணம் – ராம்ஜன்ம பூமி – பாப்ரி மஸ்ஜித் நில விவகார வழக்கில் அயோத்தி தீர்ப்பு (2019)

பொருளாதார மேம்பாடு

1. பொருளாதார மேம்பாட்டின் கருத்து என்பது பொருளாதார நல்வாழ்வு, பொருளாதார மேம்பாட்டின் பயன்களை சமமாக பிரித்தளிப்பது, முக்கியமாக இப்பயன்கள் நலிவடைந்த சமுதாயத்தை சேர்ந்தடைவதைக் குறிக்கும்.

2. இது ஒரு நாட்டின் பொருளாதார செல்வத்தின் மேம்பாட்டு நிலை அல்லது ஒரு மண்டலத்தில் வாழும் மக்களின் நல்வாழ்வைக் குறிக்கும்.
3. சமூக மற்றும் பொருளதார மேம்பாட்டை அடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதில் முக்கியமாக பின்தங்கிய சாதியினர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பெண்கள் போன்றவர்களுக்கு அதிகாரத்தை அளித்து உயர்த்துதல் மற்றும் வளர்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றுதல்.

இந்திய சமூகத்தில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமைக்கு தடையாக இருக்கும் சிக்கல்கள்

- சாதி முறை
- வர்ணாசிரம முறை
- பாலின சமத்துவமின்மை
- கல்வியறிவின்மை
- பசிக் கொடுமை
- வறுமை
- ஆள் கடத்தல்
- வகுப்பு வாதம்
- வேலையின்மை
- வருவாய் ஏற்றத்தாழ்வு
- வன்முறை
- தீவிரவாதம்
- குழந்தை தொழிலாளர்
- குழந்தை திருமணம்
- மொழியியல்
- மதவாதம்

7.2 சமூக நீதியும் மெட்ராஸ் மாகாணத்தின் ரயத்துவாரி முறையும்

- 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜமீன்தாரி (மு) ரயத்துவாரி அமைப்பை தலைமை தாங்கிய ஜமீன்தார்கள், நில உரிமையாளர்கள் மற்றும் பிற மேலாதிக்க குழுக்களை சேர்ந்தவர்கள் அனைவரும் இந்துக்களாக இருத்தனர்.
- அவர்களின் ஆதிக்கம் கிராமங்களில் முக்கியமாக கீழ்தட்டு மக்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.
- பின்தங்கிய சமூகங்கள் இந்தியாவின் அனைத்து கிராமங்களின் நிலங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்.
- இம்முறையை ஆராய பிரிட்டிஷ் அரசால் பிரான்சிஸ் எல்லிஸ் (Francis Ellis) மற்றும் தாமஸ் மன்றோ (Thomas Munro) என்ற இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- இவர்கள் "ரயத்துவாரி அமைப்பு" செயல்படுவதை பற்றிய அறிக்கையை வெளியிட்டனர்.

அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

- கீழ்தட்டு மக்களிடமிருந்த நிலங்களை "ஜமீன்தார்களும்" "நிலப்பிரபுகளும்" கைப்பற்றினர். இதனால் தரம் தாழ்ந்த விவசாயம் மற்றும் குறைந்த அளவு விளைச்சல் ஏற்பட்டது.
- இப்படி கையகப்படுத்தியதின் விளைவாக, நிலவரி வருவாய்வில் தொய்வு ஏற்பட்டது.
- மேலும் சுரண்டப்பட்ட மற்றும் கீழ்தட்டு சமுகத்தினரை நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். மேலும் அவர்களது குழந்தைகளுக்கு கல்விக் கூடங்களில் அனுமதி மறுக்கப்பட்டது.

https://t.me/tnpscfree

அறிக்கையின் தாக்கங்கள்

- 1854 – ஆண்டில் நீதிமன்றம், ஒடுக்கப்பட்ட மக்களின் குழந்தைகளை பள்ளியில் அனுமதிப்பதற்கு எந்த தடையும் இருக்கக்கூடாது என்று ஆணைப் பிறப்பித்தது.
- இருப்பினும் இந்துக்கள் மற்றும் பிற மேலாதிக்க சமூகங்கள் தீர்ப்புக்கு கீழ்ப்படியவில்லை. இதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை மாறாமல் இருந்தது.

7.3 பிரிட்டிஷ் காலகட்டத்தில் சமூக நீதியை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1) சித்திரவதை கமிஷன் / வன்கொடுமை ஆணையம் – 1855

- மெட்ராஸ் மாகாணத்தில் கிழக்கு இந்திய கம்பெனியால் நியமிக்கப்பட்டது.
- இந்திய வருமான மற்றும் காவல் அதிகாரிகள் விவசாயிகளிடம் நிலவரி வசூலிக்கும் போது நிகழ்த்திய அட்டூழியங்களை வெளிக்கொணர்ந்தது.
- 1865 ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இந்திய அரசின் செயலாளர் – ஒடுக்கப்பட்ட மக்களின் குழந்தைகளை கல்வி நிறுவனங்களில் அனுமதிக்க பரிந்துரைத்தது. ஆனாலும் மாற்றம் ஏற்படவில்லை.
- 1885 மெட்ராஸ் மாகாண அரசு கீழ்தட்டு மக்களுக்கு நிதியுதவி அறிவித்தது மட்டுமல்லாமல் பின்தங்கிய மக்களுக்கு புதிய பள்ளிகளை உருவாக்கியது.

2) ட்ரிமன்க்ரே-யின் அறிக்கை (ம) ஒடுக்கப்பட்டவரின் முன்னுரிமை உரிமைகள்

- செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் – ட்ரிமன்க்ரே, 1880-களில் கீழ்நிலை சமூகத்தின் நிலையை குறித்த ஒரு அறிக்கையை சமர்பித்தார். அவ்வறிக்கை கீழ்நிலை மக்களுக்கான உரிமையை முன்னிறுத்துவதில் முக்கிய பங்காற்றியது.

அறிக்கையில் கூர்நோக்குகள்:

- ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் அனைத்து அம்சங்களிலும் குறிப்பாக சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.
- நில உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் தங்களுக்கென வீடுகளை கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.
- கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்டது
- அவர்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர்.
- பெரும்பாலான நிலங்கள் தரிசு நிலங்களாக இருந்தன. இதனால் அரசாங்கத்திற்கு வருவாய் குறைந்தது.

பஞ்சமி நிலங்கள்

- பஞ்சமி நிலம் என்பது நிலமற்ற ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, 1892 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசால் ஒதுக்கப்பட்ட வேளாண் விளைநிலங்கள்.

- ட்ரிமன்க்ரே – அறிக்கையின் படி 12 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பஞ்சமி நிலங்களாக ஒதுக்கப்பட்டது.
- இது அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தது.
- ஒடுக்கப்பட்ட மக்களின் குழந்தைகளுக்கு பள்ளிகள் நிறுவப்பட்டது. இது பஞ்சமி பள்ளிகள் என்றழைக்கப்பட்டது.

பஞ்சமர்

- வருணாஸ்ரமத்திற்கு வெளியிலுள்ள அல்லது விலக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் என்பது இதன் பொருளாகும்.
- அயோத்திதாச பண்டிதரும் (காத்தவராயன்), சிங்காரவேலர் – ஆகிய இருவரும் "பஞ்சமர் பள்ளிகளை" "ஆதி திராவிடர் பள்ளிகள்" என அழைத்தனர்.

7.4 சமூக நீதியும் பெண்களும்

அரசியலமைப்பு உரிமைகள்:

சமூக மற்றும் பொருளாதார உரிமைகள்:

- சரத்து – 15(1), 15(3), 16(2), 23(1), 39(a), 39(d), 39(e), 42, 51-A(e)

அரசியல் உரிமைகள்:

- சரத்து – 243D(3), 243D(4), 243CT(3), 243T(4)

சட்டப்பூர்வ உரிமைகள்:

இந்திய தண்டனை சட்டம் (IPC), 1860	• வரதட்சணை மரணம், கற்பழிப்பு, கடத்தல் கொடுமை மற்றும் பிற குற்றங்களிலிருந்து பெண்களை பாதுகாக்கும் அம்சங்களை கொண்டுள்ளது.
இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம்,1872	• கிறிஸ்துவ சமூகத்தின் திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான அம்சங்களை கொண்டுள்ளது.
முஸ்லீம் திருமண இழப்பு சட்டம், 1939	• முஸ்லீம் பெண்களுக்கு விவாகரத்து உரிமையை வழங்கும் சட்டம்.
சுரங்க சட்டம், 1952 மற்றும் தொழிற்சாலைகள் சட்டம், 1948	• பெண்கள் சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரை வேலை செய்ய தடை செய்கிறது. அவர்களின் பாதுகாப்பு (ம) நலன்களில் கவனம் செலுத்துகிறது.
குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1930	• ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு இடையே பாகுபாடு காண்பிப்பது அல்லது குறைந்தபட்ச ஊதிய பாகுபாட்டை விளக்கும் சட்டம்.

https://t.me/tnpscfree

இந்து திருமணச் சட்டம், 1955	• இது ஒரு தார மணத்தை நடைமுறைப்படுத்தியது. சில குறிப்பிட்ட அடிப்படையில் விவாகரத்து பெற அனுமதிக்கிறது. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பாக ஆண் மற்றும் பெண்ணுக்கு சம உரிமை வழங்கப்பட்டன.
இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956	• ஆண்களுக்கு சமமாக பெற்றோர்களின் சொத்துகளை பெற்றுக் கொள்ள பெண்களுக்கு உரிமை உண்டு என்ற உரிமையை அளிக்கிறது.
சட்டத்திற்கு புறம்பான கடத்தல் தடுப்புச் சட்டம்,1956	• வணிக ரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்த பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளை கடத்துவதை தடை செய்கிறது.
வரதட்சணை தடுப்புச் சட்டம்,1961	• திருமணத்தின் போதோ அல்லது திருமணத்திற்கு முன்னரோ அல்லது திருமணத்திற்கு பின்னரோ வரதட்சணை வாங்குவது மற்றும் கேட்பதை தடை செய்கிறது.
மகப்பேறு நலச்சட்டம்,1961	• பணிபுரியும் பெண்களின் மகப்பேறு காலத்தில் பாதுகாப்பு அளிப்பதுடன், ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கிறது.
கருகலைப்பு தடைச் சட்டம், 1971	• தாயின் நலனுக்கு கேடாகக்கூடுமென மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டாலோ, வண்புணர்வால் கருவுற்றாலோ அதனை சட்டத்திற்குட்பட்டு கலைப்பதற்கு இச்சட்டம் அனுமதிக்கிறது.
சம ஊதிய சட்டம்,1976	• ஒரே வேலைக்கு ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் இருவருக்கும் சமமான ஊதியம் வழங்குகிறது. • பாலின பாகுபாட்டை தடை செய்கிறது.
குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984	• குடும்ப பிரச்சனைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்துகிறது.
முஸ்லீம் பெண்கள் (விவகாரத்து உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 1986	• விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்கள் "ஜீவனாம்சம்" பெற வழிவகை செய்கிறது.
பெண்களை அநாகரிக மாக சித்தரித்தல் (தடுப்பு) சட்டம்,1986	• விளம்பரங்கள் அல்லது பிரசுரங்கள், எழுத்துகள் அல்லது ஓவியங்கள் அல்லது வேறு எந்த விதத்திலும் பெண்களை அநாகரிகமாகக் காட்டுவதை தடை செய்கிறது.
உடன்கட்டை ஏறுதல் (தடுப்பு) சட்டம்,1987	• கணவனை இழந்த மனைவி உடன்கட்டை ஏறுவது தடை செய்யும் சட்டம் (1829-ம் திருத்தச் சட்டம்)

கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு செய்யும் தடை) சட்டம்,1994	• கருத்தரிப்பதற்கு முன் அல்லது பின் பாலினத் தேர்வை தடை செய்கிறது மற்றும் தொழில்நுட்பங்கள் மூலம் பெண் குழந்தை பிறப்புக்கு எதிராக தவறாக பயன்படுத்துவதை தடை செய்கிறது. • பாலினத்தை கண்டுபிடித்து பெண் சிசுவை கர்பத்திலேயே கலைப்பதை தடுப்பதே இதன் நோக்கம்.
குடும்ப வன்முறை யிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005	• அனைத்து விதமான குடும்ப வன்முறையிலிருந்தும் பெண்களை பாதுகாக்கிறது. இது உடல் ரீதியான, பாலியல் ரீதியான, கடுஞ்சொற்கள் அல்லது உணர்ச்சி பூர்வமான வன்முறைகளை உள்ளடக்கியது.
குற்றவியல் நடைமுறை சட்டம், 1973	• பெண் காவலரால் பெண்ணை கைது செய்தல், ஆண்கள் தனது மனைவியை பாதுகாத்தல் போன்ற சில சிறப்பு பாதுகாப்புகளை வழங்குகிறது.
சட்ட சேவைகள் உரிமை சட்டம், 1987	• பெண்களுக்கு, பின்தங்கிய வகுப்பினருக்கு மற்றும் பட்டியலிட்டப்பட்ட சமூகத்தினருக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குகிறது.
தேசிய மகளிர் ஆணைய சட்டம், 1990	• பெண்களுக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட உரிமைகளை ஆய்வு செய்ய தேசிய மகளிர் ஆணையம் அமைக்க வழி வகுத்தது.
பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013	• அரசு, தனியார் அல்லது அமைப்புசார், அமைப்பு சாரா அனைத்து இடங்களிலும் பணிபுரியும் பெண்களை பணியிடத்தில் பாலியல் வன்முறையல் இருந்து பாதுகாக்கிறது.

பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான தேசிய கொள்கை 2001

- **நோக்கம்:** பெண்களின் முன்னேற்றம், வளர்ச்சிக்கு, அதிகாரமளித்தல்
- பெண்களுக்கு எதிராக நடக்கும் அனைத்து வகையான வன்முறைகள் – உடல் மற்றும் மனரீதி யாக, வீடு மற்றும் சமூக ரீதியாக, மேலும் பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகளால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளினால் ஏற்படும் வன்முறையை திறம்பட ஒழிப்பதற்கு இச்சட்டம் வழிவகுக்கிறது.

தேசிய மகளிர் ஆணையம்

- பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் 1990-ன் படி, 1992-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- முதல் தலைவர் : ஜெயந்தி பட்நாயக்

https://t.me/tnpscfree

- **நோக்கம்:** பெண்களின் குறைகளை தீர்க்கவும், அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டை துரிதப்படுத்தவும், அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும் ஏதுவதை செய்கிறது.
- சமூகவியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரமும் உண்டு.
- **தற்போதைய தலைவர்:** ரேகா சர்மா

தமிழ்நாடு மாநில பெண்கள் ஆணையம், 1993

- **நோக்கம்:** பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க.
- **தலைவர்:** திருமதி. கண்ணகி பாக்கியநாதன் ஐ.ஏ.எஸ்.
- **அமைப்பு:** ஒரு தலைவர் மற்றும் ஒன்பது உறுப்பினர்கள்.

இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் / அம்மா ரோந்து வாகனங்கள், 2019

- பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மத்திய அரசின் முன்முயற்சி.
- சென்னையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுகின்றன.
- குழந்தைகளுக்கான உதவி எண் → 1098

7.5 சமூக நீதியும் குழந்தைகளும்

அரசியலமைப்பு உரிமைகள்:

- **விதிகள்:** 15(3), 21(A), 24, 39(e), 39(f), 45, 51-A(K)

சட்ட உரிமைகள்:

பாதுகாப்பாளர் மற்றும் இளவர்கள் சட்டம்,1890	• ஒரு பாதுகாவலரை நியமிக்கும் போது, குழந்தைகளின் நலனை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.
குழந்தைகள் (உழைப்பை அடகு வைத்தல்) சட்டம், 1933	• பணம் (அ) எந்தவொரு நன்மைக்காகவும் பெற்றோர் அல்லது காப்பாளர்கள் தங்கள் குழந்தைகளை அடகு வைக்கக் கூடாது.
இந்து இளவர் மற்றும் பாதுகாப்பாளர் சட்டம், 1956	• இந்து இளவர்கள் மற்றும் பாதுகாப்பாளர் தொடர்பான சட்டத்தை வகுத்துள்ளது. • இச்சட்டம் இளவர்கள் மற்றும் இந்து காப்பாளர்கள் சம்மந்தப்பட்ட விதிகளை உள்ளடக்கியது. • இந்து இளவருக்கு ஒருவரை காப்பளராக நியமிப்பதற்கு முன் நீதிமன்றமானது அந்த இளவரின் நலத்தை கருத்தில் கொண்டு காப்பாளரை நியமிக்கும்.

இளம் நபர்கள் (தீங்கு விளைவிக்கும் வெளியீடுகள்),1956	• இளைஞர்களுக்கு தீங்கு விளைவிக்கும் சில பிரசுரங்கள் (வெளியீடுகள்-பத்திரிக்கைகள்) வெளிவருவதை தடை செய்கிறது.
குழந்தைகள் சட்டம், 1960	• புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறு செய்த குழந்தைகளுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, நலன், கல்வி மற்றும் பயிற்சி, மறுவாழ்வு அளிப்பதை உறுதி செய்வது (விசாரணையில் உள்ள குழந்தைகளும் அடங்குவர்)
குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986	• இது 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை ஆபத்தான வேலைகளில் அமர்துவதை தடை செய்கிறது. மேலும் மற்ற பணியிடங்களில் குழந்தைகளின் வேலை நிலைமையை ஒழுங்குமுறைப்படுத்துகிறது.
சட்ட சேவைகள் அதிகாரிகள் சட்டம், 1987	• இலவச சட்ட சேவைகளை குழந்தைகளுக்கு வழங்குகிறது.
பச்சிளம் குழந்தைகளுக்கு மாற்று தாய்ப்பால், பால் பாட்டில்கள் மற்றும் குழந்தைகளுக்கான உணவு சட்டம், 1992	• தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகளுக்கு, மாற்று தாய்ப்பால், பாட்டில் பால், குழந்தைகளுக்கு தேவையான உணவு வழங்கலை ஒழுங்குபடுத்துதல். • குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்தல் மற்றும் உணவளித்தலை ஊக்குவித்தல்
இளஞ்சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000	• கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் இரண்டையும் குறிப்பிடுகிறது. • குற்றம் சாட்டப்பட்ட குழந்தைக்கு ஏதுவான அணுகுமுறை பின்பற்றப்படுகிறது மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கு வழி வகை செய்கிறது.
இளஞ்சிறார் நீதி (திருத்தச் சட்டம்), 2015	• கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டங்களை மீறும் குழந்தைகளை குறிப்பிடுகிறது.
குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம், 2005	• குழந்தைகள் உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளை விரைவில் தீர்வு காண • தேசிய குழந்தை உரிமைகள் ஆணையம், மாநில குழந்தை உரிமைகள் ஆணையம், சிறார் நீதிமன்றங்களை நிறுவ வழிவகை செய்கிறது.
குழந்தை திருமணத் தடை சட்டம், 2006	• குழந்தை திருமண தடுப்பு சட்டம் (1929) பதிலாக கொண்டு வரப்பட்ட சட்டம். • இச்சட்டத்தின் படி குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டது.

https://t.me/tnpscfree

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் (2009)	• 6 - 14 வயதுள்ள குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பநிலை கல்விக்கு உறுதி அளித்தல். • இதில் மன மற்றும் உடல் ரீதியான சவால் உள்ள குழந்தைகளையும் உள்ளடக்கியது.
கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு செய்யும் தடை) சட்டம் (1994)	• குழந்தை பிறப்பதற்கு முன் பாலின தேர்வு செய்ய தடை செய்வதன் மூலம், பெண் சிசு வதையை தடுக்க உதவுகிறது.
குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு சட்டம் (போக்ஸோ) (2012)	• பாலியல் தாக்குதல் மற்றும் துன்புறுத்தல் மற்றும் ஆபாசப் படம் எடுத்தல் ஆகிய குற்றங்களிலிருந்து குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. • இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு சிறப்பு நீதிமன்றம் நிறுவ வழி வகுக்கிறது.
போக்ஸோ திருத்தச்சட்டம் (2019)	• ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் (Penetrative Sexual Assault) மற்றும் மோசமான ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் (Aggravated Penetrative Sexual Assault) ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்க வழிவகை செய்தது.

குழந்தைகளுக்கான தேசிய கொள்கை

- 1974 -ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான முதல் தேசிய கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த கொள்கை 2013-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.
- குழந்தைகளுக்கான புதிய தேசிய கொள்கை (2013) நாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் எல்லா உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை காட்டுகிறது.

குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையம், 2007

- குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையச் சட்டம் 2005 இன் கீழ் அமைக்கப்பட்டது.
- **நோக்கம்:** நாட்டில் உள்ள குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல், ஊக்குவித்தல், உரிமை மீறல்களை தடுத்தல்.
- **தற்போதைய தலைவர்:** திரு. பிரயன்க் கனோங்கோ

தமிழ்நாடு மாநில குழந்தைகள் ஆணையம், 2012

- **தற்போதைய தலைவர்:** சரஸ்வதி ரங்கசாமி
- இவ்வாணையம் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம், 2005-ன் கீழ் அமைக்கப்பட்டது.

7.6 சமூக நீதியும் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரும்

அரசியலமைப்பு உரிமைகள்

- **சமூக உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் →** சரத்து 17, 23, 25(2)(b),19(5)
- **கல்வி / பொருளாதார உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் →** சரத்து 46, 15(4), 15(5)
- **அரசுப்பணிகளுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் →** சரத்து 16(4A), 335, 320(4)
- **அரசியல் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் →** சரத்து 330, 332, 334, 243D(1), 243D(4), 243D(5), 243T(1), 243T(4), 243T(5)
- **நிர்வாக உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் →** சரத்து 244(1), 244(2), 339(1), 339(2), 275(1), 164(1), 338, 338A

சட்ட உரிமைகள்

குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (1995)	தீண்டாமையை பின்பற்றுதல் மற்றும் அதனை பரப்புதலுக்கு எதிரான தண்டனைகள் மற்றும் அபராதத்தை குறிப்பிடுகிறது.
பட்டியல் இனத்தவர் (மு) பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989	SC/ST தவிர வேறு நபர்களால், SC/ST க்கு எதிராக அட்டுழியங்கள், குற்றங்களை தடுக்கிறது. மேலும் இது தொடர்பான குற்றங்களை விரைவாக விசாரணை செய்ய சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வழிவகை செய்கிறது.
கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 1976	கொத்தடிகளை அவர்களின் பிணையிலிருந்தும், கடனிலிருந்தும் விடுவித்தல் கொத்தடிகளை அடையாளம் கண்டு, விடுவித்து, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வழி வகுக்கிறது.
குறைந்தபட்ச ஊதிய சட்டம்,1948	குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்தல், மறு ஆய்வு செய்தல், திருத்தம் செய்தல்.
சட்ட சேவைகள் உரிமைச் சட்டம்,1987	SC மற்றும் ST மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குகிறது.
மத்திய கல்வி நிறுவனங்கள் (சேர்க்கையில் இட ஒதுக்கீடு) சட்டம், 2006	மத்திய கல்வி நிறுவனங்களில் SC களுக்கு 15% மும், ST களுக்கு 7.5% மும் இட ஒதுக்கீடு வழங்குகிறது.

https://t.me/tnpscfree

ஊராட்சிகள் (அட்டவணையிடப்பட்ட பகுதிகளுக்கு விரிவாக்கம்) சட்டம், 1996 (Pesa Act)	கிராம சபையில் குறிப்பிட்ட அளவு பழங்குடியினர் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஐந்தாவது அட்டவணையிலுள்ள பத்து மாநிலங்கள்: ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, சத்தீஸ்கர், குஜராத், இமாச்சல பிரதேசம், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் ராஜஸ்தான் ஆகும். இந்த 10 மாநிலங்களிலும் பஞ்சாயத்து சட்டத்தை திருத்தம் செய்து அவற்றிக்கு இணக்கமான சட்டங்களை இயற்றியது.
பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசி (காட்டு வாசிகள் சட்டம் 2006) (வன உரிமை அங்கீகாரம்)	பழங்குடியின மக்கள் (ST) மற்றும் வனவாசி மக்கள் (காட்டு வாசி மக்களுக்கும்) பரம்பரையாக வாழ்ந்தால் (அ) வேலை செய்தால் அவர்களுக்கு வன உரிமையை அளிக்கிறது.
மலம் அள்ளும் தொழிலாளர்களைப் பணியமர்த்தல் தடை மற்றும் அவர்களின் புணர்வாழ்வு சட்டம், 2013	1மனித கழிவுகளை மனிதனே அள்ள தடை செய்யப்பட்டு உள்ளது. அவர்களை பணியில் அமர்த்துபவர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை. மலம் அள்ளும் பணியாளர்கள் வேலைவாய்ப்பு தடை மற்றும் உலர் கழிப்பறைகள் கட்டுமானம் (தடை) சட்டம், 1993 திருத்தியது.

பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் தேசிய ஆணையம்

- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் தேசிய ஆணையமானது அரசியலமைப்பின் சரத்து 338ன் கீழ் நேரடியாக நிறுவப்பட்டுள்ள அரசியலமைப்பு சட்ட அமைப்பு.
- 89வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 2013 ஆனது பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய ஆணையத்தில் சரத்து 338A ஐ சேர்த்ததன் மூலம் இரண்டு தனித்தனி அமைப்புகளாக பிரித்தது.
- சரத்து 338 : பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான தேசிய ஆணையம்.
- சரத்து 338A : பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்

7.7. சமூக நீதியும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும்

அரசியலமைப்பு உரிமைகள்

சரத்து: 15 (4), 15(5), 16(4), 46, 164(1), 340, 338(10)

சட்ட உரிமைகள்

- பிற மத்திய கல்வி நிறுவனங்கள் (சேர்க்கையில் இட ஒதுக்கீடு) சட்டம் (2006)ல் பிற்படுத்தப்பட்டோருக்கு பாதுகாப்பு மற்றும் உரிமையை வழங்குகிறது.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பின மாணவர்களுக்கு மத்திய கல்வி நிறுவனங்களில் 27% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையம் ஆனது தோற்றுவிக்கப்படும் போது பின்தங்கிய வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் (1993) கீழ் சட்டபூர்வமான அமைப்பாக நிறுவப்பட்டது.
- 102-வது திருத்தச்சட்டம் 2018 ஆனது NCBCக்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்குகிறது.
- **நோக்கம்:** பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் எந்த வகுப்பினரை சேர்க்கலாம் என்பது பற்றி பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைப்பதாகும்.
- **தற்போதைய தலைவர்:** திரு. பகவான் லால் சாய்.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் -1993, மார்ச் 15ல் மாநில அரசால் தொடங்கப்பட்டது.

7.8. சமூக நீதியும் சிறுபான்மையினரும்

அரசியலமைப்பு உரிமைகள்

- அரசியலமைப்பானது சிறுபான்மையினரை இரண்டு வகைகளாக குறிப்பிடுகிறது.
  - மத சிறுபான்மையினர்
  - மொழியியல் சிறுபான்மையினர்.
- இருப்பினும் 'சிறுபான்மையினர்' என்ற வார்த்தை அரசியலமைப்பில் எங்கும் வரையறுக்கப்படவில்லை.
- 1993-ஆம் ஆண்டு மத்திய அரசு ஐந்து சமூகங்களை தேசிய அளவிலான சிறுபான்மை இனங்களாக அறிவித்தது. அவையாவன
  - முஸ்லீம்கள்
  - கிறிஸ்தவர்கள்
  - சீக்கியர்கள்
  - பௌத்தர்கள்
  - ஜொராஸ்டியர்கள் (பார்சிகள்)
- 2014-இல் சமணர்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.
- ஒரு மாநிலத்திலுள்ள பெரும்பான்மை மக்கள் பேசும் மொழி அல்லாது, மற்ற மொழி பேசும் மக்கள் மொழி ரீதியான சிறுபான்மையினர். இதன் பொருள் மொழியியல் சிறுபான்மையினர், மாநிலவாரியாக தீர்மானிக்கப்படுகின்றனர்.

https://t.me/tnpscfree

- மத மற்றும் மொழி சிறுபான்மையினருக்கான சரத்து: 29 (1), 29 (2), 30 (1), 30(1A), 30(2), 25(2)
- மொழியியல் சிறுபான்மையினருக்கான சரத்து: 347, 350, 350A, 350B

சட்ட உரிமைகள்

சிறுபான்மை யினர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையச் சட்டம், 2004	▪ சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்களுக்கு கூடுதல் பாதுகாப்புகளை வழங்குகிறது. ▪ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு ஒரு தேசிய ஆணையம் அமைதல் அந்த கல்வி நிறுவனமானது விருப்பப்பட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் இணையலாம்.
சிறுபன்மை யினருக்கான தேசிய ஆணையம் (1992) சட்டம்	▪ 1978-ல் அமைக்கப்பட்ட சிறுபான்மையினர் குழுவிற்கு சட்டபூர்வ தகுதி வழங்கப்பட்டது. ▪ அரசியலமைப்பு மற்றும் சட்டங்கள் மூலம் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட உரிமைகளின் மீறல் தொடர்பான புகார்களை கண்காணித்து வருகிறது.
வக்ஃபு வாரியம் சட்டம் (1995)	▪ வக்ஃபு வாரிய சொத்துகளை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் இயற்றப்பட்டது. ▪ இஸ்லாமிய சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய மத சம்பந்த மான பணிகளுக்கு, நல்ல நோக்கங்களுக்கும் அறப்பணிகளுக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துகளை அர்ப்பணிப்பதே 'வக்ஃபு' ஆகும். ▪ இச்சட்டமானது மத்திய வக்ஃபு வாரியத்தை ஏற்படுத்த வழிவகை செய்தது.

சிறுபான்மையினர்களுக்கான தேசிய ஆணையம்

- 1993-இல் அமைக்கப்பட்டது.
- இது சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையச் சட்டம் (1992) கீழ் நிறுவப்பட்டது.
- **நோக்கம்:** சிறுபான்மையிரின் நலன்களை பாதுகாத்தல்.
- **தற்போதைய தலைவர்:** ஸ்ரீ சையது கயோருல் ஹாசன் ரஷ்வி.

7.9. சமூக நீதியும் மாற்று திறனாளிகளும்

அரசியலமைப்பு உரிமைகள்

- சரத்து : 41(B)

சட்ட உரிமைகள்

மாற்று திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் (1995)	▪ இது நாட்டின் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முதன்மையான சட்டம் ▪ ஊனமுற்றோருக்கான சம வாய்ப்புகளை உறுதிப்படுத்துகிறது. ▪ அவர்களின் உரிமைகளை பாதுகாத்து, தேசிய அளவில் பங்கேற்க செய்கிறது
அதீத செயல்பாடு (ஆட்டிசம்) மற்றும் பெருமூளை வாதம், மனவளர்ச்சிக் குன்றல் மற்றும் பலதரப்பட்ட குறைபாடுடையர்வர் களின் நல்வாழ்க்கான தேசிய அறக்கட்டளை சட்டம், 1999	▪ ஆட்டிசம், பெருமூளை வாதம், மன வளர்ச்சிக் குன்றல் மற்றும் பல தரப்பட்ட குறைபாடுகள் கொண்ட நபர்களின் நலனுக்காக அறக்கட்டளை அமைக்க வழிவகைச் செய்தது. **குறிக்கோள்:** ▪ ஊனமுற்றோர் நபர்கள் கன்னியத்துடன் சுதந்திரமான வாழ்க்கையை வாழ உறுதி செய்தல். ▪ ஊனமுற்றோர் தேவைகளை கவனிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிறசேவை வழங்குபவர்களை ஆதரிப்பதில் மற்றும் ஊனமுற்றோரின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்கான சட்டபூர்வ பாதுகாவலர்களை நியமித்தல்.
இந்திய மறுவாழ்வுச் சட்டம், 1992	▪ மறுவாழ்வு நிபுணர்களை பயிற்சியை ஒழுங்குபடுத்துவதும், கண்காணிப்பதும், மறுவாழ்வு மற்றும் சிறப்பு கல்வியில் ஆராய்ச்சியை ஊக்குவிக்கிறது.
மனநல சட்டம், 1987	▪ மனநோயாளிகளின் சிகிச்சை மற்றும் கவணிப்பு ஆகியவற்றை கையாளுகிறது. ▪ மனநல நோயாளிக்கான மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்துகிறது. ▪ சட்ட சேவைகள் உரிமைச் சட்டம் 1987 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்குகிறது.

மாற்றுதிறனாளிகளுக்கான மத்திய ஆணையர்

- மாற்று திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் (1995) இன் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான மத்திய ஆணையர் அலுவலகம் செயல்படுகிறது.
- **நோக்கம்:** மாற்றுத்திறனாளி நபர்களின் உரிமைகளை பாதுகாத்தல்
- **தற்போதைய தலைவர்:** கமலேஷ் குமார் பாண்டே

https://t.me/tnpscfree

7.10 சமூகநீதியும் முதியவர்களும்

அரசியலமைப்பு உரிமைகள்

- சரத்து- 41

சட்ட உரிமைகள்

- பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு சட்டம் 2007 ஆனது பெற்றோர்களுக்கும் மூத்த குடிமக்களுக்கும் தேவை அடிப்படையிலான பராமரிப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்ய இயற்றப்பட்டது.
- இந்த சட்டத்தின் அம்சங்களாவன
  - பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள், அவர்களின் குழந்தைகள் / உறவினர்களால் பராமரிக்கப்படுதல் தீர்ப்பாயங்கள் மூலம் கட்டாயமாக்குதல்.
  - உறவினர்களால் அலட்சியம் ஏற்பட்டால் மூத்த குடிமக்களால் சொத்து பரிமாற்றத்தை ரத்து செய்தல்.
  - மூத்த குடிமக்களை கைவிட்டதற்கான தண்டனை.
  - அசாதாரண மூத்த குடிமக்களுக்கு முதியோர் இல்லங்களை நிறுவுதல்.
  - மூத்த குடிமக்களுக்கு போதுமான மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்
  - மூத்த குடிமக்களன் வாழ்க்கை மற்றும் சொத்துகளுக்கு பாதுகாப்பு,

இச்சட்டத்தை அறிவித்த மாநிலங்கள் / அனைத்து யூனியன் பிரதேசங்களும் திறம்பட செயல்படுத்த பின்வருவற்றை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- இச்சட்டத்தின் கீழ் சில ஒழுங்குமுறைகளை வகுத்தல்
- பராமரிப்பு அதிகாரியை நியமித்தல்
- பராமரிப்பு தீர்ப்பாயங்களை அமைத்தல்
- மேல்முறையீடு தீர்ப்பாயங்களை அமைத்தல்

7.11. சமூக நீதியும் போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களும்

அரசியலமைப்பு உரிமைகள்

- அரசியலமைப்பானது போதைப் பொருளால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அணைத்து தனிநபர்களின் சுதந்திரம், நீதி, கௌரவம், சமத்துவம் ஆகியவற்றை உறுதி செய்கிறது.
- பகுதி IV – சரத்து – 47 போதை பழக்கத்தால் பாதிக்கப்பட்டோர் தொடர்பானது.

சட்ட உரிமைகள்:

போதை மருந்து மற்றும் மனோவியல் / உளவியல் பொருட்கள் சட்டம் (1985)

- இச்சட்டத்தின் கீழ் அரசானது மறுவாழ்வு மையங்கள் அமைத்து போதைக்கு அடிமையானவர்களை கண்டுபிடித்து, அவர்களுக்கு மருத்துவ உதவி, கல்வி மற்றும் மறுவாழ்வு அளித்து அவர்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கிறது.

குறிக்கோள்கள்

- போதை பொருள் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்து திருத்துதல்
- பேதை மருந்து மற்றும் மனோவியல் பொருட்களை தொடர்பான செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த மற்றும் கட்டுப்படுத்த கடுமையான விதிமுறைகளை வகுத்தல்
- போதை மருந்து மற்றும் மனோவியல் பொருட்கள் தொடர்பான சர்வதேச மாநாட்டின் அம்சங்களை நடைமுறைப்படுத்துதல்.

தேசிய பசுமை தீர்ப்பாயம், 2010

- தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் (2010) இன் கீழ் நிறுவப்பட்டது.
- நோக்கம் – சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் காடுகள் மற்றும் பிற இயற்கை வளங்களை பாதுகாத்தல் தொடர்பான வழக்குகளை திறம்பட மற்றும் விரைவாக முடித்தல்.
- சுற்றுச்சூழல் நீதியை நிலைநாட்டுவதற்கு நிறுவப்பட்டது.
- தற்போதைய தலைவர் – ஸ்வாதந்தர் குமார்

வட கிழக்கு கவுன்சில் (1971)

- 1971 ஆம் ஆண்டு வடகிழக்கு கவுன்சில் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது மற்றும் இச்சட்டம் 2002-இல் திருத்தப்பட்டது.
- வடகிழக்கு பிராந்தியத்தில் சீரான வளர்ச்சியை பெறுவதற்கும் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கை பேணுவதற்கும், மாநில அரசுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காகவும் அமைக்கப்பட்டது.
- பதவிவழி தலைவர் – உள்துறை அமைச்சர்

7.12. சமூக நீதியும் குடிமக்களும்

தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005

- இந்திய அரசியலமைப்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் குறித்த அம்சங்கள் இடம் பெறவில்லை. 1975 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கீழ்க்கானும் இரண்டு சரத்துக்களையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் உள்ளார்ந்த அம்சம் என குறிப்பிட்டது.
  - சரத்து 19 – பேச்சு மற்றும் கருத்துரிமை
  - சரத்து 21 – உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரம்.
- இச்சட்டத்தின் அம்சங்களை செயல்முறைப்படுத்த மத்திய தகவல் மற்றும் மாநில தகவல் ஆணையங்களை அமைக்க வழிவகை செய்தது.
- அனைத்து குடிமக்களுக்கும் தகவல் பெறுவதற்கான உரிமையை இச்சட்டம் வழங்குகிறது.
- பொதுமக்களுக்கு தகவல்களை வழங்க ஒவ்வொரு துறையிலும் ஒரு பொது தகவல் அலுவலரை நியமிப்பதற்கு வழி வகுக்கிறது.

https://t.me/tnpscfree

- தகவல் தெரியப்படுத்த 30 நாட்கள் அவகாசம் வழங்கப்படுகிறது. அவசர அல்லது தனிநபர் வாழ்க்கை அல்லது சுதந்திர தகவலாக இருந்தால் 48 மணி நேரம் காலக்கெடு (அதற்குள் தர வேண்டும்)
- குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் தகவல் தரப்படவில்லை என்றால், தாமதப்படுத்தும் ஒவ்வொரு நாளுக்கும் தகவல் ஆணையம் பொதுத் தகவல் அதிகாரிக்கு ரூ.250 அபராதம் விதிக்கும்.
- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு குறைந்தபட்ச தொகைக்கு தகவல் வழங்கப்படுகிறது.
- நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார மற்றும் அறிவு சார், வெளியுறவு தொடர்பான தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டிய தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

7.13. சமூக நீதியும் கல்வியும்

அரசியலமைப்பு உரிமை

- சரத்து 21-A

கல்வி உரிமைச் சட்டம்-2009, கல்வி உரிமை திருத்தச் சட்டம்-2012

- இந்திய நிலப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தொடக்க கல்வி பெறுதல் இச்சட்டம் மூலம் அடிப்படை உரிமையாக்கப்பட்டது.
- இந்த திருத்தச் சட்டத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை கல்வி உரிமை சட்டத்தின் கீழ் கொண்டுவந்துள்ளது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் மாற்றுதிறனாளி குழந்தைகள் ஆகியோருக்கும் இச்சட்டம் பொருந்தும் என இச்சட்டம் குறிப்பிட்டுள்ளது.
- "பல்வகை குறைபாடு" (கண், காது, வாய் பேசாத குழந்தை), மற்றும் "கடுமையான குறைபாடு" (அதிக பாதிப்புள்ள குழந்தைகள்), வீட்டிலிருந்தே கல்வி கற்க வாய்ப்பு அளித்துள்ளது.
- கல்வி உரிமைச்சட்டமானது, மதரஸாக்கள், வேதப் பள்ளிகள் போன்ற மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என்று அதன் சமீபத்திய திருத்தம் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.14. சமூக நீதி மற்றும் துப்புரவு தொழிலாளர்கள்

- சபாய் கர்மாசாரி என்பவர் எந்தவொரு துப்புரவு பணியிலும் ஈடுபட்டுள்ள அல்லது பணியாற்றும் தொழிலாளர்.

துப்புரவு தொழிலாளர்கள் தேசிய ஆணையம் (1993)

- இவ்வாணையம் துப்புரவு தொழிலாளர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம் 1997-இன் கீழ் இயற்றப்பட்டது.
- துவக்கத்தில் இவ்வாணையமானது 1994 வரை நடைமுறையில் இருக்கும் வண்ணம் கொண்டுவரப்பட்டது. பின்பு 2002 வரையும், அதன் பின்பு 2004 வரையும் விரிவுப்படுத்தப்பட்டது.

- 2004- முதல் துப்புரவு தொழிலாளர்கள் தேசிய ஆணையம் நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டது.
- தற்போது இது ஒரு சட்டரீதியற்ற அமைப்பாகும்.

துப்புரவு தொழிலாளர்களின் பணிகள்

- துப்புரவு பணியாளர்கள் தொடர்பான நலத்திட்டங்களை அரசுக்கு பரிந்துரைக்க.
- ஏற்கனவே இந்த துப்புரவு பணியாளர்கள் தொடர்பான நலத்திட்டங்களை ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்து, குறைகள் இருந்தால் விசாரணை செய்வது.

7.15. சமூக நீதியை நிலைப்படுத்துவதற்கான நீதிமன்றத்தின் தலையீடுகள்

7.15.1 IPC சட்டப்பிரிவு 377 ஓரினச் சேர்க்கை தண்டனைக்குரிய குற்றமல்ல

1. நாஸ் பவுண்டேஷின் அறக்கட்டளை Vs டெல்லி அரசு, 2009

- 2009-டெல்லி உயர்நீதிமன்றம் 18 வயதுக்கு மேல் உள்ள நபர்கள் அவர்களின் ஒப்புதலுடன் பாலியல் உறவு கொள்ளலாம் என தீர்ப்பு அளித்தது.
- குற்றவியல் சட்டபிரிவு 377 ஆனது அரசியலமைப்பு சரத்து 14, 15 மற்றும் 21 ஆகியவற்றிற்கு எதிரானது என கூறியது.
- டெல்லி உயர்நீதிமன்றம், சட்டப்பிரிவு 377 நீக்கி வயது வந்தவர்களிடையில் ஒருமித்த ஓரினச் சேர்க்கையை குற்றம் இல்லை என்று தீர்ப்பளித்தது.

2. சுரேஷ் குமார் கௌசல் வழக்கு Vs நாஸ் பவுன்டேஷின், 2013

- உச்சநீதிமன்றம், டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை செல்லாது என அறிவித்தது.
- 150 ஆண்டுகளில், 200-க்கு குறைவான நபர்களே பிரிவு 377இன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- "பாலியல் சிறுபான்மையினரின்" வாதத்தை கொண்டு ஒரு சட்டமானது, அரசியலமைப்பிற்கு உட்பட்டதா என்பதை தீர்மானிக்க முடியாது.
- டெல்லி உயர்நீதிமன்ற தீர்ப்பு செல்லாது எனவும் ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

3. நீதிபதி K.S. புட்டசுவாமி Vs இந்திய அரசு, 2017

- உயிர் மற்றும் சுதந்திரத்திற்கான உரிமையானது அடிப்படை உரிமையில் சரத்து 21 இன் கீழ் வருகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்பளித்தது.
- ஒருவரின் உடல் ரீதியான சுதந்திரமானது, அவரின் தனிமனித சுதந்திர உரிமை (சரத்து 21) யின் முக்கிய பகுதி எனத் தீர்ப்பளித்தது.

https://t.me/tnpscfree

4. நவ்தஜ் சிங் ஜோகர் Vs இந்திய அரசு, 2018

- **தீர்ப்பு:** ஓரினச் சேர்க்கை என்பது குற்றம் இல்லை.
- ஒருமித்த மனதுடன் ஒரே பாலினத்தைச் சேர்ந்த நபர்களின் சேர்க்கை குற்றமல்ல என்று உச்சநீதி மன்ற அமர்வு அறிவித்தது. மேலும் 377வது சட்டப்பிரிவு இந்திய அரசியலமைப்பின் சரத்து 14, 15, 19 மற்றும் 21-ஐ மீறுகிறது என்றும் கூறியது.

IPC பிரிவு 377, இயற்கைக்கு மாறான குற்றங்கள்

- எந்த ஒரு ஆனோ, பெண்ணோ, மிருகங்களுடனோ அல்லது இயற்கைக்கு மாறாகவோ உடலுறவு கொண்டால் , அவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

குறிப்பு: குற்றவியல் பிரிவு 377இல் ஓரினச்சேர்க்கை மட்டுமே குற்றம் கிடையாது, ஒத்துழைப்பு இல்லாத மற்றும் பிற விலங்குகளுடன் கொள்ளும் பாலியல் செயல்கள் குற்றம் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

	தீர்ப்பு: உச்சநீதிமன்றம் IPC497-ஐ ரத்து செய்தது.
	பிரச்சனை: இப்பிரிவு பெண்களை ஆண்களின் பொருளாக கருதுவதற்கு வழிவகை செய்தது மேலும் இது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரு வேறுபாட்டை உருவாக்குகிறது.
	தீர்ப்புக்கு பின்: தகாத உறவு என்பது விவாகரத்திற்கு ஒரு காரணமாக எடுத்துக்கொள்ளலாமே ஒழிய, அதை ஒரு கிரிமினல் குற்றம் என்று கருதமுடியாது.
	அரசின் வாதம்: மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்த பிரமாண பத்திரத்தில், 'இப்பிரிவினை தளர்த்தினால் அது திருமணத்தின் புனிதத்தை பாதிக்கும்' என்று கூறியது.
	நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியவை: இத்தீர்ப்பு தகாத உறவை ஒரு குற்றம் இல்லை என்று அறிவித்தாலும், பாதிக்கப்பட்ட நபர்கள் அவ்வுறவின் விளைவாக தற்கொலை செய்யும் பட்சத்தில் அந்நிகழ்வை தற்கொலைக்கு தூண்டியதன் பேரில் ஒரு குற்றமாக கருதப்படும்.

7.15.2 IPC சட்டப்பிரிவு 497

- திருமணத்தை மீறிய உறவு குற்றமல்ல.
- திருமணமான பெண்ணுடன் தகாத உறவு கொள்ளும் ஆண்களை தண்டிக்கும் வகையிலான இந்திய தண்டனை சட்டத்தின் 497-வது பிரிவை ரத்து செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1) கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்புகள்

ஆண் பெண் தகாத உறவுகளை குற்றம் என குறிப்பிடும் IPC பிரிவு 497 ஆனது 1954, 1985, 1988 ஆண்டுகளில் நீதிமன்ற விசாரணைக்கு வந்தது.

- **1951:** அப்துல் அசிஸ் Vs பம்பாய் அரசு: அரசியலமைப்பு சரத்து 14 மற்றும் 15 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவ

உரிமையை மீறியதாகக் கூறி குற்றிவியல் சட்ட பிரிவு 497ஐ உச்சநீதிமன்றம் செல்லாது என அறிவித்தது

- **1985:** சௌமித்ரி விஷ்ணு Vs இந்திய அரசு : ஆண் பெண் தகாத உறவின் மூலம் பாதிப்புக்குள்ளாவது ஒரு பெண்ணாக இருப்பின், அவர் மற்றொரு பெண்ணின் மீது வழக்கு பதிவு செய்ய முடியாது.
- **1988:** ரேவாடி Vs இந்திய அரசு: ஆண், பெண் தகாத உறவு குறித்த சட்ட பிரிவு 497 ஆனது பெரும்பான்மை இடங்களில் பாதுகாப்பு கவசமாகவோ செயல்படுகிறது.
- இச்சட்ட பிரிவானது, சமூக நலனை கருத்தில் கொண்டு பெண்களை இக்குற்றத்தினை அங்கமாக குறிப்பிடவில்லை.

பெண்களுக்கான பாதுபாடு

- IPC பிரிவு 497- தனது மனைவியின் காதலனுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்க உரிமை உண்டு. ஆனால் பெண்கள் தங்கள் கனவருக்கு எதிராக இத்தகை வழக்கை தொடர முடியாது.
- CrPC பிரிவு 198 (2)கணவன் மட்டும் ஆண், பெண் தகாத உறவிற்கு எதிராக புகார் செய்ய முடியும்.


2) ஜோசப் ஷைன் Vs இந்திய அரசு வழக்கு (செப்டம்பர், 2018)

வழக்கு: IPC இன் பிரிவு 497 மற்றும் CrPC பிரிவு 198(2)

தீர்ப்புகள்

IPC பிரிவு 497 ஆனது அரசியலமைப்பற்கு புறம்பானது ஏனென்றால் அது கணவரை தலை வராக பாவிக்கிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- பிரிவு 497 இது அடிப்படை உரிமைகள் சரத்து 14 மற்றும் 32 யை மீறுவதாக அறிவித்தது.
- ஆண், பெண் இடையேயான தகாத உறவை குற்றம் என கூறும் IPC பிரிவு 497 மற்றும் CrPC 198(2) ஆகியவற்றை செல்லாது என நீதிமன்றம் அறிவித்தது.
- தகாத உறவு கொண்ட நபரின் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய முடியாது ஆனால்



"தகாத உறவை தண்டிப்பது, பிற்போக்கு தனமானது. மேலும் அது மகிழ்ச்சியற்ற மக்களை தண்டிப்பது போன்றது ஆகும்..... நாகரீகமான சமூகத்தில் எந்தவொரு சட்டமும் தனிமனிதனின் கண்ணியத்திற்கோ, பெண்களின் சமநிலைக்கோ பாதிப்பை ஏற்படுத்தினால் அது அரசியலமைப்பு சட்டத்தின் கோபத்திற்கு உள்ளான செயலாகும்".

திரு.தீபக் மிஸ்ரா, உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி

https://t.me/tnpscfree

அதனை ஒரு காரணமாகக் கூறி விவாகாரத்து கோரலாம் மற்றும் குடிமையியல் வழக்கு பதியலாம்.

7.15.3 சமூக நீதியும் பெண்கள் சபரிமலைக்கு செல்ல அனுமதியும்

வழக்கு: இந்திய இளம் வழக்கறிஞர் சங்கம் Vs கேரள அரசு (செப்டம்பர், 2018)

சபரிமலை கோவில் தொடர்பான பிரச்சனைகள்

- சபரிமலை கோயிலானது, 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் கோயிலுக்குள் நுழையும் அனுமதியை தடை செய்கிறது.
- இத்தடையானது, கேரள இந்து பொது வழிபாட்டுக்கான தளங்கள் (நுழைவு அங்கீகாரம்) சட்டம், 1965 இன் பிரிவு 3இல் குறிப்பிட்டுள்ள இந்துக்களின் அனைத்து பிரிவினரையும் பொது வழிபாட்டுத் தளங்களில் அனுமதிக்கும் உரிமைக்கு எதிராக அமைகிறது.
- திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியமானது, ஆலயத்தினுள் பெண்களின் நுழைவை அனுமதித்தலால், ஐயப்பனின் பிரம்மச்சரியம் பாதிக்கப்படும் என்று குறிப்பிடுகிறது.

கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்புகள்

1991	▪ 1990-ஆம் ஆண்டு மகேந்திரன் என்பவர் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குள் இளம் பெண்கள் செல்வதாக கேரள உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். ▪ தீர்ப்புஃ மாதவிடாய் நிகழ்பருவம் பெண்கள் இக்கோவிலுக்குள் செல்ல கூடாது என்பது பின்னெடுங்காலமாக தொடரும் வழக்கம் என்பதால் (10 முதல் 50) வயது பெண்கள் செல்ல கூடாது என தீர்ப்பளித்தனர்.
2016	▪ கேரள இந்து சமய பொது வழிபாட்டு தலங்கள் சட்டம் 1965 படி, இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் (14, 15, 25 சரத்துகளை) மீறுவதாக அறிவித்தது.
2017	▪ உச்சநீதிமன்றம் ஐந்து நபர்கள் கொண்ட அரசியலமைப்பு குழுவிற்கு இவ்விசாரணையை பரிந்துரைத்தது.

அண்மை காலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகள்:

- குறிப்பிட்ட வயதுப் பெண்களை இந்து சமயக் கோவிலுக்குள் செல்வதையும் ஐய்யப்பனை வழிபடுவதையும், தடை செய்யும் இவ்வழக்கம் தெளிவானதொரு உரிமை மீறல் என்று கூறியது. இது அவர்களின் கடவுள் வழிபாட்டு உரிமை பறிப்பாகும்.
- மாதவிடாய் போன்ற உயரியல் அம்சங்களின் அடிப்படையில் விலக்கப்படுவது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று கூறியது. இது சமத்துவ உரிமையை மீறுவதாக அமைந்துள்ளாக தீர்ப்பளித்தது.
- பம்பாய் மாநிலம் Vs நரசப்பா மாலி வழக்கு, (1951) தனிப்பட்ட சட்டம் (தனியுரிமை சட்டம்) விதி 13 கீழ் செல்லாது என தீர்ப்பளித்தது.
- அரசியலமைப்பு சட்டத்தை மீறி எந்தவொரு பழக்க வழக்கம் மற்றும் பயன்பாடு இல்லை. கண்ணியம், சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய புனிதத்தை உறுதிப்படுத்துகிறது.

எதிர் கருத்து

- இத்தீர்ப்பு 4-1 என்ற பெரும்பான்மையில் வழங்கப்பட்டது.
- இந்து மல்கோத்ரா தீர்ப்புக்கு எதிராக இருந்தார்.
- இந்திய அரசியலமைப்பு சரத்து 25 (1) கேரள இந்து சமய வழிபாடு தலங்கள் விதி 3 (6) ஆகியவற்றுக்கு எதிரானது இத்தடையென உச்சநீதிமன்றம் குறிப்பிடுகிறது.

தீர்ப்பின் முக்கிய கூறுகள்

- பெண்களை ஐய்யப்பன் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும்.
- உடலியல் அல்லது இயற்கை காரணங்களால் அனுமதி மறுப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.
- பெண்களும் ஆண்களும் சமமானவர்கள்
- ஆணாதிக்க கருத்துக்கள் பக்தி மீது வெற்றி பெற முடியாது.
- அரசியலமைப்பு சரத்து 26(b) , கீழ் மத அதிகாரிகள் பெண்ணின் மத சுதந்திரத்தை சரத்து 25 (1) ஐ புறக்கணிக்க முடியாது.
- இத்தீர்ப்பு - சரத்து 17 ஐ பாதுகாக்கிறது.

7.15.4 சமூக நீதியும் அயோதியா தீர்ப்பும்

அயோதியா வழக்கின் இறுதி தீர்ப்பை உச்ச நீதிமன்றம் 9 நவம்பர் 2019 அன்று வழங்கியது.

தீர்ப்புகள்

- 5 நீதிபதிகள் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டதால் நீதிபதி ரஞ்சன் கோகாய் தீர்ப்பு வழங்கினார்.
- அயோத்தியில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்த மாற்று இடம் வழங்கப்பட வேண்டும்.
- வக்ஃபு போர்டு ஏற்கும் இடத்தில் 5 ஏக்கர் நிலம் தர உத்திர பிரதேசம் அரசுக்கு மத்திய அரசு பரிந்துரைக்க கோரியது.
- சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தை ராமர் கோயில் கட்ட ஒதுக்க வேண்டும் என்று கூறியது.
- கோவில் கட்டுவதற்காக புதிய அறக்கட்டளை ஒன்றை 3 மாதத்தில் மத்திய அரசு அமைக்க வேண்டும். அந்த அறக்கட்டளை ராமர் கோயில் கட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

செப்பம் உடையவன் ஆக்கஞ் சீதைவின்றி
எச்சத்திற் கோமாப்பு உடைத்து.

- குறள் 112

விளக்கம்:
நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

https://t.me/tnpscfree

மாதிரி வினாக்கள்

1. பொருத்துக.

(a) குடும்ப நல நீதிமன்றச் சட்டம்	1. 1976
(b) சம ஊதியச் சட்டம்	2. 1987
(c) பெண்களைத் தவறாக சித்தரித்தல் (தடுப்பு) சட்டம்	3. 1984
(d) சட்ட சேவைகள் ஆணையச் சட்டம	4. 1986

குறியீடுகள்:

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	4	1	2	3
(C)	3	1	4	2
(D)	1	3	2	4

2. சமூக நீதித் தத்துவம் பெருமளவில் வேரூன்றியிருப்பது
   (A) இயற்கை நீதியில் (B) அறம் சார் நீதியில்
   (C) பங்கீட்டு நீதியில் (D) சட்டம் சார் நீதியில்
3. பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் - 2005 எந்த விதமான வன்முறைகளிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது?
   (A) உடல் ரீதியான வன்முறை (B) பாலியல் ரீதியான வன்முறை
   (C) பொருளாதார ரீதியான வன்முறை (D) மேற்கண்ட அனைத்தும்
4. உறுதிப்படுத்தும் நடவடிக்கை என்பது
   1. நேர்மறை பாகுபாடு
   2. நலிவடைந்த பிரிவினருக்கு ஆதரவான திட்டங்களை உருவாக்குதல்
   3. கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்கிறது.
   4. ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதலே இதன் நோக்கமாகும்.
   (A) 1 மற்றும் 2 (B) 2 மற்றும் 3 (C) 1, 2 மற்றும் 3 (D) அனைத்தும்
5. சமூக நீதி பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு:
   1. இது வர்க்க வேறுபாடுகளைக் களைவதுடன் சமத்துவக் கண்ணோட்டத்துடனும் அமைந்திருக்கிறது.
   2. சாதியின் பெயரால் வாய்ப்பு மறுக்கப்பட்ட பலரது நிலை இயற்கையான ஒன்றாகவே கருதப்படுகிறது.
   (A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 1 மற்றும் 2 (D) எதுவுமில்லை

விடைகள்

1	2	3	4	5
C	C	D	D	C

அத்தியாயம்

8

தமிழ்நாட்டில் கல்வி முறைமைகள்

"ஒரு சமூகத்தின் வளர்ச்சியை அச்சமூகத்தின் பெண்கள் அடைந்த வளர்ச்சி நிலையை வைத்தே நான் கணக்கிடுவேன்". **பி.ஆர். அம்பேத்கர்**

8.1 கல்வி - அறிமுகம்

- கல்வி என்பது ஒரு கற்றல் அனுபவம் அல்லது அறிவு, திறன், மதிப்பு, நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை பெற்று அதனை அன்றாட வாழ்வில் செயல்முறைப்படுத்துதல்.
- இது மனிதர்களின் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்குமான ஒரு முக்கிய கருவியாகும். இது சமூக சிந்தனை மற்றும் மாற்றத்திற்கு வித்திடுகிறது.
- கல்வியானது, சமூகத்தில் ஒரு கௌரவமான இடத்தைப் பெற்றுள்ளது. கல்வியின் அடிப்படையிலான பங்கினை உணர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள், தேசிய வளர்ச்சியில் அதன் முக்கியத்துவம் குறித்து சுதந்திர போராட்டம் முழுவதும் கல்வியின் சிறப்பினை அனைவருக்கும் எடுத்துரைத்தனர்.
- 1951-ஆம் ஆண்டு இந்தியாவில் கல்வி அறிவு பெற்றிருந்தோரின் விழுக்காடு 16.1 ஆகும். பெண்கள் கல்வி மிகப் பின்தங்கிய நிலையில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது.

- 1976 ஆம் ஆண்டு வரை, கல்வி மாநிலப் பட்டியலில் காணப்பட்டது பின்பு 42-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் படி கல்வி பொதுப்பட்டியலில் (Concurrent list) சேர்க்கப்பட்டது.
- மனித வளத்தை நன்றாக பயன்படுத்தி சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த மனித வள மேம்பாட்டு அமைச்சரவை 1985-ல் உருவாக்கப்பட்டது.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 4-ஆனது அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான, தரமான கல்வியை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் சர். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

https://t.me/tnpscfree

8.2 இந்தியாவில் கல்வி வளர்ச்சி

8.2.1 நிறுவன விதியின் கீழ் கல்வி வளர்ச்சி

- முஸ்லீம் சட்ட ஆய்வுக்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் 1781 இல் கல்கத்தா மதராஸாவை நிறுவினார். அது முஸ்லீம் உயர் கல்வி மையமாகவும் செயல்பட்டது.
- இந்து சட்டம் மற்றும் தத்துவ ஆய்வுக்காக 1791 ஆம் ஆண்டில் பனராஸில் ஜோநாதன் டங்கன் சமஸ்கிருத கல்லூரி நிறுவினார்.
- இந்திய மொழிகள் மற்றும் பழக்கவழக்கங்களில் நிறுவனத்தின் அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக வெல்லெஸ்லியால் 1800 இல் போர்ட் வில்லியம் கல்லூரி நிறுவப்பட்டது. (1802 இல் மூடப்பட்டது).

1. 1813 பட்டயச் சட்டம் மற்றும் கல்வி

- சார்லஸ் கிராண்ட் மற்றும் வில்லியம் வில்பர்போர்ஸ் போன்ற ஆங்கில சமய ஆர்வலர்கள் கிழக்கிந்திய கம்பெனியை கல்வியில் தலையிடாத கொள்கையை கைவிட நிர்பந்தித்தனர்.
- முதன்முறையாக, பிரிட்டிஷ் பாராளுமன்றம், கவர்னர் ஜெனரல் கவுன்சில் கல்விக்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு குறையாத தொகையை வைத்திருக்க வேண்டும் என்று 1813-ம் ஆண்டு சாசனத்தில் சேர்த்தது. இருப்பினும், நிறுவனம் இந்த நிதியை இந்திய மொழி மற்றும் இலக்கியங்களை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தியது.
- 1817: மேற்கத்திய கல்வியை வழங்குவதற்காக ராஜா ராம் மோகன் ராயின் முயற்சியால் கல்கத்தா கல்லூரி நிறுவப்பட்டது. டெல்லி, ஆக்ரா மற்றும் கல்கத்தாவில் மூன்று சமஸ்கிருத கல்லூரிகள் ஆங்கில அரசாங்கத்தால் அமைக்கப்பட்டன.

2. ஓரியல்வாத – ஆங்கிலவாத சர்ச்சை, 1834

- **ஆங்கிலவாதிகள்:** நவீன படிப்புகளுக்காக மட்டுமே அரசாங்கம் செலவிடுகிறது என்று வாதிடப்பட்டது.
- **ஓரியண்டலிஸ்டுகள்:** வேலைவாய்ப்பு பெறுவதற்காக மாணவர்களுக்கு மேற்கத்திய அறிவியல் மற்றும் இலக்கியம் கற்பிக்கப்பட வேண்டும். பாரம்பரிய இந்திய கற்றல் விரிவாக்கம் குறித்தும் அவர்கள் வலியுறுத்தினர்.

3. மெக்காலே பிரபுவின் கல்வி கொள்கை, 1835

- 1835 ஆம் ஆண்டில், மெக்காலே பிரபு வெளியிட்ட "இந்திய கல்விக் கொள்கை" ஆங்கிலேயருக்கு ஆதாரவாக இருந்தது.
- மெக்காலே கல்வி முறையின் கீழ் (கவர்னர் ஜெனரல் பெண்டின்க் ஒப்புதல் அளித்தார்), பாரசீகம் நீதிமன்ற மொழியில் இருந்து ஒழிக்கப்பட்டு ஆங்கிலம் மாற்றப்பட்டது.
- உயர் கல்வியில் உள்ளூர் மொழியைத் தவிர்த்து, **ஆங்கிலக் கல்வியானது** உயர் வகுப்பினருக்காக ஊக்கப்படுத்தப்பட்டது.

- ஒவ்வொரு மாகாணமும் அதற்கேற்ற கல்விக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்டன.
- ஆங்கில புத்தகங்களை அச்சிடுவது இலவசமாக்கப்பட்டது. மேலும் இவை ஒப்பீட்டளவில் குறைந்த விலையில் கிடைத்தன.
- அங்கீகரிக்கப்பட்ட மெக்காலே அமைப்பு சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கு ஆங்கிலம் மூலம் பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்துவதற்கும், வட்டார மொழிகளையும் இலக்கியங்களையும் மேம்படுத்துவதற்காக மக்களிடம் மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். மேற்கத்திய கற்றலும், இந்த முறையில் மக்களிடையே பரவியது.
- மெக்கலே இந்திய கல்வி முறையை ஐரோப்பிய கல்வி முறையை விட தாழ்ந்து உள்ளதாய் கருதினார்.
- ஆங்கில அரசு பள்ளி கல்லூரிகளில் ஆங்கிலத்தை கற்பித்தல் மொழியாக அறிவித்தது. ஆரம்ப பள்ளிகளுக்கு பதிலாக ஆங்கில பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறந்தது.

4. தாம்சனின் முயற்சிகள்:

- ஜேம்ஸ் தாம்சன், வடமேற்கு மாகாணங்களின் லெப்டினன்ட்-கவர்னராக இருந்தார். (1843-1853)
- கிராம மக்கள் அவர்களின் தாய்மொழி வழியாகவே கற்கும் விதமாக வேளாண் திட்டத்தை உருவாக்கினார்.
- இந்த திட்டத்தின் நோக்கம் புதிதாக அமைக்கப்பட்ட வருவாய் மற்றும் பொதுபணித் துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதாகும்.

5. உட்ஸ் கல்விக்கொள்கை, 1854

- உட்ஸ் கல்வி அறிக்கை (1854) இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் "மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அனைத்து நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வியை வழங்கும், ஆங்கில கல்விக் கொள்கையின் முதல் அறிக்கை.
- சர் சார்லஸ் உட் 1854 ஆம் ஆண்டில் கல்வி குறித்த ஒரு பெரிய திட்டத்தை எடுத்துரைத்தார்.
- 1855: ஐந்து மாகாணங்களில் பொது வழிமுறைக்கான துறைகளை நிறுவுதல்.
- கல்வித் துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக உதவித்தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெதுன் பள்ளி கல்கத்தாவில் (1849) ஜே.இ.டி. பெத்துன் என்பவரால் நிறுவப்பட்டது.
- பூசா (பீகார்) இல் விவசாய நிறுவனம் நிறுவப்பட்டது.
- ரூர்க்கியில் பொறியியல் நிறுவனம் நிறுவப்பட்டது (1847).
- தொழில்நுட்ப கல்வி, ஆசிரியர் மற்றும் பெண்கள் கல்விக்கான பள்ளிகளை நிறுவுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- லண்டன் பல்கலைக்கழகத்தின் மாதிரியில் கல்கத்தா, பம்பாய் மற்றும் மெட்ராஸில் தலா ஒரு பல்கலைக்கழகம் நிறுவ பரிந்துரைக்கப்பட்டது.

https://t.me/tnpscfree

- ஆனால் இது இந்தியர்களின் கொள்கைகளையும் கலாச்சாரத்தையும் விலக்கி வைத்து மாநிலக் கல்வியின் மீது முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

8.2.2 பிரிட்டிஷ் மகாராணியின் நேரடி ஆட்சியின் கீழ்

ஹண்டர் கல்வி குழு (1882–1883)

- 1882 இல் நியமிக்கப்பட்டது.
- தலைவர்: நி.நி. ஹண்டர்.
- 1854 ஆம் ஆண்டு உட்ஸ் அறிக்கைக்கு பின்பு கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய அமைக்கப்பட்டது.

விளைவுகள்:

- இந்தியர்களின் பங்களிப்போடு, அடுத்த 20 ஆண்டுகளில் மேல்நிலை மற்றும் கல்லூரிப் படிப்புகளில் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் ஏற்பட்டது.
- கற்பித்தல் மற்றும் ஆய்வுசெய்தல் அடிப்படையில் செயல்படும் பஞ்சாப் (1882) மற்றும் அலகாபாத் (1887) பல்கலைக்கழகங்கள் துவங்கப்பட்டன.

ராலே கமிஷன், 1902

- இந்த ஆணையத்தை சர் தாமஸ் ராலே தலைமையின் கீழ் கர்சன் பிரபு நியமித்தார்.
- நோக்கம்: இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களின் நிலை மற்றும் அவற்றின் வளர்ச்சியை ஆராய.
- பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் மற்றும் பணிகளை மேம்படுத்துதலுக்கானா பரிந்துரைகளை வழங்கியது.
- ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விக் குறித்து கூறப்படவில்லை.
- இதன்படி இந்திய பல்கலைக்கழகச் சட்டம் 1904 நிறைவேற்றப்பட்டது.

இந்திய பல்கலைக்கழகச் சட்டம், 1904

- பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.
- ஒரு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களின் எண்ணிக்கையும், அவர்கள் பதவியில் இருக்கும் காலமும் குறைக்கப்பட வேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படவேண்டும்.
- பல்கலைக்கழகங்களின் சென்ட் விதிமுறைகளை நீக்கவும், அவைகளை திருத்தவும், புதிய விதிகளை உருவாக்குவதற்கும் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு.
- தனியார் கல்லூரிகளுக்கு நிபந்தனைகள் கடுமையானதாக இருக்க வேண்டும்.
- உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழகங்களின் முன்னேற்றத்திற்காக ஐந்தாண்டுகளுக்கு ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கப்பட வேண்டும்.

கல்வி கொள்கை குறித்த அரசு தீர்மானம், 1913

- 1906: பரோடா மாநிலம் முழுவதும் கட்டாய ஆரம்பக் கல்வியை பிராந்தியங்கள் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது.

1913: கல்வி கொள்கை தீர்மானம்

- கட்டாயக் கல்வி வழங்குவதை மத்திய அரசு ஏற்க மறுத்து விட்டது. ஆனால் கல்வியறிவின்மையை அகற்றும் கொள்கையை ஏற்றுக்கொண்டு, ஏழை மற்றும் பின்தங்கியவர்களுக்கு இலவச தொடக்கக் கல்வியை வழங்க மாகாண அரசுகளுக்கு கோரியது.
- இரண்டானிலை பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான தனியார் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.
- ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். கற்பித்தல் நடவடிக்கைகள் பல்கலைக்கழகங்களில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

சாட்லர் பல்கலைக்கழக குழு (1917–1919)

- **நோக்கம்:** கல்கத்தா பல்கலைக்கழகத்தின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளித்தல்.
- ஆனால் அதன் பரிந்துரைகள் மற்ற பல்கலைக்கழகங்களுக்கும் பொருந்தும் என்று கூறியது.
- இது பள்ளி கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை மொத்த கல்வி முறையையும் மறு ஆய்வு செய்தது.

> - 1916–1921 வரையிலான காலகட்டத்தில் மைசூர், பாட்னா, பெனாரஸ், அலிகார், டக்கா, லக்னோ மற்றும் உஸ்மானியா ஆகிய இடங்களில் 7 புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன.

1919 மாண்டேகு–செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தின் கீழ் கல்வி

- கல்வியானது மாகாண அமைச்சகங்களுக்கு மாற்றப்பட்டது, கல்வித் தொடர்பான விவகாரங்களை அரசாங்கம் நேரடியாக கவனிப்பதை நிறுத்தியது.
- நிதி சிக்கல்கள் கல்வித்துறையின் கணிசமான விரிவாக்கத்தை தடுத்தன, இருந்தும் சில கல்வியாளர்களின் முயற்சியால் கல்வி வளர்ந்தன.
- கல்வியின் தரம் மோசமடையும் விதமாக பள்ளி மற்றும் கல்லூரிகள் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடாது.

ஹார்டாக் கமிட்டி, 1929

- கல்வியின் வளர்ச்சி குறித்து அறிக்கை அளிக்க ஹார்டாக் குழு அமைக்கப்பட்டது.

நோக்கம்

- அதிகரித்த பள்ளி, கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வாறு கல்வியின் தரத்தை குறைத்தது என்பதை ஆராய இந்தக்குழு நியமனம் செய்யப்படும்.

https://t.me/tnpscfree

- ஆரம்ப கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் ஆனால் நிர்பந்தத்தின் அடிப்படையில் விரிவாக்கம் செய்தது அவசியமற்றது என பரிந்துரைக்கப்பட்டது.
- சராசரி மாணவர்கள் எட்டாம் வகுப்பிற்குப் பிறகு தொழிற்கல்வியை பயிற்றுவிக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.
- பல்கலைக்கழக கல்வியின் தரத்தை மேம்படுத்த, சேர்க்கை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

8. வார்தா கல்வித் திட்டம், 1937

- 1937 ஆம் ஆண்டு வார்தாவில் காங்கிரஸ் கட்சியானது, தேசிய கல்வி மாநாட்டை நடத்தியது.
- காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித் திட்டத்தின் அச்சாணியாக அகிம்சை கொள்கை இருந்தது. அக்கல்வித் திட்டத்தின் மூலம் அகிம்சைக் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார்.
- அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஜாகிர் உசைன் குழு அடிப்படைக் கல்விக்காக தேசிய திட்டத்தை உருவாக்கியது.
- இத்திட்டத்தின் முக்கிய கொள்கை 'செயல்பாட்டின் மூலம் கற்றல்'
- காந்தி நடத்திய ஹரிஜன் என்ற வார இதழில் வெளியான கொண்டு இக்கல்வி திட்டம் உருவாக்கப்பட்டது.
- மேற்கத்திய கல்வி படித்த சிலருக்கிடையே பெரும் இடைவெளி உருவாவதாக காந்தி கருதினார். மேலும் படித்த உயர்குடி மக்களை செயல் திறன் அற்றதாக அந்த கல்விமுறை மாற்றியுள்ளதாகவும் நினைத்தார். இந்த வர்தா கல்விமுறை குழந்தைகளை மையமாக கொண்ட கூட்டுறவு அமைப்பு முறையாகும்.
- குழந்தையின் தாய்மொழியலேயே கல்வி கற்பிக்கப்பட்ட வேண்டுமென காந்தி வலியுறுத்தினார்.
- இந்த திட்ட கீழ்கண்ட கூற்றுகளை கொண்டிருந்தது.

இந்த திட்டத்தில் உள்ள கூறுகள்:

- பாடத்திட்டத்தில் ஒரு அடிப்படை கைவினைப் பொருள் உருவாக்குதல் பற்றி இருக்க வேண்டும்.
- தாய்மொழியிலேயே முதல் 7 வருட பள்ளி படிப்பு இலவசமாகவும், கட்டாயமாகவும் கொடுக்கப்பட வேண்டும்.
- இரண்டாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரை இந்தியில் இருக்கவும், எட்டாம் வகுப்புக்குப் பிறகுதான் ஆங்கிலத்தில் இருக்கவும் கற்பித்தல்.
- பள்ளிகளைச் சுற்றியுள்ள சமூகத்துடன் சேவைப் பணிகள் மூலமாக தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.
- இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்ததாலும், காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகியதாலும் வார்தா கல்வித்திட்டம் வளர்ச்சி அமையவில்லை.

9. தொழில்நுட்ப கல்வியின் வளர்ச்சி

- 1835: கல்கத்தாவில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டதன் மூலம் மருத்துவப் பயிற்சி தொடங்கியது.
- 1847: ரூர்க்கியில் பொறியியல் கல்லூரி அமைக்கப்பட்டது.
- 1856: கல்கத்தாவில் பொறியியல் கல்லூரி அமைக்கப்பட்டது.
- 1858: பூனாவில் வெளிநாட்டினருக்கான பள்ளி ஒன்று, பூனா பொறியியல் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது மற்றும் பம்பாய் பல்கலைக்கழகத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டது.
- 1862: கிண்டி பொறியியல் கல்லூரி மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

8.2.3 சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சி

- சுதந்திர இந்தியாவில், மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.
- கல்வி வளர்ச்சியே ஒரு நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தும்.
- நாட்டின் வளர்ச்சியையும், பாதுகாப்பையும் முக்கியமானதாக கருதி சுதந்திரத்திற்கு பிறகு, மத்திய மாநில அரசுகள் கல்வியின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.
- ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசால் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் அறிவியல் கொள்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
- அறிவியல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் அறிவியல் ஆராய்ச்சி துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- கல்வி துறை மறுகட்டமைப்பிற்கான புதிய மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகளுடன் கூடிய செயல்திட்டத்தை உருவாக்க 3-வது ஐந்தாண்டு திட்டத்தின்முடிவில் கல்வித்துறையில் ஒரு விரிவான மறு ஆய்வு செயல்முறை தேவையானதாக இருந்தது.

1. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் கமிஷன், 1948

பல்கலைக்கழக கல்விக் குழு பரிந்துரைகள்

- **நோக்கம்:** சுதந்திரத்திற்கு பின்பு உயர்கல்வி குறித்து அறிக்கை அளிக்க நியமனம் செய்யப்பட்ட முதல் ஆணையம்.
- **பரிந்துரை:** உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, பல்கலைக்கழக மானிய ஆணையம் (UGC) அமைக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

2. இடைநிலைக் கல்விக் குழு, 1952-53 (டாக்டர் லட்சுமணசாமி முதலியார் ஆணையம்)

- **நோக்கம்:** இந்திய இடைநிலைக் கல்வி முறையை மதிப்பீடு செய்வதற்காக போடப்பட்ட ஆணையம்.

https://t.me/tnpscfree

பரிந்துரைகள்:

- இது இடைநிலைக் கல்வி அளவில் குழந்தைகள் அனைத்து திறன்களிலும் முழுவளர்ச்சி பெற வேண்டும் மற்றும் உயர்கல்விக்கு ஆயத்தப்படுத்தும் வகையில் இருக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கியது.
- பள்ளிக்கல்வி என்பது கற்றலும் செயல்பாடும் என்னும் அடிப்படையில் அமைந்தது எனக் கூறியது.
- இந்தியாவுக்கு பொதுவான இடைநிலைக் கல்வி அமைப்பு.
- தரமான பாடப்புத்தகம், ஆசிரியர் பயிற்சி, கற்பிக்கும் திறன், விளையாட்டு போன்றவற்றை மேம்படுத்த பரிந்துரைகள் கொடுத்தது.

3. டாக்டர். டி.எஸ். கோத்தாரி கமிஷன், 1964

- 1964 ஜூலையில் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஆட்சிக் காலத்தில் இந்த கல்விக் குழு போடப்பட்டது. இக்குழு தேசியக் கல்விமுறை குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டது.
- 1966 ஜூன் மாதம் ஆணையம் பரிந்துரைகளை சமர்பித்தது.

முக்கிய பரிந்துரைகள்:

1. 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி வழங்க வேண்டும்.
2. நாடு முழுவதும் ஒரே மாதிரியாக 10+2+3 என்ற கல்வி அமைப்பு முறையை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

8.3 கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. தேசிய கல்விக் கொள்கை 1968

குறிக்கோள்

தேச முன்னேற்றத்தை ஊக்குவித்தல், குடியுரிமை மற்றும் பண்பாடு பற்றிய பொதுவுணர்வு மற்றும் தேச ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதல்.

கூறுகள்

- இலவச மற்றும் கட்டாயக்கல்வி – 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல் வழங்குதல்.
- வட்டார மொழிகள்– இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய மேம்பாடு என்பது கல்வி மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.
- மும்மொழிக் கொள்கை – இடைநிலைக் கல்வியில் மாநில அரசு மும்மொழிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். வடமாநிலங்கள் இந்தி, ஆங்கிலத்துடன் ஏதேனும் ஒரு நவீன இந்திய மொழியை, குறிப்பாக தென்னிந்திய மொழியையும் – இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி ஆங்கிலம் மற்றும் மாநில மொழியையும் படிக்க வேண்டும்.

- இந்தி – இந்தி மொழி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.
- சமஸ்கிருதம் – சமஸ்கிருத வளர்ச்சிக்கும் முயற்சிகள் மேற்கொள்வதுடன் சமஸ்கிருதக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் துவங்க முயற்சி எடுக்க வேண்டும்.
- உலக மொழிகள் – ஆங்கிலம் மற்றும் பிற உலக மொழிகள் கற்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- கல்வி வாய்ப்புகளில் சமத்துவத்தை ஏற்படுத்துதல் – வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முயலுதல் மற்றும் கல்வி வாய்ப்புகளில் சமத்துவத்தை ஏற்படுத்தல்.
- கல்விக்கான வசதிகளில் நிலவும் வட்டாரச் சமநிலையின்மை சரி செய்யப்பட வேண்டும் கிராம மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நல்ல கல்வி வசதிகள் வழங்கப்பட.
- பெண் கல்வி மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் ஏனெனில் சமூக நீதி என்ற காரணத்துக்காக மட்டும் அல்லாமல் சமூக மாற்றத்திற்கும் பெண் கல்வியே வழிகோலும்.
- பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் குறிப்பாக பழங்குடியினரிடையே கல்வியை மேம்படுத்த சிறப்புக் கவனமும், நடவடிக்கைகளும் தேவை.
- உடல் மற்றும் மனரீதியான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் விரிவு செய்யப்பட்டு அத்தகைய குழந்தைகள், பொதுப்பள்ளிகளில் மற்ற குழந்தைகளுடன் இணைந்து படிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி : தேசியப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும். பள்ளிக்கல்வி முடியும் வரை அறிவியலும் கணிதமும் பொதுக்கல்வியின் உள்ளடங்கிய பகுதிகளாக இருக்க வேண்டும்.
- விவசாயம் மற்றும் தொழிற்துறைக்கான கல்விக்கான சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
- ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது ஒரு விவசாயப் பல்கலைக்கழகமானது இருக்க வேண்டும்.
- தொழில்நுட்பக் கல்வியும் ஆராய்ச்சியும் தொழிற்சாலைகளுடன் நெருங்கிய உறவுடன் இருத்தல் அவசியம்.
- தேர்வுகள்: தேர்வு முறைகளில் மறுசீரமைப்பின் நோக்கமானது, தேர்வுகளின் மீதான நம்பகத்தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டுக் கால அளவை அதிகரிப்பதாக இருக்க வேண்டும். தேர்வுகளின் மதிப்பீடு என்பது மாணவர்களின் தரத்தையும் சாதனைகளையும் உயர்த்திக் கொள்ள பயன்படும் வகையில் செய்யப்பட வேண்டுமே தவிர ஒரு குறித்த கால இடைவெளியில் அவரது கல்வித் தரத்துக்கு சான்றளிப்பதாக இருக்கக் கூடாது.
- பல்கலைக்கழகக் கல்வி – கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் ஒரு துறையில் சேரும் முழுநேர மாணவர்களின் எண்ணிக்கையானது ஆய்வுக்கூடம், நூலகம், பிறவசதிகள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படவேண்டும்.

https://t.me/tnpscfree

- பகுதி நேர மற்றும் தொலைதூரக் கல்வி பாடப்பிரிவுகள் பல்கலைக்கழக அளவில் அதிகப்படுத்தப்பட வேண்டும்.
- கல்வியறிவு மற்றும் வயது வந்தோர் கல்வியைப் பரவலாக்கல் – ஜனநாயக நிறுவனங்களில் பங்கெடுப்புகளில் குடிமக்களை அதிகளவில் ஈடுபடுத்துவதற்கு மட்டுமல்லாமல் விவசாயம் உள்ளிட்ட துறைகளில் உற்பத்தி மற்றும் பொதுவான தேசிய மேம்பாட்டுக்கு திட்டங்களை வகுக்கவும் கல்வியறிவு பரவலாக்கப்பட வேண்டும்.
- இளம் பயிற்சி விவசாயிகள் மற்றும் இளம் சுயதொழில் முனைவோருக்கும் கல்வியளிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- விளையாட்டுப் போட்டிகள் – சராசரி மாணவரின் உடல் உறுதி மற்றும் விளையாட்டு ரீதியான சகோதரத்துவம் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு விளையாட்டுத் துறை பெரிய அளவில் மேம்படுத்தப்பட வேண்டும்.
- சிறுபான்மையினருக்கான கல்வி – சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் நில்லாமல், கல்வியிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

2. பெரியவர்களுக்கான தேசிய கல்வித் திட்டம் (National Adult Education Programme, 1978)

நோக்கம்:

- கல்வியறிவு இல்லாத 15 வயது முதல் 35 வரை உள்ளவர்களுக்கு கல்வி வழங்கிட, அதன் மூலம் இந்தியாவின் கல்வியறிவு விகிதத்தை அதிகரித்தல்

3. புதிய கல்விக் கொள்கை, 1986

- 1985-ல் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.
- கோத்தாரி கல்வி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஏற்பட்ட 20 ஆண்டுகால கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி ஆராயப்பட்டது.
- கல்வி பெறுவதற்கான வாய்ப்பில் உள்ள பாகுபாடுகளைக் களைந்து அனைவரும் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்குவதே நோக்கம் என அறிவித்தது.
- **நோக்கம்:** தேக்கநிலையில் உள்ள சமுதாயத்தை மாற்றம், முன்னேற்றத்துடன் துடிப்பான சமுதாயமாக மாற்றுவது.
- ஆரம்பக்கல்வியில் குழந்தைகளை மையமாகக் கொண்டும், ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு சமமான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- கிராமப்புறங்களில் உள்ள ஏற்றத்தாழ்வினை உதவித் தொகை , வயது வந்தோர் கல்வி மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் மூலம் நீக்குதல்.
- தொடக்கப் பள்ளிகளை மேம்படுத்த 'ஆபரேஷன் கரும்பலகைத்' திட்டத்தை நாடு முழுவதும் தொடங்கினார்.

விளைவுகள்

- 1969 கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டதிலிருந்து, நாடு முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் கல்வி வசதிகள் கணிசமான விரிவாக்கம் அடைந்துள்ளது.
- கிராமப்புற வாழ்விடங்களில் 90% அதிகமானோர்க்கு, ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் பள்ளிக்கல்வி வசதிகள் அமைக்கப்பட்டது.
- நாடு முழுவதும் பொதுவான கட்டமைப்புடைய கல்வி முறையை ஏற்றுக்கொள்வதே மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக கருதப்பட்டது. அதில் 10+2+3 கல்வி முறையை பெரும்பாலான மாநிலங்கள் அறிமுகப்படுத்தினர்.
- பள்ளி பாடத்திட்டத்தில், சிறுவர் சிறுமியருக்கு ஒரு பொதுவான படிப்பு திட்டத்தை வகுப்பதோடு, அறிவியல் மற்றும் கணித பாடத்தை கட்டாயமாக இணைத்தது. பணி அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- தேசிய கல்வியறிவு திட்டம், 1988.

4. ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், 1986

நோக்கம்:

1. எழுத படிக்க விரும்பும் மக்களை ஊக்குவிப்பது.
2. அவர்களுக்குரிய உரிமைகள் மற்றும் கடமைகளையும் தெரியப்படுத்துதல்
3. 'ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கு கற்பித்துக் கொடுத்தல்' (Each one teach one) என்ற முறையில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக NSS மற்றும் விரும்பிய மாணவர்களை ஈடுபடுத்துதல்
4. இத்திட்டமானது பெரியவர்களுக்கான தேசிய கல்வித்திட்டத்தின் ஒரு துணைத்திட்டம்.

5. தேசிய கல்வியறிவுத் திட்டம் (National Literacy Mission, 1988)

நோக்கம்:

- கல்வியறிவு இல்லாத மக்களுக்கு கல்வியறிவை புகுத்துதல்.
- இத்திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது. 15 வயது முதல் 35 வயது உள்ளவர்களுக்கு முழு கல்வியறிவு, கல்வியறிவிற்கு பின்பு மற்றும் கல்வியைத் தொடர்தல் போன்றவற்றிற்கு உதவுவது.

i) முழு எழுத்தறிவு இயக்கம் (TLC), 1989

- நோக்கம்: வயதுவந்தோர் கல்வியறிவின்மையை ஒழித்தல்

ii) தொடர் கல்வி திட்டம் (PLC)

- புதிதாக எழுத்தறிவு உணர்திறன் மற்றும் சக்தியை அணிதிரட்டுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை மற்றும் பணி நிலையில் உண்மையான மாற்றத்தைக்கொண்டு வந்து சமூக மாற்றத்தைக் கொண்டு வருகிறது.

6. ஜன் சிக்சான் சன்தன் (JSS) 1967

- கிராமப்புறத்தில் உள்ள படிக்காத, பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய மாணவர்களுக்கு அவர்களின் திறமையை கண்டறிந்து வேலைவாய்ப்புக் கல்வி (Vocational training) அளித்தல்.

https://t.me/tnpscfree

7. கல்வி உரிமைச் சட்டம், 2009 (RTE Act)

- சரத்து 21-A மற்றும் RTE சட்டம் 2010 ஏப்ரல் 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இச்சட்டமானது 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.

8. சாக்ஸர் பாரத், 2009

நோக்கம்:

- தேசிய கல்வியறிவு விகிதத்தை 80% அடைதல்.
- கல்வியறிவில்லாதோர்க்கு கல்வியறிவு அளிப்பது
- முறையான கல்வி முறையின் மூலம் சம அந்தஸ்தை பெறுதல்
- தொடர்புடைய திறன் மேம்பாட்டு திட்டத்தை வழங்குதல்
- தொடர்ச்சியான கல்வி வாய்ப்பினை வழங்குவதன் மூலம் இலகுவான சமூகத்தை ஊக்குவித்தல்.

9. சர்வ சிக்ஸ அபியான், 2001 (அனைவருக்கும் கல்வி இயக்கம்)

- **நோக்கம்:** 6-14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வியை வழங்க ஊக்குவித்தல். இது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும்.
- இது அனைத்து குழந்தகளும் தொடக்கக் கல்வியை பெறுவதற்க்காக 2000-01 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- பள்ளிகள் தொடர்பான பல்வேறு வகையான புதுமைகளையும், செயல்பாடுகளையும் துவக்கி வைத்துள்ளது. சில முக்கிய செயல்பாடுகளான மதிய உணவு வழங்குதல், மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், பள்ளி மேலாண்மைக்குழு அமைத்தல்.
- வகுப்பறைக்கான கற்றல்-கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் ஆகியவைகள் இவற்றுள் அடங்கும்.

9(a). அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் Rashtriya Madhyamik Shiksha Abhiyan (RMSA)

- பதினோறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்.
- இது இடைநிலைக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும்,பொதுவான அணுகுமுறைக்கான மத்திய அரசின் நிதி உதவித் திட்டம் ஆகும். 15 முதல் 16 வயதுக்குட்பட்ட இளம் மாணவர்களுக்கு தரமான, எளிதில் கிடைக்கக் கூடிய, எளிய அணுகுமுறையுடன், அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் இடைநிலைக் கல்வியை அளிப்பதே இதன் (RMSA) நோக்கம் ஆகும். RMSA திட்டத்தின் மூலம் அறிவியல் ஆய்வகம், நூலகங்கள், ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி, கணினி வழிக் கல்வி, பள்ளி இணைச் செயல்பாடுகள் மற்றும் கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவற்றை இந்திய அரசு பள்ளிகளுக்கு வழங்குகிறது.

10. மஹிலா சமக்யா, 1989

- பெண்களுக்கு கல்வி மற்றும் அதிகாரமளிப்பது.
- தேசிய கல்விக் கொள்கையின் குறிக்கோள்களை ஒரு உறுதியான திட்டமாக்குதல்
- கிராமப்புற பெண்களுக்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு கல்வி மற்றும் அதிகாரமளித்தல்.

11. புதிய கல்விக் கொள்கை, 1992

- 1992-ம் ஆண்டில் தேசியக் கல்விக் கொள்கையை அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அரசு புதுப்பித்தது மற்றும் இதனை 2005-ல் மன்மோகன்சிங் அரசு அமல்படுத்தியது.
- இக்கல்விக்கொள்கையானதுபள்ளிகளில்அடிப்படைகட்டமைப்புவசதிகளைமேம்படுத்துவதற்காக, 'கரும்பலகைத் திட்டம்' (Operation Blackboard) என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது.
- மேலும் முறைசாராக் கல்வி மூலம் கல்லாமையைப் போக்கும் தேசிய எழுத்தறிவு இயக்கம் (National Literacy Mission) அறிமுகப்படுத்தப்பட்டது.
- நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதையும் ஏழ்மை, வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகளை அகற்றுவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009

- 6 முதல் 14 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவதே நோக்கம்.

12. புதிய கல்விக் கொள்கை, 2019

- தலைவர்: கஸ்தூரி ரங்கன்
- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் ஜூன் 2017-ல் அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை மே 31, 2019 அன்று சமர்பித்தது.
- தற்போதைய கல்வி முறை எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளான அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு, பாரபட்சம் இல்லாத சமத்துவ நிலை, தரமான கல்வி, கல்வித் துறையின் செலவுகள் மற்றும் அதன் பொறுப்புகள் ஆகியவற்றுக்கான தீர்வுகளை இவ்வரைவு முன்மொழிகிறது.
- வரைவுக் கொள்கையானது பள்ளிக் கல்வி தொடங்கி உயர் கல்வி வரையிலான அனைத்து நிலைகளிலும் சீர்திருத்தங்களைச் செய்யக் கோருகிறது.
- மழலையர் கல்விக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கவும் தற்போதைய தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் செய்யவும், ஆசிரியர் பயிற்சியை வலுப்படுத்தவும், கல்வித்துறையை ஒழுங்குபடுத்தும் அமைப்புகளை மறுசீரமைக்கவும் முற்படுகிறது.
- **'தேசிய கல்வி ஆணையம்'** என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தவும், கல்வித் துறைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தவும், கல்வித் துறையில் தொழில்நுட்பங்களின் பயன்பாடுகளை வலுப்படுத்தவும் தொழிற்கல்வி மற்றும் வயது வந்தோர் கல்விக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கவும் முயல்கிறது.

https://t.me/tnpscfree

புதிய கல்விக்கொள்கை 2019-ன் சிறப்பம்சங்கள்

I. மழலையர் கல்வி

- மழலையர் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் வரைவு கல்விக் கொள்கையானது 3 வயதுள்ள குழந்தைகளின் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழிகாட்டும் நெறிமுறைகளை உருவாக்கியுள்ளது.
- 3 வயது முதல் 6வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் அதி உயர் தரத்திலான மழலைக்கல்வி 2025-க்குள் வழங்கப்பட வேண்டும்.
- குழந்தைகளின் நலன், ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி ஆகிய காரணிகளை முக்கியமானதாகக் கொண்டு, பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் செயல்படுத்தப்பட வேண்டும்.

2. அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணறிதலை உறுதிப்படுத்தல்: 2025-ம் ஆண்டுக்குள் ஒவ்வொரு மாணவரும் வயதிற்கேற்ற அடிப்படைக் கல்வியறிவும் எண்ணிக்கை கண்டறிதலை உறுதிப்படுத்தல்.

3. சர்வதேச அளவிலான பள்ளிக் கல்வி வழங்குதல்: 2030க்குள் இந்தியாவில் 3 முதல் 18 வயதிற் குட்பட்ட அனைவரும் பள்ளக்கு செல்லுதலை விரிவுப்படுத்த கல்வியுரிமைச் சட்டத்தை ஆரம்ப பள்ளி முதல் 12-ம் வகுப்பு வரை நீட்டித்தல். 2030-க்குள் அனைத்து பள்ளி கல்வி நிலையிலும் சர்வதேச அணுகல் மற்றும் தக்க வைத்தலை 100% மொத்த சேர்க்கை விகிதத்துடன் உருவாக்குதல்.

4. கல்வியும் இந்திய மொழிகளும்: 2-8 வயதிற்குட்ட குழந்தைகள் மொழிகளை மிக விரைவாகக் கற்றுக் கொள்கிறார்கள் மேலும் பன்மொழி கல்வி மாணவர்களுக்கு சிறந்த அறிவாற்றலை வழங்குகிறது. அதனால் மும்மொழிக் கொள்கை முன்மொழியப்பட்டது. இதன் மூலம் பள்ளிகளில் தமிழ் தெலுங்கு, கன்னடா, மலையாளம், ஒடியா, பாலி, பறசீக, பிற கிருத மொழிகள் மற்றும் இலக்கியகங்களை கற்பிக்க முன்மொழிந்துள்ளது.

5. கல்வியமைப்பில் மாற்றம்

- தற்போதைய தேவைகளுக்கேற்ப பள்ளிக் கல்வியின் அமைப்பில் மாற்றங்களைச் செய்யவும் இக்கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.
- 5-3-3-4 என்ற புதிய கல்வியமைப்பைப் பரிந்துரைக்கிறது.
  - **ஐந்தாண்டு அடிப்படைக்கல்வி:** மூன்றாண்டு மழலையர் கல்வியும் முதல், இரண்டாவது வகுப்புகளும்
  - **மூன்றாண்டு ஆயத்தக் கல்வி:** மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை
  - **நடுநிலைக்கல்வி:** ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை
  - **நான்காண்டு உயர்நிலைக்கல்வி:** ஒன்பதாம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை
- மாணவர்களின் பள்ளிக்கல்வியைத் தொடர் மதிப்பீடு செய்யும் வகையில் **3, 5 மற்றும் 8-ம் வகுப்புகளில்** மாநில அளவிலான மதிப்பீட்டுத் தேர்வுகளை நடத்தப் பரிந்துரைக்கிறது.

- **தேர்வு வாரியங்களின்** தேர்வு முறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப் பரிந்துரைத்துள்ளது. அதன்படி **வாரியத் தேர்வுகள்** பாடங்களின் அடிப்படைக் கருத்துகளையும் உயர்கல்விக்கான திறனையும் சோதித்துப் பார்ப்பதாக மட்டுமே அமைய வேண்டும், மாணவர்களுக்குத் தங்களது **விருப்பப் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பையும்** வழங்க வேண்டும் என்கிறது.

6. உயர்கல்விக்கான புதிய நிறுவன கட்டமைப்புகள்:

- நாட்டிலுள்ள 800 பல்கலைக்கழகங்கள் மற்றும் 40000 கல்லூரிகளை ஒன்றினைத்து 15000 பெரிய பன்முக சிறப்பு கல்வி நிறுவனங்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
  - 3 வகையான உயர்கல்வி நிறுவனங்களாவன:
    1. முதல் வகை பல்கலைக்கழங்கள், கூடுதலாக ஆய்வுகளையும் இளங்களைப்பட்டம் முதல் முனைவர் பட்டம் வரை பெறுதலிலும் பயிற்றுவித்தலில் கவனம் செலுத்துகிறது.
    2. இரண்டாம் வகை பல்கலைக்கழகங்கள் அனைத்து திட்டங்கள் குறித்து பயிற்றுவித்தல், அதிக முக்கியத்துவமும் மற்றும் ஆராய்ச்சிகளிலும் கவனம் செலுத்துகிறது.
    3. மூன்றாம்வகை : கல்லூரிகள் இளங்களை பட்டங்கள் பெற பயிற்றுவித்தலில் கவனம் செலுத்துகிறது.
- அந்த கல்வி நிறுவனங்களே பட்டங்கள் வழங்க அனுமதிக்கபடும், பல்கலைக்கழங்களுக்கு இணைப்பு அமைப்புகள் இங்கு இல்லை.

7. கல்வி ஆளுமை: அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் தன்னாட்சி வழங்குவதே முக்கிய நோக்கமாகும். உயர்கல்வி நிறுவனங்கள் முழுமையாக ஒரு சுதந்திரமான வாரியத்தால் நிர்வகிக்கப்படும்.

- பாராளுமன்ற சட்டத்தின் மூலம், தன்னாட்சி பெற்ற தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை அமைக்கப்படும்.
- தேசிய கல்வி ஆணையம் அல்லது ராஷ்ட்ரிய சிக்ஷா ஆயோக் எனப்படும் உச்ச அமைப்பு உருவாக்கப்படும். இந்த அமைப்பின் தலைவராக பிரதமர் செயல்படுவர். மேலும் கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றம் மாநில முதலமைச்சர்கள் போன்றோர் இதன் உறுப்பினர்களாக செயல்படுவர்.
- மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கல்வி அமைச்சகமாக மாற்றபட வேண்டும்.
- புதிய சுதந்திரமான மாநில பள்ளிகள் ஒழுங்காற்று ஆணையம் உருவாக்கப்பட உள்ளது.

8. கல்வி நிதியியல்: கடந்த 10 ஆண்டுகளில் மத்திய மற்றும் மாநில அரசுகள் செலவிட்ட பொது செலவினங்களில் 20 சதவீத அளவிற்கு அதிகரிக்க உள்ளது.

9. தேசிய கல்வி கொள்கைக்கான வரைவுக்கான ஆதரவான கருத்துக்கள்:

- கல்வி உரிமைச் சட்டத்தின் (2009)-ன் கீழ், 6 முதல் 14 வயதிற்குட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மற்றும் கட்டாய கல்வியை 3 முதல் 18 வயதுள்ள குழந்தைகளுக்கு என்று மாற்றம் செய்ய வேண்டும்.

https://t.me/tnpscfree

- இது ஆரம்பகால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE) இன் கீழ் 3 ஆண்டுகளையும், இடைநிலை கல்வியின் கீழ் 4 ஆண்டுகளையும் உள்ளடக்கியது.
- தமிழ்மொழிகல்வி மற்றும் வாய்வழிகல்வி முறை மேம்பாடே மிகுந்த முக்கியத்துவம் பெற்றது என வலியுறுத்தியது. வழக்கமான வகுப்பறை ஆசிரியர் – மாணவர் தொடர்புக்கு மாற்றாக இணையதள கல்விமுறை அதிக கவனம் செலுத்த வலியுறுத்தியது. இதன் மூலம் செலவுகளை குறைத்தல் மற்றும் சேர்க்கையை அதிகரித்தல் போன்ற இரண்டு இலக்குகளை அடைய இயலும்.
- செம்மொழிகள், தாய்மொழி மற்றும் பிராந்திய மொழிகளை கற்றல் மூலம் நமது கலாச்சாரத்தை பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. கடுமையான கற்றல் வழிமுறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த நான்கு ஆண்டு ஆசிரியர் பயிற்சி முறை மற்றும் குறிப்பிட்ட பாடம் சார்ந்த திட்டங்கள் பல்வேறு நிறுவனங்களில் வழங்கப்படும்.
- முன்மொழியப்பட்ட தேசிய ஆராய்ச்சி நிதியின் மூலம் தனியார் துறையின் சிறந்த ஈடுபாட்டை பெறுதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் அரசாங்க நிதியுதவி வழங்குவதை பற்றிக் குறிப்பிடுகிறது. தொழில்கல்வி உயர்கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றப்படும்.

8.4 தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி

- தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதமானது, தென்மாநில அளவில் 2-வது இடத்தில் உள்ளது.
- தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதம் அதிகமாகும்.
- உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாட்டின் சராசரி இந்தியாவை விட அதிகமாக உள்ளது.
- தமிழ்நாட்டின் கல்விமுறையானது புத்தகங்களை படித்தல் மற்றும் புரிந்துகொள்ளுதல் என்ற நிலையில் மட்டுமல்லாது கேட்டல் மற்றும் அறிந்து கொள்ளுதலையும் அடிப்படையாகக் கொண்டது.

> • திருக்குறள் கல்வியின் தேவையை எடுத்துக் கூறியதுடன், எழுத்தறிவின்மையின் அபாயத்தையும் எச்சரித்தது. பண்டைய இந்தியாவில் பள்ளிக் கூடங்கள் பள்ளி (palli) என்றும், ஆசிரியர்கள் கணக்காயர் என்றும் அழைக்கப்பட்டனர்.

1. பல்லவர்கள்

- பல்லவர் காலத்தில் கல்வித்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்தது. கல்வி நிறுவனங்கள் கடிகை எனப்பட்டன. இக்கல்வி நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கி பல்லவ மன்னர்கள் ஆதரித்தனர். சைவ மற்றும் வைணவ மடங்கள் அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு உறைவிட வசதியை வழங்கின.
- யுவான் – சுவாங் என்ற சீனப்பயணியின் குறிப்புகள், காஞ்சி நகரமானது கற்றலின் மையமாக விளங்கியதையும், காஞ்சியில் இருந்த புத்த மையம் பற்றியும் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறது.

2. சோழர்கள்

- சோழர்களின் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் அறிவார்ந்த மற்றும் புதுமைகளைப் புகுத்திய காலம் எனலாம். தமிழ்வழிக் கல்வியானது கோயில் மற்றும் சமயத்துடன் நெருங்கிய தொடர்பைக்

கொண்டிருந்தது. மக்களுக்கு இலவச கல்வி அளிக்கப்பட்டது. கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டிருந்தது. அக்கால கல்வெட்டுகளிலிருந்து ஆசிரியர்களின் தகுதிகள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பள்ளிகளுக்கு அளித்த நிலங்கள் குறித்த பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் (எண்ணாயிரம் முந்தைய தென் ஆற்காடு மாவட்டத்தில் அமைந்திருந்தது) புகழ்பெற்ற வேதக் கல்லூரிக்கு இருப்பிடமாக இருந்தது. திருபுவனையில் (பாண்டிச்சேரியில் உள்ளது)

- ஒரு வேதக் கல்லூரி செழித்தோங்கியது. திருவிடைக்காளை கல்வெட்டு நூலகத்தைப் பற்றியும், வீரராஜேந்திர சோழனின் திருவாடுதுறைக் கல்வெட்டு மருத்துவப் பள்ளி பற்றியும் குறிப்பிடுகிறது.

3. பாண்டியர்கள்

- பாண்டிய மன்னர்கள் சமஸ்கிருதத்தை ஆதரித்ததை அவர்களின் செப்புத் தகடுகளின் மூலம் அறியலாம். பாண்டியர்களின் காலத்தில் **கல்வி நிலையங்கள் கடிகை, சாலை மற்றும் வித்யாசாதனம்** என அழைக்கப்பட்டது.
- ஆசிரியர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அவ்வகை நிலங்கள் சாலபோகம் என்றழைக்கப்பட்டது (உ.ம். கன்னியாகுமரியிலுள்ள வல்லப பெருஞ்சாலை). பாண்டியர்கள் ஆட்சி காலத்தில் காந்தளூர் சாலையில் புகழ்பெற்ற கல்லூரி இருந்தது.
- கல்வியை மேம்படுத்துவதில் மடங்கள் முக்கியப் பங்க வகித்தன. விஜய நகர ஆட்சியின் கீழ் கற்றல் செழித்தோங்கியது. விஜயநகர ஆட்சியாளர்களின் ஆதரவால் பல கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாயக்கர்களின் ஆட்சியில் திண்ணைப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது.

8.4.1 சுதந்திரத்திற்கு முன்பு தமிழகத்தில் கல்வி

- வீரப்ப நாயக்கர் காலத்தில் மதுரைக்கு வருகை புரிந்த பெர்னாண்டஸ், அங்கு ஒரு தொடக்கப் பள்ளியை நிறுவினார். மராத்திய ஆட்சியாளர் இரண்டாம் சரபோஜி பண்டைய ஆவணங்களை சேகரித்து அவற்றை தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாத்தார். அவர் தஞ்சாவூரில் தேவநாகரி எழுத்து முறையிலான அச்சுக்கூடத்தை அமைத்திருந்தார். பிரதான் (pradran) நாட்டின் உயர் கல்வியின் முக்கிய மையமாக விளங்கியது.
- மதராஸ் மாகாணத்தில் மேற்கத்திய கல்வியை அறிமுகப்படுத்தியதில் மிகப்பெரிய பங்கு மதராஸ் மாகாண ஆளுநர் சர் தாமஸ் மன்றோவையேச் (1820-27) சாரும். அவர் கல்வியின் நிலை குறித்து அறிய புள்ளி விவரக் கணக்கெடுப்பு நடத்த ஒரு குழுவை நியமித்தார்.
- மன்றோவின் கல்விக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு முதன்மைப் பள்ளிகளை உருவாக்க பரிந்துரைத்தது (மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தார் பள்ளிகள்). 1835 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு மேற்கத்திய கல்வி முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். 1854-ஆம் ஆண்டின் சர் சார்லஸ் வுட் கல்வி அறிக்கை மதராஸ் மாகாணத்தில் பொது வழிகாட்டும் துறையை (Department of Public Instruction)

https://t.me/tnpscfree

ஏற்படுத்தியது. அனைத்து பள்ளிகளுக்கும் கல்வி மானியம் வழங்கப்பட்டன. 1857 இல் சென்னை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

- இதுவே ஆங்கிலேய ஆட்சியின் போது தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழக மாகும். 1882 ஆம் ஆண்டு உள்ளூர் வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் புதிய பள்ளிகளைத் திறக்கவும், அரசாங்கத்திடமிருந்து மானியங்களைப் பெறவும் வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1938 வாக்கில் பள்ளிகளில் ஆங்கிலமொழிப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட்டன.
- 1929 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது. இது உயர் கல்வியின் வளர்ச்சியின் அடுத்த கட்டமாகும்.

8.4.2 சுதந்திரத்திற்குப் பின் தமிழகக் கல்வி

- 1964-65 இல் இடைநிலைக் கல்வி அளவில் இலவச கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 இல் காந்திகிராம கிராமிய கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி சென்று படிக்க முடியாதவர்களுக்காக தொலைதூரக் கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1956 இல் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இது பள்ளிகளில் இடை நிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு 1982இல் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. 1986இல் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை 1992 இல் திருத்தி அமைக்கப்பட்டது.
- அதன் பின்னர் சமூகத்தில் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தேவையான பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

8.5 இரண்டாம் நிலை மற்றும் உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிப்பதற்கான சேவை

1. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா

- **நோக்கம்:** இரண்டாம்நிலை கல்வியில் ஆண் மற்றும் பெண்களுக்கிடையேயான வேறுபாட்டை நீக்க
- தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில், 61 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிட பள்ளிகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- **பயனாளிகள்:** 9 முதல் 12 வகுப்பு பயிலும் 14முதல் 18 வயதுடைய பெண் குழந்தைகள் (SC/ST, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்கள்)

2. இடைநிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கிய கல்வி

- **நோக்கம்:** இடை நிலைப்பள்ளிகளில், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், கல்வி செயல்பாடுகளில் பங்கு பெறுவதை மேம்படுத்துதல்.

- **பயனாளிகள்:** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயில்வோரில் மாற்றுத் திறனாளிகள் உரிமைச்சட்டம் 2016இன் கீழ் வரையறை செய்யப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனுடன் கூடிய குழந்தைகள்.

3. உள்கட்டமைப்பு வசதிகள்

- தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் (RIDF) நபார்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள்.
- இது ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் முதன்மையான திட்டக்கூறுகளில் ஒன்றாகும்.
- அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகளை செய்து தருவதே இதன் இறுதி நோக்கமாகும்.

4. மாணவர்கள் விபத்து நிவாரண நிதியுதவி

- பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின் போது எதிர்பாராது நிகழும் விபத்துகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் மாணவர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதி உதவி வழங்கப்படுகிறது.
- **பயனாளிகள் :** அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு.
- இறப்பு நேரிடின், ரூ.1 இலட்சம் பெரிய காயங்களுக்கு ரூ.50,000 மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000 மாணாக்கரின் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவியாக வழங்கப்படும்.

5. இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை

- **நோக்கம்:** இடைநிலை அளவில் மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்ப்பது.
- இத்திட்டம் 2011-12 கல்வியாண்டில் இருந்து தொடங்கப்பட்டது.
- **ஊக்கத்தொகை:** 10, 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1,500, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 2,000.
- **பயனாளிகள்:** அரசு மற்றும் அரசு உதவி பெரும் பள்ளி மாணவர்கள்
- இந்த ஊக்கத்தொகையானது, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு 12ஆம் வகுப்பு முடித்த பிறகு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

- பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் 1976ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

நோக்கங்கள்:

- 15 வயதுக்கு மேற்பட்ட கல்லாதோர் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, தொழில் திறன் மேம்பாட்டுக் கல்வி மற்றும் சமநிலைக் கல்வி வழங்கி, கல்லாமை என்கிற நிலையை அகற்றிட.
- எழுத்தறிவற்றோருக்கும் எண்ணறிவற்றோருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு வழங்கிடச் செய்தல்.

https://t.me/tnpscfree

- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் எழுத்தறிவற்றோர் மற்றும் புதிதாக எழுத்தறிவு பெற்றோரின் வருவாய்த் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்தல்.
- புதிதாக எழுத்தறிவு பெற்றோருக்கு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் மூலம் கற்கும் சமுதாயத்தினை வளர்ச்சியுறச் செய்தல்.
- **வயது வந்தோருக்கான கல்வியறிவுத் திட்டம்** – இதன் நோக்கம் அடிப்படை கல்வியுடன், திறன் சார்ந்த தொழில் பயிற்சிகளை அளித்து அதன் மூலமாக ஒரு முழுமையான மேம்பாட்டினை அடைய.

7. கற்கும் பாரதம் திட்டம், 2009

- 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்கள் எழுத்தறிவு 50 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பெற்ற மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தியது.
- கற்கும் பாரதம் திட்டமானது தற்போது தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நோக்கங்கள்:

- வயது வந்தோர் தங்களது அடிப்படைக் கல்வியறிவினை முறையான பள்ளித் திட்டத்திற்கு அப்பால் பெறுவதையே நோக்கமாக கொண்டுள்ளது. 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டோர் ஆகியோருக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- 2015-2016 ஆம் நிதியாண்டு முதல் திட்ட முடிவு காலம் வரை 60:40 என்ற நிதிப்பங்களிப்புடனும் செயல்படுத்தப்பட்டது.
- வயது வந்தோர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக கிராம பஞ்சாயத்து, மாவட்டம் மற்றும் மாநிலம் ஆகிய நிலைகளில் தேசிய எழுத்தறிவு விருதுகளை கடந்த 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் பெற்றுள்ளது.

8.6 தமிழக அரசின் முக்கிய அமைப்புகள்

8.6.1 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியியல் கற்றல் கற்பித்தல் முறைகளில் தரம் வாய்ந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில், மாநிலத்தின் முதன்மைக் கல்வி நிறுவனமாக செயல்பட்டுவருகிறது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறந்த கல்வி வல்லுநர்களை ஈடுபடுத்தி, 12ஆம் வகுப்பு வரை கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்கி வருகிறது.

- இந்நிறுவனம் ஆசிரியர் பணிமேம்பாட்டுப் பயிற்சிகளையும் வடிவமைத்துத் தருகிறது.
- தகவல் தொழில்நுட்பத்தில் காணும் புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தி மாணவர்களை 21ஆம் நூற்றாண்டிற்கேற்ற கற்போராக மாற்றவும், அவர்கள் பல்வேறு நுண்திறன்களைப் பெறவும் உதவுகிறது.
- வகுப்பறையில் எழும் கல்வி சார்ந்த பொருண்மைகளுக்கு தீர்வு காணவும், ஆசிரியர்களை சிந்தனைத் திறன் கொண்ட கல்வியாளர்களாக மாற்றவும் செயல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஊக்குவிக்கின்றது.

8.6.2 ஆசிரியர் தேர்வு வாரியம், 1987

நோக்கம்: அரசு கல்வி நிறுவனங்களில் உள்ள சில பணியிடங்களுக்கும் பணிநாடுநர்களை தாமதமின்றி தெரிவு செய்தல்.

கட்டுபாட்டு அதிகாரம்: கல்லூரி கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சட்டக்கல்வி இயக்குநர்.

பணிகள்:

- இது தமிழ்நாடு ஆட்சியர் தகுதி தேர்வினை நடத்தும் மாநில முகமை.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தில் பணியாளர்களுக்கென தொழில் நுட்ப தொட்டுணர் வருகைப் பதிவு சாதனம் நிறுவப்பட்டுள்ளது.
- ஆசிரியர் தகுதித் தேர்வு தவிர வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து எழுத்துத் தேர்வுகளையும் இணைய வழியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- நடைமுறை தொழில் நுட்ப உத்திகளை கையாண்டு நேர்மறையான தெரிவு முறையை உறுதி செய்கிறது.

8.6.3 தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

- 1961-ஆம் ஆண்டு உயர்கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பு செய்து அவற்றை வெளியிடும் நோக்கத்துடன் "தமிழ் வெளியீட்டுக்கழகம்" அமைக்கப்பட்டது.
- 1970ஆம் ஆண்டு தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய "தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்" உருவாக்கப்பட்டது.
- 1993ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 2013- "தமிழ்நாடு பாடநூல் கழகம்" என்பது "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" எனப் பெயர் மாற்றம் பெற்றது.

நோக்கங்கள்

- 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணாக்கர்களுக்கான பாடநூல்களை அச்சிட்டு வழங்குதல்

https://t.me/tnpscfree

- பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம், கால்நடை அறிவியல் மற்றும் இதர பாடங்கள் தொடர்பான நூல்களை தமிழில் அச்சடித்து வெளியிடுதல்.
- பழமையான அரிய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்வதுடன் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்.
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு விலையில்லா பொருட்களான கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, நிலவரைபட புத்தகம், கம்பளிச் சட்டை, காலுறைகள், மழைக்கால ஆடை, காலணி, புத்தகப்பை மற்றும் உறை காலணி ஆகியவற்றை கொள்முதல் செய்யும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது.

8.6.4 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், 1983

- இது உயர்கல்வித்துறையின் கீழ் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது.
- **நோக்கம்:** அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பொது மக்களிடையே பரப்புதல்.
- தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் அறிவியல் மையங்கள் செயல்படுகின்றன.

1. மானக் (MANAK) புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தமிழகத்தில் மானக் புத்தாக்க ஆய்வு விருதுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
- **நோக்கம்:** இளம் மாணாக்கர்களை அறிவியல் கற்றல் மற்றும் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு ஊக்கப்படுத்துதல்.
- இத்திட்டத்தின் படி மாவட்ட அளவிலான கண்காட்சி மற்றும் திட்ட வடிவமைப்பு போட்டியில் 10 முதல் 15 வயதிற்குட்பட்ட ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் கலந்து கொண்டு தம் அறிவியல் கருத்துகளை வெளிப்படுத்த மற்றும் அறிவியல் காட்சிப் பொருளைத் தயாரிக்க ரூ.10,000 விருதுத் தொகை மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது.
- **விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:** அனைத்து நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளிலிருந்து 2-3 மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து, மாணாக்கர்களின் புத்தாக்கக் கருத்துக்களை பரிந்துரையுடன் எழுத்துப்பூர்வமாக இணைத்து அனுப்ப வேண்டும்.
- அகமதாபாத்திலுள்ள தேசிய புத்தாக்க நிறுவன வல்லுனர்கள் இந்தக் கருத்துக்களை ஆய்வு செய்து தகுந்த மாணாக்கர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறார்கள்.

2. அறிவியல் மாணாக்கர் சகுரா பரிமாற்றத் திட்டம்

- சகுரா எனப்படும் திட்டம் வாயிலாக ஜப்பானிய அரசு ஒவ்வொரு ஆண்டும் புதுதில்லியில் நடைபெறும் புத்தாக்க ஆய்வு விருது போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து தங்கள் நாட்டிற்கு அழைக்கிறது.

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தால், இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணாக்கர்கள் ஜப்பானில் சுற்றுப்பயணம் மேற்கொள்வர்.
- இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியைச் சேர்ந்த ஒரு மாணவன் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏப்ரல் 2019இல் ஜப்பானிய நாட்டின் அறிவியல் ஆய்வு நிறுவனங்களை கண்டு வந்தான்.

3. அறிவியல் கட்டுரைகளை எழுத பயிற்சி அளித்தல்

- ஆராய்ச்சியாளர்களுக்கு அறிவியல் கட்டுரைகளை எழுத பயிற்சி அளிக்கும் வகையில் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறையுடன் இணைந்து தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் 2018 செப்டம்பர் 18ஆம் நாள் ஒரு பயிலரங்கை நடத்தியது.
- **பங்கேற்பாளர்கள்:** அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆராய்ச்சிப்படிப்பில் ஈடுபட்டுள்ள மாணாக்கர்கள்.
- ஆராய்ச்சி மாணாக்கர்களிடமிருந்து சிறந்த 100 அறிவியல் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றிதழ்களுடன் தலா ரு.10,000 ஊக்கத் தொகையும் பெறுவர்.

4. அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் தற்போதைய செயல்பாடுகள்:

- கன்னியாகுமரியில் அறிவியல் மையம் அமைத்தல்
- சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் புதிய கோளவடிவ கூரையமைப்புடன் கூடிய எண்ணிக்க கோளரங்க கருவி அமைத்தல்.
- கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்திலும், திருச்சிராப்பள்ளி அண்ணாஅறிவியல் மையத்திலும் புத்தாக்க மையம் அமைத்தல்.
- சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில், 'கோளத்தில் அறிவியல்' எனும் புதிய வசதியை ஏற்படுத்துதல்.

8.6.5 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், பல்வேறு அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனம்.
- இம்மன்றம் நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

1. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்று வரும் பொறியியல் மாணாக்கர்களுக்கும் மற்றும் அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல், சமூகவியல் போன்ற துறைகளில் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000 வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

https://t.me/tnpscfree

2. தொழில்நுட்ப பரவலாக்கல் திட்டம்

இத்திட்டம் குளிர்பதன கிடங்கு , நிழல்கூடம் (Poly house), காளான் வளர்ப்பு மற்றும் கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி என நான்கு தொழில்நுட்ப பரவலாக்கல் கூறுகளை கொண்டுள்ளது.

3. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

- மாணாக்கர்களை பள்ளிப்பருவத்திலேயே அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கிறது.
- மாவட்டந்தோறும் 9ஆம் வகுப்பு பயிலும் 40 மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படுகின்றனர்.
- இம்மாணாக்கர்களுக்கு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. இளம் அறிவியல்றிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

- **நோக்கம்:** ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக.
- 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.10,000 ஊக்கத்தொகையாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு ஏற்கனவே அவர்கள் பணிபுரியும் நிறுவனத்திடமிருந்து பெறும் ஊதியத்துடன் கூடுதலாக வழங்கப்படுகிறது.
- 2018-19ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் 11 ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

8.6.6 தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992

- **நோக்கம்:** மாநில அளவில் உயர்கல்வியினை மேம்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், மாநிலத் திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கவும் உதவுகிறது.
- இது 2014-ஆம் ஆண்டில் மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்டக் குழுவை அமைத்தது.
- அது பல்வேறு பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் அளிக்கும் பாடப்பிரிவுகளுக்கிடையேயான வேறுபாடுகளை களையவும், அவற்றின் கல்வித் தரத்தினை ஒருங்கிணைக்கவும், மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மற்றொரு பல்கலைக்கழகத்திற்கு சென்று படிக்கவும், கற்பிக்கவும் வழிவகை செய்யும் பொருட்டும் பாடப்பிரிவுகளுக்கிடையேயான சமநிலையை தெளிவுபடுத்தவும் வழிவகை செய்கிறது.

8.6.7 தமிழ்நாடு மாநில உருது கழகம்

- மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழி பாடம் நடத்தப்படுகிறது.

- இக்கழகத்தின் பணிகள், தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கவியரங்கம் நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்த மாணாக்கர்களுக்கும் விருது மற்றும் பணப்பரிசு வழங்குதல் ஆகியவை ஆகும்.

8.6.8 தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

- **நோக்கம்:** தொழில்நுட்பக் கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சியின் தரத்தினை நிர்ணயித்தல்.
- **செயல்பாடுகள்:**
  - தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்களை ஒருங்கிணைத்து இம்மன்றம், "ஆங்கில மொழி போதனையில் பிறமொழிச் சொற்கள் பயன்பாட்டின் இன்றைய போக்கு" என்ற பெயரில் பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது.
  - கல்வி மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையேயான இணக்கத்திற்கு வசதி செய்திட, தனியார் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் தொகுதி அடிப்படையில் மண்டல அளவிலான ஆராய்ச்சி மையங்கள் தோற்றுவித்தல்.

8.7 கல்வித்தர மேம்பாட்டு முனைப்புகள்

1. தகவல் தொலைத்தொடர்புத் தொழில் நுட்பம் மற்றும் மின்மயமாக்கல்: தகவல் தொலைத்தொடர்பு தொழில் நுட்பமானது நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்திற்குமான முக்கியமான செயல் ஊக்கியாக உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள்: 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்துதல்.

3. திறன் அட்டைகள் வழங்கல்: அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் திறன் அட்டைகள் வழங்குதல்.

4. ஆசிரியர்களுக்கான தொடருணர் கருவி வருகைப் பதிவு: வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்கள் ஆகியோரின் அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் விரல் பதிவுக் கருவிகள் / கருவிழிப்படலம் கைப்பற்றும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

5. தொடுவானம்:

- NEET, JEE போன்ற பல்வேறு போட்டி மற்றும் நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ளும் பொருட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் 412 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- இம்மையங்களில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் அனைத்துப் பாடங்களுக்கான கட்டகங்கள், மின்மயப் பாடப்பொருள் மற்றும் பிற துணை கருவிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

https://t.me/tnpscfree

6. தற்காப்புக்கலை பயிற்சி: நன்கு பயிற்சி பெற்ற பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் 9 மற்றும் 10ஆம் வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு வாரம் இரு முறை என மூன்று மாதங்களுக்கு கராத்தே, ஜூடோ மற்றும் டேக்வாண்டோ முதலான தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

7. நூலக மானியம்: 2018-19ஆம் ஆண்டில் பள்ளிகளில் புதிய நூலகங்கள் திறக்கவும், 6,032 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் வழங்கிக் கல்வியின் தரத்தை உயர்த்தவும்.

8.மெல்லக் கற்கும் மாணவர்களின் சாதனை அடைவுத் திட்டம்: பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதும் மாணவர்களில், குறிப்பாக மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவவும்.

9. படைப்புசார் கற்றல் திட்டம்: மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த செயல் திட்டங்களுக்கு மாவட்ட அறிவியல் கண்காட்சிகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

10. வினாடி வினா நிகழ்ச்சி:

- அரசுப்பள்ளிகளில் 9, 10ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு வினாடி வினாப் போட்டிகள் பள்ளி, கல்வி மாவட்டம், மாவட்டம், மண்டலம் மற்றும் மாநிலம் என்னும் 5 நிலைகளில் நடத்தப்பெற்றன.
- மாநில அளவில் மூன்று சிறந்த அணிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றன.
- அனைத்து நிலைகளிலும் வினாடி வினாப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு ரொக்கப் பரிசுகளும், சான்றிதழ்களும், சுழற்கோப்பைகளும் பரிசளிக்கப்பட்டன.

11. ஆசிரியர் பரிமாற்றத் திட்டம்: இத்திட்டம் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் ஒரு முன்னோடித் திட்டமாக ஏற்பளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

12. சத்தான உணவு நலவாழ்வு மற்றும் சுகாதாரம்:

- இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது திறன்களை அடிப்படையாகக் கொண்ட நலவாழ்வு மற்றும் சத்துணவு பற்றிய கல்வியை மேம்படுத்துதலாகும்.
- இக்கல்வியானது நலவாழ்வுப் பணியாளர்களாலும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களாலும் அனைத்து நிலைகளிலும் வழங்கப்படுகிறது.
- கற்றலுக்கும் அறிதிறனுக்கும் மிகவும் இன்றியமையாததாகிய நல்ல உடல் நலம் பெறுவதை உறுதி செய்வதற்குத் திறன்கள் அடிப்படையிலான நலவாழ்வுக் கல்வியைக் குழந்தைகளுக்கு வழங்கி நலவாழ்வுப் பழக்க வழக்கங்களை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்திட இத்திட்டம் உதவுகிறது.

8.8 நிகழ்வுகள் மற்றும் விருதுகள்

1. அறிவியல் கண்காட்சி

- தமிழக அரசு மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை வளர்க்கும் வகையிலும், அதனை மேம்படுத்தும் வகையிலும் பலதரப்பட்ட அறிவியல் செய்முறைப் பயிற்சிகளை அளித்து வருகிறது.
- அறிவியல் கண்காட்சி மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றம், இணைந்து செயல்படுதல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான திறன் ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது.
- 22.11.2018 அன்று மதுரையில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.
- அகமதாபாத் நகரில் 2018 நவம்பரில் நடைபெற்ற தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.
- **கலைத் திருவிழா:** இது தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 1 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் கலை வடிவக் கொண்டாட்டம்.

2. கலா உத்சவ் (தேசிய கலைத்திறன் திருவிழா)

- **நோக்கம்:** இடைநிலையளவில் பள்ளி மாணவர்களின் கலையை மேம்படுத்துவதற்கும், வெளிக் கொணர்தல்.
- திருச்சிராப்பள்ளி, நாமக்கல், நாகப்பட்டினம், சேலம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களிலிருந்து மாநில அளவில் வெற்றி பெற்ற குழுக்கள் புதுதில்லியில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான போட்டியில் பங்கு பெற்றன.
- தேசிய அளவிலான இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.
- **பரிசு:** தங்கப்பதக்கம், சான்றிதழ், ரூ.25,000 விருதுத் தொகை.

3. பெருந்தலைவர் காமராசர் விருது

- ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்படுகிறது.
- 10ஆம் வகுப்பு பொதுத் தேர்விலும் பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.10,000.
- 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்று பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.20,000.

4. புதுமைப் பள்ளி விருது

- மாணவர் சேர்க்கையினை மேம்படுத்துதல், கற்பித்தலில் புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல், நிர்ணயிக்கப்பட்ட உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்தல், பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு மற்றும் பொது மக்களுடன் பள்ளி நலனுக்காக இணைந்து செயல்படுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கிடும் பள்ளிகளுக்குப் புதுமைப் பள்ளி விருது வழங்கப்படுகிறது.

https://t.me/tnpscfree

5. கனவு ஆசிரியர் விருது

- அரசுப் பள்ளிகளில் கணினி வசதிகளுடன் பாடங்களை நடத்தும் ஆசிரியர்கள், பாடம் சாராத கல்விப் பணிகள் மற்றும் இணைச் செயல்பாடுகள் ஆகியவற்றை மேற்கொள்வோர், பள்ளியின் நலன்களுக்காக அப்பகுதி சமூக உறுப்பினர்களோடு இணைந்து செயல்படும் ஆசிரியர்கள், மாணவர் சேர்க்கையே அதிகப்படுத்த உதவும் ஆசிரியர்கள் ஆகியோரை ஊக்கப்படுத்தும் விதமாகக் "கனவு ஆசிரியர் விருது" வழங்கப்படுகிறது.

8.9 ஆசிரியர்களுக்கான நலத்திட்டங்கள்

1. டாக்டர். ராதாகிருஷ்ணர் நல்லாசிரியர் விருது (மாநில அரசு)

- **நோக்கம்:** ஆண்டுதோறும் டாக்டர். ராதாகிருஷ்ணன் விருது சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்க வழங்கப்படுகிறது.
  - பதக்கமும் 15000-க்கான காசோலையும் வழங்கப்படும்.
  - 2018-19-ம் கல்வியாண்டில் 377 ஆசிரியர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

2. தேசிய நல்லாசிரியர் விருது

- நாடு முழுவதுமுள்ள ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர்களின் பங்களிப்பை கொண்டாடுவதற்காக இந்த தேசிய விருது வழங்கப்படுகிறது.
- கல்வித்துறையில் தரமான கல்விசேவை மேம்பாட்டிற்கும் மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் ஆசிரியர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- தேசிய நல்லாசிரியர் விருதுகள் குடியரசு தலைவரால் செப்டம்பர் 5-ம் நாள் ஆசிரியர் தினத்தில் வழங்கப்படுகிறது. தொடக்க, நடுநிலை மற்றும் இடைநிலை பள்ளிகளில் பணிபுரியும் திறமையான ஆசிரியர்களுக்கு அங்கீகாரம் அளிக்க இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- சான்றிதழ், அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட 40 கிராம் வெள்ளி பதக்கம், 5000 ரொக்கம் விருது பெற்ற அனைவருக்கும் வழங்கப்படும்.
- 2019-ம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து இரண்டுபேர் இந்த விருதை பெற்றுள்ளனர்.

3. ஆசிரியர்கள் நலனுக்கான தேசிய அறக்கட்டளை

- 1962-ம் ஆண்டில் ஆசிரியர் நலனுக்கான தேசிய அறக்கட்டளை துவங்கப்பட்டது.
- நோக்கம்: அசாதாரண சூழ்நிலைகளில் ஆசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.
- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் இந்த அறக்கட்டளையின் தலைவராக செயல்படுவார்.
- இந்த அறக்கட்டளையே ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ம் தேதியை ஆசிரியர் தினமாக கொண்டாடுகிறது.
- நலத்திட்டங்களுக்காக தன்னார்வ முறையில் நிதி வசூலிக்கும் செயல்பாடுகளும் ஆசிரியர் தினத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

4. ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவிகள்

- ஆசிரியர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினர் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் தருவாயில் சிகிச்சைக்கான செலவில் 75% அல்லது 50000 ரூபாய் (எது குறைவாக உள்ளதோ) நிதி உதவியாக வழங்கப்படும்.

5. கல்வி உதவி

- தொழில்முறை பட்டப்படிப்பு அல்லது டிப்ளமோ படிப்புகளில் ஆசிரியர்களின் குழந்தைகள் தொடர்வதற்கு முறையே ரூ.5000 மற்றும் ரூ.2500 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

6. ராஜ்ஜிய புரஸ்கார் விருது

- மாநில அளவில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதாகும். தமிழ்நாட்டில் பாரத சாரணர் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின் வடிவில் வழங்கப்படுகிறது.
- 26-09-2019-ல் இயந்திரவியல் பொறியியல் 3-ம் ஆண்டு பயிலும் மாணவர் கே.வி.தீபக்குமார் தமிழக ஆளுநரிடமிருந்து ராஜ்ஜிய புரஸ்கார் விருதைப் பெற்றார்.

அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பின்வரும் விலையில்லாப் பொருட்கள் வழங்கப்படுகிறது

- விலையில்லா மடிக்கணினி: மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு 2011-12 முதல் வழங்கப்படுகிறது.
- காலணிகள்: 2012-3 லிருந்து 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு.
- நான்கு இணைச் சீருடைகள்: 2019-20 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 8 வரையுள்ள மாணவர்களுக்கு.
- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்: 1 முதல் 8 வரையுள்ள மாணவர்களுக்கு
- புத்தகப்பை: 2012-13 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கு
- கிரையான்ஸ்: 2012-13 ஆண்டிலிருந்து 1 மற்றும் 2 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்.
- வண்ணப் பென்சில்கள்: 2012-13 கல்வி ஆண்டிலிருந்து 3 முதல் வரையுள்ள மாணவர்களுக்கு
- கணித உபகரணப்பெட்டி: 2012-3 ஆம் ஆண்டில் 6 முதல் 8 வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு
- நில வரைபட புத்தகம்: 2012-13 லிருந்து 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு.
- கம்பளிச் சட்டை: 2013-14 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு
- மழைக்கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறை: 2016-17 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு

https://t.me/tnpscfree

- பேருந்து பயண அட்டை: 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள அனைத்து பள்ளி மாணவர்களும் பள்ளிக்கு எளிதில் வந்து செல்லும் வசதிக்காக.
- மிதி வண்டிகள்: 11 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது.
- நிதியுதவி: 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய் / தந்தை) மரணமடைந்தாலோ, விபத்து காரணமாக நிரந்த முடக்கம் அடைந்தாலோ நிதி உதவி வழங்கப்படுகிறது.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

- குறள் 595

விளக்கம்:

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளிவிற்கு நீர் ஊறும், அதுபோல், மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

மாதிரி வினாக்கள்

1. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எது / எவை?
   1. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை தமிழ்நாடு அதிகமான சேர்க்கை விகிதத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
   2. இது சாத்தியமானதற்கு முதன்மையான காரணங்களாக இருப்பது இலவச உணவு, இலவசச் சீருடைகள், இலவசக் காலணிகள், கல்வி உதவித்தொகை போன்றவை வழங்கப்படுவதே ஆகும்.

   (A) 1 மட்டும் (B) 2 மட்டும்
   (C) 1 மற்றும் 2 (D) இவற்றில் எதுவுமில்லை

2. பொருத்துக.

(a)	அறிவியல் நகரம்	1. 1992
(b)	மின் ஆவணக் காப்பகம்	2. 1983
(c)	தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்	3. 1998
(d)	தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்	4. 2017

குறியீடுகள்:

	(a)	(b)	(c)	(d)
(A)	1	4	2	3
(B)	4	3	1	2
(C)	3	4	1	2
(D)	3	4	2	1

3. "தமன்னா போர்ட்டல்" பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
   (A) இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான திறனறித் தேர்வு
   (B) வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்
   (C) திறன் மேம்பாட்டுத் திட்டம்
   (D) பாலூட்டும் தாய்மார்களுக்கான தைராய்டு சோதனை
4. கல்வி தொலைக்காட்சி வழங்குவது
   (A) மாணவர்களை பொதுத்தேர்விற்கு தயார் செய்ய
   (B) வேலைவாய்ப்பு செய்திகள்
   (C) தொழில் வழிகாட்டுத் தகவல்கள்
   (D) மேற்கண்ட அனைத்தும்

https://t.me/tnpscfree

5. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு:
   1. கற்கும் பாரதம் திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டது.
   2. 2001-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பெண்கள் எழுத்தறிவு 50%க்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
   3. 2015-2016 ம் நிதியாண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதிப் பங்களிப்புடன் இத்திட்டத்திற்கு நிதி அளிக்கப்படுகிறது.
   4. வயது வந்தோர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக கிராம பஞ்சாயத்து, மாவட்டம் மற்றும் மாநிலம் ஆகிய நிலைகளில் தேசிய எழுத்தறிவு விருதுகளை 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் பெற்றுள்ளது.

   (A) 1 மற்றும் 2 (B) 1, 2 மற்றும் 3
   (C) 2, 3 மற்றும் 4 (D) 1, 2, 3 மற்றும் 4

6. _____ ன் சமீபத்திய அறிக்கையின் படி உயர்கல்வியின் மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு பெரிய மாநிலங்களில் முதலிடம் பெற்றுள்ளது.
   (A) AISHE (B) NIRF
   (C) NAAC (D) மேற்கண்ட அனைத்தும்

7. எந்த ஆண்டின் கல்விக் கொள்கை நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி முறையை அறிமுகப்படுத்தியது?
   (A) 1968 (B) 1986
   (C) 2002 (D) 2019

விடைகள்

1	2	3	4	5	6	7
C	C	A	D	C	A	A

அத்தியாயம்


9

தமிழகத்தின் நலவாழ்வு முறைமைகள்

"உடல்நலத்தைப் பேணுவது ஒரு கடமையாகும். இல்லையெனில் நம் மனதை வலுவாகவும் தெளிவாகவும் வைத்திருக்க இயலாது". **–புத்தர்**

9.1 உடல் நலம்

- உடல்நலம் என்பது வெறும் நோயற்ற நிலைமட்டுமல்ல. அது முழுமையான உடல்நிலை, மனம் மற்றும் சமூக நல்வாழ்வு சார்ந்த இடர்பாடுகள் இல்லாத நிலையை குறிப்பதாகும்.
- இதன் பொருள் – உடல் மற்றும் மனம் ஆகியவற்றின் சரியான செயல்பாடாகும்.
- ஆரோக்கியமான உடல்நலமே தனிமனிதர்கள் மற்றும் அவர்கள் சமூகத்தின் சொத்து. மேலும் ஒரு நாட்டின் முன்னேற்றமானது நல்ல உடல்நலமுள்ள மக்கள்தொகையைச் சார்ந்தது.



உடல் நலத்தின் மூன்று வெவ்வேறு பரிமாணங்கள்

9.1.1 பொது சுகாதாரம்

- இந்திய சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு என்பது இந்தியாவின் மிகப்பெரிய சேவைத் துறைகளுள் ஒன்று. அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், திட்ட மேலாளர் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

https://t.me/tnpscfree

- ஊரக சுகாதாரம் என்பது மாநிலப் பட்டியலில் உள்ளது மேலும் ஒவ்வொரு மாநிலமும் அம்மக்களின் வாழும் தரத்தை உயர்த்த முயன்று வருகிறது.

சுகாதாரம் தொடர்பான முக்கிய சட்டங்கள்

- தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939
- தமிழ்நாட்டில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969
- சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம் (COTPA), 2003

9.2 இந்தியாவின் சுகாதார அமைப்பு முறை

- தற்போது இந்தியாவானது, சுகாதார சேவையில் அரசு மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பை பெற்றுள்ளது.
- மாநில அரசால் முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் இலவசமாகவும் / மிகக் குறைந்த கட்டணத்திலும் வழங்கப்படுகிறது.

தற்போதுள்ள சுகாதார அமைப்பு முறையின் குறைபாடுகள்

- பொது மற்றும் தனியார் துறை இரண்டிலுமே சுகாதாரப் பாதுகாப்பு சேவைகள் இன்னும் போதுமானதாக இல்லை.
- ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு தேவையான மருத்துவர்கள் 85 பேர் (தற்போது 45 பேர் உள்ளனர்.)
- ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு தேவையான செவிலியர்கள் 255 பேர் (தற்போது 75)
- சுகாதார சேவைகள் புவியியல் ரீதியாக இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

சுகாதார சேவைகளின் தரம்

- அரசு மற்றும் தனியார் துறைகளுக்கான ஒழுங்கு முறை தரநிலைகள் போதுமானதாக வரையறுக்கப்படவுமில்லை மற்றும் சரியாக செயல்படுத்தப்படவும் இல்லை.
- மூன்றாம் நிலை சுகாதார சேவைகளைப் பெறுவதில் பெரும்பான்மையான மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.
- மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் சுகாதார சேவைக்கான பொதுச் செலவீனம் மிகக் குறைவு. (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவீதம் மட்டுமே)

சுகாதாரக் குறியீடுகள்

குறியீடுகள்	இந்தியா	தமிழ்நாடு
மக்கள் தொகை (2011)	1.21 மில்லியன்	7.21 கோடி
வளர்ச்சி வீதம் (1991 - 2011)	17.64%	15.60%
பிறப்பு வீதம்	21.8%	15.7%
இறப்பு வீதம்	7.11%	7.4%

மொத்த கருவுறுதல் வீதம்	2.5%	1.6%
கல்வியறிவு வீதம்	74.04% ஆண்கள் - 82.14% பெண்கள் - 65.46%	80.33% ஆண்கள் - 86.81% பெண்கள் - 73.86%
பாலின வீதம்	940	995
வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் (ஆண்டுகளில்)	67.9 (2011 - படி) ஆண் - 66.4 வருடங்கள் பெண் - 69.6 வருடங்கள்	70.6 ஆ - 68.6 பெ - 72.7
IMR (2015-2017): குழந்தை இறப்பு விகிதம்	33	16
5 வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம்	55	25
IMR (2015-2017): பிரசவத்தின் போது தாய் இறப்பு விகிதம்	122	63

9.2.1 காசநோய் (Tuberculosis)

தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் - 1961 (National Tuberculosis Control Programme (NTCP))

- **நோக்கம்:** ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல். மாவட்ட காசநோய் மையம் (DTC) மற்றும் ஆரம்ப சுகாதார நிறுவனங்கள் மூலம் மாவட்ட அளவில் இத்திட்டமானது செயல்படுத்தப்படுகிறது.

மறுசீரமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் (RNTCP):

- சோதனை திட்டமாக 1993-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசியத் திட்டமாக 1997-ல் தொடங்கப்பட்டு 1998-ல் விரிவுபடுத்தப்பட்டது. 2006-ல் நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டது.

i) தேசிய ஸ்டோபாயத் திட்டம் (NSP), 2012-2017

- இத்திட்டமானது மறுசீரமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- **கருத்து:** சமூகத்தில் உள்ள அனைத்து காச நோயாளிகளுக்கும் தரமான சோதனை முறை மற்றும் சிகிச்சை உலக அளவில் கிடைக்க வழி செய்தல். மேலும் சென்றடையாத மக்களை சென்றடையச் செய்வதை நோக்கமாக கொண்டு செயல்படுதல் (reaching the unreached).
- மருந்துப்பொருள் எதிர்ப்பு காசநோய் மற்றும் HIV-யுடன் தொடர்புடைய காசநோய் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்து வகையான காசநோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது முதன்மை

https://t.me/tnpscfree

யான நோக்கமாகும். மேலும் காசநோயாளிகளுக்கான கவனிப்பை மேம்படுத்துவதற்காக தனியார் துறையை அதிகமாக ஈடுபடச் செய்தல்.

2) இந்தியாவிலிருந்து காசநோயை ஒழிப்பதற்கான தேசிய மூலோபாய் (Strategic) திட்டம் (2017–2025)

- முந்தைய தேசிய மூலோபாய திட்டத்தின் வெற்றி மற்றும் கற்றல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 2025-க்குள் காசநோயை முற்றிலும் ஒழிப்பதற்கு தேவையான புதுமையான வழிமுறைகளைக் கொண்டுள்ளது.
- சுகாதாரத்துறை உத்திகள் மற்றும் உலகளாவிய முயற்சிகளுக்கு ஏற்ப இத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. அவை,
  - உலக சுகாதார அமைப்பின் WHO -ன் காசநோய் ஒழிப்பு கொள்கை (End TB Strategy)
  - வரைவு தேசிய சுகாதாரக் கொள்கை 2015
  - ஐக்கிய நாடுகளின் (UN) நீடித்த நிலையான மேம்பாடு இலக்குகள்

9.2.2 கடத்திகள் மூலம் பரவும் நோய்கள்

தேசிய கடத்திகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம் (2003–2004)

- தேசிய மலேரியா எதிர்ப்புத் திட்டம், தேசிய பைலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம், கலாஅசார் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டது.
- தேசிய மலேரியா எதிர்ப்புத் திட்ட இயக்குநரகம் கடத்திகள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நிறுவனமாக செயல்படுகிறது.

கடத்திகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

- தேசிய மலேரியா எதிர்ப்புத் திட்டம் – 1953
- தேசிய பைலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் – 1955
- ஜாப்பனீஸ் என்செபாலிடிஸ் கட்டுப்பாட்டு திட்டம் – 1978
- கலா-அசார் கட்டுப்பாட்டுத் திட்டம் (1990-1991)
- டெங்கு மற்றும் டெங்கு ரத்தக்கசிவு காய்ச்சல் கட்டுப்பாடு

9.2.3 இந்திரா தனுஷ் திட்டம் (2014)

- இத்திட்டமானது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** 2020-க்குள் அனைத்து குழந்தைகளையும் தடுப்பூசி மூலம் நோய்களில் இருந்து காத்தல், இந்திய அரசின் உலகளாவிய தடுப்பூசித் திட்டம் ஆண்டுதோறும் சுமார் 26 மில்லியன் குழந்தைகளுக்கு, 12 வகையான உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு எதிரான இலவச தடுப்பூசிகளை வழங்கி வருகிறது.
- கீழ்க்கண்ட நோய்களில் இருந்து பாதுகாக்க உலகளாவிய நோய் தடுப்பூசி திட்டம் செயல்பட்டு வருகிறது.

- காசநோய்
- டிப்தீரியா
- கக்குவான் இருமல்
- டெட்டனஸ்
- போலியோ
- ஹெபாடிடிஸ் B
- நிமோனியா
- மூளைக் காய்ச்சல்
- தட்டம்மை
- ரூபெல்லா
- ஜப்பனீஸ் என்செபாலிடிஸ்
- ரோட்டோவைரஸ் டையோரியா (ரூபெல்லா)

- உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், ரோட்டரி இன்டர்நேஷனல் மற்றும் பிற பங்குதாரர்களால் இவ்வமைச்சகம் உதவி பெறுகிறது.

9.2.4 மலிவுவிலை மருந்துகள் மற்றும் நம்பகத் தன்மையுள்ள சிகிச்சை முறை (AMRIT) - 2015

- புற்றுநோய் மற்றும் இதயநோய் சிகிச்சைக்கு ஏற்படும் செலவினங்களை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏழைகள் சுகாதார பாதுகாப்பு சேவைகளைப் பெறும்படி செய்தல்
- **பயனாளிகள்:** தொற்றா நோய்களான புற்றுநோய் மற்றும் இதய நோய்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள்.
- சந்தை விலையை விட, மிகக் குறைந்த விலையில் புற்றுநோய் மற்றும் இதய நோய்களை குணப்படுத்துவதற்கான மருந்துகளை விற்பதற்கு அம்ரித் (AMRIT) மருந்தகங்கள் நாடு முழுவதும் திறக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தை அரசாங்கத்திற்கு சொந்தமான HLL மற்றும் லைப்கேர் லிமிடெட் (Lifecare Ltd) நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன.

9.2.5 பிரதான் மந்திரி பாரதிய ஜன்னௌதி பரியோஜனா, 2016
(Pradhan Manthri Bharathiya Jan Nouthi Pariyojana)

- இப்பிரச்சாரமானது இந்திய அரசின் மருந்தியல் துறையால் துவங்கப்பட்டது.
- **நோக்கம்:** பிரதான் மந்திரி பாரதிய ஜன்னௌதி கேந்திரங்கள் மூலமாக தரமான மருந்துகளை மலிவு விலையில் மக்களுக்கு வழங்குதல்.
- தரம் மற்றும் செயல்திறனில் விலையுயர்ந்த பிராண்டேட் மருந்துகளைப்போல் உள்ள ஜெனரிக் (generic) வகை மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதற்காக பிரதான் மந்திரி ஜன்னௌதி கேந்திராக்கள் (PMBJK) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்தது.
- தரமான ஜெனரிக் வகை மருந்துகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் ஒரு தனி

https://t.me/tnpscfree

மனிதனுக்கு சிகிச்சைக்கு ஏற்படும் செலவினங்களை குறைத்தல்.

- கல்வி மற்றும் விளம்பரம் மூலமாக ஜெனரிக் வகை மருந்துகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- அரசாங்கம், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை, தன்னார்வ தொண்டு நிறுவனம், சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்கள் இணைந்து செயல்படும் ஒரு பொதுத் திட்டமாகும்.
- அனைத்து சிகிச்சை முறையிலும் குறைந்த செலவு மற்றும் தரமான சுகாதாரப் பாதுகாப்பை ஏற்படுத்தி ஜெனரிக் வகை மருந்துகளுக்கான தேவையை அதிகரிக்கச் செய்தல்.

9.2.6 போஷன் அபியான் 2018 (Poshan Abhiyan) (National Nutrition Mission)

- போஷன் அபியான் (தேசிய ஊட்டச்சத்து திட்டம்) மார்ச் 8, 2018 ல் இந்திய அரசால் தொடங்கப்பட்டது.
- **அமைச்சகம்:** மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்.
- **நோக்கம்:** தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் சேவை வழங்குதல், இத்திட்டத்தில் இணைப்பதன் மூலம் நடத்தையில் மாற்றம் கொண்டு வருதல், வெவ்வேறு கண்காணிப்பு அளவீடுகள் மூலம் இலக்குகளை அடைதல்.
- குள்ளத்தன்மை 2%, ஊட்டச்சத்து குறைபாடு 2%, ரத்தசோகை (அல்லது) இரும்புசத்துக் குறைபாடு 3% மற்றும் பிறப்பின் போது எடை குறைவு போன்றவற்றை வருடந்தோறும் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2022 க்குள் 0-6 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே குள்ளத்தன்மையை 38.4% லிருந்து 25% ஆக குறைத்தல்.

9.2.7 தேசிய சுகாதாரக் கொள்கை 2017 (National Health Policy 2017)

- 2025-ம் ஆண்டிற்குள் வாழ்நாள் எதிர்பார்ப்பு காலத்தை 67.5 ஆண்டுகளில் இருந்து 70 ஆக உயர்த்துதல்.
- 2025-ம் ஆண்டிற்குள் மொத்த கருவுறுதல் விகிதத்தை 2.1 ஆக தேசிய மற்றும் மாநில அளவில் கொண்டு வருதல்.

1. இறப்பு விகிதம்

- 5 வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு → 2025 க்குள் 23 ஆக குறைத்தல்
- மகப்பேறு இறப்பு விகிதம் → 2020 க்குள் 100 ஆக குறைத்தல்
- குழந்தைகள் இறப்பு விகிதம் → 2019 க்குள் 28 ஆக குறைத்தல்
- பிறந்த 28 நாட்களுக்குள் இறக்கும் குழந்தை விகிதம் → 16 ஆக குறைத்தல் 2025 க்குள் ஒற்றை இலக்காக மாற்றுதல்

2. நோய்கள் பரவுவதை குறைத்தல்

- 2020 க்குள் இலக்கு 90 : 90 : 90 றை அடைதல்
- 2017-க்குள் காலா அசார் நோயை நீக்குதல்
- லிம்பேட்டிக் பைலேரியாசிஸ் - ஐ 2017 க்குள் குறைத்தல்
- 2018-க்குள் தொழுநோயை ஒழித்தல்

90 : 90 : 90 திட்டம்

- HIV - யுடன் வாழும் மக்களில் 90% பேருக்கு HIV நோய்த்தொற்றின் நிலையை அறிந்திருக்கச் செய்தல்.
- HIV - நோய்த் தொற்றுடன் கண்டறியப்பட்ட 90% பேருக்கு ஆண்டிரெட்ரோ வைரல் சிகிச்சை அளித்தல்.
- ஆண்டிரெட்ரோ வைரல் சிகிச்சை பெறும் 90% மக்கள் வைரஸ் ஒடுக்கத்தன்மையை (Viral Suppression) பெறுதல்.

காசநோய் குணப்படுத்தல் விகிதத்தை 85% ஆக அதிகரித்தல்

- 2025 க்குள் காசநோயை முற்றிலும் ஒழித்தல், புதிதாக காசநோய் கண்டறியப்படுதலை குறைத்தல்
- பார்வை குறைபாட்டை 2025 க்குள் 0.25/1000 ஆக குறைத்தல் மற்றும் நோய் தாக்கத்தை 1/3 பங்காக குறைத்தல்
- 2025 க்குள் இதய நோய், கேன்சர், நீரிழிவு நோய் அல்லது சுவாச நோய்கள் மூலம் இறப்பவர்களை 25% ஆக குறைத்தல்.

3. சுகாதார அமைப்புகளின் செயல்பாடு

- பொது சுகாதாரச் சேவைகளைப் பயன்படுத்துவதை 2025 ம் ஆண்டிற்குள் 50% அதிகரிக்க செய்தல், பிறப்புக்கு முந்தைய பராமரிப்பு பாதுகாப்பை 2025-க்குள் 90% - க்கும் மேலாக அதிகரித்தல்.
- 2025 க்குள் 90% மேற்பட்ட புதிதாக பிறந்த குழந்தையின் 1 வயது நிறைவடைவதற்குள் அனைவருக்கும் தடுப்பூசி போடுதல்.
- தேசிய மற்றும் மாநில அளவில் 90% மேல் குடும்ப கட்டுப்பாட்டின் தேவையை 2025-க்குள் மக்களிடம் உணரச் செய்தல்.
- 2025 க்குள் கட்டுப்படுத்தப்பட்ட நோய்கள் நிலையை அடைதல்
- குடும்பங்கள் அளவிலான உயர் ரத்த அழுத்தம் மற்றும நீரிழிவு நோயாளிகளை 80% வரை கண்டறிதல்.

4. சுகாதாரம் தொடர்பான பல்வேறு இலக்குகள்

- புகையிலைப் பயன்பாட்டை 2020 க்குள் 15 சதவீதம் குறைத்தல், 2025 க்குள் 30 சதவீதம் ஆக குறைத்தல்.

https://t.me/tnpscfree

- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியின்மையை 2025 க்குள் 40% ஆக குறைத்தல்
- அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரத்தை 2020 க்குள் கிடைக்கச் செய்தல் (சுவச் பாரத் திட்டம்)
- வேலை செய்யும் போது ஏற்படும் காயங்களை 2020-க்குள் தற்போதைய நிலையில் இருந்து பாதி யாக குறைத்தல் (தற்போது - 334/1 லட்சம் விவசாய வேலையாட்கள்)
- தேசிய / மாநில அளவில் உடல்நல நடத்தையை கண்காணித்தல்

5. சுகாதார அமைப்பை வலிமைப்படுத்துதல் - சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு

- இந்திய அரசால் சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை அதிகரித்தல் (2025 க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.15% ஆக இருப்பதை 2.5% ஆக உயர்த்துதல்)
- 2020 க்குள் மாநிலங்களின் சுகாதார செலவீனங்களை அவற்றின் பட்ஜெட்டில் 8% ஆக உயர்த்துதல்.
- குடும்பங்களில் மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார பெரும் செலவின விகிதங்களை 2025 க்குள் 25 சதவீதமாக குறைத்தல்.

6. சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் மனிதவளம்

- இந்தியப் பொது சுகாதார தரநிலை விதிகளின்படி (IPHS) அதிக முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்களில் 2020 க்குள் மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- சமூகநலத் தன்னார்வலர்களின் எண்ணிக்கையை IPHS விதிகளின் படி 2025 க்குள் முன்னுரிமை வாய்ந்த மாவட்டங்களில் உயர்த்துதல்.
- 2025 க்குள் ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலை சுகாதார பாதுகாப்பு வசதியை IPHS -ன் விதிகளின்படி முன்னுரிமை வாய்ந்த மாவட்டங்களில் உருவாக்குதல்

7. சுகாதார மேலாண்மை தகவல்

- மாவட்ட அளவில் 2020 க்குள் சுகார அமைப்பு பற்றிய மின்னனு தரவு தளத்தை உருவாக்குதலை உறுதி செய்தல்.
- 2020-க்குள் சுகாதார கண்காணிப்பு முறையை வலுப்படுத்துதல் மற்றும் பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களுக்கான பதிவேடுகளை உருவாக்குதல்.
- தேசிய ஒருங்கிணைந்த சுகாதார தகவல் வலையமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார கட்டமைப்பு மற்றும் சுகாதார தகவல் பரிமாற்றங்கள் ஆகியவற்றை 2025 க்குள் உருவாக்குதல்.

9.2.8 ஆயுஷ்மான் பாரத் 2018

(Ayushman Bharat 2018) (Pradhan Mantri Jan Aarogya Yojana)

- **பரிந்துரை:** தேசிய சுகாதாரக் கொள்கை 2017
- அனைவருக்கும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு (UHC) வழங்கும் நோக்கோடு இந்திய

அரசால் துவங்கப்பட்ட முதன்மைத் திட்டம். செப்டம்பர் 23, 2017-ல் பிரதமர் ஜார்கண்டில் துவக்கி வைத்தார்.

- **நோக்கம்:** முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் சேவைகள் பெறுவதில் உள்ள தடைகளை தகர்த்தல். (பதவி உயர்வு மற்றும் ஆம்புலேட்டரி பராமரிப்பு)

a) சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் (HWCs)

- இந்திய அரசு பிப்ரவரி 2018 ல் ஏற்கனவே உள்ள துணை மையங்கள் (Sub Centres) மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை இணைத்து 1,50,000 சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்களை அமைக்கப் போவதாக அறிவித்தது.
- இந்த மையங்கள் மகப்பேறு தாய் மற்றும் குழந்தைகள் நலம் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பாக இலவசமாக விரிவான ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கும்.

b) பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா 2018 சிறப்பு கூறுகள்

- PMJAY என்பது உலகின் மிகப்பெரிய மற்றும் அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட உத்திரவாத திட்டம் ஆகும். காப்பீட்டு சுகாதார திட்டம் மற்றும் அரசாங்கத்தால் முழுமையாக நிதி யளிக்கப்பட்ட உத்திரவாத திட்டமாகும்.
- பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சை பெறுவதற்காக ஒரு குடும்பத்திற்கு **ஓர் ஆண்டிற்கு 5 லட்சம்** வழங்குதல்.
- 10.74 கோடி ஏழை குடும்பங்கள் பயன்பெறுவர். (தோராயமாக 50 கோடி பயனாளிகள்)
- PMJAY பயனாளர்களுக்கு பணமில்லா சுகாதார சேவையை மருத்துவமனை மூலம் வழங்குதல்.
- ஆண்டுதோறும் 6 கோடி மக்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஆகும் செலவைக் குறைக்கிறது.
- பேரழிவு தரும் சுகாதார அத்தியாயங்களிலிருந்து எழும் அணுதின அபாயங்களை குறைக்க உதவுகிறது.
- குடும்பத்தின் அளவு, வயது அல்லது பாலினத்தைப் பொறுத்து எந்தக் கட்டுப்பாடும் இல்லை.
- சிகிச்சைக்கு முன்பு 3 நாட்கள் மற்றும் சிகிச்சைக்கு பின்பு 15 நாட்களுக்கான நோயறிதல் மற்றும் மருந்துகளை உள்ளடக்கியது.
- இந்தியாவில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் இத்திட்டம் செல்லும்.
- மருந்துகள், நோயைக் கண்டறிதல், மருத்துவர் கட்டணம், அறை வாடகை உள்ளிட்ட 1393 நடைமுறைகளுக்கான சேவைகள், OT மற்றும் ICU கட்டணங்கள், etc.,
- பொது சுகாதாரம் மற்றும் ஆரம்ப நிலை பாதுகாப்பில், தனி இயக்குனரகம் வைத்துள்ள முதல் மாநிலம் தமிழ் நாடு ஆகும்.

https://t.me/tnpscfree

தேசிய சுகாதார ஆணையம்

- இந்தியாவின் முதன்மையான பொது சுகாதாரத் திட்டமாக 'ஆயுஷ்மான் பாரத்'-ஐ செயல்படுத்துகிறது.
- இவ்வாணையம் தேசிய சுகாதார நிறுவனத்தின் முன்னோடி. இது மே 23, 2018 முதல் பதிவு செய்யப்பட்ட சங்கமாக செயல்பட்டு வந்தது.

9.3 தமிழகத்தின் நலவாழ்வு / தமிழ் நாட்டில் உள்ள சுகாதார அமைப்பு முறைகள்

- தமிழ்நாட்டில் 37 வருவாய் மாவட்டங்கள் உள்ளன.
- பொது சுகாதார சேவைகளை நிர்வகிப்பதற்காக தமிழ்நாடு சென்னை மாநகராட்சியுடன் கூடுதலாக 42 சுகாதாரப் பிரிவு மாவட்டங்களாக (Health Unit Districts) பிரிக்கப்பட்டுள்ளது.
- இனப்பெருக்கம் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களை அமல்படுத்துவதில் தமிழகம் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் ஒன்றாகும்.
- தேசிய சுகாதாரத் திட்டத்தின் முன்னிலையில் இருப்பதற்கான முக்கிய காரணம் தரமான மனித வளங்கள் கிடைப்பதாகும்.
- சுகாதார பராமரிப்பில் தமிழகத்தின் முன்னணி நிலைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று இங்குள்ள தரமான மனிதவளம்.

9.3.1 தமிழ் நாட்டில் சுகாதார சேவைகள்

- ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்பு: துணை மையங்கள் (SCs), ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs), மற்றும் சமூக சுகாதார மையங்கள் (CHCs).
- இரண்டாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு: துணை மாவட்ட மருத்துவமனைகள்
- மூன்றாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு: மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகள்

1) ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்பு

- ஒரு சமூகத்தில் உள்ள தனிமனிதன் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் அணுகக்கூடிய வகையில் உள்ள அத்தியாவசியமான சுகாதார சேவையாகும்.
- கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்கு நோயைத் தடுக்கக்கூடிய, குணப்படுத்தக்கூடிய மற்றும் மறுவாழ்வு அளிக்கக்கூடிய சுகாதார சேவைகளை வழங்குகிறது.

சுகாதார துணை மையங்கள் (HSC)

- கிராமப்புற மக்களுக்கு கிடைக்கக்கூடிய புற சுகாதார நிறுவனம் ஆகும்.
- பொது சுகாதார அமைப்பிற்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்பின் முதல் புள்ளி.
- சாதாரண பகுதிகள் / சமவெளிகளில் 5,000 மக்கள்தொகைக்கு மற்றும் மலைப்பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு சுகாதார துணை மையம் நிறுவப்பட்டுள்ளது.

- போதுமான அளவு சுகாதார துணை மையங்களை கொண்டிராத மாநிலங்கள் சுகாதார குறியீட்டில் மிகவும் பின்தங்கியுள்ளன.
- ஒவ்வொரு சுகாதார துணை மையங்களும் தமிழ்நாட்டில் கிராம சுகாதார செவிலியர் (VHN) என்றழைக்கப்படும் துணை செவிலியர் மருத்துவச்சி (ANM) யால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் மூன்று சுகாதார துணை மையங்களுக்கு 1 ஆண் சுகாதாரப் பணியாளர் நியமிக்கப்படுவார்.
- ஒரு சுகாதார துணை மையம் சராசரியாக 13.49 சதுர கிலோ மீட்டர் பரப்பை உள்ளடக்கியது.
- கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு மகப்பேறு, குழந்தைகள் நலம் மற்றும் குடும்பநலச் சேவைகளை வழங்குவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.
- தமிழ்நாட்டில் 8713 சுகாதார துணை மையங்கள் உள்ளன.
- சுகாதார துணை மையங்கள் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் மற்றும் குடும்ப நல சேவைகள் வழங்கும் மையமாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்காக செயல்படுகின்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC)

- பெரும்பான்மையான PHCs 4 முதல் 6 உள்நோயாளிகள் படுக்கையை கொண்டுள்ளன.
- விதிமுறைகளின் படி ஒரு மருத்துவ அலுவலர், 14 பாரா மெடிக்கல் மற்றும் பிற துணை ஊழியர்களைக் கொண்டது.
- கிராமப்புறங்களில் சாதாரண பகுதியில் 30,000 மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார மையம் நிறுவப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் 1806 மையங்களும்,சென்னை கார்பரேஷன் உள்ளிட்ட நகர்பகுதிகளில் 460 மையங்களும் ஏழைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமூக சுகாதார மையங்கள் / பரிந்துரைக்கான முதல் அலகுகள்

- இவை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகும்.
- நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான ஒரு பரிந்துரை அலகு ஆகும்.
- விதிமுறைகளின் படி, ஒவ்வொரு சமூக சுகாதார மையமும் குறைந்தபட்சம் 30 படுக்கைகள், ஒரு அறுவை சிகிச்சை அரங்கம், ஒரு எக்ஸ்ரே இயந்திரம், பிரசவ அறை மற்றும் ஆய்வக வசதிகளைக் கொண்டது.
- குறைந்தபட்சம் 4 நிபுணர்கள் [ஓர் அறுவை சிகிச்சை நிபுணர், ஒரு மருத்துவர், மகளிர் மருத்துவ நிபுணர் மற்றும் ஒரு குழந்தை மருத்துவ நிபுணர்] மற்றும் 21 பாரா மருத்துவ மற்றும் பிற ஊழியர்களைக் கொண்டது.
- 422 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன. இங்கு 24 மணிநேரமும் மருத்துவ சேவை வழங்குவதற்காக 5 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

https://t.me/tnpscfree

- 341 தொகுதி அளவிலான மற்றும் சில மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிகிச்சை வழங்கப்படுகிறது.
- இதற்கு மேம்படுத்தப்பட்ட சுகாதார மையங்கள் மூலம் பல் நோய்களுக்கான சிகிச்சைகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2) இரண்டாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு

- இரண்டாம் நிலை சுகாதார சேவை நிறுவனங்களான மாவட்ட மருத்துவமனைகள், நகர்புற மருத்துவமனைகள் தற்போது நகர்புற மக்களுக்கு தேவையான ஆரம்ப சுகாதார சேவையை அளித்து வருகின்றன.
  - இது அளவில் கூட நெரிசலை உருவாக்குவதுடன் சிறப்பு சேவைகளை குறைவாக பயன்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறது.
- இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 30% பேர் நகர்புறத்தில் வாழ்கின்றனர். இதனால் மிக நெரிசலாகவும், சிறப்பான சேவைகளைச் சரியாகப் பயன்படுத்த முடியாமலும் போகிறது.
- அதிக மக்கள் கூட்டம், மோசமான சுகாதாரம், பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமை மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமாக சேரிவாழ் மக்கள் அதிகமான சுகாதார அபாயங்களை எதிர்கொள்கின்றனர்.
- இரண்டாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு மருத்துவமனை வழங்கப்படும் சேவைகள்:
  a) விபத்து மற்றும் அவசர சேவைகள் வழங்குவதற்கான பொறுப்பு
  b) குடும்ப நலன், மகப்பேறு மற்றும் குழந்தை ஆரோக்கியம் பராமரிப்பு
  c) காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்
  d) பார்வைக் குறைபாடு கட்டுப்பாட்டு திட்டம்
  e) காது கேளாமை கட்டுப்பாட்டுத் திட்டம்
  f) மாவட்ட மனநல திட்டம்
- அரியலூர், பென்னாகரம், நாகப்பட்டினம், உதக மண்டலம், பெரம்பலூர், காரைக்குடி, பெரிய குளம் மற்றும் விருதுநகர் உள்ளிட்ட எட்டு மாவட்ட தலைமையக மருத்துவமனைகளில் வலி மற்றும் நோய்த்தடுப்பு பிரிவுகள் துவங்க அமைதியளிக்கப்பட்டுள்ளன.
- திருத்தப்பட்ட தேசிய காசநோய் திட்டத்தை செயல்படுத்துதல், மாவட்ட மனநல திட்டம், விபத்து, அதிர்ச்சி பராமரிப்பு போன்ற முக்கியமான செயல்களை செய்கிறது. மனித உறுப்பு மாற்றுச் சட்டம் 1994, தமிழ்நாடு மருத்துவச் சட்டம் 1997, கருவில் இருக்கும் குழந்தைகளின் பாலினம் கண்டறிதல் / கலைத்தல் தடைச் சட்டம் 1994 யைச் செயல்படுத்துதல்
- மாவட்டங்களிலுள்ள மாவட்ட தலைமையகம் மற்றும் வட்டங்களில் சுகாதார சேவைகளை வழங்குகிறது.
- தமிழ்நாட்டின் இரண்டாம் நி-ல சுகாதார அமைப்பு: இது மாவட்ட தலைமையக மருத்துவமனை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், மருந்தகங்கள், நடமாடும் மருத்துவ

அலகுகள், காவல் மருத்துவமனைகள் மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளை உள்ளடக்கியது.

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் பொது மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளை கீழ்கண்ட மருத்துவமனைகள் மூலம் வழங்கி வருகிறது.

வரிசை எண்	மருத்துவமனையின் விவரங்கள்	எண்ணிக்கை
1.	மாவட்ட தலைமை மருத்துவமனை	29
2.	வட்ட மருத்துவமனை	206
3.	வட்டம் சாரா மருத்துவமனை	67
4.	மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை	7
5.	அரசு மருந்தகங்கள்	11
6.	காசநோய் மருத்துவமனை	2
7.	தொழுநோய் மருத்துவமனை	7
8.	அரசு மனநல மருத்துவமனை மற்றும் மறுவாழ்வு மையம்	1

3) மூன்றாம் நிலை சுகாதார பராமரிப்பு

- சுகாதார அமைப்பின் கட்டமைப்பை நிர்ணயிப்பதில் மூன்றாம் நிலை சுகாதார பராமரிப்பு முக்கிய பங்கை வகிக்கிறது.
- மாவட்ட சுகாதார சேவைகளுடன் மூன்றாம் நிலை பராமரிப்பை வழங்குவதுடன், உள்ளூர் மக்களுக்கு மலிவான மற்றும் பொருத்தமான சுகாதார சேவையை வழங்குதல்.
- மருத்துவ கல்லூரிகளின் மூலம் தொலைபேசி மற்றும் டெலிமெடிசின் ஆலோசனைகளும், மாவட்ட ஊழியர்களுக்கான பயிற்சியைப் பெறவும் உதவுகிறது.

9.4 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பராஃபிரப்போஷனல் பயிற்சி நிறுவனங்கள்

மருத்துவக் கல்வி:

- மருத்துவக் கல்வி இயக்ககத்தின் முக்கிய நோக்கம், அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவைகளைச் சார்ந்த மருத்துவமனைகளை நிர்வகிப்பதுடன், மருத்துவத் துறையில் கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- இவ்வியக்கக் கட்டுப்பாட்டின் கீழ் மருத்துவம், பல் மருத்துவம், செவிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகளில் மாணவர்கள் சேர்க்கையை நடத்தும் தேர்வுக் குழு செயல்பட்டு வருகிறது.
- பொதுமக்களுக்கு ஆரம்ப நிலை மருத்துவ சேவைகளை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்கமும், இரண்டாம் நிலை மருத்துவ சேவைகளை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கமும் வழங்கி வரும் நிலையில், உயர் சிறப்பு மருத்துவ சேவைகளை, ஏழை

https://t.me/tnpscfree

எளிய மக்களுக்கு சிறப்பாக வழங்குவதில் மருத்துவக் கல்வி இயக்கமும் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது.

சுகாதாரத்துறையில் தமிழகத்தின் தனிச்சிறப்புகள்

1. அதிக எண்ணிக்கையிலான அரசு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம்.
2. தமிழ்நாட்டின் முதல் மருத்துவக் கல்லூரியான சென்னை மருத்துவக் கல்லூரி இந்தியாவில் 2-வது மருத்துவக் கல்லூரி.
3. எழும்பூர் கண் மருத்துவமனை - உலகத்தில் துவக்கப்பட்ட 2-வது கண் மருத்துவமனை.
4. உலகிலேயே 1878-ல் ஒரு பெண்மணியை முதன்முதலாக மருத்துவ கல்லூரி மாணவியாக சேர்த்தது - மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி அவர் பெயர் - மேரி ஆன் டாகோம்ப் ஸ்கார்லீப்.
5. மெட்ராஸ் மருத்தவக் கல்லூரியிலிருந்து 1912-ஆம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி, (டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி) ஆவார்.
6. இந்தியாவில் இரண்டாவது பெரிய நிலையமாகவும் தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு மன நல சேவையை வழங்கும் நிலையமாகவும் சென்னை, மனநல காப்பகம் விளங்குகிறது.
7. 1903-ஆம் ஆண்டு, (சார்லஸ் டினோவன்) என்பவரும், இங்கிலாந்து, நெட்லே-வைச் சார்ந்த திரு. வில்லியம் பூக் லெய்ஸ்மேன் என்பவரும் இணைந்து மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் காலா-அஸார் நோயை உருவாக்கும் லெயிஷ்மானியா டினோவனி ஒட்டுயிரியை கண்டுபிடித்த பெருமை உள்ளது.

9.5 சமீபத்திய நோய்கள்

9.5.1 ஜப்பானிய என்செபாலிடிஸ் (Japanese Encephatitis) (JE)

- ஜப்பானிய என்செபாலிடிஸ் என்பது மூளையை சுற்றியுள்ள சவ்வுகளை பாதிக்கும் ஃபிளேவி வைரஸால் (Flavi Virus) ஏற்படும் நோயாகும்.
- ஜப்பானிய என்செபாலிடிஸ் வைரஸ் (JEV) இந்தியாவில் ஏற்படும் கடுமையான என்செபாலிடிஸ் நோய்க்கு காரணமாகும்.

பரவுதல்

- க்யூலெக்ஸ் (Culex) இன வைரஸ் பாதிப்படைந்த கொசுக்கள் கடிப்பதின் மூலம் மனிதனுக்கு பரவுகிறது.
- இந்த கொசுக்கள் வயல் வெளிகளிலும், நீர்வாழ்த் தாவரங்கள் நிறைந்த நீர் நிலைகளிலும் இனப்பெருக்கம் செய்கின்றன.
- புலம் பெயரும் பறவைகள் மற்றும் பன்றிகள் மூலம் பிற பகுதிகளுக்கு பரவுகிறது.

அறிகுறிகள்

- பாதிக்கப்பட்ட மனிதனில் இலேசா அறிகுறிகள் மட்டுமே சில சமயம் செ
- பாதிக்கப்பட்டவர்களில் சிறிய சதவீதத்த ருக்கு மூளையில் வீக்கம் (Encep ர் தலைவலி,

அதிக காய்ச்சல், நடுக்கம், வலிப்பு மற்றும் கோமா உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும்.

- குழந்தைகள் மற்றும் சிறார்கள் பாதிக்கப்படும் போது சில சமயங்களில் இறப்பு நேரிடும்.

சிகிச்சை

- இந்நோய்க்கு ஆன்டிவைரல் சிகிச்சை இல்லை. நோய் அறிகுறிக்கு ஏற்ப சிகிச்சை அளிக்கப்படும்.

நோய் தடுப்பு

- இந்நோயை தடுக்க பாதுகாப்பான தடுப்பூசிகள் உள்ளன.
- இந்நோயின் பெரும் பாதிப்பிற்கு பின்னர் 2005 ஆம் ஆண்டு இந்தியாவில் ஜப்பானிய என்செபாலிடிஸ் தடுப்பூசி பயன்படுத்தப்பட்டது.
- இத்தடுப்பூசி மத்திய அரசின் விரிவான நோய்தடுப்பு திட்டத்தின் கீழும் வழங்கப்பட்டு வருகிறது.

9.5.2 டெங்கு

- ஏடிஸ் கொசுக்களால் பரப்பப்படுகிறது.

அறிகுறிகள்

- காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டுவலி, மற்றும் அம்மை நோயைப் போன்ற தோல்சொறி.
- இவை நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது மற்றும் வகை - II (ம) IV ஆனது மிகவும் கடுமையானதாகக் கருதப்படுகிறது. இதற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படுகிறது.
- டெங்வாக்சியா என்ற முதல் டெங்கு தடுப்பூசியை அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (ம) இது அமெரிக்காவின் ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது.
- சனோபியின் டெங்கு தடுப்பூசி - டெங்வாக்சியாவிற்கு இந்திய மருத்துவ கட்டுப்பாட்டு அமைப்பு இன்னும் அனுமதி வழங்கவில்லை.
- 2019-ம் ஆண்டில் ஜூன் 9 வரை இந்தியாவில் டெங்குவால் 6,210பேர் பாதிக்கப்பட்டதாகவும், 6 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

9.5.3 சிக்குன்குனியா

- சிக்கன்குனியா காய்ச்சல் ஏடிஸ் கொசுக்கள் மூலம் மனிதருக்கு பரவும் மற்றுமொரு வகை வைரஸ் நோயாகும்.
- அரசு மேற்கொண்ட நோய் தடுப்பு நடவடிக்கைகளால் சிக்கன்குனியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.
- டெங்கு நோய் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிகளோடு சிக்கன்குனியா நோய் தடுப்பு பணிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன

https://t.me/tnpscfree

9.5.4 பன்றிக் காய்ச்சல் (H_1N_1):

H_1N_1 வைரஸ்

- பன்றிக்காய்ச்சல் என்பது தொற்றக்கூடிய சுவாச நோயாகும். இவை பன்றிகளில் இருந்து பரவக்கூடியது. இந்நோய் இன்ஃப்ளுயன்ஸா "ஏ" வைரஸ்களால் ஏற்படுகிறது.
- துணை வகைகள் – தோற்றம், புவியியல் தோற்றம், எண்ணிக்கையில் திரிபு தனிமைப்படுத்தப்பட்ட ஆண்டின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

அறிகுறிகள்

- இருமல், காய்ச்சல், தொண்டை வலி, மூக்கடைப்பு அல்லது மூக்கு ஒழுகுதல், தலைவலி, உடல் வலி போன்றவை இதன் அறிகுறிகளாகும்.

பரவுகின்ற பருவகால காய்ச்சல் (H_1N_1)

- இவை ஒவ்வொரு ஆண்டும் மனிதர்களிடையே பருவகால மாற்றத்தால் பரவுகின்றன.
- வெப்ப மண்டல வானிலை சூழலில் இந்நோய் பருவகால மாற்றம் மற்றும் வழக்கமான வைரஸ் பரவும் முறையில் அதாவது தும்மல், இருமல் அல்லது அசுத்தமான மேற்பரப்புகளை தொடுவதன் மூலம் ஒருவருக்கு ஒருவரிடையே பரவுகின்றது.
- பருவகால காய்ச்சல் வைரஸ்கள் தொடர்ந்து உருவாகின்றன. அதாவது மக்களுக்கு தங்கள் வாழ்நாள் முழுவதும் இதனால் பல முறை நோய்த்தொற்று ஏற்படலாம்.
- ஆகையால், பருவகால காய்ச்சல் தடுப்பூசிகளின் கூறுகள் அடிக்கடி மதிப்பாய்வு செய்யபடுகின்றன. (தற்போது வருடத்திற்கு இருமுறை) மேலும் தடுப்பூசிகளின் தொடர்ச்சியான செயல்திறனை உறுதிப்படுத்த அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்றன.
- நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் நிகழ்நேர பாலிமரேஸ் சங்கிலி எதிர்வினைகளை H_1N_1 கண்டறிவதற்கு தேர்வு முறையாக பரிந்துரைக்கிறது.
- வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் பன்றிக் காய்ச்சலின் மருத்துவ சிகிச்சையின் முக்கிய அம்சமாகும். மேலும் நோயின் லோசான தாக்கம் மற்றும் நோயாளியை குணமாடைய வேகமாக உணர முடியும்.

9.5.5 மலேரியா

- இது பிளாஸ்மோடியத்தின் தொற்றால் ஏற்படுகிறது.

பரவும் தன்மை

- பெண் அனோபிலஸ் கொசுவின் ஒட்டுண்ணி ஸ்போரோசோயிட்டுகள் மனிதனுள் நுழைவதன் மூலம் உருவாகிறது.
- மலேரியாவானது மனித நோயுற்ற தன்மை மற்றும் இறப்புக்கு முக்கிய காரணமாகிறது.
- **ஒட்டுண்ணி நோய்க்கெதிரான உலகின் முதல் தடுப்பூசி:** RTS, S, Mosquirix.
  - நோயெதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்துவதற்கு ஸ்போரோசோயிட்டுகள் வெளிப்படுத்தும்

புரதங்களுக்கு எதிராக ஆன்டிபாடிகளை பயன்படுத்தப்படுகிறது (சர்க்கம் ஸ்போராசோயிட்டுகள் வெளிப்படுத்தும் ஃபால்சிபாரம் புரதம் போன்றவை). இதன் மூலம் கல்லீரல் தொற்றை தடுக்க பயன்படுத்துகிறது.

இந்தியா: மலேரியா ஒழிப்புக்கான முதல் தேசிய கட்டமைப்பு (2016 - 2030) 2016-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

துர்கமா அஞ்சலரே மலேரியா நிராகரன் (DAMAN) முயற்சி, 2018

- ஒடிசாவின் துர்கமா அஞ்சலரே மலேரியா நிராகரன் (DAMAN) முயற்சி மலோரியா ஒழிப்பதில் குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்த முயற்சி மிகவும் அணுக முடியாத மற்றும் கடினமான பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிகுறியற்ற மலேரியாவை புதுமையான உத்திகளை கொண்டு கையாண்டுள்ளது.
- இந்த திட்டத்தை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தேசிய மலேரியா ஆராய்ச்சி நிறுவனம் (ICMR - NIMR), தேசிய பரவும் நோய் (மு) கட்டுப்பாட்டு திட்டம் (NVBDCP), ஒடிசா மற்றும் மலேரியா துணிகரத்திற்கான மருந்துகள் இயக்ககம் (MMV), ஆகியவை இணைந்து செயல்படுத்துகிறது.

9.5.6 யானைக்கால் நோய்

- யானைக்கால் நோய் பொதுவாக அசுத்தமான நீரில் உற்பத்தியாகும் கியூலெக்ஸ் வகை கொசுக்களால் பரவக்கூடிய நோயாகும்.
- தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் தமிழகத்தில் 1957-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள் தற்சமயம் 43 நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

9.5.7 கொரோனா வைரஸ் காய்ச்சல் (nCov - 2019)

- உலக சுகாதாரமைப்பானது புதிய கொரோனா வைரஸ் நோயை COVID-19 என்று பெயரிட்டுள்ளது.
- இது சுவாச குழாயில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சார்ந்தவை. இவை சளியையும் உண்டாக்கும்.
- இதில் பெரும்பான்மையான வைரஸ்கள் விலங்குகளில் பொதுவாக காணப்படும். ஆனால் ஒருசில நேரங்களில் விலங்களில் காணப்படும் கொரோனா வைராஸனாது திடீர் மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. மேலும் அது மனித உடம்பை வந்தடைகிறது. இது RNA வைரஸ் ஆகும். இதன் அடிக்கடி திடீர் மாற்றம் ஏற்படும் தன்மையால் இவ்வைரஸ்களின் தன்மை ஒன்றுக்கொன்று வித்தியாசமானதாக இருக்கும்.
- இது மனிதர்களையும் பாலூட்டிகளையும் அதாவது பன்றி, மாடு, பூனை, நாய், ஒட்டகம் மற்றும் பறவைகளை பாதிக்கும்.

https://t.me/tnpscfree

- இதில் 4 நோய்தொற்றக்கூடிய வகையான கொரோனா வைரஸ் அடங்கும். மேலும் 2 வகை உண்டு. அவை. சார்ஸ் (SARS) மற்றும் மெர்ஸ் (MERS) வகை தீவிரமான சுவாசத் தொற்றை உண்டாக்கும் தன்மையுடையவை.
- தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த புதுவகை கொரோனா வைரஸ்-க்கும் அதை ஏற்படுத்தும் நோய்க்கும் இருக்கும் தொடர்பை இன்னும் உறுதிப்படுத்தவில்லை.
- இது உலக சுகாதார அமைப்பானது இதன் தோற்றம், இது பரவும் விதங்கள் மற்றும் இதனது பாதிப்புகளை அறியும் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் மேல் விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

நோயின் அறிகுறிகள்

- காய்ச்சல், இருமல் மற்றும் சளி
- உடல் சோர்வு
- ஒரு சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும்.

கொரோனா வைரஸ் நோய் பரவும் விதம்

- நோய் அறிகுறிகள் கண்ட நபர் இருமும் போதும், தும்மும் போதும், வெளிப்படும் நீர்த் திவலைகள் மூலம் நேரடியாக பரவுகிறது.
- மேலும் இருமல் தும்மல் மூலம் வெளிப்படும் கிருமிகளை உடைய நீர்த் திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும்பொழுது கைகள் மூலமாகவும் பரவுகிறது.

நோய் தடுப்பு நடவடிக்கைகள்

- தினமும் 10 முதல் 15 முறை கைகளை சோப்பு போட்டு, நன்கு தேய்த்து கழுவ வேண்டும்.
- இருமும் போதும் தும்மும் போதும் வாய் மற்றும் மூக்கை கை குட்டை கொண்டு மூடி கொள்ள வேண்டும்.
- சிகிச்சை தரும் அனைத்து மருத்துவமனைகளிலும் கிருமி நாசினி கொண்டு சுத்தமாக துடைத்து பராமரித்தல் வேண்டும்.

சிகிச்சைகள்

- சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே அருகில் உள்ள மருத்துவரை அணுகவும்.
- இளநீர், ஓ.ஆர்.எஸ், கஞ்சி போன்ற நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்களை பருகுதல் வேண்டும்.

9.6 மருத்துவ நிர்வாகம்

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்கண்ட இயக்ககங்கள் / வாரியம் செயல்படுகின்றன:

1. **மருத்துவக் கல்வி இயக்ககம்:** உயர்நிலை மருத்துவ சேவை மற்றும் மருத்துவக் கல்வி வழங்குவது இதன் பொறுப்பாகும்.

2. **மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்:** இரண்டாம் நிலை மருத்துவ சேவை மற்றும் உரிய அலுவலர் என்ற முறையில் ஒழுங்குமுறை விதிகளை செயல்படுத்துவது இதன் பொறுப்பாகும்.
3. **பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்:** நோய்கள் பரவாமல் தடுத்தல் மற்றும் பொது சுகாதாரம் வழங்குவது இதன் பொறுப்பாகும்.
4. **இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்:** ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி ஆகியவைகள் அடங்கிய ஆயுஷ் சேவை வழங்குவது இதன் பொறுப்பாகும்.
5. **குடும்ப நல இயக்ககம்:** குடும்ப கட்டுப்பாடு தொடர்பான செயல்பாடுகளில் கவனம் செலுத்துகிறது.
6. **உணவு பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு நிருவாக இயக்ககம்:** உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயத்தில் கவனம் செலுத்துவதோடு, தொடர்புடைய மத்திய அரசு சட்டங்கள் மூலம் மருந்து ஒழுங்குமுறை மற்றும் உரிமத்தையும், நிருவாகத்தையும் இரண்டு வெவ்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்துகிறது.
7. **தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து துறை:** மாநில சுகாதாரத் துறையின் வாகனங்களை பராமரித்தல் மற்றும் பேணிக்காத்தல் இதன் பொறுப்பாகும்.
8. **மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்:** சுகாதாரத் துறையில் பல்வேறு பணியாளர்களை விரைவாகவும், வெளிப்படையாகவும் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

பாரா மருத்துவ படிப்புகள்

இரண்டு டிப்ளமோ பாடநெறிகள் (அதாவது) ஒருங்கிணைந்த மருந்தகத்தில் டிப்ளமோ மற்றும் நர்சிங் தெரபி டிப்ளமோ பாடநெறிகள் சென்னை அறிஞர் அண்ணா அரசு சித்தா மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை (திருநெல்வேலி) ஆகிய இடங்களில் நடத்தப்படுகிறது.

1. கடந்த எட்டு ஆண்டுகளில் சிவகங்கை, திருவண்ணாமலை, ஓமந்தூரார் அரசு எஸ்டேட், சென்னை, கோவை இ.எஸ்.ஐ மருத்துவமனை, புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.
2. இந்தக் கல்லூரியைத் திறப்பதற்கும், 2019-20 ஆம் கல்வியாண்டில் இருந்து மாணவர்களைச் சேர்ப்பதற்கும் இந்திய மருத்துவ கவுன்சில் / இந்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இறப்பு பாதிப்புகள்

- தமிழ்நாட்டில் டெங்கு காரணமாக இறப்பு விகிதம் 27.3% மும், இந்திய மட்டத்தில் 9.9% பேர் பன்றி காய்ச்சலாலும் மற்றும் 5.4% ஜப்பானிய என்செபாலிடிஸ் நோயாலும் இறப்பு பதிவாகியுள்ளது.

https://t.me/tnpscfree

9.6.1 மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 2012

- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2012-ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையில் பல்வேறு பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நேரடிப் பணி நியமனம் மூலம் நிரப்பிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டு துவக்கப்பட்டது.
- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், நாளேடுகளில் விளம்பரம் செய்து, இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பங்களை பெற்று வெளிப்படையான முறையில் தேர்வு செய்கிறது.
- தகுதியான பணியாளர்களை தேர்ந்தெடுப்பதை பெருமுயற்சியாகக் கொண்டு, உதவி மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த பதவிகளுக்கான நேரடி பணி நியமனத்தினை, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், அப்பதவிகளுக்கேற்ப எழுத்துத் தேர்வு நடத்தியும், தகுதி மதிப்பெண்கள் அடிப்படையிலும் நடைமுறையில் உள்ள விதிகளின் படி இனசுழற்சி மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

9.6.2 தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

- நிறுவனங்கள் சட்டம் 1956-ன் படி 1994-1995 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC), முழுவதும் தமிழக அரசுக்கு உடன்பட்ட ஒரு நிறுவனமாகும்.

செயல்பாடுகள்:

- தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவ நிறுவனங்களுக்கும் மருந்துகள், மாத்திரைகள், அறுவை சிகிச்சை நுகர் பொருட்கள் மற்றும் தையல் பொருட்கள் கொள்முதல் செய்து, சேமித்து, மருந்துகளை ஆய்வுக்குட்படுத்தி வழங்குவதுஇக்கழகத்தின் முக்கிய பணியாகும்.
- இது தவிர சானிட்டரி நாப்கின்கள் மற்றும் தாய்மார்கள் மற்றும் கைக்குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து தொகுப்பு ஆகியவற்றையும் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.
- மேலும் புழு, பூச்சி கொல்லி மருந்துகளையும் வாங்க ஒப்பந்தங்களை இறுதி செய்து தருகிறது.

9.6.3 இந்திய மருத்துவத்திற்கான மாநில மருந்து உரிம ஆணையம், 2007

- ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி மருந்துகளின் தரம், செயல்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்.
- மருந்துகள் மற்றும் அழகுசாதனச் சட்டம், 1940 மற்றும் விதிகள் 1945-ன் படி, இந்திய மருந்துகள் முறைமைக்கு மாநில உரிமம் ஆணையம் (இந்திய மருத்துவம்) உரிமம் வழங்கியுள்ளது.
- மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் மற்றும் ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி மருந்துகள் மற்றும் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் குறித்த சோதனை மேற்கொள்வதற்கு நிறுவனங்களுக்கு அதிகாரம் அளித்தல்.
- தவறான உற்பத்தியாளர்களுக்கு எதிராக, ஆண்டுக்கு இரண்டு முறைக்கு குறையாமல் வளாகத்தை ஆய்வு செய்ய மருந்து ஆய்வாளர்களுக்கு அதிகாரம் உள்ளது.

தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகம் லிமிடெட் (TAMPCOL) 1983

குறிக்கோள்:

- சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகளை உற்பத்தி செய்து வழங்குதல்.

"மாநில ஆயுஷ் சங்கம் – தமிழ்நாடு"

- இம்மாநிலத்திற்கான மத்திய ஆயுஷ் குழுமத்தின் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக "மாநில ஆயுஷ் சங்கம் – தமிழ்நாடு" என்ற சங்கத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், 'ஆயுஷ்' – இன் வளர்ச்சி பணிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீட்டினைப் பகிர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

9.6.4 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

- நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டில் 1994 ஆம் ஆண்டு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் நிறுவப்பட்டது. இது மற்ற மாநிலங்கள் பின்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கியது.
- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் முழு நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிகழ்வுகளின் திட்டத்தின் நான்காம் கட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று மீதான 2017-2024 தேசிய மேலாண்மை திட்டத்தின் வாயிலாக 2030 ஆம் ஆண்டுக்குள் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றை பொதுச்சுகாதார அச்சுறுத்தலிலிருந்து முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.
- மாவட்ட அளவிலான நிகழ்வுகள் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் (DAPCU) மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க நிரல் கூறுகள்

1. உயர் ஆபத்து குழுக்கள் (HRG) மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை மையமாகக் கொண்டு தடுப்பு சேவைகளை தீவிரப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
2. தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு சேவைகளை விரிவுபடுத்துதல்.
3. விரிவான பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குதல்
4. நிறுவன திறன் மற்றும் மூலோபாய தகவல் மேலாண்மை அமைப்புகளை வலுப்படுத்துதல்

2. தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவுதலை முற்றிலும் நீக்குதல் (EMTCT) சாதனைக்கான விருது – 2018

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு தாயிடமிருந்து குழந்தைக்கு தடுக்கும் பணிக்கான, **தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவுதலை முற்றிலும் நீக்குதல் (EMTCT) சாதனைக்கான விருது** தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் நடத்தப்பட்ட, **"தேசிய கருத்தரங்கு 2018"**– ல் வழங்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

9.6.5 பால்வினை தொற்று / இனப்பெருக்க உறுப்புகள் தொற்று சேவைகள்:

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், 216 சுகவாழ்வு மையங்கள் (DSRCs) தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை களிலும் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்படுகிறது.
- இம்மையங்களில் இனப்பெருக்க மண்டலம் மற்றும் பால்வினை தொற்று உள்ளவர்களுக்கு, பல வண்ணங்கள் குறிப்பிட்ட மருந்து உபகரணங்களின் மூலமாக கூட்டுமருந்து சிகிச்சை அளிக்கப் படுறது.
- இந்த சுகவாழ்வு மையங்களில், புறநோயாளிகளாக வரும் அனைவருக்கும், 'சிஃபிலீஸ் மற்றும் எச்.ஐ.வி.' தொற்றிற்கான பரிசோதனை மூன்று மாதத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது.
- பயிற்சி பெற்ற ஆலோசகர் ஒருவர் சுகவாழ்வு மையத்தில் பணியாற்றுகின்றார். இவர் பால்வினை தொற்று, எச்.ஐ.வி. பரவல் மற்றும் தடுப்பு முறை சிகிச்சை, வாழ்க்கைத் துணைவருக்கான சிகிச்சை, பாதிப்பின் அபாயத்தை குறைப்பது மற்றும் ஆணுறை பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆலோசனை வழங்குகின்றார்.
- ஒத்த அறிகுறிகளை உருவாக்கும் பல்வேறு நோய்கிருமிகளுக்கு பொதுவான சிகிச்சை அளிக்கும் முறையை கையாள்வது தொடர்பாக, மண்டல அளவில், மருத்துவ அலுவலர்களுக்கு சீரான இடைவெளியில் பயிற்சி அளிக்கப் படுகிறது.

9.6.6 FSSAI ன் உணவு உரிமை இயக்கம்

- இது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் தொடங்கப்பட்டது.
- இந்த இயக்கம் உப்பு / சர்க்கரை மற்றும் எண்ணெய் பயன்பாட்டை பல ஆண்டுகளாக குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிமக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதையும் (ம) சரியான உணவு முறையை செயல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்நிகழ்வில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு **'உணவுப் பாதுகாப்பு மித்ரா'** (உணவு பாதுகாப்பு நண்பர்கள்) சான்றுகளை வழங்கும்.
- உலக வங்கியானது, FSSAI வுடன் இணைந்து FSSAI வின் இயக்கத்தின் அறிவைப் பகிர்ந்து கொள்ள 'இந்தியாவின் கலங்கரை விளக்கம்' என்ற மாநாட்டை கோவாவின் விவந்தாவில் 26, செப்டம்பர் 2019 ல் ஏற்பாடு செய்தது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

- TNMSC (1994) - Tamilnadu Medical Services Corporation
- TNSACS (1994) - Tamilnadu State AIDS Control Society
- TRANSTAN (2016) - Transplant Authority of Tamilnadu

- 1954 - அடையார் புற்றுநோய் நிலையம்
- 1983 - குடும்ப நலத்துறை

தமிழ்நாடுமுழுவுள்ள அனைத்து மருத்துவ நிறுவனங்களை முறைப்படுத்த கொண்டு வரப்பட்ட சட்டங்கள்

- தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2018
- தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1997
- உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 - 2011 முதல் அமல்
- மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் - 1940
- கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு செய்யும் தடை) சட்டம், 1994

சுகாதார அமைப்புகள்:

எண்	அமைப்புகள்	அமைவிடம்
1.	கிங் நிலைய வளாகம்	கிண்டி, சென்னை
2.	பொது சுகாதார நிறுவனம்	பூவிருந்தவல்லி
3.	சுகாதாரம் மற்றும் குடும்ப நல பயிற்சி நிலையங்கள்	சென்னை எழும்பூர் மற்றும் மதுரை
4.	சுகாதார மனிதவள மேம்பாடு நிறுவனங்கள்	சேலம், விழுப்புரம்
5.	மண்டல பொதுசுகாதார பயிற்சி நிறுவனம்	திருவரங்குளம்
6.	மனிதஇன மற்றும் விலங்கின நோய் பரப்பிகள் கட்டுப்பாடு நிறுவனம்	ஓசூர்
7.	சுகாதார பார்வையாளர் பயிற்சி நிலையம்	திருவல்லிக்கேணி, சென்னை

தீயவை வன்றித் தெரியான் பெரும்பிணி
நோயவை வின்றிப் படும்.

- குறள் 947

விளக்கம்:
பசித்தீயின் அளவின்படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டு விடும்.

https://t.me/tnpscfree

மாதிரி வினாக்கள்

1. பொது சுகாதாரத்தில் "தமிழ்நாடு மாதிரி"யின் வெற்றிக்குக் காரணம்/காரணங்கள் யாது/யாவை?
   1. 1939-ஆம் ஆண்டில் பொது சுகாதாரச் சட்டத்தை இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு.
   2. மாவட்ட அளவில் தனித்துவமான பொது சுகாதார துறையை ஏற்படுத்தியது.
   3. சுகாதாரத் துறையில் அரசியல் ரீதியான அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவம்.
   4. பெரிதும் மையப்படுத்தப்பட்ட சுகாதார அமைப்புகள்.

   (A) 1 மற்றும் 2 (B) 2 மற்றும் 3 (C) 4 மட்டும் (D) 1, 2 மற்றும் 3
2. Nikshay என்பது
   (A) காச நோயாளிகளைக் கண்காணிப்பதற்கான வலைதள தீர்வு
   (B) பெண்கள் மீதான அமில தாக்குதலுக்கு எதிரான இணைய வழி பிரச்சாரம்
   (C) மனித கடத்தலுக்கு எதிரான இணைய அடிப்படையிலான வலைதளம்
   (D) பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக இணைய அடிப்படையிலான வலைதளம்
3. தமிழ்நாடு புகையிலை கட்டுப்பாட்டு மையம் _____ இயக்கத்தின் கீழ் செயல்படுகிறது.
   (A) மருத்துவக் கல்வி
   (B) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து
   (C) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
   (D) மருந்துக் கட்டுப்பாடு
4. தமிழ்நாடு மாநில மனநல சுகாதார சேவைக் கொள்கை மற்றும் நடைமுறைப் படுத்துவதற்கான கட்டமைப்பு பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு:
   1. SDG யின் இலக்கு 1-ஐ அடைவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
   2. தற்கொலை விகிதத்தை 2025 க்குள் 10% குறைத்தல்

   (A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 1 மற்றும் 2 (D) எதுவுமில்லை
5. LaQshya திட்டம் என்பது
   (A) நடமாடும் நகர மருத்துவக் குழு
   (B) ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்க தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பது
   (C) நகர்ப்புற மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துதல்
   (D) பிரசவ அறைகள் மற்றும் பிரசவ அறுவை சிகிச்சை அறையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்

விடைகள்

1	2	3	4	5
D	A	B	B	D

அத்தியாயம்

10

தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்

"புவியியல் என்பது ஒரு வரைபடத்திலுள்ள இடங்களை மனப்பாடம் செய்வதுடன் முடிந்து விடாது. அதைத் தாண்டியது. அது உலகத்தின் சிக்கல்களைப் புரிந்து கொள்வதும், கண்டங்களிடையே நிலவும் பண்பாட்டு பன்முகத்தன்மையை ஊக்கப்படுத்துதலும் ஆகும். முடிவாக மக்களிடையே நிலவும் வேறுபாடுகளை களைந்து அவர்களை ஒன்றிணைக்கும் பலமாக, நாம் பெற்ற அறிவைப் பயன்படுத்துதலுமே புவியியல் ஆகும்".

–பாரக் ஒபாமா

தமிழகத்தின் வரலாறு

- சங்க காலத்தில் தமிழகத்தை சேர்ந்த மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மற்றும் குறுநில மன்னர்களான அதியமான், பாரி போன்ற சிற்றரசர்கள் ஆட்சி செய்தனர். அதன் பிறகு தமிழகமானது களப்பிரர் ஆட்சியின் கீழ் ஒரு குறுகிய காலம் இருந்தது. ஆனால் அவர்களின் ஆட்சி பற்றிய குறிப்புகள் காணப்படவோ அல்லது அறியப்படவோ இல்லை.
- களப்பிரர்களுக்கு பிறகு இந்தியா முழுவதையும் ஆங்கிலேயர்கள் தங்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரும் வரை மதராஸ் மாகாணம் முதலாக இந்தியா முழுவதும் பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், மராத்தியர்கள், முகலாயர்கள் மற்றும் விஜயநகர பேரரசர்களால் ஆளப்பட்டது.
- ஆங்கிலேய ஆட்சியின் போது நமது தேசம் அரசியல் மற்றும் ராணுவ நோக்கங்களுக்காக மதராஸ், பம்பாய் மற்றும் கல்கத்தா என மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திராவின் ஒரு பகுதி, கேரளா, கர்நாடகா மற்றும் ஒரிசா (ஒடிசா)வின் சில பகுதிகள் மதராஸ் மாகாணத்தின் கீழ் இருந்தன.
- சுதந்திரத்திற்குப் பிறகு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தெலுங்கு மொழி பேசும் பகுதிகள் மதராஸ் மாகாணத்தில் இருந்து பிரிக்கப்பட்டது. இப்பிரிவினைக்கு பிறகு மதராஸ் மாகாணத்தில் 13 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. ஜனவரி 14, 1969 ஆம் ஆண்டு மதராஸ் மாகாணம் முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை அவர்களால் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

https://t.me/tnpscfree

10.1 அமைவிடம் மற்றும் பரப்பளவு

- தமிழ்நாடானது, பாண்டிச்சேரி, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட தென்னிந்தியாவில் உள்ள மாநிலமாகும்.
  - அட்சம் : 8°4′ வடக்கு முதல் 13°35′ வடக்கு வரை
  - தீர்க்கம் : 76°18′ கிழக்கு முதல் 80°20′ கிழக்கு வரை
- மொத்த பரப்பளவு : 1, 30,058 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட, இந்தியாவின் 11வது பெரிய மாநிலம். 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையுடன், இந்தியாவின் 4% பரப்பை கொண்டுள்ளது.
  - தமிழகத்தின் கிழக்கு கோடி – கோடியக்கரை
  - தமிழகத்தின் மேற்கு கோடி – ஆனைமலை
  - தமிழகத்தின் வடக்கு கோடி – பழவேற்காடு ஏரி
  - தமிழகத்தன் தென் கோடி – குமரிமுனை

எல்லைகள் மற்றும் அண்டைநாடுகள்

- கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ்நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்ச்சந்தி தமிழ்நாட்டையும் இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள இலங்கையையும் பிரிக்கின்றன. குஜராத்திற்கு அடுத்தப்படியாக தமிழ்நாடு 1076 கிலோ மீட்டர் நீளமுடன் இந்தியாவின் மூன்றாவது நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது.

அரசியல் பிரிவுகள்

- தமிழ்நாடு உருவான காலகட்டத்தில் 13 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. அதன்பிறகு நிர்வாக வசதிக்காக மாநிலம் பலமுறை மறுசீரமைப்பு செய்யப்பட்டது. பின்வரும் அட்டவணையில் மாநில நிர்வாக பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- சமீபத்தில், 2019இல் தமிழகத்தில் ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன.
  - திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்காசி பிரிக்கப்பட்டது.
  - விழுப்புரம் மாவட்டத்திலிருந்து கள்ளக்குறிச்சி பிரிக்கப்பட்டது.
  - வேலூர் மாவட்டத்திலிருந்து திருப்பத்தூர் மற்றும் ராணிபேட்டை
  - காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து செங்கல்பட்டு மாவட்டம் பிரிக்கப்பட்டது.

நிர்வாக பிரிவுகள்	எண்ணிக்கை	நிர்வாக பிரிவுகள்	எண்ணிக்கை
மாவட்டங்கள்	37 (32+5)	நகராட்சிகள்	125
வருவாய்க் கோட்டங்கள்	76	ஊராட்சி ஒன்றியங்கள்	385
வட்டங்கள்	226	பேரூராட்சிகள்	561
பிர்காக்கள்	1,127	கிராம ஊராட்சிகள்	12,618

வருவாய் கிராமங்கள்	16,564	மக்களவைத் தொகுதிகள்	39
மாநகராட்சிகள்	15	சட்டமன்றத் தொகுதிகள்	234

10.2 இயற்கை அமைப்பு

- தீபகற்ப பீடபூமி எனப்படும் தக்காண பீடபூமியில் தமிழ்நாடு அமைந்துள்ளது.
- இப்பகுதி கிரெட்டேசியஸ் காலத்தில் 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்ற கோண்ட்வானா நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும்.
- இது உயரமான அரிக்கப்பட்ட குன்றுகள், ஆழமற்ற பள்ளத்தாக்குகள் மற்றும் சமவெளிகள் போன்ற தனித்துவமிக்க பல நிலத்தோற்றங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டின் நிலத்தோற்ற அமைப்பு கிழக்கு நோக்கிய சரிவைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடானது நிலத்தோற்றத்தின் அடிப்படையில் மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி, பீடபூமிகள், கடற்கரைச் சமவெளிகள் மறறும் உள்நாட்டு சமவெளிகள் என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

10.2.1 மேற்கு தொடர்ச்சி மலை

- மேற்கு தொடர்ச்சி மலை வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி மாவட்ட சுவாமிதோப்பில் உள்ள மருதமலை வரை நீண்டுள்ளது.
- இம்மலைத்தொடரின் உயரம் 2,000 மீட்டர் முதல் 3,000 மீட்டர் வரை வேறுபட்டுள்ளது. இது 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உடையது.
- இம்மலைத்தொடர் தொடர்ச்சியாக இருந்தாலும் சில கணவாய்கள் காணப்படுகின்றன. பாலக்காட்டு கணவாய், செங்கோட்டைக் கணவாய், ஆரல்வாய்மொழி கணவாய் மற்றும் அச்சன்கோவில் கணவாய் ஆகியன இத்தொடரின் முக்கிய கணவாய்களாகும்.
- நீலகிரி, ஆனைமலை, பழனிமலை, ஏலக்காய் மலை, வருசநாடு, ஆண்டிபட்டி மற்றும் அகத்தியர் மலைகள் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முக்கிய மலைகளாகும்.

i) நீலகிரி மலை

- நீலகிரி மலை தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இம்மலையில் 2,000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்ட 24 சிகரங்கள் காணப்படுகின்றன.
- இம்மலையின் உயரமான சிகரம் தொட்டபெட்டா (2,637 மிட்டர்) ஆகும். முக்குருத்தி 2,554 மீட்டர் உயரம் கொண்ட மற்றுமொறு சிகரமாகும்.
- ஊட்டி, குன்னூர் ஆகியவை இம்மலையில் அமைந்துள்ள முக்கிய மலை வாழிடங்களாகும். 2,700-க்கும் அதிகமான பூக்கும் தாவர வகைகள் மற்றும் மாநில விலங்கான நீலகிரி வரையாடு இங்கு காணப்படுகின்றன.
- நீலகிரி மலையில் காணப்படும் மேட்டுநில புல்வெளிகளும் புதர் நிலங்களும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் கால்நடை மேய்ச்சலுக்காக அழிக்கப்பட்டுவிட்டன.

https://t.me/tnpscfree

2) ஆனைமலை

- ஆனைமலை தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லைப்பகுதியில் பாலக்காட்டு கணவாய்க்கு தெற்கே அமைந்துள்ளது.
- ஆனைமலை புலிகள் காப்பகம், ஆழியாறு பாதுகாக்கப்பட்ட காடுகள், வால்பாறை மலைவாழிடம், காடம்பாறை நீர்மின் நிலையம் போன்றவை இம்மலைப்பகுதியில் அமைந்துள்ளன.
- ஆழியாறு மற்றும் திருமூர்த்தி அணைகள் இம்மலையின் அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளன.

3) பழனிமலை

- பழனி மலை, மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதியாகும். இம்மலையின் மேற்கு பகுதியைத் தவிர மற்றவை திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளன.
- பழனி மலையின் மிக உயரமான சிகரம் வந்தராவ் (2,533 மீ) ஆகும். வேம்படிசோலை (2,505 மீ) இதன் இரண்டாவது உயர்ந்த சிகரமாகும்.
- மலைவாழிடமான கொடைக்கானல் (2,150 மீ) பழனிமலையின் தென் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது.

4) ஏலக்காய் மலை

- தமிழ்நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள இம்மலைகள் ஏலமலைக் குன்றுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- இங்கு அதிகமான ஏலக்காய் பயிரிடப்படுவதால் இப்பெயர் பெற்றது. மிளகு மற்றும் காபி ஆகியன இம்மலைப்பகுதியில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களாகும்.
- இவை வடமேற்கில் ஆனைமலையோடும் வடகிழக்கில் பழனி மலையோடும், தென்கிழக்கில் ஆண்டிப்பட்டி மற்றும் வருச நாடு குன்றுகளோடும் இணைகின்றன.

5) வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி மலைக்குன்றுகள்

- மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு நோக்கிய நீட்சி வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி குன்றுகள் ஆகும்.
- மேகமலை, கழுகுமலை, குரங்கனி மலை, சுருளி மற்றும் கும்பக்கரை நீர்வீழ்ச்சிகள் ஆகியவை இம்மலைகளில் காணப்படுகின்றன.
- இம்மலையின் தெற்கு சரிவுகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் மலை 'அணில் சரணாலயம்' விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- வைகை மற்றும் அதன் துணை ஆறுகள் இப்பகுதியில் உருவாகின்றன.

6) பொதிகை மலை

- இம்மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் இதன் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

- சிவஜோதி பர்வத், அகத்தியர் மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களில் இவை அழைக்கப்படுகிறது.
- மேற்கு தொடர்ச்சி மலையின் உயிர்ப்பன்மை செறிந்த ஒன்றாகத் திகழ்கிறது. இப்பகுதி வளமான பசுமை மாறா காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழமையான கோயில்கள் ஆகியவற்றுக்கு புகழ்பெற்றதாகும்.
- களக்காடு-முண்டந்துரை 'புலிகள் காப்பகம்' இப்பகுதியில் அமைந்துள்ளது.

7) மகேந்திரகிரி மலைக்குன்றுகள்

- இம்மலைத்தொடர் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் எல்லை பகுதி களாகவும் மேற்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியாகவும் அமைந்துள்ளது.
- இதன் சராசரி உயரம் (1,645மீ) ஆகும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சோதனை உந்துவிசை செயற்கைக்கோள் ஏவுதளம் இம்மலையின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது.

10.2.2 கிழக்கு தொடர்ச்சிமலை

- மேற்கு தொடர்ச்சி மலையைப் போலன்றி கிழக்கு தொடர்ச்சி மலையானது ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.
- இம்மலையின் உயரம் 1,100 மீட்டர் முதல் 1,600 மீட்டர் வரை மாறுபடுகிறது. இக்குன்றுகள் பீடபூமியை சமவெளியிலிருந்து பிரிக்கின்றன.
- ஜவ்வாது, சேர்வராயன், கல்வராயன், கொல்லி மலை மற்றும் பச்சை மலை தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலையின் முக்கிய குன்றுகளாகும். இவைகள் மாநிலத்தின் வட மாவட்டங்களில் அமைந்துள்ளன.

1) ஜவ்வாது மலை

- கிழக்கு தொடர்ச்சி மலையின் நீட்சியான இம்மலைகள் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் பரவியுள்ளன. இம்மலை இவ்விரண்டும் மாவட்டங்களையும் பிரிக்கிறது.
- சுமார் 1,100 முதல் 1,150 மீட்டர் உயரம் கொண்ட பல்வேறு சிகரங்கள் இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன. இம்மலையின் மிக உயரமான சிகரம் மேல்பட்டு ஆகும்.
- 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காவலூர் வானவியல் தொலைநோக்கி மையம் இங்கு அமைந்துள்ளது.
- ஜவ்வாது மலையின் பல பகுதிகள் நீல நிற சாம்பல் கிரானைட் பாறைகளால் உருவானது. பல்வேறு பழ மரங்கள், மருத்துவ மூலிகைகள் மற்றும் சந்தன மரங்கள், மருத்துவ மூலிகைகள் மற்றும் சந்தன மரங்கள் போன்றவற்றிற்கு இப்பகுதி பெயர் பெற்றது ஆகும்.
- சட்டவிரோதமாக மரம் வெட்டுவதால் தற்பொழுது இப்பகுதியின் சந்தன மரங்கள் அழிந்துவிட்டன.

https://t.me/tnpscfree

2) கல்வராயன் மலை

- 'கல்வராயன்' என்ற சொல் தற்போதுள்ள பழங்குடியினரின் பண்டைய கால பெயரான 'கரலர்' என்ற சொல்லிருந்து பெறப்பட்டது.
- தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலைகளில் ஒரு முக்கிய மலை கல்வராயன் மலையாகும்.
- இம்மலை ஜவ்வாது மற்றும சேர்வராயன் மலைகளுடன் இணைந்து காவிரி மற்றும் பாலாறு ஆகியவற்றின் ஆற்று வடிநிலப் பகுதியினைப் பிரிக்கிறது.
- இம்மலைத் தொடரின் உயரம் 600 மீ முதல் 1,220 மீ வரை காணப்படுகிறது. இது இரண்டு பிரவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட பகுதி சின்ன கல்வராயன் எனவும் தென்பகுதி பெரிய கல்வராயன் எனவும் குறிப்பிடப்படுகிறது.
- சின்ன கல்வராயன் மலைப்பகுதியின் சராசரி உயரம் 825 மீட்டராகவும் பெரிய கல்வராயன் மலையின் சராசரி உயரம் 1,220 மீட்டராகவும் உள்ளது.

3) சேர்வராயன் மலை

- 1,200 முதல் 1,620 மீட்டர் வரையிலான உயரம் கொண்ட சேர்வராயன் மலைத் தொடர் சேலம் நகருக்கு அருகே அமைந்துள்ளது.
- இம்மலைத்தொடரின் பெயரானது உள்ளூர் தெய்வமான 'சேர்வராயன்' என்ற பெயரில் இருந்து வந்ததாகும். இவற்றில் அமைந்துள்ள 1,620 மீட்டர் உயரம் கொண்ட 'சோலைக்கரடு' என்பது கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் அமைந்துள்ள உயரமான சிகரமாகும்.
- 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படும் ஏற்காடு மலைவாழிடம் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளது. இங்குள்ள சேர்வராயன் கோவில் இப்பகுதியின் உயரமான பகுதி ஆகும் (1,623 மீட்டர்).

4) கொல்லி மலை

- கொல்லி மலை நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய மலைத்தொடராகும்.
- இது சுமார் 2,800 சதுர கிலோமீட்டர் பரப்பளவைச் கொண்டது. 1,300 மீட்டர் வரை உயரம் கொண்ட இம்மலைத் தொடரானது, தென்னிந்தியாவின் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது.
- அரப்பாளீஸ்வரர் கோவில் இந்த மலைத்தொடரில் அமைந்துள்ள முக்கியமான புனிதத் தலமாகும்.
- கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் பிற பகுதிகளை ஒப்பிடுகையில் இங்கு பசுமை மாறாக காடுகள் அல்லது சோலை காடுகள் அதிகம் காணப்படுகின்றன.
- பல காபி தோட்டங்கள், பழங்கள், பூக்கள் மற்றும் மலை சவுக்குப் பண்ணைகள் இம்மலைப் பகுதியில் காணப்படுகின்றன.

5) பச்சை மலை

- திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றம் சேலம் மாவட்டங்களில் உயரம் குறைந்த குன்றுத் தொடராக இது காணப்படுகின்றது. தமிழ் மொழியல் "பச்சை" என்பது பசுமையைக் குறிக்கும்
- இம்மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்ற பகுதியை விட பசுமையாக காணப்படுவதால் இது "பச்சைமலை" என அழைக்கப்படுகிறது.
- இம்மலைகளில் பலாப்பழம் ஒரு குறிப்பிடத்தக்க வேளாண் விளைபொருளாக உள்ளது.

தமிழ்நாட்டின் முக்கிய நீர்வீழ்ச்சிகள்

மாவட்டங்கள்	நீர்வீழ்ச்சிகள்
தர்மபுரி	ஒகேனக்கல்
திருநெல்வேலி	கல்யாண தீர்த்தம் மற்றும் குற்றாலம்
தேனி	கும்பக்கரை மற்றும் சுருளி
நாமக்கல்	ஆகாய கங்கை
நீலகிரி	கேத்தரின், பைக்காரா
சேலம்	கிள்ளியூர்
விருதுநகர்	ஐயனார்
கோயம்புத்தூர்	வைதேகி, செங்குபதி, சிறுவாணி மற்றும் கோவை குற்றாலம்
திருப்பூர்	திருமூர்த்தி
மதுரை	குட்லாடம்பட்டி
கன்னியாகுமரி	திருப்பரப்பு, காளிகேசம், உலக்கை மற்றும் வட்டப்பாறை

- வால்பாறைக்கு அருகிலுள்ள சின்னக்கல்லார் என்பது தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் பகுதியாகவும், இந்தியாவின் மூன்றாவது அதிக மழை பெறும் பகுதியாகவும் உள்ளது.

10.2.3 பீடபூமிகள்

- தமழ்நாட்டிலுள்ள பீடபூமி மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது. ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் சுமார் 6,0000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இதன் உயரம் கிழக்கிலிருந்து மேற்காக உயர்ந்து செல்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து 150 மீட்டர் முதல் 600 மீட்டர் உயரம் வரை வேறுபட்டுக் காணப்படுகிறது. இது வடக்கே அகன்றும் தெற்கே குறுகியும் பல உட்பிரிவுகளைக் கொண்டும் உள்ளது.

https://t.me/tnpscfree

1) பாரமஹால் பீடபூமி

- தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் "பாரமஹால் பீடபூமியானது" மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும். இதன் உயரம் சுமார் 350 மீட்டர் முதல் 710 மீட்டர் வரை காணப்படுகிறது. இந்தப் பீடபூமியில் தர்மபரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

2) கோயம்புத்தூர் பீடபூமி

- இப்பீடபூமியானது நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது. இதன் உயரம் 150 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை மாறுபடுகிறது. இப்பீடபூமி சேலம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.
- இதன் பரப்பளவு சுமார் 2,560 சதுர கிலோமீட்டர்களாகும். மோயர் ஆறு இப்பீடபூமியை மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கிறது.
- மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இப்பீடபூமியில் பள்ளத்தாக்குகளை உருவாக்கி உள்ளன. நீலகிரி பகுதிகளில் பல மலையிடை பீடபூமிகள் காணப்படுகின்றன. சிகூர் பீடபூமி அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

3) மதுரை பீடபூமி

- இப்பீடபூமி, மதுரை மாவட்டத்தில் காணப்படுகிறது. இது மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரை நீண்டுள்ளது. வைகை மற்றும் தாமிரபரணி வடிநிலப் பகுதிகள் இப்பகுதியில் அமைந்துள்ளன.

10.2.4 சமவெளிகள்

தமிழ்நாட்டில் காணப்படும் சமவெளிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. உள்நாட்டு சமவெளிகள்
2. கடற்கரை சமவெளிகள்

1.உள்நாட்டு சமவெளிகள்

- பாலாறு, பெண்ணையாறு, காவிரி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகள் உள்நாட்டு சமவெளிகளை உருவாக்கியுள்ளது. காவிரியாற்றுச் சமவெளி தமிழ்நாட்டிலுள்ள வளமான சமவெளிகளுள் ஒன்றாகும். காவிரி சமவெளியானது சேலம், ஈரோடு கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில பரவியுள்ளது.

2. கடற்கரை சமவெளிகள்

- தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) எனவும் அழைக்கப்படுகிறது.
- இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இச்சமவெளி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கபபட்டுள்ளது.

- இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் 'தேரி' என்று அழைக்கப்படுகிறது.
- கிழக்குக் கடற்கரைச் சமவெளிப் பகுதியில் உள்ள மன்னார்வளைகுடாவில் பவளப்பாறைகள் காணப்படுகின்றன.

கடற்கரைகள்

- வங்காள விரிகுடாக் கடலையொட்டிய சோழமண்டலக் கடற்கரை பல அழகான மற்றும் சிறப்பு வாய்ந்த கடற்கரைகளைக் கொண்டுள்ளது தமிழ்நாட்டில் தங்க மணல் கடற்கரை பகுதியில் பனைமரங்களும், சவுக்குத் தோப்புகளும் பரவலாகக் காணப்படுகின்றன.
- சென்னையின் மெரினா மற்றும் எலியாட் கடற்கரைகளும் கன்னியாகுமரியின் கோவளம் மற்றும் வெள்ளி கடற்கரைகளும் புகழ்பெற்ற தமிழக கடற்கரைகளாகும்.

மெரினா கடற்கரை

- மெரினா கடற்கரையானது உலகின் இரண்டாவது மிக நீளமான கடற்கரை
- மெரினா கடற்கரையானது சுமார் 13 கிலோமீட்டர் நீளம் வரை பரவியுள்ளது. இது சென்னை நகரின் முக்கிய சுற்றுலாத் தளங்களுள் ஒன்றாகும்.

இராமேஸ்வரம் கடற்கரை

- அழகிய கடல்நிலத் தோற்றங்களுக்கும், அலையில்லாக் கடற்பரப்பிற்கும் இக்கடற்கரை புகழ்பெற்றதாகும்.
- இங்கு கடல் அலைகள் 3 சென்டி மீட்டருக்கு மிகாத அளவிற்கு எழும்புவதால் இது பார்ப்பதற்கு ஓர் மிகப்பெரிய ஏரி போன்ற தோற்றத்தை அளிக்கிறது.

10.2.5 வடிகாலமைப்பு

- ஆறுகள் தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாகும். தமிழ்நாட்டில் பல ஆறுகள் காணப்பட்டாலும் காவிரி, பாலாறு, பெண்ணை, வைகை மற்றும் தாமிரபணி போன்ற ஆறுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.
- தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.
- தாமிரபரணி ஆற்றைத் தவிர மற்ற ஆறுகள் அனைத்தும் வற்றும் ஆறுகளாகும்.
- தாமிரபரணி தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழை காலங்களிலும் மழைபெறுவதால் வற்றாத ஆறாக உள்ளது.

1) காவிரி

- காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க மாவட்டத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் சுமார் 416 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாய்கிறது.

https://t.me/tnpscfree

- இது கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றிற்கு இடையே சுமார் 64 கிலோ மீட்டர் தூரத்திற்கு எல்லையாக உள்ளது.
- தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
- மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் பவானி ஆறு இதன் துணையாறாக வலதுகரையில் காவிரியுடன் இணைகிறது.
- பின்னர் கிழக்கு நோக்கிப் பாய்ந்து தமிழ்நாட்டின் சமவெளிப்பகுதிக்குள் நுழைகிறது. கரூரில் இருந்து 10கி.மீ தொலைவிலுள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் வலதுகரையில் மேலும் இரண்டு துணை ஆறுகளான அமராவதி மற்றும் நொய்யல் ஆறுகள் இணைகின்றன.
- இப்பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதால், இது "அகன்ற காவிரி" என அழைக்கப்படுகிறது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது.
- வடகிளை கொலேருன் அல்லது கொள்ளிடம் என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது. இவ்விடத்திலிருந்து காவிரி டெல்டா சமவெளி தொடங்குகிறது. சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவிற்கு பாய்ந்த பின் மீண்டும் இவ்விரு கிளைகள் இணைந்து 'ஸ்ரீரங்கம் தீவை' உருவாக்குகின்றன.
- 'கிராண்ட் அணைகட்' என்றழைக்கப்படும் கல்லணை காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த ஆறு கல்லணையைக் கடந்த, பின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கி உள்ளது.
- காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப்பின்னல் அமைப்பு 'தென்னிந்தியாவின் தோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. பின்னர் கடலூருக்கு தெற்கே வங்க கடலில் கலக்கிறது.

- தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், கரூர், திருச்சி ஆகிய 8 மாவட்டங்களை உள்ளடக்கியது.
- காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க 'நடந்தாய் வாழி காவேரி' திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

2) பாலாறு

- பாலாறு கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் தலகவரா கிராமத்திற்கு அப்பால் உற்பத்தி ஆகிறது. இது சுமார் 17,871 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பாய்கிறது. இதில் 57% தமிழகத்திலும் மீதிமுள்ள பகுதிகள் கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் உள்ளன.

- பொன்னி, கவுண்டினியா நதி, மலட்டாறு, செய்யாறு மற்றும் கிளியாறு ஆகியன பாலாற்றின் துணை ஆறுகளாகும்.
- இவ்வாற்றின் மொத்த நீளம் 348 கிலோமீட்டர் ஆகும். இதில் 222 கி.மீ தொலைவு தமிழ்நாட்டில் பாய்கிறது.
- இது வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து, கூவத்தூருக்கு அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

3) தென்பெண்ணையாறு / தென்பொருணையாறு

- இது கிழக்கு கர்நாடாகாவின் நந்தி துர்கா மலைகளின் கிழக்கு சரிவுகளிலிருந்து உருவாகிறது. இதன் வடிநிலப்பரப்பு சுமார் 16019 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 77% தமிழ்நாட்டில் உள்ளது.
- கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் வழியாக தென்கிழக்கு திசையில் சுமார் 247 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்நதி பாய்கிறது.
- கெடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு அருகில் பிரிகிறது.
- கெடிலம் ஆறு கடலூருக்கு அருகிலும் பெண்ணையாறு புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அருகிலும் வங்கக் கடலில் கலக்கின்றன.
- சின்னாறு, மார்க்கண்ட நதி, வாணியாறு மற்றும் பாம்பன் ஆறு ஆகியன முக்கிய துணை ஆறுகளாகும்.
- இந்த ஆறு உற்பத்தியாகும் இடங்களில் கனமழை காரணமாக திடீர், குறுகிய கால வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்துகிறது.
- இது தமிழ்நாட்டின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாக உள்ளது. ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பெண்ணையாறு இந்து சமய மக்களால் புனித நதியாகக் கருதப்படுகிறது. மேலும் தமிழ் மாதமான தை மாதத்தில் இந்த ஆற்றுப் பகுதியில் (ஜனவரி, பிப்ரவரி) பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

4) வைகை

- வைகையாறு தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள வருச நாட்டு குன்றுகளின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிறது. இதன் வடிநிலம் சுமார் 7,741 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டது.
- இப்பரப்பளவு முழுவதும் தமிழகத்தில் அமைந்துள்ளது. இது மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியாகப் பாய்கிறது. இதன் மொத்த நீளம் சுமார் 258 கிலோ மீட்டராகும்.

https://t.me/tnpscfree

- இவ்வாற்றின் நீரானது இராமநாதபுரத்தின் பெரிய ஏரி மற்றும் பல சிறிய ஏரிகளில் நிரப்பப்பட்டு பின் ஏரிகளிலிருந்து வெளியேறும் உபரி நீரானது இராமநாதபுரம் அருகில் உள்ள பாக் நீர்ச் சந்தியில் கலக்கிறது.

5) தாமிரபரணி

- தாமிரபரணி எனும் பெயர் தாமிரம் (காப்பர்) மற்றும் வருணி (சிற்றோடைகள்) என்பதிலிருந்து பெறப்பட்டது. இவ்வாறுகளில் கரைந்திருக்கும் செம்மண் துகள்கள் காரணமாக இந்நதியின் நீரானது செந்நிறத் தோற்றத்துடன் காணப்படுகிறது.
- தாமிரபரணி, அம்பாசமுத்திரம் வட்டம் பாபநாசத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் பொதிகை மலை முகடுகளில் தோன்றுகிறது.
- இவ்வாற்றின் தோற்றம் அகத்திய முனிவரோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.
- திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்ந்து இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராமநதி ஆகியன இதன் முக்கிய துணை ஆறுகளாகும்.

> • பாம்பன், முயல்தீவு, குருசடை, நல்லதண்ணி தீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்புதண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகியன தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தீவுகள் ஆகும்.

10.3 காலநிலை

- கடகரேகை இந்தியாவை இரு சமபாகங்களாகப் பிரிப்பதையும், தமிழ்நாடு கடகரேகைக்கு தெற்கேயும் பூமத்தியரேகைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது.
- சூரியனின் செங்குத்து கதிர்களினால் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் அதிக அளவில் காணப்படுகிறது.
- தமிழகம் வெப்பமண்டல காலநிலை மண்டலத்தில் அமைந்திருந்தாலும் கிழக்கு கடற்கரைப்பகுதி வெப்பமண்டல கடல் காலநிலையைப் பெறுகிறது.
- இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக்கடல் இரண்டும் கடற்கரையோர காலநிலையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.
- தமிழ்நாட்டின் வெப்பநிலை 18°C முதல் 43°C வரையிலும் அதன் சராசரி மழை அளவு 958.5 மி.மீட்டராகவும் உள்ளது.
- இக்காலநிலை நீலகிரி மலை, ஆனைலை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் நிலவுகிறது. அடர்ந்த காடுகள் மற்றும் உயரம் ஆகியவை இப்பகுதிகளில் இதமான குளிர் காலநிலையைத் தருகிறது.
- இக்காலநிலை நிலவும் மலை வாழிடங்கள் கோடை பருவத்தில் ஆயிரக்கணக்கான மக்களை ஈர்க்கின்றன. ஆனால் தமிழகத்தின் மத்திய பகுதிகள் குறைந்த உயரமும் கடலிலிருந்து விலகியும் இருப்பதால் அதிக வெப்பநிலை மற்றும் வறண்ட காலநிலை நிலவுகிறது.

- சூரியனின் செங்குத்துக் கதிர்களின் இடப்பெயர்வால் தமிழகத்தில் பல்வேறு பருவகாலங்கள் உருவாகின்றன. அவை:

10.3.1 குளிர்காலம்

- ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சூரியனின் செங்குத்துக்கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே விழுகிறது. இக்காலத்தில் தமிழ்நாடு உள்பட இந்தியா முழுவதும் சாய்வான சூரிக்கதிர்களைப் பெறுகின்றன. ஆதலால் இம்மாதங்களில் காலநிலை சற்று குளிராகக் காணப்படுகிறது.
- கோடைக்காலம் மற்றும் குளிர்காலத்திற்கு இடையேயான வெப்பநிலை வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. தமிழகத்தில் குளிர்கால வெப்பநிலையானது 15°C முதல் 25°C வரை மாறுபடுகிறது.
- இருந்தபோதிலும் மலைவாழிடங்களில் குளிர்கால வெப்பநிலையானது சில நேரங்களில் 5°C க்கும் குறைவாக உள்ளது. நீலகிரியில் சில பள்ளத்தாக்குகளில் வெப்பம் 0°C ஆகவும் பதிவாகிறது.
- இக்குறைந்த வெப்பநிலை அடர் மூடுபனி உருவாகக் காரணமாகிறது. இப்பருவத்தில் வறண்ட வானிலையே நிலவுகிறது.

10.3.2 கோடைக்காலம்

- சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிகழ்வதால் சூரியனின் செங்குத்துக் கதிரானது தென்னிந்தியாவில் விழுகிறது. ஆகையால் பூமத்திய ரேகையிலிருந்து வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிக்கிறது.
- தமிழகம், கடகரேகைக்கு தென்பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றது.
- பொதுவாக வெப்பநிலையானது 30°C லிருந்து 40°C வரை வேறுபடுகிறது. இப்பருவத்தில் குறிப்பாக மே மாதத்தில் தமிழகத்தின் தென்பகுதி முன் பருவமழை மூலமும், வெப்பசலனம் மூலமும் மழையைப் பெறுகிறது.

10.3.3 தென்மேற்கு பருவக்காற்று

- மார்ச் முதல் மே மாதம் வரை சூரியனின் செங்குத்து கதிர்களால் வடஇந்திய நிலப்பரப்பு அதிக வெப்பத்தைப் பெறுகிறது. இதனால் வடஇந்திய பகுதிகளில் குறைந்த அழுத்தம் உருவாகிறது. இச்சமயம் காற்றானது அதிக காற்றழுத்தம் உள்ள இந்தியப் பெருங்கடலிலிருந்து வடக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்கு பருவக்காற்று உருவாக காரணமாகிறது.
- இப்பருவத்தில் அரபிக் கடலிலிருந்து வீசும் தென்மேற்கு பருவகாற்றின் மழைமறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக் குறைவான மழைப்பொழிவையேப் பெறுகிறது.
- இப்பருவத்தின் மழைப் பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது. கோயம்புத்தூர் பீடபூமி சராசரியாக 50 செ.மீ மழையைப் பெறுகிறது. எனினும் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. மாநிலத்தின் கிழக்குப் பகுதிகள் மிகக் குறைவாக மழை அளவைப் பெறுகின்றன.

https://t.me/tnpscfree

10.3.4 வடகிழக்கு பருவக்காற்று

- வடகிழக்கு பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் மாதத்தின் முதல் பாதி வரை நீடிக்கிறது.
- மத்திய ஆசியா மற்றும் வட இந்திய பகுதிகளில் உருவாகும் அதிக அழுத்தம், வடகிழக்கு பருவக்காற்று உருவாக காரணமாகிறது.
- இப்பருவத்தில் சூரியன் கடகரேகையிலிருந்து மகர ரேகைக்குச் செல்வதால் வெப்பநிலை மற்றும் காற்றழுத்தத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வட இந்தியாவிலிருந்து வங்கக் கடலை நோக்கி காற்று வீசுகிறது.
- வங்கக் கடலை வந்தடையும் போது இக்காற்று கொரியாலிஸ் விசை காரணமாக (பூமியின் சுழற்சியால் ஏற்படும் விசை) திசை விலக்கப்பட்டு வடகிழக்கு திசையிலிருந்து வீசுகிறது. ஆகையால் இக்காற்று வடகிழக்கு பருவக் காற்று என்று அழைக்கப்படுகிறது.
- வடகிழக்கு பருவக் காற்றானது திரும்பிவரும் தென் மேற்கு பருவக் காற்றின் ஒரு பகுதியாதலால் இக்காற்றை 'பின்னடையும் பருவக்காற்று' என்றும் அழைப்பர். இப்பருவம் தமிழ்நாட்டின் மழைக்காலமாகும்.
- தமிழ்நாட்டின் வருடாந்திர மழையவில் 48% இப்பருவத்தில் கிடைக்கிறது இப்பருவத்தில் கடற்கரை மாவட்டங்கள் 60 சதவீதமும் உள்மாவட்டங்கள் 40 முதல் 50 சதவீதம் வரையிலான வருடாந்திர மழையையும் பெறுகின்றன.
- பொதுவாக இப்பருவத்தில் வெப்ப மண்டல சூறாவளிகள் உருவாகின்றன. வங்கக் கடலில் உருவாகின்ற சூறாவளிகள் தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மிக கனத்த மழையைத் தோற்றுவிக்கின்றன.
- தமிழ்நாட்டின் 5 சதவிகித மழை, வெப்ப மண்டல சூறாவளி மூலம் கிடைக்கிறது. இப்பருவத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் 100 முதல் 200 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. மத்திய மற்றும் வடமேற்கு தமிழகம் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன.
- இக்சூறாவளி காற்றுகள் சில நேரங்களில் பயிர்கள், உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துகின்றன.

- கொரியாவின் விசை என்பது பூமியின் சுழற்சியின் காரணமாக நகரும் அல்லது இயங்கும் பொருட்களை (உந்தி வீசப்பட்ட பொருட்கள் மற்றும் காற்றோட்டம்) வட அரைக்கோளத்தில் வலது புறமாகவும், தென் அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும், திசைகளை மாற்றியமைக்கும் விசை ஆகும்.

10.3.5 தமிழகத்தின் வேளாண் காலநிலை மண்டலங்கள்

எண்	வேளாண் காலநிலை மண்டலங்கள்	மாவட்டங்கள்	மண் வகைகள்
1	வடகிழக்கு மண்டலம்	காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை	மன்றசாரி மண், களிமண், கரையோர உவர் வண்டல் மண்
2	வட மேற்கு மண்டலம்	தர்மபுரி, சேலம், நாமக்கல்	சுண்ணாம்பு மண்
3	மேற்கு மண்டலம்	ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், நாமக்கல், திண்டுக்கல், தேனி	செம்மண், கரிசல் மண்
4	காவிரி டெல்டா மண்டலம்	திருச்சி, பெம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூரின் சில பகுதிகள்	செம்மண், வண்டல் மண்
5	தென் மண்டலம்	மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி	கரையோர வண்டல் மண், செம்மண்
6	அதிக மழை பெழியும் மண்டலம்	கன்னியாகுமரி	கரையோர உவர் வண்டல் மண்,செம்மண்
7	மலை மண்டலம்	நீலகிரி மற்றும் கொடைக்கானல்	மலை மண்

மூலம்: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

10.4 தமிழ்நாட்டின் மண் வகைகள்

- மண் என்பது வானினலைச் சிதைவு மற்றும் அரிப்பினால் பாறைகள் சிதைந்து உருவாகும் துகள்களாகும். இது வேளாண்மைக்கு முக்கிய கூறாக அமைகிறது. இது தாவரங்களின் வளர்ச்சிக்கு அவசியமான கனிமங்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை அளிக்கிறது.
- மண் உலகின் இன்றியமையாத மற்றும் புதுப்பிக்க இயலாத வளமாகும். இரண்டு அங்குல வளமான மண் உருவாக 300 முதல் 1000 ஆண்டுகளாகின்றன.
- மண்ணின் தன்மையானது அப்பகுதியில் நிலவும் காலநிலை, தாய்ப் பாறைகள் மற்றும் தாவர மூட்டம் போன்ற காரணிகளைச் சார்ந்துள்ளது.
- தமிழ்நாட்டில் காணப்படும் மண்களை அதன் தன்மைகளைக் கொண்டு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை 1. வண்டல் மண் 2. கரிசல் மண் 3. செம்மண், 4. சரளை மண் மற்றும் 5. உவர் மண்.

https://t.me/tnpscfree

10.4.1 வண்டல் மண்

- வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றன. சுண்ணாம்புச் சத்து, பொட்டாசியம், மெக்னீசியம், நைட்ரஜன் மற்றும் பாஸ்பாரிக் அமிலம் ஆகிய தாதுக்களைக் கொண்டுள்ளதால் வண்டல் மண் ஒரு வளம்மிகுந்த மண்ணாகும்.
- இம்மண்ணில் நைட்ரஜன் மற்றும் இலைமக்குகள் குறைவாக உள்ளன. இது நுண்துளைகள் மற்றும் களிமண் கலந்த மண் ஆகும். நெல், கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் போன்ற பயிர்கள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன.
- தமிழ்நாட்டின் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.
- தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வகை மண் அதிகம் காணப்படுகிறது. சில உள் மாவட்டங்களின் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் சிறிய அளவில் இவை காணப்படுகிறது.

10.4.2 கரிசல் மண்

- தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் கரிசல் மண் உருவாகிறது. இது ரீகர் மண் (Regur soil) என்றும் அழைக்கப்படுகிறது.
- இம்மண்ணில் பருத்தி நன்கு வளர்வதால் பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது. தக்காண லாவா பீடபூமி பகுதிகளில் அரை வறண்ட காலநிலையில் இம்மண் உருவாகிறது. இம்மண் மிக நுண்ணிய துகள்களைக் கொண்ட களி மண்ணால் ஆனது.
- இவற்றில் பாஸ்பாரிக் அமிலம், ஹைட்ரஜன் மற்றும் உயிரின பொருட்களின் சத்து குறைவாக உள்ளது. கால்சியம், மக்னீசியம், கார்பனேட், பொட்டாஷ் மற்றும் சுண்ணாம்பு சத்துக்கள் அதிக அளவில் காணப்படுகிறது. பருத்தி, கம்பு, சோளம் மற்றும் கால்நடைத் தீவணங்கள் போன்ற முக்கிய பயிர்கள் கரிசல் மண்ணில் பயிரிடப்படுகின்றன.
- கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரிசல் மண் பெருமளவில் காணப்படுகிறது.

10.4.3 செம்மண்

- தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு செம்மண் பரவியுள்ளது. இவை குறிப்பாக மாநிலத்தின் மத்திய மாவட்டங்களில் காணப்படுகின்றன.
- இம்மண் மணல் மற்றும் களிமண் கலந்த தன்மை உடையது. இருப்பினும் இம்மண்ணின் தன்மைகள் அவை உருவாகும் விதம், மண் உருவான காலநிலை ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.
- செம்மண் நுண் துகள்களை உடையதால் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும் தன்மையை பெறவில்லை.

- இரும்பு ஆக்சைடுகள் அதிகளவில் காணப்படுவதால் செம்மண் சிவப்பு நிறத்துடன் காணப்படுகிறது. நைட்ரஜன், பாஸ்பரஸ், அமிலம் மற்றும் இலைமக்கு சத்துகள் இம்மண்ணில் குறைவாகக் காணப்படுகின்றன.
- நெல், கேழ்வரகு, புகையிலை மற்றும் காய்கறிகள் ஆகியன இம்மண்ணில் பயிரிடப்படும் முக்கிய பயிர் வகைகளாகும். உரங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளுடன் இம்மண்ணில் அனைத்து வகை பயிர்களையும் பயிரிடலாம்.
- இம்மண் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது.

10.4.4 சரளை மண்

- சரளை மண்ணானது அதில் கரைந்துள்ள சத்துக்கள் அடித்து செல்லப்படுவதால் உருவாகிறது. இவை ஒரு வளமற்ற மண்ணாகும்.
- காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும், நீலகிரி மலையின் சில பகுதிகளிலும் இம்மண் காணப்படுகின்றது.
- நெல், இஞ்சி, மிளகு மற்றும் வாழை ஆகியன இம்மண்ணில் விளைகின்றன. தேயிலை மற்றும் காபி பயிரிடுவதற்கும் இம்மண் ஏற்றதாக உள்ளது.

10.4.5 உவர் மண்

- தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரை பகுதிகளில் மட்டுமே இம்மண் காணப்படுகிறது. வேதாரண்யப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உவர் மண் காணப்படுகிறது.
- டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட சுனாமி அலைகள் அதிக அளவு மணல் படிவுகளை தமிழக கடற்கரைப் பகுதிகளில் படிய வைத்துள்ளன. இதனால் கடற்கரையில் சிலபகுதிகள் பயிரிட உகந்ததாக இல்லை.
- மண் ஒரு புதுப்பிக்க இயலாத வளமாகும். மண் அரிப்பு ஒரு முறை ஏற்படின் அவற்றை புதுப்பிப்பது எளிதான செயல் அல்ல.
- காடுகள் அழிப்பு, அதிக மேய்ப்பு, நகரமயமாக்கம், அதிக மழைப்பொழிவு ஆகியன மண் அரிப்பின் முக்கிய காரணங்களாகும். மண் அரிப்பு மண்வளத்தை குறைத்து, விளைச்சலைக் குறைக்கிறது. எனவே மண்வளத்தை பாதுகாக்க அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

- தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று பாலைவனமாதலாகும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த பாலைவனமாதல் நிலவரைபடத்தின்படி மொத்த நிலப்பரப்பில் சுமார் 12 சதவீத நிலப் பகுதி பாலைவனமாதல் மற்றும் நில சீரழிவுடையதாதல் என்ற இருநிலைகள் கண்டறியப்பட்டுள்ளது.
- தேனி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் இவற்றினால் பாதிப்புக்குள்ளாகின்ற பகுதிகளாகும். தேனி மற்றும் இராஜபாளையம் பகுதிகளில் சுமார் 1,2000 ஹெக்டேர் (120 சதுர கிலோ மீட்டர்) நிலம் காற்றடி மணல் படிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

10.5 இயற்கைத் தாவரங்கள்

- இயற்கை தாவரம் என்பது புவுயில் இயற்கையாக வளரும் தாவரங்களின் தொகுப்பாகும். நிலத்தோற்றம், மண்ணின் தன்மை, வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு ஆகியவை இயற்கை தாவரங்களின் பரவலை கட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.
- 1988 தேசிய வனக்கொள்கையின்படி, புவிப் பரப்பில் குறைந்தபட்ம் மூன்றில் ஒரு பகுதி காடுகளால் சூழப்பட்டு இருக்க வேண்டும்.
- தமிழ்நாட்டில் மொத்த காடுகளின் பரப்பளவு இவற்றைவிடமிக குறைவாகும். 2017ஆம் ஆண்டு மாநில வன அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் பரப்பளவு 26.281 ச.கி. மீட்டர்களாகும். இது மொத்த பரப்பளவில் 20.21 சதவீதமாகும்.
- இந்தியாவில் உள்ள காடுகளில் தமிழகத்தின் பங்களிப்பு 2.99 சதவீதமாகும். ஈரப்பத பசுமைமாறா காடுகளிலிருந்து புதர் காடுகள் வரை தமிழ்நாட்டின் காடுகள் வேறுபடுகின்றன.
- இந்திய மாநில வனங்கள் அறிக்கை 2019-ன் படி, தமிழ்நாட்டில் வனப்பரப்பு 2017-ஆம் ஆண்டைவிட 83.02 சதுர கிலோமீட்டர் அதிகரித்துள்ளது.
- மேற்கு தொடர்ச்சி மலையானது உலகின் 25 உயிரினப்பன்மை செறிந்த பகுதிகளில் ஒன்றாகவும் இந்தியாவின்ன தனிச்சிறப்பு வாய்ந்த உயிரினங்களைக் கொண்ட மூன்று பகுதிகளுள் ஒன்றாகவும் திகழ்கிறது. இந்திய வனச்சட்டத்தின்படி அமைந்த காடுகளின் வகைப்பாடு கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

காடுகளின் வகைகள்	பரப்பளவு (ச.கி.மீ)
ஒதுக்கப்பட்ட காடுகள்	19,459
பாதுகாக்கப்பட்ட காடுகள்	1,782
வரையறுக்கப்படாத காடுகள்	1,266
மொத்தம்	22,507

10.5.1 வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்

- இவ்வகைக்காடுகள் அதிக மழைப்பெறும் பகுதிகளால் காணப்படுகின்றன இவை அடர்ந்த மற்றும் மரக்கிளை அடுக்குகள் கொண்டதாக காணப்படுகின்றன.
- திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவுகளில் இவை காணப்படுகிறது.
- இலவங்க மரம், மலபார், கருங்காலி மரம், பனாசமரம், ஜாவாபிளம், ஜமுன், பலா மருது, அயனி, கிராப் மிர்ட்டல் போன்றவை இக்காடுகளில் காணப்படும் முக்கிய மர வகைகளாகும்.
- அரை பசுமைமாறா வகைக் காடுகளானது உப அயனமண்டலக் காலநிலை நிலவும் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படுகிறது.

- சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை ஆகியன இவ்வகை காடுகள் காணப்படும் முக்கிய பகுதிகள் ஆகும்.
- இந்திய மகோகனி, குரங்கு தேக்கு, உல்லி காசியா, பலா மற்றும் மா மரங்கள் ஆகியன இப்பகுதியில் காணப்படும் முக்கிய மரங்களாகும்.

10.5.2 மித வெப்ப மண்டல மலைக்காடுகள்

- இவ்வகை காடுகள் ஆனைமலை, நீலகிரி மற்றும் பழனி மலைகளில் சுமார் 1,000 மீட்டர் உயரமான பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் காணப்படுகின்றன. இவ்வகை காடுகள் சோலாஸ் (Sholas) எனவும் அழைக்கப்படுகிறது.
- இவ்வகை காடுகளில் மரங்கள் பொதுவாக குறைந்த உயரத்துடன் பசுமையாகக் காணப்படுகின்றன.
- பொதுவாக நீலகிரி, சாம்பா, வெள்ளைலிட்சா, ரோஸ்ஆப்பிள் போன்ற மரங்கள் இக்காடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

10.5.3 வெப்பமண்டல இலையுதிர்க்காடுகள்

- இவ்வகைக்காடுகள் பசுமைமாறாக்காடுகள் மற்றும் அரை பசுமைமாறா காடுகளின் விளிம்புப்பகுதிகளில் காணப்படுகின்றன.
- இக்காடுகளில் உள்ள மரங்கள் கோடை பருவங்களில் தங்களது இலைகளை உதிர்த்து விடுகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்கள் 30 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியன.
- பருத்திப்பட்டு மரம், இலவம், கடம்பா, டாகத் தேக்கு, வாகை, வெக்காளி மரம் மற்றும் சிரஸ் போன்றவை இங்கு காணப்படும் முக்கிய மர வகைகளாகும்.
- மூங்கில்களும், இக்காடுகளில் காணப்படுகின்றது. இக்காடுகளில் காணப்படும் சில மரவகைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

10.5.4 மாங்குரோவ் காடுகள்

- இவ்வகைக்காடுகள் கடலோரப்பகுதிகள், ஆற்றின் டெல்டா பகுதிகள், தீவுகளின் கடைப்பகுதிகள், மற்றும் ஆற்று முகத்துவாரங்களில் காணப்படுகின்றன.
- பொதுவாக இத்தாவரங்கள் பசுமையானதாகவும் மிதமான உயரம் உடையதாகவும் தோல் போன்ற இலைகளுடனும் காணப்படுகின்றன.
- இவ்வகை தாவரங்கள் உவர் நிலங்கள மற்றும் உவர் நீரில் வாழும் தன்மையுடையவை.
- ஆசிய மாங்குரோவ், வெள்ளை மாங்குரோவ், காட்டுமல்லி இந்தியன் ப்ரிவெட் மரங்கள் போன்றவை இங்கு வளரும் குறிப்பிடத்தக்க மரங்களாகும்.
- பிச்சாவரம், வேதாரண்யம், முத்துப்பேட்டை, சத்திரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் இக்காடுகள் அமைந்துள்ளன.

https://t.me/tnpscfree

- கடல் பாதுகாப்பு மேலாண்மையில், சதுப்புநிலத் தாவரங்களின் பங்கு: கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பிலிருந்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கின்றது. மேலும் பவளப்பாறைகளையும், கடலோர புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கின்றது.
- பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகே அமைந்துள்ளது. இது 1,100 ஹெக்டேர் பரப்பளவுடன் (11 சதுர கிலோமீட்டர்) உலகின் இரண்டாவது மிகப் பெரிய சதுப்பு நிலக்காடாக உள்ளது.
- வங்க கடலிலிருந்து மணல் திட்டுகளால் இக்காடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இது அவிசீனியா மற்றும் ரைசோபோரா போன்ற தாவர இடங்களைக் கொண்டது. மேலும் இவை பல அரிய வகை கிளிஞ்சல்கள் மற்றும் துடுப்பு மீன்கள் நிறைந்ததாகவும் உள்ளது.

10.5.5 வெப்பமண்டல முட்புதர்க்காடுகள்

- தமிழ்நாட்டில் மிகக்குறைவான மழை பெரும்பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகள் சமவெளியில் இருந்து 400 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.
- பனை, வேம்பு, கருவேலம், வெள்ளைக்கருவேலம், சீமைக்கருவேலம் ஆகியவை இவற்றில் பொதுவாக காணப்படும் மரங்களாகும்.
- இவற்றில் புதர்செடிகளும் அதிகமாக காணப்படும். தர்மபுரி, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் பிற மாவட்டங்களின் சில பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

10.6 வன உயிரினங்கள்

- காடுகளில் வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளை வனவிலங்குகள் என்கிறோம். பல்வேறு வகையான வன விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகியன தமிழ்நாட்டில் உள்ளன.
- யானைகள், காட்டு எருமைகள், புலிகள், மான்கள் மற்றும் குரங்குகளுக்கு இக்காடுகள் ஒரு சிறந்த அடைக்கலமாக உள்ளன. வனவிலங்குகளைப் பாதுகாக்க பல்வேறு வனவிலங்குகள் சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.
- மாநிலத்தில் உள்ள மலைச்சரிவுகள் பல்வேறு வனவிலங்குகளும், தாவரங்களும் வாழ்வதற்கேற்ற சிறந்த சூழலைக் கொண்டுள்ளன.
- தமிழ்நாட்டில் அமைந்துள்ள வனவிலங்கு சரணாலயங்கள் தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்க்கோள பெட்டகங்கள் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

எண்	தமிழ்நாட்டிலுள்ள உயிர்க்கோளப் பெட்டகங்கள்
1	நீலகிரி உயிர்க்கோளப் பெட்டகம்
2	மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பெட்டகம்
3	அகத்தியர் மலை உயர்க்கோள்ப் பெட்கம்

எண்	வனவிலங்கு சரணாலயங்கள்	மாவட்டம்
1	முதுமலை வனவிலங்கு சரணாலயம்	நீலகிரி
2	முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம்	திருநெல்வேலி
3	கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்	நாகப்பட்டினம்
4	இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயம்	கோயம்புத்தூர்
5	களக்காடு வனவிலங்கு சரணாலயம்	திருநெல்வேலி
6	வளநாடு கருப்பு மான்கள் சரணாலயம்	தூத்துக்குடி
7	மலை அணில் வனவிலங்கு சரணாலயம்	விருதுநகர்
8	கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயம்	கன்னியாகுமரி
9	சத்தியமங்கலம் வனவிலங்கு சரணாலயம்	ஈரோடு
10	மேகமலை வனவிலங்கு சரணாலயம்	தேனி மற்றும் மதுரை
11	கோடியக்கரை வனவிலங்கு பாதுகாப்பகம் மண்டலம் (அ) மண்டலம் (ஆ)	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்
12	கொடைக்கானல் வனவிலங்கு சரணாலயம்	திண்டுக்கல் மற்றும தேனி
13	கங்ககொண்டான் புள்ளிமான் சரணாலயம்	திருநெல்வேலி
14	வட காவிரி வனவிலங்கு சரணாலயம்	தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி
15	நெல்லை வனவிலங்கு சரணாலயம்	திருநெல்வேலி

எண்	பறவை சரணாலயங்கள்	மாவட்டம்	நிறுவப்பட்ட ஆண்டு
1	வேட்டங்குடி பறவைகள் சரணாலயம்	சிவகங்கை	1977
2	பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம்	திருவள்ளுவர்	1980
3	கரிக்கிளி பறவைகள் சரணாலயம்	காஞ்சிபுரம்	1989
4	கஞ்சிராங்குளம் பறவைகள் சரணாலயம்	இராமநாதபுரம்	1989
5	சித்திரங்குடி பறவைகள் சரணாலயம்	இராமநாதபுரம்	1989
6	கூத்தன்குளம், கூடங்குளம் பறவைகள் சரணாலயம்	திருநெல்வேலி	1994

https://t.me/tnpscfree

7	வெள்ளோடு பறவைகள் சரணாலயம்	ஈரோடு	1997
8	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம	காஞ்சிபுரம்	1998
9	உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்	திருவாரூர்	1998
10	மேல் செல்வனூர்-கீழ் செல்வனூர் பறவைகள் சரணாலயம்	இராமநாதபுரம்	1998
11	வடுவூர் பறவைகள் சரணாலயம்	திருவாரூர்	1999
12	காரைவெட்டி பறவைகள் சரணாலயம்	அரியலூர்	2000
13	தீர்த்தங்கள் பறவைகள் சரணாலயம்	இராமநாதபுரம்	2010
14	சக்கர கோட்டை ஏரி பறவைகள் சரணாலயம்	இராமநதபுரம்	2012
15	ஊசுடு ஏரி பறவைகள் சரணாலயம்	விழுப்புரம்	2015

- மாறுபடும் காலநிலைகள், நில அமைப்புகள் மற்றும் பல்வேறு வளங்கள ஆகியவற்றைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதனால் இந்தியாவில் தமிழ்நாடு தனித்துவம் பெற்ற மாநிலமாக திகழ்கிறது. இருக்கின்ற வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தினால், இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானதாகத் திகழும். எனவே இவ்விலக்கை அடைய முயற்சி செய்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

- மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், புலிகள் மற்றும் அவைகளின் வாழ்விடங்களைப் பேணுவதில் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, 2014ஆம் ஆண்டில் 229ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2018ஆம் ஆண்டில் 264-ஆக அதிகரித்துள்ளது.

10.7 தமிழ்நாடு - மானுடப் புவியியல்

- இயற்கை வளங்களாகிய நிலப்பகுதி, ஆறுகள், இயற்கைத் தாவரங்கள், நீர் ஆகியவை பயன்படுத்தினால் மட்டுமே சார்வளங்கள் ஆகும்.
- மானுடப் புவியியல் என்பது மனித சமுதாயம் வளர்ச்சி பெற்ற வழிமுறைகள் மற்றும் இயற்கை சூழலுடனான செயல்பாடுகள் குறித்துக் கற்றறிதல் ஆகும். மனிதர்கள் தங்கள் அறிவு கூர்மை மற்றும் திறன்களால் பல வளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

வேளாண்மை

- "அகீரிகல்சர்" என்ற சொல் இலத்தீன் வார்த்தைகளான "அகர்" மற்றும் "கல்சரா" என்பதிலிருந்து பெற்றப்பட்டது. இதன் பொருள் நிலம் மற்றும் வளர்த்தல் என்பதாகும்.
- வேளாண்மை என்பது விவசாய நடைமுறைகளான பயிர்கள் சாகுபடி, கால்நடை வளர்த்தல், பறவைகள், காடுகள் வளர்த்தல், மீன்பிடித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.
- தமிழ்நாட்டின் முக்கியமான தொழில் வேளாண்மையாகும். இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து 65%-ம் மேற்பட்ட மக்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண் துறையைச் சார்நதுள்ளனர்.

- மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மையே பிரதானமாக இருந்து வருகிறது. மாநிலப் பொருளதாரத்தில் வேளாண்மையின் பங்கு ஏறத்தாழ 21% ஆகும்.
- நிலத்தோற்றம், காலநிலை, மண் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை வேளாண்மை வளர்ச்சியை தீர்மானிக்கும் முக்கிய புவியியல் காரணிகளாகும்.

நீர்ப்பாசனம்

- மாநிலத்தில் பயிர் சாகுபடி சிறப்பாக நடைபெற நீர்ப்பாசனம் மிகவும் இன்றியமையாததாகும். வறண்ட காலங்களில் மானாவாரிப் பயிர்கள் பயிரிடப்படுகிறது.
- கிணறுகள் மற்றும் ஆழ்துறை கிணறுகள் மூலம் நீர்ப்பானம் செய்யும் மொத்த பரப்பு 64% அதனை தொடர்ந்து கால்வாய்கள் 24% மற்றும் ஏரிகள் 14% .

10.7.1 தமிழ்நாட்டின் முக்கிய பயிர்களின் பரவல்

1. உணவு பயிர்கள் :

- நெல் (42.2%), திணை வகைகள் (22%), பருப்பு வகைகள் (20%), எண்ணெய் வித்துக்கள் (9%), கரும்பு (4%) மற்றும் பருத்தி (3%).

1) நெல்

- தமிழகத்தின் மொத்த பயிரிடப்படும் பரப்பு 33% மற்றும் மாநிலத்தின் மொத்த நீர்ப்பாசன பரப்பில் 53% மற்றும் மொத்த உணவு உற்பத்தியில் 62%ன நெல் உள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிர் நெல் ஆகும். பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய நெல் வகைகளாகும்.
- தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்படுகிறது.
- நெல் உற்பத்தி செய்யும் இந்திய மாநிலங்களில் தமிழகம் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதி அதிக நெல் உற்பத்தி செய்யும் பகுதியாகும். பிரிக்கப்படாத தஞ்சாவூர் எனவே இப்பகுதி தமிழ்நாட்டின் 'நெற்களஞ்சியம்' என்றழைக்கப்படுகிறது.

2) திணை வகைகள்

- தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறக்குறை மூன்றில் ஒரு பங்கு பகுதியினரின் முக்கியமான உணவு திணை வகைகளாகும். இவ்வகை பயிர்கள் வறண்ட பிரதேசங்களில் மட்டுமல்லாமல் கடற்கரைச் சமவெளிகளிலும் விளைகின்றன.
- கோயம்புத்தூர் பீடபூமியிலும், கம்பம் பள்ளத்தாக்கிலும் சோளம் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கம்பு பயிரிடப்படுகிறது.

https://t.me/tnpscfree

3) பருப்பு வகைகள்

- பருப்பு வகைகள் புரதச்சத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளன. கொண்டைக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு, துவரம்பருப்பு, தட்டைப்பயறு மற்றும் கொள்ளு ஆகியன தமிழ்நாட்டில் விளையும் முக்கிய பருப்பு வகைகளாகும்.
- சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன.
- வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் துவரம் பருப்பை கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் அதிக அளவில் பச்சைப் பயறு மற்றும் உளுந்து ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தர்மபுரி மாவட்டங்களில் கொள்ளுப் பயிர் கூடுதலாக பயிரிடப்படுகிறது.

பருப்பு உற்பத்தி

- பரப்பு அடிப்படையில் முதலாவது மாவட்டம் – திருவாரூர்
- உற்பத்தி அடிப்படையில் முதலாவது மாவட்டம் – விழுப்புரம்

2. பணப்பயிர்கள்

- பணப்பயிர்கள் என்பன இலாபத்திற்காக வளர்க்கப்படும் வேளாண் பயிர்கள் அவை கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தேங்காய், முந்திரி, மிளகாய், எள், நிலக்கடலை, டீ, காபி, ஏலக்காய் மற்றும் ரப்பர்.

1) எண்ணெய் வித்துகள்

- நிலக்கடலை, எள், ஆமணக்கு, தென்னை, சூரியகாந்தி மற்றும் கடுகு ஆகியன தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகும்.
- உணவுப் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல் தொழிலகங்களில் மசகு எண்ணெய், மெருகு எண்ணெய் பொருட்கள், சோப்பு, மெழுகுவர்த்தி, அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும் இவைப் பயன்படுகின்றன.
- நிலக்கடலை, மாநிலத்தின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராகும். வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தியானது செறிந்து காணப்படுகிறது.
- தர்மபுரி, கடலூர், பெரம்பலூர், மதுரை, ஈரோடு, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இவை சிறிய அளவில் பயிரிடப்படுகிறது.
- கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தென்னை மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.
- மாநிலத்தின் மொத்த எண்ணெய் வித்துகளில் 84% நிலக்கடலை கொண்டுள்ளது.
- 2013-2014 முதல் 2017-18 ஆண்டுகளில் மொத்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 8% அதிகரித்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி

- பரப்பு அடிப்படையில் முதலாவது மாவட்டம் – வேலூர்
- உற்பத்தி அளவில் முதலாவது மாவட்டம் – தஞ்சாவூர்

காரணிகள்

- வெப்பநிலை – 15 முதல் 30°C வரை
- மழைப்பொழிவு – 30-75 செ.மீ
- மண் வகைகள் – களிமண் மற்றும் மணல்

2) கரும்பு

- கரும்பு தமிழ்நாட்டின் முக்கியமான வாணிபப் பயிராகும். இது ஓராண்டு பயிராகும். திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகியன கரும்பு பயிரிடும் மாவட்டங்களாகும்.
- **காரணிகள்:** 21-27°C இடைப்பட்ட வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு தேவைப்படுகிறது மற்றும் வெப்பமண்டல பிரதேசங்களில் நன்கு வளரக்கூடியது. மழைப்பொழிவு : 75 முதல் 100 cm வரை
- இந்தியாவில் கரும்பு உற்பத்தியில் முதன்மையாக உள்ள மாநிலங்கள் மஹாராஷ்டிரா > உத்திர பிரதேசம் > கர்நாடகா > தமிழ்நாடு > பீகார் (இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், ஜனவரி 2020 படி).
- கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி தவிர தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது.
- பிரேசிலுக்கு அடுத்தபடியாக, கரும்பு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- விதைப்பதில் இருந்து அறுவடை வரை இதன் சாகுபடியில் வேலை ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
- இது சர்க்கரை, வெல்லம் மற்றும் வெல்லப்பாகு ஆகியவற்றிற்கு முக்கிய மூலமாகும்.
- சர்க்கரை நிறுவனங்களுக்கான உதவியை விரிவுபடுத்தும் திட்டம் (SEFASU) மற்றும் உயிரி எரிபொருளுக்கான தேசிய கொள்கை ஆகியவை கரும்பு உற்பத்தி மற்றும் கரும்பு ஆலைகளை ஆதரிப்பதற்கான அரசின் முயற்சிகளாகும்.

3) பருத்தி

- பருத்தி ஓர் இழைப்பயிர் மற்றும் வாணிபப் பயிராகும்.

வெப்பநிலை

- கூடான, ஈரப்பதமான காலநிலை கொண்ட வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல பகுதியில் வளர்கிறது.
- வெப்பநிலை – 20° - 28°C

https://t.me/tnpscfree

- சமமான வெப்பநிலை பரவல் மற்றும் அதிகப்படியான சூரியஒளி பருத்தி உற்பத்தியை அதிகரிக்கிறது.

மழைப்பொழிவு

- 55 முதல் 100 செ.மீ மழைப்பொழிவு உகந்தது.
- அறுவடையின் போது, மழைப்பொழிவு ஆபத்தானது.

உறைபனி இல்லாத் நாட்கள்

- பருத்தி சாகுபடிக்கு, குறைந்தபட்சம் 180 நாட்களுக்கு உறைபனி இல்லாம் இருக்க வேண்டும்.
- 200 நாட்கள் உறைபனி இல்லாமல இருந்தால் மிகவும் உகந்தது.

அதிகம் பயிரிடப்படும் பகுதிகள்

- கோயம்புத்தூர் பீடபூமி
- வைகை மற்றும் வைப்பாறு ஆற்றுவடிநிலப் பகுதி
- மற்ற பயிரிடும் பகுதிகள் : மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், தர்மபுரி.

3. தோட்டப்பயிர்கள்

- தேயிலை, காபி, இரப்பர், முந்திரி மற்றும் சின்கோனா ஆகியன மாநிலத்தின் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.

1) தேயிலை

- இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது. நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.

காரணிகள்

- தேயிலை ஒரு வெப்பமண்டல மற்றும் துணை வெப்ப மண்டல தாவரமாகும். மேலும் இது வெப்பமான மற்றும் ஈரப்பதம் அதிகம் உள்ள இடங்களில் வளர்கிறது.
- வெப்பநிலை – 20–30°C
- மழைப்பொழிவு – ஆண்டு முழுவதும் 150–300 cm மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் வளரும்.
- தேயிலை மகசூல், அவற்றின் தரம் மற்றும் காலநிலை ஆகியவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்புண்டு.

2) காபி

- மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளில் காபி பயரிடப்படுகின்றது.

- திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களின் மலைச் சரிவுகளிலும் காபி பயிரிடப்படுகின்றது. காபி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.

காரணிகள்

- காலநிலை : வெப்ப மற்றும் ஈரப்பதம் கொண்ட இடங்களில் வளரும்
- வெப்பநிலை: 15°C முதல் 28°C
- உறைபனி, பனிப்பொழிவு, 30°C க்கு அதிகமான வெப்பநிலை மற்றும் அதிபடியான சூரிய ஒளி ஆகியவை காபி உற்பத்திக்கு உகந்ததல்ல. அவை பொதுவாக மரங்களின் நிழல்களில் வளர்கின்றன.
- இதன் பழங்கள் பழுக்கும் நேரத்தில் வறண்ட காலநிலை அவசியம்.
- நீர் தேங்கி நிற்பது காபி வளர்ச்சிக்கு உகந்ததல்ல. இவை கடல் மட்டத்திலிருந்து 600 முதல் 1,600 மீட்டர் உயரத்திலுள்ள மலைச் சரிவுகளில் பயிரிடப்படுகின்றன.
- இரும்பு மற்றும் கால்சியம் தாதுக்களைக் கொண்ட களிமண், காபி சாகுபடிக்கு உகந்தது.

3) இரப்பர்

- இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாகக் காணப்படுகிறது.

காரணிகள்

- வெப்பநிலை : 25°C அதிகமான வெப்பநிலை மற்றும் ஈரப்பதமான காலநிலை
- மழைப்பொழிவு : 200cm க்கும் அதிகம்
- மண்வகை: வண்டல மண்
- ரப்பர் உற்பத்தி அதிகமுள்ள மாநிலங்கள் : கேரளா > தமிழ்நாடு > கர்நாடகா
- இது ஒரு பூமத்திய ரேகை பயிராயினும், சில சிறப்பு காரணிகளின் கீழ், வெப்பமண்டல பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றன.

4) மிளகு

- தமிழ்நாட்டிலுள்ள, மேற்கு தொடர்ச்சிமலை மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலை மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது.

5) முந்திரி

- கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்தரி பயிரிடப்படுகின்றது. தரிசு நிலங்களின பயிரிடப்படும், அதிக இலாபம் தரக்கூடிய பயிர்.
- அதிகம் உற்பத்தி செய்யும் மாவட்டங்கள் அரியலூர், கடலூர், புதுக்கோட்டை, தேனி, விழுப்புரம், சிவகங்கை

https://t.me/tnpscfree

6) சின்கோனா

- ஏறத்தாழ 1,060 மீட்டர் முதல் 1,280 மீட்டர் உயரம் வரை உள்ள ஆனைமலைப் பகுதிகளில் சின்கோனா பயிரிடப்படுகின்றது.

7) ஏலக்காய்

- ஏறத்தாழ 915 மீட்டர் முதல் 1,525 மீட்டர் வரை உள்ள மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் ஏலக்காய் தோட்டங்கள் காணப்படுகின்றன.

10.7.2 கால்நடை வளர்ப்பு

கால்நடை வளர்ப்பு என்பது ஊரக மக்களின் சமூக பொருளாதாரத்தில் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகும்.

1) வெள்ளாடு

- இந்தியாவில் வெள்ளாடுகள் "ஏழை மக்களின் பசு" என்றழைக்கப்படுகிறது.
- இது ஒரு புன்செய் வேளாண் அமைப்பின் மிக முக்கிய அங்கமாகும். கால்நடை வகைகளான பசு மற்றும் எருமை வளர்ப்பிற்கு ஏற்பில்லா இடங்களான நில விளிம்புப் பகுதிகள் மற்றும் மேடு பள்ளங்கள் நிறைந்த நிலத்தோற்றப் பகுதிகளில் வெள்ளாடு வளர்ப்ப ஒரு மாற்றாக உள்ளது.
- 19-வது கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாடு வெள்ளாட்டின் எண்ணிக்கையில் 7-வது இடத்திலும் பசுவின் எண்ணிக்கையில் 13வது இடத்திலும், எருமையின் எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் உள்ளது.

2) செம்மறியாடு

- செம்மறியாடுகள், கம்பளி, இறைச்சி, பால, தோல் மற்றும் உரம் போன்ற பல்வேறு பயனுள்ள பொருட்களை அளிப்பதால் தமிழ்நாட்டின் மலைப்பகுதிகள், வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளில் உள்ள ஊரகப் பொருளாதாரத்தில் இவை முக்கிய பங்காற்றுகிறது.
- பாலுக்காகப் பல்வேறு வகையான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இவை ஊரகப் பொருளாதரத்தை உயர்த்துவதற்கு முக்கிய அங்கமாக உள்ளன.
- 19-வது கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாடு செம்மறியாடு எண்ணிக்கையில் 4-வது இடத்தில் உள்ளது.

3) கோழி

- கோழி பண்ணை மையங்கள் – சேலம், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர்.
- 19-வது கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாடு கோழி எண்ணிக்கையில் 1-வது இடத்தில் உள்ளது.

4) மீன் வளர்ப்பு

- உள்நாட்டு மீன் பிடித்தல் என்பது பரந்த அளவில காணப்படும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளில் கணிசமான அளவு நடைபெறுகின்றது. பல்வேறு நர்வாழியல் சூழலில் ஏறத்தாழ 2,500 வகையான மீன் இனங்கள் காணப்படுகின்றன.

i) கடல்மீன் பிடிப்பு

- தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் 1,076 கிலோமீட்டராகும் (நாட்டின் கடற்கரையில் 13 சதவீதம்) மாநிலத்தின் கடற்கரை பகுதி 0.19 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவை உடையது.
- ஏறத்தாழ 41,412 சதுர கிலோமீட்டர் பரப்பளவு 'கண்டத்திட்டு' உள்ளதால் கடற்கரை மீன்பிடிப்புக்கு சாதகமாக உள்ளது. தமிழ்நாடு 'கடல் மீன்' உற்பத்தியில் முதன்மையான மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. மீன்பிடித்தலுக்கு பெரிய மற்றும் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.
- சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 40% சதவீதம் பங்களிப்பைத் தருகின்றன.

ii) உள்நாட்டு மீன்பிடிப்பு

- ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சதுப்புநிலப்பகுதி போன்ற நீர் நிலைகளில் உள்நாட்டு மீன் பிடித்தல் நடைபெறுகிறது.
- மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் வேலூர் மாவட்டம் 10% உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ளது. கடலூர், சிவகங்கை மற்றும் விருதுநகர் இராண்டாமிடத்தில் உள்ளது.
- மாநில பொருளாதாரத்தில் மீன்பிடித் துறையானது 1.25% பங்களிப்பைச் செய்கிறது.

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

- தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பினை பிரபலப்படுத்தவும், ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சென்னை தவிர 31 மாவட்டங்களில் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன.
- உவர்நீர் மீன்வளர்ப்பினை மேம்படுத்தவும், கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம் 2005ன் படி வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் சிறப்பான செயல்முறைகள் ஆகியவற்றை கடைபிடித்து, ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் – 1974.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில், வளங்குன்றார மீன் உற்பத்தியினைப் பெருக்கிட அறிவியல் ரீதியான முறையில் மீன் குஞ்சுகள வளர்க்கப்படுகின்றன.
- இம்மீன்கள் தனியார் பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

https://t.me/tnpscfree

தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் வணிக அடையாள சின்னம் மற்றும் நிறுவன விளம்பர படம் அறிமுகப்படுத்துதல்

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொதுமக்களின் மத்தியில் தனது செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை பிரபலப்படுத்தும் நோக்கில் 'இது நம்ம ஊரு மீன்கள்' என்ற வாகத்துடன் கூடிய வணிக அடையாள சின்னம் மற்றும் நிறுவன விளம்பர படம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி சமூக ஊடகங்கள் வழியாக பிரபலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

- மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அவர்களின் நலத்தினை பேணுவதற்கும், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நலவாரியம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

- தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக இந்திய வேளாண் அறிவியல் கழகத்தால் (ICAR) நடத்தப்பட்ட வேளாண் பல்கலைக்கழகங்களுக்கான (SAUs) தரவரிசை (2016-17) பட்டியலில், இந்தியாவின் தலைசிறந்த மற்றும் முதன்மை மீன்வளப் பல்கலைக்கழகமாக இடம் பிடித்துள்ளது.

நிலைத்த வளங்குன்றா மீன்வள மேம்பாட்டிற்கான இலக்குகள்

- வறுமையை போக்கவும் பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உணவு, பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக பயன்படுத்துவதற்கு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஒரு பெரும் வாய்ப்பாக உள்ளது.
- கடல், பெருங்கடல் மற்றும் கடல்வளத்தினை நிலையாக மேம்படுத்திடவும் பாதுகாத்திடவும் நிலைத்த பயன்பாட்டிற்கு குறிக்கோள்-14 (நீருக்குள் உள்ள உயிரினங்கள்) மீனவளத்திற்கு வரையறுத்துள்ளது.

10.8 நீர் வளம்

- இந்தியப் பரப்பளவில் 4 சதவீதத்தையும் மக்கள் தொகையில் 6 சதவீதத்தையும் கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய நீர் வளத்தில் 2.5 சதவீதத்தை மட்டுமே பெற்றுள்ளது.
- தமிழகம் பருவமழையைச் சார்ந்தே உள்ளது. தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவு ஏறத்தாழ 930 மில்லி மீட்டர் ஆகும். (வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் 47%-மும், தென் மேற்கு பருவக்காற்று காலத்தில் 35%-மும், கோடைகாலத்தில் 14%-மும், குளிர் காலத்தில் 4%-மும் மழைப்பொழிவு பெறுகின்றது.

10.8.1 தமிழ்நாட்டின் பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள்

- பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்கள், அடிப்படையில் வேளாண் நீர்ப்பாசன மேம்பாட்டிற்காகவும் மற்றும் நீர் மின்சக்தி உற்பத்திக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

1) மேட்டூர் அணை

- காவிரி ஆறு சமவெளியில் நுழையும் இடத்திற்கு முன்னுள்ள மலையிடுக்குப் பகுதியில் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மிகப் பழமையான அணைகளில் ஒன்றாகும். இது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங் களிலுள்ள ஏறத்தாழ 2,71,000 ஏக்கர் விளை நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கிறது.

2) பவானி சாகர் அணை

- ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள பவானி சாகர் அணை, கோயம்புத்தூர் நகரிலிருந்து ஏறத்தாழ 80கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை நாட்டின் மண்-கல் கலவையால் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்றாகும்.

3) அமராவதி அணை

- அமராவதி அணை, திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் இருந்து ஏறத்தாழ 25கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அமைந்துள்ளது. இவ்வணை காவிரியின் துணையாறான அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்வணை நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டது.
- அண்மையில் ஒரு சிறிய நீர் மின் நிலையமும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் பெரும் எண்ணிக்கையிலான சதுப்பு நில (சீங்கன்னி) முதலைகள் காணப்படுகின்றன. இது ஒரு பிரபலமான சுற்றுலாத்தலமாகும்.

4) கிருஷ்ணகிரி அணை

- இவ்வணை, கிருஷ்ணகிரியிலிருந்து 7 கி.மீ. தொலைவில் தர்மபுரிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் 5,428 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்குப் பாசன வசதியை அளிக்கிறது. இதுவும் ஒரு பிரசித்திபெற்ற சுற்றுலாத்தலமாகும்.

5) சாத்தனூர் அணை

- சாத்தனூர் அணை செங்கம் தாலுகாவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ளது. தண்டாரம்பட்டு மற்றும் திருவண்ணாமலை ஒன்றியங்கள் இதன்மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெறுகின்றன. இங்குப் பெரிய முதலைப்பண்ணையும் வண்ணமீன் பண்ணையும் அமைந்துள்ளன. சுற்றுலா பயணிகளுக்காக அணையின் உள்ளே பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள பூங்காக்கள் திரைப்படப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

6) முல்லைப்பெரியாறு அணை

- முல்லைப்பெரியாறு அணை 1895 ஆம் ஆண்டு கேரளாவில், தேக்கடி மலையில் உருவாகும் பெரியாறு ஆற்றின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிரந்தரமாக வறட்சிக்குள்ளாகும் சில வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிப்பதற்காக இவை கட்டப்பட்டது. இவ்வணை கேரள

https://t.me/tnpscfree

மாநிலத்தில் அமைந்திருந்தாலும் இதன் நீர் அதிகமாக தமிழ்நாட்டிற்குப் பயன்படுகிறது. இவ்வணை 175அடி உயரம் மற்றும் 1,200 அடி நீளம் கொண்டதாகும்.

7) வைகை அணை

- ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள தோட்டம் 'சிறிய பிருந்தாவனம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த அணை ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

8) மணிமுத்தாறுஅணை

- திருநெல்வேலி நகரிலிருந்து ஏறத்தாழ 47 கி.மீ தொலைவில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்டுள்ளது. படகு சவாரி மற்றும் நீர்வீழ்ச்சிகள் இவ்வணை அருகே காணப்படும் சுற்றுலா சார்ந்த சிறப்பம்சங்களாகும்.

9) பாபநாசம் அணை

- பாபநாசம் அணை 'கரையார் அணை' என்றும் அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 34861 ஹெக்டேர் நிலங்கள் இதன் மூலம் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த அணையில் ஏறத்தாழ 28 மெகாவாட் நீர் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

10) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

- இது தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. பரம்பிக்குளம் மற்றும் ஆழியாறு பகுதியில் உள்ள ஏழு ஆறுகளின் நீரினைப் பெற்று அங்குள்ள ஏழு நீர்த்தேக்கங்களையும் ஒன்றோடொன்று இணைக்கும் எதிர்கால நோக்கத்தின் விளைவாக உருவானத் திட்டமாகும்.
- பலப்பலாறு திட்டம் ஒட்டஞ்சத்திரம் அருகே அமைந்துள்ளது. பழனி தாலுகாவில் அமைந்துள்ள இவ்வாணை மதுரையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

10.9 தமிழ்நாட்டில் பழங்குடியினர்

- தமிழ்நாட்டில் பழங்குடியினர்கள் நீலகிரி மாவட்டத்தில் முதன்மையாக காணப்படுகின்றனர்.
- அனைத்து தனித்துவமான பழங்குடியினர்களின் கோடர்கள், தோடர்கள், இருளர்கள், குரும்பர்கள் மற்றும் படுகர் போன்றோர் பெரிய குழுக்களாக காணப்படுகின்றனர்.
- இவர்கள் பெரும்பாலும் கால்நடை மேய்ப்பவர்களாவர், காட்டு நாயக்கன் மற்றும் பாலியான் போன்றவர்கள் மற்ற பழங்குடியினர்கள் ஆவர்.
- 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் பழங்குடியின மக்கள் தொகை 7,94,697 பேர். தமிழ்நாட்டில் சுமார் 35 பழங்குடியினர் மற்றும் துணை பழங்குடியினர் குழுக்கள் உள்ளனர். இவர்கள் வன நிலங்களை மிகவும் சார்ந்திருக்கின்ற விவசாயிகள் ஆவர்.

1) தோடர்கள்

- பழங்குடியின குடும்பத்தில் இருக்கும் ஆண்கள் எருமை மந்தைகள் மேய்ப்பதையும் பால் கறப்பதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களின் குடியிருப்புகள் 'முண்ட்ஸ்' (Munds) என்று அழைக்கப்படுகின்றன.
- இவர்கள் எந்த கடவுளையும் வணங்குவதில்லை, இவர்களின் உணர்வு பிரபஞ்சம் தொடர்பானது. இவர்கள் நீலகிரியில் வசிக்கிறார்கள். இன்று, சுமார் ஆயிரகணக்கிலான தோடர்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

2) படுகர்கள் (Badagas)

- படுகர் இனத்தவர் பின்தங்கிய வகுப்பை சேர்ந்தவர்கள் ஆனால், பழங்குடி இனத்வர்களாக வகைப்படுத்தப்படவில்லை. இவர்கள் தமிழ்நாட்டின் நீலகரி மாவட்டத்தில் உயர் பீடபூமியில் வாழ்கின்ற ஒரு விவசாய சமூகத்தினர் ஆவர்.
- இவர்கள் தேயிலை மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி செய்து வருகிறார்கள். நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றனர்.
- இவர்கள் சைவப் பிரிவைச் சார்ந்த இந்து பழங்குடியினர்கள் ஆவர்.

3) கோடா (Kota)

- கோடாக்கள் பிரதானமாக நீலகிரி மலைகளில் உள்ள திருச்சிகடி பகுதியில் அதிக அளவில காணப்படுகிறார்கள்.
- இவர்கள் தங்களின் வண்ணமயமான நாட்டுப்புற நடனங்கள் மூலம் புகழ்பெற்றவர்கள் ஆவர். இவர்கள் அடிப்படையில் படா (Badaa) இறுதி சடங்கில் இசை வாசிக்கும் இசைக் கலைஞர்கள் ஆவர்.
- இவர்கள் முதன்மையாக கைவினைப் பொருட்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள இந்த படிங்குடியினர் கொல்லர், குயவர்கள் மற்றும் தச்சு நிபுணர்களாக உள்ளனர். சமுதாயத்தில் தங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக கோடாக்கள் பெரிய அளவில் பச்சை குத்திக் கொள்கிறார்கள்.

4) குரும்பர்கள் (Kurumbas)

மாநிலத்தின் இடைப்பட்ட பள்ளத்தாக்குகள் மற்றும் காடுகளில் குரும்பர் இன பழங்குடியினர்கள் வசிக்கின்றனர். கடந்த காலத்தில் இவர்கள் மாயவித்தை மற்றும் மந்திரங்களை நன்கு அறிந்திருந்தனர்.

இன்றைய வாழ்க்கை முறையானது உண்மையான சேகரிப்பாளர்கள் மற்றும் வேட்டையாடுபவர்கள் என்ற நிலையிலிருந்து காபி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களாக மாறியுள்ளனர்.

5) இருளர்கள் (Irulas)

- தமிழ்நாட்டின் நீலகிரி மலையின் அடிவரத்தில் உள்ள தாழ்வான சரிவுகளிலும், காடுகளிலும் இருள் பழங்குடியினர் காணப்படுகின்றனர்.

https://t.me/tnpscfree

- இவர்கள் படுகர்களுக்கு பிறகு இரண்டாவது மிகப்பெரிய பழங்குடியினர் ஆவர். மேலும் இவர்கள் பல வழிகளில் குரும்பர்களை போன்றவர்கள்.
- இந்த பழங்குடியினர் தேன், பழங்கள், மூலிகைகள், வேர்கள், பசை, சாயங்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்கின்றனர்.
- சமீப காலங்களில் இருளர்கள் பாம்புகளைப் பிடித்து, பாம்பு விஷத்தைச் சேகரிக்கின்றனர்.

6) பாலியன் (Paliyan)

- இவர்கள் தமிழ்நாட்டில் உணவு சேகரிக்கும் சமூகத்தை சேர்ந்தவர்கள்.
- இந்த பாலியன்கள் பழனிமலையை சுற்றியுள்ள பகுதிகளில் தோன்றியவர்கள் என்று நம்பப்படுகிறது.
- இவர்கள் மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பரவலாக காணப்படுகின்றனர்.

10.10 தமிழ்நாட்டின் கனிம வளங்கள்

வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டைல், செம்மணிக்கல், மாலிப்டினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது.

கனிம வளங்கள்	இந்தியாவில் கனிமவளங்களின் பரவல் (%)
பழுப்பு நிலக்கரி	55.3
வெர்மிகுலைட்	75
டுனைட்	59
செம்மணிக்கல்	59
மாலிப்டினம்	52
டைட்டானியம்	30

மாநிலத்தில் காணப்படும் முக்கிய தாதுக்கள்

வளங்கள்	பரவியுள்ள நாடுகள்
பழுப்பு நிலக்கரி	நெய்வேலி.
நிலக்கரி	ராமநாதபுரம்.
எண்ணெய் மற்றும் இயற்கைவாயு	காவிரி வடிநிலப்பகுதிகள்.
இரும்பு	சேலம் மாவட்டத்திலுள்ள கஞ்சமலை, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலை.

மேக்னசைட் தாது	சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, திருச்சி, திருநெல்வேலி, வேலூர்.
பாக்சைட்	சேர்வராயன் மலை, கோத்தகிரி, ஊட்டி, பழனி, கொல்லிமலை.
ஜிப்சம்	திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர்.
இல்மனைட் மற்றும் ரூட்டைல்	கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்பு.
சுண்ணாம்புக்கல்	கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர்.
மாலிப்டினம்	தர்மபுரி.
வெர்மிகுலைட்	வேலூர்.

10.11 தொழிலகங்கள்

- மூலப்பொருள்கள் இயந்திரங்களின் மூலம் உற்பத்திப் பொருட்களாகவோ அல்லது பயன்படுத்தக் கூடிய பொருட்களாவோ மாற்றப்படும் இடமே தொழிலகங்கள் ஆகும்.
- பருத்தி நெசவாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிலகம், சிமெண்ட் ஆலை, மின் சாதனப் பொருட்கள் உற்பத்தி ஆலை, வாகன உதிரி பாகங்கள், தகவல் தொழிற்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தொழிலகங்கள் ஆகும்.

10.11.1 பருத்தி நெசவாலைகள்

பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும். பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், பள்ளடம், கரூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றன.

கோயம்புத்தூர்

- ஆங்கிலேயர் காலத்திலிருந்தே பருத்தி தொழிற்சாலை மேம்பட்டிருந்தலால், இது 'தென் இந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது.
- பல்லடம், சோடனூர் மற்றும் கோயம்புத்தூரை சுற்றியுள்ள சிறு கிராமங்கள் மற்றும் நகரங்களில் விசைத்தறி நெசவாலை கூட்டமைப்புகள் காணப்படுகின்றன.

திருப்பூர்

- பருத்தி பின்னலாடைகளைத் தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கு இப்பகுதி புகழ்பெற்றதாகும்.
- நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பு உற்பத்தியில் 80%-ஐ திருப்பூர் கொண்டுள்ளது.

https://t.me/tnpscfree

மற்ற முக்கிய மையங்கள்

- கரூர் – தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம்.
- கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் – தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு
- பவானி மற்றும் குமாரப்பாளையம் – உள்நாட்டு உபயோகம் மற்றும் ஏற்றுமதிக்கான தரைவிரிப்புகள் தயாரிப்பு.
- மதுரை மற்றும் காஞ்சிபுரம் – பட்டு மற்றும் பருத்தி கைத்தறி புடவைகள்.
- ஈரோடு மற்றும் சேலம் பகுதிகளில் – விசைத்தறி நெசவாலைகள்.

10.II.2 பட்டு நெசவாலைகள்

- நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு 4-வது இடத்தை வகிக்கிறது.
- "காஞ்சிபுரம் பட்டு" என்பது அதன் தனித்தன்மை, தரம் மற்றும் பாரம்பரிய மதிப்பு ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது.
- காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களாகும்.
- இராமநாதபுரத்தின் சில பகுதிகளில் செயற்கைப்பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

10.II.3 தோல் பதனிடும் தொழிலகங்கள்

- இந்தியாவில் தோல் பதனிடும் தொழிலகங்களில் தமிழ்நாட்டு 60% உற்பத்தியையும், காலணிகள், தோலாடைகள் மற்றும் தோல் உபபொருட்கள் உற்பத்தியில் 38% பங்களிப்பையும் அளிக்கிறது.
- வேலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ளன.
- உற்பத்தி செய்யப்படும் தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள் (தோலாடைகள், கையுறைகள் மற்றும் தோல் காலணிகள்) ஏற்றுமதியில் 37% பங்களிப்புடன் வேலூர் முதன்மை மாவட்டமாக விளங்குகிறது.
- அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR)-கீழ் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆய்வகம் (CLRI), சென்னையில் அமைந்துள்ளது.

10.II.4 காகித தொழிலகம்

- தமிழ்நாட்டில் பல காகித தொழிலகங்கள் அமைந்துள்ளன. கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) அமைந்துள்ளன.
- இது செய்தித்தாள், அச்சுக் காகிதம் மற்றும் எழுதப் பயன்படும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது.
- 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிலகம் ஆண்டுக்கு 2.45 லட்சம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யும் திறன் பெற்றது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் உலகளவில் திறன்படைத்த ஆலைகளில் ஒன்றாகும்.

- இவ்வாலை கரும்புச்சக்கை மற்றும் மரக்கூழிலிருந்து பலவகையான காகிதங்களை சிறந்த தரத்துடன் உற்பத்தி செய்கின்றன.
- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புக்காதுரை, பவானிசாகர், பள்ளிபாளையம், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மாதேவி ஆகியன மாநிலத்தில் உள்ள மற்ற காகித ஆலைகளாகும்.

10.II.5 சிமெண்ட் தொழிலகம்

- சிமெண்ட் தொழிலகம் பொருளாதார மந்த நிலையிலும் உற்பத்தி மற்றும் நுகர்வில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.
- இந்தியா மிகப்பெரிய சிமெண்டு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகவும், 181 மில்லியன் டன்கள் வருடாந்திர உற்பத்தியுடன் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நாடாகவும் உள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில், தமிழ்நாடு சிமெண்ட் கழகமும் (TANCEM) ஒன்றாக உள்ளது அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் சிமெண்ட் உற்பத்தி ஆலைகள் இயங்குகின்றன.
- ஆலங்குளத்தில் உள்ள கல்நார் சிமெண்ட் அட்டை அலகும், விருத்தாசலத்தில் உள்ள கற்கலன் குழாய் அலகு ஆகியன மாநிலத்தின் மற்ற அலகுகளாகும்.
- சங்கர் சிமெண்ட், ஜுவாரி சிமெண்ட், அல்ட்ராடெக் சிமெண்ட், மதராஸ் சிமெண்ட் மற்றும் டால்மியா சிமெண்ட் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தனியார் சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களாகும்.

10.II.6 தகவல் தொழில்நுட்பம்

- தேசிய மென்பொருள் மற்றும சேவைகள் நிறுவன கூட்டமைப்பின்படி (NAASCOM) இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் தென் மாநிலங்கள் தொடர்ந்து மேலானப் பங்களிப்பை செய்து வருகின்றன.
- தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்கள் இணைந்து இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் 59.6%ஐ செய்கின்றன. நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் கர்நாடகாவுக்கு அடுத்ததாக தமிழ்நாடு இரண்டாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக உள்ளது.

10.II.7 பொறியியல் உற்பத்தி தொழிலகங்கள்

- உற்பத்தித் தொழில் என்பது மாநிலப் பொருளாதாரத்தின் துடிப்பான துறைகளில் ஒன்றாகும். இது பொறியியல் உற்பத்தி தொழில்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது.
- வாகனங்கள் மற்றும் இதரபாகங்கள் உற்பத்தி, வாகன உற்பத்தி, மூல உலோகம் மற்றும் உலோகக் கலவைத் தொழில்துறை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு நாட்டின் உற்பத்தியில் ஏறத்தாழ 11 முதல் 12% வரையிலும், மென்பொருளை தவிர்த்து நாட்டின் ஏற்றுமதியில் 15% பங்களிப்பு செய்கின்றன. இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 17 சதவீதமாகும்.

https://t.me/tnpscfree

10.11.8 வாகனத் தொழிலகங்கள்

- வாகன உற்பத்தி மற்றும் கனரக வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு குறிப்பிடத்தக்க அளவிலுள்ளது. வாகனம் தொழிலகம் மாநிலப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது.
- மாநிலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீத பங்களிப்பினை அளிக்கிறது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனத் தொழில்களில் 21% பயணிகள் மகிழுந்து, 33% வணிக வாகனங்கள் மற்றும் 35% வாகன உதிரிபாகங்கள் ஆகியன தமிழ்நாட்டின் அதிகமான பங்களிப்பாகும்.

10.11.9 இரசாயன மற்றும் வார்ப்புப் பொருள் தொழிலகம்

- இரசாயன தொழிலகம், பெருளாதாரம் மற்றும் தொழிற்துறையில் வேகமாக வளர்ந்து வரும் ஒன்றாகும்.
- இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 8 சதவீதமும் பங்களிப்பு செய்கின்றன.

10.11.10 கைத்தறி மற்றும் விசைத்தறி

- கைத்தறி துறையானது மாநிலத்தில் மிகப்பெரிய குடிசைத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரத்தையும் ஏற்றுமதி வருவாயையும் அளிக்கின்றன.

10.11.11 சர்க்கரைத் தொழிலகம்

- தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலகம் ஒரு வேளாண்சார்ந்த தொழிலாகும். கிராமப்புற பகுதிகள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்கினை வகிக்கிறது.
- சர்க்கரைத் தொழிலகங்கள் பல ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு பயிர்சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதரப் பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் போன்ற பல இலட்சம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்குகின்றன.
- தமிழ்நாட்டில் மொத்தம் 34 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 16 கூட்டுறவுத் துறையாலும் 18 தனியார் துறையாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

10.11.12 சுற்றுலாத்துறை

- சுற்றுலாத்துறை ஒரு தொழிலகமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இதில் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்பை உருவாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் (TTDC) ஊக்குவிக்கப்படுகிறது.

10.12 வணிகம்

இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 12.2 சதவீதம் ஆகும்.

தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள்	
வேளாண் பொருட்கள்	புகையிலை, தானியங்கள், பருத்தி, கரும்பு, நெல், நிலக்கடலை வாசனைப் பொருட்கள் மற்றும் காய்கறிகள்.
தோல் பொருட்கள்	சிறு தோல்பைகள், பணப்பைகள், கைப்பைகள், இடுப்பு கச்சை, காலணிகள் மற்றும் கையுறைகள்.
இரத்தின கற்கள் மற்றும் நகைகள்	விலை மதிப்பு மிக்க கற்கள், முத்துகள், தங்க நகைகள், கலை மற்றும் அலங்காரம் பொருட்கள்.
இரசாயன மற்றும் இரசாயனம் சார்ந்த பொருட்கள்	காகிதம், இரசாயனங்கள், இரப்பர் மற்றும் கண்ணாடி.

10.12.1 தமிழ்நாட்டின் இறக்குமதிகள்

- இயந்திரக் கருவிகளான போக்குவரத்து சாதனங்கள், இயந்திர உபகரணங்கள், மின்சாதன பொருட்கள், மருந்துப் பொருட்கள், பெட்ரோலியம், உரங்கள் மற்றும் செய்தித்தாள் ஆகியவை முக்கிய இறக்குமதிகளாகும். நாட்டின் வணிகத்தில் தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் 10.94% பங்களிப்பைச் செய்கின்றன.

புவியியல் குறியீடு (GI Tag)

- புவியியல் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் தயாரிக்கப்படும் பொருட்களின் மீது பயன்படுத்தப்பம் குறிப்பாகும். இது உற்பத்தி செய்யும் உரிமையாளர்களுக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குகிறது.

சில முக்கிய புவியியல் குறியீடுகள்:

இடம்	உற்பத்திப் பொருள்கள்
ஆரணி	பட்டு
காஞ்சிபுரம்	பட்டு
கோயம்புத்தூர்	மாவு அரைக்கும் இயந்திரம், கோரா பட்டு சேலை
தஞ்சாவூர்	ஓவியங்கள், கலைநயம் மிக்க தட்டுகள், தலையாட்டி பொம்மைகள், வீணை
நாகர்கோவில்	கோயில் நகைகள்
ஈரோடு	மஞ்சள்
சேலம்	வெண்பட்டு (சேலம் பட்டு)
பவானி	போர்வைகள்

https://t.me/tnpscfree

மதுரை	சுங்கடி சேலை
சுவாமிமலை	வெண்கலச் சிலைகள்
நாச்சியார்கோவில்	குத்துவிளக்கு
பத்தமடை	பாய்
நீலகிரி	பாரம்பரிய பூத்தையல்
மகாபலிபுரம்	சிற்பங்கள்
சிறுமலை	மலை வாழை
ஏத்தோமொழி	தேங்காய்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

– குறள் 491

விளக்கம்:

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லா செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

மாதிரி வினாக்கள்

1. தமிழ்நாட்டில் முக்கிய பயிர்களின் பாவல் தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடு:
   1. பொன்னி மற்றும் கிச்சடி சம்பா ஆகியவை தமிழகத்தில் பயிரிடப்படும் நெல் முக்கிய நெல் வகைகளாகும்.
   2. சோளம் / ஜோவர் (சோளம்), ராகி (கேழ்வரகு) மற்றும் பாஜ்ரா (கம்பு) ஆகியவை முக்கிய தினை வகையாகும்.
   3. கடலை பருப்பு, உளுந்த பருப்பு, பச்சை பருப்பு, தாராமணி மற்றும் கொள்ளு ஆகியவை தமிழ்நாட்டில் வளர்த்தப்படும் முக்கியமான பருப்பு வகைகள்.
   4. நிலக்கடலை, எள், ஆமணக்கு, தென்னை, சூரிய காந்தி மற்றும் கடுகு ஆகியவை தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகும்.

   (A) 1 மற்றும் 2 (B) 2, 3 மற்றும் 4
   (C) 1, 2 மற்றும் 4 (D) மேற்கண்ட அனைத்தும்
2. தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகள் அமையப்பெறாத இடத்தை அடையாளம் காண்க.
   (A) பிச்சாவரம் (B) கோடியக்கரை (C) வேதாரண்யம் (D) மாமல்லபுரம்
3. காவேரி ஆறு எங்கு கொள்ளிடம் மற்றும் காவேரி என இரண்டு பிரிவுகளாக பிரிகிறது?
   (A) முக்கொம்பு (B) திருவெறும்பூர்
   (C) திருவானைக்காவல் (D) துறையூர்
4. கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

மாநகரம் / நகரம்		தொழிற்சாலை
(a) இராணிப்பேட்டை	–	தோல்
(b) நாமக்கல்	–	பட்டாசு
(c) ஈரோடு	–	கோழிப் பண்ணைகள்
(d) சிவகாசி	–	மின்தறி

5. பின்வருவனவற்றில் இந்தியாவின் சிமெண்ட் தொழிலகங்கள் பற்றிய கூற்றுகளில் தவறானது எவை?
   1. இந்தியா மிகப்பெரிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும் மற்றும் உலகில் முதல் இடத்தில் உள்ளது.
   2. தமிழ்நாட்டின் முக்கிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANCEM) ஒன்றாகும்.
   3. சிமெண்ட் உற்பத்திக்கு தேவையான அனைத்து பொருட்களும் தமிழக சுரங்கங்களிலேயே கிடைக்கின்றன.

https://t.me/tnpscfree

4. அரியலூரில் கல்நார் சிமெண்ட் அட்டை அலகு உள்ளது.

(A) 1 மற்றும் 4 (B) 2 மற்றும் 3 (C) 1, 2 மற்றும் 3 (D) 1, 3 மற்றும்4

6. பொருத்துக.

நிலப்பகுதி	பகுதிகள்
(a) மலைகள்	1. உள்நாட்டு மற்றும் கடற்கரை
(b) பீடபூமி	2. பாரமஹால், கோயம்புத்தூர் மற்றும் மதுரை
(c) சமவெளிகள்	3. மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

குறியீடுகள்:

	(a)	(b)	(c)
(A)	2	1	3
(B)	3	1	2
(C)	3	2	1
(D)	1	3	2

7. பம்பா – அச்சன்கோவில் – வைப்பாறு நதிநீர் இணைப்புத் திட்டம் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடு:

(A) இந்தியாவின் நீர் மற்றும் உணவு பாதுகாப்பை மேம்படுத்துகிறது.

(B) நீர் மின்சாரத்தை உருவாக்குவதற்கு உதவுகிறது.

(C) இது தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தொடர் வெள்ள பெருக்கை ஏற்படுத்தும்

(D) இத்திட்டத்திற்காக மிகப்பெரிய தொகை தேவைப்படுகிறது.

8. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) சோதனை உந்துவிசை செயற்கைகோள் ஏவுதளம் எங்கு அமைந்துள்ளது?

(A) ஜவ்வாது மலை (B) மகேந்திரகிரி மலை

(C) நீலகிரி மலை (D) பழனி மலை

9. பின்வரும் எந்த இந்திய துறைமுகம் இயற்கை துறைமுகம் அல்ல?

(A) மும்பை (B) கொச்சி (C) சென்னை (D) விசாகப்பட்டினம்

10. பின்வரும் தமிழக ஆறுகளுள் வற்றாத நதி எது?

(A) பாலாறு (B) பொண்ணையாறு (C) தாமிரபரணி (D) வைகை

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
D	D	A	A	A	C	C	B	C	C

அத்தியாயம்

11

பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்

"வாழ்க்கை எவ்வளவு கடினமாகத் தோன்றினாலும் அதில் நீ வெற்றி பெறுவதற்கு ஏதேனும் ஒன்று கண்டிப்பாக இருக்கும்".

–ஸ்டீபன் ஹாக்கின்ஸ்

11.1 மொத்த உள்மாநில உற்பத்தி (GSDP)

- இந்திய அளவில் GSDP குறியீட்டில் தமிழ்நாடு 8.55% சதவீதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இதற்கு தமிழ்நாட்டின் வளமான மனிதவளம், உட்கட்டமைப்பு, இயற்கை மற்றும் ஆற்றல் வளங்களே காரணமாகும்.
- நடப்பு விலையின் மூலம் கணக்கிடப்படும் (Current Prices) GSDP-யில் மகாராஷ்டிர மாநிலமானது முதல் இடத்தைப் பெற்றுள்ளது (14.11%).
- 2021-22 மற்றும் 2022-23 ஆண்டுகளில் தமிழகத்தின் பெயரளவு GSDP (Nominal) வளர்ச்சியானது 12.01% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

11.2 இந்திய புத்தாக்க குறியீடு, 2019

- நிதி ஆயோக் மற்றும் போட்டித் திறனுக்கான நிறுவனம் (Institute for Competitiveness) ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது. இதில், இந்திய மாநிலங்கள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
  - பெரிய மாநிலங்கள்
  - வடகிழக்கு மற்றும் மலை சார்ந்த மாநிலங்கள்.
  - சிறிய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்
- பெரிய மாநிலங்கள் வகைப்பாட்டில், தமிழ்நாடானது, கர்நாடகத்திற்கு அடுத்தப்படியாக இரண்டாம் இடத்தில் உள்ளது.

II.2.I இந்திய மாநிலங்களை தரவரிசைப்படுத்தும் விதிமுறைகள்

- இந்திய புத்தாக்க குறியீடு 2019, செயல்படுத்துபவர்கள் மற்றும் செயல்திறன் என்ற இரு பரிமாணங்களின் சராசரி மதிப்பைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

https://t.me/tnpscfree

- செயல்படுத்துபவர்கள் புதுமைத்திறன் கண்டறிவதற்கான ஒரு காரணியாக பயன்படுத்தப்படுகிறது. அவை, பின்வரும் 5 தூண்களாக பிரிக்கப்பட்டுள்ளன.
  1. மனித மூலதனம்
  2. திறன் வாய்ந்த வேலையாட்கள்
  3. பாதுகாப்பு மற்றும் சட்டச்சூழல்
  4. முதலீடு
  5. வணிகச் சூழல்

செயல்திறன் பரிமாணமானது, உள்ளீடுகளின் மூலம் நாடு அடையும் பயன்களை கண்டறிய உதவுகிறது. அவை இரு தூண்களாக பிரிக்கப்படுகின்றன.

1. அறிவின் வெளிப்பாடு
2. அறிவின் புகுதல்.

11.3 தமிழகமும் தொழில்துறையும்

- தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் தமிழகம் முதலாவது இடத்தில் உள்ளது.
- 2018-ஆம் ஆண்டிற்கான தேசிய பொருளாதார பயன்பாட்டு ஆராய்ச்சி பணியகத்தின் (NEURB) அறிக்கையின்படி, தமிழகமானது தொழில்துறை முதலீட்டிற்கு உகந்த மாநிலங்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தொழிற்சாலையின் மூதலீடு செய்யப்பட்ட மூலதனம் மற்றும் உற்பத்தியில் தமிழகமானது மூன்றாவது இடத்தில் உள்ளது. குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

11.4 வேளாண்துறை

- கடனுதவி பெறாத விவசாயிகளின் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- விவசாயத் துறையில், இந்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான "கிரிஷிகர்மான் விருதை" தமிழகம் 5 முறை பெற்றுள்ளது.

2011-12	உணவு உற்பத்தி
2013-14	பருப்பு உற்பத்தி
2014-15	தானியங்கள்
2015-16	உணவு உற்பத்தி
2017-18	எண்ணெய் வித்துக்கள்

II.4.I நுண்நீர் பாசனம் (Micro Irrigation)

- தமிழ்நாடு 1.39 லட்சம் ஹெக்டர் நிலங்களை நுண்நீர் பாசனத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது (இந்திய அளவில் 38.1%).

- அதிகபடியான நிலப்பரப்பில் நுண்நீர் பாசனம் பயன்பாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடத்திலுள்ளது.
- தமிழகத்தைத் தொடர்ந்து குஜராத், ஆந்திரா, மஹாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

II.4.2 மீன்வளம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) 2016-17-ல் வெளியிட்ட சிறந்த மீன்வள பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளது.

ஆற்றல் துறை

- அதிக மின்திறன் கொண்ட சூரிய மின்சக்தி மற்றும் காற்றலைகள் நிறுவப்பட்டத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- நாட்டின் மொத்த நிறுவப்பட்ட காற்றாலை மின்திறனில் 24 சதவீதம் கொண்டு தமிழகம் முதலிடத்தில் உள்ளது. (தமிழகத்தில் நிறுவப்பட்ட காற்றாலை மின்திறன் 8,468 MW)
- மரபு சாரா எரிசக்தி துறையில் சிறந்த உட்கட்டமைப்பை கொண்டு விளங்கியதால் தமிழகம் இந்திய அரசாங்கத்தின் விருதை பெற்றுள்ளது.

11.5 சட்டம் மற்றும் ஒழுங்கு

- வழக்கு தொடுத்துவர்களுக்கு சரியான மற்றும் விரைவான தீர்வு, திறன் மிகுந்த செயல்பாடு ஆகியவற்றிற்காக தேனி மாட்டத்திலுள்ள பெரியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையம் இந்திய அளவில் 8-ம் இடம் பிடித்துள்ளது.
- சென்னை பெருநகர காவல்துறை இரண்டு SKOCH விருதுகளை பெற்றுள்ளது.
  1. "மூன்றாவது கண் திட்டம்" (Third Eye Project): சிசிடிவி கண்காணிப்பு கேமரா நிறுவுதல்.
  2. போக்குவரத்து விதிமுறை மீறலுக்கான அபராதத் தொகையை பணமில்லா பரிவர்த்தனை மூலம் செலுத்தும் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தியதற்காக.

SKOCH ஆலோசனை விருதுகள்

- 2003-ல் இருந்து அரசு சாரா நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.
- நாட்டின் முன்னேற்றத்திற்கான சமூக, நீதி மற்றும டிஜிட்டல் உள்ளடங்களைக் கொண்ட திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்குவிற்பதற்காக இந்த விருது வழங்கப்படும்.

II.5.I காவல்துறையில் தகவல் தொழில் நுட்ப பயன்பாடு

- தமிழ்நாடு காவல்துறை தலைமையக கட்டிடமே மாநிலத்தின் முதல் பெரிய காகிதமில்லா அரசு நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

- தமிழகத்தின் DGP அலுவலகத்தின் (தலைமை அலுவலகம்) நிர்வாகம் தானியங்கி முறைக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் 3 ஆணையர் அலுவலகங்கள் மற்றும் 15 மாவட்டத் தலைமை காவல்நிலையங்கள் முற்றிலுமாக தானியங்கி முறைக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

II.5.2 மின் அலுவலகம் (e-office app)

- தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்ட இந்த மொபைல் செயலியானது மிகவும் பாதுகாப்பான வளையமைப்பாகும்.
- சிறந்த நிர்வாகத்திற்கும் வெளிப்படைத் தன்மைக்கும் வழிவகுப்பது மட்டுமல்லாது கோப்புகள் மீது விரைவாக முடிவெடுப்பதற்கும், மனித வளத்தை திறம்பட பயன்படுத்தவும் உதவுகிறது.

II.5.3 தோழி திட்டம்

- 2019-ல் சென்னை மாநகரக் காவல்துறையால் தொடங்கப்பட்ட திட்டம்.
- போக்ஸோ சட்டத்தின் கீழ் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆலோசனை கூற சென்னையில் 35 மகளிர் காவல் நிலையங்களில் இரண்டு 2 பேர் வீதம் 70 மகளிர் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த மகளிர் காவலர்களுக்கு இளஞ்சிவப்பு நிற சேலைகள் வழங்கி, அதில் பாதுகாப்பின் குறியீடாக நிர்பயா அடையாளம் பொறிக்கப்பட்டிருக்கும்.

11.6 சிறந்த ஆளுமைக் குறியீடு, 2019

1. மத்திய பணியாளர்கள், குறைகள் தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் மூலமாக வெளியிடப்படும் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
2. பின்வரும் ஆறு அளவுகோள்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

- பொது உள்கட்டமைப்பு
- நீதித்துறை மற்றும் பொது பாதுகாப்பு
- பொருளாதார ஆளுமை
- மனிதவள மேம்பாடு
- பொது சுகாதாரம்
- சுற்றுச்சூழல்

துறைவாரியான தமிழகத்தின் நிலை

நிலை	துறை
1	பொது உட்கட்டமைப்பு, பயன்பாட்டுத்துறை நீதித்துறை மற்றும் பொதுத்துறை
2	பொது சுகாதாரத்துறை
3	சுற்றுலாத்துறை
5	பொருளாதார ஆளுமைத்துறை மனிதவள மேம்பாட்டுத்துறை
7	சமூகநலத்துறை
9	விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறை

இந்திய முடே இதழ் தமிழக அரசிற்கு 4 விருதுகளை வழங்கியுள்ளது.

- அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கும் மாநிலம்.
- சட்ட ஒழுங்கு பாதுகாப்பில் சிறந்த மாநிலம்.
- சுற்றுலாத்துறையில் சிறந்து விளங்கும் மாநிலம்.
- சட்ட ஒழுங்கில் மிகவும் மேம்பட்ட மாநிலம்.

11.7 கல்வி

- உயர்கல்வி தொடர்பான அனைத்திந்திய ஆய்வுத் தகவலில் (AISHE 2018-19) தமிழ்நாடு மாநிலம் மொத்த சேர்க்கை விகிதத்தில் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- இந்த விகிதம் (GER) 18-23 வயது வரையுள்ள மாணவர் களுக்கு கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாடின் மாநில மொத்த சேர்க்கை விகிதம்		
• மொத்த விகிதம்	→	49%
• ஆண்கள்	→	49.8%
• பெண்கள்	→	48.3%
• SCs	→	41.6%
• STs	→	37.8%

சிறந்த மாநிலங்கள்

1. சிக்கிம் (53.9%)
2. சண்டிகர் (50.6%)
3. தமிழ்நாடு (49%)

- இந்த விகிதத்தில் 'முக்கிய மாநிலங்கள்' வரிசையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- மத்திய அரசு 2030-ம் ஆண்டுக்குள் மொத்த சேர்க்கை விகிதத்தில் 50% இலக்கு வைத்துள்ளது.

- பள்ளிகளில் குடிநீர் வசதிகள் வழங்குவதில் தமிழகத்தை சிறந்த மாநிலமாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது.
- குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009-ன் படி மாணவர் ஆசிரியர் விகிதம் 1-5 வகுப்பு வரை 30:1 என்றும் 6-8 வகுப்பு வரை 35:1 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் நிர்ணயித்த விகிதத்தைக் காட்டிலும் தமிழகத்தில் மிகுதியாக உள்ளது.
- சேலம் மாவட்டத்தில் 'தலைவாசல்' எனும் இடத்தில் கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் தொடர்பான ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பாட்டு நிறுவனம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. இதுவே தெற்காசியாவின் மிகப்பெரிய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.

II.7.1 பள்ளிக்கல்வி

- கிராமப்புற, மாவட்டம் மற்றும் மாநில அளவில் வயதுவந்தோருக்கான கல்வித் திட்டத்தில் சிறந்து விளங்கியதற்காக, தமிழகம் தேசிய எழுத்தறிவு விருதுகளை 2013, 2015 மற்றும் 2016-ல் பெற்றுள்ளது.

https://t.me/tnpscfree

II.7.2 செயல்திறன் தரக் குறியீடு (Performance Grading Index)

- மத்திய மனித வளம் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வெளியிடும் இந்த குறியீட்டில் பள்ளிகளுக்கு தேவையான வசதிகளை வழங்கியமைக்காக தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- 2019-ல் தொடக்கக் கல்வியில் நிகர சேர்க்கை விகிதம் 99.88% ஆக உயர்ந்துள்ளது. பள்ளி இடைநிற்றலானது 0.8%-ஆக குறைந்துள்ளது.

சேவைத்துறை

- தொழில் துவங்க உகந்த வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு மின் ஆளுமை முகமை TN-eGA-வால் தொடங்கப்பட்ட ஒற்றைச் சாளர இசைவுத் திட்டம் மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் விருதைப் பெற்றுள்ளது.
- மாநிலத்தில் தொழில்துறை வரைவுகளுக்கு இசைவு வழங்க தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TN-eGA) முதலீட்டாளர் வசதித் தளம் தொடங்கியுள்ளது.

11.8 சுகாதாரம்

II.8.1 காப்பீடு

- மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் தகவலின்படி, தேசிய சுகாதாரக் காப்பீட்டு திட்டத்தில் (NHIS) சேர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு 'முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை' மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா (AB-PMJAY) திட்டத்துடன் இணைத்துள்ளது.

மொத்த கருவுறுதல் வீதம் (TFR)

- தமிழ்நாட்டின் மொத்த கருவுறுதல் வீதம் - 1.6 ஆகும் (இந்தியாவின் இந்த வீதம் - 2.3).
- 12-ம் ஐந்தாண்டு திட்டத்தின் இலக்கை தமிழகம் ஏற்கனவே அடைந்துவிட்டது.

மருத்துவமனைகளில் நடைபெறும் குழந்தை பிறப்பு

- இந்தியாவில் 99.9% மருத்துவமனை சார்ந்த குழந்தை பிறப்பு கொண்ட ஒரே மாநிலம் தமிழகமாகும். இவற்றில் 65% குழந்தை பிறப்புகள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.
- இதற்கு Dr. முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டத்தை திறம்பட செயல்படுத்தியது முக்கிய காரணமாகும்.

II.8.2 ஊட்டச்சத்து

- நிக்ஷய் போசான் திட்டத்தின் (NPY) கீழ் வங்கி கணக்கில் நேரடியாக பணம் செலுத்தும் முறையை (DBT) அமல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும் (ஏப்ரல் 2018).

II.8.3 அம்மா ஆம்புலன்ஸ் (AMMA), 2016

- இலவச அழைப்பு எண் - 1962
- விலங்குகளுக்கு, குறிப்பாக கால்நடைகளுக்கு வீட்டிற்கே வந்து சிகிச்சை அளிக்கும் திட்டம்.
- இத்திட்டத்தை தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (TANVAS), தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டத்தின் (NADP) நிதியுதவி மூலமாக செயல்படுத்தி வருகிறது.

II.8.4 பெருநாடி வால்வு வடிகால்கள் உள்வைப்புத் திட்டம் (TAVI)

- அரசு மருத்துவமனையில் பெருநாடி வால்வு வடிகால்கள் உள்வைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தில் முதல் மாநிலம் தமிழகமே. இத்திட்டம் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள பன்நோக்கு நவீன சிறப்பு மருத்துவமனையில் தொடங்கப்பட்டது.
- திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்த முடியாத வயதான இதய நோயாளிகளுக்கு இம்மருத்துவமுறை செய்யப்படுகிறது.
- ஒரு முக்கிய துளை மூலம் வால்வுகள் மாற்றம் செய்யப்படும்.

II.8.5 உறுப்பு மாற்று சிகிச்சை

- கடந்த ஐந்து வருடங்களாக, "இறந்தபின் உறுப்பு மாற்று சிகிச்சை" -யின் கீழ் தமிழகம் தேசிய அளவில் "சிறந்த மாநில விருது" பெற்று வருகிறது. தமிழகம் 4 முறை இந்த விருதைப் பெற்றுள்ளது (2015, 2016, 2017 மற்றும் 2018).
- 2019-ல் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு உறுப்பு தானத்திற்கு 'சிறந்த அரசு மருத்துவமனை' என மத்திய அரசு விருது வழங்கியுள்ளது.

II.8.6 பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதம் (MMR) மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் (IMR)

- தமிழகம் பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைக் குறைத்ததற்காக 2018-ல் விருது பெற்றது.
- 2010-ல் 24ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம், 2017-ன் மாதிரி மறுசீரமைப்பு முறைமை (SRS)-ன் தரவின்படி 16-ஆக குறைந்துள்ளது. தேசிய அளவில் இந்த விகிதம் '33' என்பது குறிப்பிடத்தக்கது.
- 2015-ல் பெரிய மாநிலங்களில் குழந்தை இறப்பு விகிதத்தை அதிகமாக குறைத்ததில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- 2010-12ல், 90-ஆக இருந்த பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதம் (MMR) 2015-17-ல் 63 ஆகவும் 2019-ல் 57-ஆகவும் குறைந்ததாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- பாலூட்டும் தாய்களின் இறப்பு விகிதத்தை குறைத்தற்காக 2019-ம் ஆண்டு வழங்கப்பட்ட மத்திய அரசு விருதை தமிழகம் பெற்றுள்ளது.

https://t.me/tnpscfree

இனப்பெருக்க மற்றும் குழந்தை ஆரோக்கியம்

- இனப்பெருக்க மற்றும் குழந்தை சுகாதாரத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் 2018-ம் ஆண்டிற்கான எக்ஸ்பிரஸ் பொது விருதை தமிழகத்திற்கு வழங்கியுள்ளது.

எய்ட்ஸ் கட்டுப்பாடு

- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் (NACO) நடத்திய தேசிய பயிற்சிப் பட்டறையில் தமிழ்நாடு மாநில எயிட்ஸ் கட்டுப்பாட்டு (TANSACS) சமூகத்திற்கு EMTCT சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

கண்தானம்

- மருத்துவமனை கருவிழி மீட்டெடுப்பு திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 11,000க்கும் மேற்பட்ட கண்தானங்கள் நிகழ்த்தியதன் மூலம் தமிழ்நாடு இந்தியாவிலேயே கண்தானத்தில் முதலிடத்தில் உள்ளது.

சிறப்பு முயற்சி

- பழங்குடி மக்களிடையே சிக்கில் செல் அனீமியா, தலசீமியா போன்ற திட்டங்களை செயல்படுத்திய முதல் தென்னிந்திய மாநிலம் தமிழகம் ஆகும்.

11.9 மூன்றாம் பாலினத்தவர் நலன்

- சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, மூன்றாம் பாலினத்தவரின் நலனுக்கான தனிப்பிரிவு கொண்ட நாட்டின் முதல் மருத்துவமனையாகும்.
- மே 2009-ல் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஒரு திருநங்கையருக்கு நாட்டின் முதன் முறையாக இலவச பாலின மாற்று அறுவை சிகிச்சை வழங்கப்பட்டது.

மூன்றாம் பாலின நலவாரியம்: நாட்டில் முதன் முதலாக மூன்றாம் பாலின நலவாரியத்தை உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

தமிழ்நாட்டில், திருநங்கைகளுக்கு சொந்தத் தொழிலைத் தொடங்க நிதியுதவி 20,000-ல் இருந்து 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

11.10 தூய்மை

11.10.1 துப்புரவு

- கிராமப்புற சுகாதாரத்திற்கான ஸ்வச் பாரத் திட்டத்தின் விருதை 2019-ல் தமிழகம் பெற்றது.
- ஜல்சக்தி அமைச்சகம் 2019-ல் வெளியிட்ட மத்திய கிராமப்புற தூய்மை ஆய்வில் கிராமப்புற சுகாதாரத்தில் பெரிய மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 11-வது இடத்தில் உள்ளது.
- தமிழகம் 100% திறந்த வெளியில் மலம் கழிக்காத மாநிலம் என ஸ்வட்ச் பாரத் திட்டம் அக்டோபர், 2019-ல் வெளியிட்ட தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.10.2 ஸ்வச் / தூய்மையான புனித தலங்கள்

- 2-வது முறையாக மதுரை மீனாட்சியம்மன் கோவில் நாட்டின் "தூய்மையான சின்னம்" என பாராட்டப்பட்டுள்ளது.

11.11 தமிழகம் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI & TN)

- FSSAI-ன் "ஸ்வச் பாரத யாத்திரை" திட்டத்தின் சிறந்த மாநில விருதை தமிழகம் பெற்றுள்ளது.
- மதுரை மற்றும் சிவகாசி தமிழகத்தில் சிறந்த நகரங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

11.12 மாற்றுத் திறனாளிகள் நலன்

- மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016-ஐ அமல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. அரசு மற்றும் பொது சேவை துறைகளின் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதை உறுதிசெய்யவும், நிலுவை காலியிடங்கள் வழங்குவதை பாதுகாக்கவும், சிறப்பு உந்துதல் அளிக்கப்படுகிறது.

11.13 போக்குவரத்து

தமிழகத்திலுள்ள 8 இல் 3 நிறுவனங்கள் 2019-க்கான 9 விருதுகளைப் பெற்றுள்ளன.

1. மாநில விரைவு போக்குவரத்துக் கழகம் (SETC)

2. தமிழக மாநில போக்குவரத்துக் கழகம், சேலம்

3. தமிழக மாநில போக்குவரத்து கழகம், கும்பகோணம்

கீழடி: தமிழக அரசு உலகத்தரம் வாய்ந்த புதிய தள அருங்காட்சியகத்தை கீழடியில் நிறுவ திட்டமிட்டுள்ளது.

நோக்கம்: சிவகங்கை மாவட்டத்தில் கீழடியில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கலைப் பொருட்களை காட்சிபடுத்துதலின் மூலம் இது தமிழ் கலாச்சாரத்தின் தனித்துவத்தையும் பழங்காலத்தையும் அறிந்து கொள்ளவும் பாராட்டவும் மக்களுக்கு உதவும்.

11.14 சுற்றுச்சூழல்

தமிழகம் பெற்ற விருதுகள்:

- திட்டக்கழிவு மேலாண்மைக்கான "SKOCH Platinum"விருது
- "ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு" திட்டத்துக்கான தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு இந்திய அரசு விருது.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள "சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்" பெற்ற மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வழங்கிய சிறந்த புலிகள் காப்பக விருது.

- ஜனவரி 1, 2019 முதல் தமிழக அரசு ஒற்றைப் பயன்பாட்டு நெகிழி பயன்படுத்த தடைவிதித்துள்ளது.

https://t.me/tnpscfree

வேலைவாய்ப்பு

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை (MGNREGA) திறம்பட செயல்படுத்தியதற்காக தமிழகம் 5 முறை மத்திய அரசு விருது பெற்றுள்ளது.

தொழிலாளர் வலுவூட்டல் / கட்டுமானத் தொழிலாளர்கள்

- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பதிவு செய்வதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது.
- கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் மேம்பாட்டுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அங்கன்வாடி வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நாரி சக்தி புரஸ்கார் விருது

- பிறப்பின்போது கணக்கிடப்படும் பாலின விகிதத்தில் சிறந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தியதற்காக தமிழகம் 2018-ல் இவ்விருதைப் பெற்றது.

விளையாட்டு

- அரசுத்துறைகளில் அடையாளம் காணப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் சிறப்பான விளையாட்டுத் திறன் பெற்ற நபர்களுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- பொதுச் சேவை துறைகளில் சிறப்பான விளையாட்டுத் திறன்பெற்ற நபர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு

- பொது விநியோக திட்டத்தை முழுவதும் கணினிமயமாக்கியதற்கான சிறப்பு விருதினை தமிழகம் பெற்றுள்ளது.

11.15 மூத்த குடிமக்களுக்கான திட்டம்

PREVNAR 13

- அரசு உதவிபெறும் முதியோர் இல்லங்களில் வசிக்கும் மூத்த குடிமக்களுக்கு நிமோனியா தடுப்பூசி வழங்கும் திட்டம்
- முதியோருக்கு இத்தகைய சேவை செய்வதற்கான தமிழகத்தின் முயற்சியை அங்கீகரிப்பதற்கான 2019-ம் ஆண்டின் மூத்த குடிமக்களுக்கு சிறந்த சேவைக்கான தேசிய விருதினை மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்திடமிருந்து தமிழகம் பெற்றது.

11.16 குழந்தைகள் மற்றும் தமிழகம்

- "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ" திட்டத்தை திறம்பட செயல்படுத்திய மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தை பெற்றது மட்டுமல்லாது, மேலும் 2 விருதுகளைப் பெற்றுள்ளது. ஒரு விருது மாநிலத்தின் செயல் திறனுக்காகவும் மற்றொன்று சிறந்த சமூக மேலாண்மைக்காக திருவண்ணாமலை மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டது.

- **குழந்தை நல்வாழ்வு குறியீடு**
  - இது ஆரோக்கியமான தனிநபர் வளர்ச்சி, நேர்மறையான உறவுகள் மற்றும் பாதுகாப்பு சூழல்கள் போன்ற மூன்று பரிமாணங்கள் மூலம் குழந்தைகளின் நல்வாழ்வை அளவிடவும், கண்காணிக்கவும் வடிவமைக்கப்பட்ட கருவி.
  - இதனை "World Vision India" & "IFMR LEAD" என்ற இரண்டு அரசு சாரா நிறுவனங்கள் இணைந்து வடிவமைத்துள்ளது.
  - இது மூன்று முக்கிய பரிமாணங்களில் கவனம் செலுத்தி 24 குறியீடுகள் மூலம் கணக்கிடப்படும்.
    - முதலாவது இடம் கேரளா (0.76)
    - இரண்டாவது இடம் தமிழகம் (0.67)

- மேலும் மின்னாலுமை, திறன் மேம்பாடு, குழந்தை பராமரிப்பு, கிராமசபை போன்ற பல்வேறு துறைகளில் 12 விருதுகள் பெற்றுள்ளது.
- உள்நாட்டு கால்நடை வளர்ப்பை பாதுகாப்பதற்காகவும், அவற்றை வளர்ப்பதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காகவும், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் வழங்கிய தேசிய காமதேனு விருது 2019-ஐ கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பர்கூர் கால்நடை ஆராய்ச்சி நிலையம் பெற்றது.

11.17 சுற்றுலா

- இந்தியாவில் அதிகபட்ச உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கொண்ட பட்டியலில் தமிழகம் முதல் இடத்தை 2019லும் தக்க வைத்துள்ளது. உள்ளூர் பொருளாதாரத்தில் சுற்றுலா துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

II.17.I சுற்றுலா விருதுகள்

- 2018-19 ஆண்டில் தமிழகம் இரண்டு விருதுகள் பெற்றுள்ளது.
- "பாரம்பரிய - சர்வதேச பயணத்திற்கான சிறந்த இலக்கு" விருதை PATWA (பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கம்) தமிழகத்திற்கு வழங்கியுள்ளது.
- "சுற்றுலாவில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம்" - 2018 விருதை தமிழகம் பெற்றுள்ளது.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

- குறள் 596

விளக்கம்:
எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

https://t.me/tnpscfree

மாதிரி வினாக்கள்

1. தமிழ்நாடு சுகாதார அமைப்பு பற்றி சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
   1. 2018-ம் ஆண்டு தமிழக அரசிற்கு தாய் சேய் நல சேவை சாதனைகளுக்காக எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சிறப்பு விருது வழங்கப்பட்டது.
   2. இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி யதற்காக 2015 முதல் 2018 வரை தொடர்ச்சியாக மத்திய அரசின் தேசிய விருதினை தமிழகம் பெற்றுள்ளது.

   (A) 1 மட்டும் (B) 2 மட்டும்
   (C) 1 மற்றும் 2 (D) இவற்றில் எதுவுமில்லை

2. சமூக பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையிலான நல்லாட்சியில் பின்வரும் எந்த மாநிலமானது இரண்டாவது இடத்தில் உள்ளது?
   (A) மகாராஷ்டிரா (B) ஒடிசா
   (C) ஆந்திர பிரதேசம் (D) தமிழ்நாடு

3. 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்-ஆளுமை நிறுவனமானது, கீழ்க்கண்ட எந்த செயல்பாட்டிற்காக விருதைப் பெற்றது?
   (A) இடைத்தரகர்களை குறைத்தல் (B) காகிதமில்லா அலுவலகம்
   (C) மின்னணு சேவைகள் (D) எளிதில் தொழில் தொடங்கும் முறை

4. சமூகக் கொள்கைகளை விரிவுபடுத்துவதில் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டின் வெற்றிக்கு மிக முக்கியக் காரணமாக / காரணங்களாக விளங்குவது:
   1. கிட்டத்தட்ட அனைவரையும் உள்ளடக்கியத் திட்டங்கள்
   2. மக்கள்சார் நலக் கொள்கை
   3. ஜனநாயக அரசியலில் மக்களின் தீவிர ஈடுபாடு
   4. இலக்கு ரீதியிலான விநியோக முறைகள்

   (A) 1 மற்றும் 2 (B) 2, 3 மற்றும் 4
   (C) 1, 2 மற்றும் 3 (D) 4 மட்டும்

விடைகள்

1	2	3	4
C	D	D	A


அத்தியாயம் 12

தமிழ்நாட்டில் மின்ஆளுமை

"இந்தியா போன்ற பரந்து விரிந்த பெரிய நாட்டில், பலன்கள், கடைக்கோடி மனிதனைச் சிறப்பாகச் சென்றடைய ஒரே வழி மின் ஆளுகையே". **– நரேந்திர மோடி**

12.1 மின்ஆளுமை

- மின் ஆளுமை என்பது தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் வாயிலாக அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களின் சேவைகளை விரைவாகவும், திறம்படவும் மக்களிடத்தில் சேர்ப்பதும் மேலும், அத்தொழில்நுட்பத்தின் வாயிலாக மக்களின் குறைகளை தீர்ப்பதும் ஆகும்.



மின் ஆளுமையின் நான்கு நிலைகள்

1. கணினிமயமாதல்
2. தொடர்பை ஏற்படுத்துதல்
3. இணையத்தில் இருத்தலை உறுதி செய்தல்.
4. இணைய பரிவர்த்தனை ஏற்படுத்துதல்.

12.1.1 மின் ஆளுமை மாதிரிகள்

1. ஒளிப்பரப்பு மாதிரி

- தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலமாக பொது களத்திலுள்ள அரசு நிர்வாகம் சார்ந்த தகவல்களை பரப்புவதற்காகவும் / ஒளிப்பரப்புவதற்காகவும் இம்மாதிரி பயன்படுகிறது.

https://t.me/tnpscfree

- இது குடிமகன்களுக்கு நடைமுறையிலுள்ள அரசு சார்ந்த சேவைகள் மற்றும் செயல்முறைகளை பற்றி விழிப்பூட்டுவது மட்டுமல்லாமல் அது சார்ந்த பயன்களை எப்படி பெறுவது என்பது பற்றிய தெளிவுரையை ஏற்படுத்தி தருகிறது.

2. தொடர்பு – சேவை மாதிரி

- இம்மாதிரி மற்ற டிஜிட்டல் ஆளுமை மாதிரிகளின் தொகுப்பாகும். மேலும் இது நிர்வாக செயல் முறையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும்வண்ணம், தனிநபர் ஒருவருக்கொருவர் மற்றும் சுயமாக சேவையை பங்களிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவது நிர்வாக சீர்திருத்த குழு 4 வகையான மின் ஆளுகை தொடர்பு சேவைகளைப் பற்றி இம்மாதிரியின் கீழ் விளக்குகிறது. இதனை "Promoting e-governance The SMART way forward" என்ற தலைப்பின் கீழ் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மின் ஆளுகை சேவையின் வகைகள்

1. அரசு – அரசு இடையேயான சேவைகள் (G2G)
2. அரசு – குடிமகன் இடையேயான சேவைகள் (G2C)
3. அரசு – வணிகம் இடையேயான சேவைகள் (G2B)
4. அரசு – ஊழியர்கள் இடையேயான சேவைகள் (G2E)

12.1.2 மின் ஆளுகையின் பயன்பாடுகள்

- பொது சேவைகளை மக்களின் இடத்திற்கே கொண்டு சேர்த்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகரித்தல்.
- குடிமகனுக்கு அதிகாரமளித்தல்.
- அரசின் உள்திறனை அதிகரித்தல்.
- வணிகம், தொழிற்துறை மற்றும் அரசாங்கத்திற்கு இடையேயான தளத்தை மேம்படுத்துதல்.
- சாதாரண மனிதனுக்கும் அவரது இடத்திலேயே அனைத்து அரசாங்க சேவைகளையும் எட்டும் அளவிற்கு வழிவகைச் செய்தல்.

12.2 இந்தியாவில் மின் ஆளுகையின் பரிணாமங்கள்

1970	▪ இந்தியாவில் முதன் முதலில் மின்னணு துறை உருவாக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் மின் ஆளுகை சார்ந்து எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும்.
1977	▪ தேசிய தகவலியல் மையம் (NIC) உருவாக்கப்பட்டது மற்றும் நாட்டின் அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் கணினிமயமாக்க மாவட்ட தகவல் அமைப்பு (DIS) கொண்டு வரப்பட்டது.

1987	▪ தேசிய தகவலியல் மைய வலையமைப்பு (NICNET) தொடங்கப்பட்டதன் மூலம் மின் ஆளுமைக்கான உந்துதல் கிடைத்தது. தேசிய செயற்கைக்கோள் வாயிலான வலையமைப்பு உருவாக்கப்பட்டது.
1998	▪ தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் மேம்பாட்டிற்காக தேசிய பணிக்குழு அமைக்கப்பட்டது.
1999	▪ தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் உருவாக்கப்பட்டது.
2000	▪ மின் ஆளுகை திட்டங்களை மத்திய மற்றும் மாநில அமைச்சகம் மற்றும் துறைகளில் நடைமுறைப்படுத்த தேவையான வழிமுறைகளை கண்டறிய 12 அம்ச கொள்கை வெளியிடப்பட்டது.
2000	▪ தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 கொண்டு வரப்பட்டது. ▪ இந்தியாவிலுள்ள மாநிலங்களில் ஒருமித்த செயல்பாட்டினை கொண்டுவருவதற்காக அனைத்து மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்களால் தேசிய அளவிலான மாநாடு கூட்டப்பட்டது.
2002	▪ தேசிய சீர்மிகு அரசாங்க நிறுவனம் (NISG) ஹைதராபாத்தில் அமைக்கப்பட்டது. ▪ இந்நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்திற்கு, மின் ஆளுகையை சிறப்புற பயன்படுத்தி அரசு சார்ந்த சேவைகளை சிறப்பான முறையில் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காக ஆலோசனையை வழங்குகிறது.
2006	▪ தேசிய மின் ஆளுகைத் (NeGP) திட்டம் கொண்டு வரப்பட்டது.
2010	▪ மின் ஆளுகைக்கான வெளிப்படை தரநிலைகள் குறித்த தேசிய கொள்கை அறிவிக்கப்பட்டது.
2012	▪ தகவல் தொழில்நுட்பத்திற்கான தேசிய கொள்கைக்கு (NPIT) ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2016	▪ தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (Meity) மற்றும் தொலைத் தொடர்புத்துறை அமைச்சகம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

12.2.1 தேசிய மின்ஆளுகைக் கொள்கை, 2006

- இது 27 இலக்கு சார்ந்த திட்டங்களையும், எட்டு கூறுகளையும் உள்ளடக்கியது.
- மின் ஆளுமைத் திட்டங்களை செயல்படுத்த தேசிய மின் ஆளுகை முகமையை (NeGA) உருவாக்கியது.
- **நோக்கம்:** இந்தியாவின் மின்ஆளுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மற்றும் அடிப்படை கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு.

https://t.me/tnpscfree

பொதுகட்டமைப்பு

1. மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (SWAN)
2. மாநிலத் தரவு மையம் (SDC)
3. பொதுச்சேவை மையங்கள் (CSC)

- 2011ல், சுகாதாரம், கல்வி, பொதுவிநியோக முறை மற்றும் அஞ்சல் என்ற நான்கு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் இலக்கு சார்ந்த திட்டங்கள் (MMPs) 31-ஆக அதிகரிக்கப்பட்டது.

தேசிய மின்ஆளுமைத் திட்டத்தின் எட்டு கூறுகள்

1.	மையக்கொள்கை	5.	ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
2.	மையக்கட்டமைப்பு (SWAN, NICNET, SDC போன்றவை)	6.	மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சிகள்
3.	துணை கட்டமைப்பு (CSC போன்றவை)	7.	விழிப்புணர்வு மற்றும் மதிப்பீடு
4.	தொழில்நுட்ப உதவிகள்	8.	கட்டமைப்பு நிறுவனங்கள்

இலக்கு சார்ந்த திட்டங்கள் (MMPs)

மத்திய இலக்கு சார்ந்த திட்டங்கள்	மாநில இலக்கு சார்ந்த திட்டங்கள்	ஒருங்கிணைந்த இலக்கு சார்ந்த திட்டங்கள்
• வங்கிகள் • மத்திய கலால் & சுங்கத்துறை • வருமான வரி • காப்பீடு • MCA 21 (கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு) • கடவுச்சீட்டு • உள்நாட்டு இடம் பெயர்வு, விசா மற்றும் வெளிநாட்டினர் • ஓய்வூதியம் • e-அலுவலகம் • அஞ்சல் • தனிப்பட்ட அடையாள எண் (UID)	• விவசாயம் • வணிக வரிகள் • e-மாவட்டங்கள் • வேலைவாய்ப்புத்துறை • நிலப்பதிவேடு • நகராட்சி • e-பஞ்சாயத்து • காவல் • சாலைப்போக்குவரத்து • கருவூலம் • பொது விநியோக முறை • கல்வி • சுகாதாரம்	• பொதுசேவை மையம் • e-வணிகம் • e-நீதிமன்றம் • e-கொள்முதல் • e-வர்த்தகம் • இந்தியா தளம் • சேவை வழங்கலுக்கான தளம்.

12.3 e-கிராந்தி (E-KRANTI)

12.3.1 தேசிய மின் ஆளுகைத் திட்டம் 2.0

- இது டிஜிட்டல் இந்தியா முன்முயற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்த முக்கியமான தூணாக விளங்குகிறது.
- இத்திட்டத்திற்கு 2015-ம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் தொலைநோக்கு குறிக்கோளை அடைய "Transforming e-Governance for Transforming Governance" என்ற தலைப்பின் கீழ் வழிமுறைகள் வகுக்கப்பட்டது.
- மின்-கிராந்தி திட்டத்தின் கீழ், 44 தொலைநோக்கு திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

e-கிராந்தியின் நோக்கங்கள்

1. உருமாற்ற மற்றும் விளைவுசார்ந்த மின்-ஆளுமை முயற்சிகளுடன் NeGPஐ மறுவரையறை செய்தல்.
2. குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகளின் இலாகாவை மேம்படுத்துதல்.
3. முக்கிய தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்ய.
4. மின் பிரதி பயன்பாடுகளில் விரைவாக பிரதிபலிக்க மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க.
5. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் நன்மையை நடைமுறைப்படுத்த.
6. மேலும் அதிசிறப்பாக செயல்படும் மாதிரிகளை பயன்பாட்டுக்கு கொண்டுவர.

நடைமுறைக்கு கொண்டு வர வேண்டிய புதிய தொழில்நுட்பங்கள்

1. மேகக்கணினி
2. மொபைல் தளம், ஸ்மார்ட் போன், டேப்லட் போன்
3. நினைவக தரவுத்தளம்
4. மென்பொருள் வரையறுக்கப்பட்ட கட்டமைப்பு (SDN)
5. பெருதரவு பகுப்பாய்வு

e-கிராந்தியின் முக்கிய கொள்கைகள்

1. உருமாற்றமே இதன் நோக்கம் மொழிப்பெயர்ப்பு அல்ல.
2. ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குவது, தனி நபர் சேவைகளுக்காக அல்ல
3. இலக்கு சார்ந்த திட்டத்தில் (MMP) அரசு செயல்முறை மறுகட்டமைப்பை கட்டாயமாக கொண்டு வர.
4. தேவைக்கேற்ப ICT கட்டமைப்பை பயன்படுத்துதல்.
5. மேகக்கணினியை இயல்பாக பயன்படுத்தல்.
6. கைபேசியின் மூலமாக அணுக.
7. விரைவான கண்காணிப்பு ஒப்புதல்களை வழங்க.

https://t.me/tnpscfree

8. கட்டாய தரநிலைகள் மற்றும் நெறிமுறைகள் நடைமுறைப்படுத்த.
9. உள்ளூர் மொழிகளில் மின் ஆளுகை பயன்பாட்டை கொண்டுவர.
10. தேசிய புவி தகவலியல் அமைப்பு (GIS)
11. பாதுகாப்பு மற்றும் மின்னணு தரவு பாதுகாப்பு

12.3.2 e-கிராந்தி கவனம் செலுத்தும் பகுதிகள்

1. ஆரோக்கியத்திற்கான தொழில்நுட்பம் (மின்–சுகாதாரம்)

இது இணையம் மூலமாக ஆலோசனை, மருத்துவ பதிவுகள், மருந்து வழங்குதல், நோயாளியின் தகவல்களை அகில இந்திய அளவில் பரிமாற்றம் போன்றவைகளை உள்ளடக்கும்.

2. விவசாயிகளுக்கான தொழில்நுட்பம்

இது விவசாயிகளுக்கு நிகழநேர வலை தகவல், உள்ளீடுகளை இணை வழியாக வாங்க மற்றும் இணையம் மூலமாக பண பரிவர்த்தனை, கடன் மற்றும் நிவாராணநிதி ஆகியவற்றை பெற வசதி ஏற்படுத்துதல்.

3. பாதுகாப்பிற்கான தொழில்நுட்பம்

மொபைல்அடிப்படையிலானஅவசரசேவைகள்மற்றும்பேரிடர்தொடர்பானசேவைகள்குடிமக்களுக்கு நிகழ் நேர அடிப்படையில் வழங்கப்படும். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சரியான நேரத்தில் எடுத்துக் கொள்வதோடு உயிர்கள் இழப்பு மற்றும் பொருட்சேதங்கள் குறைக்கப்படும்.

4. நீதக்கான தொழில்நுட்பம்

மின்–நீதிமன்றங்கள், மின்–காவல்துறை, மின்–சிறைகள் மற்றும் மின்–வழக்கு போன்ற செயல்களை மேம்படுத்துவதன் மூலம் இயங்கக்கூடிய குற்றவியல் நீதி அமைப்பு பலப்படுத்தப்படும்.

5. உள்ளடக்கிய நிதி மேலாண்மைக்கான தொழில்நுட்பம்

உள்ளடக்கிய நிதி, மேலாண்மையை மொபைல் வங்கி, நுண்–பண பரிவர்த்தனை திட்டம் மற்றும் பொது சேவை மையங்கள்/தபால் அலுவலங்கள் மூலமாக வழிப்படுத்தப்படும்.

6. இணையப் பாதுகாப்புக்கான தொழில்நுட்பம்

நாட்டிற்கு பாதுகாப்பான இணையவெளியை உறுதி செய்ய தேசிய இணையப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மையம் அமைக்கப்படும்.

7. கல்விக்கான தொழில்நுட்பம் (மின்கல்வி)

அனைத்து பள்ளிகளும் பிராட்பேண்டுடன் இணைக்கப்படும். அனைத்து இடைநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளிலும் wifi இலவசமாக வழங்கப்படும். (இவை 2,50,000 பள்ளிகளை உள்ளடக்கும்) டிஜிட்டல் கல்வியறிவு நிரல் குறித்த திட்டம் தேசிய அளவில் மேற்கொள்ளப்படும்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கொண்டு வரப்பட்ட மின் அளுமை திட்டங்கள்

எண்	திட்டம்	விளக்கம்
1.	பூமி திட்டம், 2000	கர்நாடக மாநிலத்தின் நிலப்பதிவுகளை ஆன்லைனில் வழங்குதல்.
2.	கியான்தூத், 2000	▪ இது அக இணையம் சார்ந்த அரசு–குடிமகன்களுக்கு (G2C) இடையேயான இணைய சேவையாகும். ▪ மத்தியப் பிரதேசத்தில் தார் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. ▪ இதன் இரட்டை நோக்கமாக தொடர்புடைய தகவல்களை கிராமப்புற மக்களுக்கு வழங்குவதும் மேலும் மாவட்ட நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் இடையோரு பொதுத்தளமாகவும் செயல்படுகிறது.
3.	லோக்வானி திட்டம் 2004	▪ லோக்வானி என்பது உத்திரபிரதேசத்தின் பொதுத்துறை – தனியார் துறை (PPP) இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். ▪ குறிக்கோள் : குறைகளை கையாளுதல், நிலப்பதிவு பராமரிப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான மின்–ஆளுமை தீர்வாகும்.
4.	ப்ரெண்ட்ஸ் திட்டம், 2000	▪ FRIENDS (விரைவான, நம்பகமான, உடனடியாக, திறமையாக சேவைகளை வழங்கும் வலையமைப்பாகும்) என்பது ஒற்றை சாளர வசதி ஆகும். இது கேரளா அரசுக்கு வரி மற்றும் பிற நிதி நிலுவைகளை செலுத்த குடிமக்களுக்கு வழிவகை செய்கிறது. ▪ மாவட்ட தலைமையகத்தில் அமைந்துள்ள நண்பர்கள் ஜன சேவன கேந்திரத்தின் மூலம் சேவைகள் வழங்கப்படுகிறது.
5.	இ–மித்ரா திட்டம்	▪ லோக்மித்ரா – ஜன்மித்ரா மையங்கள் / கியோஸ்–க்குகள் மூலம் பல்வேறு மாநில அரசுத்துறைகள் தொடர்பான அதிகபட்ச சாத்தியப்பட்ட சேவைகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு வழங்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும்.
6.	கஜேன் திட்டம்	▪ இது கர்நாடக அரசின் விரிவான ஆன்லைன் கருவூல கணினிமயமாக்கல் திட்டமாகும்.

12.4 பிற டிஜிட்டல் முன்முயற்சிகள்

1. ஹிமாத் செயலி (Himmat)

- இது பெண்களுக்கான டெல்லி காவல்துறையின் முன்முயற்சி.
- இது ஒரு அவரகால சேவையை வழங்கும் ஆன்ட்ராய்டு செயலியாகும், டெல்லி காவல்துறை அதிகாரிகளுக்கு மற்றும் ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது குழுக்களுக்கு அவசர அழைப்பு அல்லது அவசர செய்தியை அனுப்பலாம்.

https://t.me/tnpscfree

- அவசர உதவியை நாடியவரின் இருக்கும் இடம் சார்ந்த தகவல்களை குறுந்தகவல் வழியாகவும் இத்தளத்தின் வழியாகவும் காவல்துறை பணியாளர்களுக்கு வந்தடையும்.

2. மேக்ராஜ்

- மேகக் கணினியின் நன்மைகளை பயன்படுத்துவதற்கு இந்திய அரசு ஒரு லட்சிய முயற்சியாக "மேக்ராஜ்" திட்டத்தை கொண்டு வந்துள்ளது.
- நாட்டில் மின் ஆளுமையின் சேவை வழங்கலை துரிதப்படுத்துதல்.
- உள்கட்டமைப்பின் பயன்பாட்டை உறுதிசெய்து வளர்ச்சியை துரிதப்படுத்துதல்.

3. டிஜிலாக்கர்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (Meity) "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட முதன்மை முயற்சியாகும்.
- நோக்கம்: ஆவணங்கள் அனைத்தையும் மின்னணு முறையில் மாற்றி எளிதாக சரிபார்க்கவும், அச்சிடக்கூடிய வடிவத்தில் சேமிக்கவும் உதவுகிறது.
- பயனாளிகள் தங்கள் காப்பீடு, மருத்துவ அறிக்கைகள், பான்கார்டு, கடவுச்சீட்டு, திருமணச் சான்றிதழ்கள், பள்ளிச் சான்றிதழ்கள் மற்றும் இதர ஆவணங்களை மின்னணு வடிவில் சேமிக்கலாம்.
- இந்த லாக்கரை அந்தந்த நபர்கள் தங்களது மொபைல் எண்ணைப் பயன்படுத்தி அனுகலாம்.
- மின்னணு ஆவணங்களை சேகரிப்பதை தவிர்த்து அரசின் மின்னணு ஆவணங்கள் சேமிக்கப்பட்ட இடங்களின் இணைதள முகவரியையும் (URL) சேமிக்க உதவுகிறது.

பீம் செயலி

- இது இந்திய தேசிய கொடுப்பனவு கழகத்தால் (NPCI) உருவாக்கப்பட்டது. டிசம்பர்2016-ல் தொடங்கப்பட்டது.
- இது நிகழ்நேர பணப்பரிமாற்றத்தை அனுமதிக்கும் ஒரு ஒருங்கிணைந்த கட்டண இடைமுக தளமாக (UPI) விளங்குகிறது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (Meity) ஆனது பீம் 2.0 என்ற புதிய பதிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தற்போது நடப்பில் இருக்கும் 13 மொழிகளுடன் கூடுதலாக கொங்கணி, போஜ்புரி, ஹரியானவி ஆகிய மூன்று புதிய மொழிகளை அறிமுகம் செய்துள்ளோம்.
- பீம் 2.0வில் தற்போதைய பண பரிவர்த்தனைக்கான உச்ச வரம்பை 20,000ல் இருந்து 1,00,000 ஆக சரிபார்க்கப்பட்ட வணிகர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.
- பிற அம்சங்களான நன்கொடை வழிதடம், பல வங்கி கணக்குகளை இணைக்க வசதி ஆரம்ப பொது சலுகை (IPO), பணத்த பரிசளித்தல் போன்றவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

4. ஆதார் இயக்கப்பட்ட கட்டண முறை

- இது வங்கி நடைமுறைப்படுத்தும் மாதிரியாகும். இது இணைய வழியாக இயங்கக்கூடிய உள்ளடக்கி நிதி சேர்க்கை பரிவர்த்தனையை மைக்ரோ ஏடிஎம்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆதார் வழிதடத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

5. அரசாங்க மின்-சந்தை (GeM)

- இது வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் தேசிய கலைநயமிக்க பொதுகொள் முதல் வழிதடம்.
- இது தொழிற்நுட்பத்தை கொண்டு அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களுக்கு நுழைவு நிலை தடைகளை நீக்கவும் மேலும் இது பரந்த அளவிலான பொருட்கள் மற்றும் சேவைகளை கொண்டு ஒரு துடிப்பான மின் சந்தையை உருவாக்கி உள்ளது.
- மேலும் இது பொது கொள்முதலை வெளிப்படையாகவும் திறன்படவும் விரைவாகவும் மேற்கொள்ள உதவுகிறது.

6. கோயா போயா தளம்

- இது குடிமக்களை அடிப்படையாகக் கொண்ட இணையதளம். இதன் மூலம் காணாமல் போன ம ற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளை பற்றிய தகவல்களை அறியலாம்.
- இதை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்த இணையதளம் குடிமக்களுக்கு காணாமல் போன குழந்தைகளை பற்றிய புகார் அளிக்க ஒரு வழிதடமாக செயல்படுகிறது.
- கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளை பற்றிய தகவல்களையும் இவ்விணையதளத்தில் பதிவு செயயலாம்.
- இதன் மூலம் புகார்களை எழுத்து, புகைப்படம், காணொலி மற்றும் பிற வடிவங்களில் பதிவேற்றம் செய்யலாம்.

7. நாரி (NARI)

- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட இணைய தளமாகும். இது பெண்களின் வாழ்க்கையை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த தகவல்களை வழங்குகிறது.
- பெண்களுக்கான அரசாங்க திட்டங்கள் மற்றும் பெண்களுக்கான முன்முயற்சிகள் பற்றிய தகவல்களை எளிதாக அணுகக்கூடிய வகையில் இந்த தளம் அமைத்துத்தர முயல்கிறது.

8. ஷாலா சித்தி (Shalaa Siddhi)

- பள்ளி தரநிலைகள் மற்றும் மதிப்பிடு குறித்த தேசிய திட்டமே (NPSSE) "ஷாலா சித்தி"யின் நோக்கமாகும். பள்ளிகளின் மேம்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான விரிவான கருவியாகும்.

https://t.me/tnpscfree

- இதை தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக பல்கலைக் கழகத்தால் (NVEPA) உருவாக்கப்பட்டது.
- பள்ளிகளின் செயல்திறனை மூலோபாய முறையில் மதிப்பீடு செய்வதற்கும் முன்னேற்றத்திற்கான தொழில்முறை தீர்ப்புகளை வழங்குவதற்கும் இது உதவுகிறது.

இ– பஞ்சாயத்து : கிராம பஞ்சாயத்து செயல்பாடுகளை இயந்திரமயமாக்குவதற்கான விரிவான மென்பொருள் தீர்வை வழங்குதல்.

இ–மாவட்டம்: மாவட்ட அளவில் பல்வேறு துறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதையும் குடிமக்களுக்கு தடையற்ற சேவையை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டது. இதன்மூலம் அவர்களது அனுபவத்தை மேம்படுத்துவற்கு உதவுகிறது.

9. இ–பாஸ்தா (e-Basta)

- இது டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் முயற்சியாகும்.
- நோக்கம்: பள்ளிப் புத்தகங்களை மின்னணு முறையில் பயன்படுத்த மின் புத்தகங்களாக டிஜிட்டல் வடிவத்தில் அணுகச் செய்தல். இதன் மூலம் புத்தகங்களை டேப்லட்டும், மடிக்கணிகளிலும் வாசிக்க மற்றும் பயன்படுத்த ஏதுவகை செய்யப்பட்டுள்ளது.

நிக்ஷய் (NIKSHAY)

- தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்டது.
- இது மாற்றியமைக்கப்பட்ட தேசிய காசநோய் திட்டத்தை (RNTCP) திறம்பட கண்காணிக்கிறது.
- தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி காசநோயை கட்டுபடுத்தும் பல்வேறு அம்சங்களை NIKSHAY உள்ளடக்கியது.

10. இ–பாடசாலை

- இது NCERTஆல் உருவாக்கப்பட்டது.
- **நோக்கம்:** மின்னணு வேறுபாட்டை (புவியியல், சமூக–கலாச்சார மற்றும் மொழியியல் சார்ந்த) குறைக்க ஒப்பீடு செய்யும் தரத்திலான இணையதள தரவுகளையும் உள்ளீடுகளையும் தருகிறது.
- இது பாட நூல்கள், ஒலி, காணொலி, காலச்சுவடுகள் மற்றும் பலவிதமான அச்சு மற்றும் அச்சிடப்படாத பொருட்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி சார்ந்த மின் வளங்களை இணைதளம் மற்றும் தொலைபேசி செயலி மூலமாகவும் காண்பிப்பதற்கும், பரப்புவதற்கும் உதவுகிறது.

11. இ–தால் (e-Taal)

- இது இலக்கு சார்ந்த திட்டங்கள் உள்ளிட்ட தேசிய மற்றும் மாநில அளவிான மின்–ஆளுமை திட்டங்களின் மின் பரிவர்த்தனை புள்ளி விவரங்களை பரப்புவதற்கான ஒரு வலைதளம் ஆகும்.
- இது பரிவர்த்தனை புள்ளி விவரங்களை இணைய வழி வலை பயன்பாட்டின் மூலம் முறையான கால இடைநிலையில் பெருகிறது. இது பல்வேறு மின்ஆளுகை திட்டங்களால் செய்யப்படும் பரிவர்த்தனை விரைவாக பார்ப்பதற்கு அட்டவணை மற்றும் வரைகலை வடிவத்தில் பரிவர்த்தனை எண்ணிக்கையில் விரைவான பகுப்பாய்வை முன்வைக்கிறது.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

12. டிஜிட்டல் சக்சர்தா அபியான் அல்லது தேசிய டிஜிட்டல் கல்வியறிவுத்திட்டம் (NDLM)

- **நோக்கம்:** அங்கன்வாடி, ASHA தொழிலாளர்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அங்கீகரிக்கப்பட்ட ரேஷன் அட்டை உறுப்பினர்கள் உட்பட 52.5 லட்சம் நபர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்தல்.

13. உமாங் (புதிய தலைமுறை ஆட்சிக்கான ஒருங்கிணைந்த மொபைல் செயலி) (UMANG)

- "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தின் கீழ் வரும் முக்கிய முன்முயற்சியாகும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட மொபைல் செயலியை பயன்படுத்தும்போது, பயனர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை தனித்தல் மற்றும் பல்வேறு அரசு சார்ந்த சேவைகளை ஒரே தளத்தின் மூலமாக அளித்தல்.
- இது 1200–க்கும் மேற்பட்ட மத்திய மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகளை வழங்கும் 200 மொபைல் செயலியை ஒருங்கிணைத்து எளியமுறையில் மக்களிடம் எடுத்துச் செல்ல உதவுகிறது.மேலும் தனியார் துறையிலிருந்து சில முக்கியமான பயன்பாட்டு சேவைகளையும் வழங்குகிறது.

14. ஸ்டார்ட் அப் இந்தியா செயலி

- இது இந்திய அரசாங்கத்தின் ஒரு முக்கிய முயற்சியாகும். இதன் மூலம் புதிதாக தொழில் தொடங்கும் கலாச்சாராத்தை ஊக்குவிப்பதற்கும் புதுமை மற்றும் தொழில் முனைவோருக்கான வலுவான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதும் இதன் முக்கிய நோக்கமாக உள்ளது.
- குறிக்கோள்: தொழில்முனைவோருக்கு ஆதரவளித்தல் மற்றும் இந்தியாவில் வேலை தேடுபவர்களுக்கு பதிலாக, வேலை படைப்பாளிகளை உருவாக்க வழிவகை செய்வது.

15. தூய்மை இந்தியா செயலி

- இது தூய்மை இந்தியா திட்டம் பற்றிய செய்திகளை வழங்கும், செயலியை பயன்படுத்துபவர்கள் தங்களை சுற்றியுள்ள குப்பைகள் பற்றி புகாரளிக்கலாம்.
- இந்தச் செயலியை மத்திய கலாச்சார அமைச்சகம் கண்காணிக்கிறது.
- மக்களிடம் தூய்மையின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

12.5 தமிழ்நாட்டின் மின்ஆளுமை

- தேசிய மின்ஆளுமை திட்டத்தின் கீழ், பல்வேறு மின்ஆளுமை திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (ICT) மற்றும் மின்ஆளுமை ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.
- தேசிய மின்னாளுமை திட்டத்தின் நோக்கத்தில் தமிழக அரசு தன்னை இணைத்துக் கொண்டது.

https://t.me/tnpscfree

- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் ஆளுமையில் உலகத்தில் சிறந்த நடைமுறைகளை கொண்டு மாற்றியமைக்க வித்திடுகிறது.
- தமிழ்நாடு மின் ஆளுமைத் திட்டம் 2007 ஆனது, தேசிய மின்ஆளுமைத் திட்டம் 2006ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதுவே தமிழ்நாடு மின்ஆளுமை முகமை என்ற நோடல் நிறுவனத்தை உருவாக்கியது.

12.5.1 தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA)

தமிழ்நாடு மின் ஆளுமை திட்டம் 2007ன் கீழ் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை உருவாக்கப்பட்டது.

தொலைநோக்கு பார்வை: நல்லாளுமையின் நோக்கங்களை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் வாயிலாக செயல்முறைப்படுத்தி அரசு சார்ந்த சேவைகளை வெளிப்படைத்தன்மையுடனும் மேலும் அதனை திறம்பட மக்களிடத்தில் எடுத்துச் செல்ல மிகவும் உதவுகிறது.

நோக்கங்கள்

- தமிழகத்தை ஒரு முதன்மையான தொழில்நுட்பம் மற்றும் புதுமையை அறிமுகம் செய்யும் மாநிலமாக உருவாக்குவது.
- தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு நிறுவனத்தினையும் காகிதப் பயன்பாடற்ற, இடையூறுகளற்ற, வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் நேரடி தொடர்புகளற்ற நிறுவனங்களாக மாற்றுதல்.
- அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்வதில் ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் உதவுதல்.
- பல்வேறு அரசுத்துறைகளின் பொதுவான சேவைகளின் தேவையை கண்டறிந்து குறைந்த செலவில் தரமான தீர்வுகளை வழங்குதல்.
- ஆளுமை தொடர்பான சிக்கல்களுக்கு புதுமையான மற்றும் செயலபடுத்தக் கூடிய தீர்வுகளை அளித்திடும் வகையில், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொடக்கநிலை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் திறமையான தனிநபர்களை கொண்ட ஒரு துடிப்பான சூழலை உருவாக்குதல்.
- நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்த, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தகவல் தொழில் நுட்பத்தில் அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்.
- மின் ஆளுமை குறித்த பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடத்துதல்.

12.5.2 தமிழ்நாடு மின்ஆளுமை கொள்கையின் உள்கட்டமைப்பு

- இவை மக்களுக்கு அவரது இடத்திற்கே சேவைகளை கொண்டு சேர்ப்பதற்கான அடிப்படை நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஒரு தூணாக விளங்குகிறது. (அதாவது மாவட்ட நிர்வாகம்)
- இது மின்னணு முறையில் அதிகளவில் அரசு சார்ந்த சேவைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக பின்தளத்தில் கணினி மையமாக்கும் வேலையை செய்கின்றது.

i) பொது கட்டமைப்பு

1. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)
2. தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)
3. பொது சேவை மையங்கள் (CSC), அதாவது இ–சேவை மையங்கள்

1. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

- இது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமையகங்களையும், மாவட்ட / துணை நிலை தலைமையங்களின் தொகுதி நிலை வழியாக செங்குத்து படிநிலை கட்டமைப்பில் இணைக்கிறது.
- அதிகரிக்கப்பட்ட அலைவரிசை அனைத்து மின் ஆளுமை தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளும் திறம்பட செயல்பட உதவுகிறது மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகளை திறமையான முறையில் வழங்க உதவுகிறது.

2. தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)

- மாநில தரவு மையமானது, திறம்பட்ட மின் விநியோகத்திற்கு தேவையான அடித்தளத்தை வழங்குகிறது.
- செயல்பாடுகள்: மாநிலத்தின் தகவல் தொழில்நுட்ப களஞ்சியம், பாதுகாப்பான தரவுகள் சேமிப்பு இடம், இணையவழியில் சேவைகளை வழங்குதல், மாநில சேவை விநியோகத் தளம் (SSDG) மற்றும் மின் படிவங்கள்.

3. பொது சேவை மையங்கள் (CSC) இ–சேவை மையங்கள்

- இது இணையம் வழியாக வழங்கப்படும் மின்னாளுமை சேவைகளை கிராமப்புறப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல உதவுகிறது. இதில் விண்ணப்ப படிவங்கள், சான்றிதழ்கள் மற்றும் மின்சாரம், தொலைபேசி மற்றும் தண்ணீர் ரசீது போன்ற பயன்பாட்டு கட்டணங்கள் உள்ளடங்கும்.
- இது கிராமப்புற மக்களுக்கு பல்வேறு அரசு – மக்கள் (G2C) மற்றும் அரசு – வணிக (G2B) சேவைகளை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப வசதி கொண்ட கியோக்களின் (KiOSKS) மூலம் வழங்குகிறது.
- **மக்கள் தளம்:** இ-சேவை தளமானது 70 வகையான ஆன்லைன் சேவைகளை வழங்குகிறது மற்றும் இது பொது சேவை மையம் மூலம் மட்டுமே இயங்குகிறது.

ii) பிற உள்கட்டமைப்புகள்

1. மெய் நிகராக்கம் மற்றும் மேகக்கணனி உள்கட்டமைப்பு

- தற்போதுள்ள கணினி வளங்களை மெய்நிகராக்கம் செய்வது உள்பட "மேகக் கணினி உள் கட்டமைப்பு"களை மாநில அரசாங்கத்தால் நிறுவப்படும்.
- **முக்கியத்துவம்:** தகவல் தொழில்நுட்ப வளங்களை விரைவான, திறன்மிகுந்த, செலவு குறைந்த முறையில் அளவிடுதல் மற்றும் பகிர்தல்.

https://t.me/tnpscfree

2. பேரிடர் மீட்புமையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம்

- அரசு துறைகளின் தரவுகளை மீட்கும் சேவைகளுக்காக பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை இணையான பேரிடர் மீட்பு மையம் (NLDRC) நிறுவப்பட்டுள்ளது.

3. தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (NKN), 2009

- **நோக்கம்:** தேவையான ஆராய்ச்சி வசதிகளுடன் தரமான நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அதிக பயிற்சி பெற்ற நிபுணர்கள் குழுவை உருவாக்குதல்.
- நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஜிகா-பிட் வலையமைப்பு ஆகும்.

4. தேசிய ஒளியிழை வலையமைப்பு (NOFN) / (தற்போது பாரத்நெட் / தமிழ்நெட்), 2017

- **நோக்கம்:** இந்தியாவின் அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் பிராட்பேண்ட் இணைப்பை வழங்குதல்.
- மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் கண்ணாடி இழை தட இணைப்பை வழங்குவதற்கும், மின் ஆளுமை சேவைகள் மற்றும் மின் வலைதள பயன்பாடுகளை வழங்குவதை உறுதி செய்வதற்கும் பாரத் நெட் மற்றும் தமிழ்நெட் இரண்டையும் அரசாங்கம் பயன்படுத்துகிறது.

5. மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH), 2013-14

- இது ஆதார் இணைப்புடன் குடிமக்களின் தனித்துவமான மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தை வழங்குகிறது. இது மக்கள் தொகை குறித்த தகவல் சரிபார்ப்புக்கான ஒரே ஆதாரமாக செயல்படுகிறது.
- இது அனைத்து துறை சார்ந்த தரவுத் தளங்களையும் ஆன்லைனில் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி ஒருங்கிணைக்கிறது.
- பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடிமக்களை அடையாளம் காண்பதற்கான வழிமுறையை வகுத்துள்ளது.

6. டிஜிட்டல் கையொப்பம்

- மின்னணு பரிவர்த்தனைகளின் சரியான அடையாளம் மற்றும் அங்கீகாரத்தை செயல்படுத்த, ஆன்லைன் செயலாக்கத்திற்கான டிஜிட்டல் கையொப்பம் / மின் கையொப்ப வசதியை ஊக்குவித்தல்.
- ஒவ்வொரு துறையும் அவற்றின் தேவைக்கேற்ப பல்வேறு அதிகாரிகளிடம் டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ்கள் / மின் கையொப்ப வசதியை பெறுவதற்கான வசதியை ஏற்படுத்தும்.
- இந்த அதிகாரத்தையுடைய அதிகாரிகளுக்கு சரியான நேரத்தில் அறிவுறுத்தல்களும் பயிற்சியும் வழங்கப்படும்.

7. மின் அஞ்சல் மற்றும் மின் அஞ்சல் கொள்கை

- அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் அவர்களின் பெயரின் அடிப்படையில் தனித்துவமான மின்னஞ்சல் முகவரி வழங்கப்படும்.

12.6 நிறுவன அமைப்பு

1. மாநில இ-குறிக்கோள் அணி (SMeT)

- மாநிலத்தில் உயர்ந்த முக்கிய முடிவெடுக்கும் அமைப்பு மற்றும் அது சார்ந்த உச்சக்குழுவை ஆதரிக்க முன்மொழியப்பட்டது.
- இது அனைத்து துறைகளுக்கும் மின்ஆளுமை ஆலோனைக் குழுவாக செயல்படும், மேலும் அந்தத் துறைகளுடன் நெருக்கமாக செயல்படும்.
- இத்திட்டம் தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முன் முயற்சியாகும், மேலும் இத்திட்டத்திற்கான நிதியுதவி மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.
- SMet ஆனது திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை ஆகிய பிரிவுகளின் ஆலோசகர்களைக் கொண்ட ஒரு முக்கிய அமைப்பாகும்.

2. மாவட்ட மின் ஆளுமைச் சங்கங்கள் (DeGS)

- மாவட்ட மின்னாளுமை சங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- சென்னையை தவிர, அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகின்றன, சென்னையைப் பொறுத்த வரை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.
- **பங்கு:** மாவட்ட அளவிலான அனைத்து மின்னாளுமை தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது.

12.7 தமிழகத்தில் இ-சேவைகள்

1. அரசு இ-சேவை மைங்கள், 2014

- **நோக்கம்:** இணைய வழியில், தொலைதூர கிராமத்திலிருக்கும் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே அனைத்து சேவைகளையும் வழங்குதல்.
- மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், ஒரு பொதுவான இடத்தில் வழங்கும் நோக்கில் செயல்படுகின்றன.
- தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் (PACCS), கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (VPRC), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் (IFAD) மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர் (VLE) ஆகியவற்றின் மூலம் நடத்தப்படுகின்றன.
- 2014-ல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 10 பொது சேவை மையங்கள் தமிழக அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் தொடங்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

https://t.me/tnpscfree

2. நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

- ஆதார் பதிவுக்கான பதிவாளர் மின்னாளுமை இயக்குநரகம் (DeG) / தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) ஆகியவை நியமிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் (TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) ஆகியவை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் பதிவு முகவர்களாகச் செயல்பட இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) தமிழ்நாட்டில் நிரந்தரப் பதிவு மையங்களாக (PECs) நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த சேவைகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. மொத்த தீர்வுத்திட்டம், 2016 (Total Solution Project)

- **குறிக்கோள்கள்:** மாநிலத்தில் ஜிஎஸ்டி (GST), வாட் (VAT) மற்றும் ஜிஎஸ்டி வரம்பிற்குள் வராத பொருட்களின் மீதான சிஎஸ்டி (CST) வரியை வசூலிப்பதற்கும் மேலும் கணினி மையமாக்கப்பட்ட வரி நிர்வாகத்தை கொண்டு வருவதற்காகவும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கிடைத்தவை

- வணிகர்கள் இணையம் மூலமாக பதிவு செய்யலாம்.
- மின் கையொப்ப சான்றிதழுடன் மாதாந்திர விற்பனைகளை மின்னணு முறையில் நமுனாக்கலாக தாக்கல் செய்யலாம்.
- மொத்த வணிக வரி வருவாயில் 99 சதவிகித வருவாயானது இணைய மற்றும் பிற முறைகளில் வசூலிக்கப்படுகிறது.
- பொருட்கள் இடமாற்றத்திற்கான சோதனைச் சாவடி படிவங்கள் ஆன்லைனில் உருவாக்கப்படுதல்.

4. தமிழர் தகவலாற்றுப்படை, 2017

- விரிவான மற்றும் ஒருங்கிணைந்த களஞ்சியம்.
- தமிழர்கள், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் அனைத்து சாதனைகள் பற்றிய விவரங்கள் இதில் அடங்கியுள்ளன.

5. தமிழ்நெட், 2017

- மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை இணைக்க மாநிலம் முழுவதும் கண்ணாடி இழை தட வலையமைப்பு அமைக்கப்பட்டு, அதிகவேக அலைக்கற்றை வழங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் டிஜிட்டல் புரட்சியின் நன்மைகள் மற்றும் அரசுத்துறைகளின் சேவைகளை நகர்ப்புற மக்கள் அவரவர் இல்லத்திலிருந்தே பெறமுடியும்.

6. பாரத் நெட், 2017

- **நோக்கம்:** நாட்டில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளையும் பிராட்பேண்ட் மூலம் இணைத்தல்.

- இந்தியாவிலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளை இணைக்க மாநிலங்கள் முழுவதும் கண்ணாடி இழை தட வலையமைப்பு அமைக்கப்பட்டு, அதிகவேக அலைக்கற்றை வழங்கப்பட்டுள்ளது.

இ–அடங்கல் வலை பயன்பாடு, 2018 (அடங்கலின் இணைய வடிவம்)

- கிராமம் / வட்டம் / மாவட்டம் மற்றும் மாநில அளவில் விவசாய உற்பத்தியைக் கணக்கிடும் ஒரு முக்கிய அடிப்படை வருவாய்துறை ஆவணமாக அடங்கல் கருதப்படுகிறது. இது கிராம நிர்வாக அலுவலரால் (VAO) பராமரிக்கப்படுகிறது.

7. தூண்டில் மொபைல் செயலி, 2018

- தமிழக அரசின் மீன்வளத்துறையும், தேசிய கடலோர ஆராய்ச்சி மையமும் (NCCR) இந்த செயலியை கொண்டு வந்து நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது.
- இது மீனவ சமூகத்திற்கு உதவுவதற்காக நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கிறது.
- இந்தச் செயலி வானிலை முன்னறிவிப்பு, சாத்தியமான மீன்பிடி மண்டலம், அதிக ஓதம், சூறாவளி எச்சரிக்கை போன்ற நிகழ்நேர தகவல்களை வழங்குகிறது மற்றும் மீனவ சமூகத்திற்கான கரையோர தேவைகளையும் உணர்த்துகிறது.
- இந்தச் செயலி சரியான முடிவெடுக்கும் வண்ணம் செயல்படுகிறது. இதனால் இயற்கை பேரழிவுகளின் போது கடலில் எண்ணற்ற உயிர்கள் காப்பாற்றப்படுகிறது.

மக்கள் எண்

- தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் 'மக்கள் எண்' என்ற எண்ணை உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த எண்ணானது மாநிலக் குடும்பத்தரவு தளம் அமைக்க அடித்தளமாக இருக்கும்.
- இந்த பயன்பாடு தங்குதடையற்ற வெளிப்படையான எளிதில் அணுகக்கூடிய அரசின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குகிறது.

8. தாய்மை, 2018

- மொபைல் அடிப்படையிலான செயலியை பயன்படுத்தி தாய்மார்களின் சுகாதாரத் தகவல்களை அறிதல்.
- காஞ்சிபுரம் மாவட்டம் நந்திவரம் தொகுதியில் "தாய்மை" செயலி சோதனை செய்து பார்க்கப்பட்டது.

குறிக்கோள்கள்

- 2016–17 பிரசவத்தின் போது தாய் இறப்பு – 13% மற்றும் குழந்தை இறப்பு 6% ஆக குறைத்தல்.
- இத்திட்டத்தின் மூலம் மருத்துவமனைக்குச் செல்லாத தாய்மார்கள் தகவல்கள் இதில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- பிரசவகாலத்தின்போது கண்காணிப்பு முறையை உருவாக்குதல் வேண்டும்.

https://t.me/tnpscfree

9. மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம், 2019 (SFDB)

- இது தமிழ்நாட்டில் குடியிருப்போரின் தரவுகளின் ஒற்றை ஆதரமாக விளங்கும்.
- SFDB மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் மின்னணுமயமாக்கப்பட்ட தரவுதளமாக விளங்குகிறது.
- **நோக்கம்:** பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கான பயனாளிகளைத் தங்குதடையின்றித் துல்லியமாக அறிந்திட உதவுகிறது.

10. தமிழ்நாடு பொறியியல் கல்வி சேர்க்கைகான கலந்தாய்வு, 2019

- கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப்படிப்புகளைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கு இணையவழி கலந்தாய்வினை நடத்த உயர்கல்வித்துறை நடத்துகிறது.
- தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) இணையவழிக் கலந்தாய்விற்கான மென்பொருளை பயன்படுத்திடத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது.

11. இ-அடங்கல் கைப்பேசி செயலி, 2019

- அடங்கலுக்கான கைப்பேசி செயலியைத் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை உருவாக்கியுள்ளது.
- இ-அடங்கலின் அனைத்து செயல்பாட்டுச் சேவைகளும் எளிய முறையில் இந்தச் செயலி மூலம் விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

12. குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலையமைப்பு, 2009

- தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) கீழ் கொண்டுவரப்பட்ட இலக்கு சார்ந்த திட்டமாகும் (MMP). இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- **நோக்கம்:** காவல்துறை நவீனமயமாக்குதல், மேலும் குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்க தேசிய அளவில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பினை உருவாக்குதல்.

13. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம் (CEET), 2019

- அரசுத்துறைகளில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் உயர்தொழில்நுட்ப பயன்பாடு ஆகிய வற்றிற்கிடையே ஏற்படும் அறிவு இடைவெளியை சமன் செய்யும் ஒரு பாலமாக நிறுவப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் துறைகளின் புதுமையான முயற்சிகளுக்கு உதவும் ஒரு வினையூக்கியாக (Catalyst) விளங்குகிறது.
- இந்த மையம் தொழில்துறை, அரசுத்துறைகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் தேவைகளை இணைக்கும் பாலமாக் விளங்குகிறது.

14. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

- புவிசார் தகவல் அமைப்பு இடம்சார் அல்லது புவிசார் தரவுகளைக் கண்டறிந்து சேமிக்கவும், கையாளவும், பகுப்பாய்வு செய்யவும், நிர்வகிக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.
- புவியியல் தகவல்களை ஒருங்கிணைத்தல், சேமித்தல், பகுப்பாய்தல், பகிர்தல் மற்றும் வெளிக்காட்டுதல் ஆகியவற்றை செய்யும் ஒரு தகவல் மேலாண்மை அமைப்பாகும்.

- தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பில் தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு உட்கட்டமைப்பு (TNGIS -TNSSDI): புவிசார் தகவல் அமைப்பு தொடர்பான அனைத்து தகவல்களும் வெளியிடப்படுகின்றன.

15. கணினித் தமிழ்

- தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்திக் கணினித் தமிழ் ஆராய்ச்சினை மேம்படுத்துகிறது. அடிப்படை தமிழ்தரவு, தமிழ் சம்பந்தப்பட்ட மென்பொருள் கருவிகள், ஒருங்குறி எழுத்துருக்கள் இன்னும் பிறவற்றை உருவாக்கி வருகிறது.
- தமிழ் இணையக் கல்வி கழகம் பிறரால் உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருள், அதன் கருவிகளை பரிசோதித்துச் சான்றிதழ் அளிக்கிறது.
- தமிழ் இணையக் கல்விக்கழகம் அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode consortium) தமிழ்நாடு அரசின் சார்பில் உறுப்பினராக உள்ளது.

16. உழவன் மொபைல் செயலி, 2019

- **நோக்கம்:** விவசாயத்தில் காணப்படும் சிக்கல்களை தீர்ப்பதோடு, விதைகள், உரங்கள் போன்ற முக்கியமான உள்ளீடுகளின் சமீபத்திய தொழில்நுட்பங்களையும் பங்கு நிலைகளையும் விவசாயிகளுக்கு தெரியவைத்தல்.
- "உழவன்" செயலி தமிழகத்தின் வேளாண்மைத் துறையால் உருவாக்கப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு(AI) தொழில்நுட்பத்துடன் மொத்தமாக 15 சேவைகள் விவசாயிகளுக்கு இதன் மூலம் கிடைக்கப் பெறுகிறது.
- கணினி இல்லாமலே முக்கியமான தகவல்கள் இதன் மூலம் கிடைக்கப் பெறுகிறது.
- இணையதளம்: வேளாண்மை தகவல் சேவை வலையமைப்பு (AGRINET).

எனது பண்ணை வழிகாட்டி

- வேளாண் தொழில்நுட்ப தகவல்களை பரப்புதல் மற்றும் நிகழ் நேரத்தில் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குதல்.
- பண்ணை பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குதல்.
- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக உழவன் மொபைல் செயலி இந்த முறையை கொண்டு வந்துள்ளது.

17. தமிழ் இலக்கியத்திற்கான மின் நூலகம்

- தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) ஒரு மின்நூலகத்தை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது.
- இம்மின் நூலகத்தில் அரிதாக அச்சிடப்பட்ட புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்து பிரதிகள், ஒளிப்படங்கள் மற்றும் காணொளிகள் ஆகிய சேகரிப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் வருகின்றன.
- இந்த இணையதளம் மாற்றுத் திறனாளிகளும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

18. கணித்தமிழ் பேரவை

- தமிழ் நாடெங்கிலும் உள்ள நூறு உயர்கல்வி நிறுவனங்களில் "கணித்தமிழ்ப் பேரவை" உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ் இணையக் கல்விக்கழகமும், மாணவர்களுக்குத் தமிழில் வலைப்பூக்கள் மற்றும் குறுஞ்செயலிகளை உருவாக்கப் பயிற்சி அளித்து வருகிறது.

19. தமிழ்ப் பெருங்களஞ்சியம்

- தமிழ் இணையக் கல்விக்கழகம்(TAV), இணைவழித் தமிழ் பொருளடகத்தினைச் சேகரித்து, "தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்" என்ற ஒன்றினை உருவாக்கியுள்ளது.
- இதுவரை வேளாண்மை, மீன்வளம், வேதியியல், உயிரியல், இயற்பியல் இன்னும் பிற துறைகளிலிருந்து பெற்ற தமிழ் கட்டுரைகளை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

20. இ-நகர் பஞ்சயாத்து

- இது ஒரு மென்பொருள் செயலியாகும். இது அனைத்து பஞ்சாயத்துகளுக்கும், பொதுமக்களுக்கு வலையமைப்பு மற்றும் செயலி அடிப்படையில் தீர்வு வழங்குகிறது.
- பயன்பாடுகள்: சொத்து வரி, தண்ணீர் வரி, தொழில் வரி, வரி அல்லாத பிற கட்டணங்கள் போன்றவற்றை ஆன்லைன் வழியாக செலுத்தலாம்.
- இது ஆன்லைன் வழியாக வரி செலுத்துபவை அதிகரித்துள்ளது.

21. இணையவழித் தேர்வுகளை சேவையாக வழங்குதல் (Eaas)

- இணைய வழித் தேர்வு முறையைப் பல்வேறு அரசுத்துறையில் தங்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப குறுகிய காலத்தில் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தப்படுகின்றன.
- இதில் தேர்விற்கு முந்தைய நிலை, தேர்வுநிலை மற்றும் தேர்விற்கு பிந்தைய நிலை செயல்பாடுகளும் அடங்கும்.
- இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேன்ஞ் இன்பர்மேஷன் டெக்னாலஜி லிமிடெட் (NSEIT) என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இ-டெண்டர் முறை

- நிதித்துறையால் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாட்டின் மின் கொள்முதல் அமைப்பானது, ஏலம் எடுப்போருக்கு இலவசமாக டென்டர், பட்டியலை இலவசமாக பதிவிறக்கம் செய்து பின்னர் ஆன்லைனில் டென்டர் குறிப்பை சமர்பிக்க வழிவகை செய்கிறது.

22. நம்பிக்கை இணையம் (தமிழ்நாடு பிளாக்செயின் கட்டமைப்பு)

- இது தமிழகத்திலுள்ள அனைத்து துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கான பிளாக்செயின் பயன்பாடுகளை உருவாக்குவதற்கும், உபயோகப்படுத்துவதற்கும் பயன்படுத்த கூடிய தளமாகும்.

- இத்தொழில்நுட்பத்தில் சேகரிப்படும் தகவல்கள் மற்றும் தரவுகளை மாற்ற இயலாத காரணத்தால், அரசின் தரவுகள் அனைத்தும் பாதுகாப்பாக வைத்திட இயலும்.
- இந்த உட்கட்டமைப்பை பயன்படுத்தி அரசு – அரசு மற்றும் அரசு – மக்கள் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள் செயல்படுத்தப்படும்.

மின்னணு சுகாதார பதிவு அமைப்பு(EHR): டிஜிட்டல் மயமாக்கப்பட்ட PLHIV நோயாளிகள் பதிவுகள் பராமரிப்பு

- தவறுகளை குறைக்க மற்றும் செயல்பாடுகளை சீராக்க தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் காகிதமற்ற செயல்முறை மற்றும் இயந்திர முறையிலான பணிகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு மின் அனுமதி சேவை (ECS) தளம்

- மக்களுக்காக, அதிலும் குறிப்பாக அரசு ஊழியர்கள் மற்றும் மாநிலத்தின் ஓய்வூதியதாரர்கள் தங்களின் பென்ஷன் நிலையை சரிபார்ப்பதற்காக தமிழக அரசு இந்த தளத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

ELCOT-e-Santhai (மின்சந்தை)

- ELCOT-ஆல் வழங்கப்படும் பொருட்களை வாங்குவதற்கான ஒரு வலைத்தளத்தை உருவாக்குகிறது.

சட்டஅளவில் புகார் கண்காணிப்பு அமைப்பு

- நுகர்வோர் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், வர்த்தகம் தொடர்பான முறைகேடுகளை தடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் மொபைல் செயலி.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) வேலைவாய்ப்புத் திறன் பதிவுத்தளம்

- தமிழ்நாட்டில் திறமையான நிபுணர்களுக்கான திறன் பதிவு மற்றும் வேலைவாய்ப்புக்கான செயலியை தமிழக திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) உருவாக்கியுள்ளது.

12.8 நிகழ்வுகள்

1. கஹோடெக் (CAHOTECH), 2019

- நான்காவது சர்வதேச சுகாதார தொழில்நுட்ப மாநாடு செப்டம்பர், 28 2019-ல் நடைபெற்றது.
- இந்த மாநாடானது "சுகாதார பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவு" என்ற மையக்கருத்துடன் சென்னை ஐஐடியில் காஹேடெக் நிறுவனத்தால் நடத்தப்பட்டது.
- இந்தியாவின் மிகப்பெரிய சுகாதார-தொழில்நுட்ப மாநாடாகும், இது ஸ்டார்அப் முனைவு நிறுவனங்களுக்கு நிதியுதவி, அடைகாப்பு, புதிய சுகாதார தொழில்நுட்ப தயாரிப்புக்களுக்கான பீட்டா-பரிசோதனைகளுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.

https://t.me/tnpscfree

2. தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக குடிமக்களை மேம்படுத்துதல் (ECZ1TE), 2019

- ECZ1TE, இந்தியாவின் மிகப்பெரிய வருடாந்திர "மின்னாளுமை" நிகழ்வாகும்.
- அமைப்பாளர்கள்: CDAC, தேசிய தகவலியல் மையம், நாஸ்காம் ஆகியவற்றின் ஆதரவுடன் தமிழக அரசின் தகவல்தொழில்நுட்ப துறை மற்றும் FICCI இந்நிகழ்வை நடத்துகின்றன.
- பிளாக்செயின், IOT, பிக்டேட்டா போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் நன்மைகளை நிகழ்நேர பணிகளில் பயன்படுத்துவதே இதன் நோக்கம்.

12.9 பிற முன்முயற்சிகள்

1. கல்வி தொலைக்காட்சி, 2019

- தமிழக அரசால் தொடங்கப்பட்டது.
- இது மாநிலத்தின் பள்ளி மாணர்வகளுக்காக பிரத்யேகமாகக் கொண்டுவரப்பட்டது.
- ஒளிபரப்பு நேரம் காலை 6 மணி முதல் இரவு 9.30 வரை.

நிகழ்ச்சிகள்

- மாணவர்களை பொதுத்தேர்வுக்கு தயார்படுத்துகிறது.
- வேலைவாய்ப்புச் செய்திகள் வழங்குகிற.
- இளைஞர்களுக்கான வாய்ப்புகளை அறியச் செய்கிறது.
- தொழில் வழிகாட்டு தகவல்களை வழங்குகிறது.
- சேவை வழங்குநர்கள்: தமிழ்நாடு அரசு கேபிள் டிவி (TACTV) மற்றும் தமிழக கேபிள் டிவி தொலைதொடர்பிற்கான தனியார் நிறுவனம்.

2. அம்மா இ-கிராமம், 2017

- தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு தொலைநோக்கு-மருத்துவம், தொலை-நோக்கு கல்வி, ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள், நம்பிக்கையான கம்பியில்லா சேவை (WIFI HOTSPOT), திறன் மேம்பாடு, மின்மயமாக்கல் அறிவு மையம் மற்றும் பொதுசேவை மையங்கள் போன்ற சேவைகளின் பயன்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு தளத்தை இது உருவாக்கியுள்ளது.
- இந்த திட்டம் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் செயல்படுத்தப்படும்.

12.10 தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட செயலிகள்

1. பினாகின் செயலி, 2017

- தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா தளங்கள் குறித்த தகவல்களை ஒவ்வொரு கட்டமாக வழங்குதல்.
- இது தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய இரு மொழிகளில் இலவச ஒலி வழிகாட்டிகளை வழங்குகிறது.

2. தமிழக மரக்களஞ்சியம் செயலி, 2018

- இந்த மொபைல் செயலி மரங்கள் மற்றும் காடு வளர்ப்பு பற்றிய தகவல்களை வழங்கப் பயன்படுகிறது.

3. காவலன் செயலி, 2019

- இது தமிழ்நாடு மாநில காவல்துறை தலைமை கட்டுப்பாடு அறையினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அவசர சூழ்நிலைகளான கேலி-கிண்டல் செய்தல், கடத்தல் அல்லது வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கை பேரழிவுகள் போன்ற நிலைகளில் உடனடியாக காவல் உதவியை நாட தமிழக மக்கள் இச்செயலியை பயன்படுத்தலாம்.
- இந்த செயலி "ஆம்டெக்ஸ் சிஸ்டம்" அமைப்பால் உருவாக்கப்பட்டது.

4. டிஜி காப், 2019

- சென்னை நகர காவல் ஆணையரால் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** ஒட்டுமொத்த மொபைல் பற்றிய புகார்களைப் பதிவு செய்வதற்கும் திருடப்பட்ட இரு சக்கர வாகனங்களின் மீட்டெடுப்பு நிலை பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

5. காவல்துறை "மின்னணு கண்" (e-EYE) செயலி, 2019

- இச்செயலி கோயம்புத்தூர் மாநகர போக்குவரத்து காவல் துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- போக்குவரத்து விதி மீறல்களை செல்போனில் படம் எடுத்து அனுப்பி புகார் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த படத்தில் எடுக்கப்பட்ட இடம், நேரம், அனுப்பியவரின் பெயர், மொபைல் எண் ஆகியவை GPS உதவியுடன் போக்குவரத்து காவல்துறை அலுவலக கணினியில் பதிவாகி விடும்.
- இந்த செயலி "ஏவான் இன்போடெக் பிரைவேட் லிமிட்" நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

6. "ரோடியோ" - ரோபோ காவலன், 2019

- ரோடியோ ரோபோவை சென்னை மாநகர காவல்துறை ஆணையரால், வேப்பேரியில் உள்ள சென்னை போக்குவரத்து காவல்துறை கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- SP ரோபோடிக்ஸை சேர்ந்த 23 குழந்தைகளைக் கொண்ட குழு இந்த ரோபோவை வடிவமைத்தது.
- சாலை பாதுகாப்பு தொடர்பான செய்திகளை வழங்குவது போன்ற பல பணிகளை செய்கிறது.

7. மூன்றாம் கண் திட்டம், 2019

- சிசிடிவி கேமரா பொருத்தும் திட்டம்
- போக்குவரத்து விதி மீறல்களை கண்காணித்து அபராதம் விதித்தல்.
- மாநிலம் முழுவதும் 3,28,688 சிசிடிவி கேமராக்கள் கண்காணிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.

https://t.me/tnpscfree

நம்ம சென்னை மொபைல் செயலி, 2019

- சென்னை மாநகராட்சி பொது மக்களின் பயன்பாட்டிற்காக நம்ம சென்னை மொபைல் செயலியை கொண்டு வந்துள்ளது.
- இந்த செயலியின் மூலம் பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், சொத்து, தொழில்முறை, வர்த்தக உரிமை, வசூல் நிலை மற்றும் ரசீது பதிவிறக்கும் போன்ற அனைத்து சேவைகளும் கிடைக்கிறது.
- இந்த செயலியை பயன்படுத்தி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் மாற்றங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யலாம்.
- புகார்களை சமர்பிக்கவும் அனுமதிக்கிறது.

8. இ-தோட்டம் 20

- **நோக்கம்:** விவசாயிகளை நேரடியாக நுகர்வோருடன் இணைத்தல்.
- தோட்டக்கலை துறையால் உருவாக்கப்பட்டது.

9. கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு செயலி (CFLOWS - சென்னை 2019)

- இது இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பாகும், இது தேசிய கடல்சார் தொழில்நுட்ப (NIOT) நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது புவித்தகவலியல் அமைப்புடன் ஒருங்கிணைந்த அமைப்பு ஆகும். இது 10 நாட்களுக்கு முன்பே சரியான முன்னறிவிப்பை வழங்குகிறது.
- இதன் மூலம் ஒரு பகுதியில் என்ன நடக்கும் என்பதையும் கணிக்க முடியும்.

10. ரெட் அட்லஸ் செயல்திட்ட வரைபடம், 2019

- இது புவி அறிவியல் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட முதல் கணக்கீடு வரைபடமாகும்.
- **நோக்கம்:** 2015ஆம் ஆண்டில் மிக மோசமான வெள்ளத்தை கண்ட சென்னையில் பிற்காலத்தில் வெள்ளத்தை தணிக்க தமிழக மாநில அரசுக்கு உதவுதல்.

ஸ்டார் 2.0

- பதிவு செய்தலில் எளிமை மற்றும் நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் 65,02,906 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

12.11 தேசிய தகவல் தொழில்நுட்ப கொள்கை 2012

தொலைநோக்கு பார்வை:

- உலகளாவிய தகவல் தொழில்நுட்ப மைய அளவிற்கு இந்தியாவின் நிலையை மேம் படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும், தேசிய பொருளாதாரத்தில் விரைவான, உள்ளடக்கிய

மற்றும் நிலையான வளர்ச்சிக்கான இயந்திரமாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய வெளியை பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

குறிக்கோள்கள்

- தகவல் தொழில் நுட்பம் மற்றும் அது சார்ந்த தொழிற்துறையின் வருவாயை 2020 ஆம் ஆண்டில் 300 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துதல் மற்றும 2020 ஆம் ஆண்டில் ஏற்றுமதியை 200 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துதல்.
- அதிநவீன தொழில்நுட்பங்களில் புதுமை மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் மேகக்கணினி, உள்ளூர்மயமாக்கல், இருப்பிடத்தில் கிடைக்கப்பெறும் சேவைகள், சமூக ஊடகங்கள் மற்றும் பயன்பாட்டு மாதிரிகள் போன்ற துறைகளில் செயலிகள் மற்றும் தீர்வுகளை உருவாக்குதல்.
- மதிப்புகளை உருவாக்குவதில் தகவல் தொழில்நுட்பத்தை ஏற்றுகொள்வதற்கான முக்கிய துறைகளில் ஸ்டார்ட் அப் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதை உறுதி செய்தல்.
- அரசாங்கத்தில் குறிப்பாக பொது சேவைகளை வழங்குவதில் பொறுப்புடைமை, நம்பகத்தன்மை, செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பரவலாக்கம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- கிராமப்புற மேம்பாடு, சுகாதாரம், கல்வி மற்றும் நிதிச் சேவைகள் போன்ற சமூகத் துறைகளில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்.
- மனித வளத்தை மேம்படுத்துவதற்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலை பயன்படுத்துவதற்கும் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.
- பாதுகாப்பான இணையவெளி சூழல் அமைப்பை வழங்குவதற்கான ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

தேசிய தகவல் தொழில் நுட்பம் கொள்கையை அடைவதற்கான உத்திகள்

- உலகளவில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் அந்த துறைசார்ந்த போட்டித்தன்மைக்கான சூழலை உருவாக்குதல்.
- IT துறையில் புதுமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்
- ICT மூலம் முக்கியத் துறைகளில் உற்பத்தித்திறன் & போட்டித்தன்மையை மேம்படுத்துதல்.
- மின் ஆளுமை மூலம் சேவை வழங்கலை உபயோகித்தல்
- மொழிசார்ந்த தொழில்நுட்பங்களின் வளர்ச்சி
- புவிதகவலியல் அடிப்படையிலான IT சேவைகள்
- பாதுகாப்பு மற்றும் இணைய வெளி.

https://t.me/tnpscfree

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப கொள்கை, 2018:

முகவுரை:

- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த சேவைகளை வழங்கும் தொழில் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- அனைத்து வகையான வளர்ச்சியையும் வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப துறைக்கான கொள்கை முயற்சிகளை தமிழக அரசாங்கம் "விஷன் 2023" திட்டத்துடன் இணைத்துள்ளது.
- தமிழக அரசாங்கம் புதிய தகவல் தொலைதொடர்பு தொழில்நுட்ப (ICT) கொள்கையை வகுக்க முன்மொழிவை வழங்கியது.

12.12 தமிழ்நாட்டில் காணப்படும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வகுப்பதற்கான:

- மாநிலத்திலுள்ள 38 சிறப்பு பொருளாதார மண்டங்களில் (SEZ), 18ல் தகவல் தொழில்நுட்ப (IT) துறைகள் காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 146 மில்லியன் சதுர அடிப்பரப்பளவில் 246 தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் பைப்லைன் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

விஷன் 2023-ன் குறிக்கோள்

- தமிழக அரசாங்கம் விஷன் 2023-ன் ஒரு பகுதியாக மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம் / அது சார்ந்த துறைகளின் வளர்ச்சிக்கு பின்வருவனவற்றை கொண்டுள்ளது.
- சக்தி வாய்ந்த தகவல் கட்டமைப்பு கிடைக்க பெறுதல்
- திறமையான பணியாட்கள் கிடைக்கப் பெறுதல்
- ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், சிந்தனைக் களஞ்சியம் மற்றும் வணிக அமைப்புகளை உள்ளடக்கிய அறிவுத் தளத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல்
- அறிவு உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் பொருளாதார மற்றும் நிறுவன ஆட்சி.

தொலைநோக்கு இலக்குகள்:

- இந்திய மாநிலங்களில் தமிழகத்தை இந்த துறையில் முதல் மாநிலமாக மாற்றுதல்.
- தகவல் தொழில் நுட்பம் / அது சார்ந்த சேவை துறையில் முதலீடு செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விருப்பமான இடமாக தமிழகத்தை மாற்றுதல்.
- பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்,
- உலக தரத்திலான திறன் கிடைத்தலை உறுதி செய்தல்,
- இந்த நிறுவனங்களுக்கு சிறந்த வணிகச்சூழலை உருவாக்குதல்

கவனம் செலுத்தப்படும் பகுதிகள்

- தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை மேம்படுத்த, எல்காட் மற்றும் பிற நிறுவனங்கள் தற்போதுள்ள வணிக நடவடிக்கைகளுக்கு கூடுதலாக பின்வரும் பகுதிகளுக்கு உத்வேகத்தை அளிக்கும்.
- சமூகம், மொபைல், பகுப்பாய்வு மற்றும் மேகக்கணினி (SMAC),
- அரசு துறைகளுக்கான மின் வணிகத்தளம்,
- மின் கற்றல்,
- டிஜிட்டல் மேலாண்மை மற்றும் தொழில்நுட்பம்
- வணிக நுண்ணறிவு மென்பொருள் மற்றும் பகுப்பாய்வு
- தரவு பண்டகசாலை (Warehousing)
- தமிழ்கணினி
- எழுத்துரு உருவாக்கம்.

புதிய தொழில்நுட்பங்கள்

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற வகையில் தங்கள் ஊழியர்கள் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பயிற்சி அளிப்பதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க தகவல் தொழில்நுட்ப IT/ITeS நிறுவனங்களை அரசாங்கம் ஊக்குவிக்கும்.

- செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், ரோபோடிக்ஸ்
- 3D அச்சிடுதல்
- பல்வேறு துறைகளில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு
- வங்கி சார்ந்த நிதி சேவை தொழில்கள் (BESI) (Fintech)
- சுகாதாரம் மற்றும் மருத்துவம் (Med Tech)
- வேளாண்மை (AgriTech)
- ஆன்லைன் கல்வி மற்றும் பயற்சி போன்றவை (EdcTech)
- IoT
- பிளாக்செயன் தொழில்நுட்பம்
- தரவு பகுப்பாய்வு

இவ்வாறு தகவல் தொழில்நுட்ப துறையில் (IT/ITES) தமிழகத்தின் நிலையை வலுப்படுத்தவும், நாட்டில் மிகவும் விரும்பப்பட்டு முதலீடு செய்யும் மாநிலமாக தமிழகம் மாறவும் இந்தக் கொள்கை முயல்கிறது.

https://t.me/tnpscfree

12.13 தமிழ்நாடு மின்னாளுமை கொள்கை, 2017:

தேசிய மின்னாளுமை திட்டத்தின் (NeGP) கீழ் பல்வேறு மின்னாளுமை திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (ICT) மற்றும் மின்னாளுமை ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்திய மாநிலங்களில் தமிழகம் முன்னோடியாக உள்ளது.

தொலைநோக்கு பார்வை:

2023 ஆம் ஆண்டில் அரசாங்க சேவைகளை தொலை தூரத்திலிருந்தோ அல்லது அருகிலுள்ள பொதுசேவை நிலையங்கள், மொபைல் செயலிகள், கையடக்க சாதனங்கள் போன்றவற்றிலிருந்து ஆன்லைனில் அணுகலாம்.

மின் ஆளுமை கொள்கையின் குறிக்கோள்கள்

- மாநில அரசின் பல்வேறு துறைகளில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டுதல்.
- குடிமக்களுக்கு ஆன்லைன் சேவைகள் கிடைக்கச் செய்தல்.
- அரசாங்கத்திற்குள்ளான உற்பத்தி திறன் அளவை மேம்படுத்துதல்.
- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உள்கட்டமைப்புகள் மற்றும் வன்பொருள் வளங்களை பகிர்வதற்கும் மறு உபயோகத்திற்கும் உதவுதல்.
- பிராட்பேண்ட் இணைப்பின் ஊடுருவல் அளவை அதிகரித்தல்.
- அனைத்து மின் ஆளுமை முயற்சிகளிலும் தமிழ்மொழி மற்றும் தமிழ் யூனிக்கோடு தரநிலைகளை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- அரசு-அரசு (G2G) மற்றும் அரசு - வணிகம் (G2B) சேவைகளை செலவு குறைந்த முறையில் வழங்குவதற்கான ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குதல்.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு (IFHRMS):

- நோக்கம்: அனைத்து துறைகள் மற்றும் கருவூலங்களில் மீளும் வேலைகளை குறைத்தல்.
- அனைத்து துறைகள், பணியாட்கள், ஓய்வூதியதாரர்கள், அரசாங்கத்திடம் இருந்து பணம் பெறுபவர்களுக்கும் பயனளிக்கும் மிகப்பெரிய மின்னாளுமை திட்டங்களில் ஒன்றாகும்.
- இந்த திட்டம் துல்லியமான மற்றும் விரைவான நிதி மற்றும் மனிதவள பரிவர்த்தனைகளை உறுதி செய்கிறது.
- IFHRMS ஆனது ஜனவரி 2020 ல் கரூரில் தொடங்கப்பட்டு, 2020 மே மாதத்திற்குள் முழு மாநிலத்திற்கும் நீட்டிக்கப்படும்.

கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

- குறள் 1100

விளக்கம்:

கண்களோடு கண்கள் நோக்காமல் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல்லாமற் போகின்றன.

மாதிரி வினாக்கள்

1. பின்வருவனவற்றில் எது "டிஜிட்டல் இந்தியாவின்" குறிக்கோள் அல்ல?
   (A) காகிதமில்லாத ஆளுமை (B) நபர் இல்லாத ஆளுமை
   (C) இடைத்தரகர்களை ஊக்குவித்தல் (D) பணமில்லா ஆளுமை

2. பொருத்துக.

(a) பிளாக் செயின் பேக்போன்	1. இணையவழி சேவைகள்
(b) TNeGA	2. தொலையுணர் தொழில்நுட்பம்
(c) E-sevai	3. நம்பிக்கை இணையம்
(d) TN-GIS	4. மாநில ஒருங்கிணைப்பு முகமை

குறியீடுகள்:

	(a)	(b)	(c)	(d)
(A)	1	4	2	3
(B)	4	3	1	2
(C)	3	4	1	2
(D)	3	4	2	1

3. பின்வருவனவற்றுள் எது அரசு இ-சேவை மையத்தின் நோக்கமாகும்?
   (A) மாநிலம் முழுவதும் பல்வேறு அரசு துறைகளின் மின் சேவைகளுக்கான ஒருங்கிணைந்த அணுகல்களை பொதுவான தளத்தில் வழங்குதல்
   (B) மாவட்ட அளவில் மின்-ஆளுமை திட்டங்களுக்கான ஒட்டுமொத்த வழிகாட்டுதலை வழங்குதல்
   (C) ஆன்-லைன் தேர்வு சேவைகளை வழங்குதல்
   (D) தமிழ்நாட்டிற்கான இருப்பிடத் தரவுகள் வழங்குதல்

4. மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (DeGS) பற்றி தவறான கூற்றை தேர்ந்தெடு.
   1. நீலகிரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
   2. அனைத்து மாவட்டங்களிலும் இந்த சங்கங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமை வகிப்பார்.
   3. இது மாவட்ட அளவில் மின்-ஆளுமை திட்டங்களுக்கான ஒட்டுமொத்த வழிகாட்டுதலை வழங்குகிறது.

   (A) 1 மட்டும் (B) 1 மற்றும் 2 (C) 1 மற்றும் 3 (D) 2 மற்றும் 3

https://t.me/tnpscfree

5. டிஜிட்டல் முடுக்கி திட்டம் என்பது
   (A) தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் பெண்கள் அனைவருக்கும் வெளியிலிருந்து உதவி வழங்குகிறது.
   (B) தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் அனைவருக்கும் வெளியிலிருந்து உதவி வழங்குகிறது.
   (C) தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் அனைத்து வியாபாரிகளுக்கும் வெளியிலிருந்து உதவி வழங்குகிறது.
   (D) தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வெளியிலிருந்து உதவி வழங்குகிறது.

6. மெட்ராஸ் பதிவு அலுவலகம் அல்லது தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தொங்கப்பட்ட ஆண்டு?
   (A) 1909 (B) 1919 (C) 1949 (D) 1990

7. TN-Diksha என்பது
   (A) பள்ளி குழந்தைகளுக்கான தேசிய மின்மய பணித்தளம்
   (B) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய மின்மய பணித்தளம்
   (C) ஆசிரியர்களுக்கான தேசிய மின்மய பணித்தளம்
   (D) மாநில மின்மய பணித்தளம் மேம்பாட்டு திட்டம்

8. எந்த ஆண்டு விவசாயிகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர் எளிதில் பயன்படுத்தும் வகையில் மொபைல் செயலி மூலம் மின்-அடங்கல் சேவைகள் வழங்கும் சேவை தொடங்கப்பட்டது?
   (A) 2016 (B) 2017 (C) 2018 (D) 2019

9. தொடுவானம் திட்டம்
   (A) NEET, JEE போன்ற பல்வேறு போட்டி மற்றும் நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்துதல்
   (B) இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான திறனறிவுத் தேர்வு
   (C) JRF க்காக மாணவர்களைத் தயார்படுத்துதல்
   (D) இவற்றில் எதுவுமில்லை

10. சரியான இணையைத் தேர்ந்தெடு:
   (A) EaaS - Entrepreneur as a Service (B) IaaS - Investment as a Service
   (C) PaaS - Platform as a Service (D) BaaS - Business as a Service

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
C	C	A	B	B	A	C	D	A	C

இணைப்பு - I

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு – 2011

மக்கள்தொகையியல்: மனித மக்கள் தொகையின் பண்புகள் குறித்த புள்ளி விவர ஆய்வு.

மக்கள்தொகை கணக்கெடுப்பு

- மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது ஒரு பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக பண்புகளுடன் ஒவ்வொரு 10-ம் ஆண்டிலும் தவறாமல் நடைபெறும் மக்கள் தொகையின் அதிகாரப்பூர்வ கணக்கீடாகும்.
- இந்தியாவில் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு 1872ல் நடத்தப்பட்டது. முதல் அதிகார பூர்வ கணக்கெடுப்பு 1881ல் நடத்தப்பட்டது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு - 2011: 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது இந்தியாவில் 28 மாநிலங்களும் தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களும் இருந்தன.

மக்கள்தொகை அளவு மற்றும் பரவல்: இந்தியாவின் மக்கள்தொகை மார்ச் 1, 2011 நிலவரப்படி 1.21 பில்லியன் என்ற அளவில் இருந்தது. இது ஒட்டுமொத்த உலக மக்கள்தொகையில் 17.5% ஆகும்.

மக்கள்தொகை

- வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை.
- 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப்படி, உத்திரப்பிரதேச மாநிலம் 199 மில்லியன் மக்கள்தொகையுடன் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மக்கள்தொகையில் 16 சதவீதத்தை உத்திரபிரதேசம் கொண்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 50% மக்கள்தொகை பின்வரும் 5 மாநிலங்களில் அடங்கியுள்ளது. அவை மகாராஷ்டிரா, பீகார், உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியபிரதேசம் ஆகும்.

மக்கள்தொகை அடிப்படையில்

முதல் 5 மாநிலங்கள்	கடைசி 5 மாநிலங்கள்
1.உத்திரபிரதேசம்	1. சிக்கிம்
2. மகாராஷ்டிரா	2. மிசோரம்
3. பீகார்	3. அருணாச்சல பிரதேசம்
4. மேற்கு வங்கம்	4. கோவா
5. மத்திய பிரதேசம்	5. நாகாலாந்து

https://t.me/tnpscfree

தமிழ்நாடானது 7.2 கோடி மக்கள் தொகையுடன் இந்திய அளவில் ஏழாவது இடத்தில் உள்ளது.

முதல் 5 மாவட்டங்கள்		கடைசி 5 மாவட்டங்கள்	
1. சென்னை	46,81,087	1. பெரம்பலூர்	6,64,511
2. காஞ்சிபுரம்	39,90,897	2. நீலகிரி	7,35,071
3. வேலூர்	39,25,105	3. அரியலூர்	7,52,481
4. திருவள்ளூர்	37,25,697	4. கரூர்	10,76,588
5. சேலம்	34,80,008	5. தேனி	12,43,684

மக்கள்தொகை அடர்த்தி

ஒரு சதுர கிலோமீட்டருக்குள் வசிக்கும் மொத்த மக்களின் எண்ணிக்கையே மக்கள்தொகை அடர்த்தி எனப்படும். உலகின் அதிக மக்கள்தொகை அடர்த்தி கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

2011ல் இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி – 382/ ச. கி.மீ.

முதல் 5 மாநிலங்கள்		கடைசி 5 மாநிலங்கள்	
1. பீகார்	1106	1. அருணாச்சலபிரதேசம்	17
2. மேற்கு வங்கம்	1028	2. மிசோரம்	52
3. கேரளா	860	3. சிக்கிம்	86
4. உத்திரபிரதேசம்	829	4. மணிப்பூர்	115
5.ஹரியானா	573	5. நாகாலாந்து	119

தமிழ்நாடு மக்கள்தொகை அடர்த்தி (555/1 ச.கி.மீ.க்கு) மேலும் மக்கள்தொகை அடர்த்தியின் அடிப்படையில் 12ம் இடத்தில் உள்ளது.

முதல் 5 மாவட்டங்கள்		கடைசி 5 மாவட்டங்கள்	
1. சென்னை	26,903	1. நீலகிரி	288
2. கன்னியாகுமரி	1106	2. ராமநாதபுரம்	320
3. திருவள்ளூர்	1049	3. பெரம்பலூர்	323
4. காஞ்சிபுரம்	927	4. சிவகங்கை	324
5. மதுரை	823	5. தர்மபுரி	332

10-ஆண்டுக்கான வளர்ச்சி வீதம்

- ஒரு நாட்டில் நிலப்பகுதியில் கடைசி 10 ஆண்டுகளில் மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியே மக்கள்தொகை வளர்ச்சி வீதம் எனப்படும்.
- இந்தியாவின் வளர்ச்சி வீதம் – 17.64% தமிழ்நாட்டின் வளர்ச்சி வீதம் – 15.60% (23 வது இடம்)

மக்கள்தொகை மாற்றம் / வளர்ச்சி

- பிறப்பு வீதம் என்பது 1000 மக்கட்தொகைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை.

1. இந்தியாவை பொருத்தவரை பிறப்பு வீதம் எப்போதும் இறப்பு வீதத்தை விட அதிகமாகவே இருக்கிறது.
2. இந்தியாவின் பிறப்பு வீதம் 1951ல் 39.9%-ஆக இருந்தது. இது 2011ல் 21.8%-ஆக குறைந்ததது.
3. மிக குறைந்த பிறப்பு வீதம் கொண்ட மாநிலம் – கேரளா (14.7%)
4. மிக அதிக பிறப்பு வீதம் கொண்ட மாநிலம் – உத்திரபிரதேசம் (29.5%)
5. தமிழ்நாட்டின் பிறப்பு வீதம் 2002ல் 18.5%-ஆக இருந்தது. இது 2011ல் 15.7%-ஆக குறைந்துள்ளது.
6. இறப்பு வீதம் – 1000 மக்கட்தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையை குறிக்கும். இந்தியா ⟶ 7.11% ; தமிழ்நாடு ⟶ 7.4%

இடம் பெயர்வு

இடம் பெயர்வு என்பது பிராந்தியங்கள் மற்றும் பிரதேசங்களிலுள்ள மக்களின் நகர்வைக் குறிக்கும். அந்நகர்வு உள்நாட்டிலோ அல்லது நாடுகளினிடையேவோ நடைபெறலாம்.

பிறப்பின் போதான எதிர்பார்க்கப்பட்ட சராசரி ஆயுள்

1. இது பிறக்கும்போதே வாழ்க்கையின் சராசரி எதிர்பார்ப்பைக் குறிக்கிறது.
2. இறப்பு வீதம் அதிகமாக இருக்கும்போது இது குறைவாகவே இருக்கும்.
3. இந்தியாவில் – 67.9 வருடம் (ஆண்கள் ⟶ 66.4 வருடம் ; பெண்கள் ⟶ 69.6 வருடம்)
4. தமிழ்நாட்டில் – 70.6 வருடம் (ஆண்கள் ⟶ 68.6 வருடம் ; பெண்கள் ⟶ 72.7 வருடம்)

பாலின விகிதம்

1. மக்கள் தொகையில் 1000 ஆண்களுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.
2. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆண் மற்றும் பெண்களின் சமநிலையை பற்றி தெரிந்துக் கொள்ள ஒரு முக்கிய சமூக குறியீடாக பாலின விகிதம் விளங்குகிறது.
3. இந்தியாவின் பாலின விகிதம் 940 / 1000

https://t.me/tnpscfree

அதிக பாலின விதம் கொண்ட மாநிலங்கள்		குறைந்த பாலின விதம் கொண்ட மாநிலங்கள்	
1. கேரளா	1084	1. டாமன் மற்றும் டையு	618
2. புதுச்சேரி	1038	2. தாத்ரா நாகர் ஹவேலி	775
3. தமிழ்நாடு	995	3. சண்டீகர்	818
4. ஆந்திர பிரதேசம்	992	4. டெல்லி	866
5. சட்டீஸ்கர்	991	5. ஹரியானா	877
6. மணிப்பூர்	987	6. அந்தமான் நிக்கோபர்	878

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாலின விதம் – 995 மற்றும் இந்திய அளவில் பாலின விகிதத்தில் 3வது இடத்தைப் பெற்றுள்ளது.

அதிக பாலின விதமுள்ள மாவட்டங்கள்		குறைந்த பாலின விதமுள்ள மாவட்டங்கள்	
1. நீலகிரி	1041	1. தர்மபுரி	946
2. தஞ்சாவூர்	1031	2. சேலம்	954
3. நாகப்பட்டினம்	1025	3. கிருஷ்ணகிரி	956
4. தூத்துக்குடி (மு) திருநெல்வேலி	1024	4. இராமநாதபுரம்	977
5. திருவாரூர்	1020	5. திருவள்ளூர்	983

குழந்தை பாலின விதம் (0 – 6 வயது வரை)

- மக்கட்தொகையில் 1000 ஆண் குழந்தைகளுக்கு நிகரான பெண் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.
- இந்தியாவில் - 919 / 1000

அதிக குழந்தை பாலின விதமுள்ள மாநிலங்கள்		குறைந்த பாலின விதமுள்ள மாநிலங்கள்	
1. அருணாச்சல பிரதேசம்	972	1. ஹரியானா	834
2. மிசோரம் & மேகாலயா	970	2. பஞ்சாப்	846
3. சட்டீஸ்கர்	969	3. ஜம்மு மற்றும் காஷ்மீர்	862
4. புதுச்சேரி	967	4. டெல்லி	871
5. கேரளா	964	5. சண்டிகர்	880

- தமிழ்நாட்டில் ⟶ குழந்தை பாலின விதம் - 946/1000 (14வது இடம்)
- அதிக குழந்தை பாலின விதமுள்ள மாவட்டம் ⟶ நீலகிரி (985), கன்னியாகுமரி (964)
- குறைந்த பாலின விதமுள்ள மாவட்டங்கள் ⟶ கடலூர் (896), அரியலூர் (897)

எழுத்தறிவு விதம்: மொத்த மக்கட்தொகையில் எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை விகிதம். இந்தியாவின் எழுத்தறிவு விதம் - 74.04% ; ஆண்கள் - 82.1% மற்றும் பெண்கள் - 65.5%

உயர்ந்த எழுத்தறிவு விதம்

மொத்தமாக (%)		பெண்கள் மட்டும் (%)	
1. கேரளா	94.0	1. கேரளா	92.1
2. லட்சத்தீவு	91.8	2. மிசோரம்	89.3
3. மிசோரம்	91.3	3. லட்சத்தீவு	87.9
4. கோவா	88.7	4. கோவா	84.7
5. திரிபுரா	87.2	5. திரபுரா	82.7

குறைந்த எழுத்தறிவு விதம்

மொத்தமாக (%)		பெண்கள் மட்டும் (%)	
1. பீகார்	61.8	1. பீகார்	51.5
2. அருணாச்சல பிரதேசம்	65.4	2. ராஜஸ்தான்	52.1
3. ராஜஸ்தான்	66.1	3. ஜார்க்கண்ட்	55.4
4. ஜார்க்கண்ட்	66.4	4. ஜம்மு காஷ்மீர்	56.4
5. ஆந்திர பிரதேசம்	67.0	5. உத்திரபிரதேசம்	57.2

- தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எழுத்தறிவு விதம் - 80.09% ; ஆண்கள் - 86.77% மற்றும் பெண்கள் - 73.44%
- தமிழ்நாடு எழுத்தறிவு விதத்தில் 14வது இடத்தில் உள்ளது.

உயர்ந்த எழுத்தறிவு விதம்

இடம் மொத்தமாக (%)		பெண்கள் மட்டும் (%)	
1. கன்னியாகுமரி	91.75	1. கன்னியாகுமரி	90.5
2. சென்னை	90.18	2. சென்னை	87.2
3. தூத்துக்குடி	86.16	3. தூத்துக்குடி	81.8
4. நீலகிரி	85.20	4. காஞ்சிபுரம்	80.2

இறப்பு விதம் (Mortality Rate)

- **பேறு காலத்திற்குபின் குழந்தைகள் இறப்பு விதம்** (NNM): பிறந்த குழந்தைகள் பிரசவத்திற்கு பிறகு இறப்பது (1000 பிறப்புகளுக்கு)
- **குழந்தை இறப்பு விதம்** (CMR): 0 முதல் 5 வயதுள்ள குழந்தைகள் இறப்பது (1000 குழந்தைகளுக்கு)

https://t.me/tnpscfree

2011 கணக்கெடுப்பின் படி	NNM	CMR
இந்தியா	24	55
தமிழ்நாடு	11	25

பச்சாம் குழந்தை இறப்பு வீதம் IMR: ஒரு வயது பூர்த்தியடைவதற்குள் இறக்கும் குழந்தைகளின் வீதம் குழந்தை இறப்பு வீதம் எனப்படும். இது 1000 பிறப்புகளுக்கு எத்தனை இறப்பு என்பதாகும்.

மகப்பேறு இறப்பு வீதம் MMR: ஒரு லட்சம் பிரசவத்தில் எத்தனை தாய்மார்கள் இறக்கின்றனர் என்பதை மகப்பேறு இறப்பு வீதம் என்கிறோம். பேறுகாலம் அல்லது குழந்தை பிறப்பின் போது உண்டாகும் சிக்கல்களால் ஏற்படும் இறப்பானது "தாய்மை இறப்பு வீதத்தை" குறிக்கிறது.

சென்செஸ் / நிதி ஆயோக்	IMR			MMR		
	2011 சென்செஸ் படி	2016 நிதி ஆயோக் அறிக்கையின் படி	2017 மாதிரி பதிவுத் திட்டத்தின் படி	2011 சென்செஸ் படி	2014–2016 நிதி ஆயோக் அறிக்கையின் படி	2015–2017 மாதிரி பதிவுத் திட்டத்தின் படி
இந்தியா	44	34	33	178	130	122
தமிழ்நாடு	22	17	16	90	66	63

இணைப்பு - II

2020 – 21 நிதிநிலை அறிக்கையின் (BUDGET) முக்கியக் கூறுகள்

2020 - 21க்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீத்தாராமன் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

2020 - 21 மத்திய பட்ஜெட்டின் முக்கிய கூறுகள்

கருப்பொருள் – "எளிதான வாழ்க்கை"

மூன்று முக்கிய கருப்பொருள்கள்

- உத்வேக இந்தியா- அனைத்து சமூகத்தினருக்கும் சுகாதாரம், கல்வி மற்றும் சிறந்த வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.
- அனைவருக்குமான பொருளாதாரம் வளர்ச்சி – "சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ்"
- சமூக அக்கறை: மனிதாபிமான மற்றும் இரக்கமுள்ள சமூகத்தை உருவாக்குதல்.
- இக்கருப்பொருள்களின் இலக்குகளை அடைய உதவும் உந்துகோல்கள்
  - ஊழலில்லா நிர்வாகம், கொள்கையால் வழிநடத்தப்படும் நல்லாளுமை.
  - தரமான / போதுமான நிதி ஆதாரங்களை உருவாக்குதல்

உத்வேகமான இந்தியாவின் மூன்று கூறுகள்

- விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராமப்புற மேம்பாடு
- ஆரோக்கியம், சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம்
- கல்வி மற்றும் திறன் மேம்பாடு

16 அம்ச செயல் திட்டங்கள் (விவசாயம், பாசனம் / கிராம முன்னேற்றம்)

- 16 அம்ச திட்டத்தை செயல்படுத்த ₹2.83 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்காக ₹ 1.60 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கிராமபுற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசிற்காக ₹1.23 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- விவசாயக்கடன்
  - 2020 - 21ம் நிதியாண்டிற்கு ₹ 15 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

- விவசாயக்கடன் அட்டை (KCC) PM KISAN நிதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- NABARD மறுநிதி வழங்கல் திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

- 100 நீர் பற்றாக்குறை மாவட்டங்களுக்கு விரிவான திட்டங்கள்.
- **நீலப் பொருளாதாரம்**
  - 2024 - 25ம் ஆண்டிற்குள் ₹1 லட்சம் கோடி மதிப்பிலான மீன் வளங்கள் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
  - 2022 - 23ம் ஆண்டிற்குள் மீன் உற்பத்தி இலக்கு - 20 லட்சம் டன்.
  - 3477 சாகர் மித்ராக்கள் மற்றும் 500 மீன் பண்ணை உற்பத்தியாளர் குழுமம் போன்றவை மீன் வள விரிவாக்கத்தில் இளைஞர்கள் பங்கு பெற ஊக்குவிக்கின்றன.
  - ஆல்காக்களின் வளர்ச்சி, கடல் உணவு, கூண்டில் மீன் வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவித்தல்.
  - கடல்சார் மீன் வளங்களின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நிர்வாகத்திற்கான கட்டமைப்பை வகுத்தல்
- **கிஷான் ரயில்**
  - இந்தியன் ரயில்வேயால் நிறுவப்படும்.
  - தனியார் - அரசு பங்களிப்பு (PPP) மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
  - அழுகும் பொருட்கள் விநியோகத்திற்கான தடையற்ற தேசிய குளிர் விநியோக சங்கிலி கட்டமைக்கப்படும்.
  - வேளாண் வணிகங்களில் அதிகம் கவனம்: பால், இறைச்சி, மீன் உள்ளிட்ட அழுகும்ட பொருட்களுக்கு விரைவு குளிர்சாதன வசதியுள்ள இரயில் பெட்டிகள் இணைக்கப்படவுள்ளது.
- **கிசான் உதான் திட்டம் – விவசாய பொருட்களை சர்வதேச அளவில் ஏற்றுமதி செய்வதை வலிமைப்படுத்தல்**
  - வான்வழிப் போக்குவரத்து துறையால் அமல்படுத்தப்படவுள்ளது.
  - பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வான்வழிகள் இதில் அடங்கும்.
  - வடகிழக்கு மற்றும் பழங்குடியின மாவட்டங்களில் வேளாண் உற்பத்தி மற்றும் பகிர்மானம் சிறப்பாக நடைபெறும் பொருட்டு செயல்படுத்தப்பட உள்ளது.
- "ஒரு பொருள் ஒரு மாவட்டம்" - தோட்டக்கலை பயிர்களை சிறந்த முறையில் சந்தைப்படுத்தவும் ஏற்றுமதி செய்வதற்காகவும் கொண்டுவரப்பட்டது.
- இராசாயண உரங்களை மிதமான அளவில் பயன்படுத்துதல், பாரம்பரிய உயிரி உரங்கள் மற்றும் புதுமையான உரங்களை சமமான அளவில் பயன்படுத்த வேண்டும்.
- **இயற்கை உயிர் சார்ந்த மற்றும் ஒருங்கிணைந்த விவசாய நடவடிக்கைகள்**
  - ஜெய்விக் கெட்டி போர்டல் தேசிய இயற்கை வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்யும் இணையதளம்.

- இயற்கை வேளாண்மைக்கான பூஜ்ஜிய நிதி நிலை அறிக்கை (2019 ஜூலை நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது) சேர்க்கப்படும்.
  - மானாவாரி பகுதிகளில் ஒருங்கிணைந்த விவசாய முறைகள் விரிவாக்கபடுதல்.
  - பலஅடுக்குப் பயிர், தேனீ வளர்ப்பு, சூரிய விசையிக்கக் குழாய்கள் மற்றும் பயிர் அல்லாத பருவத்தில் சூரிய ஆற்றல் உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது.
- **PMKUSUM** விரிவாக்கம் செய்யப்படும்.
  - 20 லட்சம் விவசாயிகளுக்கு தனியாக சூரிய விசையியக்க குழாய்கள் வழங்கும் திட்டம்.
  - மேலும் 15 லட்சம் விவசாயிகளுக்கு கட்டம் இணைக்கப்பட்ட விசையியக்க குழாய்கள் சூரிய மையமாக்க உதவி அளிக்கப்படும்.
  - விவசாயிகள் தங்கள் தரிசு நிலங்களில் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, அந்த மின் சக்தியை மின்சார விநியோக அமைப்புகளுக்கு விற்று வருமானம் பெற வழி வகை செய்யப்படும்.
- **கிராம சேமிப்பு திட்டம்**
  - சுய உதவி குழுக்களால் நடத்தப்படும்.
  - விவசாயிகளின் சேமிப்பு திறனை அதிகப்படுத்துதல் மற்றும் போக்குவரத்து சார்ந்த செலவுகளை குறைத்தல்.
  - சுய உதவி குழுக்கள், பெண்கள் தான்ய லட்சுமியாக நிலைக்கு மீண்டும் மாற்றுவது.
- நபார்டு உதவியுடன் புவி குறியீட்டு வேளாண் சேமிப்பு கிடங்குகள் மற்றும் குளிர்பதன சேமிப்பகங்களை அமைத்தல்.
- கிடங்குகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) விதிமுறைகளின் படி சேமிப்பு கிடங்குகள் அமைக்க வேண்டும்.
  - நாட்டின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும் திறன் மிகுந்த சேமிப்பு இடங்களை மண்டல/ தாலுகா அளவில் அமைக்க நிதி வழங்கப்படும்.
  - இந்திய உணவுக்கழகம் (FCI) மற்றும் மத்திய சேமிப்புகிடங்கு கழகம் (CWC) ஆகிய நிறுவனங்கள் இந்த சேமிப்புகிடங்குகளை நிர்வகிக்கும்.
- **கால்நடைகள்**
  - 2025க்குள் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குதல், தற்போதுள்ள 53.5 மில்லியன் மெட்ரிக் டன் உற்பத்தியை 108 மில்லியன் மெட்ரிக் டன்னாக பெருக்குதல்.
  - செயற்கை விந்தணுவாக்கத்தை 70% ஆக உயர்த்துதல் (தற்போது 30%)
  - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் உறுதி திட்டத்தின் மூலம் தீவனப் பண்ணைகளை உருவாக்குதல்.
  - கால்நடைகளுக்கு ஏற்படும் கால் மற்றும் கோமாரி, கருசிதைவு நோய் மற்றும்ஆட்டுக் கொல்லி நோய்களை 2025க்குள் நீக்குதல்.

https://t.me/tnpscfree

- **தீன்தயாள் அந்தயோதயா யோஜனா**
  - 50 லட்சம் வீடுகளில் வறுமையை ஒழிக்க 58 லட்சம் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்படும்.

ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் சுத்தமான குடிநீர்த் தேவைகள்

- ஒட்டு மொத்த சுகாதார துறைக்கு ₹ 69000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இதில் ₹6400 கோடி தொகையை PMJAY (பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டம்) -க்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
  - PMJAYன் கீழ் 20000 மருத்துவமனைகள் இணைக்கப்பட்டுள்ளது.
  - செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் போன்ற தொழில் நுட்பங்கள் மூலம் குறிப்பிட்ட நோய்களை கண்டறிய.
  - நிதி ஆயோக் குறிப்பிட்ட உத்வேக மாவட்டங்களில் ஆயுஷ்மான் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாத மருத்துவமனைகளை முதல் கட்டத்திலே இணைத்தல்.
- ஜன் அஷாதி கேந்திரா திட்டத்தின் கீழ் 2000 மருத்துவப் பொருட்கள்/300 மருத்துவ அறுவை சிகிச்சை உபகரணங்கள் 2024க்குள் அனைத்து மாவட்டங்களிலும் கிடைக்கச் செய்தல்.
- 2025க்குள் காசநோயை இந்தியாவிலிருந்து நீக்க காசநோய் ஹரேகா தேஷ் ஜீதாகா பிரச்சாரம் தொடங்கப்படும்.
- **ஜல் ஜீவன் திட்டம்**
  - ₹ 3.60 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
  - இதில்₹ 11,500 கோடி 2020-21ம் நிதியாண்டிற்குஒதுக்கப்பட்டுள்ளது.
  - உள்ளூர் நீர்வளங்களை பெருக்குதல், இருக்கும் நீராதாரங்களை புதுப்பித்தல், மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்தல், கடல் நீரை குடிநீராக மாற்றுதல் போன்றவை.
  - ஒரு மில்லியனுக்கும் மேல் மக்கள் தொகையுள்ள நகரங்களில் இத்திட்டம் நடப்பு ஆண்டிலேயே குறிக்கோளை அடைய ஊக்குவிக்கப்படும்
- **தூய்மை இந்தியா இயக்கம் 2020-21**
  - ₹ 12,300 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
  - ODF Plus - திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை தக்கவைத்துக் கொள்ள
  - கழிவு நீர் மேலாண்மையில் சிறந்த கவனம் செலுத்துதல்
    - திடக்கழிவுகளை சேகரித்தல், கழிவுகளை தரம் பிரித்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் போன்றவை கவனத்தில் கொண்டு வரப்படும்.
- **கல்வி மற்றும் திறன் சார் பயிற்சிகள்**
- கல்விக்காக ₹ 99,300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- நடப்பாண்டில் (2020-21) ₹ 3000 கோடி திறன் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

- புதிய தேசிய கல்விக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும்.
- காவல் அறிவியல், தடய அறிவியல், சைபர் - தடயவியல் போன்ற துறைகளுக்காக தேசிய காவல் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் போன்றவை நிறுவப்பட உள்ளன.
- தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் கீழுள்ள முதல் 100 நிறுவனங்களில் முழுமையான இணையவழிக் கல்வித் திட்டத்தை பட்டப்படிப்பு தரத்திற்கு வழங்குதல்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் புதிய பொறியாளர்களுக்கு தொழிலங்களில் 1 வருட உள்ளகப்பயிற்சி (Internship) வழங்க உதவி செய்தல்.
- அரசு தனியார் பங்களிப்புடன் தற்போதுள்ள ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைகளுடன் ஒரு மருத்துவக்கல்லூரியை இணைத்தல்.
- சுகாதார மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சகங்களிடையே வடிவமைக்கப்படவுள்ள சிறப்பு படிப்புகள்.
  - வெளிநாட்டிலுள்ள ஆசிரியர்கள், செவிலியர்கள், பாரா மருத்துவ ஊழியர்கள் மற்றும் பாராமரிப் பாளர்களின் கோரிக்கையை பூர்த்திச் செய்தல்.
- மார்ச் 2021க்குள் 150 உயர்கல்வி நிலையங்களை மேம்படுத்துதல்
- வெளி வணிக கடன் மற்றும் அந்நிய நேரடி முதலீடுகளை கல்வித் துறையில் ஈர்ப்பது.
- **IND - SAT திட்டம்**

  இந்தியாவில் கற்றல் திட்டத்தை ஆசிய மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளில் செயல்படுத்துதல்.

பொருளாதார மேம்பாடு

தொழில் வணிகம் மற்றும் முதலீடு

- தொழிற்சாலை மற்றும் வணிக மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் (2020-21) ₹ 27,300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- முதலீட்டுக்கான அனுமதி மையம் -
  - இணையதளத்தின் வாயிலாக அனைத்து வசதிகளும் / உதவிகளும் செய்துதரப்படும்.
  - முதலீட்டுக்கான அனுமதி தொடக்கத்தில் இருந்து முடிவு வரை இணையதளம் வாயிலாகவே வழங்கப்படும்.
- புதிதாக 5 பொலிவுறு நகரங்கள் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது.
- அலைபேசிகள், மின்னனு சாதனங்கள் மற்றும் குறை கடத்திகள் போன்றவற்றை உருவாக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய ஜவுளித் தொழில்நுட்பத் திட்டம்
  - 2020-21 முதல் 2023 - 24 வரை நான்கு கட்டங்களாக அமல்படுத்தப்பட உள்ளது.
  - ₹ 1480 கோடி தோராயமாக இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

- ஜவுளித் துறையில் இந்தியாவை உலக அரங்கில் முதலிடம் பெறச் செய்வது இதன் நோக்கமாகும்.

- **NIRVIK** திட்டம் - ஏற்றுமதி கடன் பட்டுவாடாவை உயர்த்துவதற்காக தொடங்கப்பட்ட புதிய திட்டம்
  - சிறு ஏற்றுமதியாளர்களுக்கு சந்தா தொகையை குறைத்தல்.
  - ஏற்றுமதியில் ஈடுபடுபவர்களுக்கு அதிக ஆயுள் காப்பீடு வழங்குதல்.
  - உரிமைகோரல் தீர்வுக்கான செயல்முறையை எளிமையாக்குதல்.
- அரசு மின் சந்தை (GeM) உற்பத்தி மதிப்பை ₹ 3 லட்சம் கோடி வரை உயர்த்துதல்.
- ஏற்றுமதி பொருட்களுக்கான தீர்வைகள் மற்றும் வரிகளை மதிப்பீடு செய்ய திட்டம் கொண்டுவரப்பட உள்ளது.
  - மத்திய மாநில மற்றும் உள்ளூர் அளவில் விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகள் டிஜிட்டல் முறையில் திருப்பி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன் இந்த வரிகளை விடுவிக்கவோ திரும்ப பெறவோ அனுமதியில்லை.
- பிரதம மந்திரியின் தொலைநோக்கு திட்டமான "பூஜ்ஜிய குறைபாடு - பூஜ்ஜிய விளைவு" உற்பத்தி திட்டத்தின் படி அனைத்து அமைச்சங்களும் தரம் மிகுந்த ஆணைகளை வழங்க வேண்டும்.
- **உட்கட்டமைப்பு**
- இந்தியாவின் உட்கட்டமைப்பு வசதிக்காக அடுத்த 5 ஆண்டுகளில் ₹ 100 லட்சம் கோடி முதலீடு செய்ய முடிவெடுக்கபட்டுள்ளது.
- தேசிய உட்கட்டப்பு தொடர் (NIP)
  - டிசம்பர் 31, 2019ல் செயல்படுத்தப்பட்டது.
  - இத்திட்டத்தின் மதிப்பு ₹103 லட்சம் கோடி.
  - 6500ம் மேற்பட்ட திட்டங்கள் அனைத்து துறைகளிலும் தொடங்கப்பட்டுள்ளன. இவை அளவு மற்றும் வளர்ச்சி நிலையின் படி வகைப்படுத்தப்படுகின்றன.
- தேசிய தளவாடங்கள் கொள்கை:
  - விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
  - மத்திய அரசு, மாநில அரசு மற்றும் முக்கிய கட்டுப்பாட்டாளர்களின் பங்குகளை தெளிவுப்படுத்துதல்.
  - ஒற்றைச் சாளர மின் தளவாட சந்தைகளை உருவாக்குதல்.
  - வேலைவாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாடு மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை போட்டிக்கு உட்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.
- தேசிய திறன் மேம்பாட்டு முகமை உருவாக்கப்பட்டுள்ளது.
- கட்டமைப்புச்சார்ந்த திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்க சிறப்பு கவனம்.
- திட்ட தயாரிப்பு வசதி
  - உள் கட்டமைப்பு திட்டங்களை முன் மொழிய.
  - உட்கட்டமைப்புப் பணிகளில் இளம் பொறியாளர்ள், நிர்வாகம் பயின்ற பட்டதாரிகள், பொருளாதாரம் பயின்ற வல்லுணர்கள் ஆகியோரை ஈடுபடுத்துவது இதன் நோக்கமாகும்.

- தொழில் தொடங்குவதில் இளைஞர் சக்தியை பயன்படுத்த அரசாங்க உட்கட்டமைப்பு நிறுவனங்கள் தொடங்கப்பட உள்ளன.
- 2020 - 21ஆம் ஆண்டிற்கான போக்குவரத்து கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ₹ 1.7 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- **நெடுஞ்சாலைகள்**
- தேசிய நெடுஞ்சாலைகளை துரிதமாக மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
  - 2500 கி.மீ. நுழைவு கட்டுப்பாட்டு நெடுஞ்சாலைகள்.
  - 9000 கி.மீக்கு பொருளாதார வழித்தடங்கள்.
  - 2000 கி.மீ. தூரத்திற்கு கடலோர மற்றும் துறைமுக சாலைகள் இணைத்தல்.
  - 2000 கி.மீ. யுக்தி சார்ந்த நெடுஞ்சாலைகள் உருவாக்குதல்
- டெல்லி - மும்பை விரைவு தேசிய நெடுஞ்சாலை மற்றும் இதர இரண்டு நெடுஞ்சாலை 2023க்குள் கட்டமைப்பது.
- சென்னை - பெங்களூரு விரைவு வழிசாலை தொடங்கப்பட்டுள்ளது.
- 6000 கி.மீ. தொலைவில் ஆன 12 நெடுஞ்சாலை தொகுப்புக்களை 2024க்குள் புதுப்பித்தல்.

இந்திய ரயில்வே

- **ஐந்து நடவடிக்கைகள்**
- ரயில்வேக்கு சொந்தமான இரயில் தடங்களின் இருபுறமும் உள்ள நிலத்தில் பெரிய சூரிய மின் சக்தி திறனமைப்பு நிறுவப்பட உள்ளது.
- அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் 4 இரயில் நிலைய மேம்பாட்டு திட்டங்களும், 150 பயணிகள் இரயில் இயக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.
- முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்க மேலும் சில தேஜாஸ் இரயில்கள் இயக்கப்பட உள்ளது.
- மும்பை - அகமதாபாத் இடையே அதிவேக இரயிலை விரைவாக இயக்குதல்.
- 148கி.மீ. தொலைவிலான பெங்களூரு புறநகர் போக்குவரத்து திட்டத்திற்காக ₹18,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு மெட்ரோ முறையில் கட்டணம் வசூலிக்கப்படும். மத்திய அரசு இத்திட்டத்திற்கு 20% பங்கு வழங்குவதோடு. திட்டச்செலவில் 60%க்கு வெளி உதவி வசதிகளை ஏற்படுத்தித் தரும்.

இந்திய ரயில்வேயின் சாதனைகள்

- 550 இரயில் நிலையங்களில் வை-பை வசதி செய்யப்பட்டுள்ளது.
- ஆளில்லா ரயில்வே கேட் முழுவதும் நீக்கப்பட்டுள்ளது.
- 27000 கி.மீ தூரத்திற்கு தண்டவாளங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

துறைமுகம் மற்றும் நீர் வழிகள்

- குறைந்தது ஒரு பெரிய துறைமுகத்தையாவது நிறுவனமயமாக்கி அதில் நடைபெறும் சரக்கு மற்றும் சேவை பரிமாற்றங்களை பட்டியலிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பன்னாடுகளின் மாதிரி திட்டங்களை இந்திய துறைமுகத்தில் செயல்படுத்துதல்.
- பிரதம மந்திரியின் ஆர்த் கங்கா திட்டப்படி நதியோரங்களில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துதல்.

விமான நிலையங்கள்

- உடான் திட்டத்தின் கீழ் கூடுதலாக 100 விமான நிலையங்கள் 2024ம் ஆண்டுக்குள் உருவாக்கப்படும்.
- விமான வழிதடங்களை உபயோகிக்கும் விமானங்களின் எண்ணிக்கையை 600லிருந்து 1200 ஆக உயர்த்துதல்.

மின்சாரம்

- ஸ்மார்ட் மீட்டர் முறையை ஊக்குவித்தல்.
- மின்சார பங்கீட்டுத் துறையை சீரமைத்தல்.

ஆற்றல்

- 2020-21ஆம் ஆண்டில் ஆற்றல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி துறைக்காக ₹22000 கோடி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது
- தேசிய எரிவாயு மின்சார அமைப்பை 16200 கி.மீ. லிருந்து 27000 கி.மீ. விரிவாக்குதல்.
- வெளிப்படையான விலையை நிர்ணயித்தல் மற்றும் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்கான கூடுதல் சீர்திருத்தங்கள் .

புதிய பொருளாதாரம்

- புதிய தொழில்நுட்பங்களின் நன்மைகளைப் பெற:
  - தனியார் துறையின் உதவியோடு நாடு முழுவதும் தரவு மைய பூங்காக்கள் கொள்கைகள் வகுக்கப்படும்.
  - பாரத்நெட் திட்டத்தின் மூலம் 1,00,000 கிராம பஞ்சாயத்துக்களை "வீடு வரை கண்ணாடி இழை இணைப்பு (FTTH)" சேவை மூலம் ஓராண்டுக்குள் இணைத்தல்.
  - 2020 - 2021ம் ஆண்டிற்கு பாரத்நெட் திட்டத்தின் கீழ் ₹ 6,000 கோடி முன்மொழியப் பட்டுள்ளது.
- புதிய நிறுவனங்களை ஊக்குவிக்க முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகள்
  - தடையற்ற பயன்பாடு மற்றும் அறிவு சார் சொத்துரிமைகளை (IPR)களைப் பதிவு செய்ய டிஜிட்டல் தளம் உருவாக்குதல்
  - புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகள் உட்பட பல்வேறு தொழில்நுட்பத் துறைகளில் அறிவு சார் மொழி பெயர்ப்பு தொகுதியை (Clusters) உருவாக்குதல்.

  - கருத்துருவின் சான்றுகளை வடிவமைத்தல், கட்டமைத்தல் மற்றும் சரிபார்த்தல் மற்றும் தொழில் நுட்ப தொகுதிகளை அளவிடுதல், சோதனைபடுத்துதல் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தி வசதிகளை நிறுவுதல்.
  - இந்தியாவின் மரபணு நிலப்பரப்பை வரைதல். விரிவான தரவுத்தளத்தை உருவாக்க இரண்டு தேசிய அளவிலான அறிவியல் திட்டங்கள் தொடங்குதல்.
  - முதல் நிலை தொழில் தொடங்கும் எண்ணங்களுக்கு உயிர் கொடுப்பதற்காகவும் அதனை மேம்படுத்துவதற்காகவும் ஊக்கத்தொகை உட்பட ஆரம்பக்கால வாழ்க்கை நிதி வழங்கப்படும்.
- குவாண்டம் தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகளுக்கான தேசிய திட்டத்திற்கான ₹8000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக அக்கறை

- இக்கருப்பொருளின் கீழ் கவனம் செலுத்தப்படும் பகுதிகள்
  - பெண்கள் மற்றும் குழந்தைகள்
  - சமூக நலம்
  - சுற்றுலா மற்றும் பண்பாடு
- 2020 -21ஆம் நிதியாண்டில் ஊட்டச்சத்து தொடர்பான திட்டத்திற்கு ₹35,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- பெண்கள் முன்னேற்ற திட்டத்திற்காக ₹28,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தாய்மைக்குள் நுழையும் ஒரு பெண்ணின் வயது பற்றிய பிரச்சனையை தீர்க்க ஒரு பணிக்குழு நியமிக்கப்படும். அதன் பரிந்துரைகள் 6 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தால் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களை பரவலாக ஏற்றுக் கொள்ள நிதிஉதவி அளிக்கப்படும்.
- கழிவுநீர் அமைப்புகள் மற்றும் செப்டிக் டேங்க்குகள் மனிதர்களால் சுத்தம் செய்யப்படுவதை நிறுத்த வழிவகை செய்யப்படும்.
- 2020-21ஆம் ஆண்டிற்கு பட்டியல் சாதியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக ₹85000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ₹53700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2020-21ஆம் ஆண்டில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ₹9500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா மற்றும் பண்பாடு

- 2020-21ம் ஆண்டிற்கு மட்டும் ₹2500 கோடி சுற்றுலா மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2020-21ம் ஆண்டில் சுற்றுலாத் துறை அமைச்சகத்திற்கு ₹3150 கோடி என்பது முன் மொழியப் பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

- சுற்றுலாத்துறை அமைச்சகத்தால் அனைத்திந்திய பாரம்பரிய மற்றும் கலாச்சார பாதுகாப்பு பல்கலைக்கழகம் நிகர் நிலை பல்கலைக்கழக அந்தஸ்துடன் அமைக்கப்பட உள்ளது.
- 5 – தொல்லியல் அகழாய்வு இடங்களை அருங்காட்சியமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன:
  - ராகிகார்கி (ஹரியானா)
  - ஹஸ்தினாபூர் (உத்திரப்பிரதேசம்)
  - சிவசாகர் (அஸ்ஸாம்)
  - தோலவீரா (குஜராத்)
  - ஆதிச்சநல்லூர் (தமிழ்நாடு)
- மேலும் ஜனவரி 2020ன் போது கொல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தை புணரமைக்கவும் இந்தியப் பிரதமர் உத்திரவிடப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
- மேலும் கொல்கத்தாவில் உள்ள வரலாற்று பழமை வாய்ந்த இந்திய அரசு காசாலையில் புதிய நாணய சேகரிப்பு மற்றும் வணிக அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- மேலும் நாட்டில் உள்ள நான்கு அருங்காட்சியகங்களை புதுப்பிக்கவும் புணரமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- பழங்குடியினருக்கான அருங்காட்சியகம் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் தொடங்கப்பட உள்ளது.
- தற்போது குஜராத் மாநிலத்தில் உள்ள சிந்து சமவெளி நாகரிக கடல்சார் நகரான 'தேசிய கடல்சார் அருங்காட்சியகம்' கப்பல் வாணிப அமைச்சகத்தால் அமைக்கப்பட உள்ளது.
- மாநில அரசுகள் முக்கியமான சில இடங்களுக்கு நில வரைபடங்கள் உருவாக்கவும் அதற்கான நிதித்திட்டங்களை வகுக்கவும் மத்திய அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான மானியங்கள் 2020-21ஆம் ஆண்டில் மத்திய அரசால் மாநிலங்களுக்கு வழங்கப்படும்.

சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு

- இதற்காக 2020-21ம் ஆண்டில் ₹4400 கோடி ஒதுக்கீப்பட்டுள்ளது.
- கார்பன் வெளியேற்றம் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை விட அதிகமாக உள்ள சில பழைய அணல் மின் நிலையங்களை மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ஒரு மில்லியனுக்கு அதிகமாக மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான காற்றை உறுதி செய்வதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தும் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.
- ஒரு மில்லியனுக்கு அதிகமாக மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான காற்றை உறுதி செய்வதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தும் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.
- டெல்லி தலைமை செயலகத்தில் பேரிடர் தடுப்பு மற்றும் உட்கட்டமைப்புக்கான கூட்டணியை (CDRI) பிரதமர் தொடங்கியுள்ளார். இதுவே சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டமைப்புக்கு (ISA) பின் எடுக்கப்பட்ட இரண்டாவது சர்வதேச முன் முயற்சி ஆகும்.

ஆளுகை

- தூய்மையான ஊழலற்ற கொள்கை சார்ந்த நல்லெண்ணத்துடன் நம்பிக்கையாக இயங்கும் அரசாங்கம்
- வரி நிர்வாகத்தினால் நேர்மை மற்றும் செயல்திறனை கொண்டு வர வரி செலுத்துவோர் சாசனம் சட்டமயமாக்கப்பட உள்ளது.
- குடிமைப் பண்பு கொண்ட கம்பெனி சட்டத்தை குற்றவியல் கட்டுப்பாட்டுச் சட்டமாக திருத்தம் செய்யப்பட உள்ளது.
  - இச்சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு சோதித்த பின்பு இது போன்று வேறு திட்டங்களும் திருத்தப்படும்.
- அரசு மற்றும் பொதுத்துறை வங்கிகளுக்கான அரசிதழில் வெளியிடப்படாத வேலை வாய்ப்பில் சீர்திருத்தம் கொண்டு வரப்படும்.
  - **தேசிய ஆட்சேர்ப்பு நிறுவனம்** (NRA)
  - ஆட்சேர்ப்புக்கான ஆன்லைன் பொது தகுதி தேர்வு நடத்த
  - ஒவ்வொரு மாவட்டத்திலும், குறிப்பாக உத்வேக மாவட்டங்களில் கணினி அடிப்படையிலான தேர்வு மையம் அமைக்கப்படும்.
- ஒப்பந்தச் சட்டம் பலப்படுத்தப்படும்
- சிறந்த திறமை மற்றும் தொழில் முறை நிபுணர்களை ஈர்ப்பதற்கு பல்வேறு மற்றும் சிறப்பு அமைப்புகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு உட்பட நியமனம் செய்ய ஒரு வலுவான வழிமுறை உருவாக்கப்படும்.
- **அலுவல் புள்ளி விவரங்களுக்கான புதிய தேசிய கொள்கை**
- செயற்கை நுண்ணறிவு உட்பட பல புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
  - நவீனமயமாக்கப்பட்ட தரவு சேகரிப்பு, ஒருங்கிணைந்த தகவல் தளம் மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை பரப்புதல் ஆகியவற்றை அடைவதற்காக திட்டம் வகுத்தல்.
- 2022ம் ஆண்டு G20 மாநாட்டை இந்தியாவில் நடத்த ₹100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- **வடகிழக்கு மண்டலத்தை மேம்படுத்துதல்**
  - ஆன்லைன் தளம் மூலம் வடகிழக்கு மாநிலத்திற்கு நிதி அளித்தலை மேம்படுத்துதல்.
  - பலதரப்பு மற்றும் இருதரப்பு நிதி நிறுவனங்களின் நிதி உதவியை பெற அணுக செய்தல்
- **ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களின் மேம்பாடு**
  - இதற்காக ₹30,757 கோடி 2020-21ம் நிதியாண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.
  - லடாக் யூனியன் பிரதேசத்தின் மேம்பாட்டிற்காக மட்டும் ₹5,958 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

நிதித்துறை

- பொதுத்துறை வங்கிகளில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள்
  - 10 வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு 4 வங்கிகளாக மாற்றப்பட்டன.
  - ₹ 3,50,000 கோடி மூலதனம் செலுத்தப்பட்டது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் அதிக தொழில்முறை ஆகியவற்றைக் கொண்டு வர ஆளுமைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
- மூலதனச் சந்தையை அணுக சில பொதுத் துறை வங்கிகளை ஊக்குவிப்பதன் மூலம் மூலதனத்தை அதிகரிக்கலாம்.
- ஒரு வைப்பீட்டாளருக்கான வைப்புத் தொகை காப்பீட்டை 1லட்சத்திலிருந்து 5 லட்சமாக மாற்ற வைப்புத் தொகை காப்பீட்டு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்திற்கு (DICGC) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- வலுவான வழிமுறை மூலம் அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகளை கண்காணித்தல் மற்றும் வைப்பீட்டாளர்களின் தொகையை பாதுகாத்தல்.
- வங்கி ஒழுங்கு முறை சட்டத்தை திருத்துவதன் மூலம் கூட்டுறவு வங்கிகள் பலப்படுத்தப்படும்.
  - தொழில்முறையை அதிகரித்தல்.
  - மூலதனத்தை அணுக வழி செய்தல்.
  - ரிசர்வ் வங்கியின் மூலம் பொதுத்துறை வங்கிகளில் ஆளுமைத்திறனை அதிகரிக்கச் செய்தல்.
- கடன் மீட்புக்கான வங்கி சாரா நிதி நிறுவனத்தின் தகுதி வரம்பு இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது.
  - சொத்து அளவு – 500 கோடியிலிருந்து 100 கோடியாக
  - கடன் அளவு – 1 கோடியிலிருந்து 50 லட்சம்
- வங்கித் துறையில் தனியார் மூலதனம்
  - இந்திய தொழில்துறை மேம்பாட்டு வங்கியின் (IDBI) அரசு பங்குகளை தனியார், சில்லறை ம ற்றும் நிறுவன முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை மூலம் விற்கப்படும்.
- வேலை இயக்கத்தன்மையை எளிமைப்படுத்துதல்
  - அனைவருக்குமான ஓய்வூதிய திட்டத்தை தன்னியக்க பதிவாக மாற்றுதல்.
  - திரட்டப்பட்ட மூலதனத்தை பாதுகாக்க கையாளப்படும் இடைப்பட்ட செயல்பாட்டு முறையாகும்.
- இந்திய ஓய்வூதிய தொகைக்கான ஒழுக்கலாற்று மேம்பாட்டு (PERDAI) ஆணையச் சட்டத்தில் திருத்தம்.
- PERDAI இன் ஒழுங்காற்று பணியை வலுப்படுத்துதல்.
- PERDAI யிலிருந்து அரசு ஊழியர்களுக்கான தேசிய ஓய்வூதிய திட்ட அறக்கட்டளையை பிரித்தல் (NPS).
- அரசு ஊழியர்களைத் தவித்து பிற ஊழியர்களுக்கான ஓய்வூதிய அறக்கட்டளை உருவாக்க வழி செய்தல்.

காரணி ஒழுங்கலாற்று சட்டம் (2011)-ல் திருத்தம்

- TReDS- மூலம் MSMEகளுக்கு விலைப்பட்டியல் நிதிஉதவியை விரிவாக்க வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு வழிவகை செய்தல்.
- வங்கிகளின் மூலம் MSME தொழில்முனைவோர்களுக்கு கடனுதவி வழங்க புதிய திட்டம் உருவாக்கப்படும்.
  - அரை சமபங்காக கணக்கிடுதல்.
  - MSME க்கான கடன் உத்தரவாத அறக்கட்டளை (CGTMSME) மூலம் தொழில் முனைவோர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
  - MSMEக்கான கடன் உத்திரவாத அறகட்டளை நிதி தேவைகேற்ப அரசாங்கத்தால் அளிக்கப்படுகிறது.
- ரிசர்வ் வங்கி மூலம் MSME கடன் மறுகட்டமைப்பு சாளரத்தைத மார்ச் 31, 2021 வரை நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
  - இதனால் இதுவரை 5 லட்சத்திற்கும் மேம்பட்ட MSMEகள் பலனடைந்துள்ளன.
- MSMEகளுக்கு செயலி அடிப்படையிலான விலைப்பட்டியல் கடனுதவிகள் வழங்க வழி செய்யப்படும்.
- தாமதமான பணம் வழங்கல் மற்றும் அதன் மூலம் ஏற்படும் பொருந்தா பணப்புழக்க சிக்கல்களைத் தடுக்க

MSMEக்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்

- மருந்துகள், வாகன கூறுகள் மற்றும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள்.
  - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியும் (EXIM), இந்திய சிறுதொழில் மேம்பாட்டு (SIDBI) வங்கியும் இணைந்து 1000 கோடி ரூபாய் மதிப்பில் திட்டத்தை தொடங்கியுள்ளது.
  - தொழில் நுட்ப மேம்பாட்டுகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), வணிக யுக்திகளுக்காக உதவிக்கரம் நீட்டுதல்.

நிதிச்சந்தை

- பத்திரச் சந்தை ஆழப்படுத்துதல்.
  - குறிப்பிட்ட சில அரசு பங்கு பத்திரங்களை அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்க வழி செய்யப்படும்.
  - கூட்டாண்மை கடன் பத்திரங்களில் அந்நிய துறை முதலீடு (FPI)மொத்த இருப்பில் 9 சதவீதத்தி லிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நிதி ஒப்பந்தங்களை வலையமைப்பதற்கான ஒரு பொறிமுறையை வகுக்க சட்டம் கொண்டு வரப்படும்.
- கடன் இயல்பு நிலைகளை மாற்றுவதற்கான நோக்கங்களை விரிவாக்குதல்.
- கடன் அடிப்படையிலான பரிவர்த்தனை வர்த்தக நிதியத்தை அரசு பங்கு பத்திரங்கள் மூலகங்கள் கொண்ட புதிய கடன் பரிவர்த்தனை வர்த்தக நிதியாக விரிவாக்கப்படும்.

https://t.me/tnpscfree

- சில்லறை முதலீட்டாளர்கள், ஓய்வூதிய நிதிகள் மற்றும் நீண்ட கால முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குதல்.
- வங்கி சாரா நிதிக்கழகங்களின் பணப்புழக்கக் கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு "பங்கு கடன் உத்திரவாதத் திட்டம்" - 2019-20 பட்ஜெட் தாக்கலுக்கு பின்பு உருவாக்கப்பட்டது.
  - இத்திட்டத்தை மேலும் மேம்படுத்த புதிய வழிமுறை உருவாக்கப்படும்.
  - பங்கு பத்திரங்களுக்கான அரசாங்கத்தின் ஆதரவு சீர்படுத்தப்பட்டது.

உட்கட்டமைப்பு நிதியம்

- தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு 103 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பு நிதி நிறுவனங்களான இந்திய உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் (IIFCL) மற்றும் தேசிய முதலீட்டு மற்றும் உட்கட்டமைப்பு நிதியங்களின் (NIIF) துணை நிறுவனங்களுக்கு சமபங்கு ஆதரவை பூர்த்தி செய்ய 22,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சர்வதேச நிதி சேவைகள் மையம் - குஜராத் சர்வதேச நிதித் தொழில் நுட்ப நகரம் (GIFT CITY) - இந்நிறுவனம் சர்வதேச அளவில் சிறந்த நிதிமையமாகவும், உயர்நிலை தரவு செயலாக்கத்திற்கான மையமாகவும் செயல்படக்கூடிய திறன் கொண்டது.

பங்கு விலகல்

- LICயில் அரசு வைத்திருக்கும் ஒரு பங்கை ஆரம்ப பொது சலுகை (IPO) மூலம் விற்க அரசு திட்டமிட்டுள்ளது.

நிதி மேலாண்மை

- 15வது நிதிக் குழு
  - 15வது நிதிக்குழு 2020-21 நிதியாண்டிற்கான முதல் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.
  - இதன் பரிந்துரைகளில் முக்கிய பகுதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
  - ஐந்து ஆண்டுகளுக்கான (2021-22 முதல் 2025-26) இறுதி அறிக்கை இந்த ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்படும்.

GST இழப்பீட்டு நிதி

- 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளில் திரட்டப்பட்ட வரியின் இழப்பீட்டு நிலுவைத் தொகை 2 தவணைகளில் GST இழப்பீட்டு நிதிக்கு மாற்றப்படும்.
- இதற்கு பின், GST இழப்பீட்டு தீர்வை மூலம் திரட்டப்பட்ட நிதியையே GST இழப்பீட்டு நிதிக்கு பரிமாற்றம் செய்யப்படும்.

மத்திய நிதியுதவி திட்டங்கள் மற்றும் மத்திய துறைத் திட்டங்களை பிரித்துச் சீர்படுத்துவதற்கான தேவைகள்

- வருங்கால சமூக மற்றும் பொருளாதார தேவைகளுக்கு ஏற்றவாறு இத்திட்டங்களை சீரமைக்க.
- பற்றாக்குறையாக உள்ள பொது வளங்கள் உத்தமமாக செலவிடப்படுவதை உறுதி செய்ய.

- திட்டமிடப்பட்ட நிதி செலவீடுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை குறித்த சமீபத்தி விவாதங்களில், செயல்முறைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகள் நிதி பொறுப்பு மற்றும் படஜெட் மேலாண்மைச் சட்டம், 2003 (FRBM Act, 2003)-ற்கு இணங்க செய்யப்படுகிறது என்பதை உறுதி செய்ய.

2019 - 20 நிதியாண்டு

- திருத்தப்பட்ட செலவினங்களின் மதிப்பீடு - 26.99 லட்சம் கோடி.
- திருத்தப்பட்ட ரசீதுகளின் மதிப்பீடு - 19.32 லட்சம் கோடி.

2020 - 21 நிதியாண்டு

- பெயரளவு GDP வளர்ச்சி வீதம் 10% ஆகும்.
- நடப்பு நிதியாண்டிற்கான வரவு - ரூ. 22.46 லட்சம் கோடி: செலவு - ரூ. 30.42 லட்சம் கோடி.
- முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்திக்கும் வரிவருவாய்க்குமான வித்தியாசங்கள் நல்ல நிலையை அடைய மேலும் சில ஆண்டுகள் ஆகும் என கணிக்கப்பட்டுள்ளது.

நிதிபற்றாக்குறை

- 2019-20 திருத்தப்பட்ட மதிப்பீடு - 3.8%
- 2020-21 பட்ஜெட் மதிப்பீடு - 3.5%
- இதில் இரண்டு உறுப்புகள் உள்ளன:
  - 2019-20 பட்ஜெட் மதிப்பீட்டின் நிதிப்பற்றாக்குறை - 3.3%
  - 2020-21 பட்ஜெட் மதிப்பிடப்பட்ட நிதிப்பற்றாக்குறை - 3%
- நிதி பொறுப்பு & பட்ஜெட் மேலாண்மைச் சட்டம் (FRBM Act), 2003 - ன் பிரிவு 64(3) ன் படி, நிதிப்பற்றாக்குறை விலகல் 0.5% சதவீதமாக இருக்க வேண்டும். 2019-20 திருத்தப்பட்ட மதிப்பீடு, 2020-21 பட்ஜெட் மதிப்பீடு இரண்டும் இச்சட்டத்திற்கு உட்பட்ட அளவில் உள்ளது.
- [FRBM சட்டம் பிரிவு 4(2) - எதிர்பாராத நிதி தாக்கங்கள் & பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் காரணமாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறையிலிருந்து விலகுவதை தடுக்க தூண்டுதல் பொறிமுறையை வழங்குகிறது.]
- [பொது நிதி மூலம் முதலீடு செய்வதின் தேவைகளை சமரசம் செய்யாமல் நிதி ஒருங்கிணைப்பு உறுதி அளிக்க]

சந்தை கொள் முதல்கள்

- 2019 - 20ம் ஆண்டிற்கு நிகர சந்தை கொள் முதல் ரூ.4.99 லட்சம் கோடியாகும்.
- 2020 - 21 ம் ஆண்டிற்கு நிகர சந்தை கொள் முதல் ரு.5.36 லட்சம் கோடியாகும்.
- 2020 - 21ம் ஆண்டின் கடன் தொகையின் ஒரு பகுதியானது மூலதனச் செலவாக கருதப்படுகிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 21% அதிகரிக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

நேரடி வரிகள்

வளர்ச்சியை தூண்டுவதற்கும், வரி கட்டமைப்பை எளிமைப்படுத்த, இணக்கத்தை எளிதாக்கு வதற்கும், வழக்குகளை குறைப்பதற்கும் நேரடி வரியில் மாற்றங்கள் முன் மொழியப்பட்டுள்ளன.

தனிநபர் வருமான வரி

- நடுத்தர வருமான வர்க்கத்தினருக்கு ஏறற வகையில் வருமான வரியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.
- புதிய மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட தனிநபர் வருமான வரி விதிமுறை முன் மொழியப்பட்டது.
- புதிய எளிமைப்படுத்தப்பட்ட விதிமுறையில், தற்போது நிலுவையிலுள்ள 70 வரி விலக்குகள் ம ற்றும் வரி குறைப்புகள் நீக்கப்பட உள்ள.
- மீதமுள்ள வரி விலக்குகள் மற்றும் வரி குறைப்புகள் பின்வரும் ஆண்டுகளில் சரிபார்க்கப்பட்டு திருத்தப்படும்.
- இந்த புதிய வரி விதிப்பு முறை கட்டாயமானது அல்ல - விருப்பப்பட்ட நபர்கள் பழைய வரி விதிப்பு முறையே வரி செலுத்தி குறைப்புகள் மற்றும் விலக்குகள் பெறலாம்.
- வருமான வரி படிவங்களை முன் கூட்டியே நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால் புதிய நடைமுறையை தேர்வு செய்யும் நபருக்கு முன்னரே நிரப்பப்பட்ட வருமான வரி படிவங்களை கிடைக்கும். மேலும் வருமான வரி செலுத்த நிபுணரின் உதவி இல்லாமலே தாக்கல் செய்ய இயலும்.
- ஒவ்வொரு ஆண்டும் மதிப்பிடப்பட்ட வருவாயில் விடுபடும் 40000 கோடியை உள்ளடக்க இப்புதிய வரிவிதிப்பு முறை பயன்படும்.

புதிய வருமான வரிக்கான வரம்புகள்

ஆண்டு வருமான வீதம்	பழைய வரி விகிதம்	தற்போதைய வரி விகிதம்
0 - 2.5 லட்சம்	வரி விலக்கு	வரி விலக்கு
2.5 - 5 லட்சம்	5%	5
5 - 7.5 லட்சம்	20%	10%
7.5 - 10 லட்சம்	20%	15%
10 - 12.5 லட்சம்	30%	20%
12.5 - 15 லட்சம்	30%	25%
15 லட்சத்திற்கு மேல்	30%	30%

பெரு நிறுவன கார்ப்பரேட் வரிகள்

- உலகிலேயே மிக குறைந்த கார்ப்பரேட் வரி விதிக்கும் நாடு இந்தியா ஆகும்.
- மின்சார உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வரி வீதம் 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

லாப ஈவு பகிர்மான வரி (DDT)

- இவ்வரியை நீக்கியதன் மூலம் இந்தியா முக்கிய முதலீட்டு ஈர்ப்பு தளமானது.
- இதன் மூலம் 25000 கோடி மதிப்பிடப்பட்ட விடப்பட்டது.
- துணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட லாப ஈவுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் - அப்கள்

- 100 கோடி வரை விற்று முதல் கொண்ட ஸ்டார்-அப்களுக்கு அடுத்த பத்து ஆண்டுகளில் 3 தொடர்ச்சியான மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு 100% விலக்குகள் வழங்கப்படும்.
- தொழிலாளர் இருப்பு உரிமைத் திட்டத்திற்காக வரி செலுத்துதல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

MSMEகள் மூலம் குறைந்த பணப்பொருளதாரத்தை ஊக்குவிக்க

- 5 சதவீதத்திற்கு குறைவான வணிக பரிவர்த்தனைகளை ரொக்கமாக மேற்கொள்ளும் வணிக நிறுவனங்களுக்கு வணிக தணிக்கைக்குரிய மொத்த விற்பனை மற்றும் முதலீட்டு தொகையானது 1 கோடியிலிருந்து 5 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு

- கூட்டுறவு மற்றும் பெரு நிறுவனத் துறைக்கு இடையில் சமத்துவம் கொண்டு வரப்பட்டது.
- கூட்டுறவு சங்கங்களுக்கான வரி விதிப்பு முறை -
  - 22% வரி + 10% கூடுதல் கட்டணம் + விலக்கு/குறைப்பு இல்லாத 4% தீர்வை.
- நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச மாற்று வரியிலிருந்து (MAT) விலக்கு அளிக்கப்பட்டதைப் போல கூட்டுறவு சங்கங்களுக்கும் விலக்கு அளிக்கப்படும்.

வெளிநாட்டு முதலீட்டுகளுக்கான வரி சலுகை

- 2024, மார்ச 31-ம் தேதிக்கு முன்னர் உட்கட்டமைப்பு மற்றும் முன்னுரிமைத் துறைகளில் செய்யப்பட்ட முதலீட்டின் மீதான வட்டி, ஈவுத் தொகை மற்றும் மூலதன ஆதாயங்களுக்கு 100% வரி விலக்கு வழங்கப்படும்.

வீட்டு வசதித் திட்டம்

- வீட்டு வசதித் திட்டத்திற்காக எடுக்கப்பட்ட கடன்களுக்கு செலுத்தப்படும் வட்டிக்கு 1.5 லட்சம் ரூபாய் வரை விலக்கு அளிக்கும் திட்டத்தை மார்ச் 31, 2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப மேம்பாட்டாளர்கள் சம்பாதித்த இலாபங்களுக்கு அளிக்கப்படும் வரி விதிமுறைக்கான ஒப்புதல் தேதி மார்ச் 31, 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

https://t.me/tnpscfree

வரி வசதிக்கான நடவடிக்கைகள்

- ஆதார் மூலம் ஆன்லைனில் உடனடியாக பான் அட்டைகள் வழங்கப்பட வேண்டும்.
- நேரடி வரி வசூலில் உள்ள வழக்குகளை குறைக்க, விவாத் சே விஸ்வாஸ் திட்டம் ஜூன் 30, 2020-ல் தொடங்கப்படும்.
- மார்ச் 31, 2020 வரை பண வழங்குதலுக்கு கட்டப்படும் பிரச்சனை வரிகளுக்குரிய அபராதம் மற்றும் வட்டிகள் தள்ளுபடி செய்யப்படும்.
- 2020 மார்ச் 31க்கு பிறகு கூடுதல் பணம் செலுத்தப்பட வேண்டும்.
  - நிலுவையிலுள்ள வழக்குகளில் வரி கட்டுகூவார் நலன் பெற ஏற்பாடு
  - வருமான வரிச்சட்டத்தை திருத்துவதன் மூலம் ஆட்கள் வரமலேயே வழக்குகளை தொடர வழிவகை செய்தல்.
- தொண்டு நிறுவனங்களுக்காக,
  - நன்கொடை வழங்குபவர்களின் தகவல்கள் மூலம், படிவங்கள் முன்னரே நிரப்பப்பட வழிவகை செய்யப்படும்.
- பதிவு செய்தலை முற்றிலும் மின்னணு முறையில் மாற்றுதல்.
- புதிய மற்றும் ஏற்கனவே உள்ள அனைத்து தொண்டு நிறுவனங்களுக்கம் தனித்தவமான பதிவு எண் (PAN) வழங்கப்பட வேண்டும்.
- புதிய தொண்டு நிறுவனங்களின் தற்காலிக பதிவை 3 வருடங்களுக்கு அனுமதிக்க வேண்டும்.
- வரி செலுத்துவோரின் சாசனம் ஒன்றை மத்திய நேரடி வரிக்களுக்கான வாரியம் வெளியிடும்.

வங்கிகள் இணைப்பால் ஏற்படும் இழப்புகள்

- வருமான வரிச்சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களில் கண்டறியப்படாத இழப்புகள் மற்றும் தேய்மானங்களிலிருந்து பயனடைவதை உறுதி செய்தல்

மறைமுக வரிகள்

- சரக்கு மற்றும் சேவை வரி (GST)
  - விலைப்பட்டியல் பெற வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்க பண வெகுமதி முறை.
  - குறுஞ்செய்தி சேவை மூலம் தாக்கல் செய்யப்படும் பூஜ்ய படிவங்கள் மற்றும் மேம்பட்ட உள்ளீட்டு வரி சேவை போன்ற அம்சங்களுடன் கூடிய எளிமையான படிவங்கள் முறை ஏப்ரல் 01, 2020லிருந்து பரிசோதனை முறையில் செயல்படுத்தப்படவுள்ளது.
- நுகர்வோர் விலைப்பட்டியலுக்கு முன்மொழியப்பட்ட ஜிஎஸ்டி அளவுகளை கைப்பற்றும் மாறுநிலை க்யூ-ஆர் குறியீடுதல் முன்மொழியப்படும்.
- ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பில் முக்கியமான தகவல்களை கண்டறிய மின்னணு விலைப்பட்டியல் ஒவ்வொரு கட்டமாக செயல்படுத்தப்படும்.

- போலி அல்லது செயல்படாத அலகுகளை கண்டறிந்து நீக்க ஆதார் அடிப்படையிலான வரி செலுத்துவோர் சோதனை.
- தலைகீழ் தீர்வை கட்டமைப்பை நிவர்த்தி செய்ய ஜிஎஸ்டி வீதம் திட்டமிடப்பட்டுள்ளது.

சுங்க தீர்வைகள்

- காலணி மீதான சுங்கவரி 25% லிருந்து 35%மாகவும் பர்னிச்சர் பொருட்கள் மீதான சுங்கவரி 20% முதல் 25% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- செய்தித்தாள் மற்றும் இலகுரகு பூசப்பட்ட காகித இறக்குமதிக்கான அடிப்படை சுங்கவரி 10%லிருந்து 5% ஆக குறைக்கப்பட்டது.
- மின்சார வாகனங்கள் மற்றும் சில மொபைல் போன் உதிரிபாகங்களுக்கான சுங்க வரி விகிதங்கள் திருத்தப்பட்டுள்ளன.
- அடிப்படை சுங்க தீர்வையில் (BCD) இருந்து விலக்கு அளிக்கப்பட்ட மருத்துவ கருவிகள் தவிர, பிற மருத்துவ கருவிகளின் இறக்குமதிகு 5% சுகாதார தீர்வை விதிக்கப்படும்.
- குறிப்பிட்ட உள்ளீடுகள் மற்றும் மின் உருகி இராசாயணங்கள் மற்றும் நெகிழ்வுகள் போன்ற மூலப் பொருட்களுக்கான சுங்க வரியை குறைத்தல்.
- வாகன பாகங்கள், குறிப்பிட்ட ரசாயணங்கள் போன்ற சில பொருட்களுக்கு அதிக சுங்க வரி விதித்தல். இவை உள்நாட்டில் தயாரிப்பதால் அதிகமான சுங்கவரி விதிக்கப்படுகிறது.

வர்த்தக கொள்கை

- அந்நிய வர்த்தக ஒப்பந்தத்தின் (FTA) கீழ் செய்யப்படும் இறக்குமதியை முறையாக சரிபார்க்க ஏதுவாக சுங்கச் சட்டம் திருத்தப்படுகிறது.
- சில முக்கிய பொருள்களுக்கான தோற்றத்தின் விதிகள் ஆராய்ந்து வகுக்கப்படும்.
- இறக்குமதியில் இத்தகைய எழுச்சியை முறையாக கட்டுப்படுத்த தீர்வைகள் பாதுகாக்கும் விதி முறைகள் பலப்படுத்தப்படும்.
- மானியத்துடன் வழங்கப்படும் பொருட்களை அதிகமாக இறக்குமதி செய்வதை கண்டறிய விதி முறைகள் பலப்படுத்தப்படும்.
- சுங்க வரிகளுக்கு விலக்கு அளிப்பதை மறுபதிப்பாய்வு செய்வதற்கு பரிந்துரையளிக்கப்படும்.
- சிகரெட் மற்றும் பிற புகையிலை பொருட்களுக்கு கலால் வரி உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், பீடிப் பொருட்களின் வரிவீதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.
- ஜவுளித்துறைக்கு பயனளிக்கும் வகையில் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வணிகப் பொருட்கள் குவித்தல் தடைத்தீர்வை நீக்கப்படும்.

https://t.me/tnpscfree

இந்தியப் பொருளாதாரத்தின் சாதனைகள்

- இந்தியா தற்போது உலகின் 5வது பொருளாதார நாடாக உள்ளது.
- 2014-2019 ஆண்டிற்கான வளர்ச்சியானது 7.4% ஆகவும், பணவீக்கம் 4.5% ஆகவும் உள்ளது.
- இந்தியாவின் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) 2009 - 2014ல் 190 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்ததை, 2014-19ல் 284 பில்லியன் டாலராக உயர்த்தப்பட்டது.
- மத்திய அரசின் கடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52.2% (மார்ச் 2014) ஆக இருந்ததை 48.7% ஆக குறைக்கப்பட்டது.
- இரண்டு குறுக்கு வெட்டு மேம்பாடுகள்
  - தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் பரவல் (ரகுப்பாய்வு, இயந்திர கற்றல், ரோபோடிக்ஸ், உயிர்த்தகவலியல், செயற்கை நுண்ணறிவு).
- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் 15-65 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர்.
- ஜிஎஸ்டி பல இடையூறுகளை நீக்கியது.

இந்தியாவின் தனித்துவமான உலகளாவிய தலைமைத்துவத்தை நிலை நிறுத்துவதற்கான எதிர்கால நோக்கம் டிஜிட்டல் புரட்சியால் கொண்டு வரப்படும்

- டிஜிட்டல் ஆளுமை மூலம் சேவைகளை தடையின்றி வழங்குதல்.
- தேசிய உட்கட்டமைப்பு தொடர் மூலம் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.
- பேரழிவு தாங்கு தன்மையின் மூலம் ஆபத்து குறைப்பு.
- ஓய்வூதியம் மற்றும் காப்பீடு மூலம் சமூக பாதுகாப்பு

நிதிநிலை அறிக்கை – 2020-21

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த்-ஆல் கூறப்பட்டது.

ஆசியான் இந்தியா 2019 தாய்லாந்து சந்திப்பின் போது இந்திய பிரதமர் மோடியின் உரையில் குறிப்பிடப்பட்ட குறள்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2019-ம் ஆண்டு பிரதமரின் சுதந்திர தின உரையில் குறிப்பிடப்பட்ட குறள்

நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

நிதிநிலை அறிக்கை – 2019-20-ல் நிதியமைச்சரின் மேற்கோள்

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போல,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

–புறநானூறு

நிதிநிலை அறிக்கை – 2020-21 நிதியமைச்சரின் மேற்கோள்

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து.

https://t.me/tnpscfree

இணைப்பு - III

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2020-2021-ன் சிறப்பம்சங்கள்

தமிழ் அரசின் துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், 2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை, 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ஆம் நாள் தனது 10வது அறிக்கையாக சட்டமன்ற பேரவையில் முன்வைத்தார்.

- உலக மற்றும் தேசிய பொருளாதார சூழலில் வீசும் எதிர்க்காற்று காரணமாக தமிழ்நாட்டின் வளர்ச்சி வீதமானது 2018-19 ம் ஆண்டில் 8.17 விழுக்காடாக இருந்த பொருளாதார வளர்ச்சியானது 2019 - 20-ல் 7.27 விழுக்காடாக குறைந்தது. மேலும் 2020-21 ஆம் ஆண்டில் மேலும் வலுவான பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்ட மதிப்பீட்டின் படி 2.84 சதவீதமாகும். வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2021-22 ஆம் ஆண்டில் 2.58 சதவீதம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 2.52 சதவீதமாக இருக்கும்.
- தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறையானது கணக்கிடப்பட்ட 10,040.31 கோடியிலிருந்து 21,617.64 கோடியாக இரட்டிப்பு அடைந்துள்ளது.
- 2020-21-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வரி வருவாயானது 1.49 லட்சம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இது 2019-20-ல் 1.35 லட்சம் கோடியாக இருந்தது.
- பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதன் வடிகால்களையும் கூவம், அடையாறு நதிகளின் அனைத்து வடிகால்களையும் 5,439,76 கோடி ரூபாய் செலவில் அரசு மறுசீரமைக்கும்.
- அத்திக்கடவு - அவினாசி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை அரசு பெற்றுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தருமபுரி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தென்காசி மாவட்டங்களில் உணவுப் பூங்காக்கள் 70 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.
- உணவகத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 'இலாப நோக்கமற்ற' ஒரு சிறப்பு நோக்கு முகமையை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

- 2020-21 ஆம் நிதியாண்டில், பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் மேலும் 8 வேளாண் பதப்படுத்தும் மண்டலங்கள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- காவல்துறைக்கு 8,876.57 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மீன்வளத்துறைக்காக 1,229.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு வீட்டு வசதி திட்டங்களுக்கு 800 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீ. சாந்தா.

- வீ.சாந்தா இந்தியாவின் புகழ்பெற்ற புற்றுநோய் நிபுணர் மற்றும் அடையாறு புற்றுநோய் மையத்தின் தலைவர். நாடு முழுவதுமுள்ள புற்றுநோயாளிகள் தரமான மற்றும் விலைகுறைவான சிகிக்சை பெற பலதரப்பட்ட முயற்சிகள் எடுத்ததால் நன்கு அறியப்பட்டவர்.
- இந்திய தேசிய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய சாந்தா அவர்களுக்கு 1986-ல் பத்மஸ்ரீ விருதும் 2006-ல் பத்மபூஷனும் 2016-ம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதும் வழங்கி இந்திய அரசு கௌரவித்துள்ளது.

- வேளாண் துறைக்காக 11,894.48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- உணவு மானியத்திற்காக 6,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்வளர்ச்சித் துறைக்காக 74.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தொல்லியல் துறைக்காக 31.93 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு புதிய வீட்டு வசதி திட்டங்களுக்கு 156 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- சமூக ஓய்வூதியப் பாதுகாப்பு திட்டத்திற்காக 4,315.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பேரிடர் மீட்பிற்காக 1,360.11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைத் துறைக்காக 405.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- சிறைத் துறைக்காக 392.74 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்துத் துறைக்காக 2,176 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பட்ஜெட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள 11 மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க 1,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- நிர்பயா நிதியின் கீழ் 75.02 கோடி ரூபாய் செலவில் பேருந்துகளில் சிசிடிவி கேமராக்களை பொறுத்துதல்.

https://t.me/tnpscfree


- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு பங்கு மூலதன உதவி, சார்நிலைக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடனை விடுவிப்பதற்காக மொத்தம் 3,100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அனைத்துத் துறைகளுடன் ஒப்பிடும் பொழுது பள்ளிக்கல்வித் துறைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட நகரத்திட்டங்களை நடைமுறைப்படுத்த கடன் உதவிகளை வழங்குதல்.
- ஓர் ஆண்டுக்கும் குறைவாக உள்ள இனங்கள் உட்பட அனைத்து வாடகை ஒப்பந்தங்களுக்கும் இந்த புதிய வாடகை ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதன் முழு பயன்களை அடைவதற்கு நில உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் இருவருமே தாமாகவே முன்வந்து பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், ஐந்தாண்டிற்கு உட்பட்ட குடியிருப்புக்கான வாடகை ஒப்பந்தங்களில், தற்போது நடைமுறையிலுள்ள முத்திரைத் தாள் வரியினை 1 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதம் வரையில் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அத்தகைய இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான பதிவுக் கட்டணங்களும் 1 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டு 5,000 ரூபாய்க்கு மிகாமல் வசூலிக்கப்படும்.

வாரி பெருக்கி வளம்பருத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

- குறள் 512

விளக்கம்:

பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.



https://t.me/tnpscfree